உ

சிவமயம்.

பதினெண்சித்தர்கள்

பெரிய

ஞானக்கோர்வை.

TRADE MARK

3 பாகம்

ஒரே கட்டடம்

வா. சரவணமுத்துப் பிள்ளையால்

ஞானவான்களுக்கு
உபயோகமாகும்பொருட்டு,

சென்னை
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

இதன் விலை] [ரூ-2-8-0.

உ

சிவமயம்.

பதினெண்சித்தர்கள்

பெரிய

ஞானக்கோர்வை.

முதற்பாகம்.

இஃது

வா. சரவணமுத்துப்பிள்ளையால்

ஞானவான்களுக்கு உபயோகமாகும்பொருட்டு
சில ஏட்டுப்பிரதிகளிலிருந்தும்
அச்சுப்பிரதிகளிலிருந்தும் நூதனமாகசேர்க்கப்பட்டு
26-சித்தர்கள்பாடிய மூன்றுபாகமும்
ஒரேகட்டடமாக அச்சிட்டது.

சென்னை
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

இதன்விலை ரூபா 2—8.

மலசுத்தி லேகியம்.

இந்த லேகியத்தை ஐந்துவயது குழந்தைகள்முதல் விருத்தாப்பியர் வரையில் பெண்கள் புருஷர்கள் யாவரும் தின்னலாம். தின்பதற்குத்தகுந்த இனிப்பாயிருக்கும். இதன் பிரயோசனம் யாதெனில், கை கால் குடைச்சல், கெர்ப்பவாய்வு, மூலவாய்வு, அபானவாய்வு, குன்மவாய்வு, யெப்போதும் வயிற்றில் கோளாராகவேயிருந்தால் மலச்சிக்கல், மலம்வரட்சி வயிற்றிலுள்ள. எல்லாவியாதிகளையும் நிவர்த்தி செய்யும். மலச்சிக்கலில்லாமல் அன்றாட மலத்தை அன்றாடம் கழிக்கும் இந்தலேகியத்தை சாப்பிடுகிற அளவு முதலிய விபரத்தை மருந்து டப்பியுடன் அனுப்பும் பத்தியநோட்டீசில் பார்த்துக்கொள்ளலாம்.

1-சேர் லேகியம் விலை ரூபா—1.

எந்த பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

வி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ.,

'நாராயணவிலாஸ்'

பெரம்பூர் பாரெக்ஸ், போஸ்டு, மதராஸ்.

உ

சிவமயம்.

பதினெண்சித்தர்கள்
ஞானக்கோர்வையின்
முகவுரை.

அருள்சுரந்த நாதாக்கள் பதினெண்பேர்கள்
அரும்பரமாம் பூரணத்தின் ஒளிகண்டோர்கள்
தெருள்சுரந்த சிவத்தோடே சிவமாய்நின்றோர்
சித்தெல்லாம் வல்லசிவ முத்தரானோர்
மருள்சுரந்து அமுதமழைப் பொழியுமாபோல்
மண்ணுலகின் ஜீவான்ம கோடிகட்கு
பொருள்சுரந்து ஞானவரை விளங்கிமேவப்
போதித்த வேதாந்தக் கோர்வையாமே. 1

வேதாந்த மென்றுபதி னெண்மராலே
விளக்கிவைத்த சூட்சுமமாம் ஞானமின்னாள்
போதாந்த மாபொருங்கே கோர்வையாக்கி
புலப்படுவ தில்லாது புலம்புவோர்க்கு
நாதாந்த மாய்ப்பலநூல் நாடித்தேடி
நாள்கழிவ தில்லாது நமனையோட்டிச்
சேதாந்த மில்லாது ஜீவத்தோங்க
சேகரித்துக் கோர்வையெனச் செய்திட்டோமே.

திட்டமுள ஆரியனில் லாதுநோக்கச்
செய்தசிவ வாக்கியந்தான் நூலேயாதி
பட்டணத்தார் பாடலொடுபுலம்பல்ஞானம்
பத்திரகிரி யருட்புலம்பல் பாம்பாட்டீசர்
விட்டமறை யிடைக்காட ரகப்பேய்சித்தர்
வடிவ[illegible]ற குதம்பைகடு வெளியாஞ்சித்தர்

தொட்டுரைத்த குருமுனி ரமுகண்சித்தர்
துரைபோன்ற நந்தீசர் ராமதேவர். 3

தேவரொடு கொங்கணவர் ரோமநாதர்
திருமூலர் கருவூரார் பொதிகைசித்தர்
ஆவலொடு யிவருரைத்த ஞானமியாவும்
அவனியுள மனுக்களெலா மறியவென்றே
பாவலரை நாவலரை பண்டிதோரை
பற்பலவாம் பெரியோரைப் பணிந்துகேட்டு
மாவிதமாய்ப் பிழையின்றி திருத்தஞ்செய்து
மாசரவே யச்சியற்றி மகிழ்ந்தவாறே. 4

மகிழ்வாக யிந்நூலை தெரிசிப்போரை
மன்றுடிக் கேழ்க்குமனு யாதொன்றுலோ
புகழ்பெரிய சித்தர்களு லாங்காங்கேதான்
புண்ணியர்கள் கைவசமாய் பொருத்தலுண்டாம்
அகமகிழ்ந்தே யெம்மிடத்தி லருள்செய்தீரேல்
அச்சிட்டே பலபெரியோ ரரியச்செய்தோம்
ஜெகப்புகழச் சாஸ்திரத்தை வெளியிட்டோர்க்கு
சிவலோகம் கிட்டுமெனச் சித்தர்வாக்கே. 5

இதில் அடங்கியிருக்கும் புத்தகங்கள்.

சிவவாக்கியம் 518 பாடல்
பட்டினத்துபிள்ளைபாடல்
ஷை சரித்திரசுருக்கத்துடன்
ஷையார் புலம்பல்
ஷையார் ஞானம்
பத்திரகிரியார் புலம்பல்
சரித்திரச்சுருக்கத்துடன்
பாம்பாட்டிசித்தர்பாடல்
இடைக்காட்டுசித்தர்பாடல்
அகப்பேய்சித்தர்பாட்டல்
குதம்பைசித்தர்பாடல்
கடுவெளிசித்தர்பாடல்
திருவள்ளுவர்ஞானம்
சட்டமுனிஞானம்
சிவயோகசாரம்

உ

சிவமயம்.

சிவவாக்கியர் பாடல்.

இஃது

வா. சரவணமுத்துப்பிள்ளையால்
ஞானவான்களுக்கு
உபயோகமாகும்பொருட்டு,
சில ஏட்டுப்பிரதிகளிலிருந்தும்
அச்சுப்பிரதிகளிலிருந்தும்
சேர்க்கப்பட்டு,

சென்னை
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

புனுகு சுகந்த எண்ணெய்.

இந்த எண்ணெயிலிருக்கும் பரிமளமானது மனோரஞ்சித மலரைப்போல பலவித வாசனையைக் கொடுக்கும். சில வாசனை எண்ணெய்கள் கூந்தலில் தடவிக்கொண்ட சற்று நேரத்திலேயே மாறிவிடுவதுண்டு. இந்த எண்ணெயை கூந்தலுக்கு தடவிக் கொண்டு உங்கள் வழக்கப்படி எத்தனை நாள்பொறுத்து தலைமுழுகினபோதிலும் இதன் பரிமளத்தைப் பார்க்கலாம்.

ஒரு டப்பியின் விலை ரூபா—1.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ,

'நாராயணவிலாஸ்'

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

சிவமயம்.

கிரியை விலக்கல்.

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ்சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்த்ர மேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ.

சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ-சமைத்தகறியின் உருசியை அந்தச் சட்டியும், சட்டுவமாகிய இரண்டு பொருளுந் தெரிந்துக் கொள்ளுமோ? தெரிந்துக்கொள்ளாது (அதுபோல), நாதன் உள்ளிருக்க-பரம்பொருள் மனத்தின் கண்ணேயிருக்க அதைவிட்டு, நட்டகல்லை-சிற்பியினால் உருவ மமைக்கப்பட்டு நாட்டிய தாதுப்பொருளை, தெய்வமென்று-சகள நிட்களாதீதமாகிய பரம்பொருளென்று நினைத்து, நாலு புட்பஞ்சாற்றி-நான்குவகையாகிய மலர்களைத்தரித்து, சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்திர மேதடா-முறைப்படி பிரதட்சணஞ்செய்து இருதயாதிகண் டாநந்தத்துக்குள் தன்னுடைய அறிவுக்குமாத்திரம் அறியப்படும் மத்திமை வாக்கினால் சொல்லும் மந்திரம் எங்குள்ளது, (இப்படியிருக்கையால்) நட்டகல்லும் பேசுமோ-நடப்பட்ட சிலாரூபமானது பேசக் கூடியதோ? அன்று என்றபடி,

இவ்விஷயம் பாரமார்த்திகர்க்கேயன்றி ஏனையோர்க்கன்று. இஃதறியாதசிலர் இவ்வாறு சொல்லுகின்றதேயன்று பாரமார்த்திகத் தன்மையை யடைந்தவர்போன்று நடித்துச் சிலா ரூபத்தை வணங்

குதற் கேதுவாகிய அன்பையிழந்து அலேந்து தந்த மக்கேற்றவண்ணம் பேசித்திரிகின்றனர். அதுநிற்க,

இனி இச்செய்யுளின் கருத்தை வியவகாரத்தன்மையுளார்க்கே என்று விளக்குதும். எப்படியெனில், வேதமுதலிய கலேகளிற் சொல்லப்படுவது, துவிதம் அத்துவிதம் என்கிற இரண்டு மார்க்கங்களே அவற்றில், துவிதமே அத்துவிதத்திற்கு முதற்காரணமாயுள்ளது, அம்மார்க்கத்தில் ஒவ்வொருவரும் பதிபசுபாசங்களே விசாரிக்கவேண்டிய அவசியமுள்ளது. அப்படி விசாரிக்குங்கால், பதி நிர்மலமுடையவனென்றும், பசு தனக்குள்ள பாசமாகிய சகசமலத்தால் அநிர்மலனென்றும் விளங்கும். அங்ஙனமுள்ள மலத்தைப் போக்கிக்கொள்ளுதற் பொருட்டே பதியானவர் அப்பசுவுக்குத் தநுகரண புவனபோகங்களே நல்கி, கருடோஹம்பாவனே செய்தோனுக்கு, அக்கருடன் இவனுள் நின்று, விஷயங்களேத் தீர்த்தானேயொழிய, இவனதுபாவனே யொன்றினுலேயே தீர்த்துக்கொள்ளாமைபோலவும். இரசவாதஞ்செய்வோன் செம்பிலுள்ள களிம்பைப்போக்க பிரயத்தனஞ்செய்தானேயொழிய, இவனது பிரயத்தனம் களிம்பைப்போக்காமல், மருந்தின்காரமே அக்களிம்பை உள்ளேயே அடங்கச்செய்தமைபோலவும், தான் கலவாமற் கலந்துநின்று, அச்சகசமலத்தின் வலியை அடக்கித் தன்னடிப்படுத்த நியமித்த மார்க்கங்கள் நான்கு, அவையாவன, சரியை, கிரியை, யோகம், ஞானம் இந்நான்கும் ஒவ்வொன்றில், நந்நான்காகப் பதினுறுகும், அங்ஙனம் கூறியதினுல், இச்செய்யுட் கருத்து கிரியையில் ஞானமாகும் எப்படியெனில், சர்வபரிபூரணனென்னுந் திருப்பெயரை விசாரிக்கின்; எங்கு நிறைந்தவனென்று புலப்படும். அங்ஙனம் எங்குநிறைந்த கடவுள்மனம் ஒன்றிலேயே இருக்கின்றுனென்றும், மற்ற இடங்களிலில்லேயென்றும் சொல்

னுதல் கூடாமை. இதைநோக்கியே, அங்கிங்கெனுத படி யெங்கும்பிரகாசமாய் எனவும், "பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற" எனவும், "கல் லினும் செம்பினுமோர் விருப்பானெனங்கள் கண்ணுத லே" எனவும், ஆன்றோர் கூறினர். ஆகையால், எங் குமுள்ள கடவுளைக்*கல்லிலில்லையென்று சொன்னால் பூரணத்துவங் குறையும் அதுகுறைந்தபோது, ரூப கற்பிதமுண்டாகும். அதுஉண்டானபோது கடவுள் என்பதுபோய் எல்லாம் நாமேயாய் அகங்காரவாத முண்டாய்ப் பிறவிப்பெருங் கடலில் வீழ்ந்து கரை யேறக்கூடாமல் அலைந்தலைந்து தவிக்கச் சந்தேகமில் லை ஆகையால் கிரியையாகிய சிலாரூபவணக்கமும், பூரணத்தை நோக்குவதாகிய ஞானமுங்கலந்து நிற் றலால், இச்செய்யுளின்கருத்து கிரியையில் ஞானமே யாகச் சாதிக்கப்படும்.

இவ்வாறு சொன்னமையால் உண்டானகருத் தென்னவெனின், இந்நூலாசிரியர், பாரமார்த்திகத் தைப்பற்றிச்சொன்னமையால் குற்றமன் றென்றும் வியவகாரத்தால் இவ்விஷயத்தையே கொண்டபோ து பூரணத்துவத்தைநோக்கி நடக்கவேண்டுமென் றுங் கல்வியறிவில்லாத சிறியேன்சிற்றறிவிற் கெட்டி னவரை யெழுதினதற்குப் பயன்யாதெனில் இதைப் பார்த்துக் கற்றோரும் மற்றோரும் நகைத்தல் ஒன் றுமே என்க. என்னும் விரிக்கின் நன்றாய் விளங்கும், ஆயின்பெருகுமென்று விடுத்தாம். இவ்வாறே மற்று முள்ளவைக்கும் உரையெழுதினால் மிகவும் பெருகு மென்று விடப்பட்டது.

இங்ஙனம்,

மா. வ.

---

* கல்லிலும் மிருந்தா ரெண்பதற்குப் பிரகலாதாழ்வா னும் மார்க்கண்டேயருமே சான்றாம்.

சிவமயம்.

சிவவாக்கியர் பாடல்.

காப்பு.

அறியதோர்நமச்சிவாய மாதியந்தமானதும்
ஆறிரண்டுநூறுதேவ ரன்றுரைத்தமந்திரம் [யம்
சுரியதோரெழுத்துமுண்ணி சொல்லுவேன்சிவவாக்கி
தோஷதோஷபாவமாய்கை தூரதூரவோடவே. 1

கரியதோர்முகத்தையொத்த கற்பகத்தைக்கைதொ
ழுக், கலைகள்நூல்கள்ஞானமுங் கருத்தில்வந்துதிக்க
வே, பெரியபேர்கள்சிறியபேர்கள் கற்றுணர்ந்தபே
ரெலாம், பேயனாகியோதிடும் பிழைபொறுக்கவேண்
டுமே. 2

அக்ஷரநிலை.

ஆனவஞ்செழுத்துளே யண்டமுமகண்டமும்
ஆனவஞ்செழுத்துளே யாதியானமூவரும்
ஆனவஞ்செழுத்துளே யகாரமும்மகாரமும்
ஆனவஞ்செழுத்துளே யடங்கலாவலுற்றதே. 3

சரியை விலக்கல்.

ஓடியோடியோடியோடி யுட்கலந்தசோதியை
நாடிநாடிநாடிநாடி நாட்களுங்கழிந்துபோய்
வாடிவாடிவாடிவாடி மாண்டுபோனமாந்தர்கள்
கோடிகோடிகோடிகோடி யெண்ணிறந்தகோடியே.

யோகநிலை.

உருத்தரித்தநாடியி லொடுங்குகின்றவாயுவை
கருத்தினாலிருத்தியே கபாலமேற்றவல்லிரேல்
விருத்தரும்பாலராவர் மேனியுஞ்சிவந்திடும்
அருட்டரித்தநாதர்பாத மம்மைபாதமுண்மையே. 5

வேதநிலை.

வடிவுகண்டுகொண்டபெண்ணை மற்றொருவனத்தினால், விடுவனோவவனையின்னம் வெட்டவேணுமென்பனே, நடுவன்வந்தழைத்தபோது நாறுமிந்தநல்லுடல், சுடலைமட்டுங்கொண்டுபோய்த் தோட்டிகைக் கொடுப்பரே. 6

ஞானநிலை.

என்னிலையிருந்ததொன்றையானறிந்ததில்லையே
என்னிலையிருந்ததொன்றை யானறிந்துகொண்டபின்
என்னிலையிருந்ததொன்றை யாவர்காணவல்லிரோ
என்னிலையிருந்திருந்து யானுணர்ந்துகொண்டனே.

நினைப்பதொன்றுகண்டிலே னீயலாதுவேறிலை
நினைப்புமாய்மறப்புமாய் நின்றமாய்கைமாய்கையை
அனைத்துமாயகண்டமா யனாதிமுன்னனாதியாய்
எனக்குள்நீயுனக்குள்நா னிருக்குமாறதெங்ஙனே. 8

மண்ணும்நீ விண்ணும்நீ மறுகடல்களேழும்நீ
எண்ணும்நீஎழுத்தும்நீ யிசைந்தபண்ணெழுத்தும்நீ
கண்ணும்நீமணியும்நீ கண்ணுளாடும்பாவைநீ
நண்ணுநீர்மைநின்றபாதம் நண்ணுமாறருளிடாய். 9

அறியுமல்லவவனுமல்ல வப்புறத்திலப்புறம்
கருமைசெம்மைவெண்மையைக் கடந்துநின்றகாரணம்
பெரியதல்லசிறியதல்ல பற்றுமின்கள்பற்றுமின்கள்
துரியமுங்கடந்துநின்ற தூரதூரதூரமே. 10

அந்திகாலமுச்சிமூன்று மாடுகின்றதீர்த்தமும்
சந்திதர்ப்பணங்களுந் தபங்களுஞ்செபங்களும்
சிந்தைமேவுஞானமுந் தினஞ்செபிக்குமந்திரம்
சிந்தைதாராராமராம ராமவென்னுநாமமே. 11

கதாவுபஞ்சபாதகங்க ளைத்துரந்தமந்திரம்
இதாமிதாமதல்லவென்று வைத்துழலுமேழைகாள்
சதாவிடாமலோதுவார் தமக்குநல்லமந்திரம்
இதாமிதாமராமராம ராமவென்னும்நாமமே. 12

நானதேதுநீயதேது நடுவினின்றதேதடா
கோனதேதுகுருவதேது கூறிடுங்குலாமரே
ஆனதேதுவழிவதேது வப்புறத்திலப்புறம்
ஈனதேதுராமராம ராமவென்றநாமமே. 13

யோகநிலை.

சாத்திரங்களோதுகின்ற சத்தநாதபட்டரே
வேத்திரைப்புவந்தபோது வேதம்வந்துதவுமோ [ல்
மாத்திரைப்போதும்முளே மறிந்துதொக்கவல்லிரே
சாத்திரைப்பைநோய்களேது சத்தமுத்திசித்தியே.

ஞானநிலை.

தூரந்தூரந்தூரமென்று சொல்லுவார்கள்சோம்பர்க
பாரும்விண்ணுமெங்குமாய் பரந்தவிப்பராபரம் [ள்
ஊருநாடுகாடுதேடி யுழன்றுதேடுமேழைகாள்
நேரதாகவும்முளே யறிந்துணர்ந்துகொள்ளுமே. 15

யோகநிலை.

காலுவேதமோதுவீர் ஞானபாதமறிகிலீர்
பாலுநெய்கலந்தவாறு பாவிகாளறிகிலீர்
ஆலமுண்டகண்டனு ரகத்துளேயிருக்கவே
காலனென்றுசொல்லுவீர் கனவிலுமதில்லையே. 16

வித்திலாதசம்பிரதாய மேலுமில்லைகீழுமில்லை
தச்சில்லாதமாளிகை சமைந்தவாறதெங்ஙனே
பெற்றதாயைவிற்றடிமை கொள்ளுகின்றபேதைகாள்
சித்திலாதபோதுசீவ னில்லையில்லையில்லையே. 17

அஞ்சுமூணுமெட்டதா யநாதியானமந்திரம்
நெஞ்சிலேநினைந்துகொண்டு நூறுருச்செபிப்பரேல்

பஞ்சமானபாதகங்க ளூறுகோடிசெய்யினும் [மே.
பஞ்சுபோல்பறக்குமென்று நான்மறைகள் பன்னு

அண்டவாசலாயிரம் ப்ரசண்டவாசலாயிரம்
ஆறிரண்டுநூறுகோடி யானவாசலாயிரம்
இந்தவாசலேழைவாச லேகபோகமானவாசல்
எம்பிரானிருக்கும்வாச லியாவர்காணவல்லரே. 19

சாமநாலுவேதமுஞ் சகலசாத்திரங்களும்
சேமமாகவோதினுஞ் சிவனைநீரறிகிலீர்
காமநோயைவிட்டுநீர் கருத்துளேயுணர்ந்தபின்
ஊனமற்றகாயமா யிருப்பனெங்களீசனே. 20

சங்கிரண்டுதாரையொன்று சன்னபின்னலாகையால்
மங்கிமாளுதேயுலகில் மானிடங்களெத்தனை
சங்கிரண்டையுந்தவிர்த்து தாரையூதவல்லிரேல்
கொங்கைமங்கை பங்கரோடுகூடிவாழலாகுமே. 21

ஞானநிலை.

தங்கமொன்றுரூபம்வேறு தன்மையானவாறுபோல்
செங்கண்மாலுமீசனுஞ் சிறந்திறந்ததெம்முளே
விங்களங்கள்பேசுவார் விளங்குகின்றமாந்தரே
எங்குமாகிநின்றநாமம் நாமமிந்தநாமமே. 22

யோகநிலை.

அஞ்செழுத்திலேபிறந்து அஞ்செழுத்திலேவளர்ந்து
அஞ்செழுத்தைவோதுகின்ற பஞ்சபூதபாவிகாள்
அஞ்செழுத்திலோரெழுத் தறிந்துகூறவல்லிரேல்
அஞ்சலஞ்சலென்றுநாத னம்பலத்திலாடுமே. 23

அஞ்சுமஞ்சுமஞ்சுமே யனாதியானதஞ்சமே
பிஞ்சுபிஞ்சுதல்லவோ பிதற்றுகாள்பிதற்றுறீர்
நெஞ்சிலஞ்சுகொண்டுநீர் நின்றுநோக்கவல்லிரேல்
அஞ்சுமஞ்சிலேபாறுமில் லனாதியாகநின்றுமே. 24

நீளவீடுகட்டுறீர் நெடுங்கதவுசாத்துறீர்
வாழவேணுமென்றலோ மகிழ்ந்திருந்தமாந்தரே
காலனோலைவந்தபோது கைகலந்துநின்றிடும்
ஆலமுண்டகண்டர்பாத மம்மைபாதமுண்மையே.

கிரியைநிலை.

வீடெடுத்துவேள்விசெய்து மெய்யரோடுபொய்யுமாய், மாடுமக்கள் பெண்டிர்சுற்ற மென்றிருக்குமாந்தர்காள், நாடுபெற்ற நடுவர்கையிலோலை வந்தழைத்திடில், ஓடுபெற்ற தவ்விலை பொருதுகாணுமுடலமே.

யோகநிலை.

ஓடமுள்ளபோதெலா மோடியேயுலாவலாம்
ஓடமுள்ளபோதெலா முறுதிபண்ணிக்கொள்ளலாம்
ஓடமுடைந்தபோது வொப்பிலாதவெளியிலே
ஆடுமில்லைகோனுமில்லை யாருமில்லையானதே. 27

உற்பத்திநிலை.

அண்ணலே பனாதியே யனாதிமுன்னனாதியே, பெண்ணுமாணு மொன்றல்லோ பிறப்பதற்குமுன்னெலாம், கண்ணிலாணிசுக்கிலங் கருதியோங்குநாளிலே, மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்தவாற தெங்ஙனே. 28

ஞானநிலை.

பண்டுநான்பறித்தெறிந்த பன்மலர்களெத்தனை
பாழிலேசெபித்துவிட்ட மந்திரங்களெத்தனை
மிண்டராய்த்திரிந்தபோ திரைத்தநீர்களெத்தனை
மீளவுஞ்சிவாலயங்கள் சூழவந்ததெத்தனை. 29

அண்டர்கோனிருப்பிட மறிந்துணர்ந்த ஞானிகாள், கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்ப தில்லையே. 30

யோகநிலை.

நெருபனைபமூட்டிநெய்யைவிட்டு நித்தநித்தநீரிலே
விருப்பமோடுநீர்குளிக்கும் வேதவாக்யங்கேளுமின்
நெருப்புநீருமும்முளே நினைந்துகூறவல்லிரேல்
சுருக்கமற்றசோதியைத் தொடர்ந்துகூடலாகுமே.

பாட்டிலாதபரமனைப் பரமலோகநாதனை
நாட்டிலாதநாதனை நாரிபங்கர்பாகனை
கூட்டிமெள்ளவாய்புதைத்து குணுகுணுத்தமந்திரம்
வேட்டகாரர்குசுகுசுப்பை கூப்பிடாமுகிஞ்சதே. 32

தரிசனம்.

செய்யதெங்கிலேயிளநீர் சேர்ந்தகாரணங்கள்போல்
ஐயன்வந்தென்னுளம் புகுந்துகோயில்கொண்டநன்
ஐயன்வந்தென்னுளம் புகுந்துகோயில்கொண்டபின்
வையகத்தில்மாந்தர்முன்னம் வாய்திறப்பதில்லையே.

சரியைநிலை.

மாறுபட்டுமணிதுலக்கி வண்டினெச்சில்கொண்டு
போய், ஊறுபட்டகல்லின்மீதே யூற்றுகின்றமூட
ரே, மாறுபட்டதேவருமறிந்துநோக்குமென்னையும்,
கூறுபட்டுதீர்க்கவோ குருக்கள்பாதம்வைத்ததே.

யோகநிலை.

கோயிலாவதேதடா குளங்களாவதேதடா
கோயிலுங்குளங்களுங் கும்பிடுங்குலாமரே.
கோயிலுமனத்துளே குளங்களுமனத்துளே
ஆவதுமரிவது மில்லையில்லையில்லையே. 35

செங்கலுங்கருங்கலுஞ் சிவந்தசாதிலிங்கமும்
செம்பிலேதிராவிலுஞ் சிவனிருப்பனென்கிறீர்

உன்பதமறிந்துநீ ரும்மைநீரறிந்தபின்
அம்பலம்நிரைந்தநாத ராடல்பாடலாகுமே. 36

கிரியைநிலை.

பூசைபூசையென்றுநீர் பூசைசெய்யும்பேதைகாள்
பூசையுள்ளதன்னிலே பூசைகொண்டதெவ்விடம்
ஆதிபூசைகொண்டதோ வனாதிபூசைகொண்டதோ
ஏதுபூசைகொண்டதோ வின்னதென்றியம்புமே. 37

ஞானநிலை.

இருக்குநாலுவேதமு மெழுத்தையறவோதிலும்
பெருக்கநீறுபூசிலும் பிதற்றிலும்பிரானிரான்
உருக்கிநெஞ்சையுட்கலந்து வுண்மைகூறவல்லிரேல்
சுருக்கமற்றசோதியைத் தொடர்ந்துகூடலாகுமே.

யோகநிலை.

கலத்தில்வார்த்துவைத்தநீர் கடுத்ததீமுடுக்கினால்
கலத்திலேகரந்ததோ கடுத்ததீகுடித்ததோ
நிலத்திலேகரந்ததோ நீள்விசும்புகொண்டதோ
மனத்தின்மாயைநீக்கிலே மனத்துளேகரந்ததே. 39

சரியைநிலை.

பறைச்சியாவதேதடா பணத்தியாவதேதடா, இ
றைச்சிதோலெலும்பினு மிலக்கமிட்டிருக்குதோ, ப
றைச்சிபோகம்வேறதோ பணத்திபோகம்வேறதோ
பறைச்சியும்பணத்தியும் பகுந்துபாருமும்முளே. 40

வாயிலேகுடித்தநீரை யெச்சிலென்றுசொல்லுறீர்,
வாயிலேகுதப்புவேதம் மெனப்படக்கடவதோ, வா
யிலெச்சில்போகவேன்று நீர்தனைக்குடிப்பீர்கள், வா
யிலெச்சில்போனவண்ணம் வர்திருந்துசெல்லுமே.

ஓதுகின்றவேதமெச்சி லுள்ளமந்திரங்களெச்சில்
போதகங்களானதெச்சில் பூதலங்களேழுமெச்சில் [ல்
மாதிருந்தவிந்துவெச்சில் மதியுமெச்சிலொளியுமெச்சி
ஏதிலெச்சிலில்லதில்லை யில்லையில்லையில்லையே. 42

உற்பத்தி.

பிறப்பதற்குமுன்னெலா மிருக்குமாறதெங்ஙனே
பிறந்துமண்ணிறந்துபோ யிருக்குமாறதெங்ஙனே
குறித்துநீர்சொல்லாவிடிற் குறிப்பிலாதமாந்தரே
அறுப்பனேசெவியிரண்டு மஞ்செழுத்துவாளினால்.

ஞானம்.

அம்பலத்தையம்புகொண் டசங்கென்றாலசங்குமோ
கம்பமற்றபாற்கடல் கலங்கென்றால்கலங்குமோ
இன்பமற்றயோகியை யிருளும்வந்தணுகுமோ
செம்பொனம்பலத்துளே தெளிந்ததேசிவாயமே. 44

கடவுள்நிலை.

சித்தமேதுசிந்தையேது சீவனேதுசித்தரே
சத்தியேதுசம்புவேது சாதிபேதமற்றது
முத்தியேதுமூலமேது மூலமந்திரங்களேது
வித்திலாதவித்திலே யின்னதென்றியம்புமே. 45

ஒடுக்கநிலை.

சித்தமற்றுசிந்தையற்று சீவனற்றுநின்றிடும்
சத்தியற்றுசம்புவற்று சாதிபேதமற்றுநன்
முத்தியற்றுமூலமற்று மூலமந்திரங்களும்
வித்தையித்தையீன்றவித்தில் விளைந்ததேசிவாயமே.

கிரியை.

சாதியானதேதடா சலந்திரண்டநீரெலாம்
பூதவாசலொன்றலோ பூதமைந்துமொன்றலோ

காதில்வாளிகாரைகம்பி பாடகப்பொனொன்றலோ
சாதிபேதமோதுகின்ற தன்மையென்ன தன்மையே.

கறந்தபால்முலைப்புகா கடைந்தவெண்ணெய்மோர்புகா
உடைந்துபோனசங்கினோசை யுயிர்களுமுடர்புகா
விரிந்தபூவுதிர்ந்தகாயு மீண்டுபோய்மரம்புகா
இறந்தவர்பிறப்பதில்லை யில்லையில்லையில்லையே. 48

தரையினிற்கிடந்தபோ தன்றுதூமையென்றிலீர்
துறையறிந்துநீர்குளித்த தன்றுதூமையென்றிலீர்
பறையறைந்துநீர்பிறந்த தன்றுதூமையென்றிலீர்
புறையிலாதவீசனோடு பொருந்துமாறதெங்ஙனே. 49

தூமைதூமையென்றுநீர் துவண்டலையுமேழைகாள்
தூமையானபெண்ணிருக்க தூமைபோனதெவ்விடம்
ஆமைபோலமுழுகிவந் தனேகவேதமோதுநீர்
தூமையுந்திரண்டுருண்டு சொற்குருக்களானதே. 50

சொற்குருக்களானதுஞ் சோதிமேனியானதும்
மெய்க்குருக்களாயினும் வேணபூசைசெய்கினும்
சற்குருக்களாயினுஞ் சாத்திரங்கள்சொல்லினும்
மெய்க்குருக்களாயினுந் திரண்டுருண்டதூமையே.

கைவடங்கள்கொண்டுநீர் கண்சிமிட்டிநிற்கிறீர்
எவ்விடங்கள்கண்டுநீ ரெண்ணியெண்ணிபார்க்கிறீர்
பொய்யுணர்ந்தசிந்தையை பொருந்திநோக்கவல்லி
மெய்கடிந்ததும்முளே விளைந்துகூறலாகுமே. [ரேல்

ஆடுகாட்டிவேங்கையை யகப்படுத்துமாறுபோல்
மாடுகாட்டியென்னைநீ மதிமயக்கலாகுமோ
கோடுகாட்டியானையைக் கொன்றுரித்தகொற்றவா
வீடுகாட்டியென்னைநீ வெளிப்படுத்தவேணுமே. 53

இடதுகண்கள்சந்திரன் வலதுகண்கள்சூரியன்
இடக்கைசங்குசக்கரம் வலக்கைசூலமான்மழு

எடுத்தபாதம் நீண்முடி யெண்டிசைக்குமப்புறம்
உடங்கலந்துநின்றமாயம் யாவர்காணவல்லிரே. 54

நாழியுநாழியுப்பு நாழியானவாறுபோல்
ஆழியோனுமீசனு மமர்ந்துவாழ்ந்திருந்திடம்
எருதிலேறுமீசனு மியங்குசக்ரதரனுமே
வேறுகூறுபேசுவார் வீழ்வர்வீணரகிலே. 55

தில்லைநாயகனவன் திருவரங்கனுமவன்
எல்லையானபுவனமு மேகமுத்தியானவன்
பல்லுநாவுமுள்ளபேர் புகுந்துகூறிமகிழுவார்
வல்லபங்கள்பேசுவார் வாய்புழுத்துமாய்வரே. 56

எத்திசைக்குமெவ்வுயிர்க்கு மெங்களப்பனெம்பிரான்
முத்தியானவித்தினை முளைத்தெழுந்தவெச்சுடர்
சித்தமுந்தெளிந்துவேத கோயிலுந்திறந்தபின்
அத்தனாடல்கண்டபின் னடங்கலாடல்காணுமே. 57

உற்றநூல்களுமுளை யுணர்ந்துணர்ந்துபாடுவீர்
பற்றறுத்துநின்றுநீர் பராபரங்களெய்துவீர்
செற்றமாவையுள்ளளைச் செறுக்கறுத்திருத்திடில்
சுற்றமாகவுமுளே சோதியென்றுவாழுமே. 58

போதடாவெழுந்ததும் புனலதாகிவந்ததும்
தாதடாபுகுந்ததும் தானடாவிளைந்ததும்
ஓதடாவஞ்சுமூன்று மொன்றதானவக்கரம்
ஓதடாவிராமராம ராமவென்னுநாமமே. 59

அகாரமென்றவக்கரத்து ளவ்வுவந்துதித்ததோ
உகாரமென்றவக்கரத்தி லுவ்வுவந்துதித்ததோ
அகாரமு முகாரமுஞ் சிகாரமன்றிநின்றதோ
விகாரமற்றயோகிகாள் விரித்துரைக்கவேணுமே. 60

அறத்திறங்களுக்குநீ யகண்டமெண்டிசைக்குநீ
திறத்திறங்களுக்குநீ தேடுவார்கள்சிந்தைநீ

உறக்கம்நீயுணர்வுநீ யுட்கலந்தசோதிநீ
மறக்கொணாதநின்கழல் மறப்பினுங்குடிகொள்ளே. 61

அண்டம்நீயகண்டம்நீ யாதிமூலமானநீ
கண்டம்நீகருத்துநீ காவியங்களானநீ
புண்டரீகமற்றுளே புணருகின்றபுண்ணியர் [யே.
கொண்டகோலமானநேர்மை கூர்மையென்னகூர்மை

மைபடர்ந்தகண்ணிணார் மயக்கிடும்மயக்கிலே
மையிறந்துகொண்டுநீங்க ளெல்லலற்றிருப்பீர்காள்
மெய்படர்ந்தசிந்தையால் விளங்குஞானமெய்தினால்
உப்படர்ந்துகொண்டுநீங்க ளூழிகாலம்வாழ்விரே.

கருவிருந்துவாசலாற் கலங்குகின்றவூமைகாள்
குருவிருந்துசொன்னவார்த்தை குறித்துநோக்கவல்
உருவிலங்குமேனியாகி யும்பராகிநின்றநீர் [லீரேல்
திருவிலங்குமேனியாகச் சென்றுகூடலாகுமே. 64

தீர்த்தமாடவேணுமென்று தேடுகின்றதீனர்காள்
தீர்த்தமாடலெவ்விதந் தெளிந்துநீரியம்புவீர்
தீர்த்தமாகவும்முளே தெளிந்துநீரிருந்தபின்
தீர்த்தமாகவுள்ளதுஞ் சிவாயவஞ்செழுத்துமே. 65

கழுத்தையும்நிமிர்த்திநல்ல கண்ணையும்விழித்துநீர்
பழுத்துவாய்விழுந்துபோன பாவமென்னபாவமே
அழுத்தமானவித்திலே யனாதியாயிருப்பதோர்
எழுத்திலாவெழுத்திலே யிருக்கலாமிருந்துமே. 66

கண்டுநின்றமாயையுங் கலந்துநின்றபூதமும்
உண்டுறங்குமாறுநீ ருணர்ந்திருக்கவல்லிரேல்
பண்டையாறுமொன்றுமாய்ப் பயந்தவேதசுத்தனாய
அண்டமுதலியாகினின்ற வாதிமூலமூலமே. 67

ஈன்றவாசலுக்கிரங்கி யெண்ணிறந்துபோவீர்காள்,
ஈன்றவாழைமெட்டலர்ந்தகாரணமறிகிலீர், நான்

றவாசலைத்திறந்துநாடிநோக்கவில்லையேல், தோன்று
மாயைவிட்டொழிந்து சோதிவந்துதோன்றுமே. 68

உழலுவாசலுக்கிரங்கி யூசலாடுமூமைகாள்
உழலும்வாசலைத்திறந்து வுண்மைசேரவெண்ணிலீர்
உழலும்வாசலைத்திறந்து வுண்மைநீருணர்ந்தபின்
உழலும்வாசலுள்ளிருந்த வுண்மைதானுமாவிரே. 69

மூலநாடிதன்னிலே முளைத்தெழுந்தசோதியை
நாடிநாடியும்முளே நாழிகையிருந்தபின்
பாலனாகிவாழலாம் பறந்துபோகயாக்கையும்
ஆலமுண்டகண்டராணை யம்மையாணையுண்மையே.

இருக்கவேணுமென்றபோ திருக்கலாயிருக்குமோ
மரிக்கவேணுமென்றலோ மண்ணுளேபடைத்தனர்
சுருக்கமற்றதம்பிரமன் சொன்னவஞ்செழுத்தையும்
மரிக்குமுன்வணங்கிடீர் மருந்தெனப்பதங்கெடீர். 71

அம்பத்தொன்றிலக்கர மடங்கலோரெழுத்துமோ
விண்பரந்தமந்திரம் வேதநான்குமொன்றலோ
விண்பரந்தமூலவஞ் செழுத்துளேமுளைத்ததே
அங்கலிங்கபீடமா யமர்ந்ததேசிவாயமே. 72

சிவாயவென்றவக்ஷரஞ் சிவனிருக்குமக்ஷரம்
உபாயமென்றுநம்புதற்கு உண்மையானவக்ஷரம்
கபாடமற்றவாசலைக் கடந்துபோனவாயுவை
உபாயமிட்டழைத்துமே சிவாயவஞ்செழுத்துமே. 73

உருவுமல்லவெளியுமல்ல வொன்றைமேவிநின்றதல்ல
மருவுவாசல்சொந்தமல்ல மற்றதல்லவற்றதல்ல
பெரியதல்லசிறியதல்ல பேசலானதானுமல்ல
உரியதாகிநின்றநேர்மை யாவர்காணவல்லரே. 74

ஆத்துமாவனாதியோ வாத்துமாவனாதியோ
பூத்திருந்தஐம்பொறி புலன்களுமனாதியோ

தாக்கமிக்கநூல்களுஞ் சதாசிவமறிகியோ
லீக்கவந்தயோகிகாள் விரித்துரைக்கவேணுமே. 75

அறிவிலேபிறந்திருந் தாகமங்களோதுநீர்
நெறியிலேமயங்குகின்ற நேர்மையொன்றறிகிலீர்
உறியிலேதயிரிருக்க வூர்புகுந்துவெண்ணெய்தேடும்
அறிவிலாதமாந்தரோ மணுநமாறதென்னனே. 76

இருவரங்கமும்பொருந்தி யென்புருகிநோக்கிலீர்
உருவரங்கமாகிநின்ற வுண்மையொன்றைபோர்கிலீர்
கருவரங்கமாகிநின்ற கற்பனைகடந்தபின்
திருவரங்கமென்றுநீர் தெளிந்திருக்கவல்லிரேல். 77

கருக்குழியிலாசையாய்க் காதலுற்றுநிற்கிறீர், குருக்கிடக்குமேழைகள் குலாவுகின்றபாவிகாள், திருந்திருத்திமெய்யினிற் சிவந்தவஞ்செழுத்தையு, குருக்கழிக்குமும்மையு முணர்ந்துணர்ந்துகொள்ளுமே. 78

மண்ணிலேபிறக்கவும் வலக்கலாதுரைக்கவும்
எண்ணிலாதகோடிதேவ ரென்னதுன்னதென்னவும்
கண்ணிலேமணியிருக்க கண்மறைந்தவாறுபோல்
எண்ணில்கோடிதேவரு மிதன்கணால்விழிப்பதே. 79

மண்கலங்கவிழ்ந்தபோது வைத்துவைத்தடுக்குவார்
வெண்கலங்கவிழ்ந்தபோது வேணுமென்றுபேணுவார்
நண்கலங்கவிழ்ந்தபோது நாறுமென்றுபோடுவார்
எண்கலந்துநின்றமாய மென்னமாயமீசனே. 80

மிக்கசெல்வநீபடைத்த விறகுமேவிப்பாவிகாள், விறகுடன்கொளுத்திமேனி வெந்துபோவதறிகிலீர், மக்கள்பெண்டிர்சுற்றமென்று மாயைகாணுமிவையெலாம், மறலிவந்தழைத்தபோது வந்துகூடலாகுமோ.

ஒக்கவந்துமாதுடன் செறிந்திடத்திலழகியே
ஒருவராகியிருவராகி யிளமைபெற்றவூரிலே
அக்கணிந்துகொன்றைசூடு மம்பலத்திலாடுவார்
அஞ்செழுத்தையோதிடி னனேகபாவமகலுமே. 82

மாடுகன்றுசெல்வமு மனைவிமைந்தர்மகிழவே
மாடமாளிகைப்புரத்தில் வாழுகின்றநாளிலே
ஓடிவந்துகாலதூதர் சடுதியாகமோதவே
உடல்கிடந்துயிர்கழன்ற வுண்மைகண்டுணர்கிலீர்.

பாடுகின்றதும்பரக்கண் தங்களுக்களுக்கியே
பழுதிலாதகன்மகூட்ட மிட்டவெங்கள்பரமனே
நீதிசெம்பொனம்பலத்து ளாடுகொண்டவப்பனே
நீலகண்டகாலகண்ட நித்யகல்யாணனே. 84

கானமற்றகாட்டகத்தில் வெந்தெழுந்தநீறுபோல்
ஞானமுற்றநெஞ்சகத்தில் வல்லதேதுமில்லையே
ஊனமற்றசோதியோ டுணர்வுசேர்ந்தடக்கினால்
தேனகத்தினூறல்போல் தெளிந்ததேசிவாயமே. 85

பருகியோடியும்முளே பறந்துவந்தவெளிதனை
நிருவியேநினைந்துபார்க்கில் நின்மலமதாகுமே
உருகியோடியெங்குமாய தாயசோதிதன்னுளே
கருதடாவுனக்குநல்ல காரணமதாகுமே. 86

சோதியாகியாகிநின்ற சுத்தமும்பலித்துவந்து
போதியாதபோதகத்தை யோதுகின்றபூரணா
வீதியாகவோடிவந்து விண்ணடியினூடுபோய்
ஆதிநாதனாதனென் றனந்தகாலமுள்ளதே. 87

இறைவனாலெடுத்தமாடத் தில்லையம்பலத்திலே
அறிவினாலடுத்தகாய மஞ்சினாலமர்ந்ததே
கருவிநாதமுண்டுபோல் கழன்றவாசலொன்பதும்
ஒருவராய்பொருவர்கோடி யுள்ளுளேயமர்ந்ததே. 88

நெஞ்சிலேயிருந்திருந்து நெருக்கியோடும்வாயுவை
அன்பினாலிருந்துநீ ரருகிருத்தவல்லிரேல் [ளே
அன்பர்கோயில்காணலா மகன்றுமெண்டிசைக்கு
தும்பியோடியோடியே சொல்லடாசுவாமியே. 89

தில்லையைவணங்கிநின்று தெண்டனிட்டவாயுவை
எல்லையைக்கடந்துநின்று ஏகபோகமாய்கையே
டெல்லையைக்கடந்துநின்று சொர்க்கலோகவெளியி
வெள்ளையுஞ்சிவப்புமாகி மெய்கலந்துநின்றதே. [லே

உடம்புயிரெடுத்ததோ வுயிருடம்பெடுத்ததோ
உடம்புயிரெடுத்தபோ துருவமேதுசெப்புவீர்
உடம்புயிரிறந்துபோ துயிரிறப்பதில்லையே
உடம்புமெய்மறந்துகண் டுணர்ந்துஞானமோதுமே.

அவ்வெனுமெழுத்தினா லகண்டமேழுமாகினாய்
உவ்வெனுமெழுத்தினா லுருத்தரித்துநின்றனை
மவ்வெனுமெழுத்தினால் மயங்கினார்கள்வையகம்
அவ்வுமுவ்வுமவ்வுமா யமர்ந்ததேசிவாயமே. 92

மந்திரங்களுண்டுநீர் மயங்குகின்றமானிடர்
மந்திரங்களாவது மாத்திலூறலன்றுகாண்
மந்திரங்களாவது மதத்தெழுந்தவாயுவை
மந்திரத்தையுண்டவர்க்கு மானமேதுமில்லையே. 93

என்னவென்றுசொல்லுவே னிலக்கணமிலாததைப்
பண்ணுகின்றசெந்தமிழ்ப் பதங்கடந்தபண்பென
மின்னகத்தில்மின்னொடுங்கி மின்னதானவாறுபோல்
என்னகத்துளீசனும் யானுமல்லதில்லையே. 94

ஆலவித்திலாலொடுங்கி யாலமானவாறுபோல்
வேறுவித்துமின்றியே விளைந்துபோகமெய்திடீர்

ஆறுவித்தையோர்கிலீ ரறிவிலாதமாந்தரே
யாருமித்தையும்முளே பரப்பிரமமானதே. 95

அவ்வுதித்தமந்திரம் மகாரமாய்உகாரமாய்
எவ்வெழுத்தறிந்தவர்க் கெழுபிறப்புதிங்கிலை
சவ்வுதித்தமந்திரத்தை தற்பரத்திருத்திஞல்
அவ்வுமுவ்வுமவ்வுமா யமர்ந்ததேசிவாயமே. 96

நவ்விரண்டுகாலதாய் நவின்றமவ்வயிரதாய்
சிவ்விரண்டுதோளதாய் சிறந்தவவ்வுவாயதாய்
யவ்விரண்டுகண்ணதா யெழுத்துநின்றநேர்மையிற்
செவ்வையொத்துநின்றதே சிவாயமஞ்செழுத்துமே.

இரண்டுமொன்றுமூலமா யியங்குசக்கரத்துளே
சுருண்டுமூன்றுவளையமாய் சுணங்குபோற்கிடந்ததீ
முரண்டெழுந்தசங்கிணைசை மூலநாடியூடுபோய்
அரங்கன்பட்டணத்திலே யமர்ந்ததேசிவாயமே. 98

கடலிலேதிரியுமாமை கரையிலேறிமுட்டையிட்டு
கடலிலேதிரிந்தபோது ரூபமானவாறுபோல்
மடலுளேயிருக்குமெங்கள் மணியரங்கசோதியை
உடலுளேநினைந்துநல்ல வுண்மையானவுண்மையே.

மூன்றுமண்டலத்திலு முட்டிநின்றதூணிலும்
நான்றபாம்பின்வாயிலும் நவின்றெழுந்தவட்சரம்
ஈன்றதாயுமப்பரு மெடுத்துரைத்தமந்திரம் [யே.
தோன்றுமோரெழுத்துளே சொல்லவெங்குதில்லை

மூன்றுமூன்றுமூன்றுமே மூவர்தேவர்தேடிடும்
மூன்றுமஞ்செழுத்துமாய் முழங்குமவ்வெழுத்துளே
ஈன்றதாயுமப்பரு மியங்குகின்றநாதமும்
தோன்றுமண்டலத்திலே சொல்லவெங்குதில்லையே.

கோருகின்றபூதம்போற் சுணங்குபோற்கிடந்ததீ
நாறுகின்றகும்பியி னவின்றெழுந்தமுடரே

சீறுகின்றவைவவரை சினுக்கறுக்கவல்லிராய்
ஆறுகோடிவேணியா ராறிலொன்றிலாவரே. . 102

வட்டமென்றுவும்முளே மயங்கிவிட்டதெவ்வெளி
அட்டாக்கரத்துளே யடக்கமுமொடுக்கமும்
எட்டுமெட்டுமெட்டுமோ யியங்குசக்கரத்துளே
ஏட்டலாமுதித்ததெம்பி ரானைநானறிந்தபின். 103

பேசுவானுமீசனே பிரமஞானமும்முளே
ஆசையானவைவரு மலைந்தலைகள்செய்கிறார்
ஆசையானவைவரை யடக்கியோரெழுத்திலே
பேசிடாதிருப்பிரேல் நாதம்வந்தொலிக்குமே. 104

நமசிவாயவஞ்செழுத்தும் நிற்குமேநிலைகளும்
நமசிவாயமஞ்சுமஞ்சும் புராணமானமாய்கையை
நமசிவாயமஞ்செழுத்தும் நம்முளேயிருக்கவே
நமசிவாயவுண்மையை நன்குரைசெய்நாதனே. 105

பரமுனக்கெனக்குவேறு பயமிலைபராபரா
கரமெடுத்துநிற்றலுங் குவித்தடக்கடப்படா
சிரமுருகியமுதளித்த சீருலவுநாதனே
வரமெனக்குநீயளித்த ஓம்நமசிவாயமே. 106

பச்சைமண்பதுப்பிலே பழுப்பதிந்தவேட்டுவன்
நித்தமும்நினைந்திட நினைத்தவண்ணமாயிடும்
பச்சைமண்ணிடிந்துபோய் பரந்ததும்பியாயிடும்
பித்தர்காளறிந்துகொள் பிரானிருந்தகோலமே. 107

ஒளியதானகாசிமீது வந்துதங்குவோர்க்கெலாம்
வெளியதானசோதிமேனி சிசுவநாதனானவன்
தெளியுமங்கையுடனிருந்து செப்புகின்றதாரகம்
வெளியசோரிராமராம நாமமிந்தநாமமே. 108

விழியிரேறுபுனல்விளைந்த வில்லவல்லியோனியும்
வெளியிலேபிதற்றலாம் விளைவுநின்றதில்லையே

வெளிபரந்ததேசமும் வெளிக்குள்மூலவித்தையும்
தெளியவல்லஞானிகள் தெளிந்திருத்தல்திண்ணமே.

ஓம்நமசிவாயமே யுணர்ந்துமெய்யுணர்ந்துபின்
ஓம்நமசிவாயமே யுணர்ந்துமெய்தெளிந்தபின்
ஓம்நமசிவாயமே யுணர்ந்துமெய்யுணர்ந்தபின்
ஓம்நமசிவாயமே யுட்கலந்துநிற்குமே. 110

அல்லல்வாசலொன்பது மறுத்தடைத்தவாசலும்
சொல்லும்வாசலோரைந்து சொம்மிவிம்மிநின்றது
நல்லவாசலைத்திறந்து ஞானவாசலூடுபோய்
எல்லைவாசல்கண்டவ ரினிபிறப்பதில்லையே. 111

ஆதியானதோன்றுமே யனேகனேகரூபமாய்
சாதிபேதமாயெழுந்து சர்வசீவனானபின்
ஆவியோடுஆடுகின்ற மீண்டுமிந்தசென்மமாம்
சோதியானஞானியர்க்குஞ் சுத்தமாயிருப்பரே. 112

மலர்ந்ததாதுமூலமாய் வையகமலர்ந்ததும்
மலர்ந்தபூமயக்கம்வந் தடுத்ததும்விடுத்ததும்
புலன்களைந்தும்பொறிகலங்கி பூமிமேல்விழுந்ததும்
இனங்கலங்கிநின்றமாய மென்னமாயமீசனே. 113

பாரடங்கவுள்ளதும் பரந்தவாளமுள்ளதும்
ஓரிடமுமன்றியே யொன்றிநின்றவொண்சுடர்
ஆரிடமுமன்றியே யகத்துளும்புறத்துளும்
சீரிடங்கள்கண்டவர் சிவன்தெரிந்தஞானியே. 114

மண்கிடாரமேசுமந்து மலையுளேறிமறுகுறீர்
எண்படாதகாரியங்க ளியலுமென்றுகூறினீர்
தம்பிரானைநாள்கடோறுந் தரையிலேதலைபடக்
கும்பிடாதமாந்தரோடு கூடிவாழ்வதெங்ஙனே. 115

சாவிநூலழிந்ததும் நலங்குலமழிந்ததும்
வேவுதேரழிந்ததும் விசாரமுங்குறைந்ததும்

பாவிகாளிதென்னமாயம் வாமநாடுபூசலாய்
ஆவியாரடங்கினாலைவருமடங்குவார். 116

வீடெடுத்துவேள்விசெய்து மெய்யரோடுபொய்யு மாய், மாடுமக்கள்பெண்டிர்சுற்ற மென்றிருக்குமாந் தர்காள், நாடுபெற்றநண்பர்கையி லோலைவந்தழைத் தபோது, ஆடுபெற்றதவ்விலை பெறாதுகாணுமிவ்வு டல். 117

இல்லையில்லையென்றுநீ ரியம்புகின்றவேழைகாள், இல்லையென்றுநின்றதொன்றை யில்லையென்னலாகு மோ, இல்லையல்லவொன்றுமல்ல விரண்டுமொன்றி நின்றதை, எல்லைகண்டுகொண்டபே ரினிப்பிறப் பதில்லையே. 118

காரகாரகாரகார காவலூழிகாவலன்
போரபோரபோரபோர போரில்நின்றபுண்ணியன்
மாரமாரமாரமார மரங்களேழுமெய்தசீ
ராமராமராமராம ராமயென்னுநாமமே. 119

நீடுபாரிலேபிறந்து நேயமானமாயந்தான்
வீடுவேகு தென்றபோது வேண்டியின்பம் வேண்டு
பாடிநாலுவேதமும் பாரிலேபடர்ந்ததோ [மோ
றேடுராமராமராம ராமமென்னுநாமமே. 120

உயிருநன்மையாலுட லெடுத்துவந்திருந்திடும், உ யிருடம்பொழிந்தபோது ரூபரூபமாயிடும், உயிர்சி வத்தின்மாய்கையாகி யொன்றையொன்று கொன்றி டும், உயிருசத்திமாய்கையாகி யொன்றையொன்றுதின் னுமே. 121

நெட்டெழுத்துவட்டமோ நிறைந்தபல்லையோனி யும், நெட்டெழுத்தில்வட்டம்ஒன்று நின்றதோன்று கண்டிலே, குட்டெழுத்திலத்ததென்று கொப்புகால்

குறித்திடி, நெட்டெழுத்தில் வட்டமொன்றில்நேர் படானம் மீசனே. 122

விண்ணிலுள்ளதேவர்க ளறியொணாதமெய்ப்பொருள், கண்ணிலானியாகவே கலந்துநின்றதம்பிரான், மண்ணிலாம்பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின், அண்ணலாருமெம்முளே யமர்ந்துவாழ்வ துண்மையே. 123

விண்கடந்துநின்றசோதி மேலைவாசலைத்திறந்து
கண்களித்தவுள்ளுநேள கலந்துபுக்கிருந்தபின்
மண்பிறந்தமாயமும் மபக்கமுமறந்துபோய்
எண்கலந்தவீசனோ டிசைந்திருப்பதுண்மையே. 124

மூலமானமூச்சதில் மூச்சறிந்துவிட்டபின்
நாளுநாளுமுன்னிலோரு நாட்டமாகிநாட்டிடில்
பாலனாகிநீடலாம் பரப்பிரமமாகலாம்
ஆலமுண்டகண்டராணை யம்மையாணையுண்மையே.

மின்னெழுந்துமுன்பரந்து மின்னொடுங்குமாறு போல், என்னுள்நின்றவென்னுளீச னென்னுளேயொடுங்குமே, கண்ணுணின்றகண்ணில்நேர்மை கண்ணறிவிலாமையால், என்னுணின்றவென்னையா னியானறிந்ததில்லையே. 126

இருக்கலாமிருக்கலா மவனியிலேயிருக்கலாம்
அரிக்குமால்பிரமனு மகண்டமேழகற்றலாம்
கருக்கொளாதகுழியிலே காவிடாதகண்ணிலே
நெருப்பறைதிறந்தபின்பு நீயும்நானுமீசனே. 127

ஏகபோகமாகிய விருவருமொருவராய்
போகமும்புணர்ச்சியும் பொருந்துமாறதெங்ஙனே
ஆகிலுமழகிலு மதங்கனையதானபின்
சாகிலும்பிறக்கிலு மில்லையில்லையில்லையே. 128

வேதநாலுபூதமாய் விரவுமங்கிரோதாய்
பாதமேயிலங்கமாய்ப் பரிந்துபூசைபண்ணினால்
காதில்நின்றுகடைதிறந்து கட்டறுத்தஞானிகாள்
ஆதியந்தமுங்கடந்த தரியவீடதாகுமே. 129

பரித்திநூல்முரிக்கியிட்டு பஞ்சியோதுமாந்தரே
துருத்திநூல்முரிக்கியிட்டு றுன்பநீங்கவல்லிரேல்
இருத்திநூல்கலைப்படுங் காலநூல்கழிந்திடும்
திருத்திநூல்காலருஞ சிவாயவஞ்செழுத்துமே. 130

சாவதானதத்துவச் சடங்குசெய்யுமூமைகாள்
தேவர்கல்லுமாவரோ சிரிப்பதன்றியென்செய்வேன்
மூவராலுமறியொணாத முக்கணன்முதற்கொழுந்து
காவலாகவும்முளே கலந்திருப்பன்காணுமே. 131

காலைமாலைநீரிலே முழுகுமந்தமூடர்காள்
காலைமாலைநீரிலே கிடந்ததேரையென்பெறும்
காலமேயெழுந்திருந்து கண்கள்மூன்றிலொன்றையும்
மூலமேநினைந்திராகில் முத்திசித்தியாகுமே. 132

எங்கள்தேவ ருங்கள்தேவ ரென்றிரண்டு தேவரோ, இங்குமங்குமாகிநின்ற வாதிமூர்த்தியொன்றலோ, அங்குமிங்குமாயிரண்டு வாதிமூர்த்தியொன்றலோ, வங்கவாரஞ்சொன்னபேர்கள் வாய்புழுத்துமாள்வரே. 133

இறையறையிடைக்கிட வன்றுதூமையென்கிறீர், முறைபறிந்துபிறந்தபோது மன்றுதூமையென்கிறீர், துறைபறிந்துநீர்குளித்தா லன்றுதூமையென்கிறீர், பொறையிலாதநீசரோடும் பொருந்துமாறதெங்ஙனே. 134

சத்தம்வந்தவெளியிலே சலமிருந்துவந்ததும்
மத்தமாகிநீரிலே துவண்டுழுமூடரே

சுத்தமேதுகட்டமேது தூய்மைகண்டுநின்றதே
பித்தர்காயமுற்றதேது பேதபேதுபோதமே. 135

மாதமாதந்தூமைதான் மறந்துபோனதூமைதான்
மாதமற்றுநின்றலோ வளர்ந்துரூபமானது
நாதமேதுவேதமேது நற்குலங்களேதடா
வேதமோதும்வேதியர் விளைந்தவாறும்பேசடா. 136

தூமையற்றுநின்றலோ வழக்கமற்றுநின்றது
ஆண்மையற்றுநின்றலோ வழக்கமற்றுநின்றது [ற
தாண்மையற்று ஆண்மையற்று சஞ்சலங்களற்றுநின்
தூமைதூமையற்றகாலஞ் சொல்லுமற்றுநின்றதே.

ஊறிநின்றதூமையை யுறைந்துநின்றசீவனை
வேறுபேசிமூடரே விளைந்தவாறதேதடா
நாறுகின்றதூமையல்லோ நற்குலங்களாவன
சீறுகின்றமூடரேயத் தூமைநின்றகோலமே. 138

தூமைகண்டுநின்றபெண்ணின் தூமைதானுமூறியே
சீமையெங்குமாணும்பெண்ணும் சேர்ந்துலகங்கண்ட
தூமைதானும்ஆசையாய் துறந்திருந்தசீவனை [தே
தூமையற்றுகொண்டிருந்த தேசமேதுதேசமே. 139

வேணும்வேணுமென்றுநீர் வீணுழன்றுதேடுவீர்
வேணுமென்றுதேடினு முள்ளதல்லதில்லையே
வேணுமென்றுதேடுகின்ற வேட்கையை திறந்தபின்
வேணுமென்றவப்பொருள் விரைந்துகாணலாகுமே.

சிட்டரோதுவேதமுஞ் சிறந்தவாகமங்களும்
நட்டகாரணங்களும் நவின்றமெய்ம்மைநூல்களும்
கட்டிவைத்தபோதகங் கதைக்குகந்தபித்தெலாம்
பொட்டதாய்முடிந்ததே பிரானையானறிந்தபின்.

நூற்றுகோடியாகமங்கள் நூறுகோடிமந்திரம்
நூறுகோடிநாளிருந்து மோதினுலென்பயம்

ஆறுமாறுமாறுமாயகத்திலோரெழுத்துமாய்
ஏறுசீரெழுத்தையோத வீசன்வந்துபேசுமே. 142

காலைமாலைதம்மிலே கலந்துநின்றகாலனார்
மாலைகாலையாய்ச்சிவந்த மாயமேதுசெப்பிடீர்
காலைமாலையற்றநீர் கருத்திலேயொடுங்கினால்
காலைமாலையாகிநின்ற காலனில்லையில்லையே. 143

எட்டுமண்டலத்துளே யிரண்டுமண்டலம்வளைத்
திட்டமண்டலத்துளே யெண்ணியாறுமண்டலம்
தொட்டமண்டலத்திலே தோன்றிமூன்றுமண்டலம்
நட்டமண்டலத்துளே நாதனாடிநின்றதே. 144

நாலிரண்டுமண்டலத்துள் நாதனின்றதெவ்விடம்
காலிரண்டுமூலநாடி கண்டதங்குருத்தின்
சேரிரண்டுகண்கலந்து திசைகளெட்டுமூடியே
மேலிரண்டுதான்கலந்து வீசியாடிநின்றதே. 145

அம்மையப்பனப்புநீ யறிந்ததேயறிகிலீர்
அம்மையப்பனப்புநீ யறியயனரனுமாய்
அம்மையப்பனப்புநீ ராதியாதியானபின்
அம்மையப்பனின்னையன்றி யாருமில்லையானதே.

உருத்தரிப்பதற்குமுன் னுடல்கலந்ததெங்ஙனே
கருத்தரிப்பதற்குமுன் காரணங்களெங்ஙனே [னே
பொருத்திவைத்தபோதமும் பொருந்துமாறதெங்ங
குருத்திருத்திவைத்தசொல் குறித்துணர்ந்துகொள்ளுமே.

ஆதியுண்டவந்தமில்லை யன்றுநாலுவேதமில்லை
சோதியுண்டுசொல்லுமில்லை சொல்லிறந்ததேதுமில்
ஆதியானமூவரி லமர்ந்திருந்தவாயுவும் [லை
ஆதியன்றுதன்னையும் மாரறிவாரண்ணலே. 148

புலால்புலால்புலாலதென்று பேதமைகள்பேசுமீர்
புலாலைவிட்டெம்பிரான் பிரிந்திருந்ததெங்ஙனே

புலாலுமாய்ப்பிதற்றுமாய்ப் பேருலாவுந்தானுமாய்
புலாவிலேமுளைத்தெழுந்த பித்தர்காணுமத்தனே.

உதிரமானபால்குளித் தொக்கநீர்வளர்ந்ததும்
இரதமாயிருந்ததொன்றி ரண்டுபட்டதென்கலாம்
முதிரமாகவிட்டதேது மோங்கிசம்புலாலதென்று
சதிரமாய்வளர்ந்ததேது சைவரானமூடரே. 150

உண்டகல்லையெச்சிலென் றுள்ளெறிந்துபோடுநீர்
கண்டவெச்சில்கையல்லவோ பரமனுக்கும்வேறுமோ
கண்டவெச்சல்கேளடா கலந்தபாணியப்பிலே
கொண்டசுத்தமேதடா குறிப்பில்லாதமூடரே. 151

ஓதிவைத்தநூல்களு முணர்ந்துகற்றகல்வியும்
மாதுமக்கள்சுற்றமு மறக்கவந்தநித்திரை
ஏதுபுக்கொளித்ததோ வெங்குமாதிநின்றதோ
சோதிபுக்கொளித்தமாயஞ் சொல்லடாசுவாமியே.

ஈணெருமையின்கழுதத்தி விட்டபொட்டணங்கள்
போல், மூணுநாலுசீலையில் முடிந்தவிழ்க்குமூடர்கா
மூணுநாலுலோகமு முடிவிலாதமூர்த்தியை [ள்
ஊணியூணிநீர்முடிந்தவுண்மையென்னவுண்மையே.

சாவல்நாலுகுஞ்சதஞ்சு தாயதானவாறுபோல்
தாயமானகூட்டிலே கலந்துசண்டைகொள்ளுதே
கூவமானகிழநரிக் கூட்டிலேபுகுந்தபின்
சாவல்நாலுகுஞ்சதஞ்சுந் தானிறந்துபோனதே.

மூலமாங்குளத்திலே முளைத்தெழுந்தகோரையை
காலமேயெழுந்திருந்து நாலுகட்டறுப்பிரேல்
பாலனாகிவாழலாம் பரப்பிரமமாகலாம்
ஆலமுண்டகண்டர்பாத மம்மைபாதமுண்மையே.

செம்பினிற்களிம்புவந்த சிதாங்கள்போலவே
சீவனுக்கழிவுவந்த சேதியேதுசெப்பிடீர்

அம்பினிலெழுதொணாத வணிபரங்கசோதியை
வெம்பிவெம்பிவெம்பியே மெலிந்துமேல்கலங்கிட
செம்பினிற்களிம்புவிட்ட சேதிபேதுகாணுமே. 156

நாடிநாடியும்முளே நயந்துகாணவல்லிரேல்
ஓடியோடிமீளுவா ருமமுளேயடங்கிடும்
தேடிவந்தகாலனும் திகைத்திருந்துபோய்விடும்
*கோடிகாலமும்முநந் திருந்தவாறதெங்ஙனே. 157

பிணங்குகின்றதேதடா பிறஞ்ஞைகெட்டமூடரே
பிணங்கிலாதபேரொளிப் பிராணனையறிகிலீர்
பிணங்குமோரிருவினைப் பிணக்கறுக்கவல்லிரேல்
இணங்கிலாதபெரியவின்பம் பெற்றிருக்கலாகுமே.

மீனிறைச்சிதின்றதில்லை யன்றுமின்றும்வேதியர்
மீனிருக்குநீரலோ மூழ்வதுங்குடிப்பதும்
ஆட்டிறைச்சிதின்றதில்லை யன்றுமின்றும்வேதியர்
ஆட்டிறைச்சியல்லவோ யாகங்களாற்றலே. 159

மாட்டிறைச்சிதின்றதில்லை யன்றுமின்றும்வேதியர்
மாட்டிறைச்சியல்லவோ மரக்கறிக்கிடுவது
மானிறைச்சிதின்றதில்லை யன்றுமின்றும்வேதியர்
மானுரித்ததோலலோ மார்புநூலணிவதும். 160

அக்கிடக்கனைத்துயிர்க்கு மாகிபாகிநிற்பது
ருக்கிடருவைப்பிடித்து குத்தரித்துவிட்டது
ஐக்கிடிற்பிறந்திருந்து மாண்டுமாண்டுபோவது
மொக்கிடுமக்குநா னுணர்த்துவித்ததுண்மையே.

ஐயன்வந்துமெய்யகம் புகுந்தவாறதெங்ஙனே
செய்யதெங்கிளங்குரும்பை நீர்புகுந்தவண்ணமே
ஐயன்வந்துமெய்யகம் புகுந்துகோயில்கொண்டபின்
வையகத்தில்மாந்தரோடு வாய்திறப்பதில்லையே.

---

* கோடிகோடி காலமுங் குறைவிலா திருப்பரே எனவும்பாடவம்.

நவ்வுமவ்வையுங்கடந்து நாடொணாதசிபின்மேல்
வவ்வுயவ்வுளுஞ்சிறந்த வணமைஞானபோதகம்
ஒவ்வுசுத்தியுண்ணிறைந்த துச்சியூடுருவியே
இவ்வகையறிந்தபேர்க ளீசனாணையீசனே. 163

அக்கரமனாதியோ வாத்துமமனாதியோ
புக்கிருந்தபூதமும் புலன்களுமனாதியோ
தக்கமிக்கநூலகளுஞ் சாததிரமனாதியோ
தற்பரத்தையூடறுத்த சற்குருவனாதியோ. 164

பார்த்ததேதுபார்த்திடில் பார்வையூடழிந்திடும்
கூத்ததாயிருப்பிரேல் குறிப்பிலாச்சிவமதாம்
பார்த்தபார்த்தபோதெலம் பார்வையுமிகந்துநீர்
பூத்தபூவுங்காயுமாய் பொருந்துவீர்பிறப்பிலே. 165

நெற்றிபத்தியுழலுகின்ற நீலமாவழுங்கினைப்
பத்திபொத்திநின்றுநின்று பற்றறுத்ததென்பலன்
உற்றிருந்துபாரடா வுள்ளொளிக்குமேலொளி
அத்தனுபமர்ந்திட மறிந்தவன்னனாதியே. 166

நீரையள்ளிநீரில்விட்டு நீநினைந்தகாரியம்
ஆரையுன்னிநீரெலா மவத்திலேயிறைக்கிறீர்
வேரையுன்னிவித்தையுன்னி வித்திலேமுளைத்தெழு
சீரையுன்னிவல்லிரேல்சிவபதங்கள்சேரலாம். [மூந்த

நெற்றியிற்றபங்குகின்ற நீலமாம்விளக்கினை
யுய்த்துணர்ந்துபாரடா வுள்ளிருந்தசோதியைப்
பக்தியிற்றொடர்ந்தவர் பரமயமதானவர்
அத்தலத்திருந்தபேர்க ளவரெனக்குநாவரே. 168

கருத்தரிக்குமுள்ளெலாங் காயம்நின்றதெவ்விடம்
உருத்தரிக்குமுள்ளெலா முயர்ப்புநின்றதெவ்விடம்
அருட்டரிக்குமுள்ளெலா மாசைநின்றதெவ்விடம்
திருக்கறுத்துகொண்டலோ சிவாயவென்றுகூறுவீர்

கருத்தரிக்குமுன்னெலாங் காயம்நின்றதேயுவில்
உருத்தரிக்குமுன்னெலா முயிர்ப்புநின்றதப்புவில்
அருட்டரிக்குமுன்னெலா மாசைநின்றவாயுவில்
திருக்கறுத்துக்கொண்டதே சிவாயமென்றுகூறுமே

தாதரானதாதருந் தலத்திலுள்ளசைவரும்
கூத்தரைப்பறைச்சிமக்கள் கூடிசெய்தகாரியம்
வீதிபோகுஞானியை விரைந்துகல்லெரித்ததும்
பாதகங்களாகவே பலித்ததேசிவாயமே. 171

ஓடியோடிபாவிழைத் துள்ளங்கால்வெளுத்ததும்
பாவியானபூனைவந்து பாலிலேகுதித்ததும்
பணிக்கன்வந்துபார்த்ததும் பாரமில்லையென்றதும்
இழையறுந்துபோனதும் என்னமாயமீசனே. 172

சதுரம்நாலுமறையுமிட்டு தானதங்கிமூன்றுமே
எதிரதானவாயுவாறு எண்ணும்வட்டமேவிய [மேல்
உதிரந்தான்வரைகளெட்டு மெண்ணுமென்சிரசின்
கதிரதானகாயகத்தில் கலந்தெழுந்தநாதமே. 173

நாலெட்டாறுபத்துமேல் நாலுமூன்றுமிட்டபின்
மேலுபத்துமாறுடன் மேதிரண்டதோன்றுமே
கோலியஞ்செழுத்துளே குருவிருந்துகூறிடில்
தோலுமேனிநாதமாய்த் தோற்றிநின்றகோசமே.

கோசமாயெழுந்ததுங் கூடுருவிநின்றதும்
தேசமாய்ப்பிறந்ததுஞ் சிவாயமஞ்செழுத்துமே
ஈசனாரிருந்திட மனேகனேகமந்திரம்
ஆகமம்நிறைந்துநின்ற வைம்பத்தோரெழுத்துமே.

அங்கலிங்கபீடமா வையிரண்டெழுத்திலும்
பொங்குதாமரையினும் பொருந்துவாய்மாத்திலும்
பங்குகொண்டசோதியும் பரந்தவஞ்செழுத்துமே
சிங்கநாதவோசையுஞ் சிவாயமல்லதில்லையே. 176

உவமையில்லாப் பேரொளிக்கு ஒருருவமானதெவ்
விடம், உவமைபாகிபண்டத்தி ஒருருவிநின்றதெவ்வி
டம், தவ்மதானபரமனார் தரித்துநின்றதெவ்விடம்,
தற்பரத்தில்சலம்பிறந்து தாங்கிநின்றதெவ்விடம்.

சுகமதாகவெருதுமூன்று கன்றையீன்றதெவ்விடம்
சொல்லுகீழுலோகமேழும் நின்றவாறதெவ்விடம்
அளவதானமேருவும் அம்மைதானதெவ்விடம்
அவனுமவளுமாடலா லருஞ்சிவன்பிறந்ததே. 177

உதிக்குகின்றதெவ்விட மொடுங்குகின்ற தெவ்வி
டம், கதிக்குநின்றதெவ்விடங் கன்றுறக்கமெவ்விட
ம், மதிக்கநின்றதெவ்விட மதிமயக்கமெவ்விடம், வி
திக்கவல்லஞானிகாள் விரித்துரைக்கவேணுமே. 178

திரும்பியாடுவாசலெட்டு திறமுறைத்தவாசலெட்
டு, மருங்கிலாதகோலமெட்டு வன்னியாடுவாசலெட்
டு, துரும்பிலாதகோலமெட்டு சுத்திவந்தவருளரோ,
அரும்பிலாதபூவுமுண் டையனாணையுண்மையே. 179

தானிருந்துமூலவங்கி தணலெழுப்புவாயுவால் [வே
தேனிருந்துவரைதிறந்து தித்தியொன்று வொத்த
வானிருந்தமதியமூன்று மண்டலம்புகுந்தபின்
ஊனிருந்தளவுகொண்ட யோகிநல்லயோகியே.

முத்தனைப்நினைந்தபோது முடிந்தவண்டத்துச்சிமே
பத்தனாருமம்மையும் பரிந்துவாடலாடினார் [ல்
சித்தரானஞானிகாள் தில்லையாடலென்பிர்காள்
அத்தனாடலுற்றபோ தடங்கலாடலுற்றதே. 181

ஒன்றுமொன்று மொன்றுமே யுலகனைத்து மொ
ன்றுமே, அன்றுமின்றுமொன்றுமே மனாதியான
தொன்றுமே, கன்றல்நின்றசெம்பொனைக் களிம்ப
றுத்துநாட்டினால். அன்றுதெய்வமும்முளே யறிந்த
தேசிவாயமே. 182

நட்டதாபரங்களும் நவின்றசாத்திரங்களும்
இட்டமானஓமகுண்ட மிசைந்தநாலுவேதமும்
கட்டிவைத்தபுத்தகம் கடும்பிதற்றிதற்கெலாம்
பொட்டதாய்முடிந்ததே பிரானையானறியவே. 183

வட்டமானகூட்டிலே வளர்ந்தெழுந்தவம்புளி
சட்டமீபடைத்திலே சங்குசக்கரங்களாய்
விட்டதஞ்சுவாசலில் கதவினாலடைத்தபின்
முட்டையிலெழுந்தசீவன் விட்டவாறதெங்ஙனே.

கோயில்பள்ளியேதடா குறித்துநின்றதேதடா
வாயினால்தொழுதுநின்ற மந்திரங்களேதடா
ஞானமானபள்ளியில் நன்மையாய்வணங்கினால்
காயமானபள்ளியிற் காணலாமிறையையே. 185

நல்லவெள்ளி யாறதாய் நயந்தசெம்பு நாலதாய், கொல்லுநாகமூன்றதாக் குலாவுசெம் பொநிரண்டதாய், வில்லிலீனைசையொன்றுடன் விளங்கவூதவல் லீரேல், எல்லையொக்க சோதியானை யெட்டுமாற்ற தாகுமே. 186

மனத்தகத்தழுக்கறாத மவுனஞானயோகிகள்
வனத்தகத்திருக்கினு மனத்தகத்தழுக்கறார்
மனத்தகத் தழுக்கறுத்த மவுனஞானயோகிகள்
முலைத்தடத்திருக்கினும் பிறப்பறுத்திருப்பரே. 187

உருவுமல்லவொளியுமல்ல வொன்றதாகின்றதே
மருவுமல்லகந்தமல்ல மந்தநாடியுற்றதல்ல
பெரியதல்லசிறியதல்ல பேசுமாவிதானுமல்ல
அரியதாகநின்றநேர்மை யாவர்காணவல்லிரே. 188

ஓரெழுத்துலகெலா முதித்தவட்சரத்துளே
ஈரெழுத்தியம்புகின்ற வின்பமேதறிகிலீர்
மூவெழுத்துமூவராய் மூண்டெழுந்தமூர்த்தியை
நாலெழுத்துநாவிலே நவின்றதேசிவாயமே. 189

ஆதியந்தமூலவிந்து நாதமைந்துபூதமாய்
ஆதியந்தமூலவிந்து நாதமைந்தெழுத்துமாய்
ஆதியந்தமூலவிந்து நாதமேவிநின்றதும்
ஆதியந்தமூலவிந்து நாதமேசிவாயமே. 190

அன்னமிட்டபேரெலா மனேககோடிவாழவே
சொன்னமிட்டபேரெலாந் துரைத்தனங்கள்பண்ண
வின்னமிட்டபேரெலாம் வீழ்வரெந்நரகிலே [லா
கன்னமிட்டபேரெலாங் கடந்துநின்றதின்னமே.

ஓதொணாமல்நின்றநீ ருறக்கமுண்ணுமற்றநீர்
சாதிபேதமற்றநீர் சங்கையன்றிநின்றநீர்
கோதலாதவறிவிலே குறிப்புணர்ந்துநின்றநீ
ரேதுமன்றிநின்றநீ ரியங்குமாறதெங்ஙனே. 192

பிறந்தபோதுகோவண மிலங்குநூல்குடுமியும்
பிறந்துடன்பிறந்ததோ பிறங்குநாட்சடங்கெலா
மறந்தநாலுவேதமும் மனத்துளேயுதித்ததோ
நிலம்பிளந்துவானிடிந்து நின்றதென்னவல்லிரே.

திருத்தியுண்டுகொல்லனுண்டு சொர்ணமானசோதியுண்டு, திருத்தமாய்மனத்திலுன்னித் திகழவூத வல்லிரேல், பெருத்ததூணிலங்கியே யியங்கதாய்விரிந்திடும், நிருத்தமானசோதியு நீயுமல்லதில்லையே.

வேடமிட்டுமணிதுலக்கி மிக்கதூபதீபமாய்
ஆடறுத்துகூறுபோட்ட வவர்கள்போலும்பண்ணு
நீர், தேடிவைத்தசெம்பெலாந் திரள்படப்பரப்பியே
போடுகின்றபுட்பபூசை பூசையென்னபூசையே. 195

முட்டுகண்டதூமையின் முளைத்தெழுந்தசீவனை
கட்டிகொண்டுநின்றிடங் கடந்துநோக்கவல்லிரேல்
முட்டுமற்றுகட்டுமற்று முடியினின்றநாதனை
எட்டுதிக்குங்கையினு ளிருந்தவீடதாகுமே. 196

அருக்கனோடுசோமனு மதுக்குமப்புறத்திலே
நெருக்கியேறுதாரகை நெருங்கினின்றநேர்மையை
உருக்கியோரெழுத்துளே யொப்பிலாதவெளியிலே
யிருக்கவல்லபோதலோ யினிப்பிறப்பதில்லையே. 197

மூலவட்டமீதிலே மூளைத்தவஞ்செழுத்தின்மேல்
கோலவட்டமூன்றுமாய் குலைந்தலைந்துநின்றநீர்
ஞானவட்டமன்றுளே நவின்றஞானமாகிலோ
ஏலவட்டமாகியே யிருந்ததேசிவாயமே. 198

சுக்கிலத்திசையுளே சுரோணிதத்தின்வாசலுள்
முச்சதிரமேட்டுளே மூலாதாரவரையிலே
அச்சமற்றசவ்வுளே யரியரனயனுமாய்
உச்சரிக்குமந்திர முண்மையேசிவாயமே. 199

பூவுநீருமென்மனம் பொருந்துகோயிலென்னுளம்
ஆவியோடிலிங்கமா யகண்டமெங்குமாகிலும்
மேவுகின்றஐவரும் விளங்குதீபதீபமாய்
ஆடுகின்றகூத்தனுக்கோ ரந்திசந்தியில்லையே. 200

உருக்கலந்தபின்னலோ வுன்னைநானறிந்தது
இருக்கிலென்மறக்கிலென் னினைந்திருந்தபோதெலா
உருக்கலந்துநின்றபோது நீயுநானுமொன்றலோ
திருக்கலந்தபோதலோ தெளிந்ததேசிவாயமே.

சிவாயமஞ்செழுத்திலே தெளிந்துதேவராகலாம், சிவாயமஞ் செழுத்திலே தெளிந்துவானமாளலாம், சிவாயமஞ் செழுத்திலே தெளிந்து கொண்டவான் பொருள், சிவாயமஞ்செழுத்துளே தெளிந்துகொள் ளுமுண்மையே. 202

பொய்க்குடத்திலைந் தொதுங்கி போகவீசுமாறு போல், இச்சடமுநித்தியமும் நீருமேலலைந்ததே, உ க்குடஞ்சவத்தைமொண் டமர்ந்திருந்தவாறுபோல், யிச்சடஞ்சிவத்தைமொண் டுகர்ந்தமர்ந்திருப்பதே.

பட்டமுங்கயருபோல பறக்கநின்றசீவனை
பார்வையாலேபார்த்துநீ படுமுடிச்சுப்போடடா
இட்டவும்படாதடா சீவனைவிடாதடா
கட்டடாநீசிக்கெனக் களவறிந்தகள்ளனை. 204

அல்லிருந்துபகலிறந் தகபபிரமமிறந்துபோய்
அண்டரண்டமுங்கடந் தனேகனேகரூபமாய்
சொல்லிறந்துமனமிறந்த சுகசொரூபவுண்மையைச்
சொல்லியாறவென்னில்வேறு துணைவரில்லையானதே

ஐயிரண்டுதிங்களா யடங்கிநின்றதூமைதான்
கையிரண்டுகாலிரண்டு கண்ணிரண்டுமாகியே
மெய்திரண்டுசத்தமாய் விளங்கிரசகந்தமும்
துய்யகாயமானதுஞ் சொல்லுகின்றதூமையே. 206

அங்கலிங்கபீடமு மசைவைமூன்றெழுத்தினுஞ்
சங்குசக்கரத்திலுஞ் சகலவானகத்திலும்
தங்குகொண்டயோகிகள் பரமவாசலஞ்சினும்
சிங்கநாதவோசையுஞ் சிவாயமல்லதில்லையே. 207

அஞ்செழுத்து மூன்றெழுத்து மென்றுரைக்குமற்பர்காள், அஞ்செழுத்து மூன்றெழுத்துமல்லகாணு மப்பொருள். அஞ்செழுத்துநெஞ்செழுத்தி லவ்வெழுத்தறிந்தபின், அஞ்செழுத்துமவ்வின்வண்ண மானதேசிவாயமே. 208

ஆதரித்தமந்திர மமைந்தவாகமங்களும்
மாதர்மக்கள்சுற்றமு மயக்கவந்தநித்திரை
ஏதுபுக்கொளித்ததோ வெங்குமாகிநின்றதோர்
சோதிபுக்கொளுத்திடஞ் சொல்லடாசுவாமியே.

அக்கரமனாதியோ வாத்துமாவனாதியோ
புக்கிருந்தபூதமும் புலன்களுமனாதியோ

தக்கமிக்கநூல்களுஞ் சதாசிவமனுதியோ
மிக்கவந்தயோகிகள் விரைந்துரைக்கவேணுமே.

ஒன்பதானவாசலு ளொழியுநாளிருக்கையில்
ஒன்பதானராமராம நாமமென்னுநாமமே
வன்மமானபேர்கள்வாக்கில் வந்துநோயடைப்பராம்
அன்பரானபேர்கள்வாக்கி லாய்ந்தமைந்திருப்பதே.

அள்ளிநீரையிட்டதேது தகங்கையிற்குழைந்ததேது
மெள்ளவேமிணமிணென்று விளம்புகிற்குமூடர்காள்
கள்ளவேடமிட்டதேது கண்ணைமூடிவிட்டதேது
மெள்ளவேகுருக்களே விளம்பிடீர்விளம்பிடீர். 212

அன்னைகர்ப்பத்தூமையி லவதரித்தசுக்கிலம்
முன்னையேதரித்ததும் பனித்துளிபோலாகுமே
உன்னைதொக்குழலுந்தூமை யுள்ளுளேயடங்கிடும்
பின்னையேபிறப்பதுந் தூமைகாணும்பித்தரே. 213

அழுக்கறத்தினங்குறித் தழுக்கறுதமாந்தரே
அழுக்கிருந்ததவ்விட மழுக்கிலாததெவ்விடம்
அழுக்கிருந்ததவ்விடத் தழுக்கறுக்கவல்லிரேல்
அழுக்கிலாதசோதியோ டணுகிவாழலாகுமே. 214

அணுத்திரண்டகண்டமா யனைத்துபல்லியோனியாய்
மனுப்பிறந்தோதிவைத்த நூலிலேமயங்குறீர்
சனிப்பதேதுசாவதேது தாபரத்தினூடுபோய்
நினைப்பதேதுநிற்பதேது நீர்நினைந்துபாருமே. 215

ஆதியாகியண்டாண்ட மப்புறத்துமப்புறம்
சோதியாகிநின்றிலங்கு சுருதிநாதசோமனை
பேதியாமல்தம்முளே பெற்றுணர்ந்தஞானிகள்
சாதிபேதமென்பதொன்று சற்றுமில்லையில்லையே.

ஆக்கைமூப்பதில்லையோ யாதிகாரணத்திலே
நாக்கைமூக்கையுள்மடித்து நாதநாடியூடுபோய்

எக்கருத்திரெட்டையு மிருக்கழுத்தவல்லிரே
பார்க்கப்பார்க்கதிக்கெலாம் பரப்பிரமமாகுமே.

அஞ்சுமஞ்சுமஞ்சுமஞ்சு மல்லல்செய்துநிற்பதும்
அஞ்சுமஞ்சுமஞ்சுமே யமர்ந்துளேயிருப்பதும்
அஞ்சுமஞ்சுமஞ்சுமே யரிக்கவல்லிரேல்
அஞ்சுமஞ்சுமும்முளே யமர்ந்ததேசிவாயமே. 218

அஞ்செழுத்தினாதியா யமர்ந்துநின்றதேதடா
நெஞ்செழுத்திநின்றுகொண்டு நீசெயிப்பதேதடா
அஞ்செழுத்தின்வாளதா லறுப்பதாவதேதடா, பிஞ்
செழுத்திநேர்மைதான் பிரித்துரைக்கவேண்டுமே.

உயிரிருந்ததெவ்விட முடம்பெடுப்பதின்முனம்
உயிரதாவதேதடா வுடம்பதாவதேதடா
உயிரையுமுடம்பையு மொன்றுவிப்பதேதடா
உயிரினாலுடம்பெடுத்த வுண்மைஞானிசொல்லடா.

சுழித்தவோரெழுத்தையுஞ் சொன்முகத்திருத்தி
யே, துன்பவின்பமுங்கடந்து சொல்லுமூலநாடிகள்
அழுத்தமானவக்கர மங்கியுள்ளெழுப்பியே
ஆறுமங்கையுட்கலந் தப்புறத்தலத்துளே. 221

உருத்தரிப்பதற்குமுன் னுயிர்புகுந்தநாதமும்
கருத்தரித்ததற்குமுன் காயமென்னசோணிதம்
அருட்டரிப்பதற்குமுன் னறிவுமூலதாரமாம்
குருத்தறிந்துகொள்ளுவீர் குணங்கெடுங்குருக்களே

எங்குமுள்ளவீசனா ரெம்முடல்புகுந்தபின்
பங்குகூறிபேசுவார் பாடுசென்றணுகிலார், எங்கள்
தெய்வமுங்கள்தெய்வமென் றிரண்டுபேதமோ
உங்கள்பேதமன்றியே வுண்மைரண்டுமில்லையே.

ஆரியுமரியயனுமாகி யண்டமெங்குமொன்றதாய்
பெரியதாகியுலகுதன்னில் நின்றபாதமென்றலோ

விரிவிடுதென்றுவேறுசெய்து வேடமிட்டமூடரே
அறிவினோடுபொருமிங்கு மங்குமெங்குமொன்றதே.

வெந்தநீறுமெய்க்கணிந்து வேடமுந்தரிக்கிறீர்
சிந்தையுள்நினைந்துமே தினஞ்செபிக்குமந்திரம்
முந்தமந்திரத்திலோ மூலமந்திரத்திலோ
எந்தமந்திரத்திலோ வீசன்வந்தியங்குமே. 225

அகாரகாரணத்திலே யனேகனேகரூபமாய்
உகாரகாரணத்திலே யுருத்தரித்துநின்றனன்
மகாரகாரணத்திலே மயங்குகின்றவையகம்
சிகாரகாரணத்திலே தெளிந்ததேசிவாயமே. 226

அவ்வெழுத்திலுவ்வுவந் தகாரமுஞ்சனித்ததோ,
உவ்வெழுத்துமவ்வெழுத்து மொன்றையொன்றுநி
ன்றதோ, செவ்வையொத்துநின்றதோ சிவபதங்கள்
சேரினும், மிவ்வையொத்தஞானிகாள்விரித்துரைக்க
வேணுமே. 227

ஆதியானவஞ்சிலு மனாதியானநாலிலும்
சோதியானமூன்றிலுஞ் சுரூபமுற்றரெண்டிலும்
நீதியானவொன்றிலே நிறைந்துநின்றவஸ்துவை
ஆதியானதொன்றுமே யற்றதஞ்செழுத்துமே. 228

வானிலாததொன்றுமில்லை வானுமில்லைவானிடில்
ஊனிலாததொன்றுமில்லை யூனுமில்லையூனிடில்
நானிலாததொன்றுமில்லை நானுமில்லைநண்ணிடில்
தானிலாததொன்றுமே தயங்கியாடுகின்றதே. 229

சுழித்ததோரெழுத்தையுன்னி சொல்முகத்திருத்தி
யே, துன்பவின்பமுங்கடந்து சொல்லும்நாடியூடு
போய், அழுத்தமானவக்கரத்தினங்கியை யெழுப்பி
யே, ஆறுபங்கயங்கடந் தப்புறத்துவெளியிலே.

விழித்தகண்குவித்தபோ தடைந்துபோயெழுத்தலா
விளைந்துவிட்ட விந்த்ரசால வீடதான வெளியிலே

அழுத்திலுமதிமயங்கி யனுபவிக்கும்வேளையில்
அவனுமுண்டுநானுமில்லை யாருமில்லையானவே.

நல்லமஞ்சனங்கள்தேடி நாடி நாடியோடுறீர்
நல்லமஞ்சனங்களுண்டு நாதனுண்டுநம்முளே
எல்லமஞ்சனங்கள்தேடி யேகபூசைபண்ணினால்
தில்லைமேவுசிவனுஞ் சிவபதத்துளாடுமே. 232

உயிரகத்தில்நின்றிடு முடம்பெடுத்ததற்குமுன்
உயிரகாரமாயிடு முடலுகாரமாயிடும்
உயிரையுமுடம்பையு மொன்றுவிப்பதச்சிவம்
உயிரினுடம்புதா னெடுத்தவாறுரைக்கினே. 233

அண்டமேழுமுழலவே யணிந்தயோனியுழலவே
பண்டுமாலயனுடன் பரந்துநின்றுழலவே
எண்டிசைகடந்துநின் றிருண்டசத்தியுழலவே
அண்டரண்டமொன்றதா யாதிநட்டமாடுமே. 234

உருவநீருறுப்புகொண் டுருத்தரித்துவைத்திடும்
பெரியபாதைபேசுமோ பிசாசைபொத்தமூடரே
கரியமாலுமயனுமாக காணொணாதகடவுளை, உரிமை
யாகவும்முளே யுணர்ந்துணர்ந்துகொள்ளுமே. 235

பண்ணிவைத்தகல்லையும் பழம்பொருள தென்று
நீர், எண்ணமுற்றுமென்னபே ருரைக்கிறீர்களே
ழைநாள், பண்ணவும்படைக்கவும் படைத்துவைத்
தளிக்கவும், ஒண்ணுமாகியுலகளித்த லொன்றைநெ
ஞ்சி லுன்னுமே. 236

நாலதானயோனியுள் நவின்றவிந்துமொன்றதாய்
ஆலதானவித்துளே யமர்ந்தொடுங்குமாறுபோல்
சூலதானவுற்பனஞ் சொல்வதானமந்திரம்
மேலதானஞானிகள் விரித்துரைக்கவேணுமே.

அருவமாயிருந்தபோ தன்னையங்கறிந்திலை
உருவமாயிருந்தபோ துன்னைநானறிந்தனன்.
குருவினால்தெளிந்துகொண்டு கோதிலாதஞானமாம்
பருவமானபோதலோ பரப்பிரமமானதே. 238

பிறப்பதுமிறப்பதும் பிறந்திடாதிருப்பதும்
மறப்பதுநினைப்பது மறந்ததைத்தெளிந்ததுந்
துறப்பதுந்தொடுப்பதுஞ் சுகித்துவாரியுண்பதும்
பிறப்பதுமிறப்பதும் பிறந்தவீடடங்குமே. 239

கண்ணிலேயிருப்பனே கருங்கடல்கடைந்தமால்
விண்ணிலேயிருப்பனே மேவிஅங்குநிற்பனே
தன்னுளேயிருப்பனே தராதலம்படைத்தவன்
என்னுளேயிருப்பனே யெங்குமாகிநிற்பனே. 240

ஆடுநாடுதேடினு மானைசேனைதேடினும்
கோடிவாசிதேடினுங் குறுக்கேவந்துநிற்குமோ
ஓடியிட்டபிச்சையு முகந்துசெய்ததர்மமும்
சாடிவிட்டகுதிரைபோல தர்மம்வந்துநிற்குமே.

கள்ளிரும்புகம்பிளி யிடும்பருத்துவெண்கலம்
அள்ளியுண்டநாதனுக்கோ ராடைமாடைவஸ்திரம்
உள்ளிருக்கும்வேதியர்க் குற்றதானமீதிரால
மெள்ளவந்துநோயணைந்து மீண்டிடுஞ்சிவாயமே.

ஊரிலுள்ளமனிதர்கா ளொருமனதாய்க்கூடியே
தேரிலேவடத்தையிட்டு செம்பைவைத்திழுக்கிறீர்
ஆரினாலுமறியொணாத வாதிசித்தநாதனை
பேதையானமனிதர்பண்ணுய பிரளிபாரும்பாருமே.

மருள்புகுந்தசிந்தையால் மயங்குகின்றமாந்தரே
குருக்கொடுத்தமந்திரங் கொண்டுநீந்தவல்லிரேல்
குருக்கொடுத்த தொண்டருங் குருமுடிந்தபிள்ளை
யும், பருத்திபட்டபன்னிரண்டு பாடுதான்படுவரே.

அன்னைகர்ப்பவறையதற்கு ளங்கியின்பிரகாசமாய்
அந்தறைக்குள்வந்திருந் தரியவிந்துரூபமாய், தன்
னையொர்த்துநின்றபோது தடையறுத்துவெளியதாய்
தங்கநற்பெருமைதந்து தலைவனாய்வளர்ந்ததே. 245

உன்னையற்பநேரமு மறந்திருக்கலாகுமோ
உள்ளமீதுறைந்தெனை மறைப்பிலாதசோதியை
பொன்னைவென்றபேரொளிப்பொருவிலாதவீசனை
பொன்னடிப்பிறப்பிலாமை யென்றுநல்கவேணுமே.

பிடித்ததெண்டுமும்மதோ பிரமமானபித்தர்காள்
கடித்தகோலமத்தைவிட்டுசாதிபேதம்கொண்மினோ
வடித்திருந்ததோர்சிவத்தை வாய்மைகூறவல்லிரேல்
திடுக்கமுற்றவீசனைச் சென்றுகூடலாகுமே. 247

சத்திநீதயவுநீ தயங்குசங்கினோசைநீ
சித்திநீசிவனுநீ சிவாயமாமெழுத்துநீ
முத்திநீமுதலுநீ மூவரானதேவர்நீ
அத்திநீயுமும்முளே யறிந்துணர்ந்துகொள்ளுமே.

சட்டையிட்டுமணிதுலங்குஞ் சாத்திரச்சழக்கரே,
புஸ்தகத்தைமெத்தவைத்து போதமோதும்பொய்ய
ரே, நிட்டையேதுஞானமேது நீரிருந்தவக்ஷரம்,
பட்டையேதுசொல்லிரே பாதகக்கபடரே. 249

உண்மையானசுக்கில முபாயமாயிருந்ததும்
வெண்மையாகிநீரிலே விரைந்துநீரதானதும்
தண்மையானகாயமே தரித்துருவமானதும், திண்
மையானஞானிகாள் தெளிந்துரைக்கவேணுமே.

வஞ்சகப்பிறவியை மனத்துளேவிரும்பியே
அஞ்செழுத்தினுண்மையை யறிவிலாதமாந்தர்காள்
வஞ்சகப்பிறவியை வதைத்திடவும்வல்லிரேல், அஞ்
செழுத்தினுண்மையை யறிந்துகொள்ளலாகுமே.

காயிலாதசோலையிற் கனியுகந்தவண்டுகள்
ஈயிலாததேனையுண் டிராப்பகலுறங்கிறீர்
பாயிலாதகப்பலேறி யக்கரைப்படுமுனே
* வாயினாலுரைப்பதாகு மோபவுமஞ்ஞானமே. 252

பேய்கள் பேய்களென்கிறீர் பிதற்றுகின்றபேயர்காள், பேய்கள்பூசைகொள்ளுமோ பிடாரிபூசைகொள்ளுமோ, ஆதிபூசைகொள்ளுமோவனாதிபூசைகொள்ளுமோ, காயமானபேயலோ கணக்கறிந்துகொண்டதே. 253

மூலமண்டலத்திலே முச்சதுரமாயமாய்
நாலுவாசலைபிரான் நடுவுதித்தமந்திரம்
கோலியெட்டிதழுமாய் குளிர்ந்தலர்ந்ததீட்டமாய்
மேலும்வேறுகாண்கிலேன் விளைந்ததேசிவாயமே.

ஆதிகூடுநாடியோடு காலைமாலைநீரிலே
சோதிமூலமானநாடி சொல்லிறந்ததூவெளி
யாதிகூடுநேற்பறித்த காரமாதியாகமும்
பேதபேதமாகியே பிறந்துடலிறந்ததே. 255

பாங்கினோடிருந்துகொண்டு பரமனஞ்செழுத்துளே
யோங்கிநாடிமேலிருந்து உச்சரித்தமந்திரம்
மூங்கில்வெட்டிநாருரித்து முச்சிலைதைவித்தினி, ஞா
யந்தநூலிற்றேன்றுமே யறிந்துணர்ந்துகொள்ளுமே

புண்டரீகமத்தியி லுதித்தெழுந்தசோதியை
மண்டலங்கள்மூன்றினோடு மன்னுகின்றமாயனை
அண்டரண்டமூடறுத் தறிந்துணரவல்லிரேல், கண்
டகோயில்தெய்வமென்று கையெடுப்பதில்லையே.

அம்பலங்கள்சந்தியி லாடுகின்றவம்பனே
அன்பனுக்குளாஉபனாய் நிற்பனாதிவீரனே

* வாயிலாயி யென்னுங்கள் வாயிலாதமூடரே எனவும் பாடம்.

அன்பருக்குளன்பராய் நின்றவர்திநாயனே
உன்பருக்குவுண்மையாய் நின்றவுண்மையுண்மையே

அண்ணலாவதேதடா வறிந்துரைத்தமந்திரம்
தண்ணனாகவந்தவன் சகலபுராணங்கற்றவன்
கண்ணனாகவந்தவன் காரணைத்துதித்தவன்
ஒண்ணதாவதேதடா வுண்மையானமந்திரம். 259

எள்ளதோர்புறப்பதோ ருயிரொடுங்கிநின்றிடும்
மெள்ளவந்துகிட்டிநீர் வினவவேணுமென்கிறீர்
உள்ளதும்புறம்பது மொத்தபோதுநாதமாம்
கள்ளவாசலைத்திறந்து காணவேணுமப்பனே. 260

ஆரலைந்துபூதமா யளவிடாதயோனியும்
பாரமானதேவரும் பழுதிலாதபாசமும்
ஓரொணாதவண்டமு முலோகலோகலோகமும்
சேரவெந்துபோயிருந்த தேகமேதுசெப்புமே. 261

என்னகத்துளென்னைநா னெங்குநாடியோடினேன், என்னகத்துளென்னைநா னறிந்திலாததாகையால், என்னகத்துளென்னைநா னறிந்துமேதெரிந்தபின், என்னகத்துளென்னையன்றி யாதுமொன்றுமில்லையே. 262

விண்ணினின்றுமின்னெழுந்து மின்னொடுங்கும் வாறுபோல், என்னுள்நின்றுமெண்ணுமீச னென்னகத்திருக்கையால், கண்ணினின்றுகண்ணில்தோன்றும் கண்ணறிவிலாமையால், எண்ணுள்நின்றவென்னையு மியானறிந்ததில்லையே. 263

அடக்கினுமடக்கொணாத வம்பலத்தினூடுபோய்
அடக்கினுமடக்கொணாம லன்பருக்குமென்றுளே
கிடக்கினுமிருக்கினுங் கிலேசம்வந்திருக்கினும்
நடக்கினுமிடைவிடாத நாதசங்கொலிக்குமே. 264

மட்டுலாவுதண்டுழா யலங்களாய்புனற்கழல், விட்டுவீழில்தாகபோக விண்ணில்நண்ணில்வெளியினும், எட்டினோடிரண்டினு மிதத்தினால்மனந்தனைக், கட்டிவீடிலாதுவைத்த காதலின்பமாகுமே. 265

ஏகமுற்றிமூன்றுமுற்றி நாலுமுற்றிநன்மைசேர்
போகமுற்றிபுண்ணியத்தில்முற்றியன்றிமுற்றியா
நாகமுற்றசயனமாய் நலங்கடல்கடந்ததீ
யாகமுற்றியாகிநின்ற தென்கொலாதிதேவனே.

மூன்றுமுப்பத்தாறினோடு மூன்றுமூன்றுமாயமாய்
மூன்றுமுத்தியாகிமூன்று மூன்றுமூன்றுமூன்றுமா
தோன்றுசாதிமூன்றதாய் துலக்கமில்விளக்கதாய்
என்றனாவினுள்புகுந்த தென்கொலோநம்மீசனே.

ஐந்துமைந்துமைந்துமா யல்லவத்துளாயுமாய்
ஐந்துமூன்றுமொன்றுமாகி நின்றவாதிதேவனே
ஐந்துமைந்துமைந்துமா யகைந்தனைத்துநின்றநீ
ஐந்துமைந்துமாயநின்னை யாவர்காணவல்லரே. 268

ஆறுமாறுமாறுமாயொ ரைந்துமைந்துமைந்துமாய்
ஏறுசீரிரண்டுமூன்று மேழுமாறுமெட்டுமாய்
வேறுவேறுஞானமாகி மெய்யினோடுபொய்யுமாய்
ஊறுமோசையாயமர்ந்த மாயமாயமாயனே. 269

எட்டுமெட்டுமெட்டுமாயொ ரேழுமேழுமேழுமாய்
எட்டுமூன்றுமொன்றுமாகி நின்றவாதிதேவனே
எட்டுமாயபாதமோ டிறைஞ்சிநின்றவண்ணமே
எட்டெழுத்துமோதுவார்க ளல்லல்நீங்கிநிற்பரே.

பத்தினோடுபத்துமாயொ ரேழினோடுமொன்பதாய்
பத்துநாற்றிசைக்குநின்ற நாடுபெற்றநன்மையா
பத்துமாயகொத்தமோடு மத்தலமிக்காதிமால்
பத்தர்கட்கலாதுமுத்தி முத்திமுத்தியாகுமே. 271

வாசியாகிநேசமொன்று வந்தெதிர்ந்ததென்னுக
நேசமாகநாளுலாவ நன்மைசேர்பவங்களில்

வீசிமேல்நிமிர்ந்ததோளி யில்லையாக்கினுப்கழல்
ஆசையால்மறக்கலா தமரராகலாகுமே. 272

எளியதானகாயமீதி லெம்பிரானிருப்பிடம்
அளிவுறாதுநின்றதே அகாரமும்உகாரமும்
கொளுகையானசோதியுங் குலாவிநின்றதவ்விடம்
வெளியதாகுமொன்றிலே விளைந்ததேசிவாயமே.

அஞ்செழுத்துமூன்றெழுத்து மென்றுரைக்குமன்பர்கா, ளஞ்செழுத்துமூன்றெழுத்து மல்லகாணுமப்பொருள், அஞ்செழுத்தைநெஞ்சழுத்தி யவ்வெழுத்தறிந்தபின், அஞ்செழுத்துமூன்றெழுத்து மவ்வுமாஞ்சிவாயமே. 274

பொய்யுரைக்கபோதமென்று பொய்யருக்கிருக்கையால், மெய்யுரைக்கவேண்டுதில்லை மெய்யர்மெய்க்கிலாமையால், வையகத்திலுண்மைதன்னை வாய்திரக்கவஞ்சினேன், நையவைத்ததென்கொலோ நமச்சிவாயநாதனே. 275

ஒன்றையொன்றுகொன்றுட னுணவுசெய்திருக்கினும், மன்றினூடுபொய்களவு மாறுவேறுசெய்யினும், பன்றிதேடுமீசனைப் பரிந்துகூடவல்லிரேல், அன்றுதேவருமுளே யறிந்துணர்ந்துகொள்ளுமே.

மச்சகத்துளேயிவர்ந்து மாயைபேசும்வாயுவை
அச்சகத்துளேயிருந் தறிவுணர்த்திக்கொள்வீரேல்
அச்சகத்துளேயிருந் தறிவுணர்த்திக்கொண்டபின்
இச்சையற்றவெம்பிரா னெங்குமாகிநிற்பனே. 277

வயலிலேமுளைத்தசெந்நெல் களையதானவாறுபோல்
உலகிலேருரும்வண்மைகூறி வவ்வுமாறதங்ஙனே
விரகிலேமுளைத்தெழுந்த மெய்யலாதுபொய்யதாய்
நரகிலேபிறந்திருந்து நாடுபெட்டபாடதே. 278

ஆடுகின்றவெம்பிரானை யங்குமங்குமென்றுநீர்
தேடுகின்றபாவிகாள் தெளிந்ததொன்றையோர்கிலீ
காடுநாடுவீடுவீண் கலந்துநின்றகள்வனை [ர்
நாடியோடியும்முளே நயந்துணர்ந்துபாருமே. 279

ஆடுகின்றவண்டர்கூடு மப்புறம்மதிப்புறம்
தேடுநாலுவேதமுந் தேவரானமூவரும்
நீடுவாழிபூதமும் நின்றதோர்நிலைகளும்
ஆடுவாழினொழியலா தனைத்துமில்லையில்லையே.280

ஆவதும்பரத்துளே யழிவதும்பரத்துளே
போவதும்பரத்துளே புகுவதும்பரத்துளே
தேவரும்பரத்துளே திசைகளும்பரத்துளே
யாவரும்பரத்துளே யானுமப்பரத்துளே. 281

ஏழுபாரெழுகட லிபங்களெட்டுவெம்புடன்
சூழுவான்கிரிகடந்து சொல்லுமேழுலகமும்
ஆழிமால்விசும்புகொள் பிர்மாண்டரண்டவண்டமும்
ஊழியானொளிக்குளே யுதித்துடனொடுங்குமே.282

கயத்துநீரிறைக்கிறீர் கைகள்சோர்ந்துநிற்பதேன்
மனத்துளீரமொன்றிலாத மதியிலாதமாந்தர்காள்
அகத்துளீரங்கொண்டுநீ ரழுக்கறுக்கவல்லிரேல்
நினைத்திருந்தசோதியும் நீயும்நானுமொன்றரோ.

நீரிலேபிறந்திருந்து நீர்சடங்குசெய்கிறீர், ஆரையுன்னிநீரெலா மவத்திலேயிறைக்கிறீர், வேரையுன்னிவித்தையுன்னி வித்திலேமுளைத்தெழுஞ், சீரையுன்னவல்லிரேற் சிவபதமடைவிரே. 284

பத்தொடொத்தவாசலிற் பரந்துமூலவக்கர
முத்திசித்திதொந்தமென் றியங்குகின்றமூலமே
மத்தசித்தவைம்புலன் மகாரமானகூத்தையே
அத்தியூர்தம்முளே யமைந்ததேசிவாயமே. 285

அறிவினோடுமண்டமா யளவிடாதசோதியை
குணமதாகியும்முளே குறித்திருக்கல்முத்தியா
முணமுணொன்றுவும்முளே விரலையொன்றிமீளவும்
தினந்தினமயக்குவீர் செம்புபூசைபண்ணியே. 286

மூலமானவக்கர முகப்பதற்குமுன்னெலாம்
மூடமாகமூடுகின்ற மூடமேதுமூடரே
காலனானவஞ்சுபூத மஞ்சிலேயொடுங்கினால்
ஆதியோடுகூடுமே வனாதியோடுகூடுமோ. 287

முச்சதுரமூலமாகி முடிவுமாகியேகமாய்
அச்சதுரமாகியே யடங்கியோரெழுத்துமாய்
மெச்சதுரமெய்யுளே விளங்குஞானதீபமாய்
உச்சரிக்குமந்திரத்தி னுண்மையேசிவாயமே. 288

வண்டுலங்கள்போலுநீர் மனத்துமாசறுக்கிலீர்
குண்டலங்கள்போலுநீர் குளத்திலேமுழுகுறீர்
பண்டுமுங்கள்நான்முகன் பறந்துதேடிகாண்கிலான்
கண்டிருக்குமும்முளே கலந்திருப்பர்காணுமே. 289

நின்றதன்றிருந்ததன்று நேரிதன்றுகூறிதன்று
பந்தமன்றுவீடுமன்று பாவமெல்லாமற்றது
கெந்தமன்றகேள்வியன்று கேடிலாதவாணிலே
அந்தமன்றிநின்றதொன்ற தெங்ஙனேயுரைப்பதே.

பொருந்துநீருமும்முளே புகுந்துநின்றகாரணம்
எருதிரண்டுகன்றையீன்றவேகமொன்றையோர்கிலீ
ரருகிருந்துசாவுகின்ற யாவையுமறிந்திலீர்
குருவிருந்துலாவுகின்ற கோலமென்னகோலமே.

அம்பலத்துளாடுகின்ற வஞ்செழுத்துநீயலோ
சிம்புளாய்பரந்துநின்ற சிற்பரமுநீயலோ
எம்பிரானுமெவ்வுயிர்க்கு மேகபோகமாதலால்
எம்பிரானுநானுமா யிருந்ததேசிவாயமே. 292

ஈரொளிய திங்களே யியங்கிநின்ற தப்புறம்
பேரொளிய திங்களே யாவருமறிகிலீர்
காரொளியபடலமுங் கடந்துபோனதற்புறம்
பேரொளிப்பெரும்பத மேகநாதபாதமே. 293

கொள்ளொணாதுமெல்லொணாது கோதறக்குதட்டொணா, தள்ளொணாதணுகொணா தாழலான்மனத்துளே, கொள்ளொணாதுதெளியொணாது சிற்பரத்தினுட்பயன், விள்ளொணாதுபொருளைநான் விளம்புமாறதெங்ஙனே. 294

வாக்கினால்மனத்தினால் மதித்தகாரணத்தினால், நோக்கொணாதநோக்கையுன்னிநோக்கையாவர்நோக்குவார், நோக்கொணாதநோக்குவந்து நோக்கநோக்கநோக்கிடில், நோக்கொணாதநோக்குவந்து நோக்கையெங்கணோக்குமே. 295

உள்ளினும்புறம்பினு முலகமெங்கணும்பரந், தெள்ளிலெண்ணெய்போலநின் றியங்குகின்றவெம்பிரான், மெள்ளவந்தெனுட்புகுந்து மெய்த்தவம்புரிந்தபின், வள்ளலென்னவள்ளலுக்கு வண்ணமென்னவண்ணமே. 296

வேதமொன்றுகண்டிலேன் வெம்பிறப்பிலாமையாய், போதநின்றவடிவதாய்ப் புவனமெங்குமாயினாய், சோதியுள்ளொளியுமாய்த் துரியமோடதீதமா, ஆதிமூலமாதியா யமைந்ததேசிவாயமே. 297

சாணிருமடங்கினாற் சரிந்தகொண்டைதன்னுளே
பேணியப்பதிக்குளே பிறந்திறந்துழலுவீர்
தோணியானவைவரைத் துறந்தறுக்கவல்லிரேல்
காணிகண்டுகோடியாகக் கலந்ததேசிவாயமே. 298

அஞ்சுகோடிமந்திர மஞ்சுளேயடங்கினால்
நெஞ்சுகூறவும்முளே நினைப்பதோரெழுத்துளே

அஞ்சுநாலுமூன்றதாகி யும்முழையடங்கினால்
அஞ்சுமோரெழுத்ததா யமைந்ததேசிவாயமே.

அக்கரந்தவக்கரத்தி லுட்கரந்தவக்கரம்
சக்கரத்துசிவ்வையுண்டு சம்புளத்திருந்ததாம்
எட்கரந்தவெண்ணெய்போ லெவ்வெழுத்துமெய்பி
உட்கரந்துநின்றநேர்மையாவர்காண வல்லரே.[ருன்

ஆகமத்தினுட்பொரு ளகண்டமூலமாதலால்
தாகபோகமன்றியே தரித்ததற்பரமுநீ
ஏகமாதம்வைத்தனை யுணர்த்துமஞ்செழுத்துளே
ஏகபோகமாகியே யிருந்ததேசிவாயமே. 301

மூலவாசல்மீதுளே மூச்சதுரமாகியே
நாலுவாசலெண்விரல் நடுவுதித்தமந்திரம்
கோலமொன்றுமஞ்சுமாகு முங்கலந்துநின்றநீ
வேறுவேறுகண்டிலேன் விளைந்ததேசிவாயமே.302

சுக்கிலத்திடியுளே சுழித்ததோரெழுத்துளே
அக்கரத்திடியுளே யமர்ந்தவாதிசோதிநீ
உக்கரத்தடியுளே யுணர்ந்தவஞ்செழுத்துளே
அக்கரமதாகியே யமர்ந்ததேசிவாயமே. 303

குண்டலத்துளேயுளே குறித்தகத்துநாயகன்
கண்டவந்தமண்டலங் கருத்தழித்தகூத்தனை
விண்டலர்ந்தசந்திரன் விளங்குகின்றமெய்ப்பொருள்
கண்டுகொண்டமண்டலஞ் சிவாயமல்லதில்லையே.

சுற்றுமைந்தகூடமென்று சொல்லிறந்ததோர்வெளி
சத்தியுஞ்சிவனுமாக நின்றதன்மையோர்கிலீர்
சத்தியவாதும்முடல் தயங்குசீவனுட்சிவம்
பித்தர்காளறிந்திலீர் பிரானிருந்தகோலமே. 305

மூலமென்றமந்திர முளைத்தவஞ்செழுத்துளே
நாலுவேதநாவுளே நவின்றஞானமெய்யுளே

ஆலமுண்டகண்டனு மரியனுமாதலால்
ஓலமென்றமந்திரஞ் சிவாயமல்லதில்லையே. 306

தத்துவங்களென்றுநீர் தமைக்கடிந்துபோவீர்காள்
தத்துவஞ்சிவமதாகில் தற்பரமுநீரல்லோ
முத்தசீவனுதமே மூலபாதம்வைத்தபின்
அத்தனாருமும்முளே யறிந்துணர்ந்துகொள்ளுமே.

மூன்றுபத்துமூன்றையு மூன்றுசொன்னமூலனே
தோன்றுசேரஞானிகாள் துய்யபாதமென்றலை [ம்
என்றுவைத்தவைத்தபின்னியம்பு மஞ்செழுத்தையு
தோன்றவோதவல்லிரேல் துய்யசோதிகாணுமே.

உம்பர்வானகத்தினு முலகபாரமேழினும்
நம்பர்நாடுதன்னினு நாவலென்றதீவினும்
செம்பொன்மாட மல்குதில்லையம்பலத்துளாடுவான்
எம்பிரானலாதுதெய்வ மில்லையில்லையில்லையே. 309

பூவிலாயமைந்துமாய் புனலில்நின்றநான்குமாய்
தீயிலாயமூன்றுமாய் சிறந்தகாலிரண்டுமாய்
வேயிலாயதொன்றுமாய் வேறுவேறுதன்மையாய்
நீயலாமல்நின்றநேர்மை யாவர்காணவல்லரே. 310

அந்தரத்திலொன்றுமா யசைவுகாலிரண்டுமாய்
செந்தழலில்மூன்றுமாய்ச் சிறந்தவப்புநான்குமாய்
ஐந்துபாரிலைந்துமா யமர்ந்திருந்தநாதனை
சிந்தையிற்றெளிந்தமாயை யாவர்காணவல்லரே.

மனவிகாரமற்றுநீர் மதியிருக்கவல்லிரேல்
நினைவிலாதமணிவிளக்கு நித்தமாகிநின்றிடும்
அனைவரோதும்வேதமும் மகம்பிதற்றனுமேற்
கனவுகண்டதுண்மைநீர் தெளிந்ததேசிவாயமே.

இட்டமுண்டமேதடா விருக்குவேதமேதடா
சுட்டமட்கலத்திலே சுற்றுநூல்களேதடா

முட்டிநின்றதூணிலே முளைத்தெழுந்தசோதியை
பற்றிநின்றதேதடா யட்டநாதபட்டரே. 313

நீரிலேமுளைத்தெழுந்த தாமரையினோரிலை
நீரினோடுகூடிநின்று நீரிலாதவாறுபோல்
பாரிலேமுளைத்தெழுந்த பண்டிதப்பராபரம்
பாரினோடுகூடிநின்ற பண்புகண்டிருப்பிரே. 314

உறங்கிலென்விழிக்கிலெ னுணர்வுசென்றொடுங்கிலேன், சிறந்தவைம்புலன்களுந் திசைத்திசைகளொன்றிலென், புறம்புமுள்ளுமெங்கணும் பொருந்திருந்ததேகமாய், நிறைந்திருந்தஞானிகாள் நினைப்பதேதுமில்லையே. 315

ஓதுவார்களோதுகின்ற வோரெழுத்துமொன்றதே
வேதமென்றதேகமாய் விளம்புகின்றதன்றிது
நாதமொன்றுநான்முகன் மாலுநானுமொன்றதே
ஏதுமன்றிநின்றதொன்றை யானுணர்ந்தநேர்மையே

பொங்கியேதரித்தவச்சு புண்டரீகவெளியிலே
தங்கியேதரித்தபோது தாதுமாதுளையதாம்
அங்கியுட்சரித்தபோது வடிவுகளொளியுமாய்க்
கொம்புமேல்வடிவுகொண்டு குருவிருந்தகோலமே.

மண்ணுளோரும்விண்ணுளோரும் வந்தவாறெதங்கெனில், கண்ணினோடுசோதிபோற் கலந்தநாதவிந்துவும், அண்ணலோடுசத்தியு மஞ்சுபஞ்சபூதமும் பண்ணினோடுறுத்தழிப்பர் பாரொடேழுமின்றுமே.

ஒடுக்குகின்றசோதியுமுந்திநின்றவொருவனும், நடுத்தலத்திலொருவனும் நடந்துகாவிலேறியே, விடு

த்துநின்ற விருவரோடு மெய்யினோடு பொய்யுமாய்,
அடுத்துநின் றறிமினோ வனுதிநின்ற வாதியே. 319

உதித்தமந்திரத்தினு மொடுங்குமக்கரத்தினும்
மதித்தமண்டலத்தினு மறைந்துநின்றசோதிநீ
மதித்தமண்டலத்துளே மரித்துநீ யிருந்தபின்
சிருத்தமண்டலத்துளே சிறந்ததேசிவாயமே. 320

திருத்திவைத்தசற்குருவைச் சீர்பெறவணங்கிலீர்
குருக்கொடுக்கும்பித்தரோ கொண்டுநீந்தவல்லிரோ
குருக்கொடுக்கும்பித்தருங் குருக்கொள்வந்தசீடனு
ம், பருத்திபட்டபாடுதான் பன்னிரண்டும்பட்டதே.

விழித்தகண்துதிக்கவும் விந்துநாதவோசையும்
மேருவுங்கடந்துவண்ட கோளமுங்கடந்துபோய்
எழுத்தெலாமறிந்துவிட்ட விந்திரஞாலவெளியிலே
* யானுநீயுமேகலந்த தென்னதானமையீசனே.

ஓம்நமாவென்றுளே பாவையென்றறிந்தபின்
பானுடற்கருத்துளே பாவையென்றறிந்தபின்
நானுநீயுமுண்டடா நலங்குலமதுண்டடா
ஊனுமூனுமொன்றுமே யுணர்ந்திடாயெனக்குளே.

ஐம்புலனைவென்றவர்க் கன்னதானமீவதாய்
நன்புலன்களாகிநின்ற நாதருக்கதேறுமோ
ஐம்புலனைவென்றிடா தவத்தமேயுழன்றிடும்
வம்பருக்குமீவதுங் கொடுப்பதுமவத்தமே. 324

ஆதியானவைம்புலன்க ளவையுமொக்குளொக்கு
மோ, யோனியிற்பிறந்திருந்த துன்பமிக்குமொக்கு
மோ, வீணர்காள்பிதற்றுவீர் மெய்ம்மையேயுணர்த்தி
ரேல், ஊனுறக்கபோகமு முமக்கெனக்குமொக்கு
மே. 325

---

* இருவினை வெல்பவர்களுக் கெழுபிறப்புமில்லையே.

ஓடுகின்றவைம்புல னொடுங்கதஞ்செழுத்துளே
நாடுகின்றநான்மறை நவிலுகின்றஞானிகாள்
கூடுகின்றகண்டித குணங்கள்மூன்றெழுத்துளே
ஆடுகின்றபாவையா யமைந்ததேசிவாயமே. 326

புவனசக்கரத்துளே பூதநாதவெளியிலே
பொங்குதீபவங்கியுள் பொதிந்தெழுந்தவாயுவைத்
தவனசோமரிருவருந் தாமியங்கும்வாசலில்
தண்டுமாறியேறிநின்ற சரசமானவெளியிலே. 327

மவுனவஞ்செழுத்திலே வாசியேறிமெள்ளவே
வானளாய்நிறைந்தசோதி மண்டலம்புகுந்தபின்
அவனுநானுமெய்கலந் தனுபவித்தவளவிலே
அவனுமுண்டுநானுமில்லை யாருமில்லையானதே. 328

வாளுறையில்வாளடக்கம் வாயுரையில்வாய்வடக்கம், ஆளுறைபில்ஆளடக்கம் அருமைஎன்னவித்தைகாண, தாளுறையில்தாளடக்கம் தன்மையானதன்மையும், நாளுறையில்நாமடக்கம் நானுநீயுங்கண்டதே. 329

வழுத்திடானழித்திடான் மாயரூபமாகிடான்
கழன்றிடான்வெகுண்டிடான் காலகாலகாலமும்
துவண்டிடானசைந்திடான் றூயதூபமாகிடான்
சுவன்றிடானுரைத்திடான் சூக்ஷசூக்ஷசூக்ஷமே.

ஆகிகூவென்றேயுரைத்த வக்ஷரத்தினானந்தம்
யோகியோகியென்பர்கோடி யுற்றறிந்துகண்டிடார்
பூகமாய்மனக்குரங்கு பொங்குமங்குமிங்குமாய்
ஏகமேகமாகவே யிருப்பர்கோடிகோடியே. •331

கோடிகோடிகோடிகோடி குவலயத்தோராதியை
நாடிநாடிநாடிநாடி நாளகன்றுவீணதாய்
தேடிதேடிதேடிதேடி தேகமுங்கசங்கியே
கூடிகூடிகூடிகூடி நிற்பர்கோடிகோடியே. 332

கருத்திலானவெளுத்திலான்பானிருந்தகாரணம், இருத்திலா னொளித்திலா னொ ன்றிரண்டு மாகிலா ன், இருத்திலான்மரித்திலா னெழிந்திடானழிந்தி டான், கருத்திற்கியுங்கூவுமுற்றோன்கண்டறிந்தவா தியே. 333

வாதிவாதிவாதிவாதி வண்டலையறிந்திடான்
ஊதியூதியூதியூதி யொளிமழுங்கியுளறுவான்
வீதிவீதிவீதிவீதி விடையொருப்புரக்குவோன்
சாதிசாதிசாதிசாதி சாகரத்தைக்கண்டிடான். 334

ஆண்மையாண்மை யாண்மையாண்மை ஆண்மை கூறுமசடரே, காண்மையானவாதிரூபங் காலகால காலமும், பாண்மையாகிமோனமான பாசமாகிநின் றிடும், நாண்மையானநாலைவாயில் நங்குமிங்குமங்கு மே. 335

மிங்குவென்றவட்சரத்தின் மீட்டுவாகிகூவுடன்
துங்கமாகச்சோமனோடு சோமன்மாறிநின்றிடும்
அங்கமாமுனைச்சுழியி லாகுமேகவாகையாய்
கங்குலற்றுக்கியானமுற்று காணுவாய்சுடரொளி.

சுடரெழும்புஞ்சூட்சமுஞ் சுழிமுனையின்சூட்சமும்
அடரெழும்பியேகமாக வமர்ந்துநின்றசூட்சமுந்
திடரதானசூட்சமுந் திரியின்வாலைசூட்சமுங்
கடலெழுஞ்சூட்சந்தன்னைகண்டறிந்தோர்ஞானியே

ஞானிஞானியென்றுரைத்த நாய்கள்கோடிகோ டியே, வானிலாதமறைநானென்ற வாதிகோடிகோ டியே, தானிலானசாகரத்தின் தன்மைகாணுமூட ர்கள், மூனிலாமற்கோடிகோடி முன்னறிந்தெ ன்பரே. 338

சூக்ஷ்மானகொம்பிலே சுளிமுனைச்சுடரிலே
வீச்சமானவீயிலே விபுலைதங்கும்வாயிலே

கூச்சமானகொம்பிலே குடியிருந்தகோவிலே
தீக்ஷையான தீவிலே சிறந்ததேசிவாயமே. 339

பொங்கிநின்றமோனமும் பொதிந்துநின்றமோன
மும், தங்கிநின்றமோனமுந் தயங்கிநின்றமோனமுங்
கங்கையானமோனமுங் கதித்துநின்றமோனமுந், தி
ங்களானமோனமுஞ் சிவனிருந்தமோனமே. 340

மோனமானவீதியில் முனைச்சுழியில்வாலையில்
பானமானவீதியில் பசிந்தசெஞ்சுடரிலே
ஞானமானமூலையில் நாலுதங்கும்வாயிலில்
ஊனமானசெஞ்சுட ருதித்ததேசிவாயமே. 341

உதித்தெழுந்தவாலையு முயங்கிநின்றவாலையும்
கதித்தெழுந்தவாலையுங் காலையானவாலையும்
மதித்தெழுந்தவாலையு மறைந்துநின்றஞானமுங்
கொதித்தெழுந்துகும்பலாகி ஹூவுங்ஹ்ரீயுமானதே.

கூவுங்கீயுமோனமாதி கொள்கையானகொள்கையை
மூவிலேயுதித்தெழுந்த முச்சுடர்விரிவிலே
பூவிலேநறைகள்போற் பொருந்திநின்றபூரணம்
ஆவியாவியாவியாவி யன்பருள்ளமுற்றதே. 343

ஆண்மைகூறுமாந்தரே அருக்கனோடும்வீதியைக்
காண்மையாகக்காண்பிரே கசடறுக்கவல்லிரே
தூண்மையானவாதிசூட்சஞ் சோபமாகுமாகுமே
நாண்மையானவாயலில் நடிந்துநின்றநாதமே. 344

நாதமானவாயலில் நடிந்துநின்றசாடலில்
வேதமானவீதியில் விரிந்தமுச்சுடரிலே
கீதமானஹ்ரீயிலே கிளர்ந்துநின்றகூவிலே
பூதமானவாயலைப் புகலறிவஞுசியே. 345

ஆவியாவியாவியாவி ஐந்துகொம்பிளுவியே
மேவிமேவிமேவிமேவி மேதினியின்மானிடர்
வாவிவாவிவாவிவாவி வண்டர்கள்வறிந்திடார்
பாவிபாவிபாவிபாவி படியிலுற்றமாந்தரே. 346

வித்திலேமுளைத்தசோதி வில்வளைவின்மத்தியில்
உத்திலேயொளிவதாகி மோனமான தீபமே
நத்திலோதிரட்சிபோன்ற நாதனையறிந்திடார்
வத்திலேகிடந்துழன்ற வாலையானசூட்சமே. 347

வாலையோடுகாலையும் வடிந்துபொங்குமோனமே
மாலையோடுகாலையான வாரறிந்தமாந்தரே
மூலையானகோணமின் முளைத்தெழுந்தசெஞ்சுடர்
தாலையோடுபோனகன்று தங்கிநின்றமோனமே. 348

மோனமானவீதியில் முடிகிநின்றநாதமே
ஈனமின்றிவேகமான வேகமென்னவேகமே
கானமானமூலையில் கனித்திருந்தவாலையில்
ஞானமானசெஞ்சுடர் நடந்ததேசிவாயமே. 349

உச்சிமத்திவீதியி லொழிந்திருந்தசாதியிற்
பச்சியுற்றசோமனும் பரந்துநின்றுலாவவே
செச்சியானதீபமே தியானமானமோனமே
கச்சியானமோனமே கடந்ததேசிவாயமே. 350

அஞ்சிகொம்பினின்றநாத மாலைபோலெழும்பியே
பிஞ்சிளேடுபூமலர்ந்து பெற்றியற்றசுத்தமே
செஞ்சுடருதித்தபோது தேசிகன்சுழன்றுடன்
பஞ்சபூதமானதே பறந்துநின்றமோனமே. 351

சடுதியானகொம்பிலே தத்துவத்தின்ஹீயிலே
அடுதியானஆவிலே யானிருந்தஹூவிலே
இடுதியென்றசோலையி லிருந்தமுச்சுடரிலே
நடுதியென்றுநாதமோடி நன்குறவமைந்ததே. 352

அமையுமானமோனமு மாணிருந்தமோனமும்
சமையும்பூதமோனமுந் தரித்திருந்தமோனமும்
இமையுங்கொண்டவேகமு மிலங்குமுச்சிமோனமும்
தமையறிந்தமாந்தரே சடத்தையுற்றுநோக்கிலார்.

பாச்சலூர்வழியிலே பரணிருந்தசுழியிலே
காய்ச்சகொம்பினுனியிலே கனியிருந்தமலையிலே
வீச்சமானதேதடா விரிவுதங்குமிங்குமே
மூச்சினோடுமூச்சைவாங்கு முட்டிநின்றசோதியே.

சோதிசோதியென்றுநாடித் தோற்பவர்சிலவரே
ஆதிஆதியென்றுநாடு மாடவர்சிலவரே
வாதிவாதியென்றுசொல்லும் வம்பருஞ்சிலவரே
நீதிநீதிநீதிநீதி நின்றிடுமுழுச்சுடர். 355

சுடரதாகியெழும்பியங்கு தூயமானகாலமே
இடரதாய்ப்புவியும்விண்ணு மேகமாயமைக்குமுன்
படரதாகநின்றவாதி பஞ்சபூதமாகியே
அடரதாகவண்டமெங்கு மாண்மையாகநின்றதே.

நின்றிருந்தசோதியை நிலத்திலுற்றமானிடர், கண்டறிந்துகண்குளிர்ந்து காதலுற்றுலாவுவோர், கண்டமுற்றமேன்முனையின் காட்சிதன்னைக்காணுவார், நன்றியற்றுநரலைபொங்கி நாதமுமகிழ்ந்திடும்.

வயங்குயோனச்செஞ்சுடர் வடிந்தசோதிநாதமுங் கயங்கள்போலக்கதறியே கருவூரற்றவெளியிலே, பயங்கொடின்றியின்றியே படர்ந்துநின்றபான்மையே, நயங்கள்கோவென்றேநடுங்கி நங்கையானதீபமே.

தீபவுச்சிமுனையிலே திவாகரத்தின்சுழியிலே
கோபமாறுகூவிலே கொதித்துநின்றதீயிலே
தாபமானமூலையிற் சமைந்துநின்றசூக்ஷமுஞ்
சாபமானமோட்சமுந் தடித்துநின்றிலங்குமே. 359

தேசிகன்சுழன்றதே திரிமுனையின்வாலையில்
வேசமோடுவாலையில் வியனிருந்தமூலையில்
நேசசந்திரோதய நிறைந்திருந்தவாரமில்
வீசிவீசிநின்றதே விரிந்துனின்றமோனமே. 360

உட்கமலமோனமி லுயங்கிநின்றநந்தியை
விக்கலோடுகீயுமாகி வில்வளைவின்மத்தியில்
முட்பொதிந்ததென்னவே முடிகிநின்றசெஞ்சுடர்
கட்சுவைகள்போலவுங் கடிந்துநின்றகாட்சியே. 361

உந்தியிற்சுழிவழியி லுச்சியுற்றமத்தியிற்
சந்திரனொளிகிரணந் தாண்டிநின்றசெஞ்சுடர்
பந்தமாகவில்வளையிற் பஞ்சபூதவிஞ்சையாச்
சிந்துபோற்கீயில்நின்று கீச்சுமூச்சுவென்றதே. 362

செச்சையென்றமூச்சினோடு சிகாரமும்வகாரமும்
பச்சையாகிநின்றதே பரவெளியின்பான்மையே
இச்சையானஹம்ஸவிலே யிருந்தெழுந்தஹீயிலே
உச்சியானகோணத்தி லுதித்ததேசிவாயமே. 363

ஆறுமூலக்கோணத்தி லமைந்தவொன்பதாத்திலே
நாறுமென்றநங்கையான நாவியுந்தெரிந்திட
கூறுமென்றஐவரங்கு கொண்டுநின்றமோனமே
பாறுகொண்டுநின்றது பறந்ததேசிவாயமே. 364

பறந்ததோகறந்தபோது பாச்சலூர்வழியிலே
பிறந்ததேபிராணனன்றிப் பெண்ணுமாணுமல்லவே
துறந்ததோசிறந்ததோ தூயதுங்கமானதோ
இறந்தபோதிலன்றியு மிலங்கிடுஞ்சிவாயமே. 365

அருளிருந்தவெளியிலே அருக்கநின்றவிருளிலே
பொருளிருந்தசுழியிலே புரண்டெழுந்தவழியிலே
தெருளிருந்தகலையிலே தியங்கிநின்றவலையிலே
குருவிருந்தவழியினின்று ஹம்ஸவுர்ஹீயுமானதே.

ஆனதோரெழுத்திலே யமைந்துநின்றவாதியே
கானமோடுதாலமீதிற் கண்டறுவதில்லையே
தானுந்தானுமானதே சமைந்தவாலைகாலையில்
வேனலோடுவாறுபோல் விரிந்ததேசிவாயமே. 367

ஆறுகொண்டவாரியு மமைந்துநின்றதெய்வமுந்
தூறுகொண்டமாரியுந் துலங்கிநின்றதூபமும்
வீறுகொண்டமோனமும் விளங்குமுட்கமலமும்
மாறுகொண்டஊவிலே மடிந்ததேசிவாயமே. 368

வீர்யல்கொண்டகோணமில் வயங்குமவர்வைகியே
சாயல்கண்டுசார்ந்ததுந் தலைமன்றுறைந்ததுங்
காயவண்டுகண்டதுங் கருவூராங்குசென்றதும்
பாயுமென்றுசென்றதும் பறந்ததேசிவாயமே. 369

பறந்ததேதுறந்தபோது பாச்சலூர்வழியிலே
மறந்ததேதகவ்வுமுற்ற வாணர்கையின்மேவியே
பிறந்ததேயிறந்தபோதிற் பிடாமற்கீயிலே
சிறந்துநின்றமோனமே தெளிந்ததேசிவாயமே. 370

வடிவுபற்பவாசனத் திருத்திமூலவனலையே
மருதத்திறலெழுப்பி வாசலைந்துநாலையு
முடிவுமுத்திரைப்படுத்தி மூலவிறுதண்டினால்
முளரியாலயங்கடந்து மூலநாடியூடுபோய். 371

அடிதுவக்கிமுடியளவி மாறுமாநிலங்கடந்
தப்புறத்தில்வெளிகடந்த வாதியெங்கள்சோதியை
யுடுபதிக்கணமுதருந்தி யுண்மைஞானவுவகையுள்
உச்சிபட்டிறங்குகின்ற யோகிநல்லயோகியே. 372

மந்திரங்களுண்டுநீர் மயங்குகின்றமானிடர்
மந்திரங்களாவது மறத்திலூறலன்றுகாண்
மந்திரங்களாவது மதித்தெழுந்தவாயுவை
மந்திரத்தையுண்டவர்க்கு மரணமேதுமில்லையே.

மந்திரங்கள்கற்றுநீர் மயங்குகின்றமாந்தரே
மந்திரங்கள்கற்றுநீர் மரித்தபோதுசொல்வீரோ
மந்திரங்களும்முளே மதித்தநீரும்முளே
மந்திரங்களாவது மனத்திலைந்தெழுந்ததே. 374

உள்ளதோவிறப்பதோ வுயிரொடுங்கிநின்றிடும்
மெள்ளவெந்துகிட்டிநீர் வினவவேண்டுமென்கிறீர்
உள்ளதும்பிறப்பதும் மொத்தபோதுநாதமாங்
கள்ளவாசலைத்திறந்து காணவேண்டுமாந்தரே. 375

ஓரெழுத்திலிங்கமா யோதுமட்சரத்துளே
ஓரெழுத்தியங்குகின்ற வுண்மையையறிகிலீர்
மூவெழுத்துமூவராய் முளைத்தெழுந்தசோதியை
நாவெழுத்துநாவுளே நவின்றதேசிவாயமே. 376

முத்திசித்திதொந்தமா முயங்குகின்றமூர்த்தியை
மற்றுதித்தவப்புனல்க ளாகுமத்திமப்புலன்
அத்தர்நித்தர்காளகண்ட ரன்பினாலனுதினம்
உச்சரித்துளத்திலே யறிந்துணர்கொண்மினே. 377

மூன்றிரண்டுமைந்துமாய் முயன்றெழுந்ததேவராய்
மூன்றிரண்டுமைந்தராய் முயன்றதேயுலகெலாம்
ஈன்றதாயுமப்பனு மியங்குகின்றநாதமாய் [யே
தோன்றுமோரெழுத்திலே சொல்லவொன்றுமில்லை

வெளியுருக்கியஞ்செழுத்து விந்துநாதசத்தமுந்
தளியுருக்கிநெப்கலந்து சகலசத்தியானதும்
வெளியிலுமவ்வினையினு மருவரையறிந்தபின்
வெளிகலந்ததன்மையால் தெளிந்ததேசிவாயமே.

முப்புறத்திலப்புறம் முக்கணன்வினையிலே
சிற்பரத்துளற்பனஞ் சிவாயமஞ்செழுத்துமாந்
தற்பரமுதித்துநின்று தரணுவெங்குமானபி
னிப்புறமொரெங்குமோடி யெங்குமிலிங்கமானதே.

ஆடிநின்றசீவனோ ரஞ்சுபஞ்சபூதமோ
கூடிநின்றசோதியோ குலாவிநின்றமூலமோ
நாடிகண்டுநின்றதோ நாவுகற்றகல்வியோ
வீடுகண்டுவிண்டிடின் வெட்டவெளிபுமானதே. 381

உருத்தரித்தபோதுசிவ னொக்கநின்றவுண்மையுந்
திருத்தமுள்ளதோன்றிலுஞ் சிவாயமஞ்செழுத்துமா
யிருத்துநின்றறுத்தடங்கியேகபோகமானபின்
கருத்தினின்றுதித்ததே கபாலமேந்துநாதனே. 382

கருத்தரித்துதித்தபோது கமலபீடமானதுங்
கருத்தரித்துதித்தபோது காரணங்களானதுங்
கருத்தரித்துதித்தபோது காணரண்டுகண்களாய்
கருத்தினிலுதித்ததே கபாலமேந்துநாதனே. 383

ஆனவன்னிமூன்றுகோண மாறிரண்டுஎட்டிலே
யானசீவனஞ்செழுத் தகாரமிட்டலர்ந்தது
மானசோதியுண்மையு மனாதியானவுண்மையு
மானதானதானதா யவலமாய்மறைந்திடும். 384

ஈன்றெழுந்தவெம்பிரான் றிருவரங்கவெளியிலே
நான்றபாம்பின்வாயினால் நாலுதிக்குமாயினான்
மூன்றுமூன்றுவளையமாய் முப்புரங்கடந்தபின்
னீன்றெழுநதஅவ்வினோசை யெங்குமாகிநின்றதே.

எங்குமெங்குமொன்றலோ வீரேழ்லோகமொன்றலோ, அங்குமிங்குமொன்றலோ வனாதியானதொன்றலோ, தங்குதாபரங்களுந் தரித்துவாரதொன்றலோ, உங்களெங்கள்பங்கினி லுதித்ததேசிவாயமே.

அம்பரத்திலாடுஞ்சோதி யானவன்னிமூலமா
மம்பரமுந்தம்பரமு மகோரமிட்டலர்ந்தது
மம்பரக்குளியிலே யங்கமிட்டுருக்கிட
வம்பரத்திலாதியோ தமர்ந்ததேசிவாயமே. 38[illegible]

வாடிலாதபூமலர்ந்து வண்டுரிசைநாவிலே
யோடிநின்றுருவெடுத் தாகாரமாயலர்ந்தது
மாடியாடியங்கமு மகப்படக்கடந்தபின்
கூடிநின்றுலாவுமே குருவிருந்தகோலமே. 388

விட்டடிவிளைத்ததோ வேருருக்கிநின்றதோ
எட்டிநின்றசீவனு மீரேழ்லோகங்கண்டதோ
தட்டுருவமாகிநின்ற சதாசிவத்தொளியதோ
வட்டவீடறிந்தபேர்கள் வானதேவராவரே. 389

வானவர்நிறைந்தசோதி மானிடக்கருவிலே
வானதேவரத்தனைக்குள் வந்தடைவர்வானவர்
வானகமுமண்ணகமும வட்டவீடறிந்தபின்
வானெலாநிறைந்துமன்னு மாணிக்கங்களானதே.

பன்னிரண்டுகால்நிறுத்திப் பஞ்சவர்ணமுற்றிடன்
மின்னியவெளிக்குணிசுறு வேரிடத்தமர்ந்ததுஞ்
சென்னிபாந்தலத்திலே சீவனின்றிபங்கிடும்
பன்னியுன்னியாய்ந்தவர் பரப்பிரமமானதே. 391

உச்சிகண்டுகண்கள்கட்டி யுன்மைகண்டதெவ்விடம்
மச்சுமாளிகைககுளே மானிடங்கலப்பிரேல்
எச்சிலானவாசல்களு மேகபோகமாய்விடும்
பச்சைமாலுமீசனும பார்த்ததேசிவாயமே. 392

வாயிலிட்டுநல்லுரிசை யட்சரத்தொளியிலே
கோயிலிட்டுவாவியு மங் கொப்பிலேயுலர்ந்தது
மாயிலிட்டகாயமு பனுகியிட்டசீவனும்
வாயுவிட்டதன்னியும் வளர்ந்ததேசிவாயமே. 393

அட்சரத்தையுச்சரித் தனுதிபங்கிமூலமா
யட்சரத்தைப்புந்திரந்த கோரமிட்டலர்ந்தது
மட்சரத்திலுட்கர மகப்படக்கடந்தபின்
அட்சரத்திலாதிபோ டலர்ந்ததேசிவாயமே. 394

கோயிலுங்குளங்களுங் குளியினிற்குருக்களாய்
மாயிலும்மடியிலு மனத்திலேமயங்குறீர்
ஆயனையரனையு மறிந்துணர்ந்துகொள்விரேல்
தாயினுந்தகப்பனோடு தானமர்ந்ததொக்குமே. 394

கோயிலெங்குமொன்றலோ குளங்கணீர்களொன் றலோ, தேயுவாயுவொன்றலோசிவனுமங்கேயொன் றலோ, ஆயசிவனெங்குமா ரமர்ந்துவாரதெ ன்ற லோ, காயமீதறிந்தபேர்கள்காட்சியாவர்காணுமே.

காதுகண்கள்மூக்குவாய் கலந்துவாரதொன்றலோ
சோதியிட்டெடுத்ததுஞ் சுகங்களுஞ்சுமொன்றலோ
ஓதிவைத்தசாத்திர முதித்துவாரதொன்றலோ
நாதவீடறிந்தபேர்க ளுதாரவர்காணுமே. 296

அவ்வுதித்தவட்சரத்தி னுட்கலந்தவட்சரம்
சவ்வுதித்தமந்திரஞ் சம்புலத்திருந்ததால்
மவ்வுதித்தமாய்கையால் மயங்குகின்றமாந்தர்காள்
உவ்வுதித்ததவ்வுமா யுருத்தரித்தவுண்மையே. 397

அகாரமென்னுமக்கரத்தி லக்கரமெழுந்ததோ
அகாரமென்னுமக்கரத்தி லவ்வுவந்துதித்ததோ
உகாரமுமகாரமு மொன்றிநன்றுநின்றதோ
விகாரமற்றஞானிகாள் விரித்துரைக்கவேணுமே. ()

சத்தியாவதுன்னுடல் தயங்குசீவனுட்சிவம்
பித்தர்காளிதற்குமேல் பிதற்றுமின்றதில்லையே
சுத்தியைந்துகூடமொன்றுசொல்லிறந்ததோர்வெளி
சத்திசிவமுமாகிநின்று தண்மையாவதுண்மையே. ()

சுக்கிலத்துளையிலே சுரோணிதக்கருவுளே
முச்சதுரவாசலில் முளைத்தெழுந்தமேட்டினில்
மெய்ச்சதுரமெய்யுளே விளங்குஞானதீபமா
யுச்சரிக்குமந்திரம் ஓம்நமசிவாயமே. 400

அக்கரமனாதியல்ல வாத்துமமனாதியல்ல
புக்கிருந்தபூதமும் புலன்களுமனாதியல்ல
தக்கமிக்கநூல்களுஞ் சாஸ்திரமனாதியல்ல
வொக்கநின்றுடனகலந்த வுண்மைகாணனாதியே. ()

மென்மையாகி நின்றதேது விட்டுநின்றதொட்ட
தேவு, வுண்மையாகநீயுரைக்க வேணுமெங்களுத்த
மா, பெண்மையாகிநின்றதொன்று விட்டுநின்றதொ
ட்டதை, யுண்மையாயுரைக்கமுத்தி யுட்கலத்திருந்
ததே. 402

அடக்கினாலடங்குமோ வண்டமுஞ்செழுத்துளே
யுடக்கினாலெடுத்தகாய முண்மையென்றுணர்ந்துநீ
கடக்கிலாறுவேதமுந் தரிக்கவோதிலாமையால்
விளக்குநாயுமாயவோதி வேறுவேறுபேசுமோ. 403

உண்மையானசக்கர முபாயமாயிருந்தது
தண்மையானகாயமுந் தரித்தரூபமானதும்
வெண்மையாகிநீறியே விளைந்துநின்றதானது
முண்மையானஞானிகள் விரித்துரைக்கவேண்டுமே.

எள்ளகத்திலெண்ணெய்போல வெங்குமாகியெய்பி
னுள்ளகத்திலேயிருக்க வூசலாடுமூடர்காள் [ரா
கொள்ளைபட்டவாவினைக் குணக்கெடுக்கவல்லிரேல்
வள்ளலாகிநின்றசோதி காணலாகுமெய்ம்மையே. ()

வேணுமென்றஞானமும் விரும்புகின்றநூலிலே
தாணுவொன்றுமூலநாடி தன்னுள்நாடியும்முளே
தாணுவொன்றுமூலநாடி தன்னுள்நாடியும்முளே
காணுமன்றிவேறியாவுங் கனமயக்கமொக்குமே.

வழக்கிலேயுரைக்கிறீர் மனத்துளேதவிக்கிறீர்
உழக்கிலாதுநாழியாள வாறுபோலுமூமைகாள்

உழங்குநாலுநாழியான வாறுபோலமும்முளே
வழக்கிலேயுரைக்கிறீர் மனத்துளீசன்மன்னுமே. 407

அறத்திறங்களுக்குநீ யண்டமெண்டிசைக்குநீ
திறத்திறங்களுக்குநீ தேடுவார்கள்சிந்தைநீ
யுறக்கும்நீயுணர்வுநீ யுட்கலந்தசோதிநீ
மறக்கொணாதநின்கழல் மறப்பினுங்குடிகொளே.

ஆடுகின்றவெம்பிரானை யங்குமிங்குநின்றுநீர் [ர்
தேடுகின்றவீணர்காள் தெளிவதொன்றையோர்கிலீ
நாடிநாடியும்முளே நவின்றுநோக்கவல்லிரேல்
கூடொணாததற்பரங் குவிந்துகூடலாகுமே. 409

சுத்தியைந்துகூடமொன்று சொல்லிறந்ததோர்வெளி
சத்தியுஞ்சிவமுமாகி நின்றதன்மையோர்கிலீர்
சத்திபாவதும்முடன் தயங்குசீவனுட்சிவம்
பித்தர்காளறிந்துகொள் பிரானிருந்தகோலமே.

அகாரமானதம்பலம் மனாதியானதம்பலம்
முகாரமானதம்பல முண்மையானதம்பலம்
மகாரமானதம்பலம் வடிவமானதம்பலஞ்
சிகாரமானதம்பலம் தெளிந்ததேசிவாயமே. 411

சக்கரம்பறந்தோடி சக்கரமேல்பலகையாய்
செக்கிலாடுமெண்ணெய்போல சிங்குதாயுதேயுவு
முக்கிலேயொளிகலந்து யுகங்களுங்கலக்கமாய்
புக்கிலேபுகுந்தபோது போனவாறதெங்ஙனே. 412

வளர்ந்தெழுந்தகொங்கைதன்னைமாயமென்றுஎண்ணிநீ, ரருள்கொள்சீவராருடம் புடமையாகத்தோர் வீர்கள், விளங்குஞானமேவியேமிக்கோர் சொல்லைக் கேட்பிரேல், களங்கமற்றுநெஞ்சுளே கருத்துவந்து புக்குமே. 413

நாலுவேதமோதுகின்ற ஞானமொன்றறிவிரோ
நாலுசாமமாகியே நவின்றஞானபோதமா
யாலமுண்டகண்டனு மயனுமந்தமாலுமாய்ச்
சாலவுன்னிநெஞ்சுளே தரித்ததேசிவாயமே. 414

சுற்றமென்றுசொல்வதுஞ் சுருதிமுடிவில்வைத்திட
ரத்தநித்தமாடியே யமர்ந்திருந்ததெவ்விடம்
பத்திமுற்றியன்பர்கள் பரந்திலொன்றுபாழது
பித்தரேயிதைக்கருதி பேசலாவதெங்ஙனே. 415

எங்ஙனேவிளக்கதுக் கேற்றவாறுளின்றுதா
னெங்ஙனேயெழுந்தருளி யீசனேசரென்பரே
சிங்கமண்மியானைபோலத் திருமலங்களற்றதே
அற்றவுள்ளகத்தையும் மலக்கிநிமெழுகிடு. 416

மெத்ததீபமிட்டதிற்பிற வாதபூசையெத்தியே
நற்றவம்புரிந்துஏக நாதர்பாதம்நாடியே
கற்றிருப்பதேசரிதை கண்டுகொள்ளுமும்முளே
பார்த்தநின்றதம்பலம் பரமனாடுமம்பலம். 417

கூத்துநின்றதம்பலங் கோரமானதம்பலம்
வார்த்தையானதம்பலம் வன்னியானதம்பலஞ்
சென்றுசென்றிடந்தொறுஞ் சிறந்தசெம்பொனம்ப [லம்
சீற்றமானதம்பலந் தெளிந்ததேசிவாயமே.

அன்றுமின்றுநின்றதோ ரனாதியானதம்பலம்
தந்தைதாய்நமநும்நீ சகலதேவதையும்நீ
சிந்தைநீதெளிவுநீ சித்திமுத்திதானும்நீ
மொன்றியொன்றிநின்றது ளொழிந்ததேசிவாயமே.

விந்துநீவிளைவுநீ மேலதாயவேதம்நீ
யெந்தைநீயிறைவனீ யென்னையாண்டவீசனே
எப்பிறப்பிலும்பிறந் திருந்தழிந்தவேழைகா
ளிப்பிறப்பிலும்பிறந்து என்னநீறுபூசுநீர். 420

பிரப்புடன்மலமறுத்து ஆசைநீக்கவல்லிரேல்
செப்புராதவோசையிற் றெளிந்துகாணலாகுமே.

மந்திரங்கள்கற்றுநீர் மயங்குகின்றமாந்தரே
மந்திரங்கள்கற்றுநீர் மரித்தபோதுசொல்வீரோ
மந்திரங்களும்முளே மதிக்கநீரும்முளே
மந்திரங்களாவது மனத்திலெழுந்ததுமே. 422

எட்டியோகமானது மியங்குகின்றநாதமும்
மெட்டுவக்கரத்துளே உகாரமுமகாரமும்
விட்டலந்தமந்திரம் வீணுவதண்டினூடுபோ
யட்டவக்ஷரத்துளே யமர்ந்ததேசிவாயமே. 423

பிரான்பிரானென்றுநீர் பினத்துகின்றமூடரே
பிரானைவிட்டுமெம்பிரான் பிறந்தவாறதெங்ஙனே
பிரானுமாய்பிரானுமாய் பேருலகுதானுமாய்
பிரானிலேமுளைத்தெழுந்த பித்தர்காணும்முடல்.

ஆதியில்லையந்தமில்லை யானநாலுவேதமில்லை
சோதியில்லைசொல்லுமில்லை சொல்லிறந்ததுவெளி
நீதியில்லைநேசமில்லை நிச்சயப்படாதனும்
ஆதிகண்டுகொண்டபின் னஞ்செழுத்துமில்லையே.

அம்மையப்பனப்பநீ ரமர்ந்தபோதறிகிலீ
ரம்மையப்பனானநீ ராதியானபாசமே
யம்மையப்பனின்னையன்றி யாருமில்லையானபின்
னம்மையப்பனின்னையன்றி யாருமில்லையில்லையே.

நூறுகோடிமந்திரம் நூறுகோடியாகமம்
நூறுகோடிநாளிருந்து டாடினுமென்பயன்
ஆறுமாறுமாறுமா யகத்திலோரெழுத்ததாய்
சீறையோதவல்லிரேல் சிவபதங்கள்சேரலாம். 427

முந்தவோரெழுததுளே முளைத்தெழுந்தசெஞ்சுட
ரந்தவோரெழுத்துளே பிறந்துகாயமானது·
மந்தவோரெழுத்துளே யேகமாகிநின்றது
மந்தவோரெழுத்தையு மறிந்துணர்ந்துகொள்ளுமே.

கூட்டமிட்டுநீங்களுங் கூடிவேதமோதுநீர்
ஏட்டகத்துளீசனு மிருப்பதென்னெழுத்துளே
நாட்டமிட்டுநாடிடு நாலுமூன்றுதன்னுளே
யாட்டகத்துமாடிடு மம்மையாணையுண்மையே. 329

காக்கைமூக்கையாமையா ரெடுத்துரைத்தகாரணம்
நாக்கையூன்றியுள்வளைத்து ஞானநாடியூடுபோ
யேக்கைநோக்கவட்சர மிரண்டெழுத்துமேத்திடிற்
பார்த்தபார்த்ததிக்கெலாம் பரப்பிரமமானதே.230

கொள்ளொணாதுகுவிக்கொணாது கோதறக்குலைக்
கொணாது, அள்ளொணாதவணுகொணாது வாதிமூ
லமானதைத், தெள்ளொணாதுதெளியொணாது சிற்
பரத்தினுட்பயன், விள்ளொணாதபொருளையானும்
விளம்புமாறதெங்ஙனே. 431

ஓசையுள்ளகல்லைநீ யுடைத்திரண்டாய்செய்துமே
வாசலிற்பதித்தகல்லை மழுங்கவேமிதிக்கிறீர்
பூசனைக்குவைத்தகல்லில் பூவும்நீருஞ்சாத்துநீர்
ஈசனுக்குகந்தகல் லெந்தகல்லுசொல்லுமே. 432

ஒட்டிவைத்துகட்டிநீ ருபாயமாறமந்திரங்
கட்டுப்பட்டபோதிலுங் கர்த்தனங்குவாழுமோ
எட்டுமெட்டுமெட்டுளே யியங்குகின்றவாயுவை
வட்டமிட்டயவ்விலே வைத்துணர்ந்துபாருமே. 433

இந்தவூரிலில்லையென்று எங்குநாடியோடுநீ
ரந்தவூரிலீசனு மமர்ந்துவாழ்வதெங்ஙனே

யந்தமானபொந்திலாரில் மேவிநின்றநாதனை
யந்தமானசீயிலவ்வி லறிந்துணர்ந்துகொள்ளுமே.

புக்கிருந்ததும்முளை பூரியிட்டதோத்திரம்
தொக்குசட்சுசிங்குவை யூக்கிராணன்சூழ்ந்திடி
லக்குமணிகொன்றைசூடி யம்பலத்துளாடுவார்
மிக்கசோதியன்புடன் விளம்பிடாதுபின்னையே. 435

பின்னெழுந்தமாங்கிஷத்தை பேதையர்கண்பற்றி
பின்புமாங்கிஷத்தில்போகமாய்கைபண்ணினால் [யே
துன்புறும்வினைகள்தான் சூழ்ந்திடும்பினென்றலோ
அன்பராயிருந்தபேர்க ளாறுநீந்தல்போல்வீறே.436

விட்டிருந்ததும்முளை விதனமற்றிருக்கிறீர் [று
கட்டிவைத்தவாசல்மூன்று காட்சியானவாசலொன
கட்டிவைத்தவாசலுங் கதவுதாள்திறந்துபோய்த்
திட்டமானவீசனைத் தெளியுமாங்கிஷத்துடே. 437

ஆகுமாகுமாகுமே யனாதியானவப்பொருள்
ஏகர்பாதம்நாடிநாடி யேத்திநிற்கவல்லிரேல்
பாகுசேர்மொழியுமைக்குப் பாலனாகிவாழலாம்
வாகுடனேவன்னியை மருவியேவருந்திடீர். 438

உண்மையானதொன்றதொன்றை யுற்றுநோக்கிபு
ம்முளே, வண்மையாவவாசியுண்டு வாழ்த்திபேத்த
வல்லிரேல், தண்மைபெற்றிருக்கலாம் தவமும்வந்து
நேரிடும், கன்மதன்மமாகுமீசர் காட்சிதானுங்காணு
மே. 439

பாலனாகவேணுமென்று பத்திமுற்றமென்பதே
நாளும்பாதமுண்டதில் நனைந்திரண்டடுத்ததால்
மூலநாடிதன்னில்வன்னி மூட்டியந்தநீருண
ஏலவார்குழலியூடே யீசர்பாதமெய்துமே. 440

எய்துநின்னையன்பிஞ விறைஞ்சியேத்தவல்லிரே
லெய்துமுண்மைதன்னிலே யிறப்பிறப்பகற்றிடும்
மையிலங்குகண்ணிபங்கன் வாசிவானிலேறிமுன்
செய்தவல்வினைகளுஞ் சிதறுமதுதிண்ணமே. 441

திண்ணமென்றுசேதிசொன்ன செவ்வியோர்கள் கேள்மினே, யண்ணலன்புளன்புருகி யறிந்துநோக்க லாயிடும், மண்ணதிரவிண்ணதிர வாசிபைநடத்திடில், நண்ணியெங்களீசனும் நமதுடலிருப்பனே. 442

இருப்பனெட்டெட்டெண்ணிலே யிருந்துவேறதா குவன், நெருப்புவாயுநீருமண்ணும் நீள்விசும்புமாகு வன், கருப்புகுந்துகாலமே கலந்துசோதிநாதனைக், குருப்புனலில்மூழ்கினுர் குறித்துணர்ந்துகொள்வரே.

கொள்ளுவார்கள்சிந்தையிற் குறிப்புணர்ந்தஞாநி கள், விள்ளுவார்கள்பக்குவத்தில் வேண்டிவேண்டி யேத்தினுல், உள்ளுமாய்ப்புறம்புமா யுணர்வதற்குண ர்வுமாய்த், தெள்ளிதாகநின்றசோதி செம்மையைத் தெளிந்திடே. 444

தெளிந்தநற்சரியைதன்னில் சென்றுசாலோகம் பெறும், தெளிந்தநற்கிரியைபூசை சேரலாஞ்சமீப மே, தெளிந்தநல்யோகந்தனில் சேரலாகுஞ்சாரூப ந், தெளிந்தஞானம்நான்கிலும் சேரலாஞ்சாயுச்யமே

சேருவார்கள்ஞானமென்றுசெப்புவார்தெளிவுளோர்
சேருவார்கள்நாலுபாதச் செம்மையென்றதில்லையே
சேருவார்கள்சிவகதி திருவருளைப்பெற்றபேர்
சேறுமாறுகண்டுநாலுஞ் செய்தொழில்திடப்படே.

திறமளிக்குநாலுபாதஞ் செம்மையுந்திறப்படார்
அறிவிலிகள்தேசநாடு யவத்திலேயலேவதே
குழியுதனேக்காட்டிட குறித்துநோக்கவல்லிரேல்
வெறிகமழ்சடையுடையோன் மெய்ப்பதமடைவரே.

அடைவுளோர்கள்முத்தியை யறிந்திடாதமூடரே
படையுடையதத்துவமும் பாதகங்களல்லவோ
மடைதிறந்தவாரியின் மடையிலேறுமாறுபோல்
உடலில்மூலநாடியை யுபரவேத்தியூன்றிடே. 448

ஊன்றியேத்திமண்டல முறுவிமூன்றுதாள்திரந்
தான்றுநந்தியேறிடி மூர்தம்வந்திறங்கிடும்
தான்றிதென்றுதொண்டருக்கு நாதனும்வெளிப்படு
மான்றியுமுயிர்பரம் பொருந்திவாழ்வதாகவே. 449

ஆகமூலநாடியி லனலெழுப்பிஅன்புடன்
மோகமானமாயையில் முயல்வதுமொழிந்திடில்
தாகமேருநாடியே கனேகமானவாறுபோ
லோகபாதமன்புட னிறைஞ்சினோறிவரே. 450

அறிந்துநோக்கியும்முளே யயன்தியானமும்முளே
யிருந்திராமலேகர்பாதம் பெற்றிருப்பதுண்மையே
யறிந்துமீளவைத்திடா வகையுமாணமேத்தினோர்
செறிந்துமேலேவாசலைத் திறந்துபாருமும்முளே.

சோதியாகவும்முளே தெரிந்துநோக்கவல்லிரேல்
சோதிவந்துதித்திடுந் துரியாதீதமுற்றிடு
மாதிசக்கரத்தினி லமர்ந்துதீர்த்தமாடுவன்
பேதியாதுகண்டுகொள் பிராணனைத்திருத்தியே.

திருவுமாய்சிவனுமாய்தெளிந்துளோர்கள்சிந்தையில்
மருவிலேயெழுந்துவீசும் வாசனையதாகுவான்
கருவிலேவிழுந்தெழுந்த கன்மவாதனையெலாம்
பருதிமுன்னிருளதாய் பறியுமங்கியாருமே. 453

பாருமெந்தையீசாவைத்த பண்பிலேயிருந்துநீர்
சேருமேநடுவறிந்து செம்மையானவப்பொருள்
வேரையும்முடியையும் விரைந்துதேடிமாலயன்
பாரிடந்துவிண்ணிலே பறந்துங்கண்டதில்லையே.

சண்டிலாதயன்மாலென்று காட்சியாகசொல்கிறீர்
மண்டினாலரனுடன் மேவலாயிருக்குமோ
தொண்டுபட்டுமன்புடன் தொழுதுநோக்கவல்லிரேல்
பண்டுமுப்புரமெரித்த பத்திவந்துமுத்துமே. 455

முற்றுமேயவனொழிந்து முன்பினொன்றுகாண்கிலே
பற்றிலாதவொன்றுதன்னை பற்றிநிற்கவல்லது (ன்
சுற்றதாலேயீசர்பாதங் காணலாயிருக்குமோ
பெற்றபேரையன்புடன் பிரியமாகக்கேளுமே. 456

கேட்டுநின்றவுன்னிலை கிடைத்தகாலத்துளே
வாட்டமுள்ளதத்துவ மயக்கமுமகற்றிடும்
வீட்டிலேவெளியதாகும் விளங்கவந்துநேரிடுங்
கூட்டிவன்னிமாருதங் குயத்தைவிட்டெழுப்புமே.

எழுப்பிமூலநாடியை யிதப்படுத்தலாகுமே
மறிப்பிலாதசபையையீ வலித்துவாங்கவல்லிரேல்
சுழுத்தியுங்கடந்துபோய்சொப்பனத்திலப்புற [னே
மழுத்தியோரெழுத்துளே யமைப்பதுண்மையைய

அல்லதில்லையென்றதா னாவியும்பொருளுடல்
நல்லவீசர்தாளிணைக்கு நாதனுக்குமீந்திலை
என்றுமென்னுள்நேசமும் வாசியைவருந்தினால்
தொல்லையாம்வினைவினென்று தூரதூரமானதே.

ஆனதேபதியது யாற்றதேபசுபாசம்
போனதேமலங்களும் புலன்களும்வினைகளும்
கானகத்திலிட்டதீயிற் காற்றுவந்தடுத்துளே
ஞானகத்தில்வாயுவன்னி யொன்றியேயுலாவுமே. 460

உலாவுமூவுமவ்வுமா யுதித்தடர்ந்துநின்றது
மூலாவிலைபமபுலன்களு மொருகலத்திருந்திடும்
விலாவுமங்குநேசமாகி நின்றமிர்தமுண்டுதாங்
குலாவுமெங்கணீசனைக் குறித்துணர்ந்துகும்பிடே.

கும்பிடுங்கருத்துளே குகனையைங்கரனையும்
நம்பியேயிடவலம் நமஸ்கரித்துநாடிட
வெம்பிரானு மம்மையு மிருத்திபேநடுவனைத்
தம்பிபோலவாசகத் தொடர்ந்துசோம்பிநீங்குமே.

நீங்குமைம்புலன்களும் நிறைந்தவல்வினைகளும்
ஆங்காரமாமாசையு மருந்தடர்ந்தபாவமும் [லத்
ஓங்காரத்தினுள்ளிருந்த வொன்பதொழிந்தொன்றி
தூங்கவீசர்சொற்படி துணிந்திருக்ககத்தமே. 463

நினைப் தொன்றுகண்டிலே னீயலாதுவேறிலை
நினைப்புமாய்மறப்பு மாய் நின்றமாய்கைமாயகையே
யனைத்துமாயகண்டமா யனாதிமுன்னாதியாய்
நினைக்குள்நானெனக்குள்நீ நினைக்குமாறெங்ஙனே.

கருக்கலந்தகாலமே கண்டுநின்றகாரணம், உருக்கலங்கபோதலோ வுன்னைநானுணர்ந்தது, விரிக்கிலென்மறைக்கிலென் வினைக்கிசைந்தபோதெலா, முருக்கலந்துநின்றபோது நீயுநானுமொன்றலோ. 465

ஞானநூல்கள்தேடியே நவின்றஞானயோகிகாள்
ஞானமானசோதியை நாடியுள்ளறிகிலீர்
ஞானமாகிநின்றதோர் நாதனைபறிந்தபின்
ஞானமல்லதில்லைவேறு நாமுரைத்ததுண்மையே.

கருத்தரிப்பதற்குமுன் காயம்நின்றதெவ்விடம்
உருத்தரிப்பதற்குமுன் னுயிர்ப்புநின்றதெவ்விடம்
மருட்பொதிந்தசிந்தையில் மபக்கநின்றதெவ்விடம்
விருப்புணர்ந்தஞானிகள் விரித்துரைக்கவேணுமே.

கருவினிற்கருவதா யெடுத்தவேழுதோற்றமு
மிருவினைப்பயத்தினால் பிறந்திறந்துழன்றிடும்
மறுவினைப்புறவிமூன்று காலமும்வகுத்தபின்
உறுவினைப்பயனிதென் றுணர்ந்தஞானிசொல்லுமே.

வாயிலெச்சில்போகவே நீர்குடித்துதுப்புவீர்
வாயிருக்கஎச்சில்போன வாறதென்னதெவ்விடம்
வாயிலெச்சிலல்லவோ நீருரைத்தமந்திரம்
நாதனையறிந்தபோது நாடுமெச்சிலேதுசொல். 469

தொடக்கதென்றுநீர்விழித் தொடங்குகின்றவூமர்காள், தொடக்கிருந்ததெவ்விடஞ் சுத்தியானதெவ்விடம், தொடக்கிருந்தவாறறிந்து சுத்திபண்ணவல்லிரேல், தொடக்கிலாதசோதியைத் தொடர்ந்து காணலாகுமே. 470

மேதியோடுமாவுமே விரும்பிசேருணர்ந்திடில்
சாதிபேதமாயுருத் தரிக்கும்வாறுபோலவே
வேதமோதுவானுடன் புலைச்சிசென்றுமேவிடில்
பேதமாப்பிறக்கிலாத வாறதென்னபேசுமே. 471

வகைகுலங்கள்பேசியே வழக்குரைக்குமாந்தர்காள், தொகைக்குலங்களானநேர்மை நாடியேயுணர்ந்தபின், மிகைத்தசுக்கிலமன்றியே வேறுமொன்றுகண்டிலீர். 472

ஓதும்நாலுவேதமு முரைத்தசாஸ்திரங்களும்
பூததத்துவங்களும் பொருந்துமாகமங்களும்
சாதிபேதவண்மையுந் தயங்குகின்றநூல்களும்
பேதபேதமாகியே பிறந்துழன்றிருந்ததே. 473

உறங்கிலேன்விழிக்கிலே னுணர்வுசென்றொடுங்கிலேன், திறம்பிலேன்றிகைக்கிலேன் சிலதிசைகளெ

ட்டிலேன், புறம்புமுள்ளுமெங்ஙணும் பொதிந்திரு
ந்ததேகமாய், நிறைந்திருந்தஞானிகள் நினைப்பதே
தும்மில்லையே. 474

அங்கலிங்கம்பூண்டுநீ ரகண்டபூசைசெய்கிறீர்
அங்கலிங்கம்பூண்டுநீ யமர்ந்திருந்தமார்பனை
யெங்குமோடியெங்குமெங்கு மீடழிந்துமாய்கிறீர்
செங்கல்செம்பிகல்லென்னு சிறந்துபார்க்குமூடரே.

தீட்டந்தீட்டமென்றுநீர் தினமுழுகுமூடரே
தீட்டமாகியல்லவோ திரண்டுகாயமானதும
பூட்டகாயமும்முளே புகழுகின்றபேயரே
தீட்டவந்துகொண்டலோ தெளிந்ததேசிவாயமே.

மூலநாடிதம்முளே முளைத்தெழுந்தவாயுவை
நாளுநாளுமுபமுளே நடுவிருந்தவல்லிரேல்
பாலனாகுமும்முடல் பறந்துபோகலாய்விடும்
ஆலமுண்டகண்டர்பாத மம்மைபாதமுண்மையே.

உந்திமேலேநாலுமூன்று ஓம்நமசிவாயமாஞ்
சந்திசந்தியென்றுநீர் சாற்றுகின்றபேயரே
முந்தவந்துநம்முளே மூலநாடியூடுபோய்
அந்திசந்தியற்றிட மறிந்துணர்ந்துபாருமே. 478

கன்னிமூன்றுதீபினில் வாழுமெங்கள்நாதனுங்
கன்னிபானதுள்ளிருக்க காதல்கொண்டதெவ்விடஞ்
செந்நிநாலுகையிரண்டு சிந்தையிலிரண்டொன்று
உன்னியுன்னிநம்முளேயுய்த்துணர்ந்துபாருமே. 479

கொண்டுசெய்துநீங்களுஞ் சூலவோடிமாள்கிறீர்
உண்டென்றுநம்முளே யுற்றுணர்ந்துபார்க்கிலீர்
வண்டுலாவுசோலைசூழ் வாழுமெங்கள்நாதனும்
பண்டுபோலநம்முளே பகுத்திருப்பனீசனே. 480

அரியதோர்நமச்சிவாய மாதியந்தமானதும்
ஆறிரண்டுநூறுகோடி யளவிடாதமந்திரம்
தெரியநாலுவேதமாறு சாத்திபுராணமுந்
தேடுமாலுமாலுஞ்சர்வ தேதேவதேவனே. 481

பாமுனக்கெனக்குவேறு பயமுமில்லையாரையா
காமுனக்குநித்தமுங் குவித்திடக்கடமையாஞ்
சிரமுருக்கியமுதளித்த சீருலாவுநாதனே
யுரமெனக்குநீயளித்தவுண்மையுண்மையுண்மையே.

மூலவட்டமீதிலே முளைத்தவைந்தெழுத்திலே
கோலவட்டமூன்றுமாய்க் குளிர்ந்தலர்ந்துநின்றதீ
ஞாலவட்டமன்றுளே நவின்றஞானிமேலதா
மேலவட்டமாகியே யிருந்ததேசிவாயமே. 483

என்னகத்திலென்னைநா னெங்குமோடி நாடினேன்,
னென்னகத்தி லென்னையன்றியேதுமொன்று கண்டி
லேன், மின்னெழும்பிவிண்ணகத்தின் மின்னொடுங்
கும்வாறுபோ, லென்னகத்துளீசனோடி யானுமல்
லதில்லையே. 484

நாலுவேதமோதுகின்ற ஞானமொன்றறிவிரோ
நாலுசாமமாகிய நவின்றஞானபோதமாய்
ஆலமுண்டகண்டனு மயனுமந்தமாலுமாய்ச்
சாலவுன்னிநெஞ்சிலே தரித்ததேசிவாயமே. 485

முச்சதுரமூலமாகி மூன்றதானபேதமா
யச்சதுரமுமுளே யடங்கிவாசியோகமா
மெய்ச்சதுரமெய்யுளே விளங்குஞானதீபமா
யுச்சரித்தமந்திரம் ஓம்நமசிவாயமே. 486

மூன்றுமண்டலத்துளே முச்சதுரமாயமாய்
நாலுவாசலெஞ்விரவி னடுவுதித்தமந்திரங்

கோவிலொன்றுமைந்துமாய்க் குளிர்ந்தலந்துநின்றநீர்
மேலுமேலுநாடினேன் விழைந்ததேசிவாயமே. 487

இடங்கள்பண்ணிசுத்திசெய்தே யிட்டபீடமீதிலே
யடங்கநீறும்பூசல்செய் தருந்தவங்கள்பண்ணுவீர்
ஒடுங்கிநின்றநாதனு ருதிக்குஞானமெவ்விட
மடங்குகின்றதெவ்விட மறிந்துபூசைசெய்யுமே. 488

புத்தகங்களைச்சுமந்து பொய்களைப்பிதற்றுவீர்
செத்திடம்பிறந்திடம் தெங்ஙனென்றறிகிலீர்
அத்தனைபசித்தனை யறிந்துநோக்கவல்லிரே
லுத்தமத்துளாயசோதி யுணருங்போகமாகுமே. ()

அருளிலேபிறந்துதித்து மாயைரூபமாகிய,விருளி
லேதயங்குகின்ற வேழைமாந்தர்கேண்மினோ, பொ
ருளிலேதவம்புனைந்து பொருந்திநோக்கவல்லிரேல்,
மருளதேதுவன்னியின் மறைந்ததேசிவாயமே. 490

கருக்கலந்தகாலமே கண்டிருந்தகாரணா
வுருக்கலந்தபோதலோ வுன்னையானறிந்தபின்
தருக்கலந்தசோதியைத் தெளிந்துயானறிந்தபின்
னிருக்கிலேனிறக்கிலே னிரண்டுமற்றிருந்ததே. 491

தன்மசிந்தையாமளவுந் தவமறியாத்தன்மையாய்க்
கன்மசிந்தைவெயிலுழன்று கருத்தமிழ்ந்தகசடரே
சென்மசென்மந்தேடியுந் தெளிவொணாதசெல்வனை
நன்மையாகவும்முளே நயந்துகாணவேண்டுமே. 492

கள்ளவுள்ளமேயிருக்க கடந்தஞானமோதுவீர்
கள்ளமுள்ளறுத்தபோது கதியிதன்றிக்காண்கிலீ
ருள்ளமேவிளக்கிநித்த மொளியணுகவல்லிரேற்
றெள்ளுஞானமும்முளே சிறந்ததேசிவாயமே. 493

காணவேண்டுமென்றுநீர் கடன்மலைகளேறுவீர்
ஆணவமதல்லவோ வறிவிலாதமாந்தரே
வேணுமென்றவ்வீசர்பாத மெய்யுளேதரிப்பரேற்
றாணுவாகநின்றசீவன் றான்சிவமதாகுமே. 494

அணுவினோட கண்டமா யளவிடாத சோதியைக்,
ஞானமதாக வும்முளேகுறித்து நோக்கின் முத்தியா
ம், மிணமிணென்றுவிரலையெண்ணி நீளொணாமயக்க
மாய், துணிவிலாதபடியினாற் றொடர்ந்துபூசைசெய்
குவீர். 495

எச்சிலெச்சிலென்றுநீ ரிடைந்திருக்குமேழைகா
ளுச்சிலெச்சிலல்லவோ தூயகாயமானதும்
வைத்தவெச்சிறேனலோ வண்டினெச்சில்பூவலோ
கைச்சுதாவில்வைத்துடன் கறந்தபாலுமெச்சிலே.()

தீர்த்தலிங்கமூர்த்தியென்று தேடியோடுந்தீதரே
தீர்த்தலிங்கமுள்ளிநின்ற சீவனைத்தெளியுமே
தீர்த்தலிங்கமும்முளே தெளிந்துகாணவல்லிரேற்
றீர்த்தலிங்கந்தானதாய் சிறந்ததேசிவாயமே. 497

ஆடுகொண்டுகூடுசெய் தமர்ந்திருக்குவாறுபோற்
றேடுகின்றசெம்பினைத் திடப்படப்பரப்பியே
நாடுகின்றதம்பிரானு நம்முளேயிருக்கவே
போடுதர்ப்பபூசையென்ன பூசையென்னபூசையே. ()

என்னையற்பநேரமு மறக்கலாதநாதனே
ஏகனையிறைவனை யிராசராசராசனே
யுன்னையற்பநேரமு மொழிந்திருக்கலாகுமோ
வுனதுநாட்டமெனதுநாவி லுதவிசெய்விசனே. ()

எல்லையற்றுநின்றசோதி யேகமாயெரிக்கவே
வாதைபூரணப்பிரகாச போகபோகமாகியே

நல்லவின்பமோனசா கரத்திலேபழுத்தியே
நாடொறுந்தவமிர்தமுண்டு நானழிந்துநின்றநாள்.

ஆனவாறதாயிடு மகண்டமானசோதியை
யூனைகாட்டியும்முளே யுகந்துகாணவல்லிரேல்
ஊனகாயமாளலா முலகபாரமாளலாம்
வானநாடுமாளலாம் வண்ணநாடராணையே. 501

நித்தலுமணிதுலக்கி நீடுமூலைபுக்கிருந்து
கத்தியேகதறியே கண்கண்மூடியென்பயன்
எத்தனைபேரெண்ணினு மெட்டிரண்டுபத்தலோ
வத்தனுக்கிதேற்குமோ வறிவிலாதமாந்தரே. 502

எட்டிரண்டுங்கூடியே யிலிங்கமானதேவனை
மட்டதாகவும்முளே மதித்துநோக்கவல்லிரேற்
கட்டமானபிறவியென் கருங்கடல்கடக்கலா
மிட்டமானவெளியினோடிசைந்திருப்பிர்காண்மினே

உண்மையானமந்திர மொளியிலேயிருந்திடுந்
தண்மையானமந்திரஞ் சமைந்தரூபமாகிய
வெண்மையானமந்திரம் விளைந்துநீறதானதே
யுண்மையானமந்திரம தொன்றுமேசிவாயமே. 504

பன்னிரண்டுநாளிநத்திப் பஞ்சவன்னமொத்திட
மின்னியவ்வெளிக்குணின்று வேறெடுத்தமர்ந்தது
சென்னியானதலத்திலே சிவனின்றியங்கிடும்
பன்னியுன்னியாய்ந்தவர் பரப்பிரமமாவரே. 505

தச்சிவாயிலுச்சிமே லாயிரந்தலங்களால்
மூச்சுடருமூவிரண்டு மூண்டெழுந்ததீச்சுடர்
வச்சிரமதாகியவளர்ந்து நின்றதெவ்விடம்
இச்சுடருமிந்தியமு மேகமானதெங்ஙனே. 506

முத்திசித்திதொந்தமாய் முயங்குகின்றமூர்த்தியை
மற்றுதித்தவைம்புலங்க ளாகுமத்திமப்புலன்
அத்தனித்தகாளகண்ட ரன்பினாலுநினை
முச்சரித்துளத்திலே யறிந்துணர்ந்துகொண்மினே

அண்ணலாரநாதியா யநாதி முன்னநாதியாய் (ங்
பெண்ணுமாணுமொன்றலோ பிறப்பதாகுமுன்னல
கண்ணிலாணில்சுக்கிலங் கருத்தொடுங்கிநின்றபின்
மண்ணுளோருவிண்ணுளோருவந்தவாரதெங்ஙனே

எத்திசைக்குமெவ்வுயிர்க்கு மெங்களப்பனெம்பிரா
ன்,முத்திஞானவித்துளே முளைத்தெழுந்தசெஞ்சு
டர், சித்தினிற்றெளிந்தபோதுதேவர்கோயிற்சேர்ந்
தன, னத்தனுடல்கண்டபோதடங்கியாடலுற்றதே

வல்லவாசலொன்பது மருத்தவாசசொன்பதுஞ்
சொல்லும்வாசலோரைந்துஞ் சொல்லவிம்மிநின்றது
நல்லவாசலைத்திறந்து ஞானவாசலூடுபோ (ம்
மெல்லைவாசல்கண்டபினினிப்பிறப்பதில்லையே. 510

ஆதியானதொன்றுமே யனேகனேகரூபமாய்ப்
பேதபேதமாயெழுந்து சர்வசீவனானபின்
ஆதியோடுகூடுமீண் டெழுந்துசன்மமானபின்
சோதியானஞானியாருஞ் சுத்தமாயிருப்பரே. 511

வண்டுபூமணங்களோடு வந்திருந்ததேனெலாம்
உண்டுளேயடங்குவண்ண மோதுலிங்கமூலமாய்க்
கண்டுகண்டுவேரிலே கருத்தொடுங்கவல்லிரேற்
பண்டுகொண்டவல்வினை பறந்திடுஞ்சிவாயமே. 512

ஓரெழுத்துலிங்கமாக வோதுமக்கரத்துளே
யோரெழுத்தியங்குகின்ற வுண்மையையறிகிலீர்

மூவெழுத்துமூவராய் முளைத்தெழுந்தசோதியை
நாவெழுத்துநாவுளே நவின்றதேசிவாயமே. 513

தூரதூரதூரமுந் தொடர்ந்தெழுந்ததூரமும்
பாரபாரமென்றுநீர் பரித்திருந்தபாவிகாள்
நேரநேரநேரமு நினைந்திருக்கவல்லிரேல்
தூரதூரதூரமுந் தொடர்ந்துகூடலாகுமே. 514

குண்டலங்கள்பூண்டுநீர் குளங்கடோறுஞ்சூழ்கிறீர்
மண்டுகங்கள்போலநீர் மனத்தின்மாசறுக்கிலீர்
மண்டையேந்துகையரை மனத்திருந்தவல்லிரேற்
பண்டைமாலயன்றொழப் பணிந்துவாழலாகுமே.

கூடுகட்டிமுட்டையிட்டுக் கொண்டிருந்தவாறுபோ
லாடிரண்டுகன்றையீன்ற வம்பலத்துளாடுதே (ே
மாடுகொண்டு வெண்ணெயுண்ணு மானிடப்பசுக்க
வீடுகண்டுகொண்டபின் வெட்டவெளியுங்காணுமே

உள்ளதோபிறப்பதோ வுயிரடங்கிநின்றிடும்
மெள்ளவந்துகிட்டநீர் வினவவேண்டுமென்கிறீ
ருள்ளதும்பிறப்பது மொத்தபோதுநாதமாங்
கள்ளவாசலைத்திறந்து காணவேண்டுமாந்தரே.

நட்டகல்லைதெய்வமென்று நாலுபுட்பஞ்சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்த்ர
மேதடா, நட்டகல்லும்பேசுமோ நாதனுள்ளிருக்
கையில், சுட்டசட்டிசட்டுவங்கறிச்சுவையறியுமோ.

சிவவாக்கியர் பாடல்

முற்றிற்று.

புனுகு சுகந்த.எண்ணெய்.

இந்த எண்ணெயிலிருக்கும் பரிமளமான து மனோரஞ்சித மலரைப்போல பலவித வாசனையைக் கொடுக்கும். சில வாசனை எண்ணெய்கள் கூந்தலில் தடவிக்கொண்ட சற்று நேரத்திலேயே மாறிவிடுவதுண்டு. இந்த எண்ணெயை கூந்தலுக்கு தடவிக் கொண்டு உங்கள் வழக்கப்படி எத்தனை நாள்பொறுத்து தலைமுழுகினபோதிலும் இதன் பரிமளத்தைப் பார்க்கலாம்.

ஒரு டப்பியின் விலை ரூபா—1.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ,

'நாராயணவிலாஸ்'

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப்பிள்ளையார்

திருவாய்மலர்ந்தருளிய

திருப்பாட்டிரட்டு.

உடற்கூற்று வண்ணமும்

பட்டினத்துப் பிள்ளையார் சரித்திரச் சுருக்கமும்

அடங்கி யிருக்கின்றன.

இஃது

வா. சரவணமுத்துப்பிள்ளையால்

ஞானவான்களுக்கு

உபயோகமாகும்பொருட்டு,

சில ஏட்டுப்பிரதிகளிலிருந்தும்

அச்சுப்பிரதிகளிலிருந்தும்

சேர்க்கப்பட்டு

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1927.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்துப்பிள்ளையாருடைய

சரித்திரச்சுருக்கம்.

சோழனாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்தில் குபேரன் திருவெண்காடரென்னும் பட்டினத்துப் பிள்ளையாக அவதரித்துச் சீமானாயிருந்தனர். பின்பு இவர் விவாகமுடித்தும் புத்திரனில்லாமல் வருந்துகையில் பரமசிவன் ஒரு குழந்தைவடிவமாகத் திருவிடைமருதூர் உத்தியானவனத்தில் வில்வமரத்தடியின் அருகிருந்தனர். இதைக்கண்டு மிகுதியும் வறியராயிருந்த சிவசருமரும், அவர்மனைவியாரும் குழந்தையை யெடுத்துவந்து புத்திரனில்லாத பட்டினத்துப்பிள்ளைக்குக் கொடுத்து நிரம்பப்பொன்பெற்றுச்சென்றனர். குழந்தையாகிய பரமசிவன் மருதப்பிரான் என்னும்பெயர் தரிக்கப்பெற்று வளர்ந்து பதினாறுவயதாகையால் பிதாவில்லாதசமயத்தில் தாயாரிடம்வந்து "காதற்றவூசியும் வாராது கடைவழிக்கே" என்னும் வாக்கிய மெழுதிய ஒரு நறுக்கையும், ஒருகாதற்ற வூசியையும் ஒரு பெட்டியில்வைத்து தாளிட்டு, அதை அந்த அம்மனிடங்கொடுத்து இதை என்பிதாவந்தவுடன் கொடுக்கக்கடவீர் என்றுசொல்லி மறைந்துபோயினர், அந்த அம்மனும் பிதாவாகிய பட்டினத்துப்பிள்ளை வந்தவுடன் கொடுக்க அவர் அப்பெட்டியைத் திறந்து காதற்ற வூசியையும் நறுக்கையும்கண்டுஞானோதயமாகி இதுவரையிலுந் தமக்குத்திருமகனாகவிருந்தவர் பரமசிவனென்றுணர்ந்து, தமது செல்வப்பொருளைப்

பலருக்கும் சூறைவிடும்படி தமது தலைமைக்காரியக் காரராகிய சேந்தனாருக்குக் கட்டளையிட்டு துறவு பூண்டு, அவ்வூரிற் பிச்சையெடுத்துண்டு வந்தனர்; இதைக்கண்டு அவர் சுற்றத்தார் வருந்துகையில், அவரது தமக்கையார் இவர் இறந்தாலும் நல்லதென வெறுத்து விஷங்கலந்து ஓட்டப்பம் ஒன்று சுட்டுத்தரவே அப்போது பட்டினத்தார் "தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்" என்று சொல்லி அவ்வப்பத்தைக் கொடுத்தவர் வீட்டிற் சொருகி அப்பட்டண முழுமையும் உயிர்களிறவாமல் எரித்துப், பின்பு தமது தாயார் இறந்தமையால் அந்த அம்மனைச் சுடுகாட்டில் தமதுஞானக்கினியால் சிலபாடல்களைப்பாடித் தகித்துத், திருவிடைமருதூரிற்சென்று அப்பால் திருவாரூரடைந்து அங்கு இறந்தவனைப் பிழைப்பித்துக், கொங்குநாட்டின் சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, துளுவநாடுவந்து, பத்திரகிரிமகாராஜனுக்கு ஞானோபதேசஞ்செய்து, திருவெண்காட்டுக்குச் சென்று அங்குத் தமதுதலைமைக்காரியராகிய சேர்ந்தனாரைச் சிறையினின்று மீட்டுச் சிதம்பரம், திருக்காஞ்சி, திருக்காளத்திமுதலிய ஸ்தலங்களிற் சென்று சிவபிரானைப் பாடிப்பணிந்து திருவொற்றியூர்வந்து சிவலிங்கமாக உருமாறினர்.

சென்னையைச்சார்ந்த திருவொற்றியூர்க் கடற்கரையோரம். (இப்பொழுது அவ்விடத்தில் அவர்பேரால் ஓர் ஆலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது.)

சரித்திரச் சுருக்கம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

திருப்பாட்டுத்திரட்டு.

முதலாவது

கோயிற்றிருவகவல்.

திருச்சிற்றம்பலம்.

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெருமானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
1 அலகைத்தேரி னலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலை 2 யோம்பற்க
பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
3 அருத்தின மலமாம் 4 புனைந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்துநினைக் கொன்றன
தின்றனை யனைத்து மனைத்துநினைத் தின்றன
பெற்றனை யனைத்து மனைத்துநினைப் பெற்றன
ஓம்பினை யனைத்து மனத்துநினை யோம்பின

---

1 அலகைத்தேர் கானல். 2 ஓம்பற்க-பாதுகாவாதொழிக.
3 அருந்தின-உண்டஉணவு. 4 புனைந்தன-உடுத்த ஆடை.

செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றொன் றொழியா துற்றனை யன்றியும்
1 புற்புதக் குரம்பை துச்சி லொதுக்கிடம்
என்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்
பீளையும் நீரும் புறப்படு மொருபொறி
சளியு நீருந் தவழு மொருபொறி
உமிழ்நீர் கோழை யொழுகு மொருபொறி
வளியு மலமும் வழங்கு மொருவழி
சலமுஞ் சீயுஞ் சரியு மொருவழி
உள்ளுறத் தொடங்கி வெளிப்பட நாறும்
2 சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து
3 கடிமலர் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போகவின் பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற விருவினை மலமற
வரவொடு செலவற மருளற விருளற
இரவொடு பகலற விகபர மறவொரு
முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென 4 நெக்கு நெக்குருகித்
திருச்சிற் றம்பலத் 5 தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொ னம்பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே

---

1 புற்புதம்-நீர்க்குமிழி. 2 சட்டகம்-உடல் 3 கடிமலர்-பரிமளத்தோடு மலர்கின்ற. 4 நெக்கு நெக்கு-நெகிழ்ந்துநெகிழ்ந்து. 5 ஒளிரும்-பிரகாசிக்கின்ற.

இரண்டாவது
கோயிற்றிருவகவல்.

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கிற் புண்ணுட னுடங்
காதலுங் கருத்துமல் லானுன் னிருதாட்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்
தங்கோ டிடங்கா 1 டலமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் 2 பேழையிருவினைப் 3 பெட்டகம்
வாதபித்தங் கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்றோ லுதிரக் கட்டளை
நாற்றப் பாண்ட நான்முழத் தொன்பது
பீற்றற் றுண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
4 அடலைப் பெரிய சுடலைத் 5 திடருள
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோக்கிட மோடு மரக்கலம்
மாயா விகார மரணப் 6 பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றம் 7 பத்தல்
காற்றிற் பறக்குங் கானப் 8 பட்டம்
விதிவழித் 9 தருமன் வெட்டுங்கட்டை
சதுர்முகப் 10 பாணன் றைக்குஞ் சட்டை
11 ஈமனக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருகு
12 பவக்கொழுந் தேருங் கவைக்கொழு கொம்பு

---

1 அலமரும-சுழலுகின்ற. 2 பேழை-பெட்டகம், பெட்டி. 3 அடலை-சாம்பல். 4 திடர்-மேடு. 5 பஞ்சரம்-கூடு. 6 பத்தல் ஓர் பாத்திரம், 8 பட்டம்-காற்றாடி. 9 தருமன் - யமன. 10 பாணன்-தையற்காரன். 11 ஈமம்-சுடுகாடு. 12 பவம்பிறவி

மணமாய் நடக்கும் வடிவின் முடிவிற்
பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமே
ஊரிற் கிடக்கும் பிண்டம் பிணமே
1 காலெதிர் குவித்த 2 பூளை காலைக்
3 அந்தரத் தியங்கு 4 மிந்திரசாபம்
அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து
கண்டுயில் கனவிற் கண்டகண் காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்
அமையு மமையும் பிரானே யமையும்
இமைய வல்லிவாழி யென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கை நின்னருளினுக் கழகே.

மூன்றாவது
கோயிற்றிருவகவல்.

பாற்கடல் கடையப் படுங் 5 கடு வெண்ணெயைத்
திரு 6 மிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்
அடங்கலு மடக்கிடுங் கடுங்கொலைக் காலனை
காலெடுத் தடக்கிய கடவுணின் னடைக்கலம்
உலகடங் கலும்படைத் துடையவன் றறிபறித்
திடக்கையி லடக்கிய விறைநின் னடைக்கலம்
செய்யபொன் னம்பலச் செல்வனின் னடைக்கலம்
ஐயநின் னடைக்கல மடியநின் னடைக்கலம்
மனவழி யலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
7 விழுப்பொரு ளறிய வழுக்குறு மன்னும்
ஆணவ மலத்துதித் 8 தலைந்தறி 9 லுலைந்திடு

1 கால்-காற்று. 2 பூளை-பூளைப்பூ. 3 கதிர்-சூரியன். 3அந்தரம்-ஆகாயம். 4 இந்திரசாபம்-இந்திரதனுசு. 5 கடு-விஷம், 6 மிடறு-கண்டம். 7 விழுப்பொருள் - மேலாகியபொருள். 8 அலைந்து-கலந்து9. உலைந்து-வருந்தி.

1 நிணவைப் புழுவென நெளித்திடு சிந்தையும்
2 படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறு 3 மழுக்காறு 4 மிவறும் பொச்சாப்பும்
கவடும் பொய்யுஞ் சுவடும் பெருஞ்சின
விகழுங் கொலையு மிழிப்புறு புன்மையும்
பகையு மச்சமுந் துணிவும் 5 பனிப்பும்
முக்குண மடையு மைம்பொறி 6 முயக்கமும்
7 இடும்பையும் பிணியு மிடுக்கிய வாக்கையை
உயிரெனுங் 8 குருகுவிட் டோடுங் 9 குரம்பையை
எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை மேய்ந்து மொழுக்குவிழுஞ்
செம்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை
மலவுடற் குடத்தைப் புலவுடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்
கொலைப்படைக் கலம்பல கிடக்குங் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோட்சரக் கொழுகும் பீறற்கே ணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் றுருத்தியை
ஐம்புலப் பறவை யடையும் பஞ்சரத்தைப்
புலராக் கவலை விலைமரப் 10 பொதும்பை
ஆசைக் கயற்றி லாடும் பம்பரத்தை
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை
மக்கள் வினையின் மயங்குந் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்கு
காமக் காற்றெடுத் தலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கெடுமரக் கலத்தை

---

1 நிணம் - கொழுப்பு. 2 படிறு - பொய். 3 அழுக்காறு - பொறாமை. 4 இவறல் - உலோப குணம். பொச்சாப்பு - மறதி. 5 பனிப்பு - நடுக்கம். 6 முயக்கம் - தழுவகை. 7 இடும்பை - துன்பம். 8 குருகு - பறவை. 9 குரம்பை - கூடு. 10 பொதும்பு - பொந்து.

இருவினை விலங்கொடு பியங்கு 1 புற்கலனை
2 நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்
பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வறிந்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையே யடைக்கலம்
அடியார்க் கெளியா யடைக்கல மடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுணின் றாடிக்
கருணையொண் டலையெறி கடலே யடைக்கலம்
தேவரு முனிவருஞ் சென்றுநின் றேத்தப்
3 பாசிழைக் கொடியொடு பரிந்தருள் புரியும்
எம்பெரு மானின் னிணையடிக் கபயம்
அம்பலத் தரசே யடைக்கல முனக்கே.

நான்காவது
கச்சித்திருவகவல்.

திருமால் 4 பயந்த 5 திசைமுக னமைத்து
வருமேழ் பிறவியு மானிடத் துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா 6 தவமே
மாதரை மகிழ்ந்து காதல் கொண்டாடும்
மானுடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விளிவெளி மாக்க டெளிவுறக் கேண்மின்
முள்ளுங் கல்லு முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென வுரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்
துள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்

---

1 புற்கலன் - உயிர். 2 நடுவன் - யமன். 3 பாசு - பசுமை, இழை - ஆபரணம். 4 பயந்த - ஈன்ற. 5 திசைமுகன் - பிரமன். 6 அவம் - வீண்.

தசையுமெலும்புந் தக்கபுன் 1 குரங்கை
இசையுங் 2 கதலித் தண்டென 3 வியம்பியும்
நீடுமுடருங்கி நின்றிடு மிடையைத்
4 துடி 5 பிடி யென்று சொல்லித்துதித்தும்
மலமுஞ்சலமும் 6 வழும்புந்திரையும்
அலையும்வயிற்றை யாலிலையென்றும்
இலந்திபோலக் கிளைத்துமுன்னெழுந்து
திரண்டுவிம்மிச் சீப்பாய்ந்தேறி
7 உகிராற்கீற வுலர்ந்துள்ளுருகி
நகுவார்க்கிடமாய் 8 நான்றுவற்றும்
முலையைப்பார்த்து 9 முளரிமொட்டென்று
குலைவுங்காமக் குருடர்க்குரைப்பேன்
நீட்டவுமுடக்கவு நெடும்பொருள்வாங்கவும்
ஊட்டவும்பிசையவு முதவியங்கியற்றும்
அங்கையைப்பார்த்துக் 10 காந்தளென்றுரைத்தும்
வேர்வையுமழுக்கு மேவியகழுத்தைப்
பாரினிலினிய 11 கமுகெனப் பகர்ந்தும்
வெப்புமூத்தையு மேவியவாயைத்
12 துப்புமூக்கினை றாய்மலரென்றும்
அன்னமுங்கறியு மசைவிட்டிறக்கும்
முன்னியபல்லை முத்தெனமொழிந்து
நீருஞ்சளியு நின்றுநின்றொழுகும்
கூரியமூக்கைக் 13 குமிழெனக்கூறியும்
தண்ணீர்பீளைத் தவிராதொழுகும்
கண்ணைப்பார்த்துக் 14 கழுநீரென்றும்
உள்ளுங்குரும்பி யொழுகுங்காதை
1 வள்ளைத் தண்டின் வளமெனவாழ்த்தியும்

---

1 குரங்கு - தொடை. 2 கதலி - வாழை. 3 இயம்பி - சொல்லி. 4 துடி - உடுக்கை. 5 பிடி - கைப்பிடி. 6 வழும்பு - நிணம். 7 உகிர் - நகம். 8 நான்று - தொங்கி. 9 முளரிமொட்டு - தாமரை மொக்கு. 10 காந்தள் - காந்தட்பூ. 11 கமுகு - பாக்குமரம். 12 துப்பு - பவளம். 13 குமிழ் - குமிழம்பூ 14 கழுநீர் - குவளை.

கையுமெண்ணெயுங் கலவாதொழியில்
வெய்யவேதரும் பேனும்விளையத்
தக்கதலையோட் டின்முளைத்தெழுந்த
சிக்கின்மயிரைத் திரண் மூகிலென்றும்
சொற்பலபேசித் துதித்துநீங்கள்
நக்கிச்சொல்லு நரகவாசல்
தோலுமிறைச்சியுந் துதைந்துசீப்பாயும்
காமப்பாழி கருவிளைகழனி
தூமைக்கடைவழி தொளைபெறுவாசல்
எண்சாணுடம்பு மிழியும்பெருவழி
மண்பாற்காமங் கழிக்குமறைவிடம்
நச்சிகாமுக நாய்தானென்றும்
இச்சித்திருக்கு மிடைகழிவாயல்
திங்கட்சடையோன் றிருவருளில்லார்
தங்கித்திரியுஞ் சவலைப்பெருவழி
புண்ணிதுவென்று புடவையைமூடி
உண்ணீர்பாயு மோசைக்கெழும்புண்
மால்கொண்டறியா மாந்தர்புகும்வழி
நோய்கொண்டொழியா நுண்ணியர்போம்வழி
தருக்கியகாமுகர் சாரும்படுகுழி
செருக்கியகாமுகர் சேருஞ்சிறுகுழி
பெண்ணுமாணும் பிறக்கும்பெருவழி
மலஞ்சொரிந்திழியும் வாசற்கருகே
சலஞ்சொரிந்திழியுந் தண்ணீர்வாசல்
இத்தைநீங்க வினிதெனவேண்டா
பச்சிலையிடினும் பத்தர்க்கிரங்கி
மெச்சிச்சிவபத வீடருள்பவனை
முத்திநாதனை மூவாமுதல்வனை
அண்டரண்டமு மனைத்துளபுவனமுங்
கண்டவண்ணலைக் கச்சியிற்கடவுளை
ஏகநாதனை யிணையடியிறைஞ்சுமின்
போகமாதரைப் போற்றுதலொழிந்தே.

திருச்சிற்றம்பலம்.

1 அறந்தானியற்று மவனிலுங்கோடி யதிகமில்லந், துறந்தானவனிற் 2 சதகோடியுள்ளத் துறவுடையோன், மறந்தானறக்கற் றறிவோடிருந்திருவாதனையற், றிறந்தான்பெருமையை என்சொல்லுவேன்கச்சி யேகம்பனே. 1

கட்டியணைத்திடும் பெண்டிருமக்களுங் காலத்தச்சன், வெட்டிமுறிக்கு மரம்போற்சரீரத்தை வீழ்த்திவிட்டாற், கொட்டிமுழக்கி யழுவார்மயானங் குறுகியப்பா, லெட்டியடிவைப்பரோ விறைவா கச்சியேகம்பனே. 2

கைப்பிடிநாயகன் றூங்கையிலேயவன் கையையெடுத், தப்புரந்தன்னி லசையாமன்முன்வைத் தயல் 3 வளவி, லொப்புடன்சென்று துயினீத்துப்பின்வந் துறங்குவளை, யெப்படிநாநம்புவே னிறைவாகச்சி யேகம்பனே. 3

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவைநன் னார்தப்பினாற், றன்னாலுமாடிச் சலித்திடுமோவந்தத் தன்மையைப்போ, லுன்னாலியானுந் திரிவதல்லான் மற்றுனைப்பிரிந்தா, லென்னாலிங்காவதுண்டோ விறைவாகச்சி யேகம்பனே. 4

நல்லாரிணக்கமு நின்பூசைநேசமு ஞானமுமே
யல்லாதுவேறு நிலையுளதோவக மும்பொருளு
மில்லாளுஞ்சுற்றமு மைந்தரும்வாழ்வுமெழிலுடம்பு
மெல்லாமவெளிமயக்கே யிறைவாகச்சி யேகம்பனே.

பொல்லாதவனெறி நில்லாதவனையும் புலன்கடமை, வெல்லாதவன்கல்வி கல்லாதவன்மெய் யடியவர்பாற், செல்லாதவனுண்மை சொல்லாதவனின் திருவடிக்கண், ணில்லாதவன்மண்ணி லேன்பிறந்தேன்கச்சி யேகம்பனே. 6

---

1 அறம் - முப்பத்திரண்டு தருமம். அவை ஆதுலர்க்குச்சாலை முதலியன. 2 சதகோடி - நூறு கோடி. 3 வளவு - வீடு.

பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்து
மண்மேல், இறக்கும்பொழுது கொடுபோவதில்லை
யிடைநடுவிற், குறிக்குமிச்செல்வஞ் சிவன்றந்ததெ
ன்று கொடுக்கறியா, திறக்குங் 1 குலாமருக் கென்
சொல்லுவேன்கச்சி யேகம்பனே. 7

அன்னவிசார மதுவேவிசார மதுவொழிந்தாற்
சொன்னவிசார தொலையாவிசாரநற் றோகையரைப்
பன்னவிசாரம் பலகால்விசார மிப்பாவிநெஞ்சுக்
கென்னவிசாரம்வைத்தா யிறைவாகச்சியேகம்பனே

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி,
நில்லாப்பிழையு நினையாப்பிழையு நின்னஞ்செழுத்
தைச், சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொ
ழாப்பிழையு, மெல்லாப்பிழையும் பொறுத்தருள்
வாய் கச்சியேகம்பனே. 9

மாயநட்போரையு மாயாமலமெனு மாதரையும்,
வீயவிட்டோட்டி வெளியேபுறப்பட்டு மெய்யரு
ளாந், தாயுடன்சென்றுபின் றாதையைக்கூடிப்பின்
றாயைமறந், தேயுமதேநிட்டை யென்றானெழிற்கச்சி
யேகம்பனே. 10

வரிக்கோலவேல்விழி யாரனுராக மயக்கிற்சென்
று, சரிக்கோதுவேனெழுத் தஞ்சுஞ்சொலேன்றமி
யேனுடல், நரிக்கோகழுகு பருந்தினுக்கோவெய்ய
நாய்தனக்கோ, வெரிக்கோவிரையெதுக்கோ விரை
வாகச்சி யேகம்பனே. 11

காதென்றுமூக்கென்று கண்ணென்றுகாட்டியென்
கண்ணெதிரே, மாதென்றுசொல்லி வருமாயைதன்
னைமறந்துவிட்ட, தாதென்றெண்ணுமற் சுகமென்று
நாடுமித் தூர்ப்புத்தியை, யேதெனவெடுத்துரைப்பே
னிறைவாகச்சி யேகம்பனே. 12

ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டீர்சதமல்ல பிள்ளைகளுஞ்

1 குலாமர் - கீழ்மக்கள்.

சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள்சதங்கச்சி யேகம்பனே. 13
சீரும்வினையது பெண்ணுருவாகித் திரண்டுருண்டு
கூறுமுலையு மிறைச்சியு மாகிக் கொடுமையினால்
பீறுமலமு முதிரமுஞ்சாயும் பெருங்குழிவிட்
டேறுங்கரைகண்டிலே னிறைவாகச்சி யேகம்பனே.

பொருளுடையோரை செயலினும்வீரரைப் போர்
க்களத்துந், தெருளுடையோரை முகத்தினுந்
தேர்ந்து தெளிவதுபோ, லருளுடையோரைத் தவ
த்திற்குணத்தி லருளிலன்பி, லிருளறுசொல்லினுங்
காணத்தகுங்கச்சி யேகம்பனே. 15

பருத்திப்பொதியினைப் போலேவயிறு பறுக்கத்
தக்க, டுருத்திக்கறுசுவை போடுகின்றார் துறந்
தோர்தமக்கு, வருத்தியமுதிட மாட்டாரவரை யிம்
மாநிலத்தி,லிருத்திக்கொண்டே னிருந்தாயிறைவா
கச்சி யேகம்பனே. 16

பொல்லாவிருளகற் றுங்கதிர்கூகையென் புட்கண்
ணினுக், கல்லாயிருந்திடும் மாறொக்குமே யறிவோ
ருளத்தில், வல்லாரறிவா ரறியார்தமக்கு மயக்க
ங்கண்டா, யெல்லாம்விழிமயக்கே யிறைவாகச்சி
யேகம்பனே. 17

வாதுக்கூச்சண்டைக்குப் போவார்வருவர் வழக்
குரைப்பர், தீதுக்குதவியுஞ் செய்திடுவர் தினந்தே
டியொன்று, மாதுக்களித்து மயங்கிடுவார் விதிமா
ளுமட்டு, மேதுக்கிவர்பிறந்தா ரிறைவாகச்சி யேகம்
பனே. 18

ஓயாமற்பொய்சொல்வர் நல்லோரைநிந்திப்ப ருற்
றுப்பெற்ற, தாயாரைவைவர் சதியாயிரஞ்செய்
வர் சாத்திரங்க, ளாபார்பிறர்க்குப காரஞ்செய்யார்
தமை யண்டினர்க்கொன், றீயாரிருந்தென்ன போ
யென்னகாண்கச்சி யேகம்பனே. 19

அப்பென்றும் வெண்மையதாயினுமாங்கந்நிலத்
தியல்பால், தப்பின்றியேகுண வேற்றுமைதான்ப

சார்தலினூர், செப்பிலபக்குவம் பக்குவமாயுள்ள சீவ்னிலு, மிப்படியேநிற்ப னெந்தைபிரான்கச்சி யேகம்பனே. 20

நாயாப்ப்பிறந்திடி னல்வேட்டையாடி நயம்புரியுந், தாயார்வயிற்றி னாராய்ப்பிறந்துபின் சம்பன்னராய்க், காயாமரமும் வறளாங்குளமுங் கல்லாவுமென்ன; வீயாமனிதரை யேன்படைத்தாய்கச்சி யேகம்பனே. 21

ஆற்றிற்கரைத்த புளியாக்கிடாமலென் னன்பையெல்லாம்; போற்றித்திருவுளம் பற்றுமையாபுரமூன்றெரித்துக், கூற்றைப்பணிகொளுந் தாளுடையாய் குன்றவில்லுடையா; யேற்றுக்கொடியுடையாயிறைவாகச்சி யேகம்பனே. 22

பெண்ணாகிவந்தொரு மாயப்பிசாசம்பிடித்திட்டென்னைக்; கண்ணால்வெருட்டி முலையான்மயக்கிக் கடிதடத்துப், புண்ணாங்குழியிடைக் கேதள்ளியென் போதப் பொருள்பறிக்க; வெண்ணாதுனை மறந்தேனிறைவாகச்சி யேகம்பனே. 23

நாவாரவேண்டும் விதஞ்சொல்லுவாருனை நான்பிரிந்தாற்; சர்வேனென்றேயிருந் தொக்கவுண்பார்கள் கைதான்வறண்டாற், போய்வாருமென்று நடுத்தலைக்கேகுட்டும் பூவையருக்; கீவார்தலைவிதியோ விறைவாகச்சி யேகம்பனே. 24

கல்லார்சிவகதை நல்லோர்தமக்குக் கனவிலுமெய்; சொல்லார்பசித்தவர்க் கன்னங்கொடார் குருசொன்னபடி, நில்லாரறத்தை நினையார்நின்னைம நினைவிற்சற்று, மில்லாரிருந்தென் னிறந்தென்புகல் கச்சி யேகம்பனே. 25

வானமுதத்தின் சுவையறியாதவர் வன்கனியின், றேனமுதத்தின் சுவையெண்ணல்போலத் தனித்தனியே, தேனமுதத்தின் றெளிவாயஞானஞ் சிறிதுமில்லார்க், கீனமுதச்சுவை நன்றல்லவோகச்சி யேகம்பனே. 26

ஊற்றைச்சரீரத்தை யாபாசக் கொட்டலை யூன்பொதிந்த, பீற்றற்றுருத்தியை சோறிடுந்தோற்பையைப் பேசரிய, காற்றிற்பொதிந்த நிலையற்றபாண்டத்தைக் காதல்செய்தே, யேற்றுத்திரிந்துவிட்டே னிறைவாகச்சி யேகம்பனே. 27

சொல்லால்வருங்குற்றஞ் சிந்தையால்வருந் தோடஞ்செய்த, பொல்லாதவினை பார்வையிற்பாவங்கள் புண்ணியநூ, லல்லாதகேள்வியைக் கேட்டிடுந்தீங்குகளாயவுமற், றெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே. 28

முட்டற்றமஞ்சளை யெண்ணெயிற்கூட்டி முகமினுக்கி, மெட்டிட்டுப்பொட்டிட்டுப் பித்தளையோலை விளக்கியிட்டுப், பட்டப்பகலில்வெளிமயக்கேசெய்யும் பாவையர்மே, லிட்டத்தைநீதவிர்ப்பா யிறைவாகச்சி யேகம்பனே. 29

பிறந்துமண்மீதிற் பிணியேகுடிகொண்டு பேரின்பத்தை, மறந்துசிற்றின்பத்தின் மேன்மயலாகிப்புன் மாதருக்குட், பறந்துழன்றேதடு மாறிப்பொன்றேடியப்பாவையர்க்கீந், திறந்திடவோ பணித்தாயிறைவாகச்சி யேகம்பனே. 30

பூதங்களற்றுப் பொறியற்றுச்சாரைம் புலன்களற்றுப், பேதங்குணமற்றுப் பேராசைதானற்றுப் பின்முனற்று, காதங்கரணங்களுமற்ற வானந்தக் காட்சியிலே, யேதங்களைந்திருப்பே னிறைவாகச்சி யேகம்பனே. 31

நல்லாயெனக்கு மனுவொன்றுதந்தருண் ஞானமிலாப், பொல்லாவெனைக்கொன்று போடும்பொழுதியல் பூசைசெப, செல்லாநற்கோயி லியம்பபலுவகைத் தோத்திரமு, மெல்லாமுடிந்தபின்பு கொல்லுகண்டாய்கச்சி யேகம்பனே. 32

சடக்கடத்துக்கிரை தேடிப்பலவுயிர் தன்னைக்கொன்று, விடக்கடித்துக்கொண் டிறுமாந்திரு மிகமெலிந்து, புடக்கடித்தின்னிழல் வார்கடமைதரம் பற்றிகழ

னிடக்கடிக்கும்பொழு தேதுசெய்வார்கச்சி யேகம்பனே. 33

நாறுமுடலை நரிப்பொதிச்சோற்றினை நான்தினமுஞ் சோறுங்கறியு நிரப்பிப்பரிண்டத்தைத் தோகையர்த கூறுமலமு மிரத்தமுஞ்சேருங் குழியில்விழா [ங் தேறும்படியருள்வா யிறைவாகச்சி யேகம்பனே. 34

சொக்கிட்டரமனைப் புக்குட்டிருடிய துட்டர்வந்து திக்குற்றமன்னரைக் கேட்பதுபோற்சிவ நிந்தைசெ யிக்குக்குருலிங்க சங்கமநிந்தித்து விடிச்சிக்கு [ய்து மெக்குப்பெருந்தவர்க் கென்சொல்லுவேன் கச்சியே கம்பனே. 35

விருந்தாகவந்தவர் தங்களுக்கன்ன மிகக்கொடுக் கப், பொருந்தார்வளம்பெற வாழ்வார்நின்ற பத்தை போற்றிநித்த, மருந்தாமுலைப்பங்க வென்றரப்பா தக ரம்புவியி லிருந்தாவதுகண்டா யிறைவாகச்சியே கம்பனே. 36

எல்லாமறிந்து படித்தேயிருந்தெமக் குள்ளபடி, வல்லானறிந்துள னென்றுணராது மதிமயங்கிச், சொல்லான்மலைந்துறு சூழ்விதியின்படி துக்கித்து ப்பி, னெல்லாஞ்சிவன்செய லேயென்பர்காண்கச்சி யேகம்பனே. 37

பொன்னைநினைந்து வெகுவாகத்தேடுவர் பூவை யன்ற, டன்னைநினைந்து வெகுவாயுருகுவார் தார ணியி, லுன்னைநினைந்திங் குனைப்பூசியாத வுலுத்த ரெல்லா, மென்னைநினைந்துகண்டா யிறைவாகச்சியே கம்பனே. 38

கடுஞ்சொன்வம்பரை யீனரைக் குண்டரைக்கா முகரை, கொடும் பலவேசெயு நிர்மூடர்தம்மைக் குவலயத்து, நெடும்பனைபோல வளர்ந்துநல்லோர்த நெறியறியா, விடும்பரையேன்வகுத் தாயிறைவாக ச்சி யேகம்பனே. 39

கொன்றேனனேக முயிரையெல்லாம்பின்பு கொன் றுகொன்று, தின்றேனதன்றியு தீங்கெப்தேனது தீர்

கவென்றே, நின்றேனின் சன்னதிக்கேயத னுற்கற்ற நீ பொறுப்பா,யென்றேயுனைநபபினை னிறைவாகச்சி யேகப்பனே. 40

ஊரிருந்தென்ன நல்லோரிருந்தென் னுபகாரமுள்ள, பேரிருந்தென்பெற்ற தாயிருந்தென்மடப் பெண்கொடியாள், சீரிருந்தென்னனற் சிறபபிருந்தென்ன வித் தேயத்தினி, லேரிருந்தென்வல்லவை யிறைவா கச்சி யேகம்பனே. 41

வில்லாலடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன், கல்லாலெறியப் பிரம்பாலடிக்கக் கனிவண்டு கூர்ந், தல்லார்பொழிற்றில்லை யம்பலவாணர்க்கோரன்னைபிதா, வில்லாததாலல்லவோ விறைவாகச்சி யேகம்பனே. விருத்தம். 42

அன்னையெத்தனை யெத்தனை யன்னையோ-வப்பனெத்தனை யெத்தனை யப்பனோ, பின்னை யெத்தனை யெத்தனைபெண்டிரோ-பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ, முன்னை யெத்தனை யெத்தனை சென்மமோ - மூடனுபடியேனுமறிந்திலே,னின்னமெத்தனை யெத்தனை சென்மமோ-வென்செய்வேன் கச்சியேகம்ப நாதனே. திருத்தில்லை. 1

1 காம்பிணங்கும்பணைத் தோளார்க்கும் பொன்னுக்குங் காசினுக்குந், தாம்பிணங்கும் பல வாசையும் விட்டுத்தனித்துச்செத்துப் போம்பிணந்தன்னைத் திரளாகக்கூடிப்புரண்டினிமேற், சாம்பிணங்கத்துதையோ வென்செய்வேன் றில்லைச்சங்கரனே. 2

சோறிடுநாடு துணிதருங்குப்பை தொண்டன்பரைக்கண, டேறிடுங்கைக ளிறங்கிடுந்தீவினை யெப்பொழுது, நீறிடுமேனியர் சிற்றம்பலவர் நிருத்தங்கண்டா,. லூறிடுங்கண்க ளுருக்கிடுநெஞ்சமென் னுள்ளமுமே. 3

அழலுக்குள்வெண்ணெ யெனவேயுருகிப் பொன்னம்பலத்தா, நிழலுக்குணின்று தவ 2 முனுற்றும

1 காம்பு - மூங்கில். 2 உனுற்றுதல் - முயலுதல்.

ணிட்டோமின்னார்? முழுலுக்கிசைந்த வகைமாலைகொ ண்டு குற்றேவல்செய்து, விழலுக்குமுத்துலை யிட்டி றைத்தேனென் விதிவசமே. 4

ஓடாமற்பாழுக் குழைபாம லோரமுரைப்பவர் பாற், கூடாமனல்லவர் கூட்டும்விடாமல் வெங்கோப நெஞ்சி, னுடாமனன்மை வழுவாமலின்றைக்கு நாளை க்கென்று தேடாமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசி கனே. 5

பாராமலேற்பவற் கில்லையென்று மற்பழுதுசொல்லி
வாராமற்பாவங்கள் வந்தணுகாமன் மனமயர்ந்து
போராமற்சேவை யிரியாமலன்பு பெருதவரைச்
சேராமற்செல்வந் தருவாய்சிதம்பர தேசிகனே. 6

கொல்லாமற் கொன்றதைத் தின்னுமற் குத்திர ங்கோள்களவு, கல்லாமற் கைதவரோடிணங்காமற் கனவிலும்பொய், சொல்லாமற்சொற்களைக் கேளாம ற்றெருகையர்மாயையிலே செல்லாமற்செல்வந் தரு வாய்சிதம்பர தேசிகனே. 7

முடிசார்ந்தமன்னரு மற்றுமுள்ளோரு முடிவி லொரு, பிடிசாம்பராய்வெந்து மண்ணுவதுங்கண்டு பின்னுமிந்தப், படிசார்ந்தவாழ்வை நினைப்பதல்லாற் பொன்னி னம்பலவ, ரடிசார்ந்துநாமுய்ய வேண்டு மென்றே யறிவாரில்லையே. 8

காலையுபாதி மலஞ்சலமாமன்றிக் கட்டுச்சியிற்
சாலவுபாதி பசிதாகமாமுற் சஞ்சிதமா
மாலையுபாதி துயில்காமமிவை யாற்றிவிட்டே
யாலமுதந்தரு ளம்பலவாவென்னை யாண்டருளே. 9

ஆயும்புகழ்த்தில்லை யம்பலவாண ரருகிற்சென் ருற், பாயுமிடபங் கடிக்குமரவம்பின் பற்றிச்சென் ருற், பேயுங்கணமும் பெருந்தலைப்பூதமும் பின்றொ டர, போயென்செய்வாய்மனமே பிணக்காடவர்போ மிடமே. 10

ஓடுமெடுத் ததளாடையுஞ்சுற்றி யுலாவிமெள்ள
வீடுகடோறும் பலிவாங்கியேவீதியற்றவர்போ

ளாடுமென்றட்டிக்கொண்டிங் கம்பலத்தே நிற்கு மாண்டிதன்
னைத், தேடுங்கணக்கென்ன காண்சிவகாமசவுந்தரியே

ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானுமிங் கொன்றோ
டொன்றை, மூட்டுவிப்பானு முறங்குவிப்பானு முய
ன்றவினை, காட்டுவிப்பானு மருவினைப்பாசக் கயிற்
றின்வழி, யாட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லை
யம்பலத்தே. 11

அடியார்க்கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தால்
மடியாமற்செல்வ வரம்பெறலாம் வையமேழளந்த
நெடியோனும் வேதனுங் காணாத நித்த நிமலனருட்
குடிகாணுநாங்க ளவர்காணுமெங்கள் குலதெய்வமே

தெய்வச்சிதம்பர தேவாவுன்சித்தந் திரும்பிவிட்
டாற், பொய்வைத்த சொப்பன மாமன்னர்வாழ்வும்
புவியுமெங்கே, மெய்வைத்த செல்வமெங்கே மண்ட
லீகர்தம் மேடையெங்கே, கைவைத்தநாடக சாலை
யெங்கே யிதுகண்மயக்கே. 13

உடுப்பானும்பாலன்ன முண்பானுமுய்வித் தொரு
வர்தம்மைக், கெடுப்பானுமேதென்று கேள்விசெய்
வானுங் கெதியடங்க, கொடுப்பானுந் தேகியென்
றேற்பானுமேற்கக் கொடாமனின்று, தடுப்பானுமீ
யில்லையோ தில்லையானந்த தாண்டவனே. 14

வித்தாரம்பேசினுஞ் சோங்கேறினுங்கம்ப மீதிரு
ந்து, தத்தாவென்றோதிப் பவுரிகொண்டாடினுந் தம்
மூன்றம்பி, யொத்தாசைபேசினு மாவதுண்டோ தி
ல்லை யுண்ணிறைந்த, கத்தாவின்சொற்படி யல்லாது
வேறில்லை கண்மங்ககளே. 15

பிறவாதிருக்க வரந்தரல்வேண்டும் பிறந்துவிட்டா
லிறவாதிருக்க மருந்துண்டுகாணிது வெப்படியோ
வறமார்புகழ்த்தில்லை யம்பலவாண ரடிக்கமல
மறவாதிருமனமே யதுகாணன் மருந்துனக்கே. 16

தவியாதிருநெஞ்சமே தில்லைமேவிய சங்கரனைப்,
புவியார்க்கிருக்கின்ற ஞானகரனைப் புராந்தகனை,

யவியாவிளக்கைப் பொன்னம்பலத்தாடியை யைந்தெ ழுத்தா, செபியாமனீசெபித்தாற் பிறவாமுத்தி சித் திக்குமே. 17

நாவின்மறைப்பொரு ளம்பலவாணரை நம்பியவர் பாலிலொருதரஞ்சேவிக்கொண் டிருப்பார்க்கருங்கல் மேலிலெடுத்தவர்கையிலங்கைத்தைப்பார் மீண்டுமொ ரு, காலினிறுத்துவர் கிட்டியுந்தாம்வந்துகட்டுவரே.

ஆற்றேறுதும்பை யணிந்தாடுமம்பலவாணர் தம்மைப் போற்றாதவர்க்கடையாள முண்டேயிந்தபூதலத்திற் சோற்றாவிபற்றுச் சுகமற்றுச் சுற்றத் துணியுமற்றே யேற்றாலும்பிச்சைகிடையாமலேலக்கற்றிருப்பர்களே.

அத்தனை முப்பத்து முக்கோடிதேவர்க் கதிபதியை நித்தனையமமை சிவகாமசுந்தரி நேசனையெங் [கண்க கத்தனைப் பொன்னம்பலத் தாடுமையனைக் காணக் ளெத்தனைகோடியுகமோ தவஞ்செய் திருக்கின்றவே.

திருச்செங்காடு.

நெருப்பானமேனியர்செங்காட்டிலாத்திநீழலருகே, யிருப்பார்திருவுள மெப்படியோவின்ன மென்னையன் னைக், 1 கருப்பாசயக்குழிக்கேதள்ளுமோ கண்ணன் காணரிய, திருப்பாதமே தருமோ தெரியாது சிவன் செயலே. 1

திருவொற்றியூர்.

2 ஐயுந்தொடர்ந்து விழியுஞ்சொருகியறிவழிந்து, மெய்யும்பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண் டுவன்யான், செய்யுந்திருவொற்றி யூருடையீர் திரு நீறுமிட்டுக், கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே. 1

சுடப்படுவாரறியார் புரமூன்றையுஞ் சுட்டபிரான் றிடப்படுமாமதிற் றென்னொற்றியூரன் றெருப்பரப்பி னடப்பவர்பொற்பத நந்தலைமேற்பட நன்குருண்டு கிடப்பதுகாண்மனமே விதியேட்டைக்கிழிப்பதுவே

1 கருப்பாசயம்-கருப்பை. 2 ஐ-சிலேத்துமம்.

திருவிடைமருதூர்.

காடேதிரிந்தென்ன காற்றேபுசித்தென்ன கந்தைசுற்றி, யோடேயெடுத்தென்ன வுள்ளன்பிலாதவரோங்குவிண்ணோர், நாடேயிடைமருதீசர்க்குமெய்யன்பர் 1 நாரியர்பால், வீடேயிருப்பினுமெஞ்ஞானவீட்டின்ப மேவுவரே. 1

தாயும்பகைகொண்ட பெண்டீர் பெரும்பகை தன்னுடைய, 2 சேயும்பகை யுறவோரும்பகை யிச்செகமும்பகை, யாயும்பொழுதி லருஞ்செல்வநீங்கி லிங்காதலினாற், றேயுநெஞ்சேமருதீசர்பொற்பாதஞ்சுதந்தரமே. 2

திருக்கழுக்குன்றம்.

காடோசெடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோநகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிட
நீடோய்கழுக்குன்றி லீசாவுயிர்த்துணை நின்பதமே.

திருக்காளத்தி.

பத்தும்புகுந்து பிறந்துவளர்ந்து பட்டாடைசுற்றி
முத்தும்பவளமும் பூண்டோடியாடி முடிந்தபின்பு
செத்துக்கிடக்கும்பிணத்தருகே யினிசாம்பிணங்கள்
கத்துங்கணக்கென்னகாண் கயிலாபுரிக்காளத்தியே.

பொன்னாற் பிரயோசனம் பொன்படைத்தாற்குண்டு பொன்படைத்தோன், தன்னாற் பிரயோசனம் பொன்னுக்கங்கேயுண்டத் தன்மையைப்போ, லுன்னாற்பிரயோசனம் வேணதெல்லாமுண்டுனைப்பணியு, மென்னாற்பிரயோசனமேதுண்டு காளத்தியீச்சுரனே

வாளான் 3 மகவரிந்தூட்ட வல்லேனல்லன் மாதுசொன்ன, 4 சூளாலிமை துறக்கவல்லேனல்லன்றொண்டுசெய்து, நாளாறிக்கண்ணிடந் தப்பவல்லேனல்லனினிச்சென், றாளாவதெப்படியோ திருக்காளத்தியப்பருக்கே. 3

1 நாரியர்-மாதர்கள். 2 சேய் - பிள்ளை. 3 மகவு பிள்ளை. 4 சூள்-ஆணை.

முப்போதுமன்னம் புசிக்கவுந் தூங்கவு மோகத்தி
னூற், செப்போ திளமுலையாருடன் சேரவுஞ்சீவன்விடு,
மப்போது கண்கலக்கப்படவும் மமைத்தாயையனே,
யெப்போது காணவல்லேன்றிருக்காளத்தியீச்சுரனே

இரைக்கேயிரவும் பகலுந் திரிந்திங் கிளைத்துமின்னு
ரைக்கேயவலக்குழியருகே 1 யசும்பார்ந்தொழுகும்
புரைக்கேயுழலுந் தமியேனையாண்டருள்பொன்முகலி
கரைக்கேகல்லால் நிழற்கீழமர்ந்தருள் காளத்தியே.

நாறுங்குருதிச் சலதாரைதோற்புரை நாடொறுஞ்சீ
யூறுமலக்குழி காமத்துவார மொளித்திடும்புண்
டேறுந்தசைப்பிளப்பந்தரங்கத்துள சிற்றின்பம்விட்
டேறும்பதந்தருவாய் திருக்காளத்தி யீச்சுரனே. 6

கைலாயம்.

கான்சாயும்வெள்ளிமலைக்கரசேநின் கழனப்பினே,
ஊன்சாயுஞ்சென்ம மொழித்திடுவாய் கருவூரனுக்
காய், மான்சாயுஞ்செங்கை மழுவலஞ்சாய வளைந்த
கொன்றைத், தேன்சாயநல்லதிருமேனிசாய்ந்தசிவக்
கொழுந்தே. 1

இல்லந்துறந்து பசிவந்தபோதங் கிரந்துநின்று,
பல்லுங்கரையற்று வெள்வாயுமாயொன்றிப் பற்றுமி
ன்றிச், சொல்லும்பொருளுமிழந்து சுகானந்தத் தூ
க்கத்திலே; யல்லும்பகலு மிருப்பதென்றோ கயிலா
யத்தனே. 2

2 சினந்தனையற்றுப்பிரியமுந்தானற்று செய்கையற்று
நினைந்ததுமற்று நினையாமையுமற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனியேயிருந் தானந்தநித்திரை தங்குகின்ற
வனந்தனிலென்றிருப் பேனத்தனே கயிலாயத்தனே
கையாரவேற்றுநின் றங்ஙனந்தின்று கரித்துணியைத்
தையாதுடுத்துநின் சன்னதிக்கேவந்து சந்ததமு
மெய்யாரநிற்பணிந் துள்ளேயுரோமம் விதிர்விதிர்ப்ப
வையாவென்றோல மிடுவதென்றோ கயிலாயத்தனே.

---

1 அசும்பு - கசிவு 2 சினம்-கோபம்.

நீரார்த்தமேனி புரோமஞ்சிலிர்த்துள நெக்குநெக்குச்
சேறாய்க் கசிந்து கசிந்தேயுருகிநின் சீரடிக்கே [ண்ணீ
மாறாத்தியானமுற் றானந்தமேற்கொண்டு மார்பிற்க
ராறாய்ப்பெருகக் கிடப்பதென்றோ கயிலாயத்தனே.

செல்வரைப் பின்சென்று சங்கடம்பேசித் தினந்
தினமும், பல்வினைக்காட்டிப் பரிதவியாமற் பரானந்
தத்தி, னெல்லையிற்புக்கிட வேகாந்தமாயெனக்காயி
டத்தே, யல்லலற்றென் றிருப்பே னத்தனே கயிலா
யத்தனே. 6

மந்திக் 1 குருளையொத்தேனில்லை நாயேன் வழக்
கறிந்து, சிந்திக்குஞ் சிந்தையையா னென்செய்வே
னெனைத்தீதகற்றிப், புந்திப்பரிவிற் குருளையேந்திய
2 பூசையைப்போ, லெந்தைக்குரியன்கா ணத்தனே
கயிலாயத்தனே. 7

வருந்தேன் பிறந்து மிறந்துமயக்கும் புலன்வழி
போய்ப், பொருந்தேனரகிற் புகுகின்றிலேன் புகழ்
வாரிடத்தி, லிருந்தேனினியவர் கூட்டம்விட்டேனிய
லஞ்செழுத்தா, மருந்தேனருந்துவ னின்னருளாற்
கயிலாயத்தனே. 8

மதுரை.

விடப்படுமோவிப் பிரபஞ்சவாழ்க்கையை விட்டுமனந்
திடப்படுமோநின் னருளின்றியேதின மேயலையக்
கடப்படுமோவற்பர் வாயிலிற்சென்றுகண்ணீர்ததும்
பிப், படப்படுமோசொக்கநாதாசவுந்தரபாண்டியனே

பொது.

3 உடைகோவணமுண் டுறங்கப்புறந்திண்ணையுண்
டுணவிங், கடைகாயிலையுண் டருந்தத்தண்ணீருண்
டருந்துணைக்கே, 4 விடையேறுமீசர் திருநாமமுண்
டிந்த மேதினியில், வடகோடுயர்ந்தென்ன தென்
கோடுசாய்ந்தென்ன வான்பிறைக்கே. 1

குருளை-குட்டி. 2 பூசை-பூனை. 3 உடை-வஸ்திரம்
4 விடை-இடபம்.

வீடுநமக்குத் திருவாலங்காடு விமலர் தந்த
வோடுநமக்குண்டு வற்றாதபாத்திர மோங்குசெல்வ
நாடுநமக்குண்டு கேட்டதெல்லாந்தர நன்னெஞ்சமே
பீடுநமக்குண்டுச் சொலவோ யொருவரு மிங்கிலையே.

நாடிக்கொண்டீசனை நாட்டமுற்றாயிலை நாதரடி,
தேடிக்கொண்டாடித் தெளிந்தாயிலை செகமாயைவந்
து, மூடிக்கொண்டோமென்றுங் காமாரிதங்கண்மு
ளிக்கவென்றும், பிடிப்பையோநெஞ்சமேயுனைப்போ
லிலைப் பித்தர்களே. 3

கையொன்றுசெய்யவிழியொன்றுநாடக்கருத்தொ
ன்றெண்ணப், பொய்யொன்றுவஞ்சகநாவொன்றுபேச
புலால்கமழு, மெய்யொன்றுசாரச் செவியொன்றுகே
ட்கவிருப்பமியான், செய்கின்றபூசை யெவ்வாறுகொ
ள்வாய் வினைதீர்த்தவனே. 4

கண்ணுண்டுகாணக் கருத்துண்டுநோக்கக் கசிந்து
ருகப், பண்ணுண்டுபாடச் செவியுண்டுகேட்கப் பல்
பச்சிலையா, லெண்ணுண்டுசாத்த வெதிர்நிற்கவீச
னிருக்கையிலே, மண்ணுண்டுபோகுதையோகெடுவீ
ரிந்த மானிடமே. 5

சொல்லினுஞ்சொல்லின் முடிவிலும்வேதச் சுருதி
யிலு, மல்லினுமாசற்ற வாகாயந்தனனிலு மாய்ந்து
விட்டோ, ரில்லிலுமன்ப ரிடத்திலுமீச னிருக்குமி
டங், கல்லிலுஞ் செம்பிலுமோ விருப்பானெங்கள்
கண்ணுதலே. 6

வினைப்போகமேயொரு தேகங்கண்டாய் வினைதா
னொழிந்தாற், நினைப்போதளவுநில் லாதுகண்டாய்
சிவன பாதநினை, நினைப்போரையாவு நினையாரைநீங்
கிநெறியினின்று, லுனைப்போ லொருவருண்டோ
மனமேயெனக் குற்றவரே. 7

பட்டைக் கிழித்துப் பருவூசிதன்னைப் பரிந்தெடுத்து
முட்டச்சுருட்டியென மொய்குழலாள்கையில்மின்கொடுத்த
கட்டியிருந்த கனமாயக்காரிதன் காமமெல்லாம[ஙக்
விட்டுப்பிரியவென்றோ விங்ஙனேசிவன்மீண்டதுவே

சூதுற்றகொங்கையுமாஞர்கலவிப்புஞ்சூழ்பொருளும்
போதுற்றபூசனுக்கென்செய்வாஞுஞ்செய்தபுண்ணியத்
தாற், றீதுற்றமன்னவன் சிந்தையினின்றுதெளிவதற்
கோ, காதற்றவூசியைத் தந்துவிட்டானென்றன் கை
தனிலே. 9

வாதுற்றதிண்புய வண்ணுமலையர் மலர்ப்பதத்தை
ப், போதுற்றெப்போதும புகலுநெஞ்சேயிந்தப்
பூதலத்திற், றீதுற்றசெல்வமென் றேடிப்புதைத்த
திரவியமென், காதற்றவூசியும் வாராதுகாணுங் க
டைவழிகே. 10

வேதத்தினுட்பொருண் மண்ணுசைமங்கையை வி
ட்டுவிடப், போதித்தவன்மொழி கேட்டிலையோசெய்
த புண்ணியத்தா, லாதித்தன்சந்திரன் போலேவெ
ளிச்சமதாம்பொழுது, காதற்றவூசியும் வாராதுகா
ணுங் கடைவழிக்கே. 11

மனையாளுமக்களும் வாழ்வுந்தனமுந்தன் வாசல்
மட்டே, யினமானசுற்ற மயானமட்டேவழிக் கேது
துணை, தினையாளவெள் ளளவாகினுமுன்பு செய்தத
வந், தனையாளவென்றும் பரலோகஞ்சித்திக்குஞ் சத்
தியமே. 12

அத்தமும்வாழ்வு மகத்துமட்டேவிழியம்பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டேவிம்மிவிம்மியிரு
கைத்தலமேல்வைத் தழுமைந்தருஞ்சுடுகாடுமட்டே
பற்றித்தொடருமிருவினைப் புண்ணியபாவமுமே.
சீயுங்குருதிச் செழுநீர்வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயுபபுடைவையொன் றில்லாதபோது பகலிரவா
யீயுமெறும்பும் புகுகின்றயோனிக் கிரவுபகண்
மாயுமனிதரை மாயாமல்வைக்க மருந்தில்லையே. 14

சீதப்பணிக்குண்டு சிக்கெனக்கந்தை தினமிரந்து,
நீதுய்யக்கச்சோறு மனைதோறு முண்டு நினைவெ
ழுந்தால், வீதிக்குணல்ல விலைமாதருண்டிந்த மே
தினியி, லேதுக்குநீசலித்தாய் மனமேபென்று புண்
படவே. 15

ஆருண்டு தோப்புண்டணிவீதியம்பலந் தானுமுண்டு
நீருண்டு கந்தை நெடுங்கோவணமுண்டு நித்தநித்த,
மாறுண்டுலாவி மயங்குநெஞ்சேமனை தோறுஞ்சென்
று, சோறுண்டுதூங்கிப்பின் சும்மாவிருக்கச் சுகமு
முண்டே. 16

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்றுவெய்யி லொடுங்
கிவந்தாற், றடுக்கப்பழையவொரு வேட்டியுண்டு சக
முழுதும், படுக்கப்புறந்திண்ணை யெங்கெங்குமுண்டு
பசித்துவந்தாற், கொடுக்கச்சிவனுண்டு நெஞ்சேநமக்
குக் குறைவில்லையே. 17

மாடுண்டுகன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்ந்த
தெல்லாங், கேடுண்டெனும்படி கேட்டுவிட்டோமி
னிக் கேண்மனமே, யோடுண்டுகந்தையுண் டுள்ளே
யெழுத்தைந்துமோதவுண்டு, தோடுண்டகண்ட னடி
யார்நமக்குத் துணையுமுண்டே. 18

மாத்தானவத்தையு மாயாபுரியின் மயக்கத்தையு,
நீத்தார்தமக்கொரு நிட்டையுண்டோ நித்தனன்பு
கொண்டு, வேர்த்தார்குளித்துப் பசித்தார்புசித்து
விழிதுயின்று, பார்த்தாருலகத் தவர்போலிருப்பர்
பற்றற்றவரே. 19

ஒன்றென்றிருதெய்வ முண்டென்றிருவுயர் செல்வமெ
ல்லா, மன்றென்றிரு பசித்தோர்முகம்பார்நல்லறமுந
நன்றென்றிருநடு நீங்காமலே நமக்கிட்டபடி [ட்பு
யென்றென்றிருமனமேயுனக்கே யுபதேசமிதே. 20

நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தை நம்புபொம்ம
லாட்டமென்றேயிருபொல்லாவுடலை யடர்ந்தசந்தைக்
கூட்டமென்றேயிருசுற்றத்தைவாழ்வைகுடங்கவிழ்நீ
ரோட்டமென்றேயிரு நெஞ்சேயுனக்குபதேசமிதே.

என்செயலாவ தியாதொன்றுமில்லை யினித்தெய்
வமே, யுன்செயலேயென் றுணரப்பெற்றேனிந்த வூ
னெடுத்த, பின்செய்ததீவினை யாதொன்றுமில்லைப்
பிறப்பதற்கு, முன்செய்ததீவினையோ விங்ஙனேவந்
து மூண்டதுவே. 22

திருவேடமாகித் தெருவிற்பயன்றனைத் தேடிவங்து
பரிவாகப்பிச்சை பகருமென்றனைப் பதம்பணிர்தேன்
கருவாகுமேதக் கடற்கரைமேவக் கருதுமென்னை
யுருவாக்கிக் கொள்ளவல்லோர் விங்ஙனேசிவ ஞானுற்றதுவே. 23

விட்டே னுலகம் விரும்பே னிருவினை வீணருட
ன், கிட்டேனவருரை கேட்டுமிலேன்மெய் கெடாத
நிலை, தொட்டேன்சுகதுக்க மற்றுவிட்டேன் றொல்
லைநான்மறைக்கு, மெட்டேனெனும்பர மென்னிடத்
தேவந் தெய்திபதே. 24

அட்டாங்கயோகமு மாதாரமாறு மவத்தையைங்
தும், விட்டேறிப்போன வெளிதனிலேவியப் பொன
றுகண்டேன், வட்டாகிச்செம்மதிப் பாலூறலுண்டு
மகிழ்ந்திருக்க, வெட்டாதபேரின்ப. மென்னைவிழு
ங்கி யிருக்கின்றதே. 25

1 எரியெனக்கென்னும் புழுவோவெனக்கென்னு மிந்த
மண்ணுஞ், சரியெனக்கென்னும் பருந்தோவெனக்கெ
னுந் தான்புசிக்க, நரியெனக்கென்னும் புன்னாயெனக்
கென்னு மிந்நாறுடலைப், பிரியமுடன்வளர்த்தே னித
னாலென்ன பேறெனக்கே. 26

அண்ணறன்வீதி யாசிருப்பாகு மணிபடையோர்;
நண்ணொருநாளொன்ப தாமவரேவலு நண்ணுமிவ்
வூர்; துண்ணென்பசிக்கு மடைப்பள்ளியான சுகமு
மெல்லா, மெண்ணிலிகால 2 மவமேவிடுத்தன மெ
ண்ணரிதே. 27

என்பெற்றதாயரு மென்னைப்பிணமென் றிகழ்ந்
துவிட்டார், பொன்பெற்றமாதரும் பேவென்று
சொல்லிப் புலம்பிவிட்டார், கொன்பெற்றமைந்த
ரும் பின்வலம்வந்து குடமுடைத்தா, ருன்பற்றுமி
ல்லை யுடையனே. 28

கறையற்றடலுங் கருத்துணியாடையுங் கள்ளமி
ன்றிப், பொறையுற்றநெஞ்சமும் பொல்லாதவூனும்
புறந்திண்ணையுந், தரையிற்கிடக்கு மிறந்துண்ணு

---

1 எரி-நெருப்பு. 2 அவம்-வீண்.

மோடுஞ் சகமறியீக், குறைவற்ற செல்வமென்றே
கோலமா மறைகூப்பிடுமே. 29

எட்டுத்திசையும் பதினாறுகோணமு மெங்குமொ
ன்றாய், முட்டித்ததும்பி முளைத்தோங்குசோதியை
மூடரெல்லாங், கட்டிச்சுருட்டித்தங் கக்கத்தில்வை
ப்பர் கருத்தில்வையார், பட்டப்பகலை யிரவென்று
கூறிடும் பாதகரே. 30

வாய்நாறுமூழன் மயிர்ச்சிக்குநாறிடு மையிடுங்கண்
ணீநாறுமங்கம் பிணவெடிநாறும் பெருங்குழிவாய்
சீநாறும்யோனி யழுநாறுமிந்தியச சேறுசிந்திப்
பாய்நாறுமங்கையர்க்கோ விங்ஙனேமனம்பற்றியதே

உரைக்கைக்குநல்ல திருவெழுத்தைந்துண் டுரை
ப்படியே, செருக்கித்தரிக்கத் திருநீறுமுண்டு தெரு
க்குப்பையிற், றரிக்கக்கரித்துணி யாடையுமுண்டெ
ந்தச் சாதியிலு, மிரக்கத் துணிந்துகொண்டேன்
குறைவேது மெனக்கில்லையே. 32

ஏதப்பட்டாயினி மேற்படும்பாட்டையிதென்றறி
ந்து, போதப்பட்டாயில்லை நல்லோரிடஞ்சென்று
புல்லறிவால். வாதைப்பட்டாய்மட மாதர்கலவி மய
க்கத்திலே, பேதைப்பட்டாய் நெஞ்சமேயுனைப் போ
லில்லை பித்தருமே. 33

சுரப்பற்றுவல்வினைசுற்றமுமற்றுத்தொழில்களற்றுக்
கரப்பற்றுமங்கையர் கையிணைக்கற்றுக் கவலையற்று
வரப்பற்றுநாதனை வாயாரவாழ்த்தி மனமடங்கப்
பரம்பற்றிருப்பதன்றோ பரமாபர மானந்தமே. 34

பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந்திட்ட பிச்
சையெல்லா, நாய்போலருந்தி நரிபோலுழன்றுநன்
மங்கையரைத், தாய்போற்கருதித் தமர்போலனைவ
ர்க்குந் தாழ்மைசொல்லி, சேய்போலிருப்பர்கண்டீ
ருண்மைஞானந் தெளிந்தவரே. 35

1 விடக்கைபருந்தின் விருந்தைகமண்டல வீணனி
ட்ட, முடக்கைபுழுவந் துறைபிடமேநல முற்றுமி
லாச், சடக்கைகருவி தளர்ந்துவிட்டாற்பெற்ற தாயு
ந்தொடத், தொடக்கையுனைச் சுமந்தேனினியேது
சுகமெனக்கே. 36

அழுதாற்பயனென்ன நொந்தாற்பயனென்ன வர
வதில்லை, தொழுதாற்பயனென்ன நின்னையொருவர்
சுடவுரைத்த, பழுதாற்பயனென்ன நன்மையுந்தீ
மையும் 2 பங்கபத்தோ, னெழுதாப்படிவருமோ சலி
யாதிரென் னேழைநெஞ்சே. 37

ஊரீருமக்கோ ருபதேசங்கேளு முடம்படங்கப்
போரீர்சமணைக் கழுவேற்றுநீற்றைப் புறந்திண்ணை
சாரீரனந்தலைச் சுற்றத்தைநீக்கிச் சகநகைக்க [யிற்
வேரீருமக்கவர் தாமேதருவ ரிணைபடியே. 38

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்னநீமனமே
மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை மாமறைநூ
லேற்றிக்கிடக்கு மெழுகோடிமந்திர மென்னகண்டா
யாற்றிற்கிடைந்து துறைபறியாம லலைகின்றையே.

ஓங்காரமாய்நின்ற வத்துவிலைபொரு வித்துவந்து
பாங்காய்முளைத்த பயனறிந்தாற் பதினாலுலகு
நீங்காமநீங்கி நிறையாநிறைந்து நிறையுருவா
யாங்காரமானவர்க் கெட்டாகனிவந் தமர்ந்திடுமே.

விதிபார்படைப்பு மரியா ரளிப்பும் வியன்கயிலைப்
பதிபார் தொடைப்பு நம்பாலணுகாது பரானந்தமே
கதிபாகக்கொண்டு மற்றெல்லாந்துயிலிற் கனவெனநீ
மதியாதிருமனமே யிதுகாணன் மருந்துனக்கே. 41

நாய்க்குண்டுதொண்டுநமக்குண்டுபிச்சைநமனைவெல்ல
வாய்க்குண்டுமந்திர பஞ்சாட்சரமதி யாமல்வரும்
பேய்க்குண்டுநீறு திகைப்புண்டுநின்ற பிறவிப்பிணி
நேக்குண்டுதேசிகற்றன்னரு ளோக்கங்களோக்குதற்கே.42

---

1 விடக்கு-மாமிசம். 2 பங்கயத்தோன்-பிரமன்

நேமங்கனிட்டைகள் வேதங்களாகம நீதிநெறி
ஓமங்கடர்ப்பணஞ் சந்திசெபமந்த்ர யோகநிலை
நாமங்கள்சந்தனம் வெண்ணீறுபூசி நலமுடனே
சாமங்கடோறு மிவர்செய்பூசைகள் சர்ப்பனையே

நானெனத்தனைபுத்தி சொன்னாலுங்கேட்டிலை நன்னெஞ்சமே, யேனிப்படிக்கெட் டுழலுகின்றாயினி யேதுமிலா, வானத்தின் மீனுக்கு வன்றூண்டிலிட்ட வனையதுபோற், போனத்தைமீள நினைக்கின்றனை யென்ன புத்தியிதே. 44

1 அஞ்சக்கரமெனுங் கோடாலிகொண்டிந்த வைம்புலனும், வஞ்சப்புலக்கட்டை வேரறவெட்டி வளங்கள்செய்து, விஞ்சத்திருத்திச் சதாசிவமென்கிற வித்தையிட்டு, புன்செய்க்களையறித்தேன் வளர்த்தேன் சிவபோகத்தையே. 45

தாயாருஞ்சுற்றமும் பெண்டிருங்கைவிட்டுத் தாழந்திடுநா, ணீயாருநானு மெனப்பகர்வாரந்த நேரத்திலே, நோயாரும்வந்து குடிகொள்வரே கொண்ட நோயுமொரு, பாயாருமீயுமல்லாற் பின்னையேது நட்பாமுடலே. 46

ஆயும்பொழுது மயிர்க்கால்கடோறு மருங்கிருமி
தோயுமலக்குட்டை யாகியகாயத்தைச் சுட்டுவிட்டார்
பேயுநடனமிடுங் காடாமென்று பேசுவதை
நீயுமறிந்திலையோ பொருட்ட நினைந்தனையே. 47

பூணும் மணிக்கல்ல பொன்னுக்குத்தானல்ல பூமிதனைக், காணும்படிக்கல்ல மங்கையர்க்கல்ல நற்காட்சிக்கல்ல, சேணுங்கடந்த சிவனடிக்கல்லவென் சிந்தைகெட்டுச், சாணும்வளர்க்க வடியேன்படுந்துயர் சற்றல்லவே. 48

வெட்டாதசக்கரம் பேசாதமந்திரம் வேறொருவர்க்
கெட்டாதபுட்ப மிறைபாததீர்த்த மினிமுடிந்து
கட்டாதலிங்கங் கருதாதநெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாதபூசை [illegible] குருநாதன்மொழிந்ததுவே.

---

1 அஞ்சக்கரம்-பஞ்சாட்சரம்,

எருமுட்டைபுட்கி னுதிர்ந்திடுஞ்செல்லுக் கெவரா
ழுவார், கருமுட்டைபுக்குக் கழலகன்றுப்கன துக்க
மதாய்ப், பெருமுட்டுப்பட்டவர் போலழும்பேதை
யீர் பேத்துகிறீ, ரொருமுட்டும்விட்டு மாறுமமென்
றைக்கு மோதுமினே. 50

மையாடுகண்ணியு மைந்தரும்வாழ்மனையுஞ்செந்தீ,
யையாநின்மாயை யுருவெளித்தோற்ற மகிலத்துளே,
மெய்யாயிருந்தது நாட்செலநாட்செல வெட்டவெறு
ம், பொய்யாய்ப்பழங்கதையாய்க் கனவாய்மெல்லப்
போனதுவே. 51

ஆயாய்ப்பலகலையாய்க்கிடுந் தூயவழிந்தவர்பாற்,
போயாகிலுமுண்மை வைத்திருந்தாயில்லை பூதலத்
தில், 1 வேயாந்ததோளியர் காமவிகாரத்தில் வீழ்ந்
தழுந்திப், பேயாய்விழிக்கின்றனைமனமேயென்னபித்
துனக்கே. 52

அடியாருறவு மரன்பூசைநேசமு மன்புமன்றிப்
படிமீதில்வேறு பயனுளதோ பங்கயன்வகுத்த [ங்கள்
குடியானசுற்றமுந் தாரமும்வாழ்வுங் குயக்கல [னே.
தடியாலடியுண்ட வாறொக்குமென்றினஞ் சார்ந்தில

ஆங்காரப்பொக்கிஷங் கோபக்களஞ்சிய மாணவத்
தா, னீங்காவரண்மனை பொய்வைத்தகூடம் விண்
ணீடிவளர், தேங்கார்பெருமதிற் காமவிலாசமித் தே
கங்கந்தல், பாங்காயுனைப்பணிந் தெப்படிஞானம் ப
யிப்பதுவே. 54

ஒழியாப்பிறவி யெடுத்தேங்கி யுழன்றநெஞ்சே
யழியாப்பதவிக் 2 கவுடதங்கேட்டி யனுதியனை [ன்னி
மழுமான்கரத்தனைமால்விடையானைமனத்திலு [ன்றே.
விழியாற்புனல்சிந்தி விம்மியழுநன்மை வேண்டுமென்

நாய்க்கொருசூலு மதற்கோர்மருத்துவ நாட்டிலு
ண்டோ, பேய்க்கொருஞானம் பிடிபடுமோபெரும்
காஞ்சிரங்கா, யார்க்குவரா தருக்குவாராது போலு

1 வேய்-மூங்கில். 2 அவுடதம் மருந்து.

டம்பு, தீக்கிரையாவதல்லா லேதுக்காமிதைச் செப்புமினே. 56

1 கச்சிற்கிடக்குங் கனதனத்திற்கடைக் கண்கள்பட்டே, யிச்சித்திருக்கின்ற வேழைநெஞ்சே 2 யிமவான் 3 பயந்த, பச்சைப்பசுங்கொடி யுண்ணுமுலைப் பங்கர் பாதத்திலே, தைச்சுக்கிடமனமே யொருகாலுந் தவறில்லையே. 57

4 மானார்விழியைக் கடந்தேறிவந்தனன் வாழ்குருவுங், கோனாகியென்னைகுடியேற்றிக் கொண்டனன் குற்றமில்லை, போனாலும் பேறிருந்தாலுநற் பேறிது பொய்யன்றுகாண், ஆனாலுமிந்த வுடம்போடிருப்ப தருவருப்பே. 58

சற்றாகிலுந்தன்னைத் தானறியாய்தனை யாய்ந்தவரை, யுற்றாகிலுமுரைக் கப்பொருந்தாயுனக் கானநிலை, பற்றாய்குருவைப் பணியாய்பரத்தையர் பாலிற்சென்றேன், பெற்றாய்மடநெஞ்சமே யுனைப்போலில்லை பித்தனுமே. 59

உளியிட்டகல்லையு மொப்பிட்டசாந்தையு மூத்தையறப், புளியிட்டசெம்பையும் போற்றாகிலே னுயர்பொன்னெனவே,யொளியிட்ட தாளிரண் டுள்ளேயிருத்துவ துண்மையென்று, வெளியிட்டடைத்து வைத்தேனினிமே லொன்றும் வேண்டிலனே. 60

கல்லாலெறியுண்டுங் காலாலுதையுண்டுங் காளைகையில், வில்லாலடியுண்டு முன்னாள்விடமுண்டு மேலளித்துப், பல்லால்புரமெறி யேகம்பவாணர் பதாம்புயத்தின், சொல்லாற்செவியினிற் கேளாதிருந்ததென்னெவல்வினையே. 61

ஒருநான்குசாதிக்கு மூவகைத்தேவர்க்கு மும்பருக்குந், திருநாளுந்தீர்த்தமும் வேறுளதோவத் திசைமுகனால், வருநாளில்வந்திடு மந்தக்கண்ணாளன்

---

1 கச்சு-முலைக்கட்டு. அதாவது ரவிக்கை. 2 இமவான்-மலையரையன். 3 பயந்த-பெற்ற. 4 மானார்-மாதர்.

வகுப்பொழியக், குருநாதனுணைகண்டீர் பின்னையே
திக் 1 குவலயத்தே. 62

விருத்தம்.

பாரோநீரோ தீயோ 2 வளியோ படர்வானோ
ஆரோநானென் றுய்வுறுகின்றே னறிவில்லேன்
பாரோநீரோ தீயோவளியோ படர்வானோ
ஆரோநானென் றுய்வுறுகின்ற வனுநீயே. 63

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நன்னிதியந்தேடி-ந
லமொன்றுமறியாத நாரியரைக்கூடிப், 3 பூப்பிளக்க
வருமேழைப்புற்றீசல்போலப்-புலபுலெனக் கலகலெ
னப் புதல்வர்களைப்பெறுவீர், காப்பதற்கும் வகைய
றியீர்-கைவிடவுமாட்டீர் கவட்டுத்தோல் மரத்துளை
யிற்காணுழைத்துக்கொண்டீர் 4 ஆப்பதனையசைத்து
விட்டகுரங்கதனைப்போல வகப்பட்டீர்கிடந்துழலவ
கப்பட்டீரே. 64

தாயாருக்குத் தகனகிரியை செய்கையிற்பாடிய

வெண்பா.

ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்துபெற்றுப்
5 பையலென்றபோதே பரிந்தெடுத்துச்-செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
யெப்பிறப்பிற் காண்பே னினி. 1

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
யந்திபகலாச் சிவனை யாதரித்து-தொந்தி
சரியச்சுமந்து பெற்ற தாயார்தமக்கோ
வெரியத் தழன்மூட்டு வேன். 2

வட்டிலிலுந் தொட்டிலிலு மார்மேலுந் தோண்
மேலுங், கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—
முட்டச், சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்
க்கோ, விறகிலிட்டுத் தீமூட்டு வேன். 3

---

1 குவலயம்-உலகம். 2 வளி-காற்று. 3 பூ-பூமி. 4 ஆப்பு
முளை. 5 பயல்-ஆண்குழந்தை.

நொந்து சுமந்துபெற்று நோவாமலேந்திமுலை
தந்துவளர்த் தெடுத்துத் தாழாமே-யந்திபகல்[கோ
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்
மெய்யிலே தீமூட்டு வேன். 4

அரிசியோநாளிடுவே னுத்தாடனக்கு
வரிசையிட்டுப்பார்த்து மகிழாம-லுருசியுள்ள
தேனேயமிர்தமே செல்வமேதிரவியப்பூ
மானேயெனவழைத்த வாய்க்கு. 5

அள்ளியிடுவதரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனைவைப்பேனோ கூசாமன்-மெள்ள
முகமேன்முகம்வைத்து முத்தாடியென்றன்
மகனேயெனவழைத்த வாயக்கு. 6

விருத்தம்.

முன்னையிட்டதீ முப்புரத்திலே
பின்னையிட்டதீ தென்னிலங்கையி
லன்னையிட்டதீ யடிவயிற்றிலே
யானுமிட்டதீ மூள்கமூள்கவே. 7

வெண்பா.

வேகுதேதீயதனில் வெந்துபொடிசாம்ப
லாகுதேபாவியே னையகோ- 2 மாகக்
குருவிபறவாமற் கோதாட்டி யென்னைக்
கருதிவளர்த்தெடுத்த கை. 8

வெந்தாளோசோணகிரி வித்தகாநின்பதத்தில்
வந்தாளோவென்னை மறந்தாளோ-சந்ததமு
முன்னேயேநோக்கி யுகந்துவரங்கிடந்தென்
றன்னையேயீன்றெடுத்த தாய். 9

வீற்றிருந்தாளன்னை வீதிதனிலிருந்தாள்
நேற்றிருந்தாளின்றுவெந்து நீறானாள்-பாற்றெளிக்க

1 மெய்-உடம்பு. 2 மாகம்-ஆகாசம்.

வெல்லாருமவாருங்க ளேதென்றிசங்காம
மெல்லாஞ்சிவமயமே யாம். 10

வெளிப்பட்டபின் பாடியது.

மென்றுவிழுங்கி விடாய்க்கிக்கீர்தேட
லென்றுவிடியுமெனக் கென்கோவே-நன்றி
1 கருதார்புரமூன்றுங் கட்டழலாற்செற்ற
மருதாவுன்சந்நிதிக்கே வந்து. 11

சிற்றம்பலமுஞ் சிவனுமருகிருக்க
வெற்றம்பலந்தேடி விட்டோமே-நித்தம்
பிறந்திடத்தைத்தேடுதே பேதைமடநெஞ்சங்
கறந்திடத்தைநாடுதே கண். 12

தோடவிழும்பூங்கோதைத் தோகையுனைப்போது
தேடினவர்போய்விட்டார் தேறியிரு-நாடிநீ
யென்னைநினைத்தா லிடுப்பினுதைப்பேனு
னுன்னைநினைத்தா லுதை. 13

வாசற்படிகடந்து வாராதபிச்சைக்கிங்
காசைப்படுவதில்லை யண்ணலே-பாசைதனைப்
பட்டிரந்தகாலுமெல்லாம் போதும்பரமேட்டி
சுட்டிறந்தஞானத்தைசொல். 14

கண்டங்கறியதாங் கண்மூன்றுடையதா
மண்டலத்தைப்போல வழங்கியதாந்-தொண்ட
ருடனுருகத்தித்திக்கு மோங்குபுகழொற்றிக்
கடலருகேநிற்குங் கரும்பு. 15

2 ஒடுவிழுந்துசீப்பாயு மொன்பதுவாய்ப்புண்ணுக்
கிடுமருந்தையானறிந்து கொண்டேன் 3 கடுவருந்து
தேவாதிதேவன் றிருவொற்றியூர்த்தெருவிற்
போவாரடியிற் பொடி. 16

---

1 கருதார்-பகைவர். 2 ஒடு-ஓர்வகைக்கட்டி. 3 கடு-விஷம்

வாவியெல்லாந்தீர்த்த மணலெல்லாம்வெண்ணீறு
காவனங்களெல்லாங் கணநாதர்-பூவுலகி
லீதுசிவலோகமென்றென்றே மெய்த்தவத்தோ
ரோதுந்திருவொற்றி யூர். 17

1 நச்சரவப்பூண்டானை நன்றாய்த்தொழுவதுவு
பிச்சையிலேதானங் கிருப்பதுவும்-பிச்சைதனை
வாங்குவதுமுண்பதுவும் வந்துதிருவாயிலிலே
தூங்குவதுந்தானே சுகம். 18

இருக்குமிடந்தேடி யென்பசிக்கேயன்ன
முருக்கமுடன்கொண்டுவந்தா லுண்பேன்-பெருக்க
வழைத்தாலும்போகே னரனேயென்றேக
மிளைத்தாலும்போகே னினி. 19

விட்டுவிடப்போகுதுயிர் விட்டவுடனேயுடலைச்
சுட்டுவிடப்போகின்றார் சுற்றத்தார்-பட்டதுபட்
டெந்நேரமுஞ்சிவனை யேற்றுங்கள்போற்றுங்கள்
சொன்னேனதுவே சுகம். 20

ஆவியொடுகாய மழிந்தாலுமேதினியிற்
பாவியென்றுநாமம் படையாதே-மேவியசீர்
வித்தாரமுங்கடம்பும் வேண்டாமடநெஞ்சே
செத்தாரைப்போலே திரி. 21

ஆரூரங்கிருக்க வவ்வூர்த்திருநாளென்
றூரூர்கடோறு முழலுவீர்-நேரே
யுளக்குறிப்பைநாடாத வூமர்காணீவிர்
விளக்கிருக்கத்தீத்தேடு வீர். 22

எத்தனையூரெத்தனைவீ டெத்தனைதாய்பெற்றவர்க
ளெத்தனைபேரிட்டழைக்க வேனென்றே-னித்த
மெனக்குக்களையாற்றா யேகம்பாகம்பா
வுனக்குத்திருவிளை யாட்டோ. 23

---

1 நச்சு-விஷம்.

மண்ணுந்தணலாற வானும்புகையாற
வெண்ணரியதாயு மிளைப்பாறப்-பண்ணுமயன்
கையாறவுமடியேன் காலாறவுங்கண்பா
ரையா திருவை யாறா. 24

இப்பிறப்பைநம்பி யிருப்பையோநெஞ்சமே
வைப்பிருக்கவாயின் மனையிருக்கச்-சொப்பனம்போல்
விக்கிப்பற்கிட்டக்கண் மெத்தப்பஞ்சிட்டப்பைக்
கக்கிச்செத்துக்கொட்டக் கண்டு. 25

மேலுமிருக்கவிரும்பினையே வெள்விடையோன்
சீலமறிந்திலையே சித்தமே-கால்சைக்குக்
கொட்டையிட்டுமெத்தையிட்டுக் குத்திமொத்தப்
கட்டையிட்டுச்சுட்டுவிடக் கண்டு. (பட்டவுடல் 26

ஒன்பதுவாய்த்தோற்பைக் கொருநாளைப்போலவே
யன்புவைத்துநெஞ்சே யலைந்தாயே-வன்கழுக
டத்தித்தத்திச்சட்டை தட்டிக்கட்டிப்புட்டுக்
கத்திக்குத்தித்தின்னக் கண்டு. 27

இன்னம்பிறக்க விசைவயோநெஞ்சமே
மன்னரிவரென்றிருந்து வாழ்ந்தவரை-முன்ன
மெரிந்தசட்டைமீதி லிணைக்கோவணத்தை
யுரிந்துருட்டிப்போட்டது கண்டு. 28

முதற்சங்கமுதூட்டு மொய்குழலார்தம்மை
நடுச்சங்கநல்விலங்கு பூட்டுங்-கடைச்சங்க
மாம்போததூதுமம்மட்டோவிம்மட்டோ
நாம்பூமிவாழ்ந்த நலம். 29

பொய்யைமொழியாய் புலாலைவிடாய்காளத்தி
யையரேயென்று யறஞ்செய்யாய்-வெய்ய
சினமேயொழியாய் திருவெழுத்தைந்தோதாய்
மனமேயுனக்கென்ன மாண்பு. 30

1 எருவாய்க்கிருவிரன்மே லேறுண்டிருக்குங்
2 கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய்-திருவாரூர்த்
தேரோடும்வீதியிலே செத்துக்கிடக்கின்றாய்
நீரோடுந் 3 தாரைக்கா நீ. 31

மாதாவுடல்சலித்தாள்வல்வினையேன்கால்சலித்தேன்
4 வேதாவுங்கைசலித்து விட்டானே-நாதா
5 விருப்பையூர்வாழ்சிவனே யின்னமோரன்னை
கருப்பையூர்வாராமற் கா. 32

6 அத்திமுதலெறும்பீ றானவுயிரத்தனைக்குஞ்
சித்தமகிழ்ந்தளிக்குந் தேசிகா-மெத்தப்
பசிக்குதையாபாவியேன் பாழ்வயிற்றைப்பற்றி
யிசிக்குதையா காரோணரே. 33

எத்தனைநாள்கூடி யெடுத்தசரீரமிவை
யத்தனையுமண்டின்ப தல்லவோ-வித்தகனுக்
காலைப்பிடித்துமெள்ளக் 7 கங்குல்பகலற்றிடத்தே
மேலைக்குடியிருப் போமே. 34

எச்சிலென்றுசொல்லி யிதமகிதம்பேசாதே
யெச்சிலிருக்கு மிடமறியீ-ரெச்சிறனை
யுய்த்திருந்துபார்த்தா லொருமைவெளிப்படும்பின்
சித்தநிராமய மாமே. 35

8 காலன்வருமுன்னே கண்பஞ்சடைமுன்னே
பாலுண்கடைவாய் படுமுன்னே-மேல்விழுந்தே
யுற்றாரழுமுன்னே யூரார்சுடுமுன்னே
குற்றாலத்தானையே கூறு. 36

எத்தனைபேர்நட்டகுழி யெத்தனைபேர்தொட்டமுலை
யெத்தனைபேர்பற்றி யிழுத்தவிதழ்-நித்தநித்தம்
பொய்யடாபேசும் புவியின்மடமாதரைவிட்
டுய்யடாவுய்யடா வுய். 37

---

1 எருவாய்-குதம். 2 கருவாய்-குய்யம். 3 தாரை-வழி. 4 வேதா-பிரமன். 5 இருப்பையூர்-ஓர்திருப்பதி. 6 அத்தி-யானை. 7 கங்குல்-இரவு. 8 காலன் யமன்.

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணிநெஞ்சே
யொருத்தருக்குந் தீங்கினைநீ யுன்னாதே--பருத்ததொந்தி
நம்மதென்றுநாமிருக்க நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தானிருக்குந் தான். 38

எத்தொழிலைச் செய்தாலு மேதவஸ்தைப் பட்டாலு
முத்தர்மனமிருக்கு மோனத்தே-வித்தகமாய்க்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலுந்
1 தாதிமன நீர்க்குடத்தே தான். 39

மாலைப்பொழுதி 2 னறு மஞ்சளரைத் தேகுளித்து
வேலைமினுக்கிட்டு விழித்திருந்து-சூலாகிப்
பெற்றாள்வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானா லென்செய்வாள் பின். 40

வான்றேடுமறையோ மறைதேடும் பொருளேயோ
வூன்றேடுமுயிரேயோ வுயிர்தேடு முணர்வேயோ
தான்றேடநான்றேடச் சகமெலாந் தனைத்தேட
நான்றேடிநான்காண நானாரோ நானாரோ. 41

பட்டினத்தார் வெண்பா

முற்றிற்று.

---

1 தாதி - வேலைக்காரி.

2 நறுமஞ்சள் - பரிமளமுள்ள மஞ்சள்.

உடற்கூற்று வண்ணம்.

தனதனதான தனதனதான
　தந்ததனந்தன தானதனந்த
தனதனதனந்த தனனதனந்த
　தானனதானன தானனதந்த—
　தந்ததனதான தனதானஞ.

ஒருமடமாது மொருவனுமாகி யின்பசுகந்தரு
மன்புபொருந்தி யுணர்வுகலங்கி யொழுகியவிந்து
　ஊறுசுரோணித மீதுகலந்து—

பனியிலொர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து
புகுந்துதிரண்டு பதுமவரம்பு கபடமிதென்று
　பார்வைமெய்வாய்செவி கால்கைகளென்ற—

உருவமுமாகி யுயிர்வளர்மாத மொன்பதுமொன்று
நிறைந்துமடந்தை யுதரமகன்று புவியில்விழுந்து
　யோகமும்வாரமு நாளுமறிந்து—

மகளிர்கள்சேனை தரவணையாடை மண்படவுந்தியு
தைந்துகவிழ்ந்து மடமயில்கொங்கை யமுதமருந்தி
　யோரறிவீரறி வாகிவளர்ந்து—

ஒளிநகையூற விதழ்மடவாரு வந்துமுகந்திட
வந்துதவழ்ந்து மடியிலிருந்து மழலைமொழிந்து
　வாவிருபோவென நாமம்விளம்ப

உடைமணிபாடை யரைவடமாட வுண்பவர்தின்பவர்
தங்களொடுண்டு தெருவிலிருந்து புழுதியளைந்து
　தேடியபாலரொ டோடிநடந்து—
　　அஞ்சுவயதாகி விளையாடியே. (½)

உயர்தருஞான குருவுபதேச முத்தமிழின்கலை
யுங்கரைகண்டு வளர்பிறையென்று பலரும்விளம்ப
　வாழ்பதினாறு பிராயமும்வந்த—

மயிர்முடிகோதி யறுபதுநீள் வண்டமிழ்த்தண்டொடை
கொண்டைபுனைந்து மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர்போகதர் கூடிவணங்க—

மதனசொரூப னிவனெனமோக மங்கையர்கண்டு
மருண்டுதிரண்டு வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில்போலவர் போவதுகண்டு—

மனதுபொரும லவர்பிறகோடி மங்கலசெங்கல
சந்திகழ்கொங்கை மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—

ஒருமுதலாகி முதுபொருளாயி ருந்ததனங்களும்
வம்பிலிழந்து மதனசுகந்த விதனமிதென்று
வாலிபகோலமும் வேறுபிரிந்து—

வளமையுமாறி யிளமையுமாறி வன்பல்விழுந்திரு
கண்களிருண்டு வயதுமுதிர்ந்து நரைதிரைவந்து
வாதவிரோதகு ரோதமடைந்து—

செங்கையினிலோர் தடியுமாகியே. (½)

வருவதுபோவ தொருமுதுகூனு மந்தியெனும்படி
குந்திநடந்து மதியமழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமன்மொழிந்து—

துயில்வருநேர மிருமல்பொருது தொண்டையினெஞ்சு
முலர்ந்துவறண்டு துகிலுமிழந்து சுணையுமழிந்து
தோகையர் பாவர்கள் கோரணிகொண்டு—

கலியுகமீதி லிவர்மரியாதை கண்டிடுமென்பவர்
சஞ்சலமிஞ்ச கலகலவென்று மலசலம்வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து—

தெளிவுமிராம லுரைதடுமாறி சிந்தையுநெஞ்சமு
லைந்துமருண்டு திடமுமலைந்து மிகருமலைந்து
தேறிநலாதர வேதனைநேர்ந்து—

மறைபவன் வேதனெழுதிபவாறு வந்ததுகண்டழு
மென்றுதெளிந்து இனியெனகண்ட மினியெனதொந்த
மேதினிவாழ்வினி லாதினிநின்ற—

கடன்முறைபேசி மென்வுரைநாவு றங்கிவிழுந்துகை
கொண்டுமொழிந்துகடைவழிகஞ்சி யொழுகிடவந்து
பூதமுநாலு சுவாசமுநின்று—
நெஞ்சுதடுமாறி வருநேரமே. ($\frac{3}{4}$)

வளர்பிறைபோல வெயிறுமுரோம முஞ்சடையுஞ்சிறு
குஞ்சியும்விஞ்ச மனதுமிரண்ட வடிவுமிலங்க
மாமலைபோல்யம தூதர்கள்வந்து—

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக மைந்தரும்வந்து
குனிந்தழுநொந்து மடியில்விழுந்து மனைவிபுலம்ப
மாழ்கினரேயிவர் காலமறிந்து—

பழையவர்காணு மெனுமயலார்கள் பஞ்சுபறந்திட
நின்றவர்பந்த ரிடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியுமென்று—

பலரையுமேவி முதியவர்தாமி ருந்தசவங்கழு
விஞ்சிலரென்று பணிதுகிலொருங்கள் களபமணிந்து
பாவகமேசெய்து நாறுமுடம்மை—

வரிசைகெடாம லெடுமெனவோடி வந்திளமைந்தர்
குனிந்துசுமந்து கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வெனநொந்து—

விறகிடமூடி யழல்கொடுபோட வெந்துவிழுந்து
முறிந்துநிணங்க ளுருகியெலும்பு கருகியடங்கி
யோர்பிடிநீறுமி லாதவுடம்பை—
நம்புமடியேனை யினியாளுமே. (1)

உ

சிவமயம்.

திருவள்ளுவர் ஞானம்.

காப்பு-விருத்தம்.

அண்டபிண்டம்நிறைந்துநின்ற வயன்மால்போற்றி
யகண்டபரிபூரணத்தி னருளைப்போற்றி
மண்டலஞ்சூழிரவிமதி சுடரைப்போற்றி
மதுரதமிழோதுமகத் தியனைப்போற்றி
எண்டிசையும்புகழுமெந்தன் குருவைப்போற்றி
யிடைகலையின்சுழிமுனையின் கமலம்போற்றி
குண்டலிக்குளமர்ந்துநின்ற குகனைப்போற்றி
குருமுனியின்தாளிணையெப் போதும்போற்றி.

அன்னையெனுங் கெர்ப்பமதில் வந்துமதியிலேயிருந்து, நன்னயமாய்ப்பத்துதிங்கள் நாளகத்திலேயிருந்

தேன், எங்கெனன்ன அதிசயங்கா ணிவ்வுலகிலேப
மைத்து, உன்னிதமெல்லாமறைத்தே நுண்மையிது
காண்கிலரே. 1

அப்புவியிலேயுதித்து ஆய்ந்துபரிபாஷைதன்னை
வம்புலகத்தார்வசிய மாய்கைபிடித்தேதிரிந்து
கும்பிதனிலேயுமூன்று குண்டலிதன்பொற்கமலம்
நப்பியிருந்தேசிலநாள் ரகசியத்தைக்காண்கிலனே. 2

அண்டரண்டவான்புவியு மாகமத்தினுட்பொருளுங்
கண்டிதமாயான்விளங்கும் காயமதிலேயறியும் [ன்
வண்டரோனே நீசனென்று வாறுதனையேயொழித்தே
பிண்டரகசியந்தனை விளக்கமதுகாண்கிலரே. 3

வையமதிலேயுதித்து மாண்டார்களேயுங்களுயிர்
மெய்யென்றிருந்தசைய வெளிப்படுவதென்னவிதம்
அய்யமில்லாவாழ்ந்துலகி லாண்மையாகபூண்டமதி
பொய்யனுமிவ்வாழ்க்கையது போகுஞ்சுடுகாடுளதே.

வீடானமூலச்சுருநாத வீட்டில்விளங்கும்விந்து
நீடாழிலோகந்தழைத்துப் பெருகநின்றிலகுங் [ன
தேடாதழித்தபொருளான பொக்கிஷந்தேடியென்
காடானநாடுசுடுகாடு சேர்வதுங்கண்டிலரே. 5

எழுவகைத்தோற்றமும் நால்வகையோனியிலெய்
திடினும், பொழியச்சுரோணிதம் நாதவிந்துட்பொ
ருள்போதகத்தால், கழியக்கழியகடலுயிர் தேய்பி
றைகண்டுமிருந், தழியப்பெருந்தறை யென்னுளிருந்
துமனித்தியமே. 6

என்னுளிருந்தென்ன முன்னுளனுப்படியிந்தவுடல்
தன்னுலழிவ்துந்தானறியா தெனதந்தைவிதி
உன்னுலழிவதுமுடலுயிர் காயமொழிவதுங்காண்
டன்னுளனுப்படுகண்டு மிருந்தறியாதவரே.

யோனிக்குளாசை யொழிபாதனித்திய முங்களு யிர், தேனுக்குளின்பஞ் சுகாதீதமோவருஞ் சிற்றி ன்பத்தில், ஊனற்றுக்காய முடலற்றுப்போம் பொ ழுதொன்றறியா, ஈனர்க்குச்சொர்க்கஞ் சுடுகாடொ ழிய இனியில்லையே. 8

இந்தவுடல்காய மிறந்துவிடுமிவ்வுலகில்
வந்தவழிதானறியா வாழ்க்கையோ-இந்தவுடல்
அற்பக்குழியதனி லரவமிருப்பதேனும்
கற்பகத்தையாண்டிடுமோ காட்சி. 9

ஞானமறிந்தோர்க்கு நமனில்லைநாள்தோறும்
பானமதையுண்டு பசியாறல்-ஞானமது
கண்டாலுடலுயிருங் காயம்வலுவாகும்
உண்டாலமிர்தாச முண். 10

சுழியறியார்க்கென்ன சுகமறியார்க்கென்னகுரு [யா
வழியறியார்க்கென்னவெய்தும் வாறுகாண்-சுழியறி
மூலமறிந்தவ்வழியில் முத்தியடையார்க்குநமன்
கானவர்க்கேமரங் காண். 11

வேதமறைஞான மெய்யுணர்வதாகில்
நாதனருளால்பதவி நாடுமோ-வேதமறை
நாலுபொருளுண்ணெனது நற்பொருளின்வாரறிய
பாலுமதுநெய்யெனவும் பார். 12

முதலிருந்தவூழ்வினையை முப்பர்ழைச்சுட்டுமனம்
பதராமல்மதியால் பாடுபட்டேன்-முதலிருந்த
நல்வினையுந் தீவினையுநாடாமலும்மறந்து
வல்வினையைப்போக்கிவிட்டேன் வாறு. 13

காயசித்தியாலெனது கர்மவினைபோக்கியபின்
மாயசித்திமூலசுழி வாய்க்குமே-காயசித்தி

மூலப்புளியதனால் முதல்தீட்சையாச்சுதினி
காலமென்னரெண்டாண்டில் காண். 14

சூல்லும்பின்வாறு கருத்தறியாதுண்டுமனு
வல்வினைக்குள்ளாகி மரணமானார்-கல்லுப்பு
வெள்ளைக்கல்லுப்பு வெகுவிதமாய்வந்தாலும்
உள்ளமதிலுண்டென்று உண். 15

என்றுமிந்துப்பு எண்சாணுடலிருக்க
கண்டுமறியாதென்ன காரணமோஎன்றுமதி
வாரியமுரியதை வன்னிவிட்டுக்காச்சியபின்
வீரியமாயானுணரு மெய். 16

உப்பின்கசடுதான் ஊறலதுமாறினதால்
முப்புசுன்னமாவதற்கு முன்பேர்-உப்பதனால்
கற்பாந்தங்கோடி காயமிதுவலுத்து
செற்பாயும்வாசியினால் தேகம். 17

அஞ்சுபஞ்சபூத மறிந்தாலனித்தியம்போம்
அஞ்சுவசப்படுவ தாண்டதனில்-அஞ்சும்
கண்டறிவோர்ஞானக் காட்சிமதினினைவு
விண்டறியலாமே விதி. 18

எண்சாணுதேக மெடுத்தாலென்னுண்டையே
பெண்தாரல்நீக்கிப் பேரின்பப்-என்காண்
தேகமொழியாமல் சித்திபெருஞானம்
யோகசித்திபூசைவிதி யுண்மை. 19

திருவள்ளுவர் ஞானம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருவெண்காடரென்கிற

பட்டினத்துப்பிள்ளையார்

முதல்வன்முறையீடு.

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

மூலமறியேன் முடியுமுடிவறியேன்
ஞாலத்துப்பட்டதுயர் நாடநடக்குதடா. 1

அறியாமையாமலத்தா லறிவுமுதற்கெட்டனடா
பிரியாவினைப்பயனாற் பித்துப்பிடித்தனடா. 2

தனுவாதியநான்குந் தானாய்மயங்கினன்டா
மனுவாதிசத்தி வலையிலகப்பட்டனடா. 3

மாமாயையென்னும் வனத்திலலைகிறன்டா
தாமாயுலகனைத்துந் தாதுகலங்கிறன்டா. 4

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

மண்ணாசைபட்டேனை மண்ணுண்டுபோட்டதடா
பொன்னாசைபெண்ணாசை போகேனேயென்குதே.

மக்கள்சுற்றத்தாசை மறக்கேனேயென்குதே.
இக்காசாமாசையது தீரேனேயென்குதே. 6

வித்தைகற்குமாசையது விட்டொழியேனென்குதே
சித்துகற்குமாசை சிதையேனேயென்குதே. 7

மந்திரத்திலாசை மறக்கேனேயென்குதே
சந்திரந்திலாசை துறக்கேனேயென்குதே. 8

கட்டுவர்க்கத்தாசை கழலேனேயென்குதே
கெட்டுதனிலாசை சிதையேனேயென்குதே. 9

மாற்றுஞ்சலவை மறக்கேனேயென்குதே
சோற்றுக்குழியுமின்னுந் தூரேனேயென்குதே. 10

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

ஐம்புலனுமொருங்கே யடங்கேனேயென்குதே
சிந்தைதவிக்கிறதுந் தேறேனேயென்குதே. 11

காமக்குரோதங் கடக்கேனேயென்குதே
நாமேபரமென்று நாடோறுமெண்ணுதே. 12

அச்சமாங்கார மடங்கேனேயென்குதே
கைச்சமின்னுமானங் கழலேனேயென்குதே. 13

நீர்க்குமிழிபாருடலை நித்தியமாயெண்ணுதே
ஆர்க்குமுபாராசை யழியேனேயென்குதே. 14

கண்ணுக்குக்கண்ணெதிரே கட்டையில்வேகக்கண்டு
எண்ணுந்திரமா யிருப்போமென்றெண்ணுதே. 15

அநித்தியத்தைநித்தியமென் றுதரவாயெண்ணுதே, தனித்திருக்கேனென்குதே தனைமறக்கேனென்குதே. 16

நரகக்குழியுமின்னு நான்புசிப்பேனென்குதே
உரகப்படத்தல்கு லுனைக்கெடுப்பேனென்குதே. 17

குரும்பைமுலையுங் குடிகுடிப்பேனென்றோ
அரும்புவிழியுமெந்த னாவியுண்பேனென்றோ. 18

மாதருருக்கொண்டு மறலிவிஞ்சமெண்ணாதே
ஆதரவுமற்றிங் கரக்கராயுருகிறண்டா. 19

கந்தனையீன்றருளும் கன்னிவனநாதா
எந்தவிதத்தினா னேறிப்படருவண்டா. 20

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

புல்லாகிப்பூண்டாய்ப் புலர்ந்தநாள்போதாதோ
கல்லாய்மரமாய்க் கழிந்தநாள்போதாதோ. 21

கிரியாய்க்கீடமாய்க் கெட்டநாள்போதாதோ
சிரியாயூர்வனமாய் நின்றநாள்போதாதோ. 22

பூதமொடுதேவருமாய்ப் போனநாள்போதாதோ
வேதனைசெய்தானவராய் வீழ்ந்தநாள்போதாதோ.

அன்னைவயிற்றி லழிந்தநாள்போதாதோ
மன்னவனாய்வாழ்ந்து மரித்தநாள்போதாதோ. 24

தாயாகித்தாரமாய்த் தாழ்ந்தநாள்போதாதோ
சேயாய்ப்புருடனுமாய்ச் சென்றநாள்போதாதோ.

நோயுண்ணவேமெலிந்து நொந்தநாள்போதாதோ
பேயுண்ணப்பேயாய்ப் பிறந்தநாள்போதாதோ. 26

ஊனவுடல்கூன்குருடா யுற்றநாள்போதாதோ
ஈனப்பொசிப்பி லிளைத்தநாள்போதாதோ. 27

பட்டகளையும் பரதவிப்பும்போதாதோ
கெட்டநாள்கெட்டனென்று கேளாதும்போதாதோ.

நில்லாமைக்கேயழுது நின்றநாள்போதாதோ
எல்லாருமென்பார மெடுத்தநாள்போதாதோ. 29

காமன்கணையாற் கடைபட்டல்போதாதோ
எமன்கரத்தா லிடியுண்டல்போதாதோ. 30

நான்முகன்பட்டோலை நறுக்குண்டல்போதாதோ
தேன்றுளபத்தானேமி தேக்குண்டல்போதாதோ.

உருத்திரனார்சங்காரத் தற்றநாள்போதாதோ
வருத்தமறிந்தையிலை வாவென்றழைத்தையிலை. 32

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

பிறப்பைத்தவிர்த்தையிலை பின்னாகக்கொண்டையிலை, இறப்பைத்தவிர்த்தையிலை யென்னென்றுகேட்டையிலை. 33

பாசமெரித்தையிலை பரதவிப்பைத்தீர்த்தையிலை
பூசியநீற்றைப் புனையென்றளித்தையிலை. 34

அடிமையென்றுசொன்னையிலை பக்குவமளித்தையிலை
வீடுமுலகம்போக்கியுற்றன் வேடமளித்தையிலை. 35

உன்னிலழைத்தையிலை பொன்னாக்கிக்கொண்டையிலை
நின்னடியார்கூட்டத்தி லழைத்துவைத்தையிலை. 36

ஒங்கும்பரத்து ளொளித்தவடியார்க்கடியான்
எங்கோவடியா னெமக்கென்றுரைத்தையிலை. 37

நாமந்தரித்தையிலை நாவெழுதிநினைப்பையிலை
சேமவருளிலென்னைச் சிந்தித்தழைத்தையிலை. 38

முத்தியளித்தையிலை மோனங்கொடுத்தையிலை
சித்தியளித்தையிலை சீராட்டிக்கொண்டையிலை. 39

தவிப்பைத்தவிர்த்தையிலை தானாக்கிக்கொண்டையிலை
அவிப்பரிபத்தியாமென் னாசைத்தவிர்த்தையிலை. 40

நின்றநிலையினிறுத்தியென்னை வைத்தையிலை
குன்றுங்கரணமொடு தொக்கழியப்பார்த்தையிலை. 41

சட்டவுலகக்காட்டிக் கட்டொழிப்பார்த்தயிலை
நிட்டையிலேநில்லென்று நீநிறுத்திக்கொண்டயிலை.

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

கடைக்கணருள்தாடா கன்னிவனநாதா
கெடுக்குமலமொருக்கிக் கிட்டிவரப்பாரேடா. 43

காதல்தணியேனே கண்டுமகிழேனே
சாதல்தவிரேனே சங்கடந்தான்தீரேனே. 44

உன்னைத்துதியேனே வூர்நாடிவாரேனே
பொன்னடியைப்பாரேனே பூபூத்துநில்லேனே. 45

ஓங்காரபொற்சிலம்பி னுல்லாசம்பாரேனே
பாங்கானதண்டை பலபணியும்பாரேனே. 46

வீரகண்டாமணியின் வெற்றிதனைப்பாரேனே
சூர்கண்டுபோற்றுமந்தச் சுந்தரத்தைப்பாரேனே.

இடையில்புலித்தோ லிருந்தகலைப்பாரேனே
விடையில்லெழுந்தருளும் வெற்றிதனைப்பாரேனே.

ஆனையுரிபோர்த்த வழகுதனைப்பாரேனே
மானைப்பிடித்தேந்து மலர்க்கரத்தைப்பாரேனே. 49

மீண்டார்தலைப்பூண்ட மார்பழகைப்பாரேனே
ஆண்டார்நமக்கென் றறைந்துதிரியேனே. 50

கண்டங்கறுத்துநின்ற காரணத்தைப்பாரேனே
தொண்டர்குழுவினின்ற தோற்றமதைப்பாரேனே.

அருள்பழுத்தமாமதியா மாரநத்தைப்பாரேனே,
திருநயனச்சடையொளிருஞ் செழுங்கொழுமைப்பா
ரேனே. 52

செங்குமினின்றுண்டம்வளர் சிங்காரம்பாரேனே
அங்கனியைவென்ற வதரத்தைப்பாரேனே. 53

முல்லை நிலவெறிக்கு மூரலொளிபாரேனே
அல்லார்புருவத் தழகுதனைப்பாரேனே. 54

மகரங்கிடந்தெரிரும் வண்மைதனைப்பாரேனோ
சிகரமுடியழகுஞ் செஞ்சடையும்பாரேனோ. 55

கங்கையொடு திங்களணிந்த காட்சிதனைப்பாரேனோ, பொங்கரவைத் தான்சடையில் பூண்டவிதம் பாரேனோ. 56

சுரக்கொன்றைபூத்த சடைக்காட்டைப்பாரேனோ
எருக்கறுகூமத்தைபணி யேகாந்தம்பாரேனோ. 57

கொக்கிறகுசூடிநின்ற கொண்டாட்டம்பாரேனோ
அக்கினியையேந்திநின்ற வானந்தம்பாரேனோ. 58

தூக்கியகாலுந் துடியடியும்பாரேனோ
தாக்குமுயலகன்மேற் றாண்டவத்தைப்பாரேனோ.

வீசுகரமும் விகசிதமும்பாரேனோ
ஆசையளிக்கு மபயகரம்பாரேனோ. 60

அரிபிரமர்போற்ற வமரர்சயசவெனப்
பெரியம்மைபாகம்வளர் பேரழகைப்பாரேனோ. 61

சுந்தரநீற்றின் சொகுசுதனைப்பாரேனோ
சந்திரசேகரனுந் தயவுசெய்தால்பாரேனோ. 62

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

கெட்டநாள்கெட்டாலுங் கிருபையினிபாரேடா
பட்டநாள்பட்டாலும் பதமெனக்குகிட்டாதோ. 63

நற்பருவமாக்குமந்த நாளெனக்குக்கிட்டாதோ
எப்பருவமுங்கடந்த வேதாந்தங்கிட்டாதோ. 64

வாக்கிறந்துநின்ற மவுனமதுகிட்டாதோ
தாக்கிறந்துநிற்குமந்தத் தற்சுத்திகிட்டாதோ. 65

வெந்துயரைதீர்க்குமந்த வெட்டவெளிகிட்டாதோ
சிந்தையுந்தீர்க்குமந்தத் தேறலதுகிட்டாதோ. 66

ஆனவடியார்க் கடிமைகொள்ளகிட்டாதோ
ஊனமறவென்னை யுணர்த்துவித்தல்கிட்டாதோ. 67

என்னென்றுசொல்லுவண்டா வென்குருவேசே
னடா, பின்னையெங்கு நீயல்லாமற்பிறிதில்லையே. 67

கன்னிவனநாதா கன்னிவனநாதா.

அன்னவிகாரமது வற்றவிடங்கிட்டாதே
சொன்னவிகாரந்தொலைந்தவிடங்கிட்டாதோ. 68

உலகவிகாரமொழிந்த விடங்கிட்டாதோ
மலக்குழியின்முன்னூர் வசியாதுங்கிட்டாதோ. 69

ஒப்புவமைபற்றே றொழிந்தவிடங்கிட்டாதோ
செப்புதற்குமெட்டாத் தெளிந்தவிடங்கிட்டாதோ.

வாக்குமனோதீத வகோசரத்திற்செல்லவெனைத்
தாக்குமருட்குருவேநின்றாளிணைக்கேயான்போற்றி.

பட்டினத்தார் முதல்வன் முறையீடு
முற்றிற்று.

பட்டினத்துப் பிள்ளையார்

அருட் புலம்பல்.

——()——

ஐங்கரனைத் தெண்டனிட்டே
னருளடைய வேண்டுமென்று
தங்காமல் வந்தொருவன்
றற்சொரூபங் காட்டியெனைக்.

கொள்ளைப்பிறப்பறுக்கக் கொண்டான்குருவடிவம்
கள்ளப்புலனறுக்கக் காரணமாய்வந்தாண்டி.

ஆகாரமோராறு மைம்பத்தோரக்ஷரமும்
சூதானகோட்டையெல்லாஞ் சுட்டான்றுரிசறவே.

மெத்தவிகாரம் விளைக்கும்பலபலவாம்
தத்துவங்களெல்லாந் தலைகெட்டுவந்ததடி.

என்னோடேன்பிறந்தா றெல்லாரும்பட்டார்கள்
தன்னந்தனியே தரித்திருக்கமாட்டேண்டி.

எல்லாரும்பட்டகள மென்றுதொலையுமடி
சொல்லியழுதாற் றுபரமெனக்காறுமடி.

மண்முதலாமைம்பூத மாண்டுவிழக்கண்டேண்டி, விண்முதலாமைம்பொறிகள் வெந்துவிழக்கண்டேண்டி.

நீங்காப்புலகளைந்து நீறாகவெந்ததடி
வாக்காதிபைவரையு மாண்டுவிழக்கண்டேண்டி.

மனக்கரணமத்தனையும் வகைவகையேபட்டழிய
இனக்கரணத்தோடே யெரிந்துவிழக்கண்டேண்டி.

ஆத்துமதத்துவங்கள் அடுக்கழிவெந்ததடி
போற்றும்வகையெப்படியோ போதமிழந்தானே.

வித்தியாதத்துவங்கள் வெந்துவிழக்கண்டேண்டி
சுத்தவித்தைதனைத்தினையுஞ் சுட்டான்றுரிசறவே.

மூன்றுவகைக்கிளையு முப்பத்தறுவரையும்
கான்றுவிழச்சுட்டுக் கருவோறுத்தாண்டி.

குருவாகிவந்தானோ குலமறுக்கவந்தானோ
உருவாகிவந்தானோ வுருவழிக்கவந்தானோ.

கேடுவருமென்றறியேன் கெடுமதிகண்டோற்றுமல்
பாடுவருமென்றறியேன் பதியாண்டிருந்தேண்டி.

எல்லாரும்பட்டகள மின்னவிடமென்றறியேன்
பொல்லாங்குதீர்க்கும்பொறியலியைக்கண்டேண்டி,

உட்கோட்டைக்குள்ளிருந்தா ரொக்கமடிந்தார்கள், அக்கோட்டைகுள்ளிருந்தா ரறுபதுபேர்பட்டார்கள்.

ஒக்கமடிந்ததடி யூடுருவவந்ததடி
கற்கோட்டையெல்லாங் கரிக்கோட்டையாச்சுதடி

தொண்ணூற்றறுவரையுஞ் சுட்டான்றுரிசறவே
கண்ணீறுபட்டதடி கருவேரறுத்தாண்டி.

ஓங்காரங்கெட்டதடி வுள்ளதெல்லாம்போச்சுதடி
ஆங்காரங்கெட்டதடி யடிபோடறுத்தாண்டி.

தரையாங்குடிலைமுதல் தட்டுருவவெந்ததடி
இரையுமனத்திடும்பை யெல்லாமறுத்தாண்டி.

முன்னைவினையெல்லாம் முழுதுமறுத்தாண்டி
தன்னையறியவே தானொருத்தியானேனடி.

என்னைநானறியவே விருவினையுமீடழித்து
தன்னையறியத் தலமெனக்குச்சொன்னாண்டி.

தன்னையறிந்தேனடி தனிக்குமரியானேனடி
தன்னந்தனியே தானிருக்கும்பக்குவமோ.

வீட்டிலொருவரில்லை வெட்டவெளியானேனடி
காட்டுக்கெரித்தநிலா கனவாச்சேகண்டதெல்லாம்.

நகையாரோகண்டவர்கள் நாட்டுக்குப்பட்டல்லவோ
பகையாரோகண்டவர்கள் பார்த்தாருக்கேச்சலவோ

இந்நிலைமைகண்டாண்டி யெங்குமிருந்தாண்டி
கன்னிபழித்தாண்டி கற்பைக்குலைத்தாண்டி.

கற்புகுலைத்தமையும் கருவேரறுத்தமையும்
பொற்புகுலைத்தமையும் பேதமிழந்தமையும்.

என்னவினைவருமோ வின்னமெனக்கென்றறியேன்
சொன்னசொல்லெல்லாம் பலித்ததடிசோர்வறவே.

கங்குல்பகலற்றிடத்தே காட்டக்கொடுத்தாண்டி
பக்கமழித்தாண்டி பார்த்தானைப்பார்த்திருந்தேன்.

சாதியிற்கூட்டுவரோ சாத்திரத்திற்குள்ளாமோ
ஓதியுணர்ந்ததெல்லா முள்ளபடியாச்சுதடி.

என்னகுற்றஞ்செய்தேனோ எல்லாருங்காணாமல்
அன்னைசுற்றமெல்லா மறியாரோவம்புவியில்.

கொன்றாரை தின்றேனோ. தின்றாரைகொன்றேனோ
எண்ணாதெல்லாமெண்ணி யிச்சைமறந்தேனோ.

சாதியிற்கூட்டுவரோ சமயத்தோரெண்ணுவரோ
பேதித்துவாழ்ந்ததெல்லாம் பேச்சுக்கிடமாச்சுதடி.

கண்டார்க்குப்பெண்ணலவோ காணார்க்குக்காமமடி
உண்டார்களுண்டதலா லூணல்லா துண்பர்களோ.

கொண்டார்கள்கொண்டதெல்லாங்கொள்ளாதார் கொள்ளுவரோ, விண்டவர்கள்கண்டவரோ கண்டவர்கள்விண்டவரோ.

பண்டாயநான்மறைகள் பாடும்பரிசலவோ [தோ.
தொண்டாயதொண்டருளந் தோற்றியொடுங்கும

ஓதவரிதோ வொருவருணர்வரிதோ
பேதமறவெங்கும் விளங்கும்பெருமையன்காண்.

வாக்குமனமுங் கடந்தமனோலயங்காண்
நோக்கவரியவன்காணுண்ணரியனுண்ணியன்காண்.

சொல்லுக்கடங்கான்காண் சொல்லிறந்துநின்றவன்காண், கல்லுளிருந்த கனலொளிபோனின்றவன் காண்.

கூட்டிருந்தபாழதனிற் சுகித்திருக்கச்சொன்னவன்காண், எட்டிலெழுத்தேர் எழுதினவன்கைபிழையோ.

சும்மாவிருக்கவைத்தான் சூத்திரத்தைநானறியேன்
அம்மாபொருளிதென் வடையவிழுங்கினண்டி.

பார்த்தவிடமெல்லாம் பரமாகக்கண்டேண்டி
கோத்தநிலைகுலைத்த கொள்கையறியேண்டி.

மஞ்சனமாட்டி மலர்பறித்துச்சாத்தாமல்
நெஞ்சுவெறும்பாழானே னின்றனிலைநானேண்டி.

பாடிப்படித்திருந்தும் பண்மலர்கள்சாத்தாமல்
ஓடித்திரியாம லுருக்கெட்டுவிட்டேனடி.

மாணிக்கத்துள்ளொளிபோல் மருவியிருந்தாண்டி
பேணித்தொழுமடியார் பேசாப்பெருமையன்காண்.

அன்றுமுதலின்றளவு மறியாப்பருவமதில்
என்றுபொதுவா யிருந்தநிராமயன்காண்.

சித்தவிகாரத்தாலே சின்மயனைக்காணாமல்
புத்திகலங்கிப் புகுந்தேன்பொறிவழியே.

பத்தியறியாமற் பாழிற்கவிழ்ந்தேனடி
ஒத்தவிடநித்திரையென் றொத்துமிருந்தேனடி

செத்தாரையொத்தேனடி சிந்தைதெளிந்தேனடி
மற்றுருமில்லையடி மறுமாற்றங்காணேனடி.

கல்வியல்லகேள்வியல்ல கையாட்டுங்காரணங்காண்
எல்லையளவற்றதடி யெங்குநிறைந்ததடி.

வாசாமகோசரத்தை மருவியிடங்கொண்டாண்டி
ஆசூசமில்லாண்டி யறிவுக்கறிவாண்டி.

பத்துத்திசைக்கு மடங்காப்பருவமடி
எத்திசைக்குமெங்கு மிடைவிடாதேகமடி.

தித்திக்கவூறுமடி சித்தமுடையார்க்குப்
பத்திக்கடலுட் பதித்தபரஞ்சோதியடி.

உள்ளுணவாம்நின்றவந்த முணர்வுக்குணர்வாண்டி
எள்ளளவுமுள்ளதிலே யேறிக்குலையாண்டி.

தூருந்தலையுமிலான் றேற்றமொடுக்கமிலான்
ஆருமறியாம லகண்டமாய்நின்றாண்டி.

எத்தனையோவண்டத் திருந்தவர்களெத்தனைபேர்
எத்தனைபேருண்டாலும் அணுவுங்குறையாண்டி.

வாக்குமனமும் வடிவுமிலாவான்பொருள்காண்
போக்கும்வரவுமிலான் பொருவரியபூரணன்காண்.

காட்சிக்கெளியான்காண் கண்டாலுங்காணான்காண், மாட்சிமனம்வைத்தாற்கு மாணிக்கத்துள்ளொளிகாண்.

வாழ்த்தியவனை வழிபாட்டால்மன்னுயிர்கள் [ண்.
தோற்றவரியான்காண் சொல்லிறந்தசோதியன்கா

ஐயமறுத்தவனை யாராய்வாருண்டானால்
வையகத்தேவந்து மலர்பாதம்வைத்திடுவான்.

அணுவுக்குமேருவுக்கு மகம்புறமாய்நின்றான்காண்
கணுமுற்றுஞானக் கரும்பின்றெளிவான்காண்.

எந்நாளுமிந்நாளு மிப்படியாயப்படியாய்ச், சொன்னாலுங்கேளான்காண் சோத்திரத்திற் கொள்ளான்காண்.

ஆத்தாளுக்காத்தாள மப்பனுக்குமப்பனுமாம் [ண்
கோத்தாற்குக்கோத்த நிலைகொண்டகுணக்கடல்கா

இப்போபுதிதோடி யெத்தனைநாளுள்ளதடி
அப்போதைக்கப்போ தருளறிவுந்தந்தாண்டி.

பற்றற்றார்பற்றாகப் பற்றியிருந்தாண்டி
குற்றமறுத்தாண்டி கூடியிருந்தாண்டி.

வெட்டவெளியிலேயே மேவியிருந்தாண்டி
பட்டப்பகலிலடி பார்த்திருந்தாரெல்லோரும்.

வாழ்வானவாழ்வெனக்கு வந்ததடிவாழாமல்
தாழாமற்றாழ்ந்தேண்டி சற்றுங்குறையாமல்.

பொய்யான வாழ்வெனக்குப் போதுமெனக்காணேண்டி, மெய்யானவாழ்வெனக்கு வெறும்பாழாய் விட்டதடி.

கன்னியழித்ததனைக் கண்டாரைக்கண்டேண்டி
என்னியல்புநானறியே னீதென்னமாயமடி.

சொல்லாலேசொல்லுதற்குச் சொல்லவாயில்லையடி
எல்லாருங்கண்டிருந்து மிப்போதறியார்கள்.

கண்மாயமிட்டாண்டி கருத்தமிழந்தேண்டி
புண்மாயமிட்டவனை புருவழியக்கண்டேண்டி.

என்னசொல்லப்போரேனே யிந்தவதிசயத்தை
கன்னியிளங்கமுகு காய்த்ததடிகண்ணா.

ஆர்ந்தவிடமத்தனையு மருளாயிருக்குமடி
சார்ந்தவிடமெல்லாம் சவ்வாதுமணக்குதடி.

இந்தமணமெங்கு மியற்கைமணமென்றறிந்து
அந்தச்சுகாதீதத் தருட்கடலில்மூழ்கினண்டி.

இருப்பிலுறைநீர்போல வெனைவிழுங்கிக் கொண்டாண்டி, அரும்பிலுறைவாசனைபோ லன்றேயிருந்தாண்டி.

அக்கினிகற்பூரத்தையறவிழுங்கிக்கொண்டாப்போல
மக்கினம்பட்டுள்ளே மருவியிருந்தாண்டி.

கடல்நீருமாறும்போற் கலந்துகரைகாணேண்டி
உடலுமுயிரும்போ லுட்கலந்துநின்றாண்டி

பொன்னுமுரைமாற்றம்போற் பொருவரிய பூரணன்காண், மன்னுமனுபூதியடி மாணிக்கத்துள்ளொளிபோல்.

கங்குகரையில்லாண்டி கரைகாணக்கப்பலடி
எங்குமளவில்லாண்டி யேகமாய்நின்றாண்டி.

தீவகம்போலென்னைச் சேர்ந்தபரசின்மயன்காண்
பாவமொன்றில்லாண்டி பார்த்திடமெல்லாம் பரங்காண்.

உள்ளார்க்குமுள்ளாண்டி யூருமில்லாபேருமில்லான்
கள்ளப்புலனறுக்கக் காரணமாய்வந்தாண்டி.

அப்பிறப்புக்கெல்லாம் அருளாயமர்ந்தாண்டி, இப்பிறப்பில்வந்தா னிவனுருமெய்ப்பொருள் காண்.

நீரொளிபோலெங்கு நிறைந்தநிராமயன்காண்
பாரொளிபோலெங்கும் பரந்தபராபரன்காண்.

நூலாலுணர்வரிய நுண்மையினுநுண்மையன்காண்
பாலாறுசர்க்கரைபோற் பரந்தபரிபூரணன்காண்.

உளக்கண்ணுக்கல்லா தூன்கண்ணுக்கொருமதோ
விளக்குச்சுடரொளிபோல் மேவியிருந்தாண்டி.

கல்லுளிருந்தகனலொளிபோற்காரணமாய்
புல்லியிருந்தும் பொருவரியபூரணன்காண்.

பொற்பூவும்வாசனைபோற் போதம்பிறந்தார்க்குக்
கற்பூவும்வாசனைபோற் காணுக்கயவருக்கு.

மைக்குழம்புமுத்தும்போல் மருவிமறவாதவர்க்குக்
கைக்குட்கனியாகுங் கருவறுத்தகாரணர்க்கும்.

பளிங்கிற்பவளமடி பற்றற்றபாவலர்க்குக், கிளிஞ்
சிலைவெள்ளியென்பார் கிட்டாதார்கிட்டுவரோ.

எட்டுக்கடங்காண்டி எழுத்திற்பிறவாண்டி
நாட்டிநரிகளெல்லா நற்புரவிசெய்தாண்டி.

பஞ்சப்பிரளயத்து மிஞ்சியிருப்பாண்டி
நஞ்சுபொதிமிடற்று னயனத்தழல்விழியான்.

அகங்காக்கும்புறங்காக்கும் அளவிலாவண்டமுதல்
செகங்காக்குங்காணுத் திசைபத்துங்காக்குமடி.

பேசாப்பிரமமடி பேச்சிறந்தபேரொளிகாண்
ஆசாபாசங்கள் அணுகாதபேரொளிகாண்.

தேசமிறந்தவன்காண் திசையிறந்ததென்கடல்காண்
ஊசிமுனையூன்ற வில்லாவுறுபொருள்காண்.

சிப்பியில்முத்தொளிதாண் சின்மயநோக்கில்லார்க்கு
அப்பிலொளிபோ லயர்ந்தவரும்பொருள்காண்.

ஆலாவிருட்சமடி யளவில்லாச்சாகையடி, மேலா
ம்பதங்கள்விசும் பூடுருவுமெய்ப்பொருள்காண்.

வங்கிஷமெல்லாங்கடந்து வருவாமலர்ப்பதங்காண்
அங்கிஷமாயெங்கும் ஆய்ந்தவரும்பொருள்காண்.

நாமகட்டமானதடி நவிலவிடமில்லைபடி [காண்.
காமனைக்கண்ணாலெரிக்கக் கனல்விழித்தகாரணங்

கெட்டாதசெம்பொன்னடி குளியாத்தரளமடி
எட்டாதகொம்பிலடி யிப்புகாற்றேனமுதம்.

காணிப்பொன்னணியுடன் கல்லுரைமாத்தின்ன தென்றே, ஆணியுடன் கூட்டி யடங்கவிட்டுக்கொண்டாண்டி.

அளவிறந்தவண்டத்தா ரத்தனைபேருண்டாலும்
பிளவளவுந்தான்சற்றும் பேசாப்பிரமமடி.

கன்னெஞ்சினுள்ளே கருநீலம்பூத்தாப்போல்
என்னெஞ்சினுள்ளே யிணையடிகள்வைத்தாண்டி.

வேதப்புரவியடி விரைந்தோடியும்மறியார்
காதற்றுஞானமடி காண்பார்கருத்துடையோர்.

பாசவினையைப் படப்பார்த்தபார்வையுடன்
நேசத்தைக்காட்டியடி நில்லென்றுசொன்னாண்டி.

ஓசையொடுங்குமிட மோங்காரத்துள்ளொளிகாண்
பேசாதிருக்கும் பிரமமிதுமென்றாண்டி.

சின்மயநன்னோக்காற் சிற்சுரூபங்காட்டியெனை
தன்மயமாயாக்கியே தானவனாய்நின்றாண்டி.

தானென்னைப்பார்த்தாண்டி தன்னைத்தானல்லாமல்
நானென்னசொல்லுவண்டி நவிலவிடமில்லையடி.

இன்றிருந்துநாளைக் கிறக்கிறபேரெல்லோரும்.
என்றுபரிபூரணத்தி லினிதிருக்கச்சொன்னாண்டி.

பார்க்கிலெளிதலவோ பற்றற்றபற்றறவோ
ஆர்க்குமிடங்காட்ட லவனிதனில்வந்தாண்டி.

இத்தனைகாலமடி யிறந்துபிறந்ததெல்லாம்
இத்தனையுமில்லையடி யிரும்பிலுறைநீரானேன்.

எக்காலம்பட்டதடி யிறந்துபிறந்ததெல்லாம்
அக்காலமெல்லாம் அழுந்தினேனுனரகில்.

காலங்கழித்ததடி கர்மமெல்லாம்போச்சுதடி
நாலுவகைக்கருவு நாமநட்டமாச்சுதடி.

முப்பாழுக்கப்பால் முதற்பால்முழுமுதலாய்
இப்போதுவந்தான்காண் எனைவிழுங்கிகொண்டான்

பாலின்கணெய்யிருந்தாற் போலப்பரஞ்சோதி
ஆலிங்கனஞ்செய் தறவிழுங்கிக்கொண்டாண்டி.

செத்தபடமானேனடி நீயிரும்பிசீரானேன்
ஒத்தவிடநித்திரையென் றேறுதுமுணர்வறிந்தேன்.

ஒப்புவமையுமற் றேறுதவரிதாயபொருள்
இப்பூவினிற்குருவே யென்னவந்தோன்ருள்வாழி.

ஒப்பாரிசொல்லிடினுமுவமைபிழைத்திடினும் [ளே
முப்பாழுங்கற்றுணர்ந்தோர் முன்னோர்பொருத்தரு

அருட்புலம்புல்
முற்றிற்று.

பட்டினத்துப் பிள்ளையார்

இறந்தகாலத்திரங்கல்.

வார்த்தைத்திறமில்லாமனிதருக்குப்புன்சொல்லாஞ்
சாத்திரங்கள்சொல்லிச் சதிரிழந்துகெட்டேனே.

மெத்தமெத்தச்சொல்வாக்கில் வேறுமருளடுத்துக்
தத்தித்தலைகீழாய்த் தானடக்தும்கெட்டேனே.

வழக்கந்தலங்களிலு மண்பெண்பொன்னாசையினும்
பழக்கந்த்விராமற் பதியிழந்துகொண்டேனே.

ஆணிபொருந்து மரும்பூமியத்தனையும்
காணிநமதென்று கனம்பேசிக்கெட்டேனே.

ஆசாரமில்லா வரசருடன்கூடிப்
பாசாங்குபேசிப் பதியிழந்துகெட்டேனே.

குருமார்க்கமில்லாக் குருடருடன்கூடிக்
கருமார்க்கத்துள்ளே கருத்தழிந்துகெட்டேனே.

ஆலமருந்து மரன்பெருமை யெண்ணாமல் [னே
பாலர்பெண்டீர் மெய்யென்று பதியிழந்துகெட்டே

பிணவாசமுற்ற பெருங்காய மெய்யென்று
பணவாசையாலே பதியிழந்து கெட்டேனே.

கண்டபுலவர் கனக்கவே தான்புகழ
உண்டவுடம்பெல்லா முப்பரித்துக்கெட்டேனே.

எண்ணிறந்தசென்ம மெடுத்துச்சிவபூசை
பண்ணிப்பிழையாமற் பதியிழந்துகெட்டேனே.

சிற்றெறும்புசற்றுந் தீண்டப்பொறாவுடம்பை
உற்றுருக்கவுஞ்சுடவு மொப்பித்துமாண்டேனே.

தன்னுடம்புதானே தனக்குப்பகையாமென்
றெண்ணுமுணர்வில்லாமலின்பமென்றுமாண்டேனே

தோலெலும்புமாங்கிசமு தொல்லன்னத்தால்வளரு
மேலெலும்புசுற்றமென்று விரும்பாய்மாண்டேனே.

போக்குவரத்தும் பொருள்வரத்துங்காணாமல்
வாக்கழிவுசொல்லி மனமறுக்கிக்கெட்டேனே.

இரந்தகாலதிரங்கல்

முற்றிற்று.

சிவமயம்.

பட்டினத்துப் பிள்ளையார்

நெஞ்சொடு புலம்பல்.

மண்காட்டிப்பொன்காட்டி மாயவிருள்காட்டிச்
செங்காட்டிலாடுகின்ற தேசிகனைப்போற்றாமல்
கண்காட்டும்வேசியர்தங் கண்வலையிற்சிக்கிமிக
அங்காடிநாய்போ லலைந்தனையேநெஞ்சமே. 1

புட்பாசனவணையிற் பொற்பட்டுமெத்தையின்மேல்
ஒப்பாவணிந்தபணி யோடாணிநீங்காமல்
இப்பாய்க்கிடத்தி யியமனுயிர்கொள்ளுமுன்னே
முப்பாழைப்போற்ற முயங்கிலையேநெஞ்சமே. 2

முப்பாழும்பாழாய் முதற்பாழ்வெறும்பாழாய்
அப்பாழுக்கப்பாணின் றாடுமதைப்போற்றாமல்
இப்பாழ்வாழ்வைநம்பி யேற்றவர்க்கொன்றீயாமல்
துப்பாழாய்வந்தவினை சூழ்ந்தனையேநெஞ்சமே. 3

அன்னம்பகிர்ந்திடுங் கலைந்தோர்க்குதவிசெயுஞ்
ஜென்மமெடுத்துஞ் சிவனருளைப்போற்றாமல்
பொன்னுமனையுமெழிற் பூவையரும்வாழ்வுமிவை
இன்னுஞ்சதமாக வெண்ணினையேநெஞ்சமே. 4

முற்றொடர்பிற்செய்த முறையால்வந்தசெல்வம்
இற்றைநாட்பெற்றோமென் றெண்ணாதுபாழ்மனமே
அற்றவர்க்குமீயாம லரன்பூசையோராமல்
கற்றவர்க்குமீயாமற் கண்மறந்துவிட்டனையே. 5

மாணிக்கமுத்து வயிரப்பணிபூண்டு
ஆணிப்பொன்சிங்கா தனத்திலிருந்தாலும்
காணித்துடலைநமன் கட்டியேகைப்பிடித்தால்
காணிப்பொன்கூடவரக் காண்கிலமேநெஞ்சமே. 6

கற்கட்டுமோதிரநற் கடுக்கனரைஞாண்பூண்டு
திக்கெட்டும்போற்ற திசைக்கொருத்தரானாலும்
பற்கிட்டவேமனுயிர் பந்தாடும்வேளையிலே
கைச்சட்டங்கூடவரக் காண்கிலமேநெஞ்சமே. 7

முன்னநீசெய்ததவ முப்பாலுஞ்சேருமன்றிப்
பொன்னும்பணிதிகளும் பூவையுமங்கேவருமோ
தன்னைச்சதமாகச் சற்குருவைப்போற்றாமல்
கண்ணற்றவந்தகன்போற் காட்சியற்றாய்நெஞ்சமே.

பையரவம்பூண்ட பரமர்திருப்பொற்றாளைத்
துய்யமலர்பறித்துத் தொழுதுவணங்காமல்
கையிலணிவளையுங் காலிலிடும்பாடகமும்
மெய்யென்றிறுமாந்து விட்டனையேநெஞ்சமே. 9

மாதுக்கொருபாகம் வைத்தவரன்பொற்றாளைப்
போதுக்கொருபோதும் போற்றிவருந்தாமல்
வாதுக்குத்தேடியிந்த மண்ணிற்புதைத்துவைத்தே
ஏதுக்குப்போகநீ யெண்ணியேநெஞ்சமே. 10

அஞ்சருளைப்போற்றி யைந்துபுலனைத்துறக்க
நெஞ்சேயுனக்கு நினைவுநான்சொல்லுகிறேன்
வஞ்சகத்தைநீக்கி மறுநினைவுவாராமல்
செஞ்சரணத்தாளைச் சிந்தைசெய்வாய்நெஞ்சமே.

அற்புதமாயிந்தவுட லாவியடங்குமுன்னே
சற்குருவைப்போற்றித் தலம்பெற்றுவாழாமல்
உற்பத்திசெம்பொன் உடைமைபெருவாழ்வைநம்பிச்
சற்பத்தின்வாயிற் றவளைபோலானேனே. 12

உற்றாரார்பெற்றாரா ருடன்பிறப்பார்பிள்ளைகளாற்
மற்றாரிருந்தாலென் மாளும்போதுதவுவரோ
கற்றாவிழந்தவிளங் கன்றதுபோலேயுருகிச்
சிற்றாசிச்சிற்றின்பஞ் சேர்ந்தனையேநெஞ்சமே. 13

வீடிருக்கத் தாயிருக்க வேண்டுமனையா ளிருக்கப்
பீடிருக்க வூணிருக்கப் பிள்ளைகளுந் தாமிருக்க
மாடிருக்கக் கண்ணிருக்க வைத்தபொரு ளிருக்க
கூடிருக்க நீபோன கோலமென்ன கோலமே. 14

சந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும் பரிமளமும்
விந்தைகளாப் பூசிமிகு வேடிக்கைபொய்யாகக்
கந்தமலர் சூடுகின்ற கன்னியருந் தாமிருக்க
எந்தவகை போனாயென் றெண்ணிலையே நெஞ்சமே.

காற்றுத் துருத்தி கடியவினைக் குள்ளான
ஊற்றைச்சடலத்தை யுண்டென் றிறுமாந்து
பார்த்திரங்கி யன்னம் பசித்தோருக் கீயாமல்
ஆற்றுவெள்ளம் போல வளர்வினையே நெஞ்சமே. 16

நீர்க்குமிழி வாழ்வை நம்பி நிச்சயமென் றேயெண்ணிப்
பாக்களவா மன்னம் பசித்தோர்க் களியாமல்
போக்குளெமதூதன் பிடித்திழுக்கும் போது
ஆர்ப்படுவரென்று யறிந்திலையே நெஞ்சமே. 17

சின்னஞ்சிறுநலாள் செய்தபல வினையான்
முன்னந் தமார்பில் முளைத்தசிலந்தி விம்மி
வன்னந் தளதளப்ப மயங்கிவலைக் குள்ளாகி
அன்னம் பகிர்ந்துண்ண வறிந்திலையே நெஞ்சமே. 18

ஓட்டைத் துருத்தியை யுடையும்புழுக் கூட்டை
ஆட்டுஞ் சிவசித்த ரருளை மிகப்போற்றி
வீட்டைத் திறந்து வெளியையொளி பாலமைத்துக்
காட்டும்பொருளிதென்று கருதிலையே நெஞ்சமே.

ஊன்பொதிந்த காய முளைத்தபுழுக் கூட்டைத்
தான்சுமந்த தல்லால்நீ சற்குருவைப் போற்றாமல்
கான்பரந்த வெள்ளங் கரைபுரளக் கண்டேகி
மீன்பிறந்தாற் போலே விகாரமுற்றாய் நெஞ்சமே. 20

உடக்கைபொருத்தி யுயிரையடைத்துவைத்த
சடக்கைச்சதமென்று சார்ந்தங்கிறுமாந்தே
உடக்கைதகர்த்தே யுயிரையமன்கொள்கையிலே
யடக்கமாய்வைத்தபொரு ளெங்குவரமாட்டாதே. 21

தித்திக்குந்தேனைத் தெவிட்டாததெள்ளமுதே
முத்திக்குவித்தான மூப்பானைப்போற்றாமல்
பற்றிப்பிடித்தியமன் பாசத்தாற்கட்டும்வண்ணம்
சுற்றியிருக்கும்வினை சூழ்ந்தனையேநெஞ்சமே. 22

அஞ்செழுத்தா எட்டெழுத்தா யைம்பத்தோரட்சரமாய், பிஞ்செழுத்தால்நின்ற பெருமானைப்போற்றாமல், வஞ்சகமாயுற்றமுலை மாதர்வலைக்குள்ளாகி, பஞ்சரித்துத்தேடிப் பாழுக்கிறைத்தோமே. 23

அக்கறுகுகொன்றைதும்பை யப்புலியுஞ் சூடுகின்ற, சொக்கர்திருத்தாளைத் தொழுதுவணங்காமல், மக்கள்பெண்டீர் சுற்றமுடன் வாழ்வைமிக நம்பியன்பாய், எக்காலமுமுண்டென் றெண்ணினையேநெஞ்சமே. 24

ஆண்டகுருவி னருளைமிகப்போற்றி
வேண்டுங்கயிலாய வீட்டுவழிபாராமல்
பூண்டகுழன்மாதுநல்லார் பொய்மாய்கைக்குள்ளாகி
தூண்டிலகப்பட்டுத் துடிகெண்டையானேனே. 25

எணிப்பழுவா யிருளைபறுத்தாளமுற்றும்
பேணித்தொழுங்கயிலை பேறுபெறமாட்டாமல்
காணவரும்பொருளாய்க் கண்கலக்கப்பட்டடியேன்
ஆணியற்றமாமரம்போ லாகினனேநெஞ்சமே. 26

கோத்தும்பிரகாசங் கொண்டிருகியண்டமெல்லாம்
காத்தபடியே கயிலாயஞ்சேராமல்

வேற்றுருவப்பட்டடியேன் வெள்ளம்போலுள்ளுருகி
ஏற்றுங்கழுவி லிருந்தபிணமானேனே. 27

நிலைவிட்டுடலையுயிர் நீங்கியகலுமுன்னே
சிலைதொட்டவேடனெச்சிற் றின்றானைச்சேராமல்
வலைபட்டுழலுகின்ற மான்போற்பரதவித்துத்
தலைகெட்டநூலதுபோற் றட்டழிந்தாய்நெஞ்சமே. ()

முடிக்குமயிர்ப்பொல்லா முழிக்குரம்பையின்றோரின், இடைக்குநடைக்கு மிதமகொண்டவார்த்தை செட்டலைவி, அடிக்கொண்டை இல்லை யெனத்தையனே நாயனேபேன, விடைக்கையிழந்த மிருகமதுவானே னே. 29

பூவாணர்போற்றும் புகழ்மதுரைச்சொக்கரது
சீர்பாதமபோற்றிச சிவலோகஞ்சேராமல்
தாவாரநதோறுந தலைபுகுநதநாய்போல
ஆகாதநெஞ்சமே யலைநதுதிரிநதாயே. 30

பக்திகட்டை யீரைந்தாப் பதின்மூன் றிரண் டொன்றாய், ஏகநிட்டிநிறைந்தா சோவியத்தைப் போற்றமல், தெநதிட்டுநின்ற திரிகண்ணிகருள னாகி, விதிதிட்டாய்நெஞ்சே விடவுமறியாயே. 31

அஞ்சுமுருவாகி யைமூன்றுமெட்டுமொன்றாய், மி ஞ்சியிருந்த விளக்கொளியைப்போற்றமல், பஞ்சிலிடு வன்னியைப்போற் பற்றிப்பிடியாமல், நஞ்சுண்ட கெண்டையைப்போல நானலைந்துகெட்டேனே. 32

ஊனமுடனே யுடையுப்புழுக்கூட்டை
மானமுடனே சுமந்து மண்ணுலகில்மாளாமல்
ஆனதொருபஞ்சவர்க ளாண்டிருந்ததேசம்விட்டுப்
போனதுபோலேநாம போயபிழைத்தோமில்லையே,

ஊறைபிறைக்கின்ற வபிருந்தபாண்டத்தை
நாறுமலநாறு நழுவுபுழுக்கூட்டை

வீரும்புரத்தை விரும்புகின்றதெப்படியென்
றுருதகாட்டி லகன்றி நாதேனில்லையே. 34

அரியவரிதேடி யறியாமொருமுதலை
பரிவுடனேபோற்றும பாஞ்சுடரைப்போற்றாமல்
கரியபெருவாழ்வை நம்பிக் கிரமத்தழுந்தியே
அரிவாயிற்பட்ட கரியதுபோலானேனே. 35

தந்திரத்தையுன்னீர் தவத்தைமிகநிறுத்தி
மந்திரத்தையுனனி மயங்கித்தடுமாறி
விந்துருகிநாதமா மேலொளியைக்காணாமல்
அந்தரத்தேகோலெறிந்த அந்தகன்போலானேனே.

விலைய கிப்பானுக்கு வீறடிமைபட்டதுபின்
சிலையார்கைவேடனைச்சிற் றின்றுனைப்போற்றாமல்
அலைவாய்த்துரும்பதுபோ லானுவத்திறைழுங்கி
யுலைவாய்மெழுகதுபோ லுருகினையேநெஞ்சமே. 37

நெஞ்சொடுபுலம்பல்
முற்றிற்று.

பட்டினத்துப்பிள்ளையார்

அருளிச்செய்த

பூரணமாலை.

மூலத்துதித்தெழுந்த முக்கோணச்சக்கரத்துள்
வாலைதனைப்போற்றால் மதிமறந்தேன்பூரணமே. 1

உந்திக்கமலத் துதித்துநின்றபிர்மாவைச்
சந்தித்துக்காணமற் றட்டழிந்தேன்பூரணமே. 2

நாவிக்கமல நடுவேநெடுமால்காணாமல்
ஆவிகெட்டுநானு மறிவழிந்தேன்பூரணமே. 3

உருத்திரனையிருதயத்தி லுண்மையுடன்பாராமல்
கருத்தழிந்துநானுங் கலங்கினேன்பூரணமே. 4

விசுத்திமயேசுரனை விழிதிறந்துபாராமல்
பசித்துருகிநெஞ்சம் பதறினேன்பூரணமே. 5

நெற்றிவிழியுடைய நிர்மலசதாசிவத்தைப்
புத்தியுடன்பாராமற் பொறியழிந்தேன்பூரணமே. 6

நாதவிந்துதன்னை நயமுடனேபாராமல்
போதமயங்கிப் பொறியழிந்தேன்பூரணமே. 7

உச்சிவெளியை யுறுதியுடன்பாராமல்
அச்சமுடனானு மறிவழிந்தேன்பூரணமே. 8

மூக்குமுனையை முழித்திருந்துபாராமல்
ஆக்கைகெட்டுநானு மறிவழிந்தேன்பூரணமே. 9

இடைபிங்கலையி னியல்பறியமாட்டாமல்
தடையுடனேயானுந் தயங்கினேன்பூரணமே. 10

ஊனுக்குணினின் றுலாவினதைக்காணாமல்
நானென்றிருந்து நலமழிந்தேன்பூரணமே. 11

மெய்வாழ்வைநம்பி விருப்பமிகவாழாமல்
பொய்வாழ்வைநம்பிப் புலம்பினேன்பூரணமே. 12

பெண்பிள்ளைதந்தைதாய் பிறவியுடன்சுற்றமிவை
யுண்டென்றுநம்பி யுடலழிந்தேன்பூரணமே. 13

தண்டிகைப்பல்லாக்குடனே சகலசம்பத்துகளும்
உண்டென்றுநம்பி யுணர்வழிந்தேன்பூரணமே. 14

இந்தவுடலுயிரை யெப்போதுந்தான்சதமாய்ப்
பந்தமுற்றுநானும் பதமழிந்தேன்பூரணமே. 15

மாதர்பிரபஞ்ச மயக்கத்திலேவிழுந்து
போதமயங்கிப் பொறியழிந்தேன்பூரணமே. 16

சரிதைகிரியாயோகந் தான்ஞானம்பாராமல்
பிரிதிகண்டமதியாதேபோற் பயனழிந்தேன்பூரணமே

மண்டின்றிவான்றனை மயக்கத்திலேயிழந்து
கண்டுகெட்டமாடதுபோற் கலங்கினேன்பூரணமே.

தனிமுதலைப்பார்த்துத் தனித்திருந்துவாழாமல்
அநியாயமாய்ப் பிறந்திங்கலைந்துநின்றேன்பூரணமே.

ஈராறுதன்கலைக்கு ளிருக்குங்கூத்தாடிதனை
ஆராய்ந்துபாராம லறிவழிந்தேன்பூரணமே. 20

வாசிதனைப்பார்த்து மகிழ்ந்துனைநான்போற்றாமல்
காசிவரைபோய்த்திரிந்து காலலுத்தேன்பூரணமே.

கருவிகடொண்ணூறாறிற் கலந்துவிளையாடினதை
இருவிழியாற்பாராம லீடழிந்தேன்பூரணமே. 22

உடலுக்குள்நீநின் றுலாவினதைக்காணாமல்
கடமலைதோறுந்திரிந்து காலலுத்தேன்பூரணமே 23

எத்தேசகாலமுநா மிறவாதிருப்பமென்று
உற்றுனைத்தான்பாராம லுருவழிந்தேன்பூரணமே.

எத்தனைதாய்தந்தை யிவர்களிடத்தேயிருந்து
பித்தனையாளும் பிறந்திருந்தேன்பூரணமே. 25

பெற்றலுத்தாள்தாயார் பிறந்தலுத்தேன்யானு முன்றன், பொற்றுணைத்தாள்தந்து புகலருள்வாய் பூரணமே. 26

உற்றாரழுதலுத்தா ருறன்முறையார்சுட்டலுத்தார்
பெற்றலுத்தாள்தாயார் பிறந்தலுத்தேன்பூரணமே.

பிரமன்படைத்தலுத்தான் பிறந்திருந்துநானலுத்தேன், உபமுடையவக்கினிதா னுண்டலுத்தான்பூரணமே. 28

எண்பத்துநாலு நூறாயிரஞ்ஜெனனமுஞ்ஜெனித்து
புண்பட்டுநானும் புலம்பினேன்பூரணமே. 29

என்னையறியாம லெனக்குள்ளேநீயிருக்க
உன்னையறியாம லுடலிழந்தேன்பூரணமே. 30

கருவாயுருவாய்க் கலந்துலகெலாநீயாய்
அருளாகிநின்ற தறிகிலேன் பூரணமே. 31

செம்பொற்கமலத் திருவடியைப்போற்றாமல்
பம்பைகொட்டவாடும் பசாசானேன் பூரணமே. 32

எனக்குள்ளேநீயிருக்க வுனக்குள்ளேநானிருக்க
மனக்கவலைதீர வரமருள்வாய் பூரணமே. 33

ஏழுவகைத்தோற்றத் திருந்தவினைபாடினதைப்
பாழுதறவேபாராமற் பயனழிந்தேன் பூரணமே. 34

ஞாநோபதங்கள் தனையறியமாட்டாமல்
வாதனையால்நின்று மயங்கினேன் பூரணமே. 35

குலமொன்றாய்ப்படைத்த குறியையறியாமல்யான்
மலபாண்டத்துள்ளிருந்து மயங்கினேன் பூரணமே.

அண்டபிண்டமெல்லா மணுவுக்கணுவாகநீ
கொண்டவடிவின் குறிப்பறியேன் பூரணமே. 37

சாஸ்திரத்தின்மேலிருக்குஞ் சற்குருவைப்போற்றாம
லகத்திணுடவாணுவத்தா லறிவழிந்தேன் பூரணமே.

ஐந்துபொறியை யடக்கியுனைப்போற்றாமல்
மாந்தருக்கெநெஞ்ச நடுங்கினேன் பூரணமே. 39

என்னைத்திருக்கூத்தா யிப்படியாட்டுவித்தாய்
என்னையறியா துடலழிந்தேன் பூரணமே. 40

நரம்புசதைதோலெலும்பு நாற்றத்துக்குள்ளிருந்த
வரம்பறியமாட்டாமல் மயங்கினேன் பூரணமே. 41

சிலந்தியுடைநூல்போல் சீவசெந்துக்குள்ளிருந்த
நலந்தனைத்தான்பாராமல் நலமழிந்தேன் பூரணமே.

குருவாய்ப்பரமாகிக் குடிலைசத்திநாதவிந்தாய்
அருவாயுருவான தறிகிலேன் பூரணமே. 43

ஒளியாய்க்கதிர்மதியா யுள்ளிருளாயக்கினியாய்
வெளியாகிநின்ற வியனறியேன் பூரணமே. 44

இடையாகிப்பிங்கலையா யெழுந்தசுழிமுனையாய்
உடலுயிராய்நீயிருந்த வுளவறிந்தேன்பூரணமே. 45

மூலவித்தாய்நின்று முளைத்துடல்தோறுமிருந்த
காலவினைவழிக்குங் கணக்கறிந்தேன்பூரணமே. 46

உள்ளும்புறம்புமா யுடலுக்குள்நீயிருந்த
தெள்ளளவுநானறியா திருந்தேனேபூரணமே. 47

தாயாகித்தந்தையாய் தமர்கிளைஞர்சுற்றமெல்லாம்
நீயாகிநின்ற நிலையறிந்தேன்பூரணமே 48

விலங்கும்புள்ளோர் வனவாசம் விண்ணவர்நீர்ச்சாதி
மனுக், குலவகையெழுவகையில்நின்ற குறிப்பறிந்தேன்
பூரணமே. 49

ஆணாகிப்பெண்ணா யலியாகிவேற்றுருவாய்
மாணாகிநின்ற வகையறிந்தேன்பூரணமே. 50

வாலையாய்ப்பக்குவமாய் வளர்ந்துகிழந்தானுகும்
பாலையாய்நின்ற பயனறிந்தேன்பூரணமே. 51

பொய்பாய்ப்புலியாய்ப் புழுவாரிதியாகி
மெய்யாகிநின்ற வியனறிந்தேன்பூரணமே. 52

பூவாய்மணமாகிப் பொன்னாகிமாத்தாகி
நாவாய்ச்சொல்லான நயமறிந்தேன்பூரணமே. 53

முதலாய்நடுவாகி முப்பொருளாய்மூன்றுலகா
யிதமாகிநின்ற வியலறிந்தேன்பூரணமே. 54

ஊனுமுடலுயிரா யுண்ணிறைந்தகண்ணொளியாய்த்
தேனுப்புருசியான திறமறிந்தேன்பூரணமே. 55

வித்தாய்மரமாய் விளைந்தகனியாய்ப்பூவாய்ச்
சித்தாகிநின்ற திறமறிந்தேன்பூரணமே. 56

ஐவகையும்பெற்றுலக வண்டபகிரண்டமெல்லாந்
தெய்வமெனநின்ற திறமறிந்தேன்பூரணமே. 57

மனமாய்க்கனவாகி மாய்கைப்பாயுள்ளிருந்து
நினைவாகிநின்ற நிலையறியேன்பூரணமே. 58

சத்திசிவமாய்த் தான்முழுவிலொன்றாகிச்
சித்திரமாய்நின்ற திறமறியேன்பூரணமே. 59

பொறியாய்ப்புலனாகிப் பூதபேதப்பிரிவாய்
அறிவாகிநின்ற வளவறியேன்பூரணமே. 60

வானிற்கதிர்மதியாய் வளர்ந்துபின்னொன்றானது
போய், ஊனுடலுக்குள் ளிருந்தவுயிர்ப்பறியேன்பூர
ணமே. 61

பொய்யும்புலையுமிகப் பொருந்திவீண்பேசலன்றி
ஐயாஉனைஉரைக்க வறிகிலேன்பூரணமே. 62

நிரந்தரமாயெங்கு நின்றுவிளையாடினதைப்
பரமதுவேயென்னைப் பதமறியேன்பூரணமே. 63

சொல்வாய்பிறப்பிப்பாய் கூடவிருந்தேசுகிப்பாய்
செல்வாய்பிறர்க்குட் செயலறியேன்பூரணமே. 64

வாரிதியாய்வையமெல்லா மன்னுமண்டபிண்டமெல்
லாஞ், சாரதியாய்நின்ற தலமறியேன்பூரணமே. 65

வித்தாய்மரமாய் வெளியாயொளியாய்ச்
சத்தாயிருந்த தரமறியேன்பூரணமே. 66

தத்துவத்தைப்பார்த்துமிகத் தன்னையறிந்தறிவால்
உய்த்துனைத்தான்பாராம லுய்வாரோபூரணமே. 67

ஒன்றாயுயிரா யுடல்தோறுநீயிருந்தும்
என்றுமறியார்களேழைகள்தாம்பூரணமே. 68

நேற்றென்றுநாளையென்று நினைப்புமறப்பாய்படை
த்து, மாற்றமாய்நின்ற வளமறியேன்பூரணமே. 69

மனம்புத்திசித்தி மகிழறிவாங்காரமதாய்
நினைவாந்தலமான நிலையறியேன்பூரணமே. 70

உருப்பேதமின்றி யுயர்ந்தசத்தபேதமதாய்க்
குருப்பேதமாய்வந்த குணமறியேன் பூரணமே. 71

சட்சமயபேதங்கள் தான்வகுத்துப்பின்னுமொரு
உட்சமயமுண்டென் றுரைத்தனையே பூரணமே. 72

முப்பத்திரண்டுருப்பாய முனைந்துபடைத்துள்ளிரு
ந்த, செப்படிவித்தை திறமறியேன்பூரணமே. 73

என்னதான்கற்றாலென் னெப்பொருளும்பெற்றாலென்
உன்னையறியாதோ ருய்வரோ பூரணமே. 74

கற்றறிவோமென்பார் காணார்களுன்பதத்தைப்
பெற்றறியார்தங்களுக்குப் பிறப்பறுமோ பூரணமே.

வானென்பரண்டமென்பார் வாய்ஞானமேபேசித்
தானென்பார்வீணர் தனையறியார்பூரணமே. 76

ஆதியென்பாரந்தமென்பா ரதற்குண்டுவாயிருந்த
சோதியென்பார்நாதத் தொழிலறியார்பூரணமே.

மூச்சென்பாருள்ளமென்பார் மோகமெனுமோட்சமென்பார், பேச்சென்பாருன்னுடைய பேரறியார் பூரணமே. 78

பரமென்பார்பானுவென்பார் பரவொளியாய்நின்ற
வரமென்பாருன்றன் வழியறியார் பூரணமே. 79

எத்தனைபேரோ வெடுத்தெடுத்தா னுரைத்தார்
அத்தனைபேர்க்கொன்றான தறிகிலேன்பூரணமே.

நகாரமகாரமென்பர் நடுவேசிகாரமென்பர்
வகாரயகாரமென்பர் வகையறியார்பூரணமே. 81

மகத்துவமாய்க்காம மயக்கத்துக்குள்ளிருந்து
பகுத்தறியமாட்டாமற் பயனழிந்தேன்பூரணமே.

உண்மைப்பொருளை யுகந்திருந்துபாராமற்
பெண்மயக்கத்தாலே பிறந்திருந்தேன்பூரணமே. 83

வாயாரவாழ்த்தி மகிழ்ந்துனைத்தான்போற்றாமல்
காயமெடுத்து கலங்கினேன்பூரணமே. 84

சந்திரனைமேகமது தான்மறைத்தவாறதுபோற்
புந்தமுறபாணு முனைப் பார்க்கிலேன்பூரணமே 85

செந்தாமரைத்தாளைத் தினந்தினமும்போற்றாமல்
அந்தரமாய்நின்றங் கலைந்தேநான்பூரணமே. 86

நீர்மேற்குமிழிபோல் நிலைபற்றகாயமிதைத்
தாரகமென்றெண்ணி நான்றட்டழிந்தேன்பூரணமே.

நெஞ்சமுருகி நினைத்துனைத்தான்போற்றிநெடு
வஞ்சகத்தைப்போர்க்க வகையறியேன்பூரணமே.88

பாலுக்குளெண்ணெய்போ லெங்குநிறைந்திருந்த
துள்ளமறியா துருகினேன்பூரணமே. 89

மாயாப்பிரபஞ்ச மபக்கத்திலேவிழுந்தே
போயாய்ச்சனன மொழித்திலேன்பூரணமே. 90

பூசையுடன்புவன போகமெனும்பாக்கியத்தால்
ஆசையுற்றேனு மறிவழிந்தேன்பூரணமே. 91

படைத்துமழித்திடுவாய் பார்க்கிற்பிரமாவெழுத்தைத், தொடைத்துச்சிரஞ்சீவியாய்த் துலங்குவிப்பாய்பூரணமே. 92

மந்திரமாய்ச்சாத்திரமாய் மறைநான்காய்நீயிருந்த
தந்திரத்தைநானறியத் தகுமோதான்பூரணமே. 93

அல்லாய்ப்பகலா யனவரதகாலமெனுஞ்
சொல்லாய்ப்பகுத்த தொடர்பறியேன்பூரணமே. 94

நரகஞ்சுவர்க்கமென நண்ணுமிரண்டுண்டாம்
அரகாவெனை தறிகிலேனபூரணமே. 95

பாவபுண்ணியமென்னும் பகுப்பாய்ப்படைத்தழித்தி
லாவலைபுண்டாக்கிவைத்த வருளறியேன்பூரணமே.

சாந்தமென்றுங் கோபமென்றுஞ் சாதிபேதங்களொன்றும், பாந்தமென்றும் புத்தியென்றும் படைத்தனையே பூரணமே. 97

பாசமுடலாய்ப் பசுவதுவுந் தானுயிராய்
நேசமுடனீபொருளாய் நின்றனையேபூரணமே. 98

எதிலடியா ரிரங்கியிகத்தில்வந்துன்
பாதமதில்தாழப் பரிந்தருள்வாய்பூரணமே. 99

நானேநீ நீயேநா னென்றிரண்டுமொன்றானால்
தேனின் ருசியதுபோற் றெவிட்டாய்நீ பூரணமே.

முடிவில்லாருருவெளியத்தை முடித்துநின்றுபாராமல்
அடியில்லாருருவெளியத்தி லலைந்தேனேபூரணமே.

பூரணமாலைதனைப் புத்தியுடனோதினர்க்குத்
தாரணியில்ஞானந் தழைப்பிப்பாய்பூரணமே. 102

பூரணமாலை முற்றிற்று.

உ

சிவமயம்.

சட்டமுனிஞானம்.

பூசைசெய்யுமுறை.

ஞானப்பாபூஜைசெய்ய முறையைக்கேளு
கைமுறையாய்ச்சுவடிவைத்து பூசைசெய்வார்
பூணப்பாசிலபேர்தான் தீபம்வைத்து
புகழாகபூசைசெய்வார் பெண்ணைவைத்தும்
நாளப்பாசக்கரத்தை பூசைசெய்வார்
நம்முடையபூஜையென்ன மேருபோலே
ஓதப்பாநாற்பத்து முக்கோணம்வைத்து
உத்தமனேபூசைசெய்வார் சித்தர்தானே.

தானென்றமேருவைத்தான் பூஜைசெய்வார்
சாபமிட்டாலண்டரண்டம் தீயவேகுந்

தேனென்றமேருவுக்குத் தசதீட்சைவேணுந்
சிறுபிள்ளைபாமொருவர் தீண்டப்போகா
வானென்றமேருவைத்தான் பூஜைசெய்தோர்
வாய்திறந்துஉபதேசஞ் சொன்னாராகிற்
கோனென்றவாதசித்தி கௌனசித்தி
கொள்ளைபிட்டானவன்சீஷன் கூறினேனே. 2

கூடியதோர்வாலைபிட மூன்றெழுத்தைக்கேளு
கூறியறிந்துபூஜைசெய்து பின்புகேளு
மாரியதோர்திரிபுரையி னெட்டெழுத்தைக்கேளு
மைந்தனேநீயிவளை பூஜைபண்ணு
தேறியதோர்புவனைபுட யெழுத்தைக்கேளு
திறமாகபுவனையைநீ பூஜைபண்ணு
ஆறியதோர்யாமளையி னாறெழுத்தைக்கேளு
யவளுடையபதம்போற்றி பூஜைபண்ணே. 3

பண்ணியபின்யாமளையி னைந்தெழுத்தைக்கேளு
பண்பாகதீக்ஷைபறிந்து முடிந்தபின்பு
எண்ணியதோர்வாசியென்ற யோகத்துக்கு
மைந்தனைவைத்துப் பிராணாயாமந்தீரும்
கண்ணியதோரித்தனையு மறிந்திருந்தாற்
காயசித்திவிக்கினங்க ளில்லையில்லை
உண்ணியதோருலகமென்ன சித்தனென்ன
வுத்தமனேவிட்டகுறை யெடுக்குங்காணே. 4

சட்டமுனி ஞானம்-4
முற்றிற்று.

உ

சிவமயம்.

பட்டினத்துச்சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

ஞானம் - ௱.

வெண்பா.

காப்பு.

அன்பானநெஞ்சுக்கே ஞானத்தால்நல்லபுத்தி
வெண்பாவாய்நூறும் விளம்பவே-பண்பாக
ககனம்றுபதமுருவக் ககனமுகடதிர்வறுக
ககனகதிர் வேல்முருகன் காப்பு.

நெஞ்சுடனேதான்புலம்ப னீலனிறத்தாளீன்ற
குஞ்சரத்தையாதரித்துக் கும்பிட்டால்-கஞ்சமுடன்
காமமுதல்மும்மலத்தின் கட்டறுத்துஞானமுடன்
பூமிதனில் வாழ்வாரெப் போதும்.

எப்போ திறைவன் யெழுத்தைவிட்டேத் தப்புவோம்
எப்போயெழுத்தைரெண்டை யேத்துவோம்-எ...
போதான், காமன்வலைபறுப்போம் கதிரொளியைக்
கண்டுநெஞ்சே, எமன்வலைபறுப்பதென்று. 2

என்றும்பயமறவே யீரெழுத்துமோரெழுத்தாய்
நின்றசிவலிங்கத்தை நெஞ்சேகேள்-உண்டுறங்கி
தேசமெல்லாம் நின்றசைந்த நீயெழுத்தே லிங்கங்
காண், ஆசைவிக்கேதநாவெழுத்தே ஆவுடையார். 3

ஆவுடையாளோடிருந்தேன் அருளானந்தம்பிறவே
கோவுடையாள்நின்ற நிலங்கூடியே-பூவுடையாள்
கட்டமுகியைத்தள்ளி கடந்துபெருவெளியில்
இஷ்டமுடன் நெஞ்சேயிரு. 4

இருவினைக்குள்ளாகாதே யென்னுடைமையெண்ணாதே
பெருகிசினங்கொண்டு பினத்தாதே-மருவுமலக்
கள்ளமெல்லாம்விட்டு கரைந்துகரைந்துருகி
உள்ளுணர்ந்துநெஞ்சுபோ ஞொன்றை. 5

ஒன்றுமறியாதே ஓடியலையாதே
கருவியிற்சென்றுமயங்கித் திரியாதே-நின்றலை
பிரியாதேநெடிய நெஞ்சேகொடிய
புலைவினையும்மாத்தும் பொருள். 6

பொருளுடைமைநம்பாதே பொய்வாழ்வைநத்தாதே
யிருளுறைவநம்பி யிருக்காதே-பொருளுறவு
கொண்டறிவினாலே குறித்துவெளியதனைக்
கண்டுபிடித்தேருநெஞ்சே காத்தை. 7

காந்துடனேசேர்ந்து கனலுருவைக்கண்டுவெழி
மாத்தியினிப்பிறக்க வாறதே-யேத்துபடி.

ஓடியலையாதே ஓங்காரத்துள்ளொளியை
நாடிருப்போம்மனமே நாம். 8

நானெனதென்னென்றுவினை யோடியலையாதே
தானவனேயென்று தரிக்காய்நீ-யென்மனமே
வீணுவல்கொள்ளாதே மேலாம்பழம்பொருளை
காணுவல்கொள்ளாய் கருத்து. 9

கருத்துவேறாகாதே கண்டிடத்திலோடாதே
விரித்துப்பலவேடம் மேவாதே-பெருத்ததொரு
சஞ்சலத்தைவிட்டு லமரிந்துகாண்மனமே
அஞ்செழுத்தாலொன்ப தடை. 10

ஒன்பதுவாய்கூட்டை யுறுதியென்றுநம்பாதே
ஐம்புலனேயென் றணுகாதே-இன்பமுடன்
சிற்பறத்தினுள்ளே தெளிந்தபரமானந்தத்
துற்பொருளை மெய்யென்றுணர். 11

மெய்யுணர்ந்துபாராமல் விரிந்தகன்று போகாதே,
அய்யன்திருவிளையாட் டென்றறிநெஞ்சே - செய்ய
தொரு, ஆணெழுத்துப்பெண்ணெழுத்து மணுவாகி
நின்றநடு, காணும்பொருளுரைக்குங் கால். 12

கல்லானநெஞ்சே கவலைக்கருத்தாகி
பொல்லாப்பவக்கடலில் போகாதே-யெல்லாம்
ஜெலக்குமுழியென்றுநினை செம்பொன்னி நம்பலத்
தை,கலக்கமறபார்த்தே கரை. 13

கரைதெரியாயின்பக் காமக்கடலில்மூழ்காதே
வரையடங்தவாழ்வைநத்தி போகாதே-உரைபிறந்த
ஓசைவிந்துவேமனமே உற்சபையாலரிந்து
நேசமுள்ளபரீக்கியத்தி னில். 14

பார்க்கியத்தைக்கண்டு பரிந்துமகிழா.
தாக்குமிடிவந்தால் சலியாதே-நோக்குமே
ஒருவன்றிருவிளையாட் டென்றுணருநெஞ்சே
சருத்தாலேநின்று கருது. 15

கருதாதேமங்கையர்கள் காமவலைக்கேங்கி
உருகாதேநெஞ்சே ஒருவன்-இருகாலை
காத்தயர்ந்துசேர்த்துக் கனலைக்கண்காட்டித் தினகன்
போற்றிபார் ஒத்தனல்லபொன். 16

பொன்னாசைமண்ணாசை பூங்குழலாராசைபெண
சொன்னாசையென்றறிந்து சோராது-யென்னாளும்
யீசனமைத்தபடி யிருக்குங்காணிம்மூன்றும்
பாசமதுநெஞ்சே பரிந்து. 17

பரிந்துதிரியாதே பார்வினைக்கு அஞ்சாதே
அருந்துருசிசிந்தித் தலையாதே-வருந்தி
நடந்துசித்திரநாடியிலே நாதமரிநெஞ்சே
உடைந்திடுமுன்னேயிருந்த உடல். 18

உடம்பழிந்துபின்மனமே ஒன்றுங்கிடையாது
உடம்பழியுமுன்கண் டுணராதே-உடம்பிற்
கருநிறத்தைசேர்ந்து கருமலைச்சிற்றற்றும்
பருகுசித்திரக் கலைமதியும் பால். 19

பாலிருக்குந்தோல்தனத்தைபாராதே மங்கையர்கள்
மாலிடுக்கைநத்திக் கறையாதே-கோல்யெடுத்து
வீரமறலி வருமுன்வினையருக்கு
பார்வழியினருளைப் பார். 20

பார்த்தவிடமெல்லாம் பரமன்றிருமனமே, காற்ற
னல்மண்நீர்வெழியாம் கண்டதெல்லாம்-மாத்திரண்
டைம்புலனுநில்லாது ஆசைகளும் நில்லாது, யென்
புடலும் நில்லாதினி. 21

இனிபசுகஐம்புலனென் றெண்ணாதேநெஞ்சே
இனிபசுக மறவாதே-பினியசுகம்
கண்டதெல்லாமெவ்வுலகு காணாதுஇவ்வுலகில்
நின்றதோ நில்லாததே. 22

நில்லாமல்ஓடுகின்ற நெஞ்சேநிலையில்லா
மெல்லாப்பகையா யிருக்குங்காண்-பொல்லாக்
கருக்குழியிலேபிறந்த கன்மவினையானல்
திருக்கருக்கவேணும் தினம். 23

தி[illegible]தினைப்போதாகிலுந்தான் நீதறநில்லாமல்
யினம்பிரிந்தமான்போல் யிருந்தா-தினந்தினமும்
ஓங்காரத்துள்ளொளியை யுற்றுணர்ந்து நீமனமே
ஆங்கார அச்சமற. 24

அச்சத்தால்ஐம்புலனும் ஆங்காரத்தால்மேய்ந்த
கச்சத்தானிச்சயமாய் கொள்ளாதே-மெச்சத்தான்
அண்டமெல்லாம்ஊடுருவ ஆகாசமுங்கடந்து
நின்றநிலைதான் நிலை. 25

நிலையறிந்துநில்லாமல் நீபாவிநெஞ்சே
அலைமதிபோலேதினமு மானாய்-கலையறிந்து
மாறனைபுங்கூத்தனையும் மார்புரத்தையும்புதைத்த
வீரனையுந்தேடி விரும்பு. 26

விரும்பித்தனித்தனியே மெய்யுணராதேமாய்கை
யிரும்புண்டநீர்போலே வேகும்-கரும்பதனை
தின்றாலல்லோதெரியும் நெட்சேநின்ஐம்புலனை
வென்றாலல்லோ வெளிச்சமாம். 27

வெளிச்சமில்லாவீடே விளக்கேத்தினவீடே, கழி
ச்சிறந்த நின்றதைத்தான் கார்நெஞ்சே-வெளிச்சமற
தொண்ணூத்தார்தத்துவமும் ஒவ்வொன்றாய்த்தோ
ன்றுங்காண், யெண்ணிவிவைகாணாதிருட்டு. 28

இருட்டணைமாய்கையால் யெவ்வுலகுந்தாயை
பொருட்டணையேழுடும் ஐம்புலனுன்-திருட்டுமன
வண்டருடன்கூடாதே வாழ்மனமே நமிருவோர்
கண்டுகொள்வோம் காணாததை. 29

காணாததைக்கண்டாய் கண்டதெல்லாங்காணாது
வீணாவல்கொண்டு அக மெலியாதே-ஞணாதே
இந்திரியத்தோடு பிணங்காதே பாவிநெஞ்சே
செஞ்சொல்மறை அக்கறத்தை தேடு. 30

தேடினாலைந்து திருக்கரத்தைச் சென்றுவழி
நாடினால்நெஞ்சே நலப்பெறலாம்-வாடியே
பொல்லாப்புவிகாண் போகமதை நம்பாதே
யெல்லாம் வெயிலில் மஞ்சளே. 31

மஞ்சளையகூந்தல் மடவாரை கண்டுருகும்
பஞ்சமலநெஞ்சே பகரக்கேள்-மஞ்சள்
மயங்காணும் இந்தவுடல் மாயவாழ்வெல்லாம்
அயன்காணழித்த சூஸ்திரம். 32

சூத்திரத்தாலாடும் சுழிமுளையைத் தான்திறந்து
பார்த்திருந்தால் வாராது பாவமெல்லாம்-சூஸ்திரத்
தை, பாருமலேயிருந்து பாவிமனமேபிறக்க
வாருமலேயிருக்க வா. 33

வாசிதனைப்பிடித்து வன்கனலோடேசேர்த்து
சீசீயெனவே திரியாமல்-மாசி
இருளானதைச்சேர்ந்து இருந்தாயேநெஞ்சே
பொருளானதைமறந்து போடு. 34

போட்டுவிக்கும்பொல்லா புழுச்சொரியுநாய்விடக்கே
கூட்டங்குலைந்து குலைந்திடுமுன் காட்டித்

தாழ்வுவானாய்நெஞ்சே தராதரமாயெங்கும்
முறவானவத முயிர்போம்முன். 35

முன்னயனெழுத்தும் மூன்றுவினைகண்டுழன்று
பின்னுந்தெரியலையோ பேய்மனமே-தன்னை
அரியாமலேயிருந்தால் அவனரிவானோமனமே
குரியானபுத்தியென்ற கொள். 36

கொள்ளைக்கக்கப்பட்டுக் குடிகேடரோடிருந்து
கள்ளக்கருத்தால் கருதாதே-மெள்ளமெள்ள
ஆய்ந்தாய்ந்துபார்த்துநீ ஆறாறுக்கப்பாலே
தேர்ந்தாய்ந்துபார்த்து தெளி. 37

தெளிந்தநீர்பட்டமிர்தம் சேர்ந்தால்தெளியாதா
தெளிந்தநீர்காட்டா தவைபோல்-தெளிந்தால்
சகலபொருள்தோற்றும் தாழ்வுவறானுமென்றும்
பகலிரவில்லாத பதி. 38

பதிபசுபாசங்களையும் பற்றகிலேலஊடுருவப்
பதிதனிலேதங்கிப் பவமருந்து-கதிபெறவே
வீணாமோநெஞ்சேகேள் வேதாந்தத்துட்பொருளை
காணாமலாபோ கணக்கு. 39

கணக்கரியாமாயக் கருவிகரணாதிப்
பிணக்கரியாமற்பேதை நெஞ்சே-யிணக்கம்
மரிந்திணங்கவேணும் மருள்வெளியினுள்ளே
செரிந்தவிந்துநாதத்தைச் சேரு. 40

சேராதேமாய்கைதனை சேர்ந்துகருக்குழியை
பாராதேநெஞ்சே பதையாதே-சீரான
சித்திரத்தைப்பார்த்து தினமனமேசித்திரத்தில்
சத்திரத்தைக்கொள்ளா யுகந்து. 41

உகந்துகந்துநெஞ்சமே ஓரெழுத்தினாலே
அகந்தனையேசுத்திபண்ணி யாய்ந்து-முகந்து
குடியாமலாமோ குலவுமலமான
மிடியானதுதீர வேண்டி. 42

வேண்டுந்திரவியமும் மேலுயர்ந்து பள்ளியெல்லாம்
ஆண்டதிரைநாடு மம்பலமும்-மாண்டுபெருங்
காடுயர்ந்தாரேமனமே கண்டாயோமாயநமன்
தேடரியயீசன் செயல். 43

செயமாகாநெஞ்சே திருட்டுமலக்கோட்டை
பயமறவேவெட்டிப் பரப்பி-நயமான
வாசியினால்சுட்டொடுக்கி மதிமபங்கக்கண்டருப்போ
ம், பேசியனும் பேசாமலே. 44

பேசாதஞானப் பெருமைக்கிடப்பதுதான்
ஆசாபாசங்களில்லா தார்க்கல்லோ-கூசாமல்
தேசகமெல்லாம்ஓடித் திரியுருயேமனமே
ஆசாபாசங்களும் நீயாய். 45

பாசங்களைந்து பதியிலிருந்துக்கொண்டு
பேசரியகாலைப் பிடித்திருக்க-நேசமுடன்
நாமிருவருங்கூடி நாதாந்தஞானத்தை
தாமொருவனாயிருக்கத் தங்கு. 46

தங்குநெடுவேளையல் சகலங்களுங்கடந்து
யெங்குமொன்றா யிருக்காமல்-மங்கு
கருவானாய்நெஞ்சே கரிக்காயதூதன்
வருவானேயென்ன வகை. 47

என்னவகைசெய்தோம் யெமதூதர்வந்தாக்கால்
பின்னையென்னவிட்டானே பேய்நெஞ்சே-சொன்ன
படியேகேள்தூதர்களும் பரிந்துவருமுன்னே
யடிதேடிக்கொண்டே யமர். 48

அமரும்மனம்புத்தி யாங்காரமொடுசித்தம்
அமரும்பொழுது வேறானோர்-அமரும்
கோவென்றுரைத்தநமன் கொண்டுபோம்போதறிவு
வாவென்றால்நெஞ்சே வராது. 49

வாராதுநெஞ்சே மயக்கம்வருமுன்னே
வேறொன்றைப்பிடித்து மேலேறி-பாராமல்
பொய்யிலேநில்லாதே புத்திகெடாதேயிருந்தால்
மெய்யிலேநின்றறிவோ மெய். 50

மெய்யாறுவீடுகளாய் மேலாம்பனடவீடாய்
ஐயாறுமாறும் மறுபத்தாய்-மெய்யாகா
கண்டதெல்லாம்நான்காண் காணாதனைத்தேடி
கண்டுருகிநெஞ்சே கனி. 51

கனியருந்தமாட்டாமல் காயருந்துறாய்மனமே
கனிருசிபோலாகுமோ காய்தான்-யினியதுகேள்
நானும்நீயும்கனிகாண் நடுவிருந்தேருசிகாண்
தேனும்பாலும்போல சிவன். 52

சிவதவங்களைத்தேடி சீயெழுத்தையூடறுத்து
சிவதவங்களைத்தேடி சேறாமல்-அபதபங்கள்
பண்ணாதேநெஞ்சேகேள் பாவவினைவந்தாக்கால்
யெண்ணாதே அஞ்சாதே யேங்கு. 53

யேங்காதே நெஞ்சேகேள் யெவ்வினைகள் வந்தாலும்
யேங்காதேசத்தும் விளையாதே-தங்காமல்
கொண்டவனும்செத்தவனும் கூட்டத்தானும்வந்தா
னின்றுகுறித்துண்மையிதென் றெண். 54

யெண்ணரியநெஞ்சே யினியபால்தன்னை
அன்னந்தண்ணீர்நீக்கி யுண்ணும்-தன்மைபோல்
துன்பங்களைந்து தூயவெளியூடுருவா
யின்பங்களைச்சேர்ந் திரு. 55

சேர்ந்திருவோரும்பாலும் தேனும்போலேகலந்து
வாய்ந்தநிலையுள்ளுரிசை யாகாமல்-போங்காமல்
தத்திவரக்காலன் வருவானேவந்தாக்கால்
யேத்தப்படுவாநெஞ்சே யெவன். 56

எவனிருந்துநெஞ்சே யெதுப்பாருமுண்டோ
கவனமறநின்று கருதாதல்லால்-புவனமெல்லாம்
வித்துயிரெலாங்கழுண்டு விண்ணுடைந்துதேமனமே
மற்றுடலையுண்குதே மண். 57

மண்ணெழுந்தும் நீரெழுந்தும் வாய்வெழுந்துந்
தீயெழுந்தும், விண்ணெழுந்துங்கூடி ஒரு வீடாகி
நின்னரிய, மாயமெல்லாமுண்டாக்கி வைத்தான்கா
ண் நெஞ்சே, யிக்காயமெல்லாம் நானுனல் கருது. 58

கருவழித்தால்வித்தையில்லாக் காரணம்போல்நெஞ்
சே, கருவழிந்ததெல்லாம் கண்டதெல்லாம்-கருதி
திரியாதேநெஞ்சே சிவன்செயலேயல்லால்
மதியாரியில்லாக்கால் வந்து. 59

வந்துதவும்நாதாந்த வாகனைக்கண்டேவணங்கித்
தந்திரமாய்ச்சென்று தரியாமல்-அந்தரத்தில்
விட்டபட்டம்போலலைந்து வெவ்வினையினால் மனமே
தட்டுகெட்டுப்போகாதே காண். 60

தானந்தவமுயற்சி தாடாண்மையோடுநெஞ்சே
வானம்பிறந்து வழிகூடி-நானுமதில்
நீயுமொருகிழவில் நின்றங்கிளைப்பாரி
தோயுமதிதானே துடங்கு. 61

துடங்குவினையறுத்து சத்தமெல்லாங்கழித்து
அடங்குமிடத்தில் அடங்காமல்-கிடந்து
பறந்தெடுத்தகுஞ்சதுபோல் பதைக்கிறயேமனமே
அறுஞ்சுரப்புமாயிதன் னடியில். 62

மதனசரத்தால்மனமே வையகமெல்லாமயங்கி
விதனத்துறக்கமாங்குலவல்லால் வேறில்லைமதனுமே
சத்துச்சுகத்தைநத்தி தானலையவேண்டாங்காண்
மெத்தசுகத்தை வெறுத்து. 63

வெருத்துவெருத்துகொண்டபோல் வீணிலே நெஞ்சே, பொரித்தமக்கினைப்போல் போகாதே-குரித்தடுத்து, தேடியவாசிதனை சேர்ந்துலகளந்த பொருள், கூடினாலாமோ குணம். 64

குணங்கள்பலவிதமாய் கொள்ளாதேநெஞ்சே
வணங்குங்குணமாக வந்து இணங்கியே
மண்டலமேலாக்கடந்து மகாவீட்டைத்திறந்து
கண்டெடுத்துக்கொள்ளவோ கனம். 65

கனதனத்துமாதர் கைக்கர்தல்கொண்டாப்போல்
வினையருப்பாநகைக்கு வேண்டாமோ தினமனமே
சோதித்தானல்லாமல் சுபகாரியமாக
போதித்தாள்கொள்விலையோ புத்தி. 66

புத்திதரும் வித்தைதரும் பொல்லாப் பில்லாமல் நெஞ்சே, சித்திமுத்தி பேரின்பம் சேர்ந்திடலாம்- நித்தநித்தம், தானந்தமானதொரு சற்குருவோடே பழகி, ஆனந்தமுண்டிருக்க லாம். 67

கால்வழிசென்று கருப்பசுகக்குழிக்கிக்கீழ்
மூலமுற்றநல்வழியே மூழ்கினறி-மாலை
இருட்டறுத்துப்போடாமல் பென்பாவிநெஞ்சே
திருட்டுவித்தைசெய்கிறாய் சென்று. 68

சென்றுசிவனடியில் சேர்ந்தபெரும்பாம்பு
ஒன்றுமிகவாசியைத் தான் ஒட்டாமல்-நன்றாம்
நிலையாகநில்லாமல் நீயலைகிறாய்மனமே
அலைவாயினில்துரும்பு மாய். 69

தாய்தந்தைபெண்டுபிள்ளை தானென்றிரக்கிநித்தம்
காய்பறிக்கிறாயே கனியிருக்க-தாய்தந்தை
யெத்தனைபேர்பெத்தாரோ யேன்மனமேநாமுந்தன்
யெத்தனைபேரை பெற்றோம் யிங்கு. 70

இங்கும் அங்குமாய்மனமே யீடழியவேண்டாங்காண்
அங்கம்பொருளாய் அறிந்துகொண்டு-எங்குமெங்கும்
நாமேசிவமாக நாடினுல்ஞானமொழி
தாமேஅருளைத் தரும். 71

அருளில்லாதார்க்கு அருளறிவுதங்குமோ
அருளறிவுதானல்லோ ஆனந்தம்-அருளறிவு
தேடுவதுங்கூடுவதும் சிந்தையானந்தமுடன்
ஆடுவதும்தானறிவி ஞல். 72

நாலெழுத்து ஆறு நடுவெழுத்துயிரைந்து
ஓடினுல்மூன்றி னெடுபதினுலாகுமே-ஓதாய்நீ
ஓரெழுத்தைகண்டுறங்கி உன்னேடுறங்கிநெஞ்சே
ஓரெழுத்திலேசென் றுறை. 73

உறைகளத்தினுப்போலே உள்ளமலங்களெல்லாம்
அரைத்துடைந்துநெஞ்சே யருதியிலே-நித்தி
புளியம்பழத்தோடு போலிருக்கவேணும்
உடலழியுங்காலங்க ளுக்கே. 74

காலங்கழிந்திடுமுன் கடைவாயில்பாலுறுமுன்
வேலங்கனியனைய விழிமடவார்-மேல
குழியில்வைத்துமாறடித்து கூப்பிடுமுன்மாய்கை
களையெடுத்துப்போடுமுன் கண்ணுல். 75

கண்ணுலேஞானம் கருதாமல்நெஞ்சேநீ [கேள்
எண்ணுதமாய்கையெல்லா மெண்ணுகிருய்-நன்னுய்
பார்க்கவேணுந்தனையும் பத்தரைமாற்றுத்தங்கம்
ஆக்காமல்போகாதே உன்னுல். 76

ஒண்ணுவேநெஞ்சமே ஊழ்வினைவந்தாலும்
என்னுளும்பாம்பின்வாய் தேரைப்போல்-முன்னு
அகப்பட்டுப்போகாதே ஆனந்தமெய்விளக்கு [லே
நம்பித்துணைக்குமுற்றும் நம்பு. 77

நம்பினுன் றன்னை நடுவணையிலேயிருந்து
கும்பிடாதார்க்குங் குறையுண்டோ-நம்பி

பளிங்கொளிபோல்நெஞ்சே பார்த்திடலாமேயெங்கும்
மெழுகனலோடே சேருமே. 78

ஏமன்வருமுன்நெஞ்சே யிருவினையுமேறென்றும்
காமநடுவதனில் கார்ந்ததிலேதங்க-மனமுடனே
காலனையும்வென்றுசில காமனையும்வென்றுபின்பு
பாலிருக்கலாமதுநாம் பார். 79

பாரயனும்மாலும் பரமசிவருத்திரனும்
காரணையவாரணத்தை தான்கண்டு-சீரான
நக்குத்திடைநடுவே நற்கனகப்பொற்பதியில்
சொற்கனகத்தற்பதியில் தோன்றும். 80

தோன்றுமேயெல்லாச் சுகமுற்றதில்மனமே
தோன்றுமே ஆனந்தச் சுந்தரிபின்-தோன்றுமே
அக்ஷரச்சுருக்கினோடு அக்கரப்பெருக்கமுடன்
உச்சரித்துரைக்கிதென்ற உண்மை. 81

உண்மையிதுகாண்மனமே ஒளியிருந்தவீடதுகாண்
உண்மைசிவனிருக்கும் ஊறுகாண்-உண்மை
கருமைதங்கிஒளியெழுந்துகனத்ததந்தியுள்பதங்கள்
மருவுதங்கியினியுகந்த வாறு. 82

வருந்தும்பொழுதுகாண் மாயையாய்நெஞ்சே
வருந்தும்குணமாகவந்து-வருந்தும்
யிருவினைதுடக்கறுத்து யெழுவகைபிறப்பறுக்கும்
கருமலத்திறுக்கறுங் காண். 83

காண்மனமேசத்திசிவம் ஒன்றுககாரணத்தை
காண்மனமேமாலயனுங் காணரிதை-காண்மனமே
செம்பொன்னம்பலத் துள்ளோர்செழுஞ்சொலென்
று, மன்றிலொன்றும் அம்பலத்தில் ஆடும்நடனம்.

நடனமதுபார்மனமே நயனத்திடைநடுவே
நடனமதுநாலாம் பதங்காணும்-நடனம்
பதிமதிவித்தாய்மனமே பலகெதிவித்தாயெனவே
அதிவிதசித்தாந்த மாடும். 85

ஆடும்பதிமனமே அம்பலத்தைசுட்டுநடம்
ஆடும்பரமகுரு ஆனந்தம்-ஆடுகின்ற
கூற்றதனைகூற்றிற்று சுத்தபித்தனைத்தசுத்தா
சித்தநித்தனைச் சித்தத்திலுத்துநில். 86

நில்லுநிலவறமாய் நேசமுடனேபதியில்
நில்லுபிறவியற நீநெஞ்சே-நில்லு
கனல்மதியும்தருமிடறும் கதிரெழுந்துங்கலைமதியும்
புனலொடுசெஞ்சடைமுடியும் போற்றி. 87

போற்றித்தினமனமே பொல்லாக்குலங்கள்விட்டுக்
காத்துங்கனலும் கருத்துஒன்றாய்-பார்த்தறிவால
சுத்தமலபித்தையத்து சுற்றஒழிசுற்றிலுத்து
கற்றமறித்துத்ததிலே தங்கு. 88

தங்குநீசென்று சதாசிவத்திலேமனமே
மங்குக் கறுக்குழிகள்-வாதங்குல்
கருவும்புனலும் கதியும்கெதியும்
விதியும் திறுத்தான் வெளி. 89

வெளியில்வெளியாகி விண்ணவன்றாறுய்மனமே
வெளியிளொளி யாயிருக்க-வெளியிரவு
கரியுரித்துப்போற்றவனை கதிர்மதியைச்சென்றனை
கருவறுத்துப்பார்த்தாலே காண். 90

காணுமனமே கரிகாலனைவதைத்துக்
காணுமுலகமெல்லாம் காணுருவாய்-தானுவாய்
மனவிரகமானபுலி மன்றுளன்றுநடனமிடும்
கனகரத்தின செயலுற்ற பாதம். 91

பாதத்தானஞ்செழுத்தான் பரமபதத்தான்சிங்க
நாதத்தானென்றுநெஞ்சே நன்றாக-போதத்தான்
ஆரணந்தானேனடைந்து யண்டமெல்லாம்சுட்டதிரு
நீரணிந்துகொண்டிருப்போம் நித்தம். 92

நித்தனுய்நிர்மலனுப் நின்றுலகம்மூன்றுக்கும்
கர்த்தனுய்அஞ்செழுத்தின் காரணமாய்பெற்ற

குருவினிருபதமுனது குளிருமனமுருகிநினை
தருமனதுபற்றமனமே தான். 93

தானவனே ஆகாட்டால்சண்டாளன் இழுத்தடிப்
பான், தானவனுமங்கேதரிக்கொட்டான்-மான்மனை
யார், கலங்கும்கல்வியிலேகருதித்தான்கொடுப்பான்
முதல்நினைக்கும்படிதேரு நெஞ்சே. 94

நெஞ்சேயுனக்கு நிலவரமாய் சொன்னதெல்லாம்,
நெஞ்சேயென்சொல் லென்றும்நிகழாதே - நெஞ்சே,
கருத்திச்சைபிச்சைதள்ளி கருத்தொன்றுசெப் பித்
தாய், கருத்தக்கோசலத்தள்ளி கருத்துள். 95

உள்ளிருந்துநெஞ்சே உலாவுஞ்சிவகுருவை
வெள்ளெருக்கன்பூச்சூடும் மேனியனை-உள்ளே
மனமுருகப்பார்த்தான் மலைசிலையாய்ச்சென்றானை
உனதறிவால்பார்த்து ஓது. 96

ஓதுநீநெஞ்சேகேள் ஓரெழுத்துமந்திரத்தால்
ஆதியாய்எங்கும் அமர்ந்தானை-ஓதினுள்
கடியகொடுமிடியகலும் கடியகொடுமணியகலும்
கடியவிட்டணுகாமல் காற்கும். 97

காற்குந்தினமனமே கடியப்பிறப்பறுத்து
கார்க்கும்பலபிணிநோய் காட்டாமல்-நோக்கும்
யன்றுமிதைபகல்வெளியில் வளருதமதனை
யுந்தியிலுணரதி வாழ். 98

வாழுநீநெஞ்சே மயங்கித்திரியாதே
யேரெழுத்துக்கப்பா லிருப்பானை-யேழை
வருத்தநதிர்த்தனன்பன் மனசந்தில்தங்கி
பரித்தூரத்தினக்கரணத்தே பணி. 99

பணிந்துதுதிமனமே பல்லுயிர்கட்கெல்லாம்
அணுவிலணுவாக யிருந்தானை-துணிவாய்
பிறவாதிருக்கவும் பேரின்பவாழ்முதலை
திறமாகநம்புநெஞ்சே செலுத்து. 100

பட்டினத்தார் ஞானம்-100 முற்றிற்று.

உ

சிவமயம்.

பட்டினத்தடிகளின் சீடராகிய

பத்திரகிரியார் சரித்திர நுட்பம்.

இல்லரத்தவர்கள் சொல்லுதற்கரிய வல்லவராகிய துல்லிய மனதுடைய பட்டணத்து சுவாமிகள் தன்வீடுநாடுமுதலியவற்றை யகன்று சகலதேசமுந் திரிந்து ஐயமேற்பதில்லையென்றுறுதிக்கொண்டு பத்திரகிரிமகாராஜன் ஊர்ப்புரத்திலுள்ள கணபதியாலையமடைந்து ஞான நிஷ்டை கூடியிருக்குஞ் சமையம் கள்வர் சிலர் கூட்டமிட்டு பத்திரகிரி யரசன்மனையிற் புகுந்துவெகுபொருள்களைக் கவர்ந்து போகுங்கால் வழியிலுள்ள கணபதிக்கொன்றுபரிசளிக்க நினைத்து ஓர் இரத்தின ஆரத்தை வீசாட்டி ஏகுங்கால் அவ்வாபரணம்பட்டினத்தடிகள்கண்டத்திலமைய உதையத்தில் அரண்மனைக்காவலர்கண்டுஇவருங் கள்வரை சேர்ந்தவரென்று வற்புறுத்தி அரசன் முன்னிலைவிடுக்க அவர்வினாக்கட்கெல்லாம் சிவசிவவென் றிறைஞ்சிய அடிகளைக்கண்ணுற்ற வரசன்சற்றுமயங்கி அமைச்சன்மனம்படி ஆக்கினை தருகவென்றிசைக்க கழுவேற்ற நியமித்தனர், பட்டினத்தடிகள் காவலரால் கழுமரத்தையடைந்து சற்றும்சலிப்பறுது புன்னகைக்கொண்டு (என்செயலாவதியாதொன்றுமில்லையினித் தெய்வமே)என்னுஞ்செய்யுளைப்பாடகழுமரம்கொழுந்து விட்டெரியக்கண்ட காவலர் அரசனுக்கறிவிக்க திடுக்கிட்டு பாதசாரியாயோடிவந்து பட்டிணத்தடிகள்பாதத்தில்விழ மன்னன்மன பக்குவமறிந்து கண்ணோக்கபத்திரகிரியாசன், இராஜகோலநீக்கி உடன்தொடர நீ திருவிடைமருதூருக்குச்செல் லெனவாக்களித்து மீண்டும்சிவஸ்தலங்கள் திரிந்து திருவிடைமருதூரையடைந்து கீழ்கோபுரவாயலில் வீற்றிருக்க பத்திர கிரியாசனும பலஸ்தலங்களுந் திரிந்து திரு

விடைமருதூரையடைந்து குருவைக்கண்டு வணங்கி அவர்சொற்படி மேலைக்கோபுரவாயிலிலிருந்து பிச்சையேற்றுவந்து குருநிவேதனஞ்செய்து மீதிசேடத்தையுண்டு யோகமெய்திலிருந்தனர். இவ்வாறிருக்கபத்திரகிரியாரிடம் ஒருபெட்டை நாய்க்குட்டிவந்துவாலைகுழைத்து தன்பசிநோயைக் குறிப்பித்து நிற்க அதனை யறிந்து தமதுசேடப் பிரசாதமளிக்க பசியாறி அவருடன் கூடவேயிருக்க இதைச் சிவபெருமானறிந்து பட்டினத்தாரிடஞ்சென்று அதிகபசியுள்ளவர்போல் அபிநயிக்க பட்டினத்தடிகள் யான்கோவணந் தாங்குவதே பாரமாக வுடையேன் மேற்குகோபுரவாயலி லிருக்கின்றான் சமுசாரிஅவனண்டையேகினால் பசியாற்றுவானென இதைச் செவியுற்ற ஈசன்மேற்கு கோபுரவாயலி லிருக்கின்றபத்திர கிரியாரை யடுத்துகீழ்திசை வாயிலிலிருக்கும் பட்டினத்தடிகள் புகன்றதையுரைக்க பத்திரகிரியார் இவ்வோடும் நாய்க்குட்டியுமோ என்னைச் சமுசாரியாக்கின என்றும் பாத்திரத்தை எடுத்தெறிய அப்பாத்திரம் நாய் சிரசின்பேரிற்பட்டு மரித்தது உடனேசிவபெருமான் மறைந்தருளபின்பு பத்திரகிரியார் திருப்புலம்பல் முதலிய பலதமிழ்க்கண்ணிகளை மியற்றியும் சிவயோக மெய்தியுமிருக்க மரித்தநாய் காசிராஜனுக்கு காசிராஜன் மகளாய் பிறந்துவளர்ந்து பக்குவமடைந்ததை அரசனறிந்து புரோகிதரையழைத்து என்புத்திரிக்குத்தக்கபுருடனை நியமிக்கவேண்டுமென அதைக்கேள்வியுற்ற பெண்திடுக்கிட்டு பிதாவைநோக்கியானொருவனுக் குரியவளல்ல திருவிடைமருதூரில் மேலைக்கோபுர வாயலில் வீற்றிருக்கும் எனதுகுருநாதரிடம் ஒப்புவிப்பீரென அரசன் அதிசயித்துஉண்மையைவிசாரித்தறிந்து புத்திரியை பத்திரகிரியார்முன் கொண்டுவந்துவிட அவர் நிஷ்டையிலிருந்துவிழித்து நோக்க அப்பெண் அடிநாய் மீண்டுந்திருவடியைநாடி வந்ததுயெனயாவுமறிந்த ஞானியரெழுந்து அப்பெ

ண்ணின்கரத்தைப்பற்றிச் சென்று•குருவாகியபட்டி னத்தடிகளிடம்விட்டு நம்மிச்சிட்டமுண்ட நாய்க்கு மிப்பிறவிநோய் வரலாமோவென பட்டினத்தடிகள் அவன்செயலன்றி யாவதொன்றில்லை) யென விருவரு ளைநாடினர் அப்போது ஒருபெருஞ்சோதிதோன்றி அதில் அப்பெண்ணுடன் பத்திர கிரியார் மறையச் சோதியும் மறைந்தது.

உ

சிவமயம்.

பத்திரகிரியார் அருளிசெய்த

மெய்ஞ்ஞானப்புலம்பல்.

முத்திதரும்வேத மொழிந்தபுலம்பல்சொல்ல
அத்திமுகவன்றன் அருள்பெறுவதெக்காலம். 1

ஆங்காரமும்மடக்கி ஐம்புலனைச்சுட்டறுத்துத்
தூங்காமற்றூங்கிச் சுகம்பெறுவதெக்காலம். 2

நீங்காச்சிவயோக நித்திரைகொண்டேயிருந்து
தேங்காக்கருணைவெள்ளந் தேக்குவதுமெக்காலம். 3

தேங்காக்கருணைவெள்ளந் தேக்கியிருந்துண்பதற்கு
வாங்காமல்விட்டகுறை வந்தடுப்பதெக்காலம். 4

ஓயாக்கவலையினு லுள்ளடைந்துவாடாமல்
மாயாப்பிறவி மயக்கறுப்பதெக்காலம். 5

மாயாப்பிறவி மயக்கத்தையூடறுத்துக்
காயாபுரிக்கோட்டை கைக்கொள்வதெக்காலம். 6

காயாபுரிக்கோட்டை கைவசமாய்க்கொள்வதற்கு
மாயாவனுபூதி வந்தடுப்பதெக்காலம். 7

சேயாய்சமைந்து செவிடூமைபோற்றிரிந்து
பேய்போலிருந்துன் பிரமைகொள்வதெக்காலம். 8

பேய்போற்றிரிந்தும் பிணம்போற்கிடந்துபெண்ணை
தாய்போனினைத்துத் தவமுடிப்பதெக்காலம். 9

கால்காட்டிக்கைகாட்டிக் கண்களமுகங்காட்டி
மால்காட்டுமங்கையரை மறந்திருப்பதெக்காலம். 10

பெண்ணினல்லாராசைப் பிரமைதனைவிட்டொழிந்து
கண்ணிரண்டுமூடிக் கலந்திருப்பதெக்காலம். 11

வெட்டுண்டபுண்போல் விரிந்தவல்குல்தனிலே
தட்டுண்டுநிற்கை தவிர்வதுவுமெக்காலம். 12

ஆறுதபுண்ணி லழுந்திக்கிடவாமல்
தேறுதசிந்தைதனைத் தேத்துவதுமெக்காலம். 13

தந்தைதாய்மக்கள் சகோதரரும்பொய்யெனவே
சிந்தைதனிற்கண்டு திறக்கறுப்பதெக்காலம். 14

மன்னுயிரைக்கொன்று வதைத்துண்டுழலாமல்
தன்னுயிர்போலெண்ணித் தவமுடிப்பதெக்காலம்.

பாவியென்றேபேர்படைத்துப் பாழ்நரகில்வீழாமல்
ஆவிநின் றசூத்திரத்தை யறிவதினியெக்காலம். 16

உளியிட்டகல்லு முருப்பிடித்தசெஞ்சாந்தும்
புளியிட்ட செம்புபோற் பொருளாவதெக்காலம். 17

வேடிக்கை யுஞ்சொகுசு மெய்ப்பகட்டும்பொய்ப்பகட்
டும், வாடிக் கையெல்லா மறந்திருப்பதெக்காலம். 18

பட்டுடை யுமொப்பனையும் பாவனையுந்தீவினையும்
விட்டுவிட்டுன்பாதம் விரும்புவதுமெக்காலம். 19

ஆமைவருமாட்கண் டைந்தடக்கஞ்செய்தாற்போல்
ஊமையுருக்கொண் டொடுங்குவதுமெக்காலம். 20

தண்டிகையுஞ்சாவடியுஞ் சாளிகையுமாளிகையுங்
கண்டுகளிக்குங் கருத்தொழிவதெக்காலம். 21

அத்தனிருப்பிடத்தை ஆராய்ந்துபார்த்துநிதஞ்
செத்தசவம்போற் றிரிவதினியெக்காலம். 22

ஒழிந்தகருமைத்தினைவைத் துள்ளொளும்புவெள்ளொ
ளும்பாய், கழிந்தபிணம்போலிருந்து, காண்பதினி
யெக்காலம். 23

அற்பசுகமறந்தே யறிவையறிவாலறிந்து
கெர்ப்பத்தில்வீழ்ந்துகொண்டுகோளறுப்பதெக்காலம்.

கருப்படுத்தியென்னையான் கைப்பிடித்துக்கொள்ளாமு
ன், உருப்படுத்திவாள உட்படுவதெக்காலம். 25

தூண்டுவிளக்கனைய தொடர்ந்திருள்முன் சூழ்ந்தாற்
போல், மாண்டுபிழைத்துவந்த வகைதெரிவதெக்கா
லம். 26

தூரியினின்மீன்போற் சுழன்றுமனம்வாடாமல்
ஆரியனைத்தேடி யடிபணிவதெக்காலம். 27

எண்ணூறுகமிருந்து எய்தாதவீடுபெற
வெண்ணீறுபூசி விளங்குவதுமெக்காலம். 28

அவவேடம்பூண்டிங் கலைந்துதிரியாமற்
சிவவேடம்பூண்டு சிறந்திருப்பதெக்காலம். 29

அண்டருக்காநஞ்சருந்தி அம்பலத்திலாடுசிவன்,தொ
ண்டருக்குத்தொண்டனென தொண்டுசெய்வ தெக்
காலம். 30

பன்றிவடிவெடுத்துப் பாரிடந்துமால்காணாக்
குன்றில்விளக்கொளியை கூறுவதுமெக்காலம். 31

இத்திக்குள்தெள்ளமிர்தைசித்தாந்தத்துட்பொருளை
முத்திக்குவித்தை முதனினைப்பதெக்காலம். 32

வேதாந்தவேதமெல்லாம் விட்டொழிந்தேநிஷ்டையி
லே, ஏகாந்தமாக யிருப்பதினியெக்காலம். 33

மற்றிடத்தைத்தேடியென்றன் வாழ்நாளைப்போக்கா
மல், உற்றிடத்தைத்தேடி யுறங்குவதுமெக்காலம்.

இன்றுளோர்நாளை யிருப்பதுவும்பொய்யெனவே
மன்றுளோர்சொல்லும் வகையறிவதெக்காலம். 35

கஞ்சாவபினியுடன் கள்ளுண்டுவாடாமற்
பஞ்சாவமிர்தம் பருகுவதுமெக்காலம். 36

செஞ்சலத்திணுற்றிரண்ட செனனமோக்ஷம்பெறவே
சஞ்சலத்தைவிட்டுன் சரணடைவதெக்காலம். 37

கும்பிக்கிரைதேடிக் கொடுப்பாரிடந்தோறும்
நம்பித்திரிகை தடுப்பதினியெக்காலம். 38

ஆடுகின்றருத்திரந்தா னறுமளவுமேதிரிந்து
போடுகின்றநாள்வருமுன் போற்றுவதுமெக்காலம்.

நவரூத்திரம்போட்டு நானலேலீயென்றிருந்த
சிவரூத்திரத்தைத் தெறிந்தறிவதெக்காலம். 49.

மறந்துமலசலங்கள் மாயும்புழுக்கூட்டைவிட்டுக்
கரந்துனடியிணைக் கலந்துநிற்பதெக்காலம். 41

இம்மைதனிற்பாதகனுபிருவினைக்கீடாயெடுத்தபொ
ய்மைதனிற்போட்டுன்னைப்போற்றிநிற்பதெக்காலம்.

உப்பிட்டபாண்ட முடைந்துகருக்கொள்ளுமுன்
னே, அப்பிட்டவேணிபனுக் காள்படுவதெக்காலம்.

சேவைபுரிந்து சிவரூபகாட்சிகண்டு
பாவைதனைக்கழித்துப் பரமடைவதெக்காலம். 44

காண்டத்தைவாங்கிக் கருமேகமீண்டதுபோல்
பாண்டத்தைநீக்கிப் பரமடைவதெக்காலம். 45

சோற்றுத்துருத்திதனைச் சுமந்தலைந்துவாடாமல்
ஊத்தைச்சடம்போட் டுனையடைவதெக்காலம். 46

தோட்க்கைச்சதமெனவே சுமந்தலைந்துவாடாமல்
உடக்கைசுழற்றி உனையுறுவதெக்காலம். 47

ஆசைவலைப்பாசத் தகப்பட்டுமாயாமல்
ஓசைமணிதீபத்தி லொன்றிநிற்பதெக்காலம். 48

கூறரியநால்வேதங் கூப்பிட்டுங்காணாத
பாராரகசியத்தைப் பார்த்திருப்பதெக்காலம். 49

புல்லாய்விலங்காய்ப் புழுவாய்நரவடிவா
யெல்லாப்பிறப்பி னிருளகல்வதெக்காலம். 50

தக்கும்வகைக்கோர்பொருளும் சாராமலேநினைவில்
பக்குவம்வந்துன்னருளைப் பார்த்திருப்பதெக்காலம்.

பருவத்தனைவரோடும் புல்கியின்பங்கொள்வதற்குத்
தெரிவைப்பருவம்வந்து சிக்குவதுமெக்காலம். 52

தெரிவைப்பருவம்வந்து சீராட்டெல்லாமறிந்து
குருவையறிந்தேனினைத்துக் கும்பிடுவதெக்காலம்.

வம்படிக்குமாதருடன் வாழ்ந்தாலுமன்னுபுளி
யம்பழமுமோடும்போலாவதினியெக்காலம். 54

பற்றற்றுநீரிற் படர்ந்தவண்ணம்பச்சிலைபோல்
சுற்றற்றுநீக்கிமனந் தூரநிற்பதெக்காலம். 55

சல்லாபலீலையிலே தன்மனைவிசெய்தசுகம்
சொல்லாரக்கண்டெனக்குச்சொல்வதினியெக்காலம்

மருவுமயற்புருடன் வருநேரங்காணாமல்
வருகுமனம்போலெனுள முருகுவதுயெக்காலம்.

தன்கணவன்றன்சுகத்திற்றன்மனம்வேறானதுபோல்
என்கருத்திலுன்பதத்தை யேற்றுவதுமெக்காலம்.

கூடிப்பிரிந்துவிட்ட கொம்பனையைக்காணாமல்
தேடித்தவிப்பன்போல் சிந்தைவைப்பதெக்காலம்.

எவ்வனத்தின்ஸ்திரீமோகம் எப்படியுண்டப்படிபோ
ல், சவ்வனத்திலுன்னைக் கலந்திருப்பதெக்காலம். 60

கண்ணருவி கசிந்துமுத்துப்போலுதிரச்
சொன்னபரம்பொருளைத் தொகுத்தறிவதெக்காலம்.

ஆகமிகவுருவ வன்புருகவென்புருகப்
போகவநுபூதி பொருந்துவதுமெக்காலம். 62

நீரிற்குமிழிபோ னிலையற்றவாழ்வைவிட்டுன்
பேரிற்கருணைவெள்ளம் பெருக்கெடுப்பதெக்காலம்.

அன்பையுருக்கி யறிவைய தன்மேற்புகட்டித்
துன்பவலைபாசத் தொடக்கறுப்பதெக்காலம். 64

கருவின்வழியறிந்து கருத்தைச்செலுத்தாமல்
அருவிவிழிசொரிய அன்புவைப்பதெக்காலம். 65

தெளியத்தெளியத் தெளிந்தசிவானந்தத்தேன்
பொழியப்பொழியமனம் பூண்டிருப்பதெக்காலம். 66

ஆதாரமூலத் தடியிற்கணபதியைப்
பாதாரவிந்தம் பணிந்துநிற்பதெக்காலம். 67

மண்வளைந்தாற்கறிக்கில் வளைந்திருந்தவேதாவைக்
கண்வளைந்துபார்த்துள்ளே கண்டிருப்பதெக்காலம்.

அப்புரநடுவே யமர்ந்திருந்தவிட்டுணுவை
உப்புக்குடுக்கையுள்ளே யுணர்ந்தறிவதெக்காலம். 69

மூன்றுவளையமிட்டு முளைத்தெழுந்தகோணத்தில்
தோன்றுமுருத்திரண் தொழுதுநிற்பதெக்காலம்.

வாயுமறுகோணமதில் வாழுமகேச்சுரனைத்
தோயும்வகைகேட்கத் தொடக்குவதுமெக்காலம்.

வட்டவழிக்குள்ளே மருவுஞ்சதாசிவத்தைக்
கிட்டவழிதேடக் கிருபைசெய்வதெக்காலம்.

உச்சிக்கிடைநடுவே யோங்குகுருபதத்தை
நிச்சயித்துக்கொண்டிருந்து நேர்வதினியெக்காலம்.
பாழாகிபோர்மீதிற் பஞ்சவர்ணந்தானாகி
வேறாகிநீமுளைத்த வித்தறிவதெக்காலம். 74

கட்டறுக்கவொண்ணாக் கருவிகரணாதியெல்லாஞ்
சிட்டறுத்து நிட்டையிலே தூங்குவதுமெக்காலம்.
கள்ளக்கருத்தையெல்லாங் கட்டோடேவேரறுத்திங்
குள்ளக்கருத்தை யுணர்ந்திருப்பதெக்காலம். 76

அட்டகாசஞ்செலுத்து மவத்தைச்சடலத்துடனே
பட்டபாடதனையும் பகுத்தறிவதெக்காலம். 77

அறிவுக்கருவியுட னவத்தைப்படும்பாட்டையெல்லா
ம், பிரியமுடனிருத்திப் பெலப்படுவதெக்காலம். 78

பூதம்பொறிக்கரணம் போந்தவிந்துநாதமுமாய்
பேதம்பலவிதமும் பிறித்தறிவதெக்காலம். 79

தோன்றாசைமூன்றுந் தொடர்ந்துவந்துசுற்றாமல்
ஊன்றாசைவேரையடி யூடறுப்பதெக்காலம். 80

புன்ஜனனம்போற்றுமுன்னே புரிவட்டம்போகிலினி
யென்ஜனனமீடேறு மென்றறிவதெக்காலம். 81

பட்டணடுவினின்று நற்றிரோதாயியருள்
இட்டவழிகாட்டிக் கிருபைசெய்வதெக்காலம். 82

நானேநானென்றிருந்தேன் நடுவினிற்கட்டழகி
தானேவெளிப்படுத்தித் தருவனென்பதெக்காலம்.
அடர்ந்தமனக்காட்டை யஞ்செழுத்தாம்வாளாலே
தொடர்ந்துதொடர்ந்துவெட்டிசுடுவதினியெக்காலம்
ஐந்துபொறிவழிபோ யலைந்துமிந்தப்பாழ்மனதை
வெந்துவிழப்பார்த்து விழுப்பதினியெக்காலம். 85

இனமாண்டுசேர்ந்திருந்தோ ரெல்லாருந்தான்மாண்
டு,சினமாண்டுபோகவருள் சேர்ந்திருப்பதெக்காலம்.
அமையாமனதமைய மானந்தவீடுகண்டால்
இமையாமனோக்கி யிருப்பதினியெக்காலம். 87

கூண்டுவிடுஞ்சீவன்மெள்ளக் கோட்டாவிகொண்டாற்
போல்,மாண்டுவிடுமுன் ஞுண்மாண்டிருப்பதெக்காலம்
ஊணிறைந்தகாய முயிரிறந்துபோகுமுன்னம்
நாணிறந்துபோகவினி நாள்வருவதெக்காலம். 89
கெட்டுவிடுமாந்தர் கொர்விதங்கள்பேசிபந்து
சுட்டுவிடுமுன்னென்னைச் சுட்டிருப்பதெக்காலம். 90
கோளேணிவைத்தேறித் தூரநடந்தெக்காலம்
நூலேணிவைத்தேறி நோக்குவதுமெக்காலம். 91
வாயோடுகண்மூடி மயக்கமுற்றுநில்லாமல்
தாயோடுகண்மூடித் தழுவிநிற்பதெக்காலம். 92
காசினியெலாநடந்து காலோய்ந்துபோகாமல்
வாசிதனிலேறி வருவதினியெக்காலம். 93
ஒலிபடருங்குண்டலியை யுன்னியுணர்வாலெழுப்பிச்
சுழிமுனையின் ாள்திறந்து தூண்டுவதுமெக்காலம்.
இடைபிங்கலைநடுவே யியங்குஞ்சுழிமுனையில்
தடையறவேநின்று சலிப்பறுப்பதெக்காலம். 95
மூலநெருப்பைவிட்டு மூட்டிநிலாமண்டபத்தில்
பாலையிறக்கியுண்டு பசியொழிவதெக்காலம். 96
ஆகவெளிக்குள்ளே யடங்காப்புரவிசெல்ல
ஏகவெளியி லிருப்பதினியெக்காலம். 97
பஞ்சரித்துப்பேசும் பலகலைக்கெட்டாப்பொருளில்
சஞ்சரித்துவாழ்ந்து தவம்பெருவதெக்காலம். 98
மலமுஞ்சலமுமற்று மாயையற்றுமானமற்று
நலமுங்குலமுமற்று நானிருப்பதெக்காலம். 99
ஓடாமலோடி யுலகைவலம்வந்துசுற்றித்
தேடாமலென்னிடமாய்த் தெரிசிப்பதெக்காலம்.
அஞ்ஞானம்விட்டே யருண்ஞானத்தொல்லைவிட்டு
மெய்ஞ்ஞானவீடுபெற்று வெளிப்படுவதெக்காலம்.
வெல்லுமட்டும்பார்த்துவெகுளியெலாம்விட்டகன்று
செல்லுமட்டுஞ்சிந்தை செலுத்துவதுமெக்காலம்.

மேலாம்பதந்தேடி மெய்ப்பொருளையுள்ளிருத்தி
நாலாம்பதந்தேடி நான்பொருவதெக்காலம். 103
எண்ணுததாரமெல்லா மெண்ணியெண்ணிப்பாராமல்
கண்ணாடிக்குள்ளொளிபோற் கண்டறிவதெக்காலம்.
என்னையறிந்துகொண்டேனென்கோமானோடிருக்கும்
தன்மையறிந்து சமைந்திருப்பதெக்காலம். 105
ஆறாதாரங்கடந்த வானந்தப்பேரொளியை
பேறாகக்கண்டுநான் பெற்றிருப்பதெக்காலம். 106
ஆணவமாயத்தா லழிந்துடலம்போகாமுன்
காணுதலாலின்பமற்றுக் கண்டறிவதெக்காலம். 107
மும்மலமுஞ்சேர்ந்து மூளத்தெழுந்தகாயமிதை
நிர்மலமாய்க்கண்டுமுனை நீங்கிருப்பதெக்காலம். 107
முன்னைவினைகெடவே மூன்றுவகைகாட்சியினால்
உன்னைவெளிப்படுத்தி யுருவதினியெக்காலம். 109
கண்ணின்னொளிபாய்ந்ததுவுங் கருத்தறிந்துகொண்ட
துவும், விண்ணிலொளிகண்டதுவும் வெளிப்படுவதெ
க்காலம். 110
கனவுகண்டாப்போலெனக்குக் காட்டிமறைந்தேயிரு
ந்த, நினைவைப்பரவெளிமேல் நிறுத்துவதுமெக்காலம்
ஆறென்றுகேட்டதுவு மறிவுவந்துகண்டதுவும்
பாரென்றுசொன்னதுவும் பகுத்தறிவதெக்காலம்.
நினைக்குநினைவுதொறும் நிறைந்தபரிபூரணத்தை, மு
னைக்குமேற்கண்டுகண்ணில் மூளத்தெழுப்பதெக்கா
லம். 113
முப்பாழும்பாழாய் முதற்பாழுஞ்சூனியமாய்
அப்பாழும்பாழா யன்புசெய்வதெக்காலம். 114
சீரென்றெழுந்து தெளிந்துநின்றவான்பொருளை
நீரென்றுகண்டு நிலைபெறுவதெக்காலம். 115
வவ்வெழுத்தும்மவ்வெழுத்தும் வாளாகுஞ்சிவ்வெழு
த்தும், அவ்வெழுத்தினுள்ளேயடங்கிநிற்பதெக்கால
எழுத்தெல்லாமாண்டிறந்தே பேசமாய்நின்றநிலை
அழுந்தமாச்சிந்தையைத் தன்புணர்வதெக்காலம்.

அருவாகியுருவாகி ஆதியந்தமாகிநின்று
குருவாகிவந்தெனையாட் கொண்டருள்வதெக்காலம்.
நானென்றறிந்தவனை நானறியாக்காலமெல்லாந்
தானென்றுநீயிருந்த தனுவறிவதெக்காலம். 119
என்மயமாய்க்கண்டதெல்லா மெண்ணியெண்ணிபார்த்
தபின்பு, தன்மயமாய்க்கண்டதிலே சார்ந்துநிற்பதெ
க்காலம்.
ஒளியிலொளியா முருப்பிறந்தவாரதுபோல்
வெளியில்வெளியான விதமறிவதெக்காலம். 121
ஒளியிட்டமெய்ப்பொருளை யுள்வழியிலேயடைந்து
வெளியிட்டுசாத்திவைத்து வீடுறுவதெக்காலம். 122
காந்தம்வலித்திரும்பைக் காத்திழுத்துக்கொண்டது
போல், பாய்ந்துபிடித்திழுத்துன் பதத்தில்வைப்ப
தெக்காலம். 123
பித்தாயங்கொண்டு பிரணவத்தையூடறுத்துச்
செத்தாரைப்போலே திரிவதினியெக்காலம். 124
ஒழிந்தகருத்தினைவைத் துள்ளெலும்புவெள்ளெலும்
பாய்க், கழிந்தபிணம்போலிருந்து காண்பதினியெக்
காலம். 125
ஆதிகபிலர்சொன்ன வாகமத்தின்சொற்படியே
சாதிவகையில்லாமற் சஞ்சரிப்பதெக்காலம். 126
சூதுங்களவுந் தொடராவினையஞ்சுட்டிடக்காற்
றூதுந்துருத்தியைப்போட்டுணையடைவதெக்காலம்
ஆசைவலைப்பாசத் தகப்பட்டுமாயாமல்
ஓசைமணிதீபத்தி லொன்றிநிற்பதெக்காலம். 128
கல்லாய்மரமாய் கயலாய்ப்பறவைகளாய்
புல்லாய்ப்பிறந்தஜென்மம் போதுமென்பதெக்காலம்.
தக்கும்வகைக்கோர்பொருளும் சாராமலேநினைவில்
பக்குவமாயுன்னருளைப் பார்த்திருப்பதெக்காலம்.
தூரோடிசைந்து சுழன்றதத்துவத்தை
வேரோடிசைந்து விளங்குவதுமெக்காலம். 131
பாதநடுமாறிப் பயந்தெழுந்தசித்திரத்தை
காதநடுமேலத் திருத்துவதுமெக்காலம். 13

ஓரின்பங்காட்டு முயர்ஞானவீதிசென்று
பேரின்பவீடுகண்டு பெற்றிருப்பதெக்காலம். 133

காரணமாய்வந்தென் கருத்தினுரைத்ததெல்லாம்
பூரணமாகக்கண்டு புகழ்ந்திருப்பதெக்காலம். 134

ஆயுங்கலைகளெல்லா மாராய்ந்துபார்த்ததற்பின்
நீயன்றுமில்லா நிசங்காண்பதெக்காலம். 135

குறியாகக்கொண்டு குலமளித்தநாயகனைப்
பிரியாமற்சேர்ந்து பிறப்பறுப்பதெக்காலம். 136

மத்தடுத்துநின்று மருளாடுவார்போலே
பித்தடுத்துநின்னருளைப் பெற்றிருப்பதெக்காலம்.

சாவாமற்செத்திருந்து சற்குருவின்பொன்னடிக்கீழ்
வேவாமல்வெந்திருக்க வேண்டுவதுமெக்காலம். 138

என்னையறியாம லிருந்தாட்டுஞ்சூத்திரநின்
தன்னையறிந்து தவம்பெறுவதெக்காலம். 139

உள்ளமறியா தொளிந்திருந்தநாயகனை
கள்ளமனந்தெளிந்து காண்பதினியெக்காலம். 140

வாசித்துங்காணாமல் வாய்விட்டும்பேசாமல்
பூசித்துந்தோன்றாப் பொருள்காண்பதெக்காலம்.

பன்னிரண்டுகாற்புரவி பாய்ந்தசில்லடந்தட்டாமல்
பன்னிரண்டுசெங்கிலிக்குட் பிணைப்பதினியெக்காலம்.

நாட்டுக்காலிரண்டும்விட்டு நடுவுக்காலூடேயோய
ஆட்டுக்காலிரண்டுடனுள்ளயமர்ந்திருப்பதெக்கால

பாற்பசுவையோட்டி பதியில்வந்துசேராட்டிக்
காற்பசுவையோட்டியதிற் கட்டிவைப்பதெக்காலம்.

பலவிடத்தேமனதைப் பாயவிட்டும்பாராமல்
நிலவரையினூடேபோய் நேர்படுவதெக்காலம். 145

காமக்கடல்கடந்து கரையேறிப்போவதற்கே
ஓமக்கனல்வளர்த்தி யுள்ளிருப்பதெக்காலம். 146

உதயச்சுடர்மூன்று முள்வீட்டிலேகொளுத்தி
இதயத்திருநடன மினிகாண்பதெக்காலம். 147

வேதாந்தவேதமெல்லாம் விட்டேறியேகடந்து
நாதாந்தமூல நடுவிருப்பதெக்காலம். 148
பட்டமற்றுக்காற்றிற் பறந்தாடுஞ்சூத்திரம்போல்
விட்டுவெளியாக விசுவழிவதெக்காலம். 149
அட்டாங்கயோகமதற் கப்பாலுக்கப்பாலாய்
இட்டாப்பொருளதனைக் கிட்டுவதுமெக்காலம். 150
ஒட்டாமலொட்டிநிற்கு முடலுமுயிருப்பிரித்தே
எட்டாப்பழம்பதிக்கும் கேணிவைப்பதெக்காலம்.
பாசத்தைநீக்கிப் பசுவைப்பதியில்விட்டு
நேசத்தினுள்ளே நினைந்திருப்பதெக்காலம். 152
ஆசாரநேய வனுட்டானமும்மறந்து
பேசாமெய்ஞ்ஞானநிலைப் பெற்றிருப்பதெக்காலம்.
பல்லாயிரங்கோடிப் பகிரண்டமும்படைப்பே
அல்லாதுவேறில்லையென் றறிவதினியெக்காலம்.
ஆதிமுதலாகிநின்ற அரியென்றவட்சரத்தை
ஓதியறிந்துள்ளே யுணர்வதினியெக்காலம். 155
சாத்திரத்தைச்சுட்டிச் சதுர்மறையைப்பொய்யாக்கி
ச்,சூத்திரத்தைக்கண்டு துயரறுப்பதெக்காலம். 156
அல்லும்பகலுமென்ற வறிவையறிவாலரிந்து
சொல்லுமுறைமலர்ந்து தூங்குவதுமெக்காலம். 157
இறங்குஞ்சராசரத்தி லெள்ளுமெண்ணெயும்போல்
முயங்குமந்தவேத முடிவறிவதெக்காலம். 158
ஊனுமுயிரு முருவாகியெவ்வுலகந்
தானாகிநின்ற தரிப்பறிவதெக்காலம். 159
என்னைவிட்டுநீங்கா மலென்னிடத்தில்நீயிருக்க
உன்னைவிட்டுநீங்கா தொருப்படுவதெக்காலம். 160

இன்னதென்றுசொல்லவொண்ணுவெல்லையற்றவா
ன்பொருளை, சொன்னதொன்று நானறிந்து சொல்வ
தினியெக்காலம்.

மனதைபொருவில்லாக்கி வான்பொறியைநாணாக்கி
எனதறிவையம்பாக்கி யெய்வதினியெக்காலம். 162

என்னையிறக்கவெய்தேயென்பதியைவீடழித்த [லம்
உன்னைவெளியில்வைத்தே யொளித்துநிற்பதெக்கா
கடத்துகின்றதோணிதனைக் கழைகள்குத்திவிட்
டாற்போல், நடத்துகின்றசித்திரத்தை நானறிவ
தெக்காலம். 164

நின்றநிலைபோராம நினைவிலொன்றுசாராமல்
சென்றநிலைமுத்தியென்று சேர்ந்தறிவதெக்காலம். ()

பொன்வெள்ளியும்பூண்டு பொற்பதத்தையுள்ளமைத்
து,மின்னுமொளிவெளியே விட்டடைப்பதெக்காலம்

கூட்டிலடைப்பட்டபுழு குளவியருகொண்டதுபோல்
வீட்டிலடைப்பட்டருளை வேண்டுவதுமெக்காலம். ()

கடலிலொளித்திருந்த கனலெழுந்துவந்தாற்போல்
உடலிலொளித்தசிவ மொளிசெய்வதெக்காலம். 168

அருணம்பிரகாச மண்டமெங்கும்போர்த்ததுபோல்
கருணைத்திருவடியிற் கலந்துநிற்பதெக்காலம். 169

பொன்னிற்பலவிதமாம் பூஷணமுண்டானதுபோல்
உன்னிற்பிறந்ததுன்னி லொடுங்குவதுமெக்காலம். ()

நாயிற்கடைபிறப்பாம் நான்பிறந்துதுன்பமற
வேயிற்கனலொளிபோல் விளங்குவதுமெக்காலம். ()

சூரியகாந்திவெளி சூழ்ந்துபஞ்சைசுட்டதுபோல்
ஆரியன்றேற்றத் தருள்பெறுவதெக்காலம். 172

இரும்பிற்கனன்மூட்டி யிவ்வுருபோயவ்வுருவாய்க்
கரும்பிற்சுவைரசத்தைக் கண்டறிவதெக்காலம். 173

கருக்கொண்டமுட்டைதனைக் கடலாமைதானினைக்க
உருக்கொண்டவாறதுபோ லுனையடைவதெக்காலம்

வீடுவிட்டுபாய்ந்து வெளியில்வருவார்போல்
கூடுவிட்டுப்பாயுங் குறிப்பறிவதெக்காலம். 175

கடைந்தவெண்ணெய்மோரிற் கலவாதவாரதுபோல்
உடைந்துதமியே னுனைக்காண்பதெக்காலம். 176

இருளைவெளிவிழுங்கி யேகவுருக்கொண்டாற்போல்
அருளைவிழுங்குமிருளகன்றுநிற்பதெக்காலம். 177

மின்னெழுத்துமின்றொடுங்கி விண்ணிலுறைந்தாற் போல், என்னுணின்றதென்னுள்ளே யானறிவதெக் காலம். 178
கண்டபுனற்குடத்திற் கதிரொளிகள்பாய்ந்தாற்போ ல், கொண்டசுரூபமதைக் கூறறிவதெக்காலம். 179
பூணுகின்றபொன்னணிந்தாற் பொன்சுமக்குமோ வு டலைக், காணுகின்றவென்கரத்திற் கண்டறிவதெக்கா லம். 180
செம்பிற்களிம்புபோற் சிவத்தைவிழுங்குமிக
வெம்பினின்றமும்மலத்தை வேறுசெய்வதெக்காலம்
ஆவிநங்காயமும்போ லாத்துமத்துநின்றவனைப்
பாவியறிந்துமனம் பற்றிநிற்பதெக்காலம். 182
ஊமைக்கனுக்கண் டுரைக்கறியாவின்பமதை
நாமறிந்துகொள்வதற்கு நாள்வருவதெக்காலம். 183
சாகாசிவனடியைத் தப்பாதாரெப்போதும்
போகாஉடலகன்று போவதென்பதெக்காலம். 184
நிட்டைதனைவிட்டு நினைவறிவுதப்பவிட்டு
வெட்டவெளியில் விரவிநிற்பதெக்காலம். 185
வெட்டவெளிதன்னில் விளைந்தவெம்பாசத்தை
திட்டமுடன்கண்டு தெளிவதினியெக்காலம். 186
எங்கும்பரவடியா யென்வடிவுநின்வடிவாய்க்
கங்குல்பகலின்றியுனைக் கண்டிருப்பதெக்காலம். 187
உண்டதுவுமாத ருடன்கூடிச்சேர்ந்தின்பங்
கண்டதுவுநீயெனவே கண்டுகொள்வதெக்காலம்.
ஈமென்றுகேட்டதுவு மென்னுள்ளேநின்றதுவும்
ஓமென்றுசொன்னதுவு முற்றறிவதெக்காலம். 189
சத்தம்பிறந்தவிடந் தன்மயமாய்நின்றவிடஞ்
சித்தம்பிறந்தவிடந் தேர்ந்தறிவதெக்காலம். 190
போக்கும்வரவும் புரம்புள்ளுமாகிநின்றும்
தாக்குமொருபொருளைச் சந்திப்பதெக்காலம். 191
நானெனவுநீயெனவு நாமிரண்டுமற்றொன்றும்
நீயெனவேசிலைதனி னேர்படுவதெக்காலம். 192

அறிவையறிவாலறிந்தே யறிவுமறிவுதன்னில்
பிறிவுபடலில்லாமல் பிடிப்பதினியெக்காலம். 193
நீடும்புவனமெல்லாம் நிறைந்துசிந்தூரமதாய்
ஆடுந்திருக்கூத்தை யறிவதினியெக்காலம். 194
தித்தியென்றகூத்துத் திருச்சிலம்பினோசைகளும்
பத்தியுடனேகேட்டுப் பணிவதினியெக்காலம். 195
நயனத்திடைவெளிபோய் நண்ணும்பரவெளியில்
சயனத்திருந்து தலைப்படுவதெக்காலம். 196
அருவிமலைநடுவே யாயிரக்கால்மண்டபத்தில்
திருவிளையாடல்கண்டு தெரிசிப்பதெக்காலம். 197
மீனைமிகவுண்டுநக்கி விக்கிநின்றகொக்கதுபோல்
தேனைமிகவுண்டுநக்கி தெவிட்டிநிற்பதெக்காலம்.
பொல்லாதகாயமுனைப் போட்டுவிக்குமுன்னே
கல்லாவின்பால்கறப்பக் கறப்பதினியெக்காலம். 199
வெட்டவெளிக்குள்ளே விளங்குஞ்சதாசிவத்தைக்
கிட்டவரத்தேடக் கிருபைசெய்வதெக்காலம். 220
போறிவிலேமனதை போகாமலேயிருத்தி
ஓரறிவிலேநானு மூன்றிநிற்பதெக்காலம். 202
அத்துவிதம்போலுமென்றனைத்துமத்தினுள்ளிருந்து
முத்திதாநின்ற முறையறிவதெக்காலம். 203
நாநின்றபாசமதி ஞானிருந்துமாளாமல்
நீநின்றகோலமதில் நிரவிநிற்பதெக்காலம். 204
எள்ளுங்கரும்பு மெழுமலரும்காயமும்போல்
உள்ளும்புறம்புநின்ற துற்றறிவதெக்காலம். 205
அன்னம்புலனை வகுத்தமிர்தையுண்டதுபோல்
என்னைவகுத்துன்னை யினிக்காண்பதெக்காலம். 206
அந்தரத்தினீர்பூத் தலர்ந்தெழுந்ததாமரைபோல்
சிந்தையைவைத்துக்கொண்டு தெரிசிப்பதெக்காலம்.
பிறப்புயிறப்புமற்றுப் பேச்சுமற்றுமூச்சுமற்று
மறப்புநினைப்புமற்று மாண்டிருப்பதெக்காலம். 208

மன்னும்பரவெளியை மனவெளியிலடைத்தறிவை
என்னுமொருநினைவை யெழுப்பிநிற்பதெக்காலம்.
ஆசைகொண்டமாதரடைகனவுநீக்கியென்மேல்
ஓசைகொண்டுநானுமொடுங்குவதுமெக்காலம். 209
தன்னுயிரைக்கொண்டு தானறிந்தவாரதுபோல்
உன்னுயிரைக்கொண்டிங் கொடுங்குவதுமெக்காலம்.
சேற்றிக்கிளைநாடுந் திடமாமுடலையினிக்
காற்றினுழல்சூத்திரமாய்க் காண்பதினியெக்காலம்.
என்வசமுங்கெட்டிங் கிருந்தவசமும்மழிந்து
தன்வசமுங்கெட்டருளைச் சார்ந்திருப்பதெக்காலம்.
தன்னைமறந்து தலைத்துநிலமறைந்து
கன்மமறந்து கனிபெறுவதெக்காலம். 213
என்னையென்னிலேமறந்தே யிருந்தபதியும்மறந்து
தன்னையுந்தானேமறந்து தனித்திருப்பதெக்காலம்.
தன்னையுந்தானேமறந்து தலைவாசற்றுள்போட்டே
உன்னைநினைந்துள்ளே யுறங்குவதுமெக்காலம். 215
இணைபிரிந்தபோதலரி யின்பமுறுமன்றிலைப்போல்
துணைபிரிந்தபோதருணூல்தொடர்ந்துகொள்வதெக்
காலம். 216
ஆட்டமொன்றுமில்லாம லசைவுற்றுங்காணுமல்
தோட்டமற்றவான்பொருளைத்தேடுவதுமெக்காலம்
முன்னைவினையாலறிவு முற்றுமற்புன்மறைந்தால்
அன்றுதனைத்தேடி யழுதுண்பதெக்காலம். 218
கள்ளுண்டவர்போற் களிதருமானந்தமதாற்
றள்ளுண்டுநின்றுடித் தடைபடுவதெக்காலம். 219
தானென்றவாணவமுந் தத்துவமுங்கெட்டொழிந்தே
ஏனென்றபேச்சுமிலா திலங்குவதுமெக்காலம். 220
நானவனுப்காண்பதெல்லா ஞானவிழியாலறிந்து
தானவனாய்நின்று சரணடைவதெக்காலம். 221
தானந்தமில்லாத தற்பரத்தினூடுருவி
ஆனந்தங்கண்டே யமர்ந்திருப்பதெக்காலம். 222

உற்றவெளிதனிலே உற்றுப்பாரந்தமத்தே
மற்றமரமாய்கை மாள்வதினியெக்காலம். 223

ஏடலர்ந்தபங்கயமு மிருகருணைநேத்திரமுந்
தோடணிந்தகுண்டலமுந் தோன்றுவதுமெக்காலம்.

ஐயாறுமாறு மகன்றுவெறுவெளியில்
மையிருளில்நின்றன மாள்வதினியெக்காலம். 225

காட்டுபெருண்ஞானக் கடலிலன்புகப்பல்விட்டு
மூட்டுங்கருணைக்கடலின் மூழ்குவதுமெக்காலம். 226

நானாரோநீயாரோ நற்றும்பரமானந்
தானாரோவென்றுணர்ந்து தவமுடிப்பதெக்காலம். ()

எவரெவர்களெப்படிகண் டெந்தப்படிநினைத்தார்
அவரவருக்கப்படிநின் றுமென்பதெக்காம். 228

உற்றுற்றுப்பார்க்க வொளிதருமானந்தமதை
நெத்திக்குநேர்கண்டு நிலைப்பதினியெக்காலம். 229

விளங்குகின்றதாரகை வெய்யோன்மறைத்தாப்போ
களங்கமறவுன்காட்சி கண்டறிவதெக்காலம். 230

என்னையேநானறியேனிந்தவண்ணஞ்சொன்னதல்லா
முன்னையோர்கைக்கொள்ள முன்பணிவதெக்காலம்.

ஐஞ்சுகரத்தானை யடியிணையைப்போற்றிசெய்து
நெஞ்சிற்பொருந்தி நிலைபெறுவதெக்காலம். 232

பத்திரகிரியார் புலம்பல்
முற்றிற்று.

சிவமயம்.

பாம்பாட்டிசித்தர் பாடல்

கடவுள்வணக்கம்.

தெளிந்துதெளிந்துதெளிந் தாடுபாம்பே-சிவன்
சீர்பாதங்கண்டுதெளிந் தாடுபாம்பே
ஆடுபாம்பேதெளிந் தாடுபாம்பே-சிவன்
அடியிணைகண்டோமென் றாடுபாம்பே. 1

நீடுபதநமக்கென்றுஞ் சொந்தமென்றே
நித்தியமென்றேபெரு முத்தியென்றே
பாடுபடும்போதுமாதி பதநினைந்தே
பன்னிப்பன்னிப்பரவிநின் றாடுபாம்பே. 2

பொன்னிலொளிபோலவெங்கும் பூரணமாய்ப்
பூவின்மணம்போலத்தங்கும் பொற்புடையதாய்
மன்னும்பலவுயிர்களின் மன்னிப்பொருந்தும்
வள்ளலடிவணங்கிநின் றாடுபாம்பே. 3

எள்ளிலெண்ணெய்போலவுயி ரெங்குநிறைந்த
ஈசன்பதவாசமல ரெண்ணியெண்ணியே
உள்ளபடியன்புபத்தி யோங்கிநிற்கவே
ஒடுங்கியடங்கித்தெளிந் தாடுபாம்பே. 4

அகண்டபிண்டந்தந்தவெங்க ளாதிதேவனை
அகல்லாமலேநினைத் தன்புடன்பணிந்
தெண்டிசையும்புகழ்ந்திட வேத்தியேத்தியே
ஏகமனமாகவாடி யாடுபாம்பே.

சோதிமயமானபரி சுத்தவஸ்துவைத்
தொழுதழுதாவலறித் தொந்தோமெனவே
நீதிதவறுவழியி னின்றுநிலையாய்
நினைந்துநினைந்துருகி யாடுபாம்பே. 6

அருவாயுமுருவாயு பக்தியாயும்
அந்தமாயுமொளியாயு மாகமாயும்
திருவாயுங்குருவாயுஞ் சீவனும்
செறிந்தவஸ்துவைப்போற்றி யாடுபாம்பே. 7

சுட்டிக்காட்டவொண்ணாத பாழ்சூனியந்தனைச்
சூட்சமதியாலறிந்து தோஷமறவே
எட்டிபிடித்தேதாமென் றனந்தபாம்பை
யெடுத்துவிரித்துநின் றடுபாம்பே. 8

எவ்வுயிருமெவ்வுலகு மின்றும்புறம்பாய்
இருந்துவிளையாட் டெய்தியும்பின்னர்
அவ்வுயிருமவ்வுலகு மாகியுநின்ற
ஆனந்தவெள்ளங்கண் டாடுபாம்பே. 9

குருவணக்கம்.

சாற்றுமுடல்பொருளாவி தத்தமாகவே
தானம்வாங்கிநின்றவெங்கள் சற்குருவினைப்
போற்றிமனம்வாக்குக்காய மூன்றும்பொருந்தப்
புகழ்ந்துபுகழ்ந்துநின் றடாய்பாம்பே. 10

பொய்மதங்கள்போதனைசெய் பொய்க்குருக்களைப்
புத்திசொல்லிநன்னெறியிற் போகவிடுக்கும்
மெய்மதந்தானின்னதென்று மேவவுடம்பும்
மெய்க்குருவின்பதம்போற்றி யாடாய்பாம்பே. 11

வேதம்பொருளின்னதென்றும் வேதங்கடந்த
மெய்ப்பொருளைக்கண்டுமன மேவிவிரும்பிப்
போதப்பொருளின்னதென்றும் போதனைசெய்யும்
பூரணச்சற்குருதாள்கண் டாடாய்பாம்பே. 12

உள்ளங்கையிற்கனிபோல உள்ளபொருளை
உண்மையுடன்காட்டவல்ல வுண்மைக்குருவைக்
கள்ளமனந்தன்னைத்தள்ளிகண்டுகொண்டன்பாய்க்
களித்துக்களித்துநின் றாடாய்பாம்பே. 13

அங்கையற்கண்ணாடிபோல வாதிவஸ்துவை
அறிவிக்குமெங்களுயி ரானகுருவைச்
சங்கையறச்சந்ததமுந் தாழ்ந்துபணிந்தே
தமனியப்படமெடுத் தாடாய்பாம்பே. 14

காயநிலையழிகையைக் கண்டுகொண்டுபின்
கற்புநிலையுள்ளிற்கொண் டெக்காலமும்வாழும்
தூயநிலைகண்டபரி யுத்தகுருவின்
துணையடிதொழுதுநின் றாடாய்பாம்பே. 15

கூடுவிட்டுக்கூடுபாயுங் கொள்கையுடையே
குருவின்வல்லபமெவர் கூறவல்லவர்
வீடுபெறும்வகையை மேன்மேலுங்காட்டு
மெய்க்குருவைப்பணிந்துநின் றாடாய்பாம்பே. 16

அட்டதிக்குமண்டவெளி யானவிடமும்
அடக்கியகுளிகையோ டாடிவிரைவாய்
வட்டமிட்டுவலம்வரும் வல்லகுருவின்
மலரடிதஞ்சமென் றாடாய்பாம்பே. 17

கற்பகாலக்கடந்தாதி கர்த்தாவோடுங்
கடமழியாதுவாழுங் காரணக்குரு
பொற்பதமேதஞ்சமென்று போற்றுதல்செய்து
பூர்ணசிந்தையோ டாடாய்பாம்பே. 18

வச்சிரத்திற்கோர்பழுது வாய்க்குமாயினும்
வல்லுடம்புக்கோர்குறை வாய்த்திடாது
மெச்சகடமுள்ளவெங்கள் வேதகுருவின்
மெல்லடிதுதித்துநின் றாடாய்பாம்பே. 19

பாம்பினது சிறப்பு.

நாதர்முடிமேலிருக்கு நாகப்பாம்பே
நச்சுப்பையைவைத்திருக்கு நல்லபாம்பே
பாதலத்திற்குடிபுகும் பைகொள்பாம்பே
பாடிப்பாடிநின்றுவிளை யாடுபாம்பே. 20

வளைபுகும்போதேதலை வாங்கும்பாம்பே
மண்டலமிட்டுடல்வளை வண்ணப்பாம்பே
தளைக்கஞ்சிநின்றிடும் சத்தியப்பாம்பே
தலையெடுத்தேவிளை யாடுபாம்பே. 21

குற்றமற்றசிவனுக்கு குண்டலமானாய்
கூறுந்திருமாலினுக்குக் குடையானாய்
கற்றைக்குழல்பார்வதிக்குக் கங்கணமானாய்
கறவாமலுளங்களித் தாடுபாம்பே. 22

மண்டலத்தைத்தாங்குமிகு வல்லமைகொண்டாய்
மாயனுக்குப்படுக்கைக்கு வண்ணப்பாயானாய்
கண்டபடைநடுங்கிடக் காட்சியும்பெற்றாய்
கண்ணேசெவியாகக்கொண்டா யாடுபாம்பே. 23

சந்திரனைச்சூரியனைத் தாவித்தீண்டினாய்
சங்கரனுக்காபரணந் தானுமாகினாய்
மந்திரத்திற்கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்துவளைந்துநின் றாடுபாம்பே. 24

சித்தர் வல்லபங் கூறல்.

எட்டுநாகந்தன்னைக்கையா லெடுத்தாட்டுவோம்
இந்திரனுலகத்தை யிங்கேகாட்டுவோம்
கட்டுக்கடங்காதபாம்பைக் கட்டிவிடுவோம்
கடுவிஷந்தனைக்கக்கி யாடுபாம்பே. 35

ஆதிசேடனாகிநுமெம் மங்கையினாலே
ஆட்டிவிடுவோமெங்க ளாக்கினைக்குள்ளே
நீதியோடடங்கியே நின்றிடச்செய்வோம்
நின்றநிலைதவராம லாடுபாம்பே. 26

தூணைச்சிறு துரும்பாக தோன்றிடச்செய்வோம்
துரும்பைப்பெருந்தூணாக தோற்றச்செய்குவோம்
ஆணைப்பெண்ணும்பெண்ணையாணுமாகச்செய்வோம்
ஆரவாரத்தெதிராய்நின் றாடுபாம்பே. 27

எட்டுமலைகளைப்பந்தா யெடுத்தெறிகுவோம்
எழுகடலையுங்குடித் தேப்பமிடுவோம்
மட்டுபடாமணலையு மதித்திடுவோம்
மகாராஜன்முன்புநின் றாடுபாம்பே. 28

மண்டலமூன்றுங்கையால் மறைத்திடுவோம்
வானத்தையும்வில்லாக வளைத்திடுவோம்
தொண்டருக்குஞானியஞ் சொல்லிக்காட்டுவோம்
தோன்றலுக்குமுன்புநின் றாடாய்பாம்பே. 29

மூண்டெரியுமக்கினிக்குள் மூழ்கிவருவோ
மூந்நீருள்ளிருப்பினு மூச்சடக்குவோம்
தாண்டிவரும்வன்புலியைத் தாக்கிடுவோம்
தார்வேந்தன்முன்புநின் றாடுபாம்பே. 30

செப்பரியமூன்றுலகுஞ் செம்பொனாக்குவோம்
செங்கதிரைத்தண்கதிராய்ச் செய்துவிடுவோம்
இப்பெரியவுலகத்தை இல்லாமற்செய்வோம்
எங்கள்வல்லபங்கண் டாடுபாம்பே. 31

வேதன்செய்தசிருஷ்டிகள்போல் வேறுசெய்வோம்
வேதனையுமெங்கள்கீழே மேவச்செய்வோம்
நாதனுடன்சமமாக நாங்களும்வாழ்வோம்
நாங்கள்செய்கையிதுவென் றாடாய்பாம்பே. 32

அறுபத்துநாலுகலை யாவுமறிந்தோம்
அதற்குமேலொருகலை யானதறிந்தோம்
மறுபற்றுசற்றுமில்லா மனமுடையோம்
மன்னனேயாசானென் றாடுபாம்பே. 33

சீறுபுலியானையாளி சிங்கமுதலாய்ச்
சிற்றடிக்குற்றேவல் செய்யச்சொல்லுவோம்
வீறுபெருங்கடவுளை யெங்களுடனே
விளையாடச்செய்வோமென் றாடாய்பாம்பே. 34

சித்தர் சம்வாதம்.

வாசுகியையொருபக்க மன்னநிறுத்து
மகத்தானபதுமனை மறுபக்கம்வை
தேசுலவுதக்கனைத் தன்றிக்கிற்சேரு
செய்யபதுமனைக்கொள் சித்தனாரே. 35

அனந்தனையொரு பக்கமாகநிறுத்தி
அதன்பக்கங்குளிகனையண்டச்சேரு
கனங்கொண்டகார்க்கோடகன் காணக்காட்டுங்
கடுஞ்சங்கர்பலனைத்தா சித்தனாரே. 36

அட்டதிக்குஞ் சக்கரங்களாககீறி
அக்கோணநிலைகளி லக்கரஞ்சேரு
திட்டமுடன்மந்திரத்தைச் செபித்துநில்லு
சித்தந்தடுமாறாதே சித்தனாரே. 37

அட்டதிக்குஞ்சக்கரங்க ளமைத்துவிட்டோம்
அவ்வற்றிற்சக்கரங்க ளமைத்துவிட்டோம்
எட்டுநாகமிருக்கின்ற விடத்தில்விட்டோம்
இனியென்னசெய்வதுசொல் சித்தனாரே. 38

நடுவாகவாதிசேடன் றன்னைநாட்டு
நான்குதிக்குமந்திரித்த நீறுதூவு
கடுவிஷங்கக்கவே கட்செவிகளைக்
கையிலெடுத்தாடுங்கள் சித்தனாரே. 39

பொருளாசை விளக்கம்.

நாடுநகர்வீடுமாகி நற்பொருளெல்லாம்
நடுவன்வரும்பொழுது நாடிவருமோ
கூடுபோனபின்பவற்றாற் கொள்பயனென்னே
கூத்தன்பதங்குறித்துநின் றாடாய்பாம்பே. 40

யானைசேனைதேர்ப்பரி யாவுமணியாய்
யமன்வரும்போதுதுணை யாமோவறியாய்
ஞானஞ்சற்றுமில்லாத நாய்கட்குப்புத்தி
நாடிவரும்படிநின் றாடுபாம்பே. 41

மாணிக்கமாமணிமுடி வாகுவலயம்
மார்பிற்றொங்கும்பதக்கங் கண்மற்றும்பணிகள்
ஆணிப்பொன்முத்தாரம்பொ னந்தக்கடகம்
அழிவானப்பொருளென் றாடாய்பாம்பே. 42

மாடகூடமாளிகைகள் வண்ணமண்டபம்
மதில்சூழ்ந்தவரண்மனை மற்றுமுள்ளவை
கூடவராதென்றவந்தக் கொள்கையறிந்தோர்
குலவாமால்வெறுப்பாரென் றாடாய்பாம்பே. 43

மலைபோன்றசெம்பொற்கு வைத்திருப்பவர்
மறலிவருகையில் வாரிச்செல்வரோ
அலைபாமலகத்தினை யத்தன்பால்வைத்தோர்
அழியாரெனத்துணிந் தாடாய்பாம்பே. 44

பஞ்சணையும்பூவணையும் பாயலும்வெறும்
பாழ்சுடுகாடதனிலே பயன்பெறுமோ
மஞ்சள்மணம்போய்சுடு நாறுமணங்கள்
வருமென்றுதெளிந்துநின் றாடாய்பாம்பே. 45

முக்கனியுஞ்சர்க்கரையு மோதகங்களும்
முதிர்சுவைப்பண்டங்களு முந்தியுண்டவர்
மிக்கவுயிர்போனபின்பு கண்ணைவிழுங்க
மெய்யாகக்கண்டோமென் றாடாய்பாம்பே. 46

வண்ணப்பட்டும்வாசனையும் வாய்த்தகோலமும்
வண்கவிகையாலவட்ட மற்றுஞ்சின்னமும்
திண்ணமுடன்யமபுரஞ் செல்லுங்காலத்தில்
சேரவரமாட்டாவென் றாடாய்பாம்பே. 47

மக்கள்பெண்டீர்சுற்றமரு மக்கண்மற்றவர்
மாளும்போதுகூடவவர் மாள்வதில்லையே
தக்கவுலகனைத்தையுந் தந்தகர்த்தனைத்
தாவித்தாவித்துதித்துநின் றாடாய்பாம்பே. 48

கானலைமானீரெனவே கண்டுசொல்லல்போல்
காசினிவாழ்வினைமூடர் கண்டுகளிப்பார்
மேனிலைகண்டார்கள்வீணாய் வீம்புபேசிடார்
மெய்யன்பதநாடுவாரென் றாடாய்பாம்பே. 49

பெண்ணாசை விலக்கல்.

வெயில்கண்டமஞ்சள்போன்ற மாதரழகை
விரும்பியேமேல்விழுந்து மேவுமாந்தர்
ஒயில்கண்டயிலவுகாத் தோடுங்கிளிபோல்
உடல்போனாலோடுவாரென் றாடாய்பாம்பே. 50

செண்டுமுலைவண்டுவிழி கொண்டதோகையைச்
சித்தப்பாம்பால்விழுங்கியே சீயென்றொருத்தம்
குண்டுகட்டெருமையேறுங் கூற்றுப்பருந்தைக்
கொன்றுதின்றுவிட்டோமென் றாடாய்பாம்பே. 51

வட்டமுலையென்றுமிக வற்றுந்தோலை
மகமேருவென்றுவமை வைத்துக்கூறுவர்
கெட்டநாற்றமுள்ளயோனிக் கேணியில்வீழ்ந்தார்
கெடுவரென்றேதுணிந் தாடாய்பாம்பே. 52

மலஞ்சொரிகண்ணைவாடி வாளுக்கொப்பாக
வருணித்துச்சொல்வர்மதி வண்மையில்லாதார்
குருநலம்பேசுகின்ற கூகைமாந்தர்கள்
கும்பிக்கேயிரையென் றாடாய்பாம்பே. 53

சிக்குநாறுங்கூந்தலைச் செழுமேகமாய்ச்
செப்புவார்கள்கொங்கைதனைச் செப்புக்கொப்பதா
நெக்குநெக்குருகிப்பெண்ணை நெஞ்சினினைப்பார்
நிமலனை நினையாரென் றாடாய்பாம்பே. 54

நாறிவரும்மெச்சிறனை நல்லமுதென்றும்
நண்ணுஞ்சளிநாசிதனை நற்குமிழென்றும்
கூறுவார்கள்புத்தியில்லாக் கூகைமாந்தர்
கோணிலையையறியாரென் றாடாய்பாம்பே. 55

மயிலென்றுங்குயிலென்று மாணிக்கமென்றும்
மானேயென்றுந்தேனேயென்றும் வரனமுதென்று
ஓயிலானவன்னமதிற் கொத்தவளென்றும்
ஓதாமற்கடிந்துவிட் டாடுபாம்பே. 56

மின்னற்கொடியென்றுஞ் ஜோதிவிளக்கமென்றும்
மெல்லியென்றும்வல்லியென்று மேனகையென்றும்
கன்னற்கட்டியென்றுஞ்சீனி கற்கண்டென்றும்
கழறுமற்கடிந்தோமென் றாடாய்பாம்பே. 57

பூவையென்றும்பாவையென்றும் பொன்னேயென்று, பூந்திருவேயென்று மென்றன் பொக்கிஷமென்றும், கோவையென்றுங்கோதையென்றுங் கோகிலமென்றும், கூறுமற்றுறந்தோமென் றாடாய்பாம்பே.

மலக்குடமீதிலே மஞ்சள்பூச்சென்றும்
மல்கும்புழுக்கூட்டின்மேல் வண்ணத்தோலென்றும்
சலக்குழிக்குள்ளேநாற்றஞ் சார்ந்தசேரென்றும்
தானறிந்துதள்ளினோமென் றாடாய்பாம்பே. 59

சரீரத்தின் குணம்.

ஊத்தைக்குழியிலே மண்ணையெடுத்தே
உதிரப்புனலிலே யுண்டைசேர்த்தே
வாய்த்தகுயவனார் பண்ணும்பாண்டம்
வரகோட்டுக்காகாதென் றாடாய்பாம்பே. 60

இருவர்மண்சேர்த்திட வொருவர்பண்ண
ஈரைந்துமாதமாய் வைத்தகூலி
அருமையாயிருப்பினு மந்தக்கூலி
அரைக்காசுக்காகாதென் றாடாய்பாம்பே. 61

பரியாசம்போலவே கடித்தபாம்பு
பலபேரறியவே மெத்தவீங்கிப்
பரியாரமொருமாது பார்த்தபோது
பையோடேகழன்றதென் றாடாய்பாம்பே. 62

சீயுமலமுஞ்செந் நீருநிணமுஞ்
சேர்ந்திடுநாற்றக் குடமுடைந்தால்
நாயுநரியும் பேயுங்கழுகும்
நமதென்றேயின்னுமென் றாடாய்பாம்பே. 63

நீரிலெழுநீர்க்குமிழி நிலைகடல்போல்
நில்லாதுடல்நீங்கிவிடும் நிச்சயமென்றே
பாரிற்பலவுயிர்களைப் படைத்தவன்றனைப்
பற்றவேபற்றித்தொடர்ந் தாடாய்பாம்பே. 64

நாறுமீனப்பலதர நல்லதண்ணீரால்
நாளுங்கழுவினுமத நாற்றம்போமோ
சுறுமுடல்பலநதி யாடிக்கொண்டதால்
கொண்டமலநீங்காதென் றாடாய்பாம்பே. 65

காய்த்தமரமதுமிகக் கல்லடிபடும்
கன்மவினைகொண்டகாயங் கண்டனைபெறும்
வாய்த்தவமுடையவர் வாழ்பவரென்றே
வஸ்துத்திருவடிதொழு தாடாய்பாம்பே. 66

பேசரியநவவாயிற் பீரற்றுருத்தி
பெருங்காற்றுள்புகுந்ததாற் பேச்சுண்டாச்சே
ஈசனிலையறியாருக் கிந்தத்துருத்தி
ஏரிமண்ணிற்கிரையென் றுடாய்பாம்பே. 67

மரப்பாவைபோலவொரு மண்ணுருச்செய்து
வளமானசீவனென்னுஞ் சூத்திரமாட்டித்
திரைக்குள்ளிருந்தசைப்பேன் தீர்ந்தபொழுதே
தேகம்விழுமென்றுதெளிந் தாடுபாம்பே. 68

தசநாடிதசவாயு சத்ததாது
சார்ந்தமரக்கப்பலது தத்திவிழுமே
இசைவானகப்பலினை யேகவெள்ளத்தில்
என்றுமோட்டத் துணிந்தாடாய்பாம்பே. 69

அகப்பற்று நீக்கல்.

தாமரையினிலையிலே தண்ணீர்தங்காத்
தன்மைபோலச்சகத்தாசை தள்ளிவிட்டெங்கும்
தூமணியாவிளங்கிய சோதிபதத்தைத்
தொழுதுதொழுதுதொழு தாடாய்பாம்பே. 70

கள்ளங்கொலைகாமவாதி கண்டித்தவெல்லாம்
கட்டறுத்துவிட்டுஞான கண்ணைத்திறந்து
தெள்ளிதானவெட்டவெளி சிற்சொரூபத்தைத்
தேர்ந்துபார்த்துச்சிந்தைதெளிந் தாடாய்பாம்பே.

சொல்லும்புளியம்பழத்தி னோடுபோலவே
சுற்றத்திருந்தாலுமவர் தொந்தங்களற்று
நில்லுமனதேபர நின்மலத்திலே
நின்றுனைதான்வெறும்பாழென் றுடாய்பாம்பே. 72

சேற்றிற்றிரிபிள்ளைப்பூச்சி சேற்றைநீக்கல்போல்
தேசத்தோடொத்துவாழ்பவரச் செய்கைகண்டபி
சாற்றுபரவெளிதனைச் சாரும்வழியே
தானடைக்கவேணுமென் றுடாய்பாம்பே. 73

எண்ணைக்குந்தண்ணீர்க்கு தொந்தமில்லாவாறுபோ
எப்போதுமிப்புவியி லெப்தவேண்டும் [ல்
கண்ணுக்குகண்ணான வொளி கண்டுகொள்ளவே
கட்டறுத்துவாழ்ந்திடநின் றாடாய்பாம்பே. 74

கக்கிவிட்டசோறுகறி கந்தமூலங்கள்
கண்களுக்குசுத்தமான காட்சிபோலவே
சிக்கிக்கொண்டசகத்தினைச் சீயென்றெருத்துச்
சீர்பதங்காணத்தெளிந் தாடாய்பாம்பே. 75

கோபமென்னுமதயானை கொண்டமதத்தை
கூர்கொள்புத்தியங்குசத்தாற் கொன்றுவிட்டேங்கா
ண், தீபமென்னுஞ்சிற்சொருப செய்யபொருளைச்
சேர்ந்துறவுகொண்டோமென் றாடாய்பாம்பே. 76

நித்தியமென்றுமலையி னின்றுகொண்டோம்
நினைத்தபடிமுடித்து நின்மலமானோம்
சத்தியமாயெங்கள்கடந் தானழியாதே
சந்ததமும்வாழ்வாயென் றாடாய்பாம்பே. 77

மனமென்னுங்குதிரையை வாகனமாக்கி
மதியென்னுங்கடிவாளம் வாயிற்பூட்டிச்
சினமென்றுஞ்சீனிமேற் சீராயேறித்
தெளிவிடஞ்சாரிவிட் டாடாய்பாம்பே. 78

ஆசையென்னுஞ்செருப்பின்மே லடியைவைத்தே
ஆங்காரமுட்காட்டை யறமிதித்தே
காசையெனுந்தூற்குணத்திற் கனல்கொளுத்திக்
காலாகாலங்கடந்தோமென் றாடாய்பாம்பே. 79

காளமெனுங்கொடிதான கடும்பகையைக்
கற்பமெனும்வாளினாற் கடிந்துவிட்டோம்.

தாலப்பிறப்பினைத் தான்கடந்தோம்
தற்பரங்கண்டோமென் றாடாய்பாம்பே. 80

தேனில்வீழ்ந்தயீயைப்போலச் சிந்தைகுலைந்து
திகையாமற்சிற்சொரூப தெரிசனைகண்டு
வானிற்பறந்திடச்சுக வான்மணிதீர்ந்து
வாயிற்போட்டேகநின் றாடாய்பாம்பே. 81

தூக்கியபாதங்கண்டேன் சோதிகண்டேன்
சித்தவெளிக்குள்ளேயொரு கூத்தன்கண்டேன்
தாக்கியசிரசின்மேல் வைத்தபாதம்
சற்குருவின்பாதமென் றாடாய்பாம்பே. 82

ஆலமரப்பொந்திலே வாழ்ந்தபாம்பே
அரசடிப்பொந்திலே புகுந்துகொண்டாய்
வாலடிதன்னிலே பார்த்துபார்த்து
வாங்கியேதூங்கிநின் றாடாய்பாம்பே. 83

நாலுதெருவிலே நாலுகம்பம்
நடுத்தெருவிலே பொன்கம்பம்
போலும்விளங்குபொன் கம்பத்தினுக்கே
பூமாலைசூட்டிநின் றாடாய்பாம்பே. 84

ஆழிபெயர்ந்தாலுமேரு மட்டேயலையும்
அடியோடுபெயர்ந்தாலு மன்றிக்கால்
ஊழிபெயர்ந்தாலுமதி யுண்மைப்படிக்கே
உறுதிபெயராதுநின் றாடாப்பாம்பே. 85

வாயுவினையுயிரையாக வாங்கியுண்டே
வருடிக்குசீரினை வாயின்மடுத்தே
தேயுபிரைகுளிர்காய்ந்து வெட்டவெளியில்
திகைப்பறச்சேர்ந்துநின் றாடாய்பாம்பே. 86

மாசி ஏகதிவளையிலே மண்டலமிட்டே
மதியானபெரும்பட மடல்விரித்தே
ஆசில்பராபரமான வாதிபாதத்தை
அடுத்தடுத்தேதுதித் தாடாய்பாம்பே. 87

காமேலைநதிநதி காசிமுதலாய்க்
கால்கடுக்கவேவாடிற்பலன் காணலாகுமோ
வீடுபெறும்வழி நிலை மேவிக்கொள்ளவே
வேதாந்தத்துறையினின் றாடாய்பாம்பே. 88

எள்ளளவுமன்பகத்தி லில்லாதார்முத்தி
எய்துவதுதொல்லுலகி லில்லையெனவே
கள்ளப்புலன்கட்டறுத்துக் காலகாலனைக்
கண்டுதொழுதேகளித் தாடாய்பாம்பே. 89

சூரியனைக்கண்டபனி தூரவோடல்போல்
சொந்தபந்தஞ்சிந்தபரி சுத்தநலத்தில்
ஆரியனைக்கண்டுதரி சித்தேயன்புடன்
அகலாமற்பற்றித்தொடர்ந் தாடாய்பாம்பே. 90

காந்தம்வலியிரும்புபோல் மாசின்மனதைக்
காட்சியானவஸ்துவுடன் கலக்கச்சேர்த்துச்
சாந்தமுடனொன்றியின் தாமபும்போலச்
சலியாமற்றொடர்ந்துநின் றாடாய்பாம்பே. 91

உளியிட்டகற்சிலையி லுருப்போடபலன்கள்
உலகத்தின்முடிவிலுங் குண்டோவுணர்ச்சி
புளியிட்டசெம்பொற்குற்றம் போமோவஞ்ஞானம்
போகாதுமூடர்க்கென் றாடாய்பாம்பே. 92

திரளானபோரிலூசி தேடல்போன்முத்தி
சிக்காதுதேசாசார தேசிகர்தம்மால்
பருளானமூலகுரு வையர்செயலால்
னந்தங்கண்டோமென் றாடாய்பாம்பே. 93

எட்டுச்சுரக்காய்கறிக் கெய்திடாதுபோல்
எண்டிசைதிரிந்துங்கதி யெய்தவில்லையே
நாட்டுக்கொருகோயிற்கட்டி நாளும்புசித்தே
நாதன்பாதங்காணார்களென் றாடாய்பாம்பே. 94

தன்னையறிந்தொழுகுவோர் தன்னைமறைப்பார்
தன்னையறியாதவரே தன்னைக்காட்டுவார்
பின்னையொருகடவுளைப் பேணநினையார்
பேரொளியைப்பேணுவாரென் றாடாய்பாம்பே. 95

பாலிற்சுவைபோலுமெங்கும் பரந்தவொளியைப்
பற்றுப்பொன்மற்றவைத்த பான்மைபோலே
காலிற்சுழிமுனைநின்று கண்டுகொண்டு
களித்துக்களித்துநின் றாடாய்பாம்பே. 96

தேக்கெடுத்தேயோடும்வானத் தேனையுண்டபின்
தேகபந்தகொண்டனமித் தேசவாழ்வினை
ஓக்காளமென்றெண்ணி யோசையுடனே
உள்ளந்தெளிந்துநின் றாடாய்பாம்பே. 97

சதுர்வேதமாறுவகை சாஸ்திரம்பல
தந்திரம்புராணங்கலை சாற்றுமாகமம்
விதம்விதமானதான வேறுநூல்களும்
விஞ்ஞானநூல்க[illegible]ன் றாடாய்பாம்பே. 98

சமயபேதம்பலவான சாத்[illegible]ங்கள்
சகத்தோர்க்கேயல்லாது சற்சாது[illegible]கோ
சிவமயத்திலேறினபேர் சித்தமாறுமோ
சித்தர்சித்தாந்தந்தேர்ந் தாடுபாம்பே. 99

பூசைசெய்ததால்சுத்த போதம்வருமோ
பூவலஞ்செய்ததனாற் புண்ணியமுண்டோ
ஆசையற்றகாலத்திலே ஆதிவஸ்துவை
அடையலாமென்றுதுணிந் தாடாய்பாம்பே. 100

மூலவேரறிந்துகொண்டால் ...
முன்பாகவேகண்டுநித் ...ய மு...
ஞாலவேறறிந்ததாலே நான் ...
சகத்தைப்பொய்யென் ... 1.

சகத்தைநிஜமென்றிடாத த...
சமைந்ததென்றுரைப்பார்கள் ...
மகத்துவமில்லைகற்ப வன்மைய...து
மற்றும்வன்மையில்லையென் றாடாய்பாம்பே. 102

ஆயிரத்தெட்டிதழ்வீட்டி லமர்ந்தசித்தன்
அண்டமெல்லாநிறைந்திடு மற்புதசித்தன்
காயமில்லாதோங்கிவளர் காரணசித்தன்
கண்ணுலொளிபோனானென் றாடாய்பாம்பே. 103

நாற்பத்துமுக்கோணநிலை நாப்பணதாக
நாடுமக்கரச்சொரூப நாயகன்றனை
மேற்படுத்திக்கொண்டாலந்த மேலுலகெலா
மெல்லடிக்குத்தொண்டேயென் றாடாய்பாம்பே. 104

கண்டவர்களொருக்காலும் விண்டிடார்கள்
விண்டவர்களொருக்காலுங் கண்டிடார்கள்
கொண்டகோலமுள்ளவர்கள் கோணிலைகாணார்
கூத்தாடிக்கூத்தாடி யாடுபாம்பே. 105

ஆறுகலைக்குச்சுக்குள்ளே யாடுமொருவன்
அபல்வீடுபோகுமுன்னே யாண்கோலிக்கொள்
வேறுபட்டாலவன்றனை மீட்டலரிதே
மேவுமுன்னேவிடாதுகொண் டாடுபாம்பே. 106

எண்ணரியபுண்ணியங்க ளெல்லாஞ்செய்துமென்
...னைடிநெ...மதி லென்னுவிடிலே
பண்ணரியதவப்பயன் பத்திஇல்லைபேற்
பா...ழ்படுமென்றுணிந் தாடாய்பாம்பே. 107

எவ்வுலகுஞ்சேர்ந்தமர ரெய்தும்பயனென்
எங்களாதிபதாம்புய மெனுங்காலையில்
இவ்வுலகவாழ்வுதானு மின்றேவருமென்
றெண்ணிக்கர்த்தனடிநினைந் தாடாய்பாம்பே. 108

மனக்கோலங்கண்டுமிக மனமகிழ்ந்து
மக்கண்மனைசுற்றத்தோடு மயங்கிநின்றாய்
பிணக்கோலங்கண்டுபின்னுந் துறவாவிட்டால்
பிறப்புக்கேதுணையென் றாடாய்பாம்பே. 109

பிறப்பையுமிறப்பையு மறுத்துவிடயான்
பெருமருந்தொன்றுசொல்வேன் பெட்புடன்கேளா
திறப்புடன்மனப்பூட்டுஞ் சிந்தைக்கதவும்
திறந்திடும்வகையறிந் தாடாய்பாம்பே. 110

இறந்தவரைவரவ ரிஷ்டமானவர்
எய்துமவரிறந்தாரென் றெல்லவர்க்குஞ்சொல்
மறந்தவரொருவரொன்றே மண்ணிலுள்ளோர்
வகையறிந்திடவேநின் றாடாய்பாம்பே. 111

நான்கடிச்செய்யுள்.

ஆகாரமுதலிலே பாம்பதாக
ஆனந்தவயலிலே படம்விரித்தே
ஊகாரமுதலிலே யொத்தொடுங்கி
ஒழிவகாரத்தி னுக்கைநீகட்டிச்
சீகாரங்கிடந்ததோர் மந்திரத்தைச்
சித்தப்பிடாரனார் போதஞ்செய்ய
மாகாரப்பிறப்பையும் வேரறுத்து
மாயபந்தங்கடந்தோமென் றாடாய்பாம்பே. 112

தந்திரஞ்சொல்லுவோர் தம்மையறியார்
தனிமந்திரஞ்சொல்லுவார் பொருளறியார்
மந்திரஞ்ஜெபிப்பார்கள் வட்டவீட்டினுள்
மதிலினைச்சுற்றுவார் வாயல்காணார்

அந்தரஞ்சென்றுமே வேர்பிடுங்கி
அருளென்னுஞானத்தா லுண்டைசேர்த்தே
இந்தமருந்தினைத் தின்பீராகில்
இனிப்பிறப்பில்லையென் றாடாய்பாம்பே. 113

கனிமண்ணிறலொரு கப்பல்சேர்த்தே
கனமானபாய்மரங் காணநாட்டி
அளிபுலந்தன்னையே சுக்காணாக்கி
அறிவென்னுமாதாரச் சீனிதூக்கி
வெளியென்னும்வட்டத்தே யுள்ளடக்கி
வேதாந்தக்கடலினை வெல்லவோட்டித்
தெளிவுறுஞானியா ரோட்டுங்கப்பல்
சீர்பாதஞ்சேர்ந்ததென் றாடாய்பாம்பே. 114

உள்ளத்துக்குள்ளே யுணரவேண்டும்
உள்ளும்புறம்பையு மறியவேண்டும்
மெள்ளக்கனலை யெழுப்பவேண்டும்
வீதிப்புனலிலே செலுத்தவேண்டும்
கள்ளப்புலனைக் கடிந்துவிட்டுக்
கண்ணுக்குமூக்குமேற் காணநின்று
தெள்ளுபரஞ்ஜோதி தன்னைத்தேடிச்
சீர்பாதங்கண்டோமென் றாடாய்பாம்பே. 115

ஓங்காரக்கம்பத்தி னுச்சிமேலே
உள்ளும்புறம்பையு மறியவேண்டும்
ஆங்காரக்கோபத்தை யறுத்துவிட்டே
ஆனந்தவெள்ளத்தைத் தாக்கிக்கொண்டே
சாங்காலமில்லாமற் றானுவுடனே
சட்டதிட்டமாகச்சேர்ந்து சாந்தமாகவே
தூங்காமற்றூங்கியே சுகமடைந்து
தொந்தோம்தொந்தோமென் றாடாய்பாம்பே.

விரகுடத்திலே பாம்படைப்போம்
  வேதாந்தவெளியிலே விட்டோட்டுவோம்
கரணங்களைப்பிடுங்கி யிரைகொடுப்போம்
  காலக்கடுவெளிநின் றூட்டுவிப்போம்
தாரகந்தனிலேறித் தெருவுலகெங்கும்
  சுற்றிவலம்வந்துநித்திய சூக்ஷங்கண்டும்
உறையற்றமந்திரஞ் சொல்லிமீட்போம்
  ஒருநான்கும்பெற்றோமென் றாடாய்பாம்பே. 117

காயக்குடத்திலே நின்றபாம்பைக்
  கருணைக்கடலிலே தியங்கவிட்டு
நேயச்சுழிமுனை நீடுபாய்ச்சி
  நித்தியமானவஸ்துவை நிலைக்கநாடி
மாயப்பெருவெளி தன்னிலேறி
  மாசற்றபொருளினை வாய்க்கத்தேடி
ஆயத்துறைகடந் தப்பாற்பாழின்
  ஆனந்தஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. 118

மூலத்தலத்திலே நின்றகருத்தை
  முற்றுஞ்சுழிமுனை தன்னிலூடே
மேலத்தலத்திலே விந்துவட்டம்
  மேலைவழியிலே மேவிவாழும்
பாலத்திதாய்க் கருணையினால்
  பரகதிஞான சொரூபமாகி
ஆலச்சபணத்து மாலுடனின்றே
  ஆனந்தஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. 119

புலனைந்துவீதியில் வையாளியாயும்
  புரவியெனுமனதை யொருமைப்படுத்தி
புலபந்தவுலகங் கடந்ததாலே
  மன்னுகுருபாதத்தி நிலைநாடித்

தலைமேற்றுபூலோகங் கடந்ததாலே
சந்திரமண்டலங் கடந்ததாகும்
அலைவந்துபூலோகக் கடலைநீக்கி
ஆனந்தமாகிநின் றாடாய்பாம்பே. 120

குருவென்னுமாசா னுருவெடுத்துக்
குறியானஞானந் துப்பாக்கியாக்கி
அருளென்னுமருளை யுண்டையாக்கி
ஆனந்தமாகவே யதைக்கடந்தே
மருளென்னுமாதர்மந் நெறிதொட்டு
வாங்காமலெரிந்திட வெட்டையிட்டு
பருவளைக்குள்ளே பட்டதென்றே
பற்றுணைபற்றிநின் றாடாய்பாம்பே. 121

கன்னன்குகையிலே கான்மறிப்போம்
கருமானுலையிலே தீமூட்டுவோம்
சொன்னார்தலையிலே பொன்னுக்குவோம்
சுறுதியருகல்வி யொப்பஞ்செய்வோம்
மின்னார்கள்பாசத்தை விட்டெறிப்போம்
மெய்ப்பொருட்குறிகண்டு விருப்படைவோம்
பன்னாதேபன்னாதே சும்மாவிரு
பராபரஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. 122

சாதிரிப்பிரிவிலே தீமூட்டுவோம்
சந்தவெளியினிற் கோல்நாட்டுவோம்
வீதிப்பிரிவினில் விளையாட்டுவோம்
வேண்டாமதனையி லுறவுசெய்வோம்
சோதித்துலாவியே தூங்கிவிடுவோம்
சுகமானபெண்ணையே சுகித்திருப்போம்
ஆதிப்பிர்மாக்க ளைந்துபேரும்
அறிபார்களிதையென் றாடாய்பாம்பே. 123

கெட்டெழுத்தனிலே நிலைபிடித்து
நீங்காவெழுத்திலே வாலைமுறுக்கி
விட்டவ்வெழுத்திலே படம்விரித்து
விண்ணின்வழியிலே மேவியாடிப்
பட்டவெழுத்தையும் பதிந்திருப்போம்
பன்னிரண்டாமெழுத்தினிற் பண்ணிக்கூடிய
திட்டமுடனெமக்கரு டேசிகனார் தன்
சீர்பாதஞ்சேர்ந்தோமென் றாடாய்பாம்பே. 125

ஊசித்துளைக்குடத்தினிற் பாம்படைப்போ
மூலகெலாஞ்சுற்றி யுலாவிவருவோம்
மாசுள்ளபிறவியை மறந்திருப்போம்
மனமொத்தவெளியிலே விட்டாட்டுவோம்
மாசுப்புலன்களை யிரைகொடுப்போம்
மனதுற்றஉச்சியி லேறியாடுவோம்
பேசுமெழுத்தையும் விழுங்கவிடுவோம்
பிறப்பிறப்பற்றோமென் றாடாய்பாம்பே. 126

ஆணிக்குடத்திலே பாம்படைப்போம்
அக்கினிக்கோட்டைமே லேறப்பார்ப்போம்
மாணிக்கத்தூணின்மேல் விட்டாட்டுவோம்
மனம்வாக்குகாயத்தை யிரைகொடுப்போம்
நாணிக்கயிற்றையு மறுத்திடுவோம்
நமனற்றநாதன்பத நாடியேநிற்போம்
ஏணிப்படிவழிகண் டேறிவிடுவோம்
யாருமிதையறியாரென் றாடாய்பாம்பே. 127

வடக்கிழக்குமாய் நூலிழைப்போம்
மற்றுஞ்சுழலிலே பாவுபூட்டுவோம்
நடக்கும்வழியிலே யுண்டைசேர்ப்போம்
நடுவாவழியிலே புடவைநெய்வோம்

குடக்குக்கரையிலே கோல்போடுவோம்
கொய்ததையெங்குமே விற்றுவிடுவோம்
அடக்கியேகத்துள்ளே வைக்கவும்வல்லோம்
ஆதிபதங்கண்டோமென் றாடாய்பாம்பே. 127

சூத்திரக்குடத்திலே பாம்படைப்போம்
சுழிமுனைக்குள்ளே சுகித்திருப்போம்
பாத்திரங்கொண்டுமே பலியிரப்போம்
பத்தெட்டுமூன்று படிகடந்தோம்
ஊத்தைச்சடத்தினைப் புடமிடுவோம்
உளவனெமக்குநல் லுறுதிசொல்லப்
பாத்துரையிதன்மெய் பலிக்கவெண்ணிப்
பதனம்பதனமென் றுடுபாம்பே. 128

மவ்வக்குடத்திலே பாம்படைப்போம்
மணிவட்டவாசியை வாரியுண்போம்
பவ்வக்குடங்களைத் தள்ளிவிடுவோம்
வக்கிரசொர்ப்பனத் தாண்டிவிடுவோம்
பவ்வவெளியிலேவிட்டாட்டுவோம்
பஞ்சசுருவியைப் பலிகொடுப்போம்
சிவ்வுருவாகியே நின்றோமென்றே
சீர்பாதங்கண்டுதெளிந் தாடுபாம்பே. 129

பாம்பாட்டிசித்தர் பாடல்

முற்றிற்று.

சிவமயம்.

இடைக்காட்டுச்சித்தர்

காப்பு.

கலிநிலைத்துறை.

ஆதியந்தமில்லா தவனாதியைத்
தீதறும்பவன் றீப்படுபஞ்சுபோல்
மோதறும்படி முப்பொறியொத்துறக்
காதலாகக் கருத்திற்கருதுவாம்.

தாண்டவராயக்கோன் கூறுதல்.

எல்லாவுலகமு மெல்லாருயிர்களு
மெல்லாப்பொருள்களு மெண்ணரிய
வல்லாளனாதி பரமசிவனது
சொல்லாலாகுமே கோனாரே. 1

வாணியன்போல வயங்கும்பிரமமே
சூனியமென்றறிந் தேத்தாக்கால்
ஊனியலாவிக் கொருத்தியில்லையென்
றோர்ந்துகொள்ளுவீர் கோனாரே. 2

முத்திக்குவித்தான மூர்த்தியைத்தொழுது
முத்திக்குறுதிகள் செய்யாக்கால்
சித்தியும்பத்தியுஞ் சத்தியுமுத்தியுஞ்
சேராவாகுமே கோனாரே. 3

தொல்லைப்பிறவியின் றொந்தமுறவே
சோம்பலற்றுத்தவஞ் செய்யாக்கால்
எல்லையில்கடவு ளெய்தும்பதமுனக்
கில்லையென்றெண்ணுவீர் கோனாரே. 4

ஆரணமூலத்தை யன்புடனேபர
மானந்தக்கோலத்தை யன்புடனே
பூரணமாகவே சிந்தித்துநிமெஞ்ஞானம்
போதத்தைச்சார்ந்துகொள் கோனாரே. 5

காலாகாலங் கடந்திடுசோதியைக்
கற்பனைகடந்த வற்புதநீதியை
நூலாற்பெரிய சொன்னநுண்பொருளை
நோக்கத்திற்காண்பது கோனாரே. 6

சொல்லருஞ்சகள நிட்களமானதைச்
சொல்லாற்சொல்லாமல் கோனாரே
அல்லும்பகலு மகத்திருத்திடி
லந்தகன்கிட்டுமோ கோனாரே. 7

சூரியன்வாள்பட்ட தூய்யபணிகெடுந்
தோற்றம்போல்வெவ்வினை தூள்படவே
நாரியிடப்பாகன்ற னெஞ்சியிற்போற்றியே
நற்கதிசேர்ந்திடு கோனாரே. 8

மும்மலநீக்கிட முப்பொறிக்கொட்டாத
முப்பாழ்கிடந்த வப்பாழைச்
செம்மறியோட்டிய வேலையமைத்துஞ்
சிந்தையில்வைப்பீரே கோனாரே. 9

பஞ்சவிதமாய்ச் சஞ்சலம்பறக்கப்
பற்றறநின்றதைப் பற்றியன்பாய்
நெஞ்சத்திருத்தி யிரவும்பகலுமே
நேசித்துக்கொள்ளுவீர் கோனாரே. 10

நாராயணக்கோன் கூறுதல்.

கொச்சகக்கலிப்பா.

சீரார்சிவக்கொழுந்தைத் தெள்ளமுதைச்செந்தேனைப், பாராதிவான்பொருளைப் பஞ்சதருவானவொன்றைப், போனவிண்ணொளியைப் பேரின்பவாரிதியை, நோகவெந்நாளு நெஞ்சிருத்திவாழ்வேனே.

கண்ணுண்மணியைக் கற்பகத்தைக் காஞ்சனத் தைப், பெண்ணுருவிப்பாதியிணை பேசரியமுப்பொ ருளை, விண்ணினமுதை விளக்கொளியை வெங்கதி ரைத், தண்ணளியையுள்ளில்வைத்துச் சாரூபஞ்சா ருவனே. 12

கண்ணி தரு.

மனமென்னுமாட்டடங்கிற் றாண்டவக்கோனே-முத்தி
வாய்த்ததென்றெண்ணேடா தாண்டவக்கோனே.

சினமென்னும்பாம்பிறந்தாற் றாண்டவக்கோனே-யா
வுஞ், சித்தியென்றேநினையேடா றாண்டவக்கோனே
ஆசையெனும்பசுமாளிற் றாண்டவக்கோனே. 14

ஆசையெனும்பசுமாளிற் றாண்டவக்கோனே-இந்த
அண்டமெல்லாங்கண்டறிவாய் தாண்டவக்கோனே.

ஓசையுள்ளடங்குமுன்னர் தாண்டவக்கோனே-மூல
த், தோங்காரங்கண்டறிநீ தாண்டவக்கோனே. 16

மூலப்பகுதியறத் தாண்டவக்கோனே-உள்ள
முளைத்ததவர்பிடுங்கேடா தாண்டவக்கோனே. 17

சாலக்கடத்தியல்பு தாண்டவக்கோனே-மலச்
சாலென்றேதேர்ந்தறி தாண்டவக்கோனே. 18

பற்றேபிறப்புண்டாக்கு தாண்டவக்கோனே - அ
தைப், பற்றுதறுத்துவிடு தாண்டவக்கோனே. 19

சற்றேபிரமத்திச்சை தாண்டவக்கோனே-உன்னுள்
சலியாமல்வைக்கவேண்டுந் தாண்டவக்கோனே. 20

அவித்தவித்துமுளையாதே தாண்டவக்கோனே-பத்
தி, அற்றவர்கதியடையார் தாண்டவக்கோனே. 21

செவிதனிற்கேளாதமறை தாண்டவக்கோனே-குரு
செப்பில்வெளியாமலிலை தாண்டவக்கோனே. 22

கட்டளைக் கலித்துறை.

மாடுமனைகளு மக்களுஞ் சுற்றமும் வாண்பொரு ளும்; வீடும்பனைகளும் வெண்பொன்னுஞ் செம்பொ ன்னும் வெண்கலமும், காடுங்கரைகளுங் கல்லாம்ப ணியுங் கரிபரியுந், தேடும்பலவண்டமு மில்லாசிவகதி சேர்மின்களே. 23

நேரிசை வெண்பா.

போகம்போம் போக்கியம்போம் போஜனம்போம் புண்மைபோம், மோகம்போம் மூர்க்கம்போம் மோ சம்போம் தாகம்போம் வேதமுதலாகமங்கள் மே லானதென்று பலகால், ஓதுபிரமத்துற்றக்கால். 24

தாண்டவராயக்கோன் - தரு.

தாந்திமித்திமி தந்தக்கோனாரே
திந்திமித்திமி திந்தக்கோனாரே.
ஆநந்தக்கோனாரே அருள்
ஆநந்தக்கோனாரே.

ஆயிரத்தெட்டு வட்டமுங்கண்டேன்
அந்தவட்டத்துள்ளே நின்றதுங்கண்டேன்
மாயிருஞாலத்து நாற்றெட்டும்பார்த்தேன்
மந்தமனத்துறுஞ் சந்தேகந்தீர்த்தேன். (தாந்)

அந்தக்கரணமெனச் சொன்னநாலெட்டையும்
அஞ்ஞானமென்னு மடர்ந்தவன்காட்டையும்
சிந்தத்தவமென்னும் வாளினால்வெட்டினேன்
சாவாதிருந்திடக் கோட்டையுங்கட்டினேன். (தாந்)

மெய்வாய்கண்மூக்குச் செவியெனுமைந்தாட்டை
வீறுஞ்சுவையொளி யூறோசையாங்காட்டை
எய்யாமலோட்டினேன் வாட்டினேனோட்டினேன்
ஏகவெளிக்குள்ளே யோகவெளிக்குள்ளே. (தாந்)

பற்றிரண்டுமறப் பண்புற்றேனான்புற்றேன்
பாலையுமுட்கொண்டேன்மேலைப்பாற்கட்கொண்டேன்

சிற்றின்பநீங்கினேன் மற்றின்பநோக்கினேன்
சிற்பரஞ்சேர்ந்திட்டேன் தற்பரஞ்சார்ந்திட்டேன்.

அண்ணாக்கையூடே யடைத்தேயமுதுண்ணேன்
அந்தரந்தரத்தை யப்போழுதேயெண்ணேன்
வுண்ணாரூமொழியை மேவிப்பூசைபண்ணேன்
மெஞ்ஞானமொன்றன்றி வேறேயொன்றைநண்ணே.

மண்ணாதிபூதங்க ளைந்தையுங்கண்டேனே
மாயாவிகாரங்கள் யாவையும்விண்டேனே
விண்ணொளிமொளியை மெய்யினுட்கொண்டேனே
மேதினிவாழ்வினை மேலாகவேண்டேனே. (தாந்)

வாக்காதியைந்தையும் வாக்காய்த்தெரிந்தேனே
மாயைசம்பந்தங்க ளைந்தும்புரிந்தேனே
நோக்கரும்யோகங்க ளைந்தும்புரிந்தேனே
நுவலுமற்றைந்தியோக நோக்கம்புரிந்தேனே. (தாந்)

ஆறுதாரத் தெய்வங்களோநாடு
அவர்க்குமேலான வாதியைத்தேடு
கூறுனவட்டாவா நந்தத்திற்கூடு
கோசமைந்துங்கண்டு குன்றெறிக்கூத்தாடு (தா)

நாராயணகோன் கூறுதல்.

ஆதிபகவானையே — பசுவே
யன்பாய்நினைப்பாயேல்
சோதிபாகதிதான் — பசுவே
சொந்தமதாகாதோ. 33

எங்குநிறைப்பொருளைப் — பசுவே
யெண்ணிப்பணிவாயேல்
தங்கும்பரகதியில் — பசுவே
சந்ததஞ்சாருவையே. 34

அல்லும்பகலுநிதம் பசுவே
யாதிபதந்தேடில்
புல்லுமோட்சநிலை பசுவே
பூரணங்காண்பாயே. 35

ஒன்றைபிடித்தோர்க்கோர் பசுவே
உண்மைவசப்படுமே
நின்றநிலைதனிலே பசுவே
நேர்மையறிவாயே. 36

எல்லாமிருந்தாலும் பசுவே
யீசனருளில்லையே
இல்லாத்தன்மையென்றே பசுவே
யெண்ணிப்பணிவாயே. 37

தேவனுதவியன்றிப் பசுவே
தேர்ந்திடில்வேறொன்றில்லை
ஆவிக்குமாவியதாம் பசுவே
யத்தன்றிருவடியே. 38

தாயினுமன்பனன்றோ பசுவே
சத்திக்குள்ளானவன்றான்
நேயமுடையவர்பால் பசுவே
நீங்காதிருப்பானே. 39

முத்திக்குவித்தானேன் பசுவே
மூலப்பொருளானேன்
சத்திக்குறவானேன் பசுவே
தன்னைத்துதிப்பாயே. 40

ஐயன்றிருப்பாதம் பசுவே
யன்புற்றுநீபணிந்தால்
வெவ்வினைகளெல்லாம் பசுவே
விட்டோடுங்கண்டாயே. 41

சந்திரசேகரன்றாள் பசுவே
தாழ்ந்துபணிவாயேல்
இந்திரன்றன்முதலோர் பசுவே
யேவல்புரிவாரே. 42

கட்புலன்காணவொண்ணாய் பசுவே
கர்த்தனடியிணையை
உட்புலன்கொண்டேத்திப் பசுவே
யுன்னதமெய்வாயே. 43

கூட்டியுங்காணவொண்ணாய் பசுவே
சூனியமானவஸ்தை
ஓட்டிப்பிடிப்பாயேன் பசுவே
யுன்னைநிகர்ப்பவர்யார். 44

தன்மனந்தன்னாலே பசுவே
தானாவைச்சாராதார்
வன்மரமொப்பாகப் பசுவே
வையத்துரைப்பாரே. 45

சொல்லென்றுநற்பொருளாம் பசுவே
சோதியைப்போற்றாக்கால்
இல்லென்றுமுத்திநிலை பசுவே
யெப்பொருளுஞ்சொல்லுமே. 46

பலரொடு கிளத்தல்.

கண்ணுண்மணியைக் கருதியடேரொளியை
விண்ணின்மணியை விளக்கொளியைப்போற்றீரே.

மனம்வாக்காயமெனும் வாய்ந்தபொறிக்கெட்டாத
தினகரனைநெஞ்சமதிற் சேவித்துப்போற்றீரே. 48

கால்மூன்றுங்கடந்த கதிரொளியையுள்ளத்தாற்
சாலமின்றிப்பற்றிச் சலிப்பறவேபோற்றீரோ. 49

பாலிற்சுவைபோலும் பழத்தின்மதுப்போலும்
நாவிற்பொருள்போலு நண்பொருளைப்போற்றீரே.

மூவர்முதலை முக்கனியைச்சர்க்கரையைத்
தேவர்பொருளைத் தெள்ளமுதைப்போற்றீரே. 51

தூயமறைப்பொருளைச் சுகவாரிதியமிர்தை
நேயமுடனுரு நிலைபெறவேபோற்றீரே. 52

சராசரத்தைத்தந்த தனிவானமூலமென்னும்
பராபரத்தைப்பற்றிப் பவமறவேபோற்றீரே. 53

மண்ணாதிபூதமுதல் வகுத்தவொருவான்பொருளைக்
கண்ணாரக்காணக் கருத்திசைந்துபோற்றீரே. 54

மெய்ப்பொருளைவிட்டுப் புலமறியவொண்ணாத
மெய்ப்பொருளைநாளும் விருப்புற்றுப்போற்றீரே. 55

எள்ளிற்றைலம்போ லெங்குநிறைபொருளை
உள்ளிற்றுதித்தே யுணர்வடைந்துபோற்றீரே. 56

நெஞ்சொடு கிளத்தல்.

பூமியெல்லா மோர்குடைக்கீழ் பொருந்தவரசாளுதற்கு, காமியம்வைத்தாலுணக்குக் கதியுளதோர் கன்மனமே. 57

பெண்ணாசைகொண்டு பேணித்திரிந்தாக்கால்
விண்ணாசைவைக்க விதியிலையேகன்மனமே. 58

மேயும்பொறிகடமை மேலிடவொட்டார்க்குவினை
தேயுமென்றேநல்வழியிற் செல்லுநீகன்மனமே. 59

பொன்னிச்சைகொண்டு பூமிமுற்றுந்திரிந்ததனாற்
மன்னிச்சைமோக்கம் வாய்க்குமோகன்மனமே. 60

பொய்யான கல்விகற்றுப் பொருண்மயக்கங் கொள்ளாமல், மெய்யானஞானகல்வி விரும்புவாய் கன்மனமே. 61

பேய்க்குரங்குபோலப் பெருலகிலிச்சைவைத்து,நாய் நரிகள்போலலைந்தா னன்மையுண்டோ கன்மனமே.

இரும்பைஇழுக்கிடுங் காந்தத் தியற்கைபோற் புலபொருளை, விரும்பின்காலவைநிலையோ விளம்பு வாய்கன்மனமே. 63

கற்பநிலையாலலவோ கற்பகாலங்கடத்தல் சொற்பநிலைமற்றநிலை சூட்சங்காண்கன்மனமே. 64

தேகமிழுப்பதற்குச் செபஞ்செய்தென் றபஞ்செய் தென், யோகமட்டுஞ்செய்தாலென் யோசிப்பாய் கன் மனமே. 65

சாகாதிருப்பதற்குத் தான்கற்றருங்கல்வியன்றோ வாகானமெய்க்கல்வி வகுத்தறிநீகன்மனமே. 66

அறிவொடு கிளத்தல்.

எல்லாபொருள்களையு மெண்ணப்படிபடைத்த வல்லாளன்றன்னை வகுத்தறிநீ புல்லறிவே. 67

கட்புலனுக்கெவ்வளவும் காணாதிருந்தெங்கும் உட்புலனைநின்றவொன்றை யுய்த்தறிநீபுல்லறிவே.

விழித்திருக்கும் வேளையிலே விரைத்துறக்கமுண் டாகும், செழித்திதங்கு மான்மழுவைத் தேர்ந்தறிநீ புல்லறிவே. 69

மெய்யிலொருமெய்யாகி மேலாக்கிக்காலாக்கிப் பொய்யிலொருபொய்யாகும் புலமறிநீபுல்லறிவே.

ஆத்துமத்தின்கூறான வவயவமேயுன்னுடனே கூத்துபுரிகின்ற கோளறிவாய்புல்லறிவே. 71

இருட்டறைக்குநல்விளக்கா யிருக்குமுன்றன் வல் லமையை, அருட்டுறையணிறுத்திவுளக் காகுநீ புல்ல றிவே. 72

நல்லவழியிற்சென்று நம்பதவிபெய்தாமல்
கொற்றவழியிற்சென்று குறுகுவதேன்புல்லறிவே.

கைவிளக்குக்கொண்டு கடலில்வீழ்வார்போல [வே
மெய்விளக்குன்னுள்ளிருக்க வீழ்குவதேன் புல்லறி

வாசிக்குமேலான வான்கதியுன்னுள்ளிருக்க
யோசிக்குமேற்கதிதானுனக்கரிதோபுல்லறிவே. 75

அன்னையைப்போலெவ்வுயிரு மன்புடனே காத்துவ
ரும், முன்னவனைக்கண்டு முத்திபடை—புல்லறிவே.

சித்தத்தொடு களித்தல்.

அஞ்ஞானம்போயிற்றென்று தும்பீ-பற
மாநந்தங்கொண்டோமென்று தும்பீபற
மெஞ்ஞானம்வாய்த்ததென்று தும்பீபற-மலை
மேலேறிக்கொண்டோமென்று தும்பீபற. 77

அல்லல்வலையில்லையென்றே தும்பீ பற-நிறை
ஆணவங்களற்றோமென்றே தும்பீபற
தொல்லைவினைநீங்கிற்றென்றே தும்பீபற
பரஞ்சோதியைக்கண்டோமெனத் தும்பீபற ()

ஐம்பொறியடங்கினவே தும்பீபற-நிறை
அருவேபொருளெனத் தும்பீபற
செம்பொருள்கள்வாய்த்தனவே தும்பீபற
சித்தத்தையுள்வைத்தனவே தும்பீபற. 79

மூவாசைவிட்டோமென்றே தும்பீபற-மா
முத்திநிலைசித்தியென்றே தும்பீபற
தேவாசைவைத்தோமென்று தும்பீபற-இந்தச்
செகத்தையொழித்தோமென்று தும்பீபற. 80

பாழ்வெளிநோக்கியே தும்பீபற-மாயைப்
பற்றற்றோமென்றேநீ தும்பீபற
தாழ்விடமென்றெய்தோந் தும்பீபற-நிறை
வள்ளநிலைச்சார்ந்தோமோ தும்பீபற.

எப்பொருளுமேகனமென்றே தும்பீபற-உல
கெல்லாமழியுமென்றே தும்பீபற
அப்பிலெழுத்துடலென்றே தும்பீபற-என்று
மழிவில்லாததிதென்று தும்பீபற. 82

குயிலொடு கிளத்தல்.

சாணங்களொருநான்கு மடங்கினவே-கெட்டக்
காமமுதலோராறு மொடுங்கினவே
சாணங்களொருநான்குங் கண்டனமென்றே-நிறை
சந்தோஷமாகவே கூவுகுயிலே. 83

உலகமோக்காளமென்றூதுகுயிலே-எங்க
ளுத்தமனைக்காண்பரிதென் றூதுகுயிலே
பலமதம்பொய்ம்மையென் றூதுகுயிலே-எழு
பவமகன்றிட்டோமென் றூதுகுயிலே. 84

சாதனங்கள்செய்தவர்கள் சாகார்குயிலே-எல்லாத்
தத்துவங்கடேர்ந்தவர்கள் வேகார்குயிலே
மாதவங்கள்போலும்பலன் வாயாக்குயிலே-மூல
மந்திரங்களான்மகிமை வாய்க்குங்குயிலே. 85

எட்டிரண்டறிந்தோர்க்கிடரில்லைகுயிலே-மன
மேகாமனிற்கிற்கதி யெய்துங்குயிலே
நட்டணையைசார்ந்தறிந்து கொள்ளுங்குயிலே- ஆதி
நாயகனைநினைவில்வைத்தோதுகுயிலே. 86

மயிலொடு கிளத்தல்.

ஆதியிலேநடமாடுமயிலே-எங்கள்
ஆதிபனிசேடனெங்க ளாடுமயிலே
கூடுபோகுமுன்னங்கதி கொள்ளுமயிலே-என்றுங்
குறையாமன்மோனநெறி கொள்ளுமயிலே. 87

இல்லறமேவயல்லவென் றாடுமயிலே-பத்தி
இல்லவர்க்குமுத்திசித்தி யில்லைமயிலே
நல்லறமேதுறவறங்காணுமயிலே-முத்த
நாதாந்தவெட்டவெளி நாடுமயிலே. 88

கற்றுணைப்போன்மனதைக் காட்டுமயிலே-வரும்
காலனையுந்தூரத்தி லோட்டுமயிலே
பற்றாடுருவவே பாடுமயிலே-அகப்
பற்றுச்சற்றில்லாமற் பண்ணுமயிலே. 89

அன்னத்தொடு கிளத்தல்.

சிறுதவளை தான்கலக்கிற் சிந்துரத்தினிழன்மறையும்
மறுவாயைதான்கலக்கின் மதிமயங்குமடவனமே. 90

காற்றின்மரமுறியுங் காட்சியைப்போனல்லறிவு
தூற்றிவிடிலஞ்ஞானந் தூரப்போமடவனமே. 91

அக்கினிபாற்பஞ்சுபொதி யழிந்திட்டவாறேபோல்
பக்குவநல்லறிவாலே பாம்போமடவனமே. 92

குளவிபுழுவைக்கொணர்ந்து கூட்டிலிருப்படுத்தல் போல், வளமுடையவுன்மனதை வசப்படுத்து மடவனமே. 93

அப்புடனேயுப்புச்சேர்ந் தளவுசரியானதுபோல்
ஒப்புறவேபிரமமுட னொன்றிநில்லுமடவனமே. 94

காய்ந்தவிரும்புநிறங் காட்டுதல்போலாத்துமத்தை
வாய்ந்திலங்கச்செய்து வளம்பெருமேமடவனமே. 95

புல்லாங்குழலூதல்.

தொல்லைப்பிறவி தொலைகார்க்குமுத்திதான்
இல்லையென்றூதுகுழல்-கோனே
இல்லையென்றூதுகுழல். 96

இந்திரபோகங்களெய்தினுந் தொல்லையென்
றந்தமாயூதுகுழல்-கோனே
அந்தமாயூதுகுழல். 97

மோனநிலையினின் முத்தியுண்டாமென்றே
கானமாயூதுகுழல்-கோனே
கானமாயூதுகுழல். 98

நாய்ப்போற்பொறிகளை நாலுவிதம்விட்டோர்
பேயரென்றூதுகுழல்-கோனே
பெயரென்றூதுகுழல். 99

ஓடித்திரிவோர்க் குணர்வுகிட்டும்படி
சாடியேயூதுகுழல்-கோனே
யாடியேயூதுகுழல். 100

ஆட்டுக்கூட்டங்களை யண்டும் புலிகளை
ஓட்டியேயூதுகுழல்-கோனே
ஓட்டியேயூதுகுழல். 101

மட்டிக்குணமுள்ள மாரீசநாய்களை
கட்டிவைத்தூதுகுழல்-கோனே
கட்டிவைத்தூதுகுழல். 102

கட்டாதநாயெல்லாங் காவலுக்கெப்போதும்
கிட்டாதென்றூதுகுழல்-கோனே
கிட்டாதென்றூதுகுழல். 103

பெட்டியிற்பாம்பெனப் பேய்மனதடங்க
ஓட்டியேயூதுகுழல்-கோனே
ஓட்டியேயூதுகுழல். 104

ஏனென்றும்யானென்றும் மில்லாதிருக்கவே
தனதாகவூதுகுழல்-கோனே
தனதாகவூதுகுழல். 105

அற்றவிடமொன்றே யற்றநீதாடுற்றதைக்
கற்றனென்றூதுகுழல்-கோனே
கற்றனென்றூதுகுழல். 106

பால்கறத்தல்.

சாவாதிருந்திடப்பால்கற-சிவம்
தன்னிலிருந்திடும் பால்கற
வேவாதிருந்திடப் பால்கற-வெறும்
வெட்டவெளிக்குள்ளே பால்கற. 107

தோயாதிருந்திடும் பால்கற-முன்
தொல்லைவினையறப் பால்கற
வாயாலுமிந்திடும் பால்கற-வெறும்
வயிறாரவுண்டிடப் பால்கற. 108

நாறுதிருந்திடும் பால்கற-நெடு
நாளுமிருந்திடப் பால்கற
மாறுதொழுகிடும் பால்கற-தலை
மண்டையில்வளரும் பால்கற. 109

உலகம்வெறுத்திடும் பால்கற-மிக
ஒக்காளமாகிய பால்கற
கசத்திலுடவிளை பால்கற-நிறை
கண்டத்திலுள்விழப் பால்கற. 110

ஏப்பம்விடாமலே பால்கற-வரும்
ஏமன்விலகவே பால்கற
தீப்பொறியோய்ந்திடப் பால்கற-பர
சிவத்துடன்சாரவே பால்கற. 111

அண்ணாவின்மேல்வரும் பால்கற-பேர்
அண்டத்திலூறிடும் பால்கற
விண்ணாட்டிலில்லாத பால்கற-தொல்லை
வேதனைக்கெடவே பால்கற. 112

இடைக்கட்டுதல்.

இருவினையாமாடுகளை யேகவிடுக்கோனே-இன்
இடக்குடமாடொன்றை யடக்கிவிடுக்கோனே. 113

சாற்றியநைட்டிகரே தற்பரத்தைசார்வார்-நாளும்
தவமவமாக்கழிப்பவரே சன்னமதில்வருவார். 114

அகங்காரமாடுகண்முன் றகற்றிவிடுகோனே-நாளும்
அவத்தைவெனுமாடைந்தை யடக்கிவிடுகோனே.

ஒருமலத்த னென்னுமாட்டை பொதிக்கிக்கட்டு
கோனே-உடன் உறையுமிருமலந்தனையு மோட்டிக்
கட்டுகோனே. 116

மும்மலத்தி னெனுமாட்டை முறுக்கிக்கட்டு கோ
னே-மிக, முக்கால நேர்மையெல்லா முன்பறிவாய்
கோனே. 117

இந்திரியத் திரையங்களை இறுக்கிவிடு கோனே
என்றும், இல்லையென்றே மரணங் குழலெடுத்தூது
கோனே. 118

உபாதியெனு மூன்றுடைய யோட்டிடுகோனே
உனக், குள்ளிருக்குங்கள்ளமெல்லாமோடிப்போங்கு
கோனே. 119

மூக்காயமாடுகளை முன்னங்கட்டுகோனே-இனி
மோசமில்லைநாசமில்லை முத்தியுண்டாங்கோனே.

கன்மபலமாடுகளைத் கடக்கட்டுகோனே-மற்றக்
கன்மத்திரயப்பசுவைக் கடையிற்கட்டுகோனே. 121

காரணக்கோ மூன்றனையுங் கால்பிணிப்பாய்கோ
னே-நல்ல, சைவசமாஞ் சாதனங்கள்கடைபிடிப்பாய்
கோனே. 122

வேறு-தரு.

பிரமாந்தரத்திற் பேரொளிகா ணெங்கள்கோனே
வாய், பேசாதிருந்துபெரு நிட்டைசா ரெங்கள்கோ
னே. 123

சிரமத்திற்கமலச்சேவை தெரிந்தெங்கள்கோனே-முத்தி, சித்திக்குந் தந்திரஞ் சித்தத்தறி யெங்கள் கோனே. 124

விண்ணாடி வஸ்துவை மெய்யறிவிற்காணுங் கோனே-என்றும், மெய்யே மெய்யிற்கொண்டு மெய்யறிவிற்செல்லுங் கோனே. 125

கண்ணாடியுன்னுள்ளே கண்டுபார்த்துக்கொள்ளுங்கோனே-ஞானக், கண்ணன்றிக் கண்ணாடி காணவொண்ணாதெங்கள் கோனே. 126

சூனியமானதைச் சுட்டுவா ரெங்குண்டுகோனே-புத்தி, சூக்குமமேயதைச் சுட்டுமென்றெண்ணங்கள் கோனே. 127

நித்தியமானது நேர்படிலே நிலைகோனே-என்றும், நிற்குமென்றேகண்டு நிச்சயங்காணெங்கள் கோனே. 128

சத்தியும்பரமுந் தன்னுட்கலந்ததேகோனே-நிட்டை, சாதிக்கிலிரண்டுந் தன்னுள்ளே காணலாங் கோனே. 129

மூகைபோலிருந்து மோனத்தைச்சாதி யெங் கோனே-பர, மூலநிலைகண்டு முட்டுப்பிறப்பறு கோனே. 130

இடைக்காட்டுசித்தர் பாடல்

முற்றிற்று.

சிவமயம்.

அகப்பைசித்தர் பாடல்.

நஞ்சுண்ணவேண்டாமே அகப்பேய்
நாயகன்றாள்பெறவே
நெஞ்சுமலையாதே அகப்பேய்
நீயொன்றுஞ்சொல்லாதே. 1

பராபரமானதடி அகப்பேய்
பரவையாகவந்ததடி
தராதலமேழ்புவியும் அகப்பேய்
தானேபடைத்ததடி. 2

நாதவேதமடி அகப்பேய்
நன்னடங்கண்டாயோ
பாதஞ்சத்தியடி அகப்பேய்
பரவிந்துநாதமடி. 3

விந்துநாதமடி அகப்பேய்
மெய்யாகவந்ததடி
ஐந்துபெரும்பூதம் அகப்பேய்
அதனிடமானதடி. 4

நாலுபாதமடி அகப்பேய்
நன்னெறிகண்டாயே
மூலமானதல்லால் அகப்பேய்
முத்தியல்லவடி. 5

வாக்காதியைந்தடியோ அகப்பேய்
வந்தவகைகேளாய்
ஓங்காரமானதடி அகப்பேய்
உண்மையதல்லவடி 6

சத்தாதியைத்தடியோ அகப்பேய்
சாத்திரமானதடி
மித்தையமாகுதடி அகப்பேய்
மெய்யதுசொன்னேனே. 7

வசனாதியைந்தடியோ அகப்பேய்
வண்மையாய்வந்ததடி
தேசநாடிபத்தேதடி அகப்பேய்
திடனிதுகண்டாயே. 8

காரணமானதெல்லாம் அகப்பேய்
கண்டதுசொன்னேனே
மாரணங்கண்டாயே அகப்பேய்
வந்தவிதங்களெல்லாம். 9

ஆறுதத்துவமும் அகப்பேய்
ஆகமஞ்சொன்னதடி
மாருதமண்டலமும் அகப்பேய்
வந்ததுமூன்றடியே. 10

பிருதிவிபொன்னிறமே அகப்பேய்
பேதமையல்லவடி
உருவதுநீரடியோ அகப்பேய்
உள்ளதுவெள்ளையடி. 11

தேயுசெம்மையடி அகப்பேய்
திடனதுகண்டாயே
வாயுநீலமடி அகப்பேய்
வான்பொருள்சொல்வேனே. 12

வானமஞ்சடியோ அகப்பேய்
வந்ததுநீகேளாய்

ஊனமதாகாதே அகப்பேய்
உள்ளதுசொன்னேனே. 13

அகாரமித்தனையும் அகப்பேய்
அங்கென்றெழுந்ததடி
உகாரங்கூடியடி அகப்பேய்
உருவாகிவந்ததடி. 14

மகாரமாயையடி அகப்பேய்
மலமதுசொன்னேனே
சிகாரமூலமடி அகப்பேய்
சிந்தித்துக்கொள்வாயே. 15

வன்னம்புவனமடி அகப்பேய்
மந்திரதந்திரமும்
இன்னமுஞ்சொல்வேனே அகப்பேய்
இம்மென்றுகேட்பாயே. 16

அத்திவரைவாடி அகப்பேய்
ஐம்பத்தோரட்சரமும்
மித்தையாங்கண்டாயே அகப்பேய்
மெய்யென்றுநம்பாதே. 17

தத்துவமானதடி அகப்பேய்
சகலமாய்வந்ததடி
புத்தியுஞ்சொன்னேனே அகப்பேய்
பூதவடிவல்லவோ. 18

இந்தவிதங்களெல்லாம் அகப்பேய்
எம்மிறையல்லவடி
அந்தவிதம்வேறே அகப்பேய்
ஆருய்ந்துகாணுயோ. 19

பாவந்தீரவென்றால் அகப்பேய்
பாவிக்கலாகாதே

சாவதுமில்லைபடி அகப்பேய்
சற்குருபாதமடி! 20

எத்தனைசொன்னாலும் அகப்பேய்
என்மனந்தேறாதே
சித்தமசித்துவிட்டு அகப்பேய்
சேர்த்துநீகாண்பாயே. 21

சமயமாறுமடி அகப்பேய்
தன்னாலேவந்ததடி
அமையாநின்றவிடம் அகப்பேய்
ஆராய்ந்துசொல்வாயே. 22

ஆறாறுமாகுமடி அகப்பேய்
ஆகாதுசொன்னேனே
வேறேயுண்டானால் அகப்பேய்
மெய்யதுசொல்வாயே. 23

உன்னையறிந்தாக்கால் அகப்பேய்
ஒன்றையுஞ்சேராயே
உன்னையறியும்வகை அகப்பேய்
உள்ளதுசொல்வேனே. 24

சரியையாகாதே அகப்பேய்
சாலோகங்கண்டாயே
கிரியைசெய்தாலும் அகப்பேய்
கிட்டுவதொன்றுமில்லை. 25

யோகமாகாதே அகப்பேய்
உள்ளதுகண்டாக்கால்
தேகஞானமடி அகப்பேய்
தேடாதுசொன்னேனே. 26

ஐந்துதலைநாகமடி அகப்பேய்
ஆதாயங்கொஞ்சமடி

இந்தவிஷந்தீர்க்கும் அகப்பேய்
எம்பிறைகண்டாயே. 27

இறைபவனென்றதெல்லாம் அகப்பேய்
எந்தவிதமாகும்
அறையநீவேகேளாய் அகப்பேய்
ஆனந்தமானதடி. 28

கண்டுகொண்டேனே அகப்பேய்
காதல்விண்டேனே
உண்டுகொண்டேனே அகப்பேய்
உள்ளதுசொன்னேயே. 29

உள்ளதுசொன்னாலும் அகப்பேய்
உன்னைகொண்பாயே
கள்ளமுந்தீராதே அகப்பேய்
கண்டார்க்குகர்மமடி. 30

அறிந்துநின்றாலும் அகப்பேய்
அஞ்சார்கள்சொன்னேனே
புரிந்தவல்வினையும் அகப்பேய்
போகாதேயுன்னைவிட்டு. 31

ஈசன்பாசமடி அகப்பேய்
இவ்வண்ணங்கண்டதெல்லாம்
பாசம்பயின்றதடி அகப்பேய்
பரமதுகண்டாயே. 32

சாத்திரசூத்திரமும் அகப்பேய்
சங்கற்பமானதெல்லாம்
பார்த்திடலாகாதே அகப்பேய்
பாழ்பலங்கண்டாயே. 33

ஆறுகண்டாயோ அகப்பேய்
அந்தவினைதீர

தேறித்தெளிவதற்கே அகப்பேய்
 தீர்த்தமுமாடாயே. 34

எத்தனைகாலமுந்தான் அகப்பேய்
 யோகமிருந்தாலென்
முத்தனுமாவாயோ அகப்பேய்
 மோட்சமுமுண்டாமோ. 35

நாசமாவதற்கே அகப்பேய்
 நாடாதேசொன்னேனே
பாசம்போனாலும அகப்பேய்
 பசுக்களும்போகாதே. 36

நாணமேதுக்கடி அகப்பேய்
 நல்வினை தீர்ந்தாக்கால்
காணவேணுமென்றால் அகப்பேய்
 காணக்கிடையாதே. 37

சும்மாயிருந்துவிடாய் அகப்பேய்
 சூத்திரஞ்சொன்னேனே
சும்மாயிருந்தவிடம் அகப்பேய்
 சுட்டதுகண்டாயே. 38

உன்றனைக்காணாதே அகப்பேய்
 ஊனுள்நுழைந்தாயே
என்றனைக்காணாதே அகப்பேய்
 இடத்திலேதந்தாயே. 39

வானமோடிவரில் அகப்பேய்
 வந்துபிறப்பாயே
தேனையுண்ணாமல் அகப்பேய்
 தெருவோடலைந்தாயே. 40

சைவமானதடி அகப்பேய்
 தானாகநின்றதடி

சைவமில்லை பாகில் அகப்பேய்
ஜலம்வருங்கண்டாயே. 41

ஆசைபற்றவிடம் அகப்பேய்
ஆசாரங்கண்டாயே
ஈசன்பாசமடி அகப்பேய்
எங்ஙனஞ்சென்றாலும். 42

ஆணவமூலமடி அகப்பேய்
அகாரமாய்வந்ததடி
கோணுமுகாரமடி அகப்பேய்
கூடப்பிறந்ததுவே. 43

ஒன்றுமில்லையடி அகப்பேய்
உள்ளபடியாச்சே
நன்றில்லை தீதில்லை அகப்பேய்
நாணமுமில்லையடி. 44

சும்மாயிருந்தவிடம் அகப்பேய்
சுட்டது சொன்னேனே
எம்மாயமதறியேன் அகப்பேய்
என்னையுங்காணேனே. 45

கலைகளேதுக்கடி அகப்பேய்
கண்டார்நகையாரோ
நிலைகளேதுக்கடி அகப்பேய்
நீயார்சொல்வாயே. 46

இந்தவயிர்தமடி அகப்பேய்
இரவிவிஷமோடி
இந்துவெள்ளையடி அகப்பேய்
இரவிசிவப்பாமே. 47

ஆணல்லபெண்ணல்லவே அகப்பேய்
அக்கினிகண்டாயே

தானுவுமிப்படியே அகப்பேய்
சற்குருகண்டாயே. 48

என்னபடித்தாலும் அகப்பேய்
எம்முறையாகாதே
சொன்னதுகேட்டாயே அகப்பேய்
சும்மாயிருந்துவிடு. 49

காடுமலையுமடி அகப்பேய்
கடுந்தவமானாலென்
வீடுவெளியாமோ அகப்பேய்
மெய்யாகவேண்டாமோ. 50

பாத்திலேசென்றாலும் அகப்பேய்
பாரிலேமீளுமடி
பாத்துக்கடுத்தவிடம் அகப்பேய்
பாழதுகண்டாயே. 51

பஞ்சமுகமேது அகப்பேய்
பஞ்சுபடுத்தாலே
குஞ்சிதபாதமடி அகப்பேய்
குருபாதங்கண்டாயே. 52

பங்கமில்லையடி அகப்பேய்
பாதமிருந்தவிடம்
கங்கையில்வந்ததெல்லாம் அகப்பேய்
கண்டுதெளிவாயே. 53

தானறநின்றவிடம் அகப்பேய்
சைவங்கண்டாயே
ஊனறநின்றவர்க்கு அகப்பேய்
ஊனமொன்றில்லையடி. 54

சைவமாருக்கடி அகப்பேய்
தன்னையறிந்தவர்க்கே

சைவமானவிடம் அகப்பேய்
சற்குருபாதமடி. 55

பிறவிதீரவென்றால் அகப்பேய்
பேதகம்பண்ணாதே
துறவியானவர்கள் அகப்பேய்
சும்மாயிருப்பார்கள். 56

ஆரலைந்தாலும் அகப்பேய்
நீயலையாதேயடி
ஊறலைந்தாலும் அகப்பேய்
ஒன்றையும்நாடாதே. 57

தேனாறுபாயுமடி அகப்பேய்
திருவடிகண்டவர்க்கே
ஊனாறுமில்லையடி அகப்பேய்
ஒன்றையும்நாடாதே. 58

வெள்ளைகறுப்பாமோ அகப்பேய்
வெள்ளியுஞ்செம்பாமோ
உள்ளதுவுண்டோடி அகப்பேய்
உன்னைகண்டாயே. 59

அறிவுமன்னுமடி அகப்பேய்
ஆதாரமில்லையடி
அறிவுபசாரமடி அகப்பேய்
அருளதுகண்டாயே. 60

வாசியிலேறிபடி அகப்பேய்
வான்பொருள்தேடாயோ
வாசியிலேறினாலும் அகப்பேய்
வாராதுசொன்னேனே. 61

தாராதிதாரமடி அகப்பேய்
வாராதுசொன்னேனே

பாராமற்பாரடியோ அகப்பேய்
பாழ்வினை தீரவென்றால். 62

உண்டாக்கிக்கொண்டதல்ல அகப்பேய்
உள்ளதுசொன்னேனே
கண்டார்கள்சொல்வாரோ அகப்பேய்
கற்பனையற்றதடி. 63

நாலுமறைகாணு அகப்பேய்
நாதனையார்காண்பார்
நாலுமறைமுடிவில் அகப்பேய்
நற்குருபாதமடி. 64

மூலமில்லையடி அகப்பேய்
முப்பொருளில்லையடி
மூலமுண்டானால் அகப்பேய்
முத்தியுமுண்டாமே. 65

இந்திரசாலமது அகப்பேய்
எண்பத்தொருபதமும்
மந்திரமப்படியே அகப்பேய்
வாயைத்திறவாதே. 66

பாழாகவேணுமென்றால் அகப்பேய்
பார்த்ததைநம்பாதே
கேளாமற்சொன்னேனே அகப்பேய்
கேள்வியுமில்லையடி 67

ஜாதிபேதமில்லை அகப்பேய்
தானாகநின்றவர்க்கு
ஓதியுணர்ந்தாலும் அகப்பேய்
ஒன்றுந்தானில்லையடி. 68

சூழவானமடி அகப்பேய்
சுற்றிமாக்காவில்

வேழமுண்டகனி அகப்பேய்
மெய்யதுகண்டாயே. 69

நானுமில்லையடி அகப்பேய்
நாதனுமில்லையடி
தானுமில்லையடி அகப்பேய்
சற்குருவில்லையடி. 70

மந்திரமில்லையடி அகப்பேய்
வாதனையல்லவடி
தந்திரமில்லையடி அகப்பேய்
சமயமழிந்தபடி. 71

பூசைபசாசமடி அகப்பேய்
போதமேகோஷ்டமடி
ஈசன்மாயையடி அகப்பேய்
எல்லாமுமிப்படியே. 72

சொல்லலாகாதே அகப்பேய்
சொன்னாலுந்தோஷமடி
இல்லையில்லையடி அகப்பேய்
ஏகாந்தங்கண்டாயே. 73

தத்துவதெய்வமடி அகப்பேய்
சதாசிவமானதடி
மற்றுள்ளதெய்வமெல்லாம் அகப்பேய்
மாயைவடிவாமே. 74

வார்த்தையல்லவடி அகப்பேய்
வாசாமகோசரத்து
ஏற்றதல்லவடி அகப்பேய்
என்னுடன்வந்ததல்ல 75

சாத்திரமில்லையடி அகப்பேய்
சலனங்கடந்ததடி

ரர்த்தி டலாகாதே அகப்பேய்
பாவனைகெட்டாதே. 76

என்னபடித்தாலென் அகப்பேய்
ஏதுதான்செய்தாலென்
சொன்னவிதங்களெல்லாம் அகப்பேய்
சுட்டதுகண்டாயே. 77

தன்னையறியவேணும் அகப்பேய்
சாராமற்சாரவேணும்
பின்னையறிவதெல்லாம் அகப்பேய்
பேயறிவாகுமடி. 78

பிச்சையெடுத்தாலும் அகப்பேய்
பிறவிதொலையாதே
இச்சையற்றவிடம் அகப்பேய்
எம்மிறைகண்டாயே. 79

கோலமாகாதே அகப்பேய்
குதர்க்கமுமாகாதே
சாதமாகாதே அகப்பேய்
சஞ்சலமாகாதே. 80

ஒப்பனையல்லவடி அகப்பேய்
உன்னுணைசொன்னேனே
அப்புடனுப்பெனவே அகப்பேய்
ஆராய்ந்திருப்பாயே. 81

மோட்சம்வேண்டார்கள் அகப்பேய்
முத்தியும்வேண்டார்கள்
தீட்சைவேண்டார்கள் அகப்பேய்
சின்மயமானவர்கள். 82

டாலென்பிசர்சமடி அகப்பேய்
பார்த்தாக்கால்பித்தனடி
காலமூன்றுமல்ல அகப்பேய்
காரியமல்லவடி. 83

கண்டதுமில்லையடி அகப்பேய்
கண்டவருண்டானால்
உண்டதுவேண்டடியோ அகப்பேய்
உன்னையொன்றானேனே. 84

அஞ்சையுமறுத்தே அகப்பேய்
ஆசையும்வேண்டாதே
நெஞ்சையும்விட்டுவிடு அகப்பேய்
நிஷ்டையிற்சாராதே. 85

நாதாந்தவுண்மையிலே அகப்பேய்
நாடாதேசொன்னேனே
மீதானஞ்சூதானம் அகப்பேய்
மெய்யென்றுநம்பாதே. 86

ஒன்றோடொன்றுகூடில் அகப்பேய்
ஒன்றுங்கொடுங்காணே
நின்றபரசிவமும் அகப்பேய்
நில்லாதுகண்டாயே. 87

தோன்றும்வினைகளெல்லாம் அகப்பேய்
சூனியங்கொண்டாயே
தோன்றாமற்றோன்றிவிடும் அகப்பேய்
சுத்தவெளிதனிலே. 88

பொய்யென்றுசொல்லாதே அகப்பேய்
போக்குவருத்துதானே
மெய்யென்றுசொன்னக்கால் அகப்பேய்
வீடுபெறலாமே. 89

வேதமோதாதே அகப்பேய்
மெய்கண்டோமென்னாதே
பர்தம்நம்பாதே அகப்பேய்
பாவித்துப்பாராதே. 90

அகப்பைசித்தர்பாடல்
முற்றிற்று.

உ

சிவமயம்.

குதம்பைச்சித்தர்பாடல்.

வெட்டவெளிதன்னை மெய்யென்றிருப்பார்க்கு
பட்டயமேதுக்கடி *குதம்பாய்
பட்டயமேதுக்கடி. 1

மெய்ப்பொருள்கண்டு விளங்குமெய்ஞ்ஞானிக்குக்
கற்பங்களேதுக்கடி குதம்பாய்
கற்பங்களேதுக்கடி. 2

காணாமற்கண்டு கருத்தோடிருப்பார்க்கு
வீணாசையேதுக்கடி குதம்பாய்
வீணாசையேதுக்கடி. 3

வஞ்சகமற்று வழிதன்னைக்கண்டோர்க்கு
சஞ்சலமேதுக்கடி குதம்பாய்
சஞ்சலமேதுக்கடி. 4

ஆதாரமான வடிமுடிகண்டோர்க்கு
வாதாட்டமேதுக்கடி குதம்பாய்
வாதாட்டமேதுக்கடி. 5

நித்திரைகெட்டு நினைவோடிருப்பார்க்கு
முத்திரையேதுக்கடி குதம்பாய்
முத்திரையேதுக்கடி. 6

---

* குதம்பை-ஆபரணம்.
குதம்பாய்-ஆபரணத்தையுடையவள்.

தந்திரமான தலந்தனிற்பேர்க்கு
மந்திரமேதுக்கடி குதம்பாய்
மந்திரமேதுக்கடி. 7

சத்தியமான தவத்திலிருப்போர்க்கு
உத்தியமேதுக்கடி குதம்பாய்
உத்தியமேதுக்கடி. 8

நாட்டத்தைப்பற்றி நடுவணைசேர்வோர்க்கு
வாட்டங்களேதுக்கடி குதம்பாய்
வாட்டங்களேதுக்கடி. 9

முத்தமிழ்கற்று முயங்குமெய்ஞ்ஞானிக்குச்
சத்தங்களேதுக்கடி குதம்பாய்
சத்தங்களேதுக்கடி. 10

உச்சிக்குமேற்சென் றுயர்வெளிகண்டோர்க்கு
இச்சிப்பிங்கேதுக்கடி குதம்பாய்
இச்சிப்பிங்கேதுக்கடி. 11

வேகாமல்வெந்து வெளியொளிகண்டோர்க்கு
மோகாந்தமேதுக்கடி குதம்பாய்
மோகாந்தமேதுக்கடி. 12

சாகாமற்றுண்டி தனிவழிபோவோர்க்கு
ஏகாந்தமேதுக்கடி குதம்பாய்
ஏகாந்தமேதுக்கடி. 13

அந்தரந்தன்னி லசைந்தாடுமுத்தர்க்கு
தந்திரமேதுக்கடி குதம்பாய்
தந்திரமேதுக்கடி. 14

ஆனந்தம்பொங்கி யறிவோடிருப்பார்க்கு
ஞானந்தானேதுக்கடி குதம்பாய்
ஞானந்தானேதுக்கடி. 15

சித்திரக்கூடத்தைத் தினந்தினங்காண்போர்க்குப்
பத்திரமேதுக்கடி குதம்பாய்
பத்திரமேதுக்கடி. 16

முக்கோணந்தன்னின் மூளைத்தமெய்ஞ்ஞானிக்குச்
சட்கோணமேதுக்கடி குதம்பாய்
சட்கோணமேதுக்கடி. 17

அட்டதிக்கெல்லா மசைந்தாடுநாதர்க்கு
நட்டணையேதுக்கடி குதம்பாய்
நட்டணையேதுக்கடி. 18

முத்திபெற்றுள்ள முயங்குமெய்ஞ்ஞானிக்குப்
பத்தியமேதுக்கடி குதம்பாய்
பத்தியமேதுக்கடி. 19

அல்லலை நீக்கி யறிவோடிருப்பார்க்குப்
பல்லாக்கேதுக்கடி குதம்பாய்
பல்லாக்கேதுக்கடி. 20

அட்டாங்கயோக மறிந்தமெய்ஞ்ஞானிக்கு
முட்டாங்கமேதுக்கடி குதம்பாய்
முட்டாங்கமேதுக்கடி. 21

வேடமடக்கி விளங்குமெய்ஞ்ஞானிக்கு
போகந்தானேதுக்கடி குதம்பாய்
போகந்தானேதுக்கடி. 22

மாத்தானைவென்று மலைமேலிருப்போர்க்குப்
பூத்தானமேதுக்கடி குதம்பாய்
பூத்தானமேதுக்கடி. 23

செத்தாரைப்போலத் திரியுமெய்ஞ்ஞானிக்குக்
கைத்தாளமேதுக்கடி குதம்பாய்
கைத்தாளமேதுக்கடி. 24

கண்டாரைநோக்கிக் கருத்தோடிருப்பார்க்குக்
கொண்டாட்டமேதுக்கடி குதம்பாய்
கொண்டாட்டமேதுக்கடி. 25

காலனைவென்ற கருத்தறிவாளர்க்குக்
கோலங்களேதுக்கடி குதம்பாய்
கோலங்களேதுக்கடி. 26

வெண்காயமுண்டு மிளகுண்டுசுக்குண்டு
உண்காயமேதுக்கடி குதம்பாய்
உண்காயமேதுக்கடி. 27

மாங்காய்ப்பாலுண்டு மலைமேலிருப்போர்க்குத்
தேங்காய்ப்பாலேதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப்பாலேதுக்கடி. 28

பட்டணஞ்சுற்றிப் பகலேதிரிவார்க்கு
முட்டாக்கேதுக்கடி குதம்பாய்
முட்டாக்கேதுக்கடி. 29

தாவரமில்லை தனக்கொருவீடில்லை
தேவாரமேதுக்கடி குதம்பாய்
தேவாரமேதுக்கடி. 30

பின்னையறிந்து தலைவனைச்சேர்ந்தோர்க்கு
பின்னாசையேதுக்கடி குதம்பாய்
பின்னாசையேதுக்கடி. 31

பத்தாவுந்தானும் பதியோடிருப்பார்க்குக்
குத்தாரமேதுக்கடி குதம்பாய்
உத்தாரமேதுக்கடி. 32

குதம்பைசித்தர் பாடல்
முற்றிற்று.

சிவமயம்.

கடுவெளிச்சித்தர்பாடல்.

—(*)—

ஆனந்தக்களிப்பு.

பாபஞ்செய்யாதிரு மனமே - நாளைக்
கோபஞ்செய்தேயமன்
கொண்டோடிப்போவான்
பாபஞ்செய்யாதிருமனமே.

சாபங்கொடுத்திட லாமோ - விதி
தன்னைநம்மாலே தடுத்திடலாமோ
கோபந்தொடுத்திட லாமோ - இச்சை
கொள்ளக்கருத்தைக் கொடுத்திடலாமோ. பாப

சொல்லருஞ்சூதுபொய் மோசம் - செய்தாற்
சுற்றத்தைமுற்றாய்த் துடைத்திடுநாசம்
நல்லபக்திவிசு வாசம் - எந்த
நாளுமனிதர்க்கு நன்மையாய்நேசம். பாப

நீர்மேற்குமிழியிக் காயம் - இது
நில்லாதுபோய்விடு நீயறிமாயம்
பார்மீதின்மெத்தவு நேயம் - சற்றும்
பற்றிருந்திடப் பண்ணுமுபாயம். பாப

நந்தவனத்திலோ ராண்டி - அவன்
நாலாறுமாதமாய்க் குயவனைவேண்டி
கொண்டுவந்தானொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக்கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி. பாப

தூஷணமாகச் சொல்லாதே-தேடுஞ்
சொத்துக்களிலொரு தூசுநில்லாதே
வடனைமூன்றும் பொல்லாதே-சிவத்
திச்சைவைத்தாலெம லோகம்பொல்லாதே. பாப

நல்லவழிதனை நாடு-எந்த
நாளும்பரமனை நத்தியேதேடு
வல்லவர்கூட்டத்திற் கூடு-அந்த
வள்ளலைநெஞ்சினில் வாழ்த்திக்கொண்டாடு. பாப

நல்லவர் தம்மைத் தள்ளாதே-அறம்
நாலெட்டிலொன்றேனு நாடித்தள்ளாதே
பொல்லாங்கிலொன்றுங் கொள்ளாதே-கெட்ட
பொய்ம்மொழிக்கோள்கள் பொருந்தவிள்ளாதே.

வேதவிதிப்படி நில்லு-நல்லோர்
மேவும்வழியினை வேண்டியேசெல்லு
சாதகநிலைமையே சொல்லு-பொல்லாச்
சண்டாளக்கோபத்தைச் சாதித்துக்கொல்லு. பாப

பிச்சையென்றொன்றுங் கொள்ளாதே-எழில்
பெண்ணாசைகொண்டு பெருக்கமாளாதே
இச்சையனுன்னை யாளாதே-சிவன்
இச்சைகொண்டவ்வழி யேறிமீளாதே. பாப

மெய்ஞ்ஞானப்பாதையி லேறு-சுத்த
வேதாந்தவெட்ட வெளியினைத்தேறு
அஞ்ஞானமார்க்கத்தைத் தூறு-உன்னை
அண்டினோர்க்கானந்த மாம்வழிகூறு. பாப

மெய்க்குருசொற்கடக் காதே-நன்மை
மென்மேலுஞ்செய்கை மிகவுநடக்காதே
பொய்க்கலையைநடக் காதே-நல்ல
புத்தியைப்பொய்வழி தனினடக்காதே. பாப

கூடவருவதொன் றில்லை-புழுக்
கூடெடுத்திங்ங னுலாவுவதேதொல்லை
தேடருமோட்சம தொல்லை-அதைத்
தேடும்வழியைத் தெளிவோருமில்லை. பாப

ஐந்துபேர்சூழ்ந்திடுங் காடு-இந்த
ஐவர்க்குமைவ ரடைந்திடுநாடு
முந்திவருந்திநீ தேடு-அந்த
மூலமறிந்திட லாமுத்திவீடு. பாப

உள்ளாகநால்வகைக் கோட்டை-பகை
ஓடப்பிடித்திட்டா லாளலாநாட்டை
கள்ளப்புலனென்னுங் காட்டை-வெட்டிக்
கனலிட்டெரித்திட்டாற் காணலாம்வீட்டை. பாப

காசிக்கோடிடில்வினை போமோ-அந்தக்
கங்கையாடில்கதி தானுமுண்டாமோ
பேசுமுன்கன்மங்கள் சாமோ-பல
பேதம்பிறப்பது தோன்றினும்போமோ. பாப

பொய்யாகப்பாராட்டுங் கோலம்-எல்லாம்
போகவேவாய்த்திடுமி யார்க்கும்போங்காலம்
மெய்யாகவேசுத்த ஜாலம்-பாரில்
மேவப்புரிந்திடி லென்னனுகூலம். பாப

சந்தேகமில்லாத தங்கம்-அதைச்
சார்ந்துகொண்டாலுந் தாழ்வில்லாப்பொங்கம்
அந்தமில்லாதவோர் துங்கம்-எங்கும்
ஆனந்தமாக நிரம்பிபுங்கம். பாப

பாரினுபர்ந்தது பக்தி-அதைப்
பற்றினபேர்க்குண்டு மேவருமுக்தி
சீரியனுபாட்டசித்தி-பார்க்குஞ்
சித்திக்குமேசிவன் செயலினல்[illegible]த்தி பாப

அன்பெனுநன்மலர் தூவி-பர
மானந்தத்தேவ னடியிணைமேவி
இன்பொடுமுன்னுட லாவி-நாளும்
ஈடேற்றத்தேடாய் இங்கேகுலாவி. பாப

ஆற்றும்வீட்டேற்றங்கண்டு-அதுக்
கானவழியை யறிந்துநீகொண்டு
சீற்றமில்லாமலே தொண்டு-ஆதி
சிவனுக்குச்செய்திடிற் சேர்ந்திடுங்கண்டு. பாப

ஆன்மாவாலாடிடு மாட்டந்-தேகத்
தான்மாவற்றபோதே யாமுடல்வாட்டம்
வான்கதிமீதிலே நாட்டம்-நாளும்
வையிலுனக்கு வருமேகொண்டாட்டம். பாப

எட்டுமிரண்டையுமோர்ந்து-மறை
யெல்லாமுனக்குள்ளே யேகமாய்த்தேர்ந்து
வெட்டவெளியினைச்சார்ந்து-ஆனந்த
வெள்ளத்தின்மூழ்கி மிகுகளிகூர்ந்து. பாப

இந்தவுலகமு முள்ளுஞ்-சற்றும்
இச்சைவையாமலே யெந்நாளுந்தள்ளு
செந்தேன்வெள்ளமதை மொள்ளு-உன்றன்
சிந்தைதித்திக்கத் தெவிட்டவுட்கொள்ளு. பாப

பொய்வேதந்தன்னைப் பாராதே-அந்தப்
போதகர்சொற்புத்தி போதவாராதே
மைவிழியாரைச் சாராதே-துன்
மார்க்கர்கள்கூட்டத்தின் மகிழ்ந்துசேராதே. பாப

வைதோரைக் கூடவையாதே-இந்த
வையகமும்பொய்த் தாலும்பொய்யாதே
வெய்யவினைகள் செய்யாதே-கல்லை
வீணிற்பறவைகள் மீதிலெய்யாதே. பாப

சிவமன்றிவேறே வேண்டாதே-யார்க்குந்
தீங்கானசண்டையைச் சிறக்கத்தூண்டாதே
தவநிலைவிட்டுத் தாண்டாதே-நல்ல
சன்மார்க்கமில்லாத நூலைவேண்டாதே. பாப

பாம்பினைப்பற்றியாட் டாதே-உன்றன்
பத்தினிமார்களைப் பழித்துக்காட்டாதே
வேம்பினையுலகி லூட்டாதே-உன்றன்
வீறுப்புதன்னை விளங்கநாட்டாதே. பாப

போற்றுஞ்சடங்கை நண்ணாதே-உன்னைப்
புகழ்ந்துபலரிற் புகலவொண்ணாதே
சாற்றுமுன்வாழ்வை யெண்ணாதே-பிறர்
தாழும்வடிக்குநீ தாழ்வாகப்பண்ணாதே. பாப

கஞ்சாபுகைபிடி யாதே-வெறி
காட்டிமயங்கியே கட்குடியாதே
அஞ்சவுயிர்மடி யாதே-பத்தி
யற்றவஞ்ஞானத்தி னூல்படியாதே. பாப

பத்தியெனுமேணி நாட்டித்-தெரிந்து
பந்தமற்றவிடம் பார்த்ததைநீட்டி
சத்தியமென்றதையீட்டி-நாளுந்
தன்வசமாக்கிக்கொள் சமயங்களோட்டி. பாப

செப்பரும்பலவித மோகம்-எல்லாச்
சீயென்றொறுத்துத் திடங்கொள்விவேகம்
ஒப்பறுமட்டாங்க யோகம்-நன்றாய்
ஓர்ந்தறிவாயவற் றுண்மைசம்போகம். பாப

எவ்வகையாகநன் னீதி-அவை
யெல்லாமறிந்தே யெடுத்துநீபோதி
ஒவ்வாதென்றேபல ஜாதி-யாவும்
ஒன்றென்றறிந்தே யுணர்ந்துறவோதி. பாப

கள்ளவேடம்புனை யாதே-பல
கங்கையிலேயுன் கடநனையாதே
கொள்ளைகொள்ள நினையாதே-நட்புக்
கொண்டுபிரிந்துநீ கோண்முனையாதே. பாப

எங்குஞ்ஜயபிர காசன்-அன்பர்
இன்பவிருதயத் திருந்திடும்வாசன்
துங்கவடியவர் தாசன்-தன்னைத்
துதிக்கிறபதவி யருளுவனீசன். பாப

கடுவெளிசித்தர் பாடல்

முற்றிற்று.

உ

ஓம்பரப்பிரம்மணேநம:

சிவயோகசாரம்.

—(*)—

சிறப்புப்பாயிரம்.

இஃது, ஸ்ரீமான் சுலக்ஷணகவி

பராங்குச நாவலரவர்களாலியற்றிய

நிலைமண்டில ஆசிரியப்பா.

தேசார்பலவளஞ் செறிதருமருணைக்
கீசானியத்திய லிலங்கும்வெட்டரூய்
புத்திரனுட் புகழுடன்வாழ்வோன்
சத்துருஜயங்கொள் க்ஷத்திரியக்குலத்
தோங்குமிராம்சிங் குதவியபுதல்வன்
பாங்குடன்கிருஷ்ணபஜனை பன்னிரண்டாண்
டற்பொடுபுரிந்தவ் வருசிருவருளாற்
பொற்பினைமிகுத்த பூவலம்வருகையில்
உத்தரதேசத் தற்றபஞ்சாதிபெனும்
அத்தினபுரியி லருளார்ஞானப்
பரபரகுருபரம் பரையினைச்சார்ந்திப்
பூபரத்தைப் போக்குங்குருசீரன்
தாஸ்பரபாஜி தண்டாமரைத்தாள்
பூசித்தவர்தம் போதனையாலுங்
ஞானநனியுர காரணதேகிகள்

வானருளானும் வாசியோகத்தை
முற்றுமுணர்ந்து முதறிவாளர்
கற்றுணர்ந்துய்யக் கருதிமிக்கற்பொடு
சற்சிவயோக சாரமென்றிந்நூல்
பொற்புடனியற்றிப் புண்ணியருநவிலொண்
டச்சிடுவித்தே யளித்தனனகிலரும்
மெச்சும்பூரண விவேகானந்தனே

பண்ணுருட்டிக்கடுத்த அங்குசெட்டிப்பாளையம்

ம-ள-ள-ஸ்ரீ,

பொ-சின்னசாமிசெட்டியாராலியற்றிய

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

ஏர்கொண்ட மறைநான்கு மங்கமாறு
மினியபல நன்னூலும் யாவுந்தேர்ந்திப்
பார்கொண்ட பல்லோர்க்கு முபதேசித்துப்
பரிவுடனாரண பிரமத்திற் காட்பட்டு
கார்கொண்ட வடிவேயனைக் கருணைகூர்ந்து
ஞானமருள் பூரணானந்தன் சொன்ன
நீர்கொண்ட சிவயோக சாரந்தன்னை
நேசிப்பார் கனகவரை பூசிப்பாரே.

திருவண்ணாமலைக் கீசான்யதிசையில்
காணிலப்பாடி திருமடத்தில் சத்துசித்தானந்த
சொரூபமாய் எழுந்தருளி விளங்காநின்ற
நாராயணதேசிகர் மாணாக்கரி லொருவரான
தாண்டவராய சுவாமிகளா லியற்றிய

விருத்தம்.

கலைபான ரேசகபூரகமுங் கும்ப
கண்ணொளியுங் கதிர்மதியும் விண்ணிற்பாய
நிலைபான சிவயோகச் சாரம்பூண்டு
நிட்டானு பூதியனு போகத்தாண்டு

தலையான கனகவரை மீதிருந்தாத்
தானான பூரணனா ரிபற்றுமின்றா
லலையான கடல்கடக்கப் படகிலேற்று
மாரியராஞ் சிவமுத்தர்க் கமுதமாமே.

மேற்படிமடம் திருக்கூட்டத் தலைவரான
ஆருஞ்சி தமிழ்ப்புலமை நடாத்திய
சாமிநாதபிள்ளை யவர்களாலியற்றிய
ஆசிரியவிருத்தம்.

அருமறைக்கருத்த திலகிலகியார்த்தமா
யத்துவித சித்தாந்தமா
யறிவொணாச்சின்மயச் சுபாவப்பிரதிட்டையா
யபரோட்ச காட்சிநிலையாய்த்
தருநிறைநிறைந்த நாரணபிரமதருமநிலை
தத்பதமளித்த தகுணாற்
றாணியிலுள்ளோர்த் தவித்திடு பேழைதிறவிலாத்
தருதிறவு கோலாமெனக்
குருமுறைகளினிதருஞ் சிவயோகசாரமாய்க்
கூறுமின்றா லுரைசெயக்
கொண்டபூரணதாசர் விண்டதத்துவஞான
கொள்கையை விரித்துணர்ந்தே
மருவுறைசிதாகாச மயமாகிதண்ணமுத
வானமுத முண்டசுமுக
வசமாகிமாறாத மாதவத்தானந்த
வாழூண்ட தாகுமிதுவே.

மேற்படிமடம் திருக்கூட்டத்தி லொருவராகிய

தத்வயோகநடாத்தும் ஐங்குணம்

ஆ-வெங்கடசுப்பா செட்டியாரா லியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

மூலத்தின்வழியே நிலைமையைக்கண்டு
முக்குணப்புலன்களையடக்கி
ஞாலத்தின்யோகச் சாதனைமுடித்து
நற்பதமடைவதற் குணர்ந்தே
காலத்தினின்றே ரத்விதஞானக்
காட்சியை யியற்றிடுந்தானுக்
கோலத்தின்யோகம் பூரணதாசர்
கூறியசாரநூ லிதுவே.

மேற்படிமடம் திருக்கூட்டத்தி லொருவராகிய

வள்ளிவாகை ம-ா-ா- ஸ்ரீ,

ஆறுமுகப்பிள்ளை யவர்களாலியற்றிய

வண்ணம்

அரிமருகனுறையுமொருசிறுகிரியின்விரிபுன
லதுபெரிகிவிளைவயற்கானிலம்வாழும்
அதிககனதுநவில்வலபரபிரமசொரூபமென
வருட்குருநாரணகடனன்னீராகும்
கருதரியசதுமறைகள்ரகசியமதொடுசொலமிக்
கவர்கள்வசமதிலுபிச்சிவயோகக்
கதிதருகுசுருதியின்தமுதியதவநிலையிலுள
கருணைவடிவுடையபரிபூரணமேகம்

தருமகுணபெரியவர்களருமைபடுமவரரிய
தருபழைபகலைகளெனமொழிவாயால்
சலசஙிலனபெருகிபலசமயபொருமவுணாயிர்
தழைபவெகுதுமுரலொடுபுவிமீது
அரியசிரவணர்களாகவிருளிரவிவணிபமேதன
வகலமினியுடலென்னுமஞ்ஞான [த்தி
வதர்மகுளத்திடித்தமிர்தமழைபொழிந்தநிலைதரு
அனந்தபவபிணிபகற்றுமுலகோரே.

மேற்படியார் மாணாக்கரிலொருவராகிய
வள்ளிவாகை ம-ா-ா-ஸ்ரீ,
ஆரங்கசாமிபிள்ளை யவர்களாலியற்றிய
விருத்தம்.

கருவாகி யுருவாகி கருத்துமாகி
காரணகாரண பிரமர் கடிமைபாகி
நிருவாண நிருவிகற்ப சாரமாகி
நிர்மலநிஷ்கள நேம நிராமயத்தின்
தருவாகி தழைத்தல் விசாரணையுமாகி
சம்பூர்ண தாசனின்றால் சார்ந்தமார்க்க
மருவு ரன்பருள மகிழ்ந்துதேரி
வையகமு முய்யுமென வாழ்த்துமிக்கோர்.

மேற்படி மடத்தலைவர் ம-ா-ா-ஸ்ரீ.
இராமசாமிப்பிள்ளை அவர்களாலியற்றிய
நேரிசை வெண்பா.

காரணதேசிகன்ற னல்லருள்பெற்றேயிலகும்
பூரணதாசன் புகன்றநூல்-ஆரணஞ்சொல்
யோகசிவசாரநிலை யுன்னியுணர்ந்தார்க்கென்றுந்
தேகசுகமெய்திடவே தேர்ந்து.

மேற்படி மடம் திருக்கூட்டத்திலொருவராகிய சின்னத்தம்பி பரதர் அவர்களியற்றிய விருத்தம்.

மின்றெளிக்கு நிலைமையிலே
  மிருகாதிதிரிபவர்க்கு விளக்கப்போலத்
துன்றெளிக்குள் வாதத்தாமதத்தா
  முனோர்க்கு சிவயோகச் சாரமாக்கைப்
பொன்னவிக்குந் தாட்டாரேப்
  பூரணமுக்தர் குருநமநாராய் புகன்றநூலு
முன்னளிக்குந் தேவையிற்கமுனேத்திருமுத்த
  தன்மையென் மொழிதந்தானே.

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

இந்நூலாசிரியர் மாணாக்கர் அங்குச்செட்டிப்பாளையம் ம-ா-ா-ஸ்ரீ, ச. நாராயண செட்டியாராலியற்றிய குருஸ்தவம் நேரிசைவெண்பா.

பூமேவுஞ்சான்றோர் புகழ்யோகநன்னிலையைத்
தாமேவிசிவயோகசாரமதாப்-பாரேவும்
பூரணனுக்கனெனும் புண்ணியன்புகன்றனனால்
நாரணன்பொற்றாளை நயந்து.

அவையடக்கம்.

கனகவரை என்னும் புருவக்கிடைநடன ஒலி கேட்டானைக்கிக்கும் எந்தைமார்களின் தங்கள்பாதபங்கயங்கட் கனந்தானம் அறிவிற்சிறியேன் குரு

புகமா ஹிந்துஸ்தானியாலுணர்ந்த இராஜயோக மார்க்கத்தை பஷாரால்களிலுள்ள அரும்பெருமொழி சிவயோகசாரமென வரைந்துள்ளேன், இதைப்பிரிதநுகூலத்தைக்கொள்ளு மன்னத்தைப்போல் குற்றங்களைந்து குணத்தைக்கொள்ளக்கோருகிறேன்.

இதுவுமது.

சந்தவிருத்தம்-

எழுமுற்றபேதையேனியம்புமிந்தயோகநூல்
பேதமற்றபோதமுற்றோர்பேசுவார்களாதையால்
வேதனைப்பட்டுழலுவாரிம்மெய்யுணராப்பொய்யரில்
பூதலத்திலுள்ள தீதுமையன்றுபுலவீர்காள்.

முகவுரை.

நீர்வள முதலியவைகளால் சிறப்புற்றிருக்கும் உத்தரதேசங்களில் (பஞ்சாப்) என்னும் பாஞ்சால தேசத்தில் அவதரித்தவராய், ஜீவேசுவரபேதா பேத முணர்ந்து நித்யானுபவஞ்செய்யும் பரமயோகீந்திரராய் ஸ்ரீஜனகாப்ஸ பூதரான உதாசி பாபாநானக் குருபரம்பரையினர் அநேகவருட காலமாக அநுபவித்துவரும் இராஜயோக க்ரமத்தை அச்சங்கத்திலொருவரும் ஞானசிரேஷ்டரும் தயாகுணபரிபூரணமான குருசான் தாஸ்பாபாஜி அவர்களால் இந்துஸ்தானி பாஷையி லுபதேசிக்கப்பெற்று ஸ்ரீமத் நாராயணதேசிகர் நியமனத்தினால் இந்த தக்ஷிண தேசத்திலுள்ள சகல வருணாச்சிரமிகளு முய்யும் பொருட்டு தமிழில் மொழிபெயர்த்து உபநிஷத்துக்களிலும் யோகவாசிஷ்டம், பதஞ்சலம், அஷ்டயோ

கம்; முதலியவைகளிலுள்ள அரும்பொருளை சேர்த்து சிவயோகசாரமென நற்பெயரமைத்து வெளியிடலாயிற்று.

இந்நூலைச் சாங்கோபாங்கமாகவுணரும் புண்ணியோத்கிருஷ்டர்கள், அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அஷ்டமாசித்திகளை அடைவரென்பது திண்ணம்.

குருவணக்கம்.

ஆரணசாத்திரமனைத்து முணர்ந்துசீட
ரவித்தையெலாமகற்றியருள்புரியுஞ்ஞான
பூரணராயெழுந்தெளியேற் குபதேசித்துப்
பூரணானந்தனென நாமந்தந்த
நாரணதேசிகராமென் குருநாதன்றன்
நளினமலரடியிணையைச் சிரமேற்கொண்டு
தாரணியிற்சிவயோக சாரமென்னுந்
தலைபெறுமிந்நூலடியேன் சாற்றலுற்றேன்.

ஓம்பரப்பிரம்மணேநமஃ

சிவயோகசாரம்.

(*)

காப்பு.

நேரிசைவெண்பா.

துவாரடை யுள்ளோருந் தூயுடையா ருய்வான்
சிவயோக சாரமெனச் செப்ப-நவையில்புகழ் •
கொண்டபர வைந்துகரக்கோ நின்னடிகட்குத்
தண்ட னிட்டே னருளைத்தா.

நூன்முகம்.

ஆசிரியர் நிலை.

இந்த ராஜயோகத்தை அப்பியாசிக்கும் ஆசிரியன் தெளிந்த ஆத்மஞானியாய் அடுத்தவர்களை ஆதரித்து போதிக்கத்தக்கவரா யிருக்கவேண்டியது. அதாவதுசின்முத்திரையாகிய மௌனநிலை ஈதென்றும் அதைகைவல்லியப்படுத்துவதற்குரிய ஆசனமுதலியவிதிகள் இவையென்றும் சாம்பவிமுதலிய மகாமுத்திரை யின்னவையென்றும் குண்டலி சக்தி ஈதென்றும் அதைவிழிப்பிக்கு மார்க்கம் ஈதென்றும் இதுவே சிவராஜயோகமென்றும் இந்தயோகம் செய்யத்தக்கவர் பெறத்தக்க நாதாந்தம் இது வென்றும் அஃதுவசமுற்றாமல் ஓர்மயக்கந்தோன்றுமென்றும், அதுநீங்கும்வரையில்நின்றால் அருள்தரிசனம் உதயமாமென்றும் அவ்வநுபவம் கிடைக்கில் காண்பாணாதிகள் இறக்குமென்றும் அங்ஙனம் மனம் ஆ

சையாயிருக்குமென்று அப்போது அந்நாதாந்தத்தில் பஞ்சாக்ஷரமுதலியவைகள் தோன்றுமொடுங்குமென்றும் இத்தன்மைப்பட்ட சுவானுபவ சாக்ஷாத்காரத்தை உணர்ந்த ஆத்ம ஞானசாரியராய் இருக்கவேண்டும்.

மாணாக்கரின் நிலை.

உத்தம ஜென்மமாயும் வித்தைக்குடையவனாயும் சாந்தம் சற்குணமுடையவனும் பற்றில்லாதவனும் காமசங்கற்பம இல்லாதவனும் கோபத்தைவென்றவனும் சத்தியதருமத்தை விரும்பினவனும் குருபணிவிடையில்பிரியமுள்ளவனும் பிதாமாதாக்களை உபசரிப்பவனும் தனது கிருகத்திலிருப்பவனும் நல்லொழுக்க முடையவனும் சற்சீடனென்றும் பக்குவமுடையவனுமுள்ள மாணாக்கனே இவ்விராஜயோகத்துக்கு அதிகாரியென்று சொல்லப்படும்.

இத்தன்மைப்பட்ட சற்சீடன் சாக்ஷாத்காரத்தையுணர்ந்த ஞானசாரியரைக் கண்டடுத்து அவர் திருவடிகளில் பணிந்து அவர்மனங் களிகூறும்படி நடந்து உடல்பொருளாவிமூன்றும் அச்சற்குருவின் திருவடியில் தத்தஞ்செய்து அவரால் அநுக்கிரகிக்கும் திருவடி தீக்ஷையும் பிராணாயாமத்துக்குரிய மூலமந்திரத்தில் முதல்வாக்கியத்தையும் இந்தயோகத்தின் விதிகளையும் உபதேசிக்கப்பெற்றுகுருவின் சன்னிதியிலிருந்து சற்குருவால் சொல்லாமற் சொல்லும் முதல்வாக்கியத்தை உன்னமல் உன்னியோக சாதனை செய்து இருங்காலையில் சுவானுபவத்தின்

கன் அடையாநின்ற சம்சயங்களனைத்தும் தீரும்படி அவ்வாசிரியரிடத்தில் விண்ணப்பம் அடிக்கடி செய்துக்கொண்டு அந்தசங்கற்பமும் கழிக்கும்படி கேட்டுக்கொள்ள வேண்டுவதாம்.

நூல்.

பிராணவாயுவின் நிலை.

அதாவது மாணாக்கன் ஆரம்பத்தில் கவனிக்க வேண்டிய விதிகள் யாதெனில் சூரியன் சந்திரன் அக்கினியென்னும் மூன்று நாடிகளின் நடைகளென்னப்படும்.

மூன்றுகலையின் சுவாசத்தினா லுண்டாகும் சப்தத்தைக் கண்டறியவேண்டும்.

அச்சப்தத்துக்கு அஜபாவென்று பெயராம்.

அந்த சப்தத்தைக் கண்டுபிடிக்கச் சிலவிதிகள் கூறப்பட்டிருக்கின்றன.

அவையாவன வாயுகளில் மூன்று இடைகலை பிங்கலை சுழிமுனை இடைகலை என்பது இடது நாசியிலும் பிங்கலையென்பது வலது நாசியிலும் சுழிமுனை என்பது இரண்டுநாசியிலும் வரப்போகவுமிருக்கிற சுவாசம் இதற்கு அஜபா என்று பெயராம் இடைகலையென்பது சந்திரனும் பிங்கலையென்பது சூரியனுஞ் சுழிமுனை என்பது அக்கினியுமென்னப்படும்.

அன்றியும் இடைகலையாவது சுக்கிலபட்சமாகிற அமாவாசையின் பிரதமைமுதல் மூன்று நாளைக்கு காலையில் தொடர்ச்சியாய் வரவேண்டும்.

சதுர்த்திமுதல் மூன்று நாளைக்கு பிங்கலை நடக்க வேண்டும்.

இந்த மாதிரியாக சுக்கிலபட்சமுழுமையும் மூன்றுநாளைக்கு இடைகலையும் மூன்று நாளைக்கு பிங்கலையுமாக நடக்கவேண்டும்.

இவ்வண்ணமாக சுக்கில பட்சத்தில் சந்திரகலை வாராவிடில் அவனுக்கு தேகசவுக்கியப்பட்டு கவலை மேலிடுமென்றறிக அதைச் சரிப்படுத்த வேண்டிய விஷயத்தைப்பற்றி பின்வரும்வாக்கியத்திற் காண்க.

கிருஷ்ணபட்சம் அதாவது பௌர்ணமி பிரதமை முதல் மூன்றுநாட்களும் பிங்கலை நடக்கவேண்டும்.

பின் மூன்று நாளைக்கு இடைகலை நடக்கவேண்டும்.

இத்தன்மை இரண்டு கலைகளும் மும்மூன்று நாளைக்கொருமுறை மாறிமாறி நடக்கவேண்டும்.

இதைமாணாக்கன் குறிப்பாக தினந்தினம் கவனிக்கவேண்டும்.

சுழிமுனை கூடியது கஷ்டமானதால் அதைசாக்கிரதையாய் அப்பியசித்து பழகவேண்டும்.

மாணாக்கனுக்கு முக்கியமேலே இடைகலையும் பிங்கலையும் திதிக்குத் தவறி நடந்தால் அதைமாற்றவேண்டிய விஷயத்தைப்பற்றி குருமூலமாய்க் கேட்டுக் கொள்ள வேண்டியது.

இடைகலையின் பலனாவது.

இடைகலை நடக்குங்காலத்தில் தாகம் ஜலவிருத்தி, தீர்மானம் செய்ய வேலைசெய்ய நகைசெய்ய

அணிந்துகொள்ள, அன்னிய தேசத்திலிருந்து யாத்திரைபோக, வீடு, சாத்திரம், கோவில்கட்ட, தர்மஞ்செய்ய, சாமான்சேகரஞ்செய்ய, கிணறு, குளம் வெட்ட, கலியாணஞ்செய்ய, வஸ்திரங்கட்ட, வைத்திய சாஸ்திர அப்பியாசம், மருந்து, கற்பங்கள், முதலியவைசெய்ய, சிநேகிதரைக்காண, வியாபாரஞ் செய்ய. தானியம் இருப்புசெய்ய, வீட்டிற்கு குடிபோக, விதைவிதைக்க, சமாதானஞ்செய்ய, அன்னியபாஷை அப்பியாசஞ்செய்ய, உபதேசஞ்செய்ய, பலனைப்பற்றி யாத்திரைபோக, யானை, குதிரை, ஏறு, வேட்டைக்குப்போக. உலகத்துக்கு அனுகூலமான வேலைசெய்ய, எஜமானுக ஆடல்பாடல் கற்க ஒருபுதிய ஊருக்குப்போக, பந்துக்களைக் காணலுமாகிய நடவடிக்கைகள் செய்தால்பயன்படும்.

இடைகலையானது சரிவரநடந்தால் தேகசௌக்கியமாயிருக்கும். இதில் ஆகாசத்தின் அம்சமிருக்குமானல், முன்சொன்ன நடவடிக்கைகள் ஒன்றும் செய்யக்கூடாது. இரவாக இருந்தாலும், பகலாக இருந்தாலும், மேற்சொன்ன வேலைகள் இடைகலையில் நடத்தவேண்டுமென்பதாம்.

பிங்கலையில் நடக்கும் பயனுவது, வலதுநாசியில் உண்டாகிற பிங்கலை வாய்வு அதாவது சூரிய நாடிகாலத்தில்கஷ்டமானவேலை, எதுவும்அப்யாசிக்க எவ்வித கொடூரமான செய்கைசெய்ய, போஜனம் செய்ய, மலங்கழிக்க, போகம்செய்ய, கடல் யாத்திரைபோக, சண்டைசெய்ய, படை எடுக்கக், கஷ்டமான சாஸ்திரங்கற்க, குதிரை,முதலாகியநாற்கால்

ஜீவன்களை விர்க்கவிற்க, மட்டமானமலையேற, குதிரை மல்யுத்தம், முதலாகியபழக்கம்செய்ய, ஆறு, குளம், கடல், முதலாகிய இடங்களில்நீய்ய, உலோகங்களைக் குறித்த சாஸ்திரங்களைப் படிக்க, பாடம் எழுத, பணம் வாங்க கொடுக்க, எஜமானத்துவமான வேலை பார்க்க, அரசனைக்காண, ரணவைத்தியத்திற்கு மருந்துசெய்ய, கடினமான ஆகாரம் ஜீர்ணிக்க இவை முதலாகிய செய்கைகள் பிங்கலை வாய்வு காலத்திற் செய்யவேண்டுமென்பதாம்.

சுழிமுனைகலையின் பலனுவது.

சுழிமுனைநாடி இரண்டு நாசியினும்வருஞ் சுவாசம் அதன் நடவடிக்கைகாலத்தில்தான் அறியலாம்.

ஒருக்ஷணத்தில் இடது நாசியிலும் ஒருக்ஷணத்தில் வலதுநாசியிலும் வரப்பட்டவாயுவானது இரண்டுநாசியிலும் வரும்பொழுது சுழிமுனையாம்.

இந்த சுழிமுனை நடக்கும் காலத்தில் உலககடவடிக்கைகளை நிறுத்திவிடவேண்டியது தவறி நடக்கும்பட்சத்தில் அபஜெயமாம்.

எண்ணத்துக்கு விரோதமாய் நடக்கும் இந்த வாயுவின் காலத்தில் ஆத்மத்தியானம் பூஜை செய்யவைத்துக்கொள்ளலாம்.

இந்தவாய்வு நடக்குங்காலத்தில் தன்சுவாசபந்தனம் செய்யக்கூடும்.

இந்தசுவாசம் கட்டுவதினால் மனதிற்கும்தேகத்திற்கும் இன்பத்தைக் கொடுக்கப்படுகின்றது.

நாடிகளினிலை.

முதல் ஆதாரமாகிய மூன்று நாடிகளைப் பற்றி விவரமாகச் சொல்லுவோம்.

அதாவது மனிதர்களுக்குச்சாதாரணமாகஎழுபத்தீராயிரம் நாடிநரம்புகள் இருக்கின்றன.

அவைகளில் முக்கியமானவை இருபத்திநாலு இந்த இருபத்திநாலும் எப்போதும் உறங்கிக்கொண்டிருக்கின்றன இவைகளை குண்டலிசத்தி என்று ஆதிநாதர் அருளிச்செய்கின்றனர்.

இது மத்தியஸ்தானத்தில் இருக்கின்றதுபத்து நாடிகள் மேலாகவும் பத்துநாடிகள் கீழாகவும் இரண்டுநாடி ஓர்பக்கத்திலும் இரண்டுநாடி மற்றோர்பக்கத்திலும் இருக்கின்றன.

இந்தக்குண்டலிசத்தியானது,பாம்பைப்போல் சுற்றிக்கொண்டுசுவாதிஷ்டானத்திற்கு மேலாகவும், மணிபூரகத்திற்குக் கீழாகவு மிருக்கின்றது.

இந்த இருபத்துநான்கு நாடிகளில் பத்துநாடிகளை முக்கியமாக எடுத்திருக்கின்றனர்.

இந்தப் பத்துநாடிகளில், முன்சொல்லிய மூன்றுநாடிகளை முக்கியமா யெடுத்திருக்கின்றபடியால், அதில் இடைகலையானதுதேகத்தின் இடதுபாகத்திலும், பிங்கலையானதுதேகத்தின் வலதுபாகத்திலும் சுழிமுனையானது தேகத்தின் மத்தியிலு மிருக்கின்றன.

இக்குண்டலி சத்தியைப்பற்றி விபரமாக பின் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆசனவிதிகள்.

அதாவது- பத்திரம், வீமம், பதுமம், கோமுகம், குக்குடம் ஆகிய ஐந்தும் ஞான சாதனத்துக்குரிய ஆசனமாகும்.

இதில் பத்மாசனமாவது, இரண்டு தொடைகளில் இரண்டு பாதங்களையும் செவ்வையாக வைத்துட்காருதல்.

இது சகல பாபங்களையும் நாசம் செய்வதாகும்.

மான்தோல் புலித்தோல் வெண்துகில் சித்திராசனம் தர்ப்பை இவைகளின் பேரிலிருந் தனுபவிக்கலாம்.

இடைவயறு கண்டம் தலைசமனாய் ஸ்தம்பத்தைப்போல் நிமிர்ந்திருக்க வேண்டும்.

அன்றியும் வடமுகம் நோக்கி தக்ஷணாமூர்த்தமாயெழுந்தருளி யிருக்கும்.

ஆத்மஞான குருவின் சன்னதிக்குநேராய் உட்காரவேண்டியது.

இதை சுவஸ்திகா ஆசனமென்பர் கிருகஸ்தருக்கு பத்மாசனமென்றும் சன்னியாசிகளுக்கு சித்தாசனமென்றும் ஹடயோக தீபிகையிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இரேசகபூரக லட்சணம்.

பிராணவாயுவின் அசைவு எதுவோ அதுவே சித்தத்தின் அசைவென்றும் மேலானபுத்திமான்கள் பிராணனது சலனத்தை ஜெயித்தலில் முயற்சிக்கிறார்கள் ஆகையால் ராஜஸதாமஸகுணங்களை நீக்கி சாத்வீக குணத்தோடு பிராணாயாமம் செய்யவேண்டும் பிராணாயாமம் வெளி வாய்வை உட்கொள்வது

பூரகமாம். அவ்வாய்வை நிறுத்துதல் கும்பகமாம். கும்பித்த வாய்வை வெளிப்படுத்துதல் இரேசக மெனப்படும். இதுவே பிராணாயாம அங்கமாகிய இரேசக பூரகலக்ஷணம்.

சூரியநாடியாகிய பிங்கலையால் பிராணனை இழுத்து மெள்ள மெள்ள வயிற்றை நிறப்ப விதிப்படி பந்தபூர்வமாகிய கும்பகம் செய்து மறுபடியும் சந்திர நாடியாகிய இடைகலையால் இரேசிக்க வேண்டும்.

சந்திரநாடியாலாவதுசூரியநாடியாலாவதுஎந்த நாடியால் பூரிக்கிறமோ அதிலேயே ரேசித்து நிரோதித்தலால் வேர்வை நடுக்கம் முதலியவைஉண்டாகும் அதுவரையில் கும்பித்து எதினால் பூரகஞ் செய்யப்பட்டதோ அதற் கன்னியமான நாடியால் மெள்ளமெள்ள இரேசிக்கவேண்டும். வேகமாய் இரேசித்தால் பலக்குறைவு உண்டாகும் எதினால் இரேசகம் செய்யப்பட்டதோ அதினாலேயே பூரகம் செய்யலாம், இடைகலையால் பிராணனை பூரித்து கும்பிக்கப்பட்ட பிராணனை மற்றபிங்கலையால் இரேசிக்க வேண்டும். பிங்கலையால் வாய்வைப்பூரித்துக் கும்பித்த வாய்வை இடைகலையால் இரேசிக்கவேண்டும் இவ்வண்ணம் சந்திரனாற்பூரித்துகும்பித்துசூரியனால் இரேசிக்கவேண்டும். சூரியனால் பூரித்துக் கும்பித்து சந்திரனால் இரேசிக்கவேண்டும் இவ்விதம் சூரிய சந்திரநாடிகளின் அப்பியாசத்தைத் தினமும் விஸ்தரிக்கப்படவேண்டும் இதனால் நாடிகள் மூன்று மாசத்திற்குமேல் சுத்தமாகின்றன.

அஜபாவிதிலை.

அதாவது, இந்த யோகத்திற்குரிய ஏகாந்தஸ்தானத்தில்பத்மாசனமிட்டுட்கார்ந்துஉடனேஅஷ்ட

கந்த தூபம் போடவேண்டியது இந்த யோகத்திற்காக ஏற்படுத்திய அறையானது மிக்கநலமாக இருக்கவேண்டும். தான் தனியேதான் இருக்கவேண்டும் இதில் சொல்லிய நான்கு காலங்களில் எந்தகாலமாவது வைத்துக்கொண்டு அப்பியாசப் படுத்தவேண்டும்.

இடைகலையானது எப்போது வலது நாசியிலும் ஹாம்சம் எனவேயிருக்கும் ஹம்சமென்பது ஆத்மாவின் பெயராகும் முதல் வெளியேவருகிற சுவாசத்தின் சத்தமாகிய ஹம் என்பதையும் உள்ளே போகிற சுவாசத்தின் சத்தமாகிய ஸம் என்பதையும்கண்டறியவேண்டும். இந்த ஹம்ஸம் என்கிற சப்தத்தை கண்டறிந்தவன் இந்த அப்பியாசத்தில் முதல்படி தெரிந்தவன் இம்மார்க்கன் எப்போதும் உலக ஆசையும் குடும்பமாகிய கட்டையும் நிவர்த்திக்க வேண்டியது ஒரேகாலத்தில் நீக்கக்கூடாது.

ஏனெனில் ஓர் வருஷகாலம் வரையில் மனக் கலக்கமும் பலவித கவலையும் நேரிடுமாகையால்நாளுக்குநாள் கொஞ்சம் கொஞ்சமாக நீக்கவேண்டியது மார்க்கன் கூடிய அளவு ஸ்திரப்படுத்தவேண்டும்.

இதேமாதிரியாக தன்னுடைய சுவாசத்தைக் குறித்து அதனால் உண்டாகும் ஹம்-ஸம்-என்ற சப்தத்தைக் கண்டறிய வேண்டும். இப்படி அப்பியாசித்து மூன்று நாடிகளின் குணத்தையும் ஹம்-ஸம்-என்ற சப்தத்தையும் கண்டறிந்தவுடன் தத்துவத்தை அறியவேண்டியது.

மூன்று நாடிகளை கண்டறியாமல் பஞ்சதத்துவத்தை ஆரம்பிக்கக்கூடாது இந்தயோக அப்யாசி

ஞானசக்தியைப்புணர்ந்து தேகத்தை பலப்படுத்த வேண்டும். அதாவது அரிசி கோதுமை பச்சைப் பயறு துவரை உளுந்து கம்புகேழ்வரகு நெய்பால் தயிர் மோர் முதலியவை உபயோகிக்கவேண்டும். இந்தயோகி அரைவயறு அன்னமும் கால்வயறு ஜலமும் சாப்பிடவேண்டும். அதேதனையில் உள் வாயு மற்ற ஒருபாகத்தில்சஞ்சரிக்கவேண்டுமென்றுணர்க.

புளிப்பு இனிப்பு உவர்ப்பு கார்ப்பு முதலியவைகள் அதிகமாக சேர்க்கக்கூடாது இத்தன்மைப்பட்ட யோகி சன்னியாசியாக வேண்டியதில்லை. எல்லா கிருகஸ்தரும் செல்வர்களும் ஏழைகளும் ஜாதிபேதம் நிறம் வித்தியாசம் பார்க்கவேண்டியதில்லை எவர்கள் திரிகரணசுத்தமாக இந்தயோகத்தைச் செய்வார்களோ அவர்களுக்கு சித்திக்கும் என்பது நிச்சயம்.

ஒருவன் பதினெட்டுவயதில் இந்தயோகம் அப்பியசித்தானால் ஐம்பதாவது வயதில் அந்த கேசரி முத்திரியை அடைவான். இத்தன்மையான யோகியது மாமிசங்களை கண்டிப்பாய் நீக்கியிருப்பதன்றி ராஜஸ தாமஸ குணங்களற்று தத்துவத்தைக்கொண்டு சுறுசுறுப்பா அப்பியசித்து அதிதீவிரபக்குவியாய் வாழ்வன்.

இரண்டாவது வாக்கியம்.

பஞ்சதத்துவநிலை.

இரண்டாம் வாக்கியமான சூட்சும பஞ்சாட்சரத்தியானத்தின் ஆதாரமாகிப் பஞ்சதத்துவங்களை குருசாம்பிரதாயத்தால் அறியவேண்டியதும், அந்த பஞ்ச தத்துவங்களின் குறிப்புகளின் விவரணமுங்

கூறப்படும். அதாவது முன்சொன்ன மூன்றுநாடிகளின் குணங்களையும் சுத்தமாக அறிந்துக்கொண்டு ஒன்றைஒன்றில் மாற்றி குண்டலியை அடையாமல் தத்துவங்களை அப்பியசிக்கலாகாது.

முதலிற் சொல்லியிருக்கிற நாடிகளை தன்னை வசப்படுத்திக் கொள்ளாமல் யோகிகள் தத்துவங்களைக்குறித்து ஆரம்பிக்கக்கூடாது போஜனம், மலம் கழித்தல், போகஞ்செய்தல், இவை மூன்றுஞ் சூரிய நாடியில் செய்யவேண்டியவை தாகம் ஜலவிருத்தி இவைகளை இடைகலையில் செய்யவேண்டும்.

பிருதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம் என்னும் ஐந்து தத்துவங்களும் மூன்றுநாடிகளில் ஒவ்வொரு நிமிஷத்திற்கு ஒருமுறை மாறிக்கொண்டேவருகின்றன இந்த தத்துவங்களைக்கண்டறிவதற்கு அடியில் வருமாறு கூறுவாம்.

அதாவது இந்த மூன்று வாய்வுகளை அப்பியசித்து இருக்கிறார்களோ அவர்கள்தான் இந்தயோகத்திற்குரியவர்கள். இந்த உலகம் பஞ்சபூதத்தில்சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இது கண்டுகொள்பவற்கு ஆயுள் விர்த்திக்கும். அப்பேர்ப்பட்டவர்கள் பூஜை முதலாகிய உபசாரங்கள் செய்யப்பெற்று மேலாவார்கள்.

இந்த ஐந்து தத்துவங்களும், சத்தியலோகம், பூலோகம், மிருத்தியுலோகம், முதலாகிய இடங்களில் வியாபித்திருக்கின்றன.

அவைகட் சன்னியமாக ஒருவஸ்துவும்ஏற்படாது.

இப்பஞ்ச தத்துவத்தை கண்டறிவதற்கு விபரம்சொல்லுவோம்(1) வது கலையில் தத்துவங்களின்

நடை (2) வது சுவாசத்தினால் தத்துவங்களை அறிதல் (3) வது சுவாசத்தில் தத்துவத்தின் அடையாளம் (4) வது தத்துவங்களின் நிறம் (5) வது தத்துவங்களின் சுவை (6) வது சுவாசத்தின் அளவு (7) வது தத்துவங்களின் அசைவு (8) வது தத்துவங்களின் பலன்.

ஆகிய எட்டுவிதங்களினால் கண்டறியவேண்டும்.

மாணாக்கன் எந்த வாய்வில் எந்த தத்வம் நடக்கிறதோ அதனைக்கண்டறியவேண்டும். மேலும் முக்கியமாகவே கவனிக்கவேண்டும் பஞ்சேந்திரியங்களை சன்முகி முத்திரையால் மூடிக்கொண்டு தினந்தினம் கொஞ்சம் கொஞ்சமாக அப்யாசிக்க வேண்டும். அதிகமாக அப்யாசித்தால் அசௌக்கியம் நேரிடும் குரு எவ்வளவு பிரமாணம் சொல்லுவாரோ அவ்வளவுதான் நடக்கவேண்டுமென்பதாம்.

இந்த சன்முகி முத்திரையை மூடிக்கொண்டு அப்யாசிக்குங் காலத்தில் மஞ்சள் நிறம் தோன்றினால் பிருதீவு என்றும் வெண்ணிறம் தோன்றினால் அப்பு வென்றும், சிவப்புநிறம் தோன்றினால் தேயு வென்றும் பச்சைநிறம் தோன்றினால் வாயுவென்றும் கருப்புநிறம் தோன்றினால் ஆகாயமென்றுஞ் சொல்லப்படும்.

2-ம் கருத்து கண்ணாடியை தனக்கு முன்னால் வைத்துக்கொண்டு அதின்பேரில் சுவாசத்தை விட்டால் அது நாற்சதுரமாக இருந்தால் பிருதிவு என்றும் அரையுருண்டை வடிவமாக இருந்தால் அப்பு வென்றும், முக்கோணமாக இருந்தால் தேயுவென்

றும், அறுகோண உருண்டைவடிவமாக விருந்தால் வாயுவென்றும், சிறுபுள்ளிகள் மாதிரியிருந்தால் ஆகாயமென்று அறியவேண்டும்.

3-ம், கருத்து சுவாசம் விடும்போது நேராகப் போனால் பிருதிவு, கீழாகப்போனால்அப்பு,மேலாகப் போனால் தேயு, ஒழுங்கீனமாகப்போனால் வாயு அலைந்து அடங்கிப்போனால் ஆகாசமென் றறியவேண்டும்,

4-ம், கருத்து, பிருதிவு, மஞ்சள், அப்பு, வெண்மை, அக்கினி, சிவப்பு, வாயு, பச்சை, ஆகாயம். கறுப்பு இவைகளைக் கண்டறியவேண்டும்.

உணரும் விபரம்.

அதாவது ஒவ்வொரு வருணமுள்ள குண்டுகள் ஐந்தை தனக்குப்பின்னால் வைத்துக்கொண்டு பத்மாசனத்தில் உட்கார்ந்து தனது எண்ணத்தைக் கூட்டி நிஷ்டையி லிருந்துக்கொண்டு பஞ்ச தத்துவத்தில் எதையாகிலும் ஒன்றைநினைத்துபின்னால் இருக்கிற குண்டுகளில் ஒன்றை எடுப்பானாகில் தானெண்ணிய நிறம்போல் இருந்தால் இதை அறிந்தவன் ஆகிறான் இவ்வண்ணமே ஒவ்வொரு குண்டையும் எடுப்பானாகில் முற்றுணர்ந்தவனாகிறான்.

5-ம், கருத்து தித்திப்பு, பிருதிவு, துவர்ப்பு அப்பு, புளிப்பு, தேயு, வாய்வுக்கும், ஆகாயத்திற்கும், கார்ப்பாகும்.

9-ம், கருத்து, சுவாசம் 12- அங்குலம்நீண்டால் பிருதிவு 16-அங்குலம் நீண்டால் அப்பு4-அங்குலம்

நீண்டால் தேயு 8-அங்குலம் நீண்டால்வாய்வு மூக்கினுள்ளாகவே இருந்தால் ஆகாசம்.

7-ம், கருத்து அசையாதவேளை பிருதிவு அசையும்வேளை அப்பு, கஷ்டமானவேளை தேயு துஷ்டவேளை வாயு பூஜைவேளை ஆகாசம்.

8-ம், கருத்து பிருதிவு தத்துவத்தில்ஆரம்பிக்கும் வேலை கண்டிப்பாக இலாபததில் முடியும் ஜல தத்துவத்தில் அசையும்படியான வேலைகள் செய்யத் தக்கது. ஏனென்றால் ஏதாவது ஒருமுடிவானவேலையை ஆரம்பித்தால் சீக்கிரத்தில் முடிந்துவிடும்.

அக்கினி, வாயு, ஆகாசம் இந்தமூன்று தத்துவத்தில் எந்தவேலை ஆரம்பித்தபோதிலும் அபஜெயமாகமுடியும். ஆகையால் மானுக்கன் இதுகளைஎந்த காலத்தில் உபயோகப்படுத்த வேண்டுமோ அந்தகாலத்தில் தத்துவத்தை அறிந்து உபயோகப்படுத்த வேண்டியது இந்த தத்துவத்தில் புத்தியை சரியாக செலுத்தவேண்டும்.

ஏனெனில் வியாதிமுதலாகிய ஹிம்சைகள் வராவொட்டாமலும் பலவிதகுணமில்லாமலும் நிரோதத்தை ஒரேகுணமாக இருந்து பார்க்கவேண்டும்.

பிராணாயாம நிர்ணயம்.

முன்சொன்ன பிராணாயாமத்தின் பிராமாணத்தை யுணர்த்துதல். அதாவது அருணோதய முதல் மூன்றுநாழிகைவரையிலும் மத்தியானத்திலும், அஸ்தமிக்கிறதற்கு முன்னும் பின்னுமாக 2-முகூர்த்தமும் அர்த்தராத்திரியிலும்பிரதிதினம்நான்குமுறை செய்யவேண்டும். காலம் ஒன்றுக்கு (80) பிராணாயாமம்வரையிலும் நன்றாய் அப்யாசிக்கவேண்டும்.

முகூர்த்தமென்பது இரண்டுநாழிகை யளவுள்ளதாம். நான்குமுறைசெய்தால் தினந்தோறும் 320 பிராணாயாம மாகின்றது.

ஒருபுருஷன் அப்யாசிக்கவேண்டுமானால் காலையில் 60-ம் மத்தியானத்தில் 40-ம் சாயங்காலத்தில் அர்த்தராத்திரியில் 20-ம் ஆக மெள்ளமெள்ள பிராணாயாமம் செய்யவேண்டியது.

அது கைவல்லியப்படும்போது முதலில் வேர்வையும் இரண்டாவதுநடுக்கமும் மூன்றாவது தவளைதத்தும் அப்யாசத்தால் பத்மாசனத்திலிருக்கையில் பூமியினின்றும் ஆகாயத்தெழும்புதலுமுண்டாகுமென்று குருநாதரால் சொல்லப்பட்டிருக்கின்றது.

கிரகஸ் தாசிரமிகளுக்கு உபயோகம் இப்பிராணாயாமம் கிரகஸ்தனுக்குபாபசுத்தியின்பொருட்டும் யோகிகளுக்கு யோகசித்தியின் பொருட்டுமாம். கிரகஸ்தன் சங்கத்தைவிட்டு ஏகாந்தத்தி லிருந்து அப்பியாசம் செய்யவேண்டும், அதன்பின் வகாரத்தின்பொருட்டு வெளியேசங்கத்தின் பிரியமுடையவன்

போல் விபவகரிக்கவேண்டும், கருமத்தாலுண்டான யாவும் கருமத்தின் படியிருக்கிறது, நிமித்த காரணமாக இவற்றைச் செய்வதில் ஒருக்காலும் தோஷமில்லை.

நல்ல விவேகி இந்தயோகத்தை அனுசரிப்பானாயின் அவன் அவசியம் சித்தியடைவான் இதற்கு சம்சயமில்லை இவன் புண்ணிய பாவங்களினின்றும் விடுபட்டு தேகாபிமானத்தைநீக்கி கிரகத்திலிருந்தே முத்தியை அடைவான். இந்தயோகியானவன் லோகசங்க்ரகம் லோகம் பரிபாலனமாகிய தனது காரியத்தில் புண்ணியபாவங்களைச் செய்யினும் அப்புண்ணிய பாவங்களில் பற்றப்படான் கிடைத்ததில் சந்தோஷமும், உள்ளேகொஞ்சம் பற்றில்லாதவனும், காலவரம்பு, இடவரம்பு, நடைவரம்பு, என்னும் சகல வரம்புகளும் உள்ளவனும் யோக சாதனத்தில் பொருந்தியிருப்பான் யோகக் கிரிகைகளோடு கூடிய கிரகஸ்தனுக்கு, ஈஸ்வர வாச்சியமாகிய பிரணவத்தின் சப்தத்தால் சித்தியுண்டாகும், ஆனால் செவ்வையாக அப்பியாசிக்கவேண்டும்.

உதாரணம் கிரகஸ்தன் புத்திரதாராதிகளால் நிரம்பியவனும் வீட்டில் இருந்துக்கொண்டு அகப்பற்றில்லாமல் யோகமார்க்கத்தில் தன்னிடத்து சித்தியின் அடையாளங்களைக் கண்ட பிறகு எனது ஆஞ்ஞையை சாதித்து கிரீடிப்பன், என்று சிவ சங்கிதையின் வாக்கியத்திலும் கிரகஸ்தனுக்கு சித்தி உண்டாகுமென்று சாதிக்கின்றது,

மாத்திரையாவது.

ஆரம்பத்தில் ஒரு மனிதன் ஜாதகத்தில் விடும் சுவாசம் வெளிப்பட்டு உள்ளே போகிறதெவ்வள

வோ அவ்வளவு பிராயணுபாமத்தின் மாத்திரை களாகும் அனுபவத்தின்பின் ஒருபுருஷன் நித்திரை செய்யும்போது சிவாசம் எவ்வளவு காலம்போய் திரும்புகிறதோ அவ்வளவு காலம் பிராணுபாமத் தின் மாத்திரைகளென்னப்படும்.

மாணுக்கன் அப்பியாச காலத்தில் உண்பது பால் நெய், முதலியவற்றோடுங்கூடிய போஜனம் சிலாக் கியம், அப்பியாசம் திடமானகாலத்தில் அப்படிப் பட்டநியமம் வேண்டுவதில்லை என்றும் பிராணுயா மம் ரேசக பூரக கும்பக மாத்திரைகளென்று பிரா ணனென்பது தன்தேகத்தில் ஜீவித்திருக்கும் வாய் வென்றும், ஆயமம் என்பது அந்தவாய்வை தடுப்ப தென்றும் நாரதீபத்திலும் கௌரவபுராணத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இரேசக பூரக கும்பக பேதத்தால் மூன்றுவித மாயும் மூன்று வருணமாயும் இருப்பதால் பிரணவ மே பிராணுபாமமெனப்படும் பத்மாஸனத்திலிருக் கும் புருஷன் நாசிநுனியில் சந்திரபிம்பப் பிரகாசங் களால் விரிந்த அகாரமூர்த்தியானது இரக்தாங்க முடையது அன்னவாகினி தண்டங்கரத்திலும உ டைய வாலையுமாகி காயத்திரியாகின்றது. உகாரமூ ர்த்தியானது வெண்ணிற அங்கமுடையது கருட வாகினி எவ்வர்ணமுடையது சக்கரத்தை கரத்திலு டையது மானது சாவித்ரியாகின்றது மகாரமூர்த்தி யானது கருமையான அங்கமுடையது. இடபவா கினி வயதுசென்றதும் சூலந்தரித்ததுமாகிய சரஸ் வதியாகின்றது அகாரதி மூன்றிற்குங்காரணம் பர

ஞ்சோதியாகிய ஏகாக்ஷர பிரணவமாகிறதென்று தியானிக்கவேண்டும்.

இடையினால் வெளிவாய்வை மாத்திரையளவு பூரித்து அகாரத்தை சிந்தித்து பூரித்தவாய்வை 64 மாத்திரையளவு கும்பித்து உகாரத்தையே தியானித்து கும்பித்ததை பிங்கலைபால் 32 மாத்திரையளவு ரேசித்து மகாரமூர்த்தியை தியானிக்கவேண்டும்.

அன்றியும் பூரகம் பன்னிரண்டு ஓங்காரமாகவும் கும்பகம் பதினாறு ஓங்காரமாகவும், இரேசகம் பத்து ஓங்காரமாகவும் செய்யவேண்டும். இதுபிராணாயாம அப்பியாசமெனப்படும். பிரமா, விஷ்ணு, ருத்திரன் பூரக கும்பக ரேசகங்களுக்கு அதிதேவதைகளென்று சொல்லப்படும்.

முன்சொல்லிய குண்டலிசத்தியைச் சொல்லுகிறோம். அதாவது நித்திரைசெய்யுங் குண்டலியானது குருப்பிரசாதமூன்றும்வாக்கியத்தால் எப்போது விழிக்கின்றதோ அப்போது சகல பதுமங்களும் ஆறுசக்கரங்களும் பிரமகிரந்தி, விஷ்ணுகிரந்தி உருத்திரகிரந்தி என்னும் மூன்றுகிரந்திகளும் பேதத்தை அடைகின்றன.

அப்போது சூரியப்பதவியென்னுஞ் சுழிமுனையிற் பிராணவாயு இராஜமார்க்கமாக அனுசரிக்கப்படுகின்றது.

சூக்ஷ்மாக போக்கு சம்பவித்தால் சித்தம் நிராலம்ப நிர்விஷயமாகின்றது சித்தம் நிராலம்பமாகுங் காலனை வஞ்சிக்கக்கூடும்

சுழிமுனையென்றும், சூனியபதவியென்றும், பிர்மமாந்திரமென்றும் மகமேருவென்றும்பெருவழி யென்றும் மயானமென்றும், சாம்பவி மத்தியபாக மென்றும், சொல்வதால் இந்த குண்டலி போதத் திலேயே ஷட்சக்கரபேத முதலியவை உண்டாகி ன்றமையால் முழுமுயற்சியோடு பிரஹமாந்மாத்தி ன் சச்சிதானந்த லக்ஷணப்பிரமத்தை யடைதற் கு பாயமாகிய சுழிமுனையின் வாயலை முகத்தால் மூடி க்கொண்டு நித்திரைசெய்யும் ஈஸ்வரியாகிய குண்ட லியை விழிப்பிக்க மகாமுத்திரை முதலியவற்றை செவ்வையாய் அனுசரிக்கவேண்டும்.

இந்த குண்டலி சத்தியானது கந்தத்தின் மே ல்பாகத்தில் யோகிகளுக்கு மோக்ஷத்தின்பொருட் டும், மூடர்களுக்கு பந்தத்தின்பொருட்டுமாகத் தூ ங்குகின்றது. சகலயோக தந்திரங்களுக்கும் குண் டலிசத்தி ஆச்சரியமாயிருப்பதால் அக்குண்டலி சத்தியை எவன் அறிகிறானோ அவன் யோகவித்து வான் என்றும் யோகிகள் தூங்கும் குண்டலியை விழிக்கச் செய்கிறவர்களென்றும் அடயோகதீபிகை யில்சொல்லியிருக்கின்றது.

குண்டலி ஸ்தானநிலை.

மூலாதாரத்தில் பொருந்தும் உட்பாகமாகிய அக்குண்டலியை சூரியனால் பூரிக்கவேண்டும் குதத் திற்கு இரண்டங்குலமேலும், லிங்கத்திற்கு இரண் டங்குலங்கீழுமாகிய தேகத்தின் மத்தியானது சரீர நடுவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

கந்தஸ்தானம் மனிதர்களுக்கு தேகமத்தியமூலாதாரத்தினின்றும் ஒன்பதங்குலத்தின் மேல் நான்கு அங்குல அகலமும் நீளமும் உள்ளதாய் முட்டைபோன்றவடிவுள்ளதாய் துவக்கு தோல்முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது.

குதத்திற்கு இரண்டங்குலமேல் தேகமத்தியபாகம் ஒரு அங்குலமிருந்து ஒன்பதங்குலம் கந்தஸ்தானமாம்.

ஆக பன்னிரண்டு அங்குலப் பிரமாணம் ஆகாவது ஒருஜாண் எழுபத்தீராயிரம் நாடிகளின் பலத்தைச் சோதிக்க வேண்டுமாயின் அதற்குசத்திசலனமாகிய குண்டலி அப்பியாசமின்றி வேறுசுத்திசெய்யும் உபாயமில்லை.

இந்த மத்திய நாடியாகிய சுழி முனையானது யோகிகளுக்கு திடப்பியாசம் சுவஸ்திகா பங்கயாசனங்களாலும் பிராணாயாமத்தாலும் மகா முத்திரை முதலிய முத்திரைகளால் சௌக்கிய முண்டாகின்றது. ஆகிலும் சமாதியினால் அன்னியவிர்த்திநிரோதிக்கலாகாது. ஏகாக்கிரதன்மையால் மனதை தாரணைசெய்து அப்பியாசித்து மனதை நிலைக்கும் முயற்சி செய்யவேண்டும்,

ஏனென்றால். இராஜயோகமின்றி பரயபுருஷார்த்தபலம் சித்தியாமையால் வாயுவின் கும்பக முத்திரை விதானமாகிய சகலவிதிகளையும் மனதோடு அப்பியாசிக்கவேண்டும். புத்திமான்கள் வாயுவின் விதிக்கு அன்னியமாகிய விஷயத்தில் மனோ விர்த்தியை செலுத்தலாகாது எவர்கள் யோகிகளின் குருபாம்

பரையாகிய சாம்பிரதாயத்தால் வந்த சாம்பிரதாக்கிய மாகிய மகா முத்திரை முதலியவற்றின் உபதேசத்தைத் தருகின்றுரோ அயரோ ஸ்ரீ குரு சகலகுருக்களுக்கும் சிரேஷ்டமானவர் அவரே பிரபு அவரே சாட்சாத் பிரத்தியட்ச ஈஸ்வரனென்றும் சொலலப்படும்.

அன்றியும் அக்கினி மண்டலம் நாபியின் கீழ்பாகத்தி லிருக்கின்றது அது தேகத்தின் மத்தியில் பொன்னிறமுள்ளதாய் மனிதர்களுக்கு முக்கோணமாயும் இருக்கின்றது அக்குண்டலியை எழுப்புவிதமாவது.

சூரிய உதையகாலத்திலும் அஸ்தமான காலத்திலும் தினந்தோறும் இரண்டு முகூர்த்தம் பேதிக்கவேண்டும். சூரியனுல் பூரித்து சந்திரனுல் இரேசிக்கிறதால் அபானனும் அக்கினியை அடைந்து ஊஷ்ண சொரூபத்தால் பிராணனை அடைகின்றது.

அக்கினியின் ஊஷ்ணத்தால் செவ்வையாக தபிக்கப்படுகின்றதால் தூங்குகின்ற குண்டலிசத்தி நன்ருய் விழிப்புடையதாகின்றது தண்டத்தால் அடிபட்ட சர்ப்பத்தைப்போல நிஸ்வாசத்தை செய்து நிமர்ச்சி அடைகின்றது.

அதன்பின் பிலத்திற் பிரவேசித்த பாம்பைப்போல் சுழிமுனையினுள் பிரவேசிக்கின்றது.

ஒருபுருஷன் சலனம்செய்து மூலாதாரத்திலிருந்து குண்டலியைமேலே கொண்டு வருவானுயின் அவன்மேல்சென்று அமிர்தத்தை அடைவான் இந்த குண்டலிசத்தியை வாலேப்பிடித்துஎழுப்பினுல் நித்திரையைவிட்டு மேலே எழும்புகிறது, இதை குருமுகமாக அறியவேண்டும்.

அமிர்தநிலையாவன.

சிகையின்மத்தியில் பரமாத்மாபொருந்தி இருப்பதால் மேருவைப்போல உயர்ந்திருக்கும் சுழிமுனையினதுமேருவின் மேல்பாகத்தின்மத்தியில் சோமஜலம் ஒழுகிக்கொண்டிருக்கிறது இந்த துவாரமான சந்திரமண்டலத்தி னின்று சரீரத்திற்குச் சாரம் ஒழுகுகின்றது.

ஒழுகும் சந்திர அமிர்தத்தின்சுவை. கார்ப்பு, உவர்ப்பு, இவற்றிற்கு சமானமாக வுள்ளதாயும் தேன்-நெய்-பால்- என்பதைப்போலும் ரசமுடையதானல் அப்போது அவனுக்கு காமசித்தி ஆகின்றது அந்தசந்திராமிர்தமென்னும் ரசத்தை எவன்பானம் பண்ணுகிறானோ அந்தயோகி வியாதியில்லாதவனுய் தாமரைத் தண்டுபோல் மிருதுவான சரீரமுடையவனுய் வெகுகாலம் ஜீவித்திருப்பான்.

இனி சுவாசாங்குலப் பிரமாணநிலை.

இந்த மனுஷ்ய ஜென்மத்துக்கு சாதாராணமாய் சுவாசம் உள்ளேபோகிறது. பத்தங்குலம் வெளியில் பன்னிரண்டாங்குலம் போகும் இது இல்லாமல்நடக்கும்போது 24-அங்குலமும் ஓடும்போது 42-அங்குலமும் போகஞ் செய்யும்போதும் தூங்கும்போதும் 50-60-அங்குலமும் போகும். சாப்பிடும்போதும் வாந்தியாகும்போதும், 18-அங்குலம் ஓடுகிறது சாதாரணமாய் 12-அங்குலம் ஓடுகிறது ஆகையால் இந்தசுவாசத்தை போக அப்பியாசிகள் கவனிக்கவேண்டியது இவ்வளவு நீளமாக போகிற சுவாசத்தை தன்னால்கூடிய அளவுகொஞ்சங்கொஞ்சமாய் குறைக்கவேண்டியது.

அது ஏனென்றால் இந்த மனுஷ ஜன்மத்திற்கு கலைகளாகிய சுவாசம் 12-அங்குலம் ஓடி 4-அங்குலங்கழித்து 8-அங்குலந்தான் நின்ற இடத்தில் சேர்க்கும் இப்படிக்குச்சாதாரணமாக 4-அங்குலங்கழிந்ததனால் 120-வயதாகின்றது. இதைகொஞ்சங்கொஞ்சமாக சுவாசத்தை பந்தனம் பண்ணுவதினால் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள்.

சாதாரணமாய் மனிதர்களுக்குண்டாகிய சுயபுத்தி போதாது. ஆகையால் அனுபோகமுடைய யோகிகளின் புத்தியை கேட்டுக்கொண்டு நடத்தவேண்டும் இல்லாவிட்டால் துன்பம் நேரிடும் இந்த மூன்று வாய்வுக்களையும் பஞ்ச தத்துவங்களையும் சுவாசத்தையும் குணிக்க அறிந்துக்கொண்டால்வரப்போகிறதைச் சொல்லலாம் தைரியத்தினால் சுறுசுறுப்பாய் மாணுக்கன் இந்த ராஜயோகத்தைஅப்பியாசிப்பானாகில் இரண்டுமூன்று வருஷத்தில் அறியப்படுகிறான்.

மரணநிலை அறிதல்

இடைகலைஅல்லது பிங்கலையில் ஒரு ராத்திரிமுழுவதும் இடைவிடாமல் நடந்தால் அப்பேர்ப்பட்டமனிதன் மூன்று வருஷத்தில் மரணமடைவான் இதே மாதிரியாக பிங்கலையில் மறிதலில்லாமல் இரண்டு ராத்திரி இரண்டு பகல் இடைவிடாமல் நடக்கும் மனிதனுக்கு மரணம் இரண்டு வருஷத்தில் நேரிடும் இடைவிடாமல் ஒருநாசியில் சுவாசம் மூன்றுநாளைக்கு நடக்கிற மனிதனுக்கு ஒருவருஷத்தில் மரணம்நேரிடும் இராத்திரி முழுதும் இடைகலையும் பகல்முழுதும் பிங்கலையும் இடைவிடாமல் நடக்

கும் மனிதனுக்கு மரணம் ஆறுமாதத்தில் நேரிடும் பிங்கலை தொடர்ச்சியாக இடைவிடாமல் ஓர்பக்ஷம் நடக்கும்மனிதனுக்கு பதினைந்துதினத்தில் மரணம் நேரிடும் இடைகலையானது இதேமாதிரியாக ஒரு மாதம்நடந்தால் இந்த விதிப்பிரகாரம் முடியும்.

புருவத்தைப் பார்த்தால் தெரியாதவர்களுக்கு ஒன்பதுநாளிலும் காது கேளாதவர்களுக்கு ஏழு நாளிலும் நக்ஷத்திரந் தெரியாதவர்களுக்கு ஐந்து நாளிலும் மூக்குநுனி தெரியாதவர்களுக்கு மூன்று நாளிலும் இரண்டுகண்களையும் கையால் அமுக்கினால் தண்ணீர் வாராதவர்களுக்கு பத்துநாளில் மரணம் நேரிடும்என்று குருவாக்கியம்

யோகிகளுக்கு மேல்கூறிய அடையாளங்கள் நேரிட்டால் உடனே வாய்வைசோதித்து அதைசரிப்படுத்திக்கொள்ளுந் தன்மை அவர்கட்குள.

யோகிகளுக்கு மரணம்நேரிடுவது கஷ்டம் யோகிகள் அப்பியாசத்தால் வாயுவுகளையும் தத்துவங்களையும் உணர்ந்து முத்திரைக்குப் பின் தொடருவார்கள்.

பிறகு கேசரிமுத்திரை எவ்வளவுகாலம் ஜீவித்திருக்கவேண்டுமோ அவ்வளவுகாலம் ஜீவித்திருப்பார்கள் இந்தயோகிகள் மூன்று வாய்வுகளையும் தத்துவங்களையும் அதிகமாக கவனித்து ஸ்திரப்படுத்தவேண்டும்.

சாதாரணமாய் மனிதர்களுக்கு இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் நடக்கும் பக்ஷத்தில் 120-வருஷம் ஜீவித்திருக்கலாம்.

இப்போது மனிதர்கள் அறுபத்தோராயிரத்து அறுநூறு சுவாசத்துக்குமேல் விடுகிறார்கள், எப்படியெனில் ஓடுவதினாலும் நடப்பதினாலும் தூங்குவதினாலும் போகம் செய்வதினாலும் சுவாசம் அதிகரிப்பதினால் இந்தநூற்றிருபது வயதுக்கு குறைவு நேரிடுகின்றது.

சாதாரணமாய் மனிதர் விடும்சுவாசம் எவ்வளவு குறையுமோ அவ்வளவு வயது ஏறிவரும் திடமென்று சுவாசத்தைக் கட்டக்கூடாது.

அதிக விரைவாகவும் ஓடக்கூடாது, ஜாஸ்திசாப்பிடக்கூடாது, வேகமாய் நடக்கக்கூடாது, அதிக போகமும் செய்யக்கூடாது.

இந்தவிதிகளில் ஒன்றும் தவறக்கூடாது தவறி நடப்பார்களேயானால் அதிக கஷ்டநஷ்ட மடைவார்கள்,

நான்காவது வாக்கியம்.

சாம்பவியின் முத்திரை.

உள்ளாதாரமுதல் பிரமாந்திரம் வரையிலுள்ள சக்கரங்களுள் தன்னாற்கொள்ளப்பட்ட சக்கரத்தில் லக்ஷியமும் தேகத்திற்கு வெளிபிரதேசத்தில் மூடுதலும் திறந்தலும் இல்லாத திருஷ்டிபார்வையுமாக விருத்தல்எதுவோ அப்படிப்பட்டது சாம்பவி முத்திரையாம்.

இதை இருக்குமுதலிய வேதங்களிலும் சாங்கியத்தஞ்சலிமுதலிய சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

சாம்பவிக்கு வெளிதிருஷ்டியும் கேசரிக்கு உள் திருஷ்டியும் சாம்பவிக்கு இருதயப்பார்வையும் கேசரிக்கு புருவ நடுப்பார்வையுமாம் ஸ்ரீ சாம்பவிக்கும் கேசரிக்கும் ஸ்தானபேதமுண்டு சித்தம் லயானந்தமானால் பேதமில்லையென்பது கருத்து.

ஸ்ரீ சாம்பவி முத்திரையால் திரமனதுடையவனாய் நாசிநுனிபாதத்தில் வைக்கப்பட்ட திருஷ்டியையுடையவனாய் நிஷபந்தந் தன்மையாலும் தேகேந்திரிய மனதுகளின் நிற்சலனத்தன்மையாலும், சந்திரசூரியர்களை லயமாக்குகிறவனும் பிராணசஞ்சாரத்தை ஸ்தம்பிக்கிறவன் எவனோ அவனே அதுவிதுவென்று சொல்லக்கூடாத பதமாகிய ஆத்துமசொரூபத்தில் நிலைத்தவனாகிறான்.

கேசரி முத்திரை.

இடதுவலது நாடிகளுள்ள வாய்வு எந்தமத்தியதேசத்தில் செல்லுகிறதோ அத்தேசத்தில் கேசரி முத்திரை ஸ்திரமுடையதாகின்றது இதிற்சம்சயமில்லை சூனியத்தில் பிராமணன் ஸ்திரமாகுதலே வாய்வை விழுங்குதலெனப்படும்.

சூரிய சந்திரர்களென்னும் இடைகலைபிங்கலைகளின்மத்தியில் நிராலம்பமாகிய உள் ஆகாசத்திலிருக்கும் ஆகாயங்களின் சமுதாயத்தில் செவ்வையாய் பொருந்தி இருப்பது எதுவோ அம்முத்திரையேகேசரி என்னப்படும்.

இதின் அப்பியாசமாவன முன்னமே சுழிமுனையை பிராணனால் பூரிக்கவேண்டும்.

அப்போது நிச்சயிக்கப்பட்டகேசரிமுத்திரை உண்டாகிறது.

புருவமத்தியில் சிவமென்னும் சுகவடிவமாகிய பரமாத்மாவின் ஸ்தானமாம்.

சிவத்தில் ஒடுங்கவேண்டியது. எவன்மனதை நிராலம்பமாக்கி ஒன்றையும் சிந்தியாதிருக்கின்றானோ அவனே கேசரிமுத்திரை யுணருகிறான் பிரமகாரவிர்த்தியை பரவைராக்கியத்தால் விடுகிறானோ அவன் உள்ளும் வெளியும் இருக்கும் ஆகாயத்தில் கடத்தைபோலநிற்கிறான் இதுநிச்சயம்.

தேகத்தினுள்ளும் வெளியிலுமுள்ள வாய்வைதனக்குள்கேசரியில் எப்படிலயமாக்குகின்றானோ அப்படியே தேகத்திலிருக்கும் வாய்வை லயமாக்குகிறான்.

இதில் சம்சயமில்லை அன்றியும் பிராணனது ஸ்தானத்தில் சித்தத்தோடு ஸ்திரத்தன்மை அடைகிறான்.

வேறுஒன்றையும் சிந்தியான், அப்போது செளரூபத்தில் நிலைத்தலாகிய ஜீவன்முத்தனாவது திண்ணம்.

அஜபகாயத்திரியு னிலை.

பூரகரேசகம் செய்யுங்கால் (ஹம்ஸம்) லோஹம் என்று நேராகவும் தலைகீழாகவும் பிரகாசிக்கின்றன.

அஜபைமந்திரத்தினால் (தத்வமசி) என்னும் மகாவாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற, ஜீவப்பிரம ஐக்கியம் அடிக்கடி சிந்திக்கப்படுகிறது.

இந்தஸோ-என்னும் அஜபகாயத்திரியை ஈஸ்வர நாமத்தைப்போல் ஜெபித்தால் சித்தசுத்திக்கு ஹேதுவாம் வெகுகாலம்வரையில் ஜெபம்செய்யின் விருத்தி அந்தர்முகப்படும்.

அப்போதுசுவாசம் வெளிப்படுங்கால் சகாரமாகிறதை ஸோவென்னும் சுவாசத்தை உட்கொள்ளுங்கால் அகரத்தை ஹம்என்றே தியானிக்கவேண்டும் இந்த அகாரம் மறுபடியும் உள் செல்லுகின்றபடியால் ஹம்ஸம் ஹம்ஸம்என்றே மஹாமந்திரத்தை ஜீவன் எப்போதும் ஜெபிக்கிறான் குருவாக்கியத்தினால் இந்த மந்திரத்தின் ஜெபம் சுழிமுனையில் விபரீதமாயுண்டாகிறது.

அது ஸோஹம் ஸோஹம் என்றழைக்கப்படுகின்றது, சகாரம்கேசரி எனப்படுகின்றது.

த்வம்பதமென்று நிச்சயிக்கப்படுகின்றது அகாரம் பரமேசுவரனாகிறான்.

தற்பதமென்று நிச்சயிக்கப்பட்டிருக்கின்றது.

சகாரத்தைதியானிக்கும். ஆன்மா நிச்சயமாய் அகாரமே ஆகின்றான் என்றுயோகபீஜம் யோகசூடாமணி உபநிஷத்து யோகதத்து உபநிஷத்துமுதலியவற்றால் காண்க.

இது அஜபைகாயத்திரியாம், இதைமுக்கியமாக பிரவர்த்தியுடையவன்எவனோ அவனதிகாரியாவன் அதுசோபாதிகதியானமாம்.

இவற்றினின்று சகாரம், அகாரமென்னும் மெய்யெழுத்துகளை அடக்கி எஞ்சிநிற்கும் ஓம் என்னும்

அக்ஷரத்தைத்தியானித்தால் நிருபாதிகமாம் ஓம்ஸோஹம் என்னும் இவ்விரண்டு சப்தங்களும் பிரத்தியேகாத்மாவோடு பின்னமாகிய பிரமமென்னும் ஒரே அர்த்தமுடையன சுத்தமாய் இருத்தலால் நிருபாதிகமாயினும் ஓம் என்னும் அக்ஷரத்தில் சகார அகார மென்னும் உபாதிகளை சேர்த்தலால் ஸோஹம் உன்னும் சப்தமுண்டாகிறது.

ஆகையால் சோபாதிகமெனப் படுகின்றது, விசாரசாகரம் பதார்த்த மஞ்சூக்ஷா முதலிய நூல்களும் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

நாதானுசந்தானம்.

இந்த நாதானுசந்தானம் முதல்முதல் அப்பியாசிக்கும் மாணுக்கன் சுராராஜகுமாரவைரி ரந்தரத்தில் தனது கைவிரல்களிரண்டினுல் நிரோதித்து உள்ளேபரவும் சமுத்திரம்போன்ற திரமான நாதத்தை சீக்கிரமாக மனிதன் கோருகிறுன் அதனுல் அவனுக்கு செவ்வையா எழும்பிய நாதமும்வாய்வும் சுத்தமாய் ஜெயிக்கப்பட்டவைக ளாகின்றனவோ அந்த மகா குணேதயமுள்ளவனுக்கு அணிமாதி குணங்களும் அளவிறந்த புண்ணியமும் உண்டாகிறதென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

சுராராசன் இந்திரன் அவன்குமாரன், அர்ச்சுனன் அவன்வைரிகர்ணன் அந்தகாணரந்தரத்தில் என்பது பொருளாம் அனுகதமென்னும்நாத வெளியிலுண்டாகும் சுரோத்திரவக்காதிஇந்திரியங்களுக்கு விஷயமாகியதொனிசூழ்கின்றது இந்தநாத அப்யாசி

ஒருபட்சத்தில் சகலசித்த சஞ்சலங்களேயும் ஜெயி த்து நிஜானந்தமுடையவனுகிருன்.

முதலில் அப்பியாசிக்குங்கால் நானுவிதமாகியசத் திரம்போலும் பேரிமுதலிய, வாத்தியம் போலும், நாதம் கேழ்க்கப்படுகின்றது. பின்நாதானுசந்தான ம் நிர்வித்தியாகுங்கால் சூட்சம் சூட்சமாக கேழ்க்க ப்படும். ஆதியில்வாய்வுபிர்மாந்திரத்திற்செல்லுங்கா லத்து, சமுத்திரம், சச்சரம், மேகம், பேரிகைகனக தப்பட்டை, என்பவற்ருல், உண்டாகும்சப்தத்தை ப்போன்ற நாதமும் அப்படியே பிர்மாந்திரத்தில்வா ய்வுஸ்திரப்பட்டபின், மத்தளம், சங்கு, கண்டாம ணி, காகளம், என்பவற்ருல் உண்டாகும்சப்தத்தை ப்போன்ற நாதமும் அந்தத்தில் பிராணன் பிர்மாண ந்தத்தில் மிகவு மஸ்திரமானபின் கிண்கிணிவேணி, வீணைதந்தரி, வண்டு, என்பவற்றின் சப்தங்களேப் போன்றநாதங்களும் இன்னும் நானுவிதமான நாத ங்கள் தேகத்தின் மத்தியில் உள்ளனவாக கேழ்க்க ப்படும் மேகம், பேரி முதலியவற்ருலுண்டாகிய பெ ருஞ்சப்தங்கள் கேழ்க்கப்படினும் அவற்றுள் சூட்சு மத்திலும் சூட்சுமமாகிய நாதத்தையே சிந்திக்கவே ண்டும் சூட்சுமமாகிய நாதம்நெடுநேர மிருப்பதால், சித்தம் நெடுநேரம் ஸ்திரமுடையதாய் நிலைக்கும்.

கனமாகிய நாதத்தைவிட்டு சூட்சுமத்திலும் அல் லது சூட்சுமத்தைவிட்டு கனநாதத்திலுமாகஇரம்பி ப்பதாயிருக்கினும் கனசூட்சும மென்னும் இரண்டி லொரு நாதத்தை கொள்ளுதல், தள்ளுதல்கூடாது ஏனெனில் அப்படிக்கொள்ளுதலும், இராஜதகுண

இயல்பதால் அவ்விராஜத குணத்தைதவரவொட்டா மல் சுத்த சாத்வீககுண செய்கையான சூட்சுமநா தத்தில் மனதைச்செலுத்தவேண்டும்.

அஃதேதனெனில் நாதங்களில் ரம்மிக்கும் மன மோசமாதியையடையும் என்பது கருத்து அதாவ து மலர்ந்த புஷ்பரசத்தைகுடிக்கும் வண்டு கந்தத் தைவிரும்பாததுபோல சூட்சுமநாதத்தில் சித்தம் நிலைக்கவேண்டியது. சப்தாதிவிஷயமாகிய உத்தியா னத்தில் சஞ்சரிக்கும் மனமென்னும் மதயானை யட க்குதலில் இந்த அனுசந்தானிபாகியது கூறிய அ ங்குசம்போன்ற வலியுடையதென்று சொல்லப்பட் டிருக்கின்றது.

வாசியையடக்கி யடையும்பலன்.

இந்தயோக அப்பியாசிகள் சூரிய சந்திரகலையில் பிராணவாயு, செல்லுங்கால் பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, என்னும் நான்கு தத்துவங்கள்வந்து விகுல ம் அப்போது அப்பிராணவாயுவு ஆகாயதத்துவத் தில் அடையும் அச்சமயம் சுவாசம் குறைந்துவரும் அக்காலத்து சுவாசபந்தனம் செய்யக்கூடும்.

அப்போது ஓர் அங்குலம் குறைந்தால் எவ்வுலக த்திச்சையில் நின்று சுவாதீனப்படுவான் இரண்ட ங்குலம் குறைந்தால் ஆனந்திக்கப்பட்டு ஞானசெல் வமுண்டாகும் மூன்றங்குலம் குறைந்தால் விதேகி யாவான் நாலங்குலம் குறைந்தால் தூரதேசத்தில்ந டக்கும் நடவடிக்கைசொல்லப்படுவான் ஆறங்குலம் குறைந்தாலாகாசத்திலுள்ளசகலமும் கண்டுணர்வா ன் ஏழங்குலங்குறைந்தால்சரீரய்காயசித்தி பெறுவா

ன் எட்டங்குலங் குறைந்தால் அணிமாதி சித்திகளை யடைவான் ஒன்பதங்குலம்குறைந்தால் நவகண்டங் களில் சஞ்சரிப்பான் பத்தங்குலம் குறைந்தால் ஒரு தேகத்தைவிட்டு மற்றொரு தேகத்தில் பிரவேசிப் பான் பதினொரு அங்குலம் குறைந்தால் தனது ஆத்மாவைக்கண்டு வசனிப்பான் பன்னிரண்டங்குலம அடங்கும் சுவாசமானது உதித்தவிடத்திலேயே சுழன்றுகொண் டிருக்கிறபடியால் அந்த பிரமயோகி நெடுங்காலம் அன்னபானாதிகளைநீக்கி அவா அற்றிருப்பான் சமாதியிலுட்கார்ந்து மாணாக்கன் இடைகலையை பிங்கலையிலும் பிங்கலை இடைகலையிலும் மாற்றமாற்றுக் கொண்டபின் பகல் முழுவதும் இடைகலையும் இரவில் அதை அடைத்துவிட்டு பிங்கலையில் நடத்தப்படுவான்.

இதற்காக பழம்பருத்தி கொஞ்சம் சுத்தம்பண்ணி வைத்துக்கொண்டு இடைகலை நடத்தவேண்டியிருந்தால் வலதுநாசியிலும் பிங்கலை நடத்தவேண்டியிருந்தால் இடதுநாசியினும் அடைத்துவிட வேண்டும் இப்படி சரிவரநடந்தால் மனிதர்கள் நூற்றிருபது வயது ஜீவத்திருக்கலாம்.

மற்றசங்கதிகள் சித்திக்கும் பக்ஷத்தில் யோகிகளுக்கு வயதேகிடையாது.

எந்தவிதிகள் எப்படியிருந்தாலும் இந்த விதிகள் யாவற்றும் கிரகஸ்தர்களுக்காகவே ஏற்பட்டிருக்கிறது.

இதை அப்பியாசிகள் எப்போதும் இவ்விதிப் பிரகாரம் நடத்துவார்கள் அப்போது தேகசெளக்

கிபமும்நீண்ட ஆயுளும் மனவடுக்கமும் சித்தசாந் தியும் உடையவர்களாய் இருப்பார்கள்.

மனோலய நிலை.

பிராணவாயு சுழிமுனையாகிய மத்தியநாடியிற்செல்லுங்கால் அந்தக்கரணம் சூன்னிய தேசகாலவஸ்து பரிச்சேத மில்லாத பிர்மத்தில் பிரவேசிக்கின்றது. அப்போது சித்த நிரோதமுள்ள யோகவித்தானவன் பிராரத்தத்தோடு சகலகருமங்களையும் நிர்மூலமாக்குகிறான் எதுவரையில் பிராணனும் இந்திரியங்களும் ஜீவித்திருக்கின்றனவோ அதுவரையில் மனதில் ஞானம் எப்படி உண்டாகும் பிராணன் மனம் என்னும் இவ்விரண்டையும் எவன் லயமாக்குகிறானோ அப்புருஷன் மோக்ஷத்தை அடைகிறான்.

பிராணமனோ லயங்களில்லாதவன் எவ்விதத்திலும் மோக்ஷமடையான் நல்ல ஸ்தானத்தி லிருந்துக்கொண்டு சுழிமுனையென்னும் மத்திய நாடியை நன்றாய்பேதிக்கும் தன்மையை குருமுகமாய் அறிந்து பிராணவாய்வை மத்தியிற் செலுத்துவதாகி பிர்மாந்திரத்தில் நிரோதித்தல் வேண்டும் இப்படி அப்பியாசித்தால் பிராணனது அசைவிற்கு க்ஷயம் வரும் அப்போது மனம் மிகவும் சாந்தியையடைகின்றது அக்காலம் நிர்வாண மிஞ்சுகின்றது.

சூரியனும் சந்திரனும் இராப்பகல் வடிவமாகிய காலத்தைப் புசிப்பதா யிருக்கிறார்கள் இது ரகசியமாய் சொல்லிப்பட்டது.

இரண்டரை கடிகை சூரியனோடுங்கால் பகலென்றும் சந்திரனோடுங்கால் இரவென்று சொல்லப்பட்டிருக்கின்றது எப்போது சுழிமுனை மார்க்கத்தால் வாய்வு பிர்மாந்தரத்தில் ஒடுங்குகின்றதோ அப்போது இராப்பகல்வடிவமாகிய காலமில்லாமையால் அச்சுழிமுனை காலத்தை புசிப்பதாய் இருக்கின்றது.

எந்தயோகியால் பிராணவாய்வை கட்டப்படுகின்றதோ அந்தயோகியால் மனம் கட்டப்படுகின்றது. எவனால் மனம் கட்டப்படுகின்றதோ அவனால் பிராணனும் கட்டப்படும்.

மனம்பிராணன் என்னும் இரண்டில் ஒன்றைகட்டினால் மற்றொன்றுங் கட்டப்படும் ஆதலால் மனம் ஒடுங்காதவரையில் வாசனைநசியாது வாசனை நசியாதவரையில் சித்தம் நசியாது சித்தம் நசியாதவரையில் தத்துவஞானம் உண்டாகாது.

இவற்றில் மனம்பிராணனென்னும் இரண்டினுள் ஒன்றுநசித்தால் மற்றொன்றும் நாசமாம் ஒன்றின் பிரவிர்த்தியால் மற்றொன்றும் பிரவிர்த்தியாகின்றது இவ்விரண்டும் லயமானால் மோட்சத்தின் சித்தி உண்டாகும்.

மனம் ஸ்திரப்பட்டால் பிராணன் ஸ்திரமாகும். சுரோத்திர முதலிய இந்திரியங்களுக்கு மனம்நாதனாகிறான் மனதிற்கு பிராணன் நாதனாகிறான் பிராணனுக்கு மனோலயன் நாதனாகிறான் இம்மனோலயம் நாதத்தை ஆசரித்திருக்கின்றது.

அதாவது மனம் நாசத்திலொன்றுகின்றது சுவா சநிசுவாசங்கள் நஷ்டமாகிறதும் சத்தாதிவிஷயக்கி ரகணம் நஷ்டமாகிறதும் சேஷ்டைகள் நீங்குகிற தும், விகாரங்க ளில்லாததும் மனோலயமேயாம். ம னோலயம் எதுவரையில் ஆகவில்லையோ அதுவரை யில் இந்திரிய விஷயங்கள் ஜெயமாகாது இந்திரிய விஷயங்கள் ஜெயமாகாவரையில் எனதென்பது எப் படி நீங்கும் எனதென்பது நீங்காதவரையில் யா னென்னும் அகந்தை எப்படி நீங்கும் யானென்னு ம் அகந்தை நீங்காதவரையில் மனம் சுத்தம் எப்ப டி ஆகும் மனம் சுத்தமாகாதவரையில் அபரோட்ச ஞானம் எப்படி உதையமாகும் அபரோட்ச ஞான ம் உதையமாகாதவரையில் பிரம்ம சைதன்னியம் ச மாதியின்கண் எப்படி புலப்படும் பிரம்மசைதன்னி யம் சமாதியின்கண் புலப்படாதவரையில் திடஞ் ஞானம் எப்படி உதயமாகும் திடஞ்ஞானம் பெற்ற மகான்களுக்கு குலிதமேது பேதமேது மாய்கை யேது பந்தசமேது ஜென்மமேது அப்போது அந்த யோகி ஜென்மரகிதனாகின்றான்.

ஆகையால் இந்த யோகத்தை அனுஷ்டிக்கும்பக் குவமுடைய முமுட்சுக்கள் முக்கியமாய் கவனிக்க வேண்டியது யாதெனில் வாசியோகத்தையன்றிமற் ற ஹடயோகம் கௌடயோகம் அம்பிகாயோகம்மு தலிய யோகங்களால் சாட்சாத்காரத்தை அடையா னென் றுணரவேண்டும் அஃதெப்படியெனில் ஒரு வன் சௌசனையால் விசாலமான விண்ணைமூடுவது போலாகும் இந்தவாசியோகமோவெனில் அப்படி யன்று கண்மூடமின்மறையு மென்பதாம் ஆகையி

ஞால் இந்தலோகத்தை அனுட்டித்தவர்கள் இந்நூலை வாசித்தவர்கள், வாசிக்கக் கேட்டவர்கள் மனம் இவ்வாசியை நாடுவதால் சித்தம் நிலைத்து ஞான உதையமாய் அணிமாதி சகல அயிஸ்வரியங்களும் அடைந்து ஜீவன்முக்தர்களாய் நிரதிசயானந்தத்தில் சதாகாலமும் நிலைத்து வாழ்வார்களென்று குருவாக்கியம்.

வாழி விருத்தம்.

வாழ் நாரண தேசிகர்வானருள்
வாழ்க மன்னவர் மாணுக்கர் யாவரும்
வாழ்க விந்நூல் படிப்பவர் கேட்பவர்
வாழ்க விந்தச் சிவயோக சாரமே.

சிவயோகசாரம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

அகஸ்தியர்ஞானம்-௲

—— (*) ——

சத்தியேபராபரமே யொன்றேதெய்வம்
சகலவுயிர்ஜீவனுக்கு மதுதானுச்சு
புத்தியினாலறிந்தவர்கள் புண்ணியோர்கள்
பூதலத்திற்கோடியிலே யொருவனுண்டு
பத்தியினான்மனமடங்கி நிலையில்நிற்பார்
பாழிலேமனதைவிடார் பரமஞானி
சுத்தியேலைவதில்லைச் சூக்ஷஞ்சூக்ஷம்
சுழியிலேநீயறிந்தால் மோக்ஷந்தானே. 1

மோக்ஷமதுபெறுவதற்குச் சூக்ஷஞ்சொன்னேன்
மோகமுடன்பொய்களவு குலைசெய்யாதே
காச்சலுடன்கோவத்தைத் தள்ளிப்போடு
காசினியிற்புண்ணியத்தைக் கருதிக்கொள்ளு
பாச்சலதுபாயாதே பாழ்போகாதே
பலவேதசாஸ்திரமும் பாருபாரு
ஏச்சல்லவர்பிழைக்கச் செய்தமார்க்கம்
என்மக்காளெண்ணியெண்ணி நன்றாய்ப்பாரே. 2

பாரப்பாநால்வேத நூலும்பாரு
பற்றாசைவைப்பதற்கோ பிணியோகோடி
வீரப்பாஒன்றென்றுக் கொன்றைமாறி
வீணிலேயவர்பிழைக்கச் செய்தமார்க்கம்
தேரப்பாதெருத்தெருவே புலம்புவார்கள்
தெய்வநிலையொருவருமே காணார்காணார்
ஆரப்பாநிலையில்நிற்கப் போறுறையோ
ஆச்சரியங்கோடியிலே யொருவன்தானே. ௩

ஒருவனென்றேதெய்வத்தை வணங்கவேணும்
உத்தமனாய்ப்பூமிதனி லிருக்கவேணும்
பருவமதற்கேறுபயிர் செய்யவேணும்
பாழிலேமனதைவிடார் பரமஞானி
திரிவார்கடிருடரப்பா ஞானிகோடி
தேசத்திற்கள்ளரப்பா கோடாகோடி
வருவார்களப்பனே யனேகங்கோடி
வார்த்தையினாற்பசப்புவார் திருடர்தானே. 4

தானென்றதானேதா னென்றேதெய்வம்
தகப்பனுந்தாயுமங்கே புணரும்போது
நானென்றுகருப்பிடித்துக் கொண்டுவந்த
நாதனைநீயென்னாளும் வணங்கிநில்லு
கோனென்றதிருடனுக்குந் தெரியுமப்பா
கோடானகோடியிலே யொருவனுண்டு
ஏனென்றமனத்தாலே யறியவேணும்
என்மக்காநிலைநிற்க மோக்ஷந்தானே. 5

மோக்ஷமதுபெறுவதற்குச் சூக்ஷங்கேளு
முன்செய்தபேர்களுடன் குறியைக்கேளு
ஏச்சலதுகுருக்களது குலங்கள்கேளு
எல்லாருங்கூடழிந்த தெங்கேகேளு
பேச்சலதுமாய்கையப்பா வொன்றுமில்லை
பிதற்றுவாரவரவரு நிலையுங்காணார்
கூச்சலதுபாளையந்தான் போகும்போது
கூட்டோடேபோச்சுதப்பா மூச்சுத்தானே. 6

மூச்சொடுங்கிப்போனவிடம் ஆருங்காணார்
மோக்ஷத்தின்நரகாதி யிருப்புங்காணார்
வாச்சென்றேவந்தவழி யேற்றங்காணார்
வளிமாறிநிற்குமணி வழியுங்காணார்

வீசப்பாவெட்டவெளி நன்றாய்ப்பாரு
வேதங்கள்சாஸ்திரங்கள் வெளியாய்ப்போச்சு
ஆச்சப்பாகருவுதனி லமைத்தாற்போலாம்
அவனுக்கேதெரியுமில்லா லறிவாய்ப்பாரே. 7

பாரப்பாவுலகுதனிற் பிறவிகோடி
படைப்புகளோபலவிதமாய்க் கோடாகோடி
வீரப்பாவண்டத்திற் பிறவிகோடி
வெளியிலேயாடுதப்பா வுற்றுப்பாரு
ஆரப்பாவணுவெளியி னுள்ளேநீதான்
ஆச்சரியம்புழுக்கூடு வலேமோதப்பா
கூரப்பாதண்டத்திற் பிண்டமாகும்
குணவியவாறுனுக்காற் சத்தியமாமே. 8

சத்தியமேவேணுமடா மனிதனுனல்
சண்டாளஞ்செய்யாதே தவறிடாதே
நித்தியகர்மம்மறவாதே நேமம்விட்டு
நிஷ்டையுடன்சமாதிவிட்டு கலேபோகாதே
புத்திகெட்டுத்திரியாதே பொய்சொல்லாதே
புண்ணியத்தைமறவாதே பூசல்கொண்டு
சத்தியதோர்சள்ளிட்டுத் தர்க்கியாதே
கர்மியென்றுநடவாதே கதிரொளிதான்முற்றே.

அகஸ்தியர்ஞானம்-கூ

முற்றிற்று.

உ

சிவமயம்.

பதினெண்சித்தர்கள்

பெரிய

ஞானக்கோர்வை.

இரண்டாம்பாகம்.

இஃது

வா. சரவணமுத்துப்பிள்ளையால

ஞானவான்களுக்கு உபயோகமாகும்பொருட்டு
சில ஏட்டுப்பிரதிகளிலிருந்தும்
அச்சுப்பிரதிகளிலிருந்தும் நூதனமாகசேர்க்கப்பட்டு
26 - சித்தர்கள்பாடிய மூன்றுபாகமும்
ஒரேகட்டடமாக அச்சிட்டது.

சென்னை
வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

27

மலசுத்தி லேகியம்.

இந்த லேகியத்தை ஐந்துவயது குழந்தைகள்முதல் விருத்தாப்பியர் வரையில் பெண்கள் புருஷர்கள் யாவரும் தின்னலாம். தின்பதற்குத்தகுந்த இனிப்பாயிருக்கும். இதன் பிரயோசனம் யாதெனில், கை கால் குடைச்சல், கெர்ப்பவாய்வு, சூலவாய்வு, அபானவாய்வு, குன்மவாய்வு, யெப்போதும் வயிற்றில் கோளாராகவேயிருந்தால் மலச்சிக்கல், மலம்வாட்சி வயிற்றிலுள்ள எல்லாவியாதிகளையும் நிவர்த்தி செய்யும். மலச்சிக்கலில்லாமல் அன்றாட மலத்தை அன்றாடம் கழிக்கும் இந்தலேகியத்தை சாப்பிடுகிற அளவு முதலிய விபரத்தை மருந்து டப்பியுடன் அனுப்பும் பத்தியநோட்டீஸில் பார்த்துக்கொள்ளலாம்.

1-சேர் லேகியம் விலை ரூபா—1.

ஏதாவது பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

கி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ.,

'நாராயணவிலாஸ்'

பெரம்பூர் பாரெக்ஸ், போஸ்டு, மதராஸ்.

உ

சிவமயம்.

இதில் அடங்கியிருக்கும் புத்தகங்கள்.

அகஸ்தியர்உயர்ஞான-1
ஷை தனிஞானம்-1
ஷை தனிஞானம்-2
ஷை ஞானம்-16
ஷை ஞானம்-9
ஷை ஞானம்-6
ஞானசாரநூல்சாஸ்திரம்
சிவானந்தபோதம்
நிஜானந்தபோதம்
நெஞ்சறிவிளக்கம்
அழுகணிசித்தர்பாடல்

நந்தீஸ்வரர் பூஜாவிதி
இராமதேவர் பூஜாவிதி
வாலைக்கும்மி
கருவூரார் பூஜாவிதி
உரோமரிஷிஞானம்
திருமூலர்ஞானம்
ஞானரத்தினக் குறவஞ்சி
ஞானக்கும்மி
சுப்பிரமணியர்ஞானம்
வால்மீகர் சூத்திரஞானம்
சிவநாமாவளி

உ

சிவமயம்.

இரண்டாவது

ஞானக்கோர்வையின்

முகவுரை.

தவநெறியின் மிக்கபதி னெண்மராலே
தானருளிச் செய்தபல சாத்திரத்தில்
சிவனவனை யாகவென சீவகோடி
சிவமெனவே சிறப்பித்த சிவனூல்யாவும்
அவமனத்தாற் சிந்துண்டு வகலாவண்ணம்
மரிந்தவறை யேதிரட்டிக் கோவையாக்கி
புவனமெனு வெளிதனிலே ஞானபாதை
புரிந்துய்ய போதிக்கப் புறந்தவாரே. 1

போதசிவ சுந்தரமா முனிவராலே
போதித்த சிவானந்த போதமோடு
ஆதிகண பதிதாச ரருளுஞ்நெஞ்சு
அரியவிளக்க மொடுஞானக் கும்மிதானும்
நீதகுரு முனிதனக்கு நெடியவேலோன்
நிகழ்த்தியமுப் பனிரண்டாம் ஞானச்செய்யுள்
சோதிமய மாங்காயக் கப்பலேலம்
சொற்பெரிய வால்மீக சூத்திரமாமே. 2

ஆகமத்தின் கட்டறுத்தே அருளைத்தேக்கும்
அகத்தியனார் சோடசமு மருளின்மிக்க
யோகமறைப் பேறுபெற்றே யொளியோடுற்ற
வுயர்ராம லிங்கவள்ள லுரைத்தகீதம்
தேகஞா னக்குறத்தின் வஞ்சியேத்தும்
திகழ்ஞான சரய்நாமா வளியின்மட்டே
ஏகமுற வேதிரட்டு மிரண்டாங்காண்ட
விதுவாகு மற்றயநூற் கெதிர்கொள்வீரே. 3

சிவமயம்.

ஞானக்கோர்வை

இரண்டாம்பாகம்.

காப்பு-விருத்தம்.

மனமதுசெம்மையானால் மந்திரஞ்ஜெபிக்க வேண்டாம், மனமதுசெம்மையானால் வாயுவைவுயர்த்த வேண்டாம், மனமதுசெம்மையானால் வாசியைநிறுத்தவேண்டாம், மனமதுசெம்மையானால் மந்திரஞ் செம்மையாமே.

அகஸ்தியமுனிவர்
உயர்ஞானம் ஒன்று.

உண்ணும்போ துயிரெழுத்தை வுயரவாங்கி
உறங்குகின்ற போதெல்லா மதுவேயாகும்
பெண்ணின்பா லிந்திரியம் விடும்போதெல்லாம்
பேணிவலம் மேல்நோக்கி அவத்தில்நில்லு
தின்னுங்கா யிலையருந்து மதுவேயாகும்
தினந்தோறும் அப்படியே செலுத்தவல்லார்
மண்ணூழி காலமட்டும் வாழ்வார்பாரு
மறலிகையில் அகப்படவு மாட்டார்தானே. 1

அகஸ்தியமுனிவர்
தனிஞானம் ஒன்று.

ஒன்றான உச்சிவெளி தாண்டிநின்று
உமையவளுங் கணபதியு முந்தியாகி
விண்ணொளியாம் யம்பரமாம்-ஓம்-அவ்வும்-உவ்வும்
விதித்தபரம் ஒருவருக்கு மெட்டாதப்பா •

பண்ணுன உன்னுயிர்தான் சிவமதாச்சு
பாற்கடலில் பள்ளிகொண்டோன் விண்டுவாச்சு
கண்ணுன கணபதியை கண்ணில்கண்டால்
கலந்துருகி யாடுமடா ஞானம்முற்றே. 1

வேறு தனிஞானம்-2.

விந்துநிலைதனையறிந்து விந்தைக்கண்டால்
விதமானநாதமது குருவாய்ப்போகும்
அந்தமுள்ளநாதமது குருவாய்ப்போனுல்
ஆதியந்தமானகுரு நீயேயாவாய்
சந்தேகமில்லையடா புலத்தியனேஐயா
சகலகலைஞானமெல்லா மிதுக்கொவ்வாது
மூன்னுளிருவருமே கூடிச்சேர்ந்தே
மூலமதையரியாட்டால் மூலம்பாரே. 2

மூலமதையறிந்தாக்கால் யோகமாச்சு
முறைமையுடன்கண்டாக்கால் வாதமாச்சு
ஜாலமுடன்கண்டவர்முன் வசமாய்நிற்பார்
சாஸ்திரத்தைசுட்டெறிந்தா லவனேசித்தன்
சீலமுள்ளபுலத்தியனே பிரமயோகி
செப்புமொழிதவராமல் உப்பைக்கண்டால்
ஞானமுள்ளயெந்திரமாஞ் ஜோதிதன்னை
நாட்டினுல்சகலசித்தும் நல்கும்முற்றே. 3

அகஸ்தியர் ஞானம்
முற்றிற்று.

உ

சிவமயம்.

அகஸ்தியமகாமுனிவர் அருளிச்செய்த

ஞானம்-௱.

பாரப்பாசிவன்விட்டுப் போகும்போது
பாழ்த்தபிணங் கிடக்குதென்பார் உயிர்போச்சே
ஆரப்பாவிருந்தவர்க ளாருமில்லை [ன்பார்
ஆகாயசிவத்துடனே சேருமென்பார்
காரப்பாதீயுடனே தீச்சேருமென்பார்
கருவறியாமானிடர்கள் கூட்டமப்பா
சீரப்பாகாமிகள்தா னென்றாய்ச்சேர்ந்து
தீயவழிதனைத்தேடி போவார்மாடே. 1

மாடுதானாலும் வொருபோக்குண்டு
மனிதனுக்கு அவ்வளவுந்தெரியாதப்பா
நாடுமெத்தநகரமென்பார் சொர்க்கமென்பார்
நல்வினையோ தீவினையோ வெண்ணமாட்டார்
ஆடுகின்றதேவதைக ளப்பாகேளு
அரியதந்தையினஞ்சேரு மென்றுந்தோணார்
சாடுமெத்தபெண்களைத்தான் குறிப்பாயெண்ணி
தளமானதீயில்விழத் தியங்கினாரே. 2

தயங்காமற்பிழைப்பதற்கு யிந்தஞானஞ்
சார்வாகப்பாராட்டு ஞானம்வேறே
மயங்குதற்குஞானம்பார் முன்னோர்கூடி
மாட்டினார்கதைகாவிய புராணமென்றும்
இயலானரசந்தனிலே யிப்புகுந்தாற்போலும்
இசைந்திட்டார்சாஸ்திரங்க ளாறென்றேதான்

வரையானபயன்பெறவே வியாசர்தானு
மாட்டினார்சிவனார்தன் வுத்திரவினாலே. 3

உத்தரந்தானிப்படியே புராணங்காட்டி
லோகத்திற்பாரதம்போல் கதையுண்டாக்கி
கர்த்தாவைத்தாதனென்று தோணவொட்டாமல்
கபடநாடகமாக மேகஞ்சேர்த்து
சித்தாகவழியாக சேர்ந்தோர்க்கெல்லாஞ்
சதியுடனேவெருதர்க்கம் பொருள்போற்பாடி
பத்தாகசைவர்க்கு வொப்பினையுஞ்செய்து
பாடினார்சாஸ்திரத்தைப் பாடினாரே. 4

பாடினதோர்வகையேது சொலவகேளு
பூதகபுராணமென்ற சோதியப்பா
நீடியதோர்ருவணன்தான் பிறக்கவென்றும்
நிலையானதசரதன்கை வெல்லவென்றும்
நீடியதோராசனென்றும் முனிவரென்றும்
அருள்பெற்றவர்களென்றுந் தேவரென்றும்
ஆடியதோரரக்கரென்றும் மனிதரென்றும்
பாடினார்நாள்தோறும் வகையாய்த்தானே. 5

கழிந்திடுவார்பாவத்தா லென்றுசொல்லும்
கட்டியநால்வேத மாறுசாஸ்திரமு
மழித்திடவேசொன்னதல்லால் வேறொன்றுமில்லை
யதர்மமென்றுந்தர்மமென்று மிரண்டிண்டாக்கி
வொழிந்திடுவாரென்றுசொல்லி பிறப்புண்டென்று
வுத்தமனாய்ப்பிறப்பனென்று முலகத்தோர்கள்
தெளிந்திடுவோர்குருக்களென்றுஞ் சீஷரென்றுஞ்
சீவனத்துக்கேயல்லோ தெளிந்துகாணே. 6

அகஸ்தியர் ஞானம்-௩௱

முற்றிற்று.

உ

சிவமயம்.

அகஸ்தியர் ஞானம்-கசு.

பூரணமேதெய்வமென் றுரைத்தாரையா
பூரணத்தையின்னதென்று புகலவேணும்
காரணத்தைச்சொல்லுகிறேன் நிலையாய்க்கேளு
கலையானபதினாறும் பூரணமேயாகும்
மாரணமாமூலகத்தில் மதிமயங்கி
மதிகெட்டுபூரணத்தை யிகழ்ந்தாரையா
வாரணத்தைமனம்வைத்துப் பூரணத்தைகாத்தால்
வாசியென்றசிவயோக வாழ்க்கையாச்சே. 1

ஆச்சப்பாவிந்தமுறை பதினெண்பேரும்
அயன்மாலுமரனோடுந் தேவரெல்லாம்
மூச்சப்பாதெய்வமென் றறியச்சொன்னார்
முனிவோர்கள்ரிஷியோர்க ளிப்படியேசொன்னார்
பேச்சப்பாபேசாமல் நூலைப்பார்த்து
போனபூரணத்தை நினைவாய்க்காரு
வாச்சப்பாபூரணத்தைக் காக்கும்பேர்கள்
வாசிநடுமையத்துள் வாழ்வார்தாமே. 2

தானென்றபெரியோர்க ளுலகத்துள்ளே
தாயானபூரத்தை யறிந்தபின்பு
தேனென்றவமுதமதைப் பானஞ்செய்து
தெவிட்டாதமவுனசிவ யோகஞ்செய்தார்
ஊனென்றவுடலைநம்பி யிருந்தபேர்க்கு
ஒருநான்குவேதமென்றும் நூலாறென்றும்
நானென்றும்நீயென்றும் பலஜாதியென்றும்
நாட்டினாருலகத்தோர் பிழைக்கத்தானே. ௩

பிழைப்பதற்குநூல்பலவுஞ் சொல்லாவிட்டால்
பூரணத்தையறியாம லிறப்பாரென்றும்
உழைப்பதற்குநூல்கட்டிப் போடாவிட்டால்
உலகத்திற்புத்திகெட்டே யலைவாரென்றும்
தழைப்பதற்குச்சாதியிது விந்துவென்றும்
தந்தைதாய்பிள்ளையென்றும் பாரியென்றும்
உளைப்பதற்குச்சொன்னதல்லாற் கெதிவேறில்லை
யுத்தமனையறிந்தோர்கள் பாடினாரே. 4

பாடினரிப்படியே கதைசொல்லாவிட்டால்
பரிபாஷையறியார்களுலகமூடர்
சாடுவார்சிலபேர்கள் பலநூற்பார்த்து
துணைமறந்துபடுகுழியில் விழுவார்சாவார்
வாடுவார்நாமமென்றும் ரூபமென்றும்
வையகத்திற்கற்செமபைத் தெய்வமென்றும்
நாடுவார்பூரணத்தை யறியார்மூடர்
நாய்போலேகுலைத்தல்லோ வொழிவார்தானே. 5

காணுமலலைந்தோர்கள் கோடாகோடி
காரணத்தையறிந்தோர்கள் கோடாகோடி
வீணைகப்புலம்பினதா லறியப்போமோ
வாய்ஞானம்பேசுவது மேதுக்காகும்
கோணமற்சுழிமுனையில் மனதைவைத்து
குருபாதமிருநான்கில் நாலைச்சேர்த்து
நாணமலொருநினைவாய்க் காக்கும்போது
நாலுமெட்டுமொன்றாகும் நாட்டியூதே. 6

ஊதியதோருதறிந்தா லவனேசித்தன்
உத்தமனேபதினாறும் பதியேயாகும்
வாதிகளேயிருநான்கும் பதியின்பாதம்
வகைநான்குமுயிராகும் மார்க்கங்கண்டு

சோதிபரிபூரணமு மிதுமூன்றுந்தான்
றாங்காமற்றாங்கியங்கே காக்கும்போது
ஆதியென்றபராபரையு மாணுமொன்றாய்
அண்ணாக்கின்வட்டத்துள் ளாகும்பாரே 7

பாரப்பாவுதயத்தி லெழுந்திருந்து
பதறாமற்சுழிமுனையில் மனதைவைத்து
காரப்பாபரிதிமதி ரண்டுமாரி
கருவானசுழிமுனையி லுதிக்கும்போது
நேரப்பாவண்ணாக்கு ணின்றுகொண்டு
தியங்காமற்சுழிமுனைக்குள் ளடங்கும்பாரு
சீரப்பாபதினாறில் எட்டுநான்கும்
சிதறாமல்மூன்றுமொன்றாய்ச் சேர்ந்துபோமே 8

ஒன்றானபூரணமே யிதுவேயாச்சு
உதித்தகலைதானென்று மிதுவேயாச்சு
நன்றாகத்தெளிந்தவர்க்கு ஞானஞ்சித்தி
நாட்டாமற்சொன்னதினால் ஞானமாமே
பற்றானவாதிகுரு சொன்னஞானம்
பரப்பிலைவிடுக்காதே பாவமாகும்
திண்டாடுமனத்தோர்க்குக் காணப்போகா
தெளிந்தவர்க்குத்தெரிவித்த வுகமைதானே. 9

உகமையின்னஞ்சொல்லுகிறே னுலகத்துள்ளே
யுவமையுள்ளபரிகாசம் நனிபேசாதே
பகைமைபண்ணிக்கொள்ளாதே வீண்பேசாதே
பாப்பிலைதிரியாதே மலையேறாதே
நகையாதேசினங்காதே யுறங்கிடாதே
நழுகாதேசுழிமுனைவிட்டுப் பின்வாங்காதே
ஜகமுழுதும்பரிபூரண மறிந்துவென்று
தெளிந்துபின்புலகத்தோ டொத்துவாழே. 10

வாழாமலுலகம்விட்டுப் பலவேடம்பூண்டு
வயிர்பிழைக்கவாய்ஞானம் பேசிப்பேசி
தாழ்வானசூடிதோறு மிரப்பான்மட்டை
தனையறியாச்சண்டாளர் முழுமாடப்பா
பாழாகப்பாவிகடன் சொற்கேளாதே
பதறுதேவயிர்பிழைக்க மயங்கிடாதே
கேளாதேபேச்செல்லாங் கேட்டுக்கேட்டுக்
கலங்காதேயுடலுயிரொன் றுரைத்திடாதே. 11

உடலுயிரும்பூரணமு மூன்றுமொன்று
வுலகத்திற்சிறிதுஜனம் வெவ்வேறென்பார்
உடலுயிரும்பூரணமு மேதென்றக்கால்
உத்தமனேபதினாறு மொருநான்குமெட்டு
உடலுயிரும்பூரணமு மயன்மாலீசன்
உலகத்தோரறியாமல் மயங்கிப்போனர்
உடலுயிரும்பூரணமு மடிமுடியுமாச்சு
உதித்தகலைநிலையறிந்து பதியில்நில்லே. 12

பதியின்னவிடமென்ற குருவைச்சொல்லும்
பரப்பிலேவிள்ளாதே தலைரண்டாகும்
விதியென்னவிடமென்று சொல்லக்கேளு
விண்ணுனவின்னுக்கு ளண்ணுக்கப்பா
மதிரவியும்பூரணமுங் கணவாய்மூக்கு
மகத்தானசெவிபோடு பரிசமெட்டும்
பதியவிடஞ்சுழிமுனையென் றதற்குப்போம்
பகருவார்சொர்க்கமென்றும் கைலாசமென்றே. 13

கைலாசம்வைகுந்தந் தெய்வலோகம்
காசிகன்னியாகுமரியென்னுஞ் சேதுவென்றும்
மயிலாடுமேகமென்றும் நாகமென்றும்
மாய்கையென்றுமின்னலென்று மவுனமென்றுந்

துயிலானவாடையென்றுஞ் சூக்ஷமென்றும்
சொல்லற்றவிடமென்று மொடுக்கமென்றும்
கயிலானபாதமென்று மடிமுடியென்றும்
தாயானவஸ்துவென்றும் பதியின்பேரே. 14

பேர்சொன்னே னூர்சொன்னே னிடமுஞ் சொன்னேன், பின்கலையுமுன்கலையு மொடுக்கஞ்சொன்னேன், பாருலகிற்பலநூலின் மார்க்கஞ்சொன்னேன், பலபேர்களடைத்துகின்ற தொழிலுஞ்சொன்னேன், சீருலகின்னதென்று தொட்டுச்சொன்னேன், சித்தானசித்தெல்லாஞ் சுருக்கிச்சொன்னேன், நேர்சொன்னேன் வழிசொன்னேன் நிலையுஞ்சொன்னேன், நின்னுடம்பையின்னதென்று பிரித்துஞ் சொன்னேன். 15

பிரித்துரைத்தேன்சூத்திர மீரெட்டுக்குள்ளே
பித்தர்களேநன்றாகத் தெரிந்துபார்க்கில்
விரித்துரைத்தநூலினது மார்க்கஞ்சொன்னேன்
விள்ளாதேயிந்தநூ லிருக்குதென்று
கருத்துடனேயறிந்துகொண்டு கலைமாறாதே
காரியத்தைநினைவாலே கருத்திற்கொள்ளு
சுருதியினதுசேதியெல்லாஞ் சுருக்கிச்சொன்னேன்
சூத்திரம்போல்பதினாறுந் தொடுத்தேன்முற்றே.

அகஸ்தியர்ஞானம்-௧௬

முற்றிற்று.

சிவமயம்.

அழுகணிசித்தர்பாடல்.

மூலப்பதியடியோ மூவிரண்டுவீட்டதிலே
கோலப்பதியடியோ குதர்க்கந்தெருநடுவே
சாலப்பதிதனிலே தணலாய்வளர்ந்தகம்பம்
உந்தன்மேலப்பதிதனிலே என்கண்ணம்மா
விளையாட்டைப்பாரேனோ. 1

எண்சாணுடம்படியே ஏழிரண்டுவாயிலடி
பஞ்சாயக்காரரைவர் பட்டணமுந்தானிரண்டு
அஞ்சாமற்பேசுகிறாய் ஆக்கினைக்குத்தான்புகுந்து
நெஞ்சாரநில்லாமல் என்கண்ணம்மா
நிலைகடந்துவாடுரண்டி. 2

முத்துமுகப்படியோ முச்சந்திவீதியிலே
பத்துவிதம்பரப்பிப் பஞ்சணையின்மேலிருத்தி
அத்தையடைக்கிநிலே யாருமில்லாவேளையிலே
குத்துவிளக்கேற்றி என்கண்ணம்மா
கோலமிட்டுப்பாரேனோ. 3

சப்பாஅரிசியடிசாதஞ்சமைத்திருக்க (து
உண்பாரீயென்றுசொல்லி உழக்குழக்குநெய்வார்த்
முத்துப்போலன்னமிட்டு முப்பழமுஞ்சர்க்கரையுந்
தித்திக்குந்தேனமிர்தம் என்கண்ணம்மா
தின்றுகளைப்பேரேனோ. 4

பைம்பொற்சிலம்பணிந்து பாடகக்கால்மேல்தூக்கி
செம்பொற்கலையுடுத்தி சேல்விழிக்குமையெழுதி
அம்பொற்பணிபூண் டறுகோணவீதியிலே

கம்பத்தின்மேலிருந்து என்கண்ணம்மா
கண்குளிரப்பாரேனோ. 5

எட்டாப்புரவியடி யீராறுகாலடியோ
விட்டாலும்பாரமடி வீதியிலேதான்மறித்துக்
கட்டக்கயிறெடுத்துக் கலைநாலுஞ்சேர்த்திருக்கி
அட்டாளதேசமெல்லாம் என்கண்ணம்மா
ஆண்டிருந்தாலாகாதோ. 6

கொல்லனுலைபோற் கொதிக்குதடியென்வயிறு
நில்லென்றுசொன்னால் நிலைநிறுத்தக்கூடுதில்லை (க்
நில்லென்றுசொல்லியல்லோ நிலைநிறுத்தவல்லார்க்கு
கொல்லென்றுவந்தநமன் என்கண்ணம்மா
குடியோடிப்போகானோ. 7

ஊத்தைச்சடலமடி என்கண்ணேஉப்பிருந்தபாண்டம
டி, மாற்றிப்பிறக்க மருந்தெனக்குக்கிட்டுதில்லை
மாற்றிப்பிறக்க மருந்தெனக்குகிட்டுமென்றால்
ஊத்தைச்சடலம்விட்டு என்கண்ணம்மா
உன்பாதஞ்சேரேனோ. 8

வாழைப்பழந்தின்றால் வாய்நோகுமென்றுசொல்லித்
தாழைப்பழந்தின்று சாவெனக்குவந்ததடி
தாழைப்பழத்தைவிட்டுச் சாகாமற்சாகவல்லோ
வாழைப்பழந்தின்றால் என்கண்ணம்மா
பாழாய்முடியாதோ. 9

பையூரிலேயிருந்து பாழூரிலேபிறந்து
மெய்யூரிற்போவதற்கு வேதாந்தவீடறியேன்
மெய்யூரிற்போவதற்கு வேதாந்தவீடறிந்தால்
பையூரும்மெய்யூரும் என்கண்ணம்மா
பாழாய்முடியாதோ. 10

மாமன்மகளடியோ மச்சினியோநானறியேன்
காமன்கணையெனக்கு கனலாகவேகுதடி.
மாமன்மகளாகி மச்சினியுமீயானால்
காமன்கணைகளெல்லாம் என்கண்ணம்மா
கண்விழிக்கவேகாதோ. 11

அந்தரத்தைவில்லாக்கி ஐந்தெழுத்தையம்பாக்கி
மந்திரத்தேரேறியல்லோ மான்வேட்டையாடுதற்கு
ச், சந்திரருஞ்சூரியருந் தான்போந்தகாவனத்தே
வந்துவிளையாடியல்லோ என்கண்ணம்மா
மனமகிழ்ந்து பார்ப்பதென்றோ. 12

காட்டானைமேலேறி கடைத்தெருவேபோகையிலே
நாட்டார்நமைமறித்து நகைபுரியப்பார்ப்பதன்றோ
காட்டார்நமைமறித்து நகைபுரியப்பார்த்தாலுங்
காட்டானைமேலேறி என்கண்ணம்மா
கண்குளிரக்காண்பேனோ. 13

உச்சிக்குக்கீழடியோ ஊசிமுனைவாசலுக்குள்
பச்சைக்குள்மேலேறி வாலுதிரந்தானெடுத்து
கச்சைவடம்புரியக் காயவூர்பாதையிலே
வச்சமறந்தல்லோ என்கண்ணம்மா
வகைமோசமானேண்டி. 14

மூக்காலரும்பெடுத்து மூவிரண்டாய்த்தான்தூக்கி
நாக்கால்வளைபரப்பி நாற்சதுரவீடுகட்டி
நாக்கால்வளைபரப்பி நாற்சதுரவீட்டினுள்ளே
மூக்காலைக்காணமல் என்கண்ணம்மா
முழுதுந்தவிக்கிறண்டி. 15

காலமலர்தூவக் கருத்தெனக்குவந்ததடி
பாசவிலங்கைப் பாசவலையொட்டுதில்லை

பாசவலிதொலைக்கப் பாசவலிநிற்குமென்றால்
காலமலர்மூன்றும் என்கண்ணம்மா
கண்ணிணைநிரைநில்லாதே. 16

தங்காயந்தோற்றாமல் சாணகலக்கொல்லைகட்டி
வெங்காயநாத்துமிட்டு வெகுநாளாய்காத்திருந்தேன்
வெங்காயந்தின்னாமல் மேற்றோலைதின்றலவோ
தங்காயந்தோணாமல் என்கண்ணம்மா
சாகிறண்டிசாகாமல். 17

பற்றற்றநீரதிலே பாசிபடர்ந்ததுபோல்
உற்றுற்றுபார்த்தாலும் உன்மயக்கந்தீரவில்லை
உற்றுற்றுபார்த்தலவோ உன்மயக்கந்தீர்ந்தாக்கால்
பற்றற்றநீராகும் என்கண்ணம்மா
பாசியதுவோராமே. 18

உற்றாரும்மற்றாருந் தொண்ணூற்றியாரதிலே
உற்றாரும்பெற்றாரும் ஒன்றன்றேயானிருந்தேன்
உற்றாரும்பெற்றாரும்ஊரைவிட்டுபோகையிலே
சுற்றாருமில்லாமல் என்கண்ணம்மா
துணையிழந்துநின்றதென்ன. 19

கண்ணுக்குமூக்கடியோ காதோரமத்திபத்தில்
உண்ணுக்குமேலேறி உன்புதுமைமெத்தவுண்டு
உண்ணுக்குமேலேறி உன்புதுமைகண்டவற்கு
கண்ணுக்குமூக்கடியோ என்கண்ணம்மா
காரணங்கள்மெத்தவுண்டே. 20

சாயச்சாரக்கெடுத்தே சாதிலிங்கந்தான்சேர்த்து.
மாயப்பொடிகலந்து வாலுழுவைநெய்யூற்றி
பொட்டென்றுபொட்டுமிட்டாள் புருவத்திடைநடு
வே, இட்டமருந்தாலே என்கண்ணம்மா
இவ்வேஷமானேனண்டி. 21

பாதாளமூலியடி பாஷாணந்தான்சேர்த்து
வேதாளங்கூட்டியல்லோ வெண்சாரைநெய்பூற்றி
செந்தூரமையடியோ ஜெகமெல்லாந்தான்மிரட்டி
தந்தமருந்தாலே என்கண்ணம்மா
தணலாகவேகுரண்டி. 22

கள்ளர்பயமெனக்குக் கால்தூக்கவொட்டாமல்
பிள்ளையழுதுநின்றால் பெற்றவட்குபாரமடி
பிள்ளையழுகாமல் பெற்றமனநோகாமல்
கள்ளர்பயமெனக்கு என்கண்ணம்மா
கடுகளவுகாணாதே. 23

பட்டணத்தையாளுகின்ற பஞ்சவர்கள்ராஜாக்கள்
விட்டுப்பிரியாமல் வீரியங்கள்தாம்பேசி
விட்டுப்பிரிந்தவரே வேறுபடுங்காலம்
பட்டணமுந்தான்பரிபோய் என்கண்ணம்மா
படைமன்னர்மாண்டதென்ன. 24

ஆதாப்புலைபனடி யஞ்ஞானந்தான்பேசி
சாகாத்தலையறியேன் தானறிவுதானறியேன்
வேகாதகாலறியேன் விதிமோசமானனடி
நோகாமல்நொந்தல்லோ என்கண்ணம்மா
நொடியில்மெழுகானனடி. 25

தாயைச்சதமென்றே தந்தையரையொப்பென்றே
மாயக்கலவிவந்து மதிமயக்கமானனடி
மாயக்கலவிவிட்டு மதிமயக்கந்தீர்த்தக்கால்
தாயுஞ்சதமாமே என்கண்ணம்மா
தந்தையருமொப்பாமே. 26

அஞ்சாதகள்ளனடி ஆருமற்றபாவியடி
நெஞ்சாரப்பொய்சொல்லும் நேயமில்லாநிஷ்டூரன்
கஞ்சாவெறியனடி கைசேதமாகுமுன்னே

அஞ்சாதேயென்றுசொல்லி என்கண்ணம்மா
ஆண்டிருந்தாலாகாதோ. 27

உன்னைமறந்தல்லோ உளுத்தமரமானேன்
தன்னைமறந்தார்க்குத் தாய்தந்தையில்லையடி
தன்னைமறக்காமற் றுபாருமுண்டானால்
உன்னைமறக்காமல் என்கண்ணம்மா
ஒத்திருந்துவாழேனோ. 28

காயப்பதிதனிலே கந்தமூலம்வாங்கி
மாயப்பணிபூண்டு வாழுஞ்சரக்கெடுத்து
ஆபத்துறைதனிலே ஆராய்ந்துபார்க்குமுன்னே
மாயச்சருளாலே என்கண்ணம்மா
மடிமேல்விழுந்ததென்ன. 29

சித்திரத்தைக்குத்தியல்லோ சிலையையெழுதிவைத்து
உத்திரத்தைகாட்டாமல் ஊரம்பலமானேன்
உத்திரத்தைகாட்டியல்லோ ஊரம்பலமானால்
சித்திரமும்வேறுமோ என்கண்ணம்மா
சிலையுங்கொலைபாதே. 30

புல்லரிடத்திற்போய் பொருள்தனக்குகையேந்தி
பல்லைமிகக்காட்டிப் பறக்கவிழிக்கிறேனடி
பல்லைமிககாட்டாமல் பறக்கவிழிக்காமல்
புல்லரிடம்போகாமல் என்கண்ணம்மா
பொருளெனக்குத் தாராயோ. 31

வெட்டுண்டசக்கரத்தால் வேணதனமளித்துக்
குட்டுண்டுநின்றேனடி கோடிமனுமுன்றலே
குட்டுண்டுநில்லாமற் கோடிமனுமுன்னாக
வெட்டுண்டபிணிநீக்கி என்கண்ணம்மா
விழித்துவெளிகாட்டாயோ. 32

அழுகணிசித்தர்பாடல்
முற்றிற்று.

சிவமயம்.

நந்தீஸ்வரர்பூஜாவிதி-௧௨

கேளப்பாஓம்ஸ்ரீ கங்கென்றுந்தான்
கெடியாகமூலத்தில் கும்பிந்தாக்கால்
வாளப்பாபழங்தேங்கா யவல்வடைகள்தோசை
வளமாகவிக்கினற்குப் புஷ்பபரிமளங்கள்சாற்றி
நாளப்பாமனதடங்கித் தோத்திரஞ்செய்து
நலமானவிக்கினரைப் பூசித்தாக்கால்
ஆளப்பாயாசீர்வாத மீவாரையா
அப்பனேவிக்கினரைப் பூசைசெய்யே. 1

செய்யப்பாவிக்கினர்தன் பூசைசொன்னேன்
செயமானஷண்முகவன் பூசைகேளு
வையப்பா சங் வங் மங் சரவணபாவென்று
வளமாகஅனுகதத்தில் பூசைபண்ணு
வையப்பாபுஷ்பபரிமளங்கள்கொண்டு
மைந்தனேதூபநைவேத்தியங்காட்டி
கைபப்பாகனகசபை யதிலேபூசி
கண்மணிபேசண்முகத்தை வரங்கள்கேளே. 2

காணப்பாஆதார பூசைசொன்னேன்
கண்மணிபேசிவபூசை சொல்லக்கேளு
வாணப்பாநமசிவய சிம்ஆம்மென்று
வீளமாகப்பூர்ணத்தி லிருத்திக்கொண்டு
ஆணப்பாதூபதீப நைவேத்தியத்தோடு
அப்பனேசதாசிவத்தை தோத்திரஞ்செய்நீ
மாணப்பாநீகேட்ட தெல்லாமீவார்
மைந்தனேசிவத்திடமகிமைதானே. 3

தாஞானசிவத்தினிட பூசைசொன்னேன்
தன்மையுள்ளசத்தியுட பூசைகேளு
வாஞானயும்மென்றுங் கும்பகத்தில்
வட்டிவளமாகவொரு மனதாய்நின்று
ஆஞானகதம்பகஸ்தூரி புஷ்பம்வைத்து
அப்பனேபால்பழங்கள் வஸ்துவைத்து
மாஞானதேவியைத்தான் தோத்ரித்து
மைந்தனேசாஷ்டாங்கஞ் சரணம்பண்ணே. 4

பண்ணப்பாவென்னவம்மா வென்றுகேளு
பலவிதமாய்தொடுத்த தெல்லாமெப்பாம்
அன்னப்பாவென்றுமவள் சொன்னாற்போதும்
அப்பனேயட்சரத்திற் பலிக்கும்பாரு
வன்னப்பாசத்தியுட பூசைசொன்னேன்
வளமானசிவத்தினுட பூசைசொன்னேன்
கண்ணப்பாவிஷ்ணுபூசை சொல்லக்கேளு
கண்மணியே மங்நங் சிங்கென்றேத்தே. 5

ஏத்தப்பாபுஷ்பபரி மளங்கள்சாத்தி
என்மகனேகதம்பகஸ் தூரிசாத்து
வாத்தப்பாசங்கீதத் துடனேபூசி
வளமானவிஷ்ணுவுக்குப் பூசிபூசி
போற்றப்பாமனதடங்கிப் பத்தியாகப்
போற்றவேவிஷ்ணுவவர் கேட்டதெல்லாம்
ஆற்றப்பாவிஷ்ணுவின் பூசைசொன்னேன்
அரகராகெஜமுகவன் பூசைகேளே. 6

ரேசக பூசை.

பாரப்பாரேசகத்தின் பூசைகேளு
பண்பானரேசகத்தின ஆமென்றேத்தி
ஆரப்பாநைவேத்தியங் கும்பகஞ்செய்து
அப்பனேரேசகத்தில் மனதைநாட்டு.

வாரப்பாமனமதுதான் ரேசகமேயாச்சு
வளமானரேசகந்தான் வசியமாச்சு
காரப்பாரேசகத்தின் பூசைசொன்னேன்
நலமானபூரகத்தின் பூசைகேளே. 7

பூரகபூசை.

கேளப்பாமணிபூர கத்தில்மைந்தா
கெடியாகயிம்மென்று கும்பித்தேத்து
வாளப்பாவகையாக நின்றுக்கொண்டு
வளமானபூரகத்திற் றோத்திரம்பண்ணி
வாளப்பாவேண்டிய வரங்கள்கேளு
வளமாகவிஷ்ணுவர மீவார்பாரு
ஆளப்பாபூரகத்தின் பூசைசொன்னேன்
அப்பனேகும்பகத்தின் பூசையாமே. 8

கும்பகபூசை.

ஆமப்பாகும்பகத்துள் உம்மென்றுநாடி
அப்பனேயுன்மனதைக் கும்பகத்தில்வைத்து
வாமப்பாபூசைநை வேத்தியஞ்செய்து
வளமானகும்பகத்தை மனதால்வேண்டி
காமப்பாகும்பகத்தை வரங்கள்கேளு
கண்மணிவேண்டுவர மீவாரையா
நாமப்பாசூரியன்றன் பூசைகேளு
நலமாகமங்சிங் கென்றுசொல்லே. 9

சூரியன் பூசை.

சொல்லப்பாசூரியனிற் கும்பகமேசெய்து
சொற்பெரியபூசைநை வேத்தியஞ்செய்து
அல்லப்பாசாஷ்டாங்க சரணஞ்செய்து
அப்பனேதோத்திரஞ்செய் கும்பகத்தை

மல்லப்பா அஷ்டசௌ பாக்கியமீவார்
அகத்தியின்றன்கும்பகத்தில் வரங்களீவார்
வல்லப்பாசூரியன்றன் பூசைசொன்னேன்
வளமானசந்திரன்றன் பூசைகேளே. 10

சந்திரன்பூசை.

கேளப்பா யங்நங் கென்றுகும்பி
கெடியாகப்பால்பழங்கள் பாயாசம்வைத்து
ஆளப்பாதூபதீபம் நைவேத்தியஞ்செய்து
அப்பனேசந்திரனைத் தோத்தரித்து
வாளப்பாசோடசமாய்ச் சந்திரனில்நின்று
வளமானசந்திரனை வரங்கேளு
நாளப்பாவேணவர மீவாரையா
நலமானசந்திரன்றன் மகிமைபாரே. 11

சனிபூசை.

பாரப்பாசனிபூசை சொல்லக்கேளு
பண்பானவங்கென்றுஞ் சங்கென்றுந்தான்
நீரப்பாமேருவிலே குந்திக்கொண்டு
நலமாகத்தோத்தரித்துப் பூசைசெய்நீ
வாரப்பாதூபநை வேத்தியத்தோடு
வளமாகத்தோத்தரித்து பானஞ்செய்து
ஆரப்பாவேணவரங் கேட்டுக்கொண்டு
அப்பனேயட்சணத்தி லீவார்காணே. 12

நந்தீஸ்வரர் பூஜாவிதி-12

முற்றிற்று.

உ

சிவமயம்.

இராமதேவர் பூஜாவிதி-ய.

ஆதியென்றமணிவிளக்கை யறியவேணும்
அகண்டபரிபூரணத்தைக் காணவேணுஞ்
சோதியென்றதுய்யவெளி மார்க்கமெல்லாஞ்
சுகம்பெறவேமனோன்மணியி னுத்தாள்தன்னை
நீதியென்றபரஞ்சோதி ஆயிபாதம்
நிற்குணத்தினின்றநிலை யாருங்காணார்
வேதியென்றவேதாந்தத் துள்ளேநின்று
விளங்குவதும்பூசையிது வீண்போகாதே. 1

போகாமல்நின்றதோ ரையாநீர்தான்
பூரணத்தினாகலை ஐந்துப்பெற்று
ஆகாமலானந்த வல்லியாலே
அடிமுடியினறுவாசி வாறுக்குள்ளே
வாகாமல்வாலையுட மூலத்தாலே
வழிதோன்றுமூன்றெழுத்தையுரைக்கவேணும்
சாகாமல்சாகுண்டா யிந்தமூலஞ்
சதிர்வட்டம்நடுகோண முக்கோணமாமே. 2

முக்கோணமூலசுழி நாற்கோணமாகி
முதலானமூலமணி வாலைதன்னில்
நாற்கோண [illegible] லவனை நயந்துகார்க்க
நாயகியாள்பரஞ்சோதி நாட்டமுற்றுத்
தீக்கோண[illegible]திசை யிருந்தமாயந்
தெரிந்[illegible]யுமைத்திட்டேன் விபரமாக
தாக்கோண[illegible]குமை [illegible]தென்றால்
தனியிருந்துபார்த்தவனே சித்தனாமே.

சித்தான்மூன்றெழுத்து செபலானசோதி
சிரிவரும ஐபிக்கிலியும் சவ்வுமாகி.
முத்தானலட்சமுரு செபிக்கச்சித்தி
முற்றிடுமேபெகிரிபென்ற பேய்கட்குந்தான்
வித்தானவித்தையடா மூட்டாடும்பாரு
விரிவானமுகக்கருவு மூன்றுகேளு
சத்தானஅதன்கருவும் சிலதனில்வைத்து
சதுரானவிதுவிபர மறியக்கேளே. 4

கேளப்பாபெலிகொடுத்து பூசைசெய்து
கிருபையுள்ளவுருவேற்றி திட்டமாக
வாளப்பாசுடுகாட்டின் சாம்பல்தன்னில்
வளமாகபுதைத்துவிடு நடுசாமம்பார்த்து
ஆளப்பாஅடியற்று மரணமாகி
ஆண்டிருந்தவசுநிலை தான்குலைந்து
காணப்பாகண்மணியே வீழ்வான்பாவி
கதைதெரியச்சொல்லுகிறே னின்னம்பாரே. 5

இன்னமின்னங்கண்மூன்சோ திலையுமாகு
மீடேறவேணுமென்று விதனிற்சூட்சம்
அன்னமின்னுவயிர்கட்டை தேவதாரம்
அறிவுடையமுளைசீவி சிங்களத்தைபோதி
வன்னமின்னுர்பேர்சொல்லி நசியென்றுதானும்
வலுவானநூற்றெட்டு வுருவும்போடு
சன்னமின்னுமாத்தடியி லிருந்துக்கொண்டு
சதிராகஆணிகொண் டடித்திடாயே. 6

அடித்தமுளைபிடுங்கியேவைத் திறுக்கிப்போடு
ஆனந்தவுருக்குலைந்து பட்டுப்போகும்
தொடுத்தமுதல்நாலாளுள் கண்டுதானுந்
தொகைமுடிந்துவாச்சுதடா விந்தப்போக்கு
விடுத்தபின்புவிஷமேறி கருவிப்போதும்
விரித்துரைத்தேன் பூட்டிதுவேவீண்போகாது

தடுத்துவிடுநகரத்தி லடித்துப்பாரு
தட்டழிந்து உயிர்முதலாய்ச்சேதமாமே. 7

ஆமப்பா அடிதரித்த சிங்களத்திலாளும்
அதிசயங்காண்கண்டவர்க்கு வடைக்கம்போகும்
ஓமப்பாவெளிதிறந்து சொன்னேன்பாரு
விளையாட்டுயில்லையடா விந்திப்போக்கு
சோமப்பாசத்தியுடன் தலையும்மூழ்கி
சுருக்கெனவே தியானிப்பா யாத்தாள்மூலம்
நாமப்பாசத்தியமே சொன்னேன்பாரு
தவறுதுராமனுட வாக்கியந்தானே. 8

தானென்றமூலமுடன் சித்தியன்னு
தனதானை நூற்றெட்டு குள்ளேசித்தி
ஆனென்றஅண்டர்பதி யெட்டுமாடும்
அறுபத்துநால்மூலி யெல்லாமாடும்
கோனென்றகோடிசித்து க்ஷணத்திலாடும்
குணமாகசீரவதிநாட் செய்யநன்று
வானென்றவஷ்டமியிற் செய்யநன்று
வளர்பிறையில்செய்தவனே யோகியாமே. 9

யோகிகளாயாவதற்கு வுனக்குச்சொன்னேன்
ஓகோகோமுன்னுரைத்த மூலத்தாலே
யோகிகளாயேகாந்த வல்லியாட்கு
யேட்டிலேயெழுதினதால் யெல்லாமாச்சு
தாகிகளாதாயுடைய கிருபையாலே
தவமாகுமவமாகும் சுபமுண்டாகும்
மோகிகளாய்மூலசுழி பூஜாவிதிபத்தாலே
மூத்திபெறசித்திவிளை பத்துமுற்றே. 10

இராமதேவர் பூஜாவிதி

முற்றிற்று.

உ

சிவமயம்.

கொங்கணநாயனார் அருளிச்செய்த

வாலைக்கும்மி.

விநாயகர் துதி.

பின்முடுகு வெண்பா.

கல்விநிறைவாலைப்பெண் மாதவியென்றோதுகின்ற
செல்வியின்மேற்கும்மிதனைச் செப்புதற்கேநல்விசய
நாதனின்சொல்வேதனஞ்சு போதன்மிஞ்சிமானகஞ்
பாதம்வஞ்சநெஞ்சினில் வைப்பாம். [சு

கும்மி.

சத்திசடாதரி வாலைப்பெண்ணுமந்த
வுத்தமிமேற்கும்மி பாட்டுரைக்க
வித்தைக்குதவிய வொற்றைக்கொம்பாம்வாலை
சித்திவிநாயகன் காப்பாமே. ௧

சரஸ்வதி துதி.

சித்தர்கள்போற்றிய வாலைப்பெண்ணுமந்த
சத்தியின்மேற்கும்மிப் பாட்டுரைக்க
தத்திமித்தோமென வாடுஞ்சரஸ்வதி
பத்தினிபொற்பதங் காப்பாமே. ௨

எங்கும்நிறைந்தவள் வாலைப்பெண்ணுமாலின்
தங்கையின்மேற்கும்மி பாடுதற்குக்
கங்கையணிசிவ சம்புவாஞ்சற்குரு
பங்கயப்பொற்பதங் காப்பாமே. ௩

சுப்பிரமணியர் துதி.

ஞானப்பெண்ணுமருள் சோதிப்பெண்ணுமாதி
வாலைப்பெண்மேற்கும்மி பாடுதற்கு

மானைப்பெண்ணேக்கிய வள்ளிக்கிசைந்திடும்
மால்முருகேசனுங்காப்பாமே. 4

விஷ்ணுதுதி.

ஆண்டிப்பெண்ணும்ராச பாண்டிப்பெண்ணும்வாலை
அம்பிகைமேற்கும்மிப் பாடுதற்கு
காண்டீபனும்பணி பூண்டவன்வைகுந்தம்
ஆண்டவன்பொற்பாதங் காப்பாமே. 5

நந்தீசர் துதி.

அந்தரிசுந்தரி வாலைப்பெண்ணுமந்த
அம்பிகைமேற்கும்மி பாடுதற்குச்
சிந்தையில்முந்திநல் விந்தையாய்வந்திடும்
நந்தீசர்பொற்பதங் காப்பாமே. 6

நூல்.

தில்லையில்முல்லையி லெல்லையுளாடிய
வல்லவன்வாலைப்பெண் மீதினிலே
சல்லாபகும்மித் தமிழ்ப்பாடவரும்
தொல்லைவினைப்போகும் வாலைப்பெண்ணே. 7

மாதாபிதாகூட இல்லாமலேவெளி
மண்ணும்விண்ணுமுண்டு பண்ணவென்று
பேதைப்பெண்ணுமுதல் வாலைப்பெண்ணொன்று
புகுந்தாளிந்தப் புவியடக்கம். 8

வேதமும்பூதமுண் டானதுவும்வெளி
ஞானசாஸ்திர மானதுவும்
நாதமுங்கீதமுண் டானதுவும்வரு
நான்சொல்லக்கேளடி வாலைப்பெண்ணே. 9

முந்தச்செகங்களுண் டானதுமுதல்
தெய்வமுந்தேவருண் டானதுவும்

விந்தையாய்வாலையுண் டானதுவுஞ்ஞான
விளக்கம்பாரடி வாலைப்பெண்ணே. 10

அரிக்குமுந்தின தவ்வெழுத்தாம் பின்னும்
அரிக்குள்நின்றது மஞ்செழுத்தாம்
தரிக்குமுந்தின தஞ்செழுத்தாம்வாசி
பரிக்குள்நின்றது மஞ்செழுத்தாம். 11

ஆதியிலைந்தெழுத் தானாள்வாலைப்பெண்
ஐந்தெழுத்துமென்று பேரானாள்
நாதியிலூமை யெழுத்திவள் தானல்ல
ஞானவகையிவள் தானானாள். 12

ஊமையெழுத்தே யுடலாச்சுமற்றும்
ஓமென்றெழுத்தே யுயிராச்சு
ஆமிந்தெழுத்தை யறிந்துகொண்டுவிளை
யாடிக்கும்மி யடியுங்கடி. 13

செகம்படைத்தது மஞ்செழுத்தாம்பின்னும்
சிவன்படைத்தது மஞ்செழுத்தாம்
யுகமுடிந்தது மஞ்செழுத்தாம்பின்னும்
உற்பனமானது மஞ்செழுத்தாம். 14

சாத்திரம்பார்த்தாலுந் தானுமென்னவேதந்
தானுமேபார்த்திருந் தாலுமென்ன
சூத்திரம்பார்த்தல்லோ ஆளவேணுமஞ்சு
சொல்லையறிந்தல்லோ காணவேணும். 15

காணாதுகிட்டாது எட்டாதுஅஞ்சில்
காரியமில்லையென் றேநினைத்தால்
காணாதுங்காணலா மஞ்செழுத்தாலதில்
காரியமுண்டு தியானஞ்செய்தால். 16

ஆபனுமைந்து வெழுத்துக்குள்ளேயறி
ஈவயனுமைந்து வெழுத்துக்குள்ளே

வா"னுமைந்து வெழுத்துக்குள்ளேயிந்த
வாலையுமைந்து வெழுத்துக்குள்ளே. 17

அஞ்செழுத்தானது மெட்டெழுத்தாய்பின்னு
மைம்பத்தோராட்சரந் தானச்சு
நெஞ்செழுத்தாலே நினையாமலந்த
நிசந்தெரியுமோ வாலைப்பெண்ணே. 18

எய்க்குறிதப்க்கு தஞ்செழுத்தவைதை
எட்டிப்பிடித்துக்கொ ளிரண்டெழுத்தை
நோக்கிக்கொள்வாசியை மேலாகவாசி
நிலையைப்பாரடி வாலைப்பெண்ணே. 19

சிதம்பரசக்கரந் தானறிவாரிந்தச்
சீமையிலுள்ள பெரியோர்கள்
சிதம்பரசக்கர மென்றுரைதற்குள்
தெய்வத்தையல்லோ வறியவேணும். 20

மனதுறுதியு மில்லாவிடில்வழி
மாறுதல்சொல்லி யென்னசெய்வாள்
மனதுறுதியும் வைக்கவேணும்பின்னும்
வாலைகிருபையுண் டாகவேணும். 21

இனிவெளியினிற் சொல்லாதேயெழில்
இம்மட்டுமிந்த வரிவழிக்கே
கனிமொழிச்சியே வாருங்கடிகொஞ்சங்
கருவைச்சொல்லுவேன் கேளுங்கடி. 22

ஊத்தைச்சடலமென் றெண்ணாதேயிது
உப்பிட்டபாண்டமென் றெண்ணாதே
பார்த்தபேருக்கு ஊத்தையில்லையிதைப்
பார்த்துக்கொவுந்த னுடலுக்குள்ளே. 23

உச்சிக்குநேரேயுண் ணாவுக்குமேல்நிலம்
வைத்தவிளக்கு எரியுதடி

அச்சுள்ளவிளக்கு வாலையடி யவி
யாமலெரியுது வாலைப்பெண்ணே. 24

எரியுதாஅறு வீட்டிலேபதி
லெண்ணையில்லையமிர்தந் தண்ணியில்லை
தெரியுதுபோக வழியுமில்லைபாதை
சிக்குதுசிக்குது வாலைப்பெண்ணே. 25

சிலம்பொலியென்னக்கேட்குதடிமெத்த
சிக்குள்ளபாதை துடுக்கமடி
வலம்புரிச்சங்க மூதுமடிமேலே
வாசியைப்பாரடி வாலைப்பெண்ணே. 26

வாசிப்பழக்க மறியவேணுமற்று
மண்டலவீடுகள் கட்டவேணும்
நாசிவழிக்கொண்டு போகமும்வாசியும்
நாட்டத்தைப்பாரடி வாலைப்பெண்ணே. 27

மூச்சுடரான விளக்குக்குள்ளேமூல
மண்டலவாசி வழக்கத்திலே
எச்சுடராகியந்தச்சுடர்வாலை
இவள்விடவேறில்லை வாலைப்பெண்ணே. 28

சூடாமல்வாலை யிருக்கிறதம்பரி
சுத்தசிவனுக்குள் ளானதினால்
வீடாமல்வாசிப் பழக்கத்தைப்பாருநாம்
மேல்வீடுகாணலாம் வாலைப்பெண்ணே. 29

மேல்வீடுகண்டவன் பாணிபடிவிண்ணில்
விளக்கில்நின்றவன் வாணியடி
தாய்வீடுகண்டவன் ஞானியடிபரி
தாண்டிக்கொண்டவன் பட்டாணியடி 30

அத்திலேகரம் பத்தியிலேமனம்
புத்தியிலேநடு மத்தியிலே

நெற்றிசதாசிவ மென்றுசொன்னேனுந்தன்
நிலைமையைப்பாரடி வாலைப்பெண்ணே. 31

அழுத்திலேசொல்லுஞ் செத்திலேநானும்
வழுத்தினேன்ஞானப் பழத்திலே
கழுத்திலே மயேஸ்வரனுமுண்டு
கண்டுப்பாரடி வாலைப்பெண்ணே. 32

அஞ்சிலேபிஞ்சிலே வஞ்சியரேநிதம்
கொஞ்சிவிளையாடும் வஞ்சியரே
நெஞ்சிலேருத்திரன் சூழிருப்பான்
நேருடணுமடி வாலைப்பெண்ணே. 33

தொந்தியிலேநடுப் பந்தியிலேதிடச்
சிந்தையிலேமூர்த்தி யுந்தனுடன்
உந்தியில்விஷ்ணுவுந் தானிருப்பாரிதை
உண்மையைப்பாரடி வாலைப்பெண்ணே. 34

ஆலத்திலேயிந்த ஞாலத்திலேவருங்
காலத்திலேயனு கூலத்திலே
மூலத்திலேபிரமனுந் தானிருந்துவாசி
முடுக்கிறான்பிண்டம் பிடிக்கிறான். 35

தேருண்டு அஞ்சூறு ஆணியுண்டுஅதில்
தேவருமுண்டு சங்கீதமுண்டு
ஆருண்டுபாரடி வாலைத்தெய்வமதில்
அடக்கந்தானடி வாலைப்பெண்ணே. 36

ஒன்பதுவாசல் கோட்டையுண்டுஅதில்
உள்ளேநிலைக்கார ரஞ்சுபேராம்
அன்புடனேபரி காரர்களாறுபேர்
அடக்கந்தானடி வாலைப்பெண்ணே. 37

இந்தவிதத்திலே தேகத்திலேதெய்வம்
இருக்கையில்புத்திக் கறிக்கையினால்

சந்தோஷவாலையைப் பாராமல்மனிதர்
சாகிறதேதடி வாலைப்பெண்ணே. 38

நகாரதிஷ்டிப்பு ஆனதினல்பிடு
வானவகார நயமாச்சி
உகாரமூச்சி சிரசாச்சுஇதை
உற்றுப்பாரடி வாலைப்பெண்ணே. 39

வகாரமானது ஓசையாச்சிஅந்த
மகாரமானது கெற்பமாச்சு
சிகாரமானது மாய்கையாச்சுஇதை
தெளிந்துபாரடி வாலைப்பெண்ணே 40

ஓமென்றவன்சரந் தானுமுண்டதற்கு
ஊமையெழுத்து மிருக்குதடி
நாமிந்தெழுத்தை யறிந்துக்கொண்டோம்விளை
யாடிப்பாரடி வாலைப்பெண்ணே. 41

கட்டாதகாளையைக் கட்டவேணுமாசை
வெட்டவேணும்வாசி யோட்டவேணும்
எட்டாதகொம்பை வளைக்கவேணுங்காய
மென்னைக்கிழுக்குமோ வாலைப்பெண்ணே. 42

இருந்தமார்க்கமாய்த் தானிருந்துவாசி
ஏற்காமலேதா னடக்கவேணுந்
திரிந்துஓடி யலைந்துவெந்துதேக
மிறந்துபோச்சுதே வாலைப்பெண்ணே. 43

பூத்தமலராலே பிஞ்சுமுண்டுஅதில்
பூவில்லாபிஞ்சு மனேகமுண்டு
மூத்தமகனாலே வாழ்வுமுண்டுமற்ற
மூன்றுபேராலே யழிவுமுண்டு. 44

கற்புள்ளமாதர் குலம்வாழ்கநிறை
சற்பையருந்தவ ரேவாழ்க

சிற்பரம்போற்றிக் கும்மியடிகுரு
தற்பரனையோற்றிக் கும்மியடி. 45

அஞ்சிலையரண் டழிந்ததில்லையஞ்
சாறிலையுநா லொழிந்ததில்லை
பிஞ்சிலைபூவிலே துஞ்சுவதுஅது
பேணிப்போடலாம் வாலைப்பெண்ணே. 46

கையில்லாக்குட்டையன் கட்டிக்கிட்டானிரு
காலில்லாநெட்டையன் முட்டிக்கிட்டான்
ஈயில்லாத்தேனெடுத் துண்டுவிட்டானது
இனிக்குதில்லையே வாலைப்பெண்ணே. 47

மேலூருக்கோட்டைக் காதரவாய்நன்றாய்
விளங்குங்கன்னனூர் பாதையிலே
காலூருவம்பலம் விட்டதிலைது
கடுநடையடி வாலைப்பெண்ணே. 48

தொண்டையுள்முக்கோணக் கோட்டையிலேயிதில்
தொத்திக்கொடிமரம் நாட்டையிலே
சண்டைசெய்துவந்து ஓடிப்போனான்கோட்டை
வெந்துதணலாச்சு வாலைப்பெண்ணே. 49

ஆசைவலைக்கு ளகப்பட்டதும்வீடு
அப்பவேவெந்து அழிந்திட்டதும்
பாசவலைவந்து மூடியதும்வாலை
பாதத்தைப்போற்றடி வாலைப்பெண்ணே. 50

அன்னமிருக்குது மண்டபத்தில்விளை
யாடித்திரிந்து ஆண்புலியும்
இன்னமிருக்குது தஞ்சுகிளிபதை
யெட்டிப்பிடிக்குது மூன்றுகிளி. 51

தோப்பிலேமாங்குயில் கூப்பிடுதேபுது
மாப்பிள்ளைவந்து சாப்பிடவும்

யேய்க்குதிப்படி யஞ்சாருந்தை
யிருந்துமுழிக்குது பாருங்கடி. 52

மீனு மிருக்குது தூரணிபிலேதை
மேய்ந்துதிரியுங் கலசாவல்
தேனுமிருக்குதுபோகையிலே யுண்ணத்
திகட்டுதல்லே யே வாலைப்பெண்ணே. 53

காகமிருக்குது கொம்பிலேதான்கத
சாவலிருக்குது தெம்பிலேதான்
பார்க்கவெகுதூர மில்லைபிதுஞானம்
பார்த்தால்தெரியுமே வாலைப்பெண்ணே. 54

கும்பிக்குளத்திலே யம்பலமாமந்தக்
குளக்கரையூரில் சேறுமெத்த
தெம்புயிடைக்காண்டுப் பாதைகளாய்வந்து
சேர்ந்தாராய்ந்துபார் வாலைப்பெண்ணே. 55

பண்டுமேபாழுங் கிணற்றுக்குள்ளேரண்டு
கெண்டையிருந்து பகட்டுதடி
கண்டிருந்துமந்தக் காக்காயுமஞ்சு
கழுகுகொன்றது பாருங்கடி. 56

ஆற்றிலேயஞ்சு முதலைபடியரும்
புற்றிலேரண்டு காடியடி
கூற்றனுமூன்று குருடனடிபாசங்
கொண்டுபிடிக்கிறான் வாலைப்பெண்ணே. 57

முட்டையிடுகு தொருபாவை
மோசம்பண்ணு தொருபாவை
வட்டமிட்டாரூர் கன்னியில்ரண்டு
மானின்றுதவிக்குது வாலைப்பெண்ணே. 58

அட்டமாவின்வட்டம் பொட்டலிலேரெண்டு
அம்புவிதிற்குது தேர்மேலே

திட்டமாய்வந்து அடிக்குநில்லைதேகம்
செந்தணலானதே வாலைப்பெண்ணே. 59

முக்கோணவட்டக் கிணற்றுக்குள்ளேமூல
மண்டலவாசிப் பழக்கத்திலே
அக்கோணவட்டச் சக்கரத்தில்வாலை
யமர்ந்திருக்கிறாள் வாலைப்பெண்ணே. 60

இரண்டுகாலாலொரு கோபுரமாய்நடு
நாளாயிருந்து அமிழ்ந்துபோகும்
கண்டபோதுகோ புரமிருக்கும்வாலை
காணவுமொட்டா ளிலைக்கெட்டாள். 61

அஞ்சுபூதத்தை யுண்டுபண்ணிக்கூட்டி
ஆராதாரத்தை யுண்டுபண்ணி
கொஞ்சப்பெண்ணாசை யுண்டுபண்ணிமாலை
கூட்டுறாள்காலனை மாட்டுகிறாள். 62

காலனைகாலா லுதைத்தவளாம்வாலை
ஆலகாலவிஷ முண்டவளாம்
மாளாச்செகத்தைப் படைத்தவளாமிந்த
மானுடன்கோட்டை யிடித்தவளாம். 63

மாதாவாய்வந்து அமுதந்தந்தாள்மனை
யாட்டியாய்வந்து சுகங்கொடுத்தாள்
ஆதரவாகிய தங்கையானாள்நமக்
காசைகொழுந்தியு மாமியானாள். 64

சிரித்துமெல்லப் புரமெரித்தாள்வாலை
செங்காட்டுச்செட்டியைத் தானுதைத்தாள்
ஒருத்தியாகவே சூரர்தனைவென்றாள்
ஒற்றையாய்க்கஞ்சனைக் கொன்றுவிட்டாள். 65

இப்படியல்லோ வியன்தொழிலாமிந்த
ஈனாமலடி கொடுஞ்சூலி

மைப்படுங்கண்ணியர் கேளுங்கடி
வையசுவாலை திரிசூலி. 66

கத்திபெரிதோ யுரைபெரிதோவிவள்
கண்ணுபெரிதோ விவள்பெரிதோ
சத்திபெரிதோ சிவம்பெரிதோநீதான்
சற்றேசொல்லடி வாலைப்பெண்ணே. 67

அன்னம்பெரிதல்லால் தண்ணீர்பெரிதில்லை
அப்படிவாலை பெரிதானால்
பொன்னுபெரிதல்லால் வெள்ளிபெரிதில்லை
பொய்யாதுசொல்லுறேன் கேளுங்கடி. 68

மாமிசமானாலெலும்புமுண்டுசதை
வாங்கியோடு கழன்றுவிடும்
ஆமிசப்படி சத்தியென்றேவிளை
யாடிக்கும்மி யடியுங்கடி. 69

பண்டுமுளைப்ப தரிசியோயானாலும்
விண்டுமிபோனால் விளையாதென்று
கண்டுகொண்டுமுன் னவ்வைசொன்னாளது
வுண்டோவில்லையோ வாலைப்பெண்ணே. 70

மண்ணுமில்லாமலே விண்ணுமில்லைகொஞ்சம்
வாசகமில்லாமலே பூவுமில்லை
பெண்ணுமில்லாமலே யாணுமில்லையிது
பேணிப்பாரடி வாலைப்பெண்ணே. 71

நந்தவனத்திலே சோதியுண்டுநிலங்
காத்தபேருக்கு நெல்லுமுண்டு
விந்தையாய்வாலையைப் பூசிக்கமுன்னாள்
விட்டகுறைவேணும் வாலைப்பெண்ணே. 72

வாலையைப்பூசிக்கச் சித்தரானார்வாலைக்
கொத்தாசையாய்ச்சிவ கர்த்தரானார்

வேலையைப்பார்த்தல்லோ கூலிவைத்தாரிந்த
விதந்தெரியுமோ வாலைப்பெண்ணே. 73

வாலைக்குமேலான தெய்வமில்லை மானங்
காப்பதுசேலைக்கு மேலுமில்லை
பாலுக்குமேலான பாக்கியமில்லைவாலைக்
கும்மிக்குமேலான பாடலில்லை. 74

நாட்டத்தைக்கண்டா லரியலாகுமந்த
நாலாறுவாசல் கடக்கலாகும்
பூட்டைக்கதவைத் திறக்கலாகுமிது
பொய்யல்லமெய்யடி வாலைப்பெண்ணே. 75

ஆணும்பெண்ணுங்கூடி யானதிறைப்பிள்ளை
ஆச்சுதென்றேநீரும் பேசுகின்றீர்
பெண்ணுமாணுங்கூடி யானதல்லோபேத
மற்றொருவித்தாச்சு வாலைப்பெண்ணே. 76

இன்றைக்கிருப்பதும் பொய்யல்லவோவீடு
யென்வாழ்க்கையென்பதும் பொய்யல்லவே
அன்றைக்கெழுத்தின் படிமுடியும்வாலை
ஆத்தாளைப்போற்றடி வாலைப்பெண்ணே. 77

வீணாசைகொண்டு திரியாதேயிது
மெய்யல்லபொய்வாழ்வு பொய்க்கூடு
காணாதவாலையைக் கண்டுகொண்டால்காட்சி
காணலாமாகாய மாளலாமே. 78

பெண்டாட்டியாவதும் பொய்யல்லவோபெற்ற
பிள்ளைகளாவதும் பொய்யல்லவோ
கொண்டாட்டமான தகப்பன்பொய்யேமுலை
கொடுத்ததாயும் நிசமாமோ. 79

தாயும்பெண்டாட்டியுந் தான்சரியேதன்மம்
தாயேயிருவருந் தாங்கொடுத்தார்

காயும்பழமுஞ் சரியாமோவுந்தன்
கருத்தைப்பார்த்துக்கொள் வாலைப்பெண்ணே. 80

பெண்டாட்டிமந்தை மட்டுவருவாள்பெற்ற
பிள்ளைமசானக் கரையுமட்டும்
தெண்டாட்டுத்தர்மம் நடுவிலேவந்து
சேர்ந்துபரகதி தான்கொடுக்கும். 81

பாக்கியமும்மகள் யோக்கியமும்ராச
யோக்கியமும்வந்த தானாக்கால்
சீக்கிரந்தருமஞ் செய்யவேண்டுங்கொஞ்சந்
திருப்பணிகள் முடிக்கவேண்டும். 82

திருப்பணிகள் முடித்தோருஞ்செத்துச்
சாவாதபேரி லொருவரென்றும்
அருட்பொலிந்திடும் வேதத்திலேயவ்வை
அறிந்துசொன்னாளே வாலைப்பெண்ணே. 83

மெத்தைதனிலே படுத்திருந்துநாமும்
மெல்லியருடன் சிறிக்கும்போது
யுத்தகாலன்வந்து தாம்பிடித்தால்நாமும்
மெத்தசவமடி வாலைப்பெண்ணே. 84

ஏழைபனாதிக ளில்லையென்றுலவர்க்
கிருந்தாலன்னங் கொடுக்கவேண்டும்
நாளையென்றுசொல்ல லாகாதேயென்று
நான்மறைவேத முழங்குதடி. 85

பஞ்சைபனாதியை யடிக்காதேயந்த
பாவந்தொலைப முடியாதே
தஞ்சமென்றோரைக் கெடுக்காதேயார்க்கும்
வஞ்சனைசெய்ய நினையாதே. 86

கண்டதுங்கேட்டதுஞ் சொல்லாதேகண்ணில்
காணாதவுத்தரம் விள்ளாதே

பெண்டாட்டிக்குற்றஞ் சொல்லாதேபெற்ற
பிள்ளைக்கிளப்பங்கள் கொடுக்காதே. 87

சிவனடியாரை வேதியரைச்சில
புலவர்ஞான பெரியோரை
மவுனமாகவும் வையாதேயவர்
மனநோகவும் செய்யாதே. 88

வழக்கழிவுகள் சொல்லாதேகற்பு
மங்கையர்மேல்மனம் வையாதே
பழக்கவாசியைப் பார்த்துக்கொண்டுவாலை
பாதத்தைப்போற்றடி வாலைப்பெண்ணே. 89

கூடியபொய்களைச் சொல்லாதேபொல்லா
கொலைகளவுசெய்ய லாகாதே
ஆடியபாம்பை யடியாதேயிது
அறிவுதானடி வாலைப்பெண்ணே. 90

காரியநாகினும் வீரியம்பேசவும்
காணாதென்றவ்வை சொன்னாளே
பாரினில்வம்புகள் செய்யாதேபுளியம்
பழம்போலுதிர்ந்து விடுந்தானே. 91

ராசாக்கள்பகை செய்யாதேநடுக்
காட்டுப்புலிமுன்னே நில்லாதே
தேசாந்திரங்களுஞ் செல்லாதேமாய்கைத்
தேவடியாள்தனம பண்ணாதே. 92

தன்வீடிருக்க அசல்வீடுபோகாதே
தாயார்தகப்பனை வையாதே
உன்வீட்டுக்குள்ளே பூதமிருக்கையில்
ஓடித்திரியுறாய் வாலைப்பெண்ணே. 93

சாதிபேதஞ் சொல்லுகிறீர்தெய்வம்
தானொன்றோருருவுடல் பேதமுண்டோ

ஓதியபாலதி லொன்றாகியதில்
உற்பத்திநெய்தயிர் மோராச்சு. 94

பாலோடுமுண்டு பூனையுமுண்டு
மேலாகக்காணவுங் காண்பதில்லை
மேலந்தவாசையைத் தள்ளிவிட்டுமனதில
வேண்டிப்பூசையைச் செய்திடுங்கள். 95

கோழிக்காறுகா லென்றுசொன்னேன்கிழக்
கூனிக்குமூன்றுகா லென்றுசொன்னேன்
கூனிக்கிரண்டெழுத் தென்றுசொன்னேன்முழுப்
பானைக்குவாயில்லை யென்றுசொன்னேன். 96

ஆட்டுக்கிரண்டுகா லென்றுசொன்னேனம்
மானைக்குப்பானைக்கு நிற்குமேல்கூல்
மாட்டுக்குக்காலில்லை யென்றுசொன்னேன்கதை
வகையைச்சொல்லடி வாலைப்பெண்ணே. 97

கோயிலுமாடும் பறித்தவனுங்களறி
கூற்றுமேகற் றிருந்தவனும்
வாயில்லாக்குதிரை கண்டவனுமாட்டு
வகைதெரியுமோ வாலைப்பெண்ணே. 98

இந்தனைசாத்திரந் தான்படித்தோர்செத்தா
ரென்றாலுலகத் தோர்கள்சிரிப்பார்
செத்துப்போய்க்கூடக் கலக்கவேண்டுமவன்
தேவர்களுடனே சேரவேண்டும். 99

உற்றதுசொன்னா லற்றதுபொருந்தும்
உண்டோஉலகத்தி லவ்வைசொன்னாள்
அற்றதுபொருந்து முற்றதுசொன்னாள்
அவனேகுருவடி வாலைப்பெண்ணே. 100

பூரணநிற்கும் நிலைபறியான்வெகு
பொய்சொல்வான்கோடி மந்திரஞ்சொல்வான்.

காரணகுரு வவனுமல்லவிவன்
காரியகுரு பொருள்பறிப்பான். 101

எல்லாமறிந்தவ னென்றுசொல்லியிந்த
பூமியில்முழு ஞானியென்று
உல்லாசமாக வயர்பிழைக்கவிவர்
ஓடித்திரியுறார் வாலைப்பெண்ணே. 102

ஆதிவாலைபெரி தானுமவள்
அக்காள்பெரிதோ சிவன்பெரிதோ
நாதிவாலைபெரி தானுமவள்
நாயகனல்ல சிவம்பெரிது. 103

ஆயுசுகொடுப்பாள் நீரிழிவுமுதல்
கண்டதுமற்ற வியாதியெல்லாம்
பசாசுபறந்திடும் பில்லிவினைவடி
பத்தினிவாலைப்பெண் பேரைச்சொன்னாள். 104

நித்திரை தன்னிலும் வீற்றிருப்பாளெந்த
நேரத்திலும்வாலை முன்னிருப்பாள்
சத்துருவந்தாலும் தள்ளிவைப்பாள்வாலை
யுற்றகாலனையுந் தானுதைப்பாள். 205

பல்லாயிரங்கோடி யண்டமுதல்பதி
னான்குபுவன மூர்த்திமுதல்
எல்லாந்தானப் படைத்தவளாம்வாலை
யெள்ளுக்குளெண்ணெய்போல்நின்றவளாம். 106

தேசப்புகழ்ந்திடும் வாலைக்கும்மித்தமிழ்
செய்யவெனக்குப தேசஞ்செய்தாள்
நேசவான்வீரப் பெருமாள்குருசாமி
நீள்பதம்போற்றிக் கொண்டாடுங்கடி. 107

ஆறுபடைப்புகள்வீடுகடைசூத்திர
வஞ்செழுத்துக்கும் வகையறிந்து

கூறுமுயர்வல வேந்திரன்துரைவள்ளல்
கொற்றவன்வாழக்கொண்டாடுங்கடி. 108

ஆடுங்கள்பெண்டுக ளெல்லோருமந்த
அன்பானகொங்கணர் சொன்னதமிழ்
பாடுங்கள்சித்தர்க ளெல்லோரும்வாலைப்
பாதத்தைப்போற்றிக் கொண்டாடுங்கடி. 109

சித்தர்கள்வாழி சிவன்வாழிமுனி
தேவர்கள்வாழி ரிஷிவாழி
பத்தர்கள்வாழி பதம்வாழிகுரு
பாரதிவாலைப்பெண் வாழியவே. 110

வாலைக்கும்மி முற்றிற்று.

சிவமயம்.

உரோமரிஷி ஞானம்.

மூலவட்டமானகுரு பாதங்காப்பு
முத்திக்குவித்தான முதலைகாப்பு
மேலவட்டமானபிறப் பிரமங்காப்பு
வேதாந்தங்கடந்துநின்ற மெய்யேகாப்பு
காலவட்டந்தங்கிமதி யமிர்தப்பாலைக்
கண்டுபசியாற்றிமனக் கவடுநீக்கி
ஞாலவட்டஞ்சித்தரொடும் பெரியோர்பாதம்
நம்பினதாலுரோமமுனென்பேர் நாயன்றானே. 1

கண்ணாடிசிலமுடித் தனுப்பினாலே
கருவதனையறியாமல் மாண்டுபோனான்
விண்ணாடிப்பார்த்த குற்றம்குற்றம்
வெறுமண்ணாய்ப்போச்சுதவன் வித்தையெல்லாம்
ஒண்ணானபவனமென்ற யோகம்விட்டால்
ஒருபோதுஞ்சித்தியில்லை வாதந்தானும்
பெண்ணார்தன்னாசைதன்னை விட்டுவந்தால்
பேரின்பமுத்திவழி பெசுவேனே. 2

பேசுவேனிடகலையை சந்திரகாந்தம்
பின்கலைதானுதித்த ஞாயிறாச்சு
நேசமதாய்நடுவிருந்த சடந்தானீங்கி
நீங்காமலொன்றானலதுதான்முத்தி
காதலாய்ப்பார்த்தோர்க்கு இதுதான்மோட்சங்
காணாதபேர்க்கென்ன காமதேகஞ்
சோதனையாயிடகலையி லேறவாங்கி
சுழிமுனையில்கும்பித்துச் சொக்குவீரே. 3

வாங்கியந்தப்பன்னிரண்டி லுள்ளேரேசி
வன்னிநின்றவிடமல்லோ சூரியன்வாக்கை
யோங்கியிந்தரெண்டிடமு மறிந்தோன்ரோகி
உற்றபரமடிதானே பதினாறுகுந்
தாங்கிநின்றகாலடிதான் பன்னிரண்டு
சார்வானபதினாறில் மெள்ளவாங்கி
யேங்கினகைபன்னிரண்டில் நிறுத்தியூது
எழுந்தபுரியட்ட மடங்கித்துப்பாரே. 4

பாரையாகுதிரைமட்டம் பாய்ச்சல்போச்சு
பரப்பிலேவிடுகாதே சத்தந்தன்னை
நேரயாரெண்டிதழி னடுவேவைத்து
நிறைந்தசதாசிவனைத் தியானம்பண்ணு
கூரையாஅங்குலந்தா னாலுசென்றால்
குழிக்குள்ளேதானடக்கிக் கொண்டுதையா
ஆரையாஉனக்கிது சொல்லப்போறேன்
அருமையுள்ளவென்மகனென் றழைக்கலாமே. 5

அழைப்பதுவுநல்லபிள்ளை யானால்நன்று
ஆகாதசீடர்களைச் சேர்த்தாய்தோஷம்
பிழைப்பதற்குவழிசொன்னால் பார்க்கமாட்டான்
பெண்டாட்டிமனங்குளிரப்பேசுமாடு
உழைப்பதற்குச்செனனமெடுத் தானேயல்லால்
உதவிதனக்கெவ்வளவு முண்டோவில்லை
யிளப்பமிவன்பேச்சைசபடிக் கடிதானாகு
மேதுக்குச்சொல்லுகிறே மினிமேல்தானே. 6

மேலென்னவிருக்கையிலும் நடக்கும்போதும்
வேறுரையாய்சாரங்கள் விடாமலேற்று
நாலென்னவெட்டென்ன வெல்ல மொன்று
நவமான அஷ்டாங்க மப்பிய சித்துங்

காலென்னபிராணாய முன்னேசெய்யில்
கணக்காகப்பூரகமாங் கும்பகமேதானு
கோலென்னரேசகந்தா னென்றுமூன்று
குறையாமற்சாபீசங் கூட்டிதந்தீரே.

கூட்டியேபழகினபின் சாபீசத்தில்
குறையாமல்சாதித்தால் பிரமரந்திரங்
காட்டிவிலக்குமல்லால் விழிக்குறியினாலே
கண்மூக்குமத்தியிலே கண்டுபாரு
மூட்டிவிக்குமாதா மாறுந்தானே
மூலவட்டகணபதிநான் முகத்தோன்மாயன்
தாட்டிகமணிப்பூரங் கையன்வட்டந்
தணலானருத்திரனுந் தணலுமாமே. 8

தணலாகும்விசுத்தியறு கோணவட்டஞ்
சதாசிவனார்வட்டமல்லோ குருபீடந்தான்
மனையானபதியினிலே குறித்துப்பார்க்க
மத்தியமுதல்கரிகொண்டு தூங்குந்தூங்கும்
கனலேறிக்கொண்டிருந்தா லெல்லாமுண்டு
காற்றைவெளிவிட்டாக்கால் கருமதீதான்
புனலூறும்வழி பாதை யிந்தமார்க்கம்
பொல்லாததுரோகிக்குப் பொய்யாமன்றே. 9

செலுத்துவதுஉண்ணாக்கி லண்ணாக்கையா
சென்றேறிப்பிடரிவழித் தியானந்தோணும்
வலுத்ததடாநானு மனக் கமுதமாச்சு
மவுனமென்ற நிருவிகற்பவாழ்க்கையாச்சு
சொலித்திருக்கும் பன்னிரண்டிலிருத்தியூது
சோடசமாமசந்திரகலை தேய்ந்துபோச்சு
பலித்துதடாயோகசித்தி ஞானசித்தி
பருவமாய்நாடிவைத்துப் பழக்கம்பண்ணே.

மூடாமல்சிறிதுபர முகபாடம்பண்ணி
முழுதுமவன்வந்ததுபோல் பிரசங்கித்து
வீட்டைதுஉடலேது போகமேது
வீண்பேச்சிசொல்லியல்லோ மாண்டுபோனார்
காடேறிமலையேறி நதிகளாடிக்
காய்கிழங்குசருகுதின்று காமத்தீயால்
சூடேறிமாண்டவர்கள் கோடாகோடி
சொரூபமுத்திபெற்றவர்கள் சுருக்கமாச்சே.

சுருபமுத்திக்கடையாளமேதென்றுக்கால்
சுடர்போலேகாணுமடா தூலதேகம்
அருபமுத்தியிடமல்லோ பிரமஞான
மபராட்சமென்றுசொல்லுஞ் சிரவணந்தான்
பருப்பதத்தையசைப்பனெ சிற்றெறும்பின்
பழங்கதைபோலாச்சுதிந்த யோகம்விட்டால்
வெறுங்கடத்திலீப்புகுந்த வாறுபோலே
வேதாந்தமறியாத மிலேச்சர்தானே. 12

ஓமென்றகெட்டபுத்தி மாணுக்களே
உலகத்தில்மானிடற்கு ஆண்டுநூறு
ஆமென்றுஇருபத்தோ ராயிரத்து
அறுநூறுசுவாசமல்லோ ஒருநாளைக்குப்
போவென்றுபோனதினால் நாள்குறைந்து
போச்சிதுபோகாவிட்டால் போரதில்லை
தாமென்றுநினைக்கையிலே தெய்வமொன்று
தானினைந்ததன்மையல்லோ விதிகள்தானே.

உரோமரிஷிஞானம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருமூலநாயனார் ஞானம்.

——(*)——

காப்பு-விருத்தம்.

அடியாகியண்டரண்டத் தப்பாலாகி
அகாரமெனுமெழுத்ததுவே பாதமாகி
முடியாகிநடுவாகி மூலந்தன்னில்
முப்பொருளுந்தானாகி முதலுமாகிப்
படியாகிமுப்பாழற்றுப் படிக்குமப்பாற்
படிகடந்தபரஞ்சோதிப் பதியுமாகி
அடியாகுமூலமதே அகாரமாகி
அவனளவாய்நின்றநிலை யணுவதாமே. 1

அணுவாகியவனவளர் யல்லாமாகி
அடிநடுவுமுடிவாகி யகண்டமாகி
பொதுவாகிப்பல்லுயிர்க ளனைத்துக்கெல்லாம்
புகலிடமாயெப்பொருட்கு மூலமாகி
மதுவாகிவண்டாகிச் சுவையுமாகி
மலராகிமணமாகி மதிக்கவொண்ணா
அவராகுஅகாரமதே மூலமாகி
அண்டமெல்லாந்தாங்கிநின்ற மம்பரமூலம்மே.

மூலமென்னுமாதார வட்டந்தானே
முச்சுடருமுக்கோண மூன்றுமுடி
சீலமென்னுஞ்சிவலிங்க பாதத்தீர்த்தந்
திருவடியுந்திருமேனி யுடனமாகும்
கோலமுடனண்டமெல்லாந் தாங்கிக்கொண்டு
கொழுந்துவிட்டகம்பமதாய் மேலேநோக்கி
ஆலமுண்டண்டமெல்லாந் தானாய்நின்ற
அகாரமுதல்வவ்வெழுத்தை அறிந்துபாரே.

அறிந்ததுவுந் தற்பரமே யகாரமாகும்
அறிவுடைய உகாரமே சிற்பரமதாகும்
பிறந்ததுவுமுலகமெல்லாஞ் சமைபந்தானாகும்
பேதமெனுங்கருவிவகை யெல்லாமாகும்
அறிந்ததுவும்அகாரமெனும் பாதந்தன்னை
அடிமுடியென்றனுதினமு மறிந்துநோக்கே. 4

நோக்கமுடன்மூலமெனும் பாதந்தன்னை
நற்பொருளாஞ்சிற்பரத்தி னூடேநோக்குந்
தீர்க்கமுடனுதார வகையுந்தாண்டித்
திருநயனம்நாசிநெற்றி நடுவேபார்த்துப்
போக்கறிந்துயிர்ந்தநிலை நோக்கவல்லார்
புரிசடையோன்றன்னுடைய புதல்வராவர்
ஆக்கமுடனருட்சுடர்போற் குருவைத்தானே
அனுதினமும்நோக்கிச்சிற்பா ராசானாமே. 5

ஆசானுமீசானு மொன்றேயாகும்
மவனவளுமொன்றாகும் அதுதானாகும்
பேசாதமந்திரமு மிதுவேயாகும்
பேரொளியின்வடிவமாம் பேருமாகும்
நேசாருங்கலைகளெல்லாந் தானேயாகும்
நிலையானஓங்கார பீடமாகும்
யீசனையாசானைக் காணும்பேர்க்கு
யின்பமுடன்கயிலாச மெய்தலாமே. 6

எய்தரியபரசிவத்தின் மூலந்தன்னி
லிருசுஆறுமுகித்தொடங்கு மிடமேயென்று
மெய்தொழியுஞ்சுழிமுனையே கம்பமாகி
மெய்ப்பொருளாஞ்சோதியென மேவிநிற்கும்
இவ்வகையேமூலமெனும் பாதந்தன்னை
யிருநேரமற்றிடத்தே யிரஞ்சிகாணே. 7

காண்பதுதான் பேரொளியின் காட்சியாகும்
காணரியபொருளாகுங் காட்டும்போது
ஆண்பெண்ணாப் அலியாகிஅடியுமாகி
அப்பாலைக்கப்பாலா யமர்ந்தசோதி
வீண்பயிலும்வேதமெல்லாந் தேடிக்காணா
வெறும்பாழதாகியே மேவிநின்றார்
சேண்பயிலும்செகசோதி மூலந்தன்னை
தேடரியபாதமென்றே தெளிந்துணோக்கே. 9

தெளிவரியபாதமது அகாரமாகி
சிற்பரமுந்தற்பரமுந் தானேயாகி
அளவரியசோதியது தானேயாகி
அடிநடுவுமுடியாகி யமர்ந்துநின்று
மொருவரியமுதலாகி மூலமாகி
முச்சுடருந்தானாகி முடிந்தசோதி
சுழியினிலேமுனையாகிக் கோபமாகிச்
சொல்லரியவெழுத்தென்றே தொகுத்துப்பாரீர்

தொகுப்பதுதான்மந்திரங்கள்கருவிநூல்கள்
சொல்லரியதத்துவங்கள் தன்னையெல்லாம்
வகுத்துடனேயிதையெல்லாங் கண்டுநீங்கி
வாகானஉடலுயிரை வகையாற்கண்டு
பகுப்புடனேசேராமற் பாதந்தன்னைப்
பரகதிக்குவழியெனவே பற்றிக்கொண்டு
விகர்ப்பமில்லாமூலமதில் நின்றசோதி
மேலானபாதமென்றே மேவிநில்லே. 10

மேவியதோர்சற்குருவின் பாதந்தன்னை
மெய்ஞ்ஞானமென்றதனை மேவிக்கொண்டு
ஆவியுடல்காயமெல்லா மறிந்துபார்த்து
அத்தனார்வடிவமென்றே அறிந்துக்கொண்டு

பாவினையுள்ளனதெல்லாம் விட்டுநீங்கிப்
பகலிரவுமற்றிடத்தே கருத்தைவைத்துச்
சீவனையுஞ்சிவந்தனையு மொன்றாய்த்தானே
திருமூலர்பாதமென்றே திடமாய்க்காணே. 11

திருமூலநாயனார் ஞானம்

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

கருவூரார் பூஜாவிதி.

——(*)——

காப்பு.

தெளிவுதனில்தெளிவுதரு மருளுங்காணும்
க்ஷணத்திலே சிவமயஞ்சேரத்தானும்
வழியதனில்நல்லவழி ஞானங்கூடும்
மகத்தானவேதாந்தஞ் சித்திகாட்டும்
ஒளிவுதனிலொளிவுதரு முறுதிசொல்வா
ருற்பனத்திலுற்பனமா யுறுதிதோணும்
வெளியதனில்வெளியாகி நாதத்துள்ளே
விளங்கிநின்றவாலைப்பெண்ணுதிகாப்பாமே.

நூல்.

ஆதியந்தம்வாலையவ ளிருந்தவீடு
ஆச்சரியமெத்தமெத்த வதுதான்பாரு
சோதியந்தநடுவீடு பீடமாகச் [த்தாள்
சொகுசுபெறவீற்றிருந்தாள்துரைப்பெண்ணு

வீதியந்த ஆறுதெரு வமர்ந்தவீதி
விளையாடிநின்றதிரு மாளிகண்டாய்
பாதிமதிசூடியேயிருந்தசாமி
பத்துவயதாகுமிந்த வாமிதானே. 1

வாமியிவள்மர்மம்வைத்துப் பூசைபண்ண
மதியுனக்குவேணுமடா வதிகமாக
காமியிவள்வெகுகாமி சிவகாமிரூபி
காணரிதுசிறுபிள்ளை கன்னிகன்னி
ஆமிலையறிந்தவர்கள் சித்தர்சித்தர்
அறிந்தாலுமனதடக்க மறியவேணும்
காமிவளைப்பூசைபண்ண நினைத்தவாறு
நாட்டிலேசொல்லவென்றால் நகைப்பார்காணே. 2

காணப்பாவிவளுடைய கற்புமெத்த
கண்டவர்க்குப்பெண்ணாசு நானேயென்பாள்
ஊணப்பாவமிர்தமவ ளூட்டிவைப்பா
ளுள்வீட்டுக்குள்ளிருந்து மேலேயேற
பூணப்பாமனமுறைந்து வாவாவென்பாள்
புத்திரனேயென்மகனே யென்றுசொல்லி
வேணப்பாவேணதெல்லாந் தருவேனென்பாள்
வேதாந்தசூட்சமெல்லாம் விளங்குந்தானே. 3

தானென்றவாலையிவள் ரூபங்காணச்
சமர்த்துண்டோவாண்பிள்ளை தானுமுண்டோ
பானென்றவாமத்துக் குள்ளேயப்பா
பூராபரையாள்பலகோடி விதமுமாடி
தேனென்றமொழிச்சியிவள் சித்தர்க்கெல்லாஞ்
சிறுபிள்ளைபத்துவய துள்ளதேவி
ஊனென்றவுடலுக்குள் நடுவுமாகி
யுத்தமியாள்வீற்றிருந்த வுண்மைதானே. 4

உண்மையிவள்நாணமில்லா திருந்தவீடு
ஊருக்குள்நடுவீடு உற்றுப்பார்நீ
செம்மையாய்கண்டவர்க ளெண்டோவப்பா
ஜெகஜாலவித்தையிவ ளாடும்வித்தை
உண்மையடாபஞ்சவர்ண மாகிநின்ற
உலகதனிலலைந்தவர்கள் கோடாகோடி
சின்மயமாய்க்கண்டவர்கள் சொல்லாரப்பா
னேசமுடனெனக்குரைத்தநிசங்கண்டேனே. 5

கண்டதொருபூரணத்தில் மகிமைகேளு
கால்மேலுந்தலைகீழும் நடுவுமாகி
அண்டரொடுமுனிவர்களுங் கண்டுபோற்ற
ஆதவனுமம்புலியு மதிலேநின்று
தொண்டுபண்ணுமைவர்களில் நாலுபேர்கள்
சுகம்பெறலாமென்றுசொன்ன வாசல்நாலு
கொண்டவர்கள்கண்டுவந்த தொண்ணூற்றாறு
கொள்கையெனக்காத்திருந்தகுறியைப்பாரே 6

பார்த்தவர்கள்செய்தொழிலு மனதுவேறாய்ப்
பலநூலைப்படித்துப்படு குழியில்வீழ்வார்
ஏற்றபடிமனம்போனாற் புத்திபோச்சு
ஏழைமதிபோகாதே யென்தாய்பாதம்
போற்றுதற்குஐவரையு மனதிலொன்றாய்ப்
புத்திசித்தமோர்நிலையில் நிறுத்திவாசம்
பூத்தமலரெடுத்துதிருப் பாதம்போற்ற
பொறியைந்துகருவிகா ளாதிபோமே. 7

போச்சுதடாமனமாய்கை வீறுபோச்சு
பொறியைந்துகருவிகா ளாதிபோச்சு
ஏச்சுதடாவென்றுமன மிறக்கலாச்சு
எனக்கொருவரிணையில்லை யென்றபேச்சு

ஊச்சுதடாமனமடங்க லங்கென்றார்சொல்
வாய்பேசாமவுனத்தை யதிலேசேர்க்கக்
காச்சுதடாபூத்தமலர் கருத்தையூணு
கனியாகுமக்கனியைக் கண்டுகொள்ளே. 8

கொள்ளுதற்குஇன்னமொரு குறிப்பைக்கேளு
கோடியிடிமின்முழங்குங் கண்ணைமூடு
விள்ளுதற்குமுனைபடாங்கோப் பூதங்காணும
விளாதேயுள்ளபடி சிங்கென்றோர்சொல்
விள்ளவுமேயுபாயமதால் நடுவேநில்லு
வேகமெல்லாமொடுங்குமடா சுத்தம்போசசு
கள்ளரைப்போல்மயங்காதே மவுனத்தூணு
கண்ணையுநீ திறக்காதே கருதிப்பாரே. 9

பாரேதுபுனலேது அனலுமேது
பாங்கானகாலேது வெளியுமாகும்
நாரேதுபூவேது வாசமேது
நல்லபுட்பந்தானேது பூசையேது
ஊரேதுபேரேது சினமுமேது
ஓங்காரகோவதிசயந்தா னென்னசொல்வேன்
ஆரேதுகுளமேது கோயிலேது
ஆதிவஸ்தையறிவினு லறியலாமே. 10

ஆமெனவும்ஊமெவு மிரண்டுங்கூட்டி
யப்பனேஓமென்ற மூன்றுமொன்றாய்
நாமெனவுந்தாமெனவு மொன்றேபாகும்
நல்லவர்களறிவார்கள் காமிகாணூர்
வாமம்வைத்துப்பூசைபண்ண விநதமார்க்கம்
• வந்தவர்க்குச்சத்திசிறு பிள்ளைவாலை
சோமநதியமிர்தமுண்ண வாவாவென்பாள்
சுகமுனக்குப்பரமசுக மருள்செய்வாளே. 11

செய்குவாய்பூசையது செய்யும்போது
செய்குறிகள் தவறுமல்நடக்கவேணும்

உப்நுவர்ப்பெண்ணரவம்கடியாவண்ணம்
ஊமையென்றநதிதீயை யதிகங்கொண்டால்
பைகுவாரரவுவிஷம் புசிங்கிப்போகும்
பஙகமுனைகளைலபடா அங்கமீதில
ஐந்துமாயுள்ளடங்கிப் பேச்சைவிட்டு
அழைத்திடவேயஞ்சுமது கொஞ்சங்காணே. 12

காணாதகாட்சியெல்லாங் கண்ணிற்காணும்
கலங்காதேமெய்மயக்க மெத்தவாகும்
பூணாதபணிபூண்டு சிறுபெண்ணாகப்
போதமெனும்பொருள்பறிக்கவருவாள்கண்டாய்
வாணாளைமடக்கியிவள் ரூபங்கொண்டு
மயங்காதேமவுனத்தில் நில்லுநில்லு
கோணாதமுக்கோணக் குறியைப்பாரு
கூசாதேகண்கூசங் கூசங்காணே. 13

கூச்சமற்றுப்பார்க்கையிலே யிருள்போல்மூடுங்
கொள்ளிகொண்டுகொளுத்தியதைவெளிச்சம் [போடு
வாய்சமர்த்துபேசாதே மவுனத்தூணு
வாவாவென்றேநீயும் வருந்திக்கூவ
சூட்சமதுவிருந்தவிடஞ் சொல்லலாமோ
சொல்லுதற்குவாய்விட்டுச் சொல்லலாமோ
தாய்சமர்த்துப்பாராதே தாயைப்போற்று
சற்குருபோலுற்பனத்தைத் தாய்சொல்வாளே 14

சொல்வதற்குஇவளையல்லால் சுகம்வேறுண்டோ
சூட்சமெல்லாமிவளைவிடச் சூட்சமுண்டோ
நல்லவர்க்குநடுவில்விளை யாடும்வல்லி
நாதவிந்துஓங்கார நிலையுங்காட்டி
வல்லவர்க்கும்வல்லவளும் நானேயென்பாள்
வரமவர்க்குவேணதெல்லாம் வழங்கும்ரூபி

புல்லருக்கு ஆயுசும் பல்லையாரும்
புத்திகெட்டலோபிகட்குப் புகலொண்ணாதே. 15

புகலுவார்வேதமெல்லாம் எங்கதென்று
பொய்பேசிசாஸ்திரங்கள் மிகவுங்கற்று
அகலுவார்பெண்ணாசை விட்டோமென்று
அறிவுகெட்டுஊர்தோறுஞ் சுற்றிச்சுற்றி
சகலமுமேவக்கவர்போல் வேடம்பூண்டு
சடைமுடியுங்காஷாயந் தன்னைச்சாற்றி
இகலுமனமடங்காமல் நினைவுவேறாய்
எண்ணமெல்லாம்பெண்ணாசைபூசைதானே. 16

பூசையதுசெய்வமென்று கூட்டங்கூடி
புத்திகெட்டுக்கைம்முறையின் போக்கைவிட்டு
* பாசையதுமிகப்பேசிப் பாட்டும்பாடிப்
படிப்பார்கள்மந்திரத்தின் பயனைக்காணார்
ஆசைபெண்ணாசை மயக்கத்தாலே
யங்கிருந்தவாமத்தைப் பங்குபோட்டுப்
பேசையிலேகனம்வேறாய் நினைப்பான்பாவி
புரட்டுருட்டாய்நினைவு தப்பிப்பேசுவானே. 17

பேச்சென்றால்வாய்ச்சமர்த்தாய்ப் பேசிபேசி
பின்னுமுன்னும்பாராமல் மதமேமீறி
நீச்சென்றும்நிலைப்பென்று மேதுங்காணார்
நிர்மூடர்யனேகவித ஜாலங்கற்று
ஆச்சென்றாலதனாலே வருவதேது
ஆத்தாளைப்பூசித்தோ னவனேசித்தன்
மூச்சென்னசெய்யுமடா நாகிற்றள்ளும்
மோசமதுபோகாதே மூக்கால்பாரே. 18

மூக்காலும்பொருந்துமென்று சொன்னபோதே
மோசமில்லைசூட்சமது மொழிந்துகூடும்

---

*. பாசை-பாஷையெனக்கொள்க.

தக்காமற்போனபே ரனேகருண்டு
சமர்த்தறிந்தாலவன்யாமி யவனேசித்தன்
எக்காலும்நடந்திருநீ காலுமுன்னி
யிருந்தடங்கியுள்ளிருந்து வெளியிற்போன
அக்காலேகாணும லலேந்தேயோடி
அழிந்துகெட்டுப்போனவர்க ளறிந்துகொள்ளே.

அறிந்தகுறியடையாளங் காணவேணு
மக்குறியிற்சொக்கிமனந்தேறவேணும்
மறிந்தவன்போலடங்கிமன மிறக்கவேணும்
மலகையதுவழிபாதை யறியவேணும்
மறைந்தவரைநிறைந்தவரை நீர்தான்காண
மயக்கத்தைதக்கண்டுனையு மதிக்கவேணும்
நிறைந்தமதிகுறைந்தவகை யறியவேணும்
நிச்சயத்தையறிவார்க்கு முத்திதானே. 20

முத்திதருமென்றுமனம் புத்தியற்று
மோசமதுபோகாதே பாசங்கையில்
சித்தமதில்சந்திரனை நிறுத்திக்கொண்டு
செந்தீயிலுன் தீயை நடுவில்வாங்கி
சத்தியுடன் ஆதியந்த மனதில்வைத்துச்
சொல்லாதமந்திரத்தின் தீயைமூட்டி
நித்தியமலரர்ச்சனைசெய் பாதம்போற்றி
நீயுமதிமதியுமதி லதிகமாமே. 21

மதிபெருகுங்கெதிபெருகும் வாதம்வாதம்
வருந்தாதேயந்தமுறை யாகாதப்பா
நிதிபெருகுமிவள்குறியே வாதமாகும்
நிர்மூடமறியாமல் வகாரம்பேசி
நதிகள்தனையறியாமல் சலத்தில்மூழ்கி
கானேநானென்றுவாய் மதங்கள்பேசி.

உரியபொருளுள்ளதெல்லாஞ் சுட்டுசுட்டு
உட்பொருளைப்பாராம லழிந்திட்டாரே. 22

இட்டகுறிகாதவிந்து ரூபங்காண
யியலறியாச்சண்டாளர் சுட்டுமொய்வார்
விட்டகுறைவந்ததென்றால் தானேயெய்தும்
விதியில்லார்க்கெத்தனைதான் வருந்தினாலும்
பட்டுமனமாய்வதல்லால் வேறொன்றில்லை
பதியில்லார்க்குரைத்துமனம் பாழ்போக்காதே
திட்டமாய்பாணம்வைத்துத் தேவிபூசை
சீர்பெற்றார்பதினெட்டுச் சித்தர்தாமே. 23

எட்டிரண்டுமொன்றுமது வாலையென்பா
ரிதுதானேபரிதிமதி சுழினையென்பார்
ஒட்டிமுறிந்தெழுந்ததுவே முக்கோணமென்பார்
உதித்தெழுந்தமூன்றெழுத்தை யறியாரையோ
கொட்டுமொருதேனுருவாய் நிற்கும்பாரு
கூட்டமிட்டுப்பாராதே குறிகள்தோணும்
சுட்டசுடுகாடுமது வெளியுமாகும்
சொல்லுதற்குவாய்விளங்காச் சூட்சந்தானே. 24

சூட்சமிவள்வாசமது நிலைத்தவீடு
சொல்லுதற்குளங்குமாய் நிறைந்தவீடு
தேசமதில்போய்விளங்கு மிந்தவீடு
சித்தாந்தசித்தரவர் தேடும்வீடு
ஓசைமணிப்பூரமதி லுதிக்கும்வீடு
ஓகோகோவதிசயங்க ளுள்ளவீடு
ஆசுகவிமதுரமது பொழியும்வீடு
அவனவளுங்கூடிவிளையாடும்வீடே. 25

வீடுமதுதலைவாச லதுமேல்வாசல்
வெளியானசுழிக்கதவு அடைக்கும்வாசல்

தேடுகிறமூவருமே வணங்கும்வாசல்
திறமானபன்னிருவர் காக்கும்வாசல்
ஆடுகிறபுலியாகி நின்றவாசல்
அரகராசிவசிவா வாசிவாசல்
கூடுகிறமுக்கோணப் பரங்களாகிக்
குறுகுமதி பெருகுமதி கூறெண்ணாதே. 26

ஒன்றாகி இரண்டாகி விளைவுமாகி
உத்தமியாளுட்கருத்தை யறியப்போமோ
தின்னுதவிடங்கொடுத்துத் தின்னச்சொன்னாள்
செத்தசவம்போலிருந்து செபிக்கச்சொன்னாள்
பண்ணுதபுணங்கோடிப் பண்ணிவைத்தாள்
பார்த்திருந்துகளுத்தருக்கப் பார்த்தாள்பாவி
எண்ணுதுமெண்ணிமனம் ஏங்கினாலும்
எனக்கபயமேதெனவே யெழுந்திட்டானே. 27

எழுந்திட்டதிவள்பார்த்துத் தொடர்ந்துகூடி
என்னையுமேயிழுத்துமடி பிடித்துக்கொண்டு
கொழுந்துவிட்டுவளர்ந்தெரியு மனலைமூட்டிக்
குடிகேடிசத்துருவைப்போல் கூச்சலிட்டாள்
அழுதேதனேமுந்தியினி யந்தவீரி
லாகாரதுணையெனக்கு யாருமில்லை
எழுந்திட்டாரெல்லோரு மோடிப்போனார்
என்னசெய்வேன்தனித்திருந்து ஏங்கினேனே. 28

ஏங்கினேன்வீடழிந்தேன் வீடுமற்றேன்
என்னைத்தான்கண்டவர்கள் சீச்சியென்ன
தூங்கினேன்காலறிந்து மடக்கமாட்டேன்
துணையெனக்குயாருமில்லை சூழ்ச்சியாக
வாங்கினேன்காலறிந்து மடக்கவேண்டும்
வரையானவெனக்கொருத்தி யுறுதிச்சொன்னாள்

தேங்கினேன்மின்னுமவள் பின்னுமாக
திடமெனக்குச்சொன்னதிந்த தெளிவுதானே. 29

தெளிவதற்குச்சூட்சமிது தெளிவாய்ப்பாரு
சிவனிருந்துவிளையாடுந் தெருவைப்பாரு
மொழிவதற்கிந்நூலைவிட வேறொன்றில்லை
முன்னாதியந்தமொடு நடுவுஞ்சொன்னோம்
சுழிபதற்குள்சுழியிருந்த சூட்சம்சொன்னோம்
சொல்லாதமவுனமுதற் கருவுஞ்சொன்னோம்
ஒளிபிறக்குமுறுதியிந்த வுறுதிசொன்னோம்
உற்பனமாய்ப்பார்த்தவர்கள் சித்தர்தானே. 30

கருவூரார் பூஜாவிதி

முற்றிற்று.

உ

சிவமயம்.

சங்கரனார் திருவுள்மகிழ்ந்து
உமாமகேஸ்வரிக்கு அருளிச்செய்த

ஞானசார நூல் சாஸ்திரம்.

மூலமும்-உரையும்.

காப்பு.

நேரிசை வெண்பா.

வாழ்த்துவாருள்ளம் வருவிப்பாரெஞ்சமுன்பிற்
சூழ்த்துவாரென்மேற் றுதிசெய்வார்-தாழ்த்த
பரநூலை முற்றுமறப் பாலித்தருள்கூட்டஞ்
சாரநூலையோதமுன்றோன் றாள்.

நாமகள் துதி.

உமைமாதுக்கீச னுரைத்தசாரநூலில்
அமையாப்பொருளு மமையு-மெமையாளும்
புவிமடந்தைபூமடந்தை போதமெய்ஞ்ஞானக்
கவிமடந்தையிக்கலைக்கோர் காப்பு.

அவையடக்கம்.

செய்யமனந்துணிந்து சீர்முன்னோர்சொற்சாரநூ
லையமறவோத வருள்புரியைங்-கையனென்றன்
முன்னிற்பானென்றுமொழிந்தேன்போற் கற்றுணர்ந்
மன்னிப்பாரென்று மனு. [தோர்

இந்நூற்பயன்.

ஆசிரியவிருத்தம்.

சந்திரபா னிலக்கணமுங் கோளு நாளுந்
தயங்கிப்பக் கங்கரண மியோகம்வாரம்

வந்துசொல்லுஞ் சோதிடத்தை யறியாதார்கண்
மனநினைவா யறியும்வகை யுளதோவென்ன
விந்தவுட லுயிர்நிலையை யறியாதாருக்
கியாமறிய வியம்புவகை யாதோவென்னிற்
பைந்தொடியே யான்சொலுஞ் * சரநூறன்னைப்
பரிந்துநீ பாரென்று பரமன்சொல்வான்.

இ-ள். சந்திரன்-சூரியன்-கோள்-நாள்-பக்ஷம்-கரணம்-யோகம்-வாரம்இவைமுதலாகச்சொல்லப்பட்ட சோதிடவிலக்கணத்தையறியாதவர்கள், தத்தம்மனநினைவினைலை யறிந்துகொள்ளுமார்க்கம் உள்ளதோ உண்டாயின் அருளிச் செய்யவேண்டுமென்று உமையவள்கேட்க, சங்கரனுர்சொல்லுகிறார், அழகியவளையல்கள் பூண்ட கைகளையுடைய பெண்ணே யாஞ் சொல்லுஞ் சரநூலாகிய விந்தச் சாஸ்திரத்தைப்பரிவுடன்பார்ப்பாயாக, பார்க்கில்நன்றுணர்வையென்று சொல்லுகிறார். எ-று. 1

சொல்லரு நெடுங்கயிற்றின் வருணமான
சூத்திரனுர் துவக்கெனுமா சீர்மந்தன்னி
னல்லாரு மூக்கணுங் கயிறுகோத்து
நலந்தீங்காய் வருகின்ற நஞ்சுட்கொண்டு
பொல்லாத காலப்பாம் புண்டுமிழ்ந்து
பூதலத்திற் பிறந்திருந்து போவரேனு
மெல்லாரு மியாஞ்சொல்லுஞ் சரநூறன்னை
யிகழாதார் சுரர்முங்க ரிகழ்வோர்தாமே.

இ-ள். சொல்லப்பட்ட நாற்புரிகூடிய நீண்டகயிற்றைப்போல் பரம்பரையாய் விர்த்தியாகி வாநின்ற

* சரம்-என்பது,காற்று-மனம்-சீவன்-சுவாசம்-மூக்கு-பிராணன்-ஆவி-உயிர்-உயிர்ப்பு-இவை முதலாகச்சொல்லப்பட்டவைதான் என்றறிக.

பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திராதி வருணாசிரமம் பெற்ற இந்தமானிடதேகத்தில் இச்சரம்நாசிகையின் வழியாய் நின்று எருதுக்கு ஒரு மூக்கணாங்கயிறிருந்து ஆட்டுவிப்பதுபோல் நன்மைதீமையென்னு நஞ்சினை யூட்டுவிக்கும் அப்படிப்பட்ட நஞ்சினையூட்டக் கொண்டுகொடியகாலமென்னும் பாம்பானது உணவுமுமிழவுந் தாமுட்பட்டு இருவினைக்கிசைந்தவராய்ப் பிறந்துமிறந்து போவார்கள், ஆயினும்நான்சொல்லிவருஞ் சரநூலை யிகழாமல் குரு முகாந்திரத்தில் அறிந்து அனுபவித்து, அந்நெறியி னிற்பவர்கள் யாவரேனுமொருங்கே தேவராவார்கள்அப்படியறியமாட்டாதவர்கள் ஊமைகளுக்குச் சரியாவார்கள். 2

சரம்பார்க்க ஆசனவிதி கூறுகின்றார்.

மூங்கிற்பாய் மிடிகல்லு நோய்மண்டுக்க
முறுபலகை நன்மையிலை முடைந்தபுல்லு
நீக்கிவிடுங் கீர்த்திதழை மனநடுக்க
நிகரில்கலைத் தோல்ஞான நிறைபுலித்தோ
லோங்கியசெல்வம்வீடு முன்குகைப்பு
லொளிர்தூசு நன்மையுயர் படந்தானென்று
தூங்கிய தூக்கம்போக்கு நன்மையாகத்
துலங்கியவாதனத்திருந்துதோகைசொல்வாம்.

இ-ள். மூங்கிற்றடுக்கு ஆசனம்-வறுமை, கல்மண் ஆசனமில்லாமல் வெறுமணலில் (உளுக்கார்ந்துகொண்டால்) துக்கம், உடைந்த அல்லது அறுபட்ட பலகை மனையில்நன்மை கோரப்பாயல்கள் முதலிய புற்பாயல்கள் கீர்த்திநாசம், பச்சிலைதழை, மனநடுக்கம், மான்றோல், ஞானம் புலித்தோல்செல்வம், தர்பாசனம், மோக்ஷம்,வெள்ளைவஸ்திரம்,தீமையில்லை, சித்திராசனம் அல்லது இரத்த கம்பளம் நன்மை,

இவைகளில் நன்மையாக விளங்குப்படியான ஆதன த்திலிருந்து (சரம்பார்க்கவேண்டும்) மற்றுஞ்சொ ல்லுகிறேன் கேள் மயில்போலும் அழகியபெ ண்ணே, எ-று. 3

சரம்பார்க்கு மார்க்கங் கூறுகின்றார்.

சொல்லியவா தனங்கள்பல வவற்றுணன்றிற்
றுய்யபங்க யாதனமா யிருந்துதோன்று
மல்லலறத் தேகமன மாக்கியொட்டி
யானபந்த பிராணாயா மங்கள்பண்ணி
மெல்லையிலுந் தீயின்கீழா மெழுத்தைப்பற்றி
யெழுபத்தீ ராயிரநா டியிலீரைந்து
நல்லனவா யதின்மூன்று நாடியோடு
நலந்தரும்பே ரவ்வெழுத்தை நவிலப்பாரே.

இ-ள். முன்கூறப்பட்ட வாதனங்கள் பலவுண்டு அவைகளில் தீங்கில்லாத ஒரு ஆதனத்திற்பதுமாதன மென்னப்பட்ட அங்கமாயிருந்து (பார்க்கும்போது) மனதுக்கு மிகவும் நினைவினால் அல்லல்வரும், அப் படிவரும் அல்லல்களை நீக்கி வேறு நினைவில்லாமல் ஒரே மனமாக்கி ஒட்டியாணபந்தமென்று சொல்லும் பிராணாயாமஞ்செய்து அதன்மேற்பார்க்கில் எல்லை யில்லாத திருவருளுக்கிடமாகியஉந்தியின்கீழிருக்கு மெழுத்தைத்தொடங்கி எழுபத்திராயிரம் நாடிகள் இந்தத் தேகத்திலுண்டானவைதெரியும், அந்நாடிக ளுள்பத்துநாடிகள் நல்லனவாய் அப்பத்துநாடிகளுள் மூன்றுநாடி நல்லன அம் மூன்றின் வழியாய்த்தான் சரம் எளிதிற் காணவோடும். இவையறியப் பெரிதா கிய நன்கினை யளிக்கும் யவ்வெழுத்தைப்பார் மான் போலுங் கண்களையுடைய பெண்ணே, எ-று. 4

அன்றியு மிதன்விவரத்துக்கு மற்றும் வருவனை வற்றுள் 35-வது, கவியைப்பார்க்க.

நவ்விவிழிபா யிதய கமலந் தன்னி
னன்றாக வசுவையுயிர் நடக்கும்போதுஞ்
செவ்வையுடன் மீளும்போ திருபத்தோரா
யிரத்தறுநூற் றச்செபிக்கி லொருநாளாகு
மவ்வியமூலா தாரஞ் சுவாதிட்டான
மணிபூரக மநாகதம் விசுத்தியாக்ஞை
பவ்வமற யாஞ்சொல்லுஞ் சரநூறன்னைப்
பார்ப்பவரே பராபரத்தின் பயன்காப்பாரே.

இ-ள். மான்போலும் விழிகளையுடையபெண்ணே இருதயகமலத்தின்வழி யூடுருவிக்கொண்டியாதொரு தீங்குமில்லாமல் அசுவை யுயிரென்னப்பட்ட இச் சரம் நாசிகையின்வழியாய் போகும்போது [4-அங் குலங்கள் போக(மற்றவை செவ்வையாய்த் திரும்பி வரும்போதும் (கணித்துப்பார்க்கில்)இருபத்தோரா யிரத்தறுநூறதாய் நடக்கும், அது 60-நாழிகை. சேர்ந்த ஒருநாளாகும் அப்பரி செல்லாம் மூலா தாரம் சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம் விசுத்தி ஆக்ஞை என்று சொல்லப்பட்ட பாநிலை யின் பரிசுதான் (அங்கிருந்து உண்டாயினவெனுங் கருத்து) இதனைக்காணும் வழியாதெனில், யான் சொல்லுஞ் சரநூலை மயக்கமறப் பார்ப்பதுதான் அப்படிப்பார்ப்பவர் பரமாகவும் அபரமாகவும விளங்குகின்ற ஒரு வஸ்துவினாலுண்டாகும் பிரயோ சனத்தை யறிந்துகொள்வார், எ-று. 5

சந்திரர் சூரியர் சுழிமுனை இலக்கணமும்
மற்றும யாத்திரைபலனுங்
கூறுகின்றார்.

பார்க்கிலிடையிடமதுவே திங்களாகும்
பகலவனும் பின்கலையே வலமதாகும்
மேற்கவுரை சுழிமுனைதா னடுவாமங்கி
யிடையான சந்திரனே யமுதமாகுந்
தீர்க்கமுடன் பொருள் விளைக்குங் கரியவண்ணந்
திரராசி யாமவனே செப்புங்காலை
வேற்றடங்கண் மடமாதே விரும்பிக்கேளாய்
விரிவாகவிவையனைத்தும விளங்கச்சொல்வாம்.

இ-ள். ஆராய்ந்து பார்க்கில் இடகலையென்பதுவே யிடதுபக்கம் நாசியில்வருஞ் சுவாசம அதுவேசந்திர கலை யென்னப்படும், பின்கலையென்பதுவே வலது பக்கம் நாசியில்வருஞ் சுவாசம் சூரியகலை யென்னப் படும், யாவருக்குஞ்சொல்லுங்காலத்தில் சுழிமு னையென்பது நடுவாகும், அக்கினியென்னப்படும, பின்னும் அந்தச் சந்திரனை சொல்லுமிடத்தில் அமு தம் தீர்க்கமாக எப்பொருள்களையுமுண்டாக்குவன நிறங்கருத்த தன் ராசியில் திரராசி, வேல்போலுங் கண்ணிணையுடைய பெண்ணே மற்றுமுண்டாகிய வனைத்தும், பரிஷ்காரமாகச்சொல்ல அதனை நீ விரு ப்பமுறுக் கேட்பாயாக எ-று. ௰

அறியும் அச்சுழிமுனை இரண்டு நாசிகையிலும் வாவியோடும் அதற்கும் பூரணமென்றும் பெயர்.

இதுவுமது.

சொல்லுங்காற் கதிரவனுஞ் சுகவியாபி
சுத்தநிறம் வெண்மைசர ராசியாகும்

கொல்லும்மெலாக் கருமங்கள் கொடியவன்னி
　　கூறுங்கா னிறஞ்சிவப்பா முபயராசி
நல்லவிடை தெரிந்துணர்கிற் றிங்கள்பெண்ணாம்
　　நலம்பயில்பின் கலைகதிரோன் புருஷனாகுஞ்
செல்லுமிரு பதின்காத வழிக்கப்பாலாந்
　　திசைக்கிடமாய்ச் செல்வலமூர் சேரக்கேளே.

இ-ள். சூரியனுடைய குணகுறிகளைச் சொல்லு மிடத்தில் அந்தச் சூரியன் உலகத்தில் வியாபகமுற்ற வன், பரிசுத்தமான வெண்மை நிறத்தையுடையவன் ராசியில் சரராசி, சுழிமுனை யென்னும் அக்கினியை சொல்லவென்றால் சகல கருமங்களையுமழிக்கும் பொ ல்லாது நிறம் அக்கினிச் சிவப்புராசியில் மேற்சொல் லிய விரண்டுராசியுங் கூடியது இன்னமும் நன்றாய்த் தெரிந்து பார்க்கில் இடைகலையென்று சொல்லப் பட்ட அந்தச் சூரியன் ஆண்பால் (சுழிமுனையென் னப்பட்ட அந்த உபராசியானது அஃறிணைப்பால் அல்லது அலியாகும்) அன்றியும் இருபதின்காதவழி க்கு மேற்பட்ட தூலவான தேசத்துக்குப் போகும் போது சந்திரகலைபோடும்போது புறப்பட்டுச் சூரிய கலை யோடும்போது அத்தேசத்தில்போய்சேரவேண் டியது இன்னமுஞ் சொல்லுகிறேன்கேள். எ-று. 7

சந்திரனிலக்கணம் அதிலும் அச்சந்திரன்
நடக்கும்போது இன்னவை செய்யலா
மென்று கூறுகின்றார்.

கேட்கிவிடந்து தாடை யணிபொன்பூணற்
　　கிளர்க்குணமடிமைகொளற் கீழ்நீர்காண்டல்

வாழ்க்கைபனை யெடுத்தல்குடி புகுதல்விற்றன்
மன்னவரைக்காணலுண்மை மருவல்சாந்தி
வேட்கைதெய்வப்பதிட்டைசுரம்வெறுப்புத்தீர்த்தல்
வித்தைபெறற் றினம்புதைத்தன் மிகவுமீத
ளுட்கமல மலர்முகத்தாய் நரகந்தீர்த்த
னன்றேயா மிவையெல்லா நயந்துபாரே.

இ-ள். சந்திரகலை இடது நாசிகையில் நடக்கும் பொழுது எந்தெந்த காரியங்கள் செய்யலாமென்று வினவிக்கேட்கில் அந்தஇடகலையில் ஒருவரைக் தூத னுப்புதல், தூதுதானேபோகுதல், புதியவஸ்திரந்தரி த்தல், ஆபரணதிகள் பூண்டுகொள்ளல், விவாகஞ் செய்துகொள்ளுதல், தாலிகட்டல் ஒருவனை யடிமை யாகப் பெற்றுக்கொள்ளல், கிணறு முதலிய குளம் ஏரிவெட்டுதல், வாழும்படியான வீடுமனைவாங்குதல் ஒருவீட்டிற்குக் குடிபோகுதல், ஒருவஸ்துவை விற் குதல், நூதனமாய் அரசரைக்காணல், தனக்கு ஒரு படி மேற்பட்டவராயினுஞ் சரிதான் உண்மையாகிய வஸ்துவைச்சார்தல், சாந்திகழித்தல், இஷ்டதெய் வபிரதிஷ்டை செய்தல், சுரந்தீர்த்தல், வெப்புத்தீர் த்தல் ஒருவனைச் சமாதானஞ்செய்தல், கல்விகேட்டு க்கொள்ளுதல், தனந்தானிய முதலிய ஆஸ்திசேர்த் துவைத்தல், தியாகங்கொடுத்தல், பாபவிமோசனஞ் செய்தல், இவையெல்லாம் நன்மையாகும் மற்றக்கா ரியங்கள் மத்திபமென்றறிக, அன்று மலர்ந்த தாம ரைப் பூப்போலு முகத்தினையுடைய பெண்ணே, எ-று. 8

இன்னமு மிதிற்செயலறியவென்றால் 48-ங் கவி யையும் 47-ங்கவியையும் பார்க்க.

சூரியனிலக்கணம் அதிலும் சூரியனடக்கும்போது இன்னவை செய்வா மென்று கூறுகின்றார்.

பார்க்கில்வல துபதேசம் வித்தைசேவை
படையோட்டல் பயிர்கெட்டுக்களவுசூது
போக்கவொரு வழக்குரைத்தல் கரிபரிதேரூர்தல்
பிறங்குமெழுத் திடுதல்சங் கீதம்பாடல்
வார்த்தைபகை பக்கங்கோள் பிசாசுதீர்த்தன்
மந்திரஞ்சா தித்தன்மருந் துணவுறங்கற்
கோத்தபுன லாடல்கொல் விடங்கடீர்த்தல்
கொடும்பிணித்தம்பனயோகங்குறிக்குங்காலே

இ-ள். வலதுநாசிகையில் சரமோடும்போது எவை செய்யத்தக்கவையென்று விசாரித்துப்பார்க்கும்போது குருவுபதேசம்பெறல், தாமொருவனுக்குபதேசம் பண்ணல், வித்தைபாராயணஞ்செய்தல்,வித்தைஒருவருக்கோதல், ஒருவனைவணங்கல், எதிரியின் படைதுரத்தல், பயிர்விளைத்தல்,வியாபாரஞ்செய்தல்திருடல், சூதமாடல், ஒருவனுக்தீர்த்தரிகரிதாகியவழக்குபேசல்யானை-குதிரை-தேர்-இவைகளின்மேலறிசவாரிபோதல் விளங்கிவருமபடியான எழுத்தெழுதல்சங்கீதம்பாடல்பேசத்தொடங்கல்பகைமையுண்டாக்கல் ஒருவனைப் பங்கம்பண்ணல்கோள்சொல்லுதல்பசாசு ஓடுதல் மந்திரநிஷ்டை சாதித்தல் மருந்து சாப்பிடுதல் போசனம் புசித்தல் நித்திரை செய்தல் ஸ்நானஞ்செய்தல் கொல்லுதற்கேதுவாகிய விஷங்களை நிவர்த்திசெய்தல் கொடிய வியாதியைத்தீர்த்தல்தம்பன போகசாதனஞ்செய்தல் இவைகளையெல்லாங் குறித்தனுபவித்துப்பார்க்கில் நன்மையாகும். எ-று.

மற்றச் சூரியசந்திரர் இருவருக்கும் விபரம் 49-ங் கவியையும் 48-ங் கவியையும் பார்க்க

சுழிமுனை பூரணசூனியபலன் கூறுகின்றார்.

காலிரண்டுமொத்தக் காற்சமாதிநன்றாங்
கருதியதொன்றாகாது காணுமெனிற்காணா
சீலமிருந்தவமுடையாய் நன்மையில்லை
தீயானவாங்கருமஞ் சேரக்கூடும்
சாலநிறைபூரணத்தில் வழக்குவாது
தர்க்கபோரங்கமன்னர் தம்மைக்காண்டன்
சாலமறுஞ்சூனியத்தி னிறுத்தில்வெல்வர்
முயல்வதெல்லாங் கழல்விழியால் முயலலாமே.

இ-ள். சுழிமுனையா யிரண்டுசரமும் ஒத்தோடுகை யில் என்னவை செய்யலாமென்றால் சமாதியோகஞ் செய்தல் (கருவிகரணங்களோயச் சும்மாவிருக்குதல்) நன்மை, நினைத்தகாரியம் ஒன்றேனுமாகாது அப் போது ஒருவன்வந்து இப்பொருளகப்படுமா வென் றால் அது அகப்படாது சீலம்பொருந்திய தவமுடை ய பெண்ணே இந்தச்சுழிமுனை நடக்கும்போது நன் மையேகிடையாது கெட்டகாரியங்க ளெல்லாம்பலிக் கும் இது இங்ஙனம் நிற்க (சரம்) மூக்கில் எந்தப்பு ழையில் ஓடுகின்றதோ அந்தப்பக்கம்பூரணமென்றும் சரம் ஓடாதபக்கம் சூனியமென்றும் பேர், இப்படி யான குறைவில்லாத பூரணபக்கத்தில்நின்றுவழக்கு பேசுகிறவர்களை தர்க்கம்பண்ணுகிறவர்களை சண்டை பண்ணுகிறவர்களை ஒரு பொய்க்காரனும் அரசனை (அல்லது) தமக்கு மேற்பட்டவனை இவ்வாறு கூரப் பட்டவர்களை இதனால் காணலாமென்று ஒரு சாட்சி யும் இல்லாதபடி சரமோடாத பக்கமாகியசூனியபக் கத்தில் நிறுத்தினால் பூரணபக்கத்தி லிருக்கிறவன்

வெல்வான் அல்லாமலும் ஒருவன் இப்படிப்பட்டவர்களைத் தனக்குச் சாரிமோடாக சூனியபக்கத்தில் நிறுத்தினால் அவன் பேச்சை மேலாய் வெல்லுவன் எவ்வெவற்றை எவ்வெவ்வாறு நாட்டமுற்றறிய வேண்டுமோ அவ்வவ்வாறே யறியலாம் சேல்மீன்போலுங் கண்களையுடைய பெண்ணே, அ-று. 10

யாத்திரை பிரயாணம் போகும்போது சரம் இசைவு பிசகாயிருந்தால் அதற்கு உபசாந்தங் கூறுகின்றார்.

முயலுங்காமற்பூரணத்தி லிடத்திலிரண்டடிபோ
 முன்வலமென்மூன்றடிபோ மொழியும்யாத்திரை
கயலடருங்கண்மடவாய் கருமமதுமுற்றுங் [க்கு
 கருதுவடக்குக்கிழக்கு மிடத்தேபோகி
லியலுமொருபகையுண்டா மீளமாட்டா
 ரிசைந்தவலந் தெற்குமேற்கேகவென்னிற்
புயடலரும்புனல்புகுந்து மரணமாவார்
 புணர்முலைக்கச் சிறுமிடையாம் போற்றிக்காணே.

இ-ள். பின் 19-ங் கவியில் சொல்லியபடி மேற்றிசையும் தென்றிசையும் சந்திரன்றிசை வடக்கு கிழக்கு சூரியன்றிசை, இது இங்ஙனம் நிற்க சொல்லப்பட்ட யாத்திரைபோக நாடியவன் சந்திரனில் சந்திரன் திசையேபோகவேண்டியது, அல்லாமலும்முன் ஏழாங்கவியிற் சொல்லியபடி இருபதின்காத வழிக்கப்புறமான தினங்களுள்ளும் சந்திரனில் புறப்பட்டுச் சூரியனில் ஊர்போய்ச் சேரவேண்டியது அப்படி சேரத் தருணபேதமாய்ச்சரமுமிசைவு பிசகாய்வாரியோடினால் அதற்கு (உபசாந்தம் யாதெனில்) சூரிய

கலையிற் போகவேண்டிய திக்கின்பாத்திரைக்குச்சந்திரகலையாயிருந்தால், அந்தச் சந்திரன் சுவாசத்தையேற வுள்ளேயிழுத்து பூரணமாக்கி இந்தக்காலையே இரண்டுதரமுன்னிட்டுவைத்து பின்பு சுதாவாய் நடந்து வழியில் கொஞ்சதூரம்நிற்காமல் போகவேண்டியது இது சாந்தி சந்திரன் மலன் கெட்டுப்போகும் தீமையில்லை சந்திரன் கலையிற்போகவேண்டியதிசையின் யாத்திரைக்குச் சூரியகலையாயிருந்தால்சூரியன் சுவாசத்தை ஏற வுள்ளேயிழுத்து அக்காலையே மூன்றடி முன்னிட்டுவைத்துப் பின்பு சுதாவாய் நடந்து வழியிலே கொஞ்சதூரம் நிற்காமல்போகவேண்டியது, (இது அதற்குச்சாந்தி) சூரியன் பலன் கெட்டுப்போகும் தீமையில்லை சேல்போலுங் கண்களையுடைய பெண்ணே போகிறகாரியம் ஜெயமாகும், இப்படியல்லாமல் வடக்குதிசையும் கிழக்குதிசையும் (யாத்திரை) சந்திரன் நடக்கும்போது போனால்போகிறவிடத்தில் ஒருவனுக்கொருவன் விரோதப்பட்டுப் போவான், திரும்பமாட்டான், மேற்குத்திசையும் தெற்குத்திசையும் சூரியகலை பாயும்போது யாத்திரைபோனால் சலத்தினால் அல்லது மழையினால்இறந்துபோவார்கள் கச்சிறுகி நெருங்கிய தனங்களையும் இப்போது தானற்றுப்போவதுபோற் றோற்றுகின்ற இடையினையுமுடைய பெண்ணே விசுவாசித்துப்பார், எ-று. 11

ஒருவனுக்கு நன்மைதீமை சொல்லு
மார்க்கங் கூறுகின்றார்.

காணவொருகருமத்தைக் குறித்துவந்தோன்
கருதிமுன்னுமிடமு மேலுமிந்து ;

பேணுவல்முங்கீழும் பின்னும்வெய்யோன்
பேசியசொல் லெழுத்திரட்டைசோடானுகு
மாணுமெழுத்தொற்றையேற் கதிரோனுகு
மதிக்குமவன்பூரணத்தில் வந்துகேட்கிற்
பூணவுரைத்தனவெல்லா நன்றேயாகும்
பொல்லாதுசூனியத்திற் புகலுவோர்க்கே.

இ-ள். நாம் விழையுங்காரியம் நன்றோதீதோ கண்டறிவோமென்று வந்தவன்முன் 10-ங் கவியிற் சொல்லிபடி சூரியகலை நடக்கும்போது, அவன் அப்பூரண பக்கமாகவே யிருந்தானாகில் அவன்பொருந்தச் சொன்ன காரியங்களெல்லாம் அவனுக்குச் சித்திக்கும் அப்படியில்லாமல் வலதுபக்கத்தில் நின்றாலும் சரம்பார்க்கிறவன் மேலிருக்கவந்தவன் கீழிருந்து கேட்டாலும், நேர்நேரே பின்னிருந்து கேட்டாலும் அச் சூரியகலைக்குடையபலிதமேசொல்க, சந்திரகலை நடக்கும்போது அவன் அப்பூரண பாகமாகவே யிருந்து வினவினானாகில் அவன்சொன்ன காரியங்களெல்லாம் அவனுக்குப் பலிக்கும், அப்படியில்லாமல் இடதுபக்கத்தில் நின்றாலும், நேர்நேரே முன்னே நின்றாலும், மேலிடத்திருந்தாலும், அச்சந்திர கலைக்குடையகுணமேசொல்க, இந்தவிரசரம்ஓடாதசூனிய பக்கத்தில்நின்று கேட்பானாகில் அவன் கேட்டகாரியம்பொல்லாதாகும், பலிக்கமாட்டாதென்க அல்லாமலும் அவன்முதல் வாய்திறந்துசொன்னவார்த்தையின் எழுத்தை எண்ணிப்பார்த்து ஒற்றைப்பங்காகில் சூரியனுடையகுணஞ்சொல்க, மேல்கீழ்என்றிதுமெத்தைவீட்டையும், கிணறுமுதலிய பள்ளக்குழிகளைக் குறித்ததென்றறிக, இப்படியாக 5-6-வரையிற் சொல்லியிருக்கின்றதே இவையெல்லாமெக்கால

த்தி லொத்திருக்கவேண்டு மென்பதில்லை ஏதாவது ஒன்றைப்பார்த்துச் சொல்லலாமென்பது கருத்து, மற்றும் வருவனவற்றுற்கண்க இன்னமும்விரித்துச் சொல்லுமளவில் சந்திரனுடைய திசையும் பக்கமும் அது பூரணமானாலுஞ் சரிதான், கிஞ்சித்துமத்திபம், சூரியனுடைய திசையும் பக்கமும், அதுசூனியமானாலுஞ் சரிதான் இரணமாயினும் நன்மையுண்டேயல்லது வியர்த்தமாகாது இதற்குப் பிரமாணம் 6-ங்-கவியிலும் 7-ங்-கவியிலும் சந்திரனைத்திராசியென்றுஞ் செப்பி யிருப்பதனையறிக. இக்கவிகளில் உரி-பண்பு-அல்லது, அடைமொழிகளைச்சேரவிடாமல் பதவுரையாய்ச்சொல்லி வருவோமென்றால், விரிவுரைக்கு இசைவுபட்டு வருவதரிது ஆயினும் அவ்வுரிகளை மாத்திரம் சேர்த்துக்கொண்டு வருவோமென்றால் ஒரு ஸ்ரீயானவள் தன்புருஷனுக்கு அமளியிற் சம்போககாலத்தில் கால்கை படுதல்முதலிய கற்புவமை தவறுதல் கூடாதென்று அங்கு ௱வைகளையிருக்கக் காண்பிக்கப்புகுவாள், புகுந்தால் அச்சதிபதிகள் கொண்டகருத்து ஒருமித்துத்தடையின்றிநிறைவேறுமோ ஏறுதுபோல் இங்கும் விகாரமில்லாமல்உரைபுணர்வுற மாட்டாதாதலால் சமபவுச்சிதமாய் நேர்படுத்தவும் நிகராகவுமாயிற்று. (12)

இதுவுமது.

அதினும் முன் 10-கவியிற் சொல்லிய பூரண சூனியங்களின் விகற்பங் கூறுகின்றார்.

கேடொன்றேன்பறிகொடுத்தோ னஞ்சுதின்றோன்
கிடையினிற்சாவென்றோன் கிளர்நோய்கொண்
பாடொன்றுமில்லைசூ னியத்தேயாகிற் [டோன்
பலித்துவிடும்பூரணத்திற் பகர்ந்தவெல்லாம்

ஆடும்பையாவென்ன வல்குளாலே
யடுத்தொருவன் வந்ததிசை சோமனுகி
நீடுஞ்சொல்விரவியாய் நிற்குமாகில்
நினைத்தமொழியாகாது நின்றுபாரே.

இ-ள். ஒருவன் வந்து நானின்னதனுல் கெட்டுப் போனேனென்றாலும்நானின்னதைப்பறிகொடுத்தே னென்றாலும் விடங்கடித்தது அல்லது விடமுண்டே னென்றாலும், இதோ படுக்கையிற்றானே பிராணன் போகின்றது என்றாலும் அல்லது இவைமுதலாகச் சொல்லப்பட்ட அபாயகுணகுறிகள்எவையாயினுஞ் சரிதான் சரம்ஓடாத சூனியபக்கமாய்வந்துநின்றா கில் ஒருவருக்குமில்லை நிவர்த்தியாகிப் போகுமெ ன்க அப்படியல்லாமல் சரம் ஓடுகிற பக்கமாகிய பூர் ணபக்கத்தில் வந்துநின்று சொல்லுவானாகில் வந்த வன் எப்படி எப்படிச் சொன்னனே அப்படிஅப்படி யே லபித்துப்போகும், பறிபோன பொருள்வராது நஞ்சுமீளாது படுக்கையிலேயாளிதேறான்அன்றியும் சூனியத்தில் எவனாவது வந்துஎதையாவது சொன் னாகில் அது ஒரு காலத்தில் அபதமானவார்த்தை களாயுமாகும், பூரணத்தில் சொன்னசொல் உண் மையாயிருக்கும் இதல்லாமலும் ஆடும்பையாவெ ன்ன வல்குலையுடைய பெண்ணே வந்தவனுடைய திசையும் 12-ம்-கவியிற் சொல்லியபடி எழுத்தையும் எண்ணிப்பார்க்கில் அவன்திசை சந்திரன் கூறாகவும் முதற்சொன்னசொல் சூரியன் கூறாகவுமிருந்தால் மேற்சொல்லிய காரியங்களுக்குகிஞ்சித்துமத்திபமா யினும் முழுமோசமல்ல இன்னமுஞ்சொல்லுகிறேன் கேள்.

(13)

கருப்பக்குறி கூறுகின்றார்.

கேட்டவனுருயிர் தன்னி லேல்றிநிற்றற்
கிளர்கையிலுயிருளவை பிடித்துநிற்றல்
வாட்டமறவருவதலை யிடத்திற்பெண்ணாம்
வலமாகினின்றுரைத்தல் மைந்தனாகு
மீட்டமில்சூனியத்துரைக்கிற் கேடேயாகு
மிருஞ்சுழிலேமெனுரைக்கி லலியேயாகு
நாட்டுமொழிசூனியப்பூ ரணத்தேயாகி
நடுக்கமுடன்மகவுயிர்க்கக் கிடைக்குமன்றே.

இ-ள். ஒருவன் கர்ப்பத்தைக்குறித்துக் கேட்குங் காலத்தில் வந்தவன் ஒரு சீவன்பேரி லேறிக்கொண்டிருந்தானாலும் உயிருள்ள யாதொன்றை கைப்பிடித்துக் கொண்டிருந்தானாலும் ஒரு சீவனைத்தொட்டு நின்றானாலும், அவன் நின்றபக்கம் வலமாகில் அதிலும் பூரணமானற்றான் ஆண்பிள்ளை பிறக்குமென்க இடமாகில் பூரணமானற்றான் பெண்ணென்க. அப்படி பூரணபக்கமில்லாமல் சூனியபக்கமாயிருந்து எதனைத்தொட்டுநின்றாலும் சமமாநின்றாலும் வலமாக்கில் ஆண்தான் இடமாகில்பெண்தான் ஆனல்பிறக்கிறபிள்ளை சாகும் அப்போதுசரம்பார்க்கிறவனுக்கு சுழிமுனையாயிருந்தால் பிள்ளை ஆணுருவினதல்லாமலும் பெண்ணுருவினதல்லாமலும் அலியாகுமென்க இப்படியாகவந்தவன் முன்வலத்தில் நின்று அவன் வந்தகாரியத்தைச் சொல்லிக்கொண்டபின் இடத்தில் வந்துநிற்கில் தாய்வயிற்றிலிருக்கிற பிள்ளைவருத்தப்பட்டு பின்பிறக்குமென்க. எ-று. அன்றே அசை. (14)

கெற்பக்குறியும் போர்வெல்லுங் குறியுங் கூறுகின்றார்.

கிடைக்கின்றமைந்தனுஞ் சூனியத்திற்கேடாங்
கெடாதிருவர்போகுவது சூனியத்திலோது

வடுக்கின்றமொழிபின்முதற் சொன்னோருற்பயன்
மருவியபூரணத்தின்பின்பு சொன்னோருற்பயன்
நடக்கின்றசுழிமுனையில் வெட்டலர்கள் போற்ற
ணட்பாகும்வலத்தியங்க நடப்போன்வெல்வன்
இடத்தியங்கிலைந்தடிபோ யெதிர்த்தோன்வெல்வ
னிருஞ்சுழினை நிற்கிலிட ரில்லையாமே.

இ-ள். இதற்குமுன் கவியில் சூனியத்திற் கேட்ட பிள்ளைமரிக்குமென்றாலும், போர்வழக்கு வாதைக்குறித்து ஒருவன்வந்து இன்னவன் இன்னவன் எவன் வெல்வானென்றால், வந்தவன் சூனிய பக்ஷத்திலிருந்து சொன்னானாகில், முன்சொல்லப்பட்ட பெயரையுடையவன் தோற்பன், பூரணமாகில் பின்புசொல்லப்பட்டபெயரையுடையவன் தோற்பன் அப்போது சரம்பார்க்கிறவனுக்குச் சுழிமுனைநடந்தால் அவ்விருவருமொருமித்துப்போவார்கள். இதல்லாமலும்சண்டை வாதுவழக்கு நேர்கிறவனுக்கு அப்போது சூரியகலையாயிருந்தால் வெல்வன் சந்திரகலையாயிருக்கிறவன் தோற்பவன் சுழிமுனையாகில் ஒருமித்துப் போவார்கள். அப்படிசந்திரகலை நடக்கப்பெற்றவன்முன் 11-ங் கவியிற்சொல்லியபடி சரத்தை வுள்ளிழுத்துப் பூரணமாக்கி அச்சரம் நடக்கிறகாலையே முன்னிட்டு ஐந்தடிபோய்ப் பின்பு நேர்நடந்தால் வெல்வன். (15)

சரத்தின் ஸ்பரிசங் கூறுகின்றார்.

பார்க்குங்காலிடமெனும் வலமெனினு நோக்கும்
பஞ்சபூதத்திபக்கம் பகருங்காலை
சாற்றியதண்டுடன்சேரிற் பிரிதிவியாந்
தப்பாமலப்பினுக்குத் தாழையாமே

மேற்றிசையைநோக்கியெழு மங்கிவாயு
மெய்யுணர்ந்தோர்புறத்தோடு மேன்மைகுன்று
நீர்த்துரையாநாற்றிசையுஞ் சிதறிபோட
னெடுவானென்றுரைந்திடுநீ நிலத்துளோர்க்கே

இ-ள். இடைபிங்கலை சுழிமுனை என்று சொல்லப்பட்ட இம்மூன்று கலைகளையும் அவற்றின் பயன்களனுபவத்தையும் பரிக்ஷித்துப்பார்க்குங்காலத்தில்ஒத்துவரும் அந்தந்த நாடிகளுக்குள் பஞ்சபூதியங்கள் நடப்பதுண்டு, அவற்றைத் தோத்தரித் தனுபவிப்பதே அரியதாகும் யாதெனில், மூக்கிலிருந்துவருகிற சரம் அம்மூக்குத்தண்டைச் சார்ந்துவந்தால் பிரிதிவின் கூறென்றறிக, கீழ்நோக்கியோடில் அப்புவின் கூறென்றறிக, மேலாகப்பாய்ந்தால் தேயுவின் கூறென்றறிக, அத்தண்டிற்கு நேராகியமற்றிருபுறத்தைச் சார்ந்து வீசினல் வாயுவின் கூறென்றறிக, இப்படி நான்குபக்கங்களுள் ஒருபக்கமல்லாமல் அந்நான்கு பக்கமும் கலந்து நடந்தால் அது ஆகாயத்தின் கூறென்றறிந்து உலகத்துள்ளவர்களுக்குச் சொல்லென்றவாறு இப்பஞ்சபூதியம் இடத்திற்கும் வலத்திற்கும், ஒன்றுதான் எ-று. (16)

சரத்தின் வடிவமும் நிறமும் அச்சரத்தின் ரசக்கியமும் கூறுகின்றார்.

நிலப்பொன்மையிரதநெடுங் கோணநான்கா
நீளம்பன்னிருவிரலா நீர்தான்வெண்மை
இலகுபிறைவடிவுகண்டந் துவர்த்திருக்கு
மெட்டிரண்டுவிரலோடு மெரிதான்செம்மை
நலங்கொண்டமுக்கோண மழற்சிமேலாய்
நாலிரண்டுவிரலோடு நளிர்காணீலத்

துலங்புவியறுகோண மொரு மங்கத்திற்
றுப்பநால்விரலோ டுஞ் சொல்லுங்காலே.

இ-ள். பஞ்சபூதியசரம் நடப்பதை இன்னமெப்ப டிக் கண்டுதெளியலாமெனில்பிரிதிவு சரம பொன்மை அப்புச்சரம் வெண்மை, தேயுச்சரம் செம்மை வாயுச்சரம் கருமையாயிருக்கும் (அப்போது கண்டத்தில் எவ்வித உணர்ச்சியாகுமென்னில்) பிரிதிவுக்கு கண்டந்தித்திக்கும், அப்புவிற்கு துவர்க்கும் தேயுவுக்கு உவர்க்கும், அல்லது அழற்சியாயிருக்கும். வாயுவுக்கு புளிக்கும், (எவ்வடிவாயிருக்குமெனில்) பிரிதிவு எண்கோணம், அப்பு எட்டுநாள் பிறைபோலிருக்கும் தேயு முக்கோணம், வாயு அறுகோணம் அன்றியும் அத்து ஓடுகிற நீட்சியைச் சொல்லுங்கால் பிரிதிவு பன்னிரண்டங்குலம் அப்பு 16-அங்குலம் தேயு, 8-அங்குலம் வாயு 4-அங்குலமென்றறிக, இதல்லாமலும் இக்கவியில்இரதமென்று தனிபே,போட்டபடியினால், முதல் இரசமாகவே வைத்துக்கொள்ளலாயிற்று, உலகத்தவருக்குச்சொல்லுங்காலத்தில்இப்பேதங்களை யவர்களறிவது அரிபதென்று ஒரு பூதியத்திற்கு நான்கு குறிசொல்லியிருக்கின்றார்ஒன்றில்லாவிட்டாலும் மற்றொன்றிலாவது தெரியவேண்டியது எ-று. (17)

இதுவும்அதுவுடன் அப்பூதிய நடக்கையில்
செய்கருமங்களின் குணகுணங்
கூறுகின்றார்.

சொல்லிபவான்வடிவதுதான் வட்டமாகுந்
துப்பதொருவிரஞசி பெல்லாஞ்சுற்று
மொல்லைநிறம்படிகங்கைப் பிரதம்வாயு
மோடிவருர்பூதங்கட் குளதோசொல்ல

மல்லநிலநீர்க்கு பயனுன்செந்நெல்
மத்திபமாம்பகர்காலும் வானுந்தீதாம்
பல்வளையாய்சரம்பார்ப்போன் றன்னைப்போற்றி
பாசிலைவென்றோதியிட்டுப் பணிந்துபாரே.

இ-ள். ஆகாயபூதியம் நடக்கும்போதுநிறம்படிகம் இரசகம் சண்டன் கசக்கும், வடிவு-வட்டம்-நீட்சி ஓரங்குலம் இப்படியாக பூதியங்களின் குணகுணங்களைச் சொல்லவெனில் பிரிதிவுக்கும்-அப்புக்கும் உத்தமம், தேயு-மத்திபம், வாயுவும் ஆகாசமும் தீதாம் வயல்களைத்தரித்த கரத்தையுடைய பெண்ணே சரம் பார்த்து குறிசொல்லுகிறவனுக்குத்தாம்பூலமுதலானவைகள் கொடுத்துஉபசாராதிகள்செய்து பின்னேகள் இங்ஙனம் நிற்க, முன் 7-8-ங்கவியிற் சொல்லியபடி சூரியசந்திரகலையிற் செய்யவேண்டிய கருமங்களும் இக்கவியை யனுசரிக்கவேண்டியது 48-49-ங்-கவியைப்பார்க்கவேண்டியது அதிலும்சரம்பார்க்கிறவன் தாம்பூலந் தரித்துக்கொள்கையில் வினவிக் கேட்கிறவனுக்குஞ் சொல்லுகிறவனுக்கும் நன்கு ஒருவன் பேரைக்குறித்து வினவில் அவனுக்குரியவைகளைக் கூறுகின்றார். எ-று. 18

பார்க்குமுதுகுநீர் காலதாகும்
பைந்தழல்பார் வனங்கைப் படர்வான்சென்னி
போராமல்வினவினபோ துதித்தபூதம்
• பேர்படைத்த விடங்களிலே பிழையில்லாமல்
லோகும்பூரணமாம் பக்கந்தன்னி
லெறிவெட்டுங்கோல்படுத விசைந்ததெல்லாம்
கூராழிமான்வந்து விலக்கினும்
குறையாமலடுப்படுங்காண் குறிக்குங்காலே.

இ-ள். முன் 15-ங் கவியிற் சொல்லியபடி இருவரைச் சுட்டிக் காட்டாமலும் சூனியபக்கத்திலிராமலும் பூரணைபக்கமாகவிருந்து சண்டைக்குப் போகிறவன் என்னவாமெனில். ஆயுதங்களினால்காயம்பட்டு வருவானென்றுசொல்ல அதினும்அப்போது பிரிதிவு நடந்தால் முதுகில் படுமென்க, அப்புவாகில் காலில் தேயு-மார்பு-வாயு-கை, ஆகாயமாகில்தலையில்படுமெனச் சொல்க, விஷ்ணுதேவன் வந்து விலக்கினாலுந் தப்பித்துக்கொண்டு வரமாட்டானென்க. எ-று. 19

இந்தவிந்தப் பூதியத்துக் கிந்தவிந்த ஆயுத
மெடுத்துப் போருகவெனவும் அதற்கிவ்விடத்தி
னிற்கவெனவுங் கூறுகின்றனர்.

காலமூலைதொடங்கியழன் மூலையேறக்
கயிறெனவேகீறிமதி கதிரோனாகி
கோல்மேற்குந்தெற்குமய நிலமாக்கொள்க
சேல்போலுநெடுங்கண்ணாய் பலிக்குமீசத்தி
சேர்ந்தசலம்வானமுற்கு நிலைநாலுக்கு
மேற்றண்டாம்வானுக்கா யுதங்கல்லேலந்தி
வித்தநிலத்திற்பொருதல் வெற்றியாமே.

இ-ள். மேற்கூறியபடி சமர்செய்யவேண்டிய வாயுமூலைதொடங்கி அக்கினிமூலைபளவாக ஒரு கயிறு பிடித்தாற்போற் சரிபாய்பாவனைசெய்து அதின்மேற்கையுந் தெற்கையுஞ் சந்திரன் கூறாகவும், வடக்கையுங் கீழக்கையுஞ் சூரியன்கூறாகவுங்கொண்டு போர்செய்கிறவனுக்கு அப்போது சூரியகலை இயங்கில்தான் அச்சூரியன்றிசையிற்றானே நின்று எதிரியைச் சந்திரன்றிசையில் நிறுத்திச் சமர்செய்யவேண்டியது அப்படிச் செய்கையில் சந்திரனுஞ்சரி சூரியனுஞ்

எடுத்தெறியு மாயுதங்கள் எவையெனில் சேல்மீன் போலும் நீண்ட கண்களையுடைய பெண்ணே பிருதிவியாகில்-கத்தி, அப்புவாகில்-வாள், தேயுவாகில்-வில் வாயுவாகில்-தண்டு, ஆகாயமாகில்-கல், இப்படியாக அந்தந்த பூதியங்களுக்கு அந்தந்த ஆயுதங்களேந்தி விதிப்படி அந்தந்த நிலத்தினின்று சண்டை செய்தால் வெற்றியடைவன். எ-று. (உ0)

நோய்க்குறி கூறுகின்றார்.

ஆகியநோய்புருடருக்காய் புருடர்வலங்கேட்கி
லாறுமென்கமாதருக்கு மாதரிடங்கேட்கிற்
சோகமிலிம்முறைதப்பிற் பொல்லாதென்க
தொலையாதுநாட்சென்று மீளுமென்க்
தோகைசிலநாட்செலுநீர் கடுகிமீளுஞ்
சுடுதழனொன்மூன்றுதப்பிற் றுஞ்சப்பண்ணு
மேகிடுங்காணிரண்டின் மிகுந்தாற்கொல்லு
மெழில்வானமன்றுதப்பி லிறக்கும்பின்னே.

இ-ள். புருடன்கொண்ட பிணிக்காகப் புருடனே வந்து சாம்பார்க்கிறவனைக்கண்டு இன்னேப் லகுவீரமோவெனநவிலவந்நோய் தாவினையாம். சாம்பார்க்கிறவனுக்கு வலதுபக்கத்தில் நின்று கேட்கினும் நிவர்த்தியாகும் ஐயமில்லைஸ்திரீகொண்டநலிக்காகஸ்திரீயேவந்து வினவினாலுங் குணமாகும் வந்தவள் அவனுக்கு இடது பக்கத்தில் நின்று கேட்கில் மீளும் சமுசயமில்லை (முன் பதின்மூன்றாங்கவியிற் சொல்லியபடி சூனியபக்கமாகவேயிருந்தாலு முத்தமம்) இப்படியல்லாமல் ஆணுக்குப் பெண்வந்தாலும் பெண்ணுக்கு ஆண்வந்தாலும் அவ்வியாதி தீர்வதா தூர்லபம் அன்றியும் ஒருவன் வலதுபக்கத்தினின்று குறி

கேட்டுக்கொண்டே இடதுபக்கத்தில் வந்து நின்றா லும், ஒருத்தி யிடதுபக்கத்தில் நின்றுகுறிகேட்டுக் கொண்டே வலதுபக்கத்தில் வந்துநின்றாலும் நோய் போக்கு கடினம் ஆயினும் மெல்லென நாட்சென்று சொஸ்தப்படும் அப்படியப்படியே சரியாய் வந்துகே ட்கில் அவன்நோய் நீங்குமென்க அதிலுமெப்போது தீருமெனில் அந்நோய் பூதியம்பிருதுவாகில்கொஞ்ச நாட் செல்லுமென்க. அப்புவாகில் விரைவிலென்க அக்கியாகில் மூன்றுநாட்களில்விமோசனமென்கமிரு ந்தாற் கொல்லும் வானமாகில் அன்றைக்கே நோய் பிரிந்துகாணும் மிஞ்சில் மறுநாள் மறிக்குமென்க.

(இதின் முன்கவியிற் சொல்லிய வியல்பும் அதன் மேற்கவிகளிற் சொல்லிய பூதியங்களின் குணமும் முன் 9-ங் கவியிற் கூறியபடி சரம்பார்க்கிறவன் ஓரி டத்துக்குப் போகவேண்டியது இத்தருணமென்றும் பேசவேண்டியது என்றுங் கூறுகின்றார்.) (91)

இறங்குமுமய்ந்தனக்கைந்து நாளிலேலினக்காற்
சாவில்லை யிதுவுண்மைமெய்யே
பிறக்குமொரு பூதத்திலேந்துபூதம்
பிரிந்தோடுமதுவுடன் பேசக்கேட்டுச்
சிறப்புடையபயனறிவ தெல்லாநூலின்
செயலதனுற்றேறவர்களுந் தெரியமாட்டா
ரிறங்குமதிக்கிருந்தமைத்தால் வந்துகேட்டா
ளீள்வெயிலாச்செய்சொல்க நினைந்துகேளே.

இ-ள். இதற்கு முன்கவியிற்கூறிய பூதியங்களினி யற்கையாகிய குணங்களுக்குரியவை சொல்லக்கூடா து அதற்குமுன் 10-ங் கவியிற் சொல்லியபடி சுழி முனைநடக்கில் ஆகுமென்பது ஆகாது ஆகாதென்பது

ஆகும்போல இப்போதும் ஒருவன் நோவைப்க்குறித்துக் கேட்கும்போது சுழிமுனை நடந்தால் அந்நோயாளி ஐந்து தினங்களுள்மரிக்கும் அப்படிமரிக்காமல் தப்பினால் அவனுக்கினியொரு விபத்து வருமெனவுஞ் சாகான் இதுமெய்ம்மை அன்றியும் முன் 14-ங் கவியிற் சொல்லியவண்ணம் ஒருபக்கமோடுகிற சரத்தில் ஐந்துவகைப்பட்ட பூதியங்களுண்டுஅப்பூதியம் ஒவ்வொன்றிற்குள் ஐந்துபிரிந்து நடப்பதுவுண்டு அவை எவையெனில் பிருதிவுக்குப்பிருதிவி பிருதிவியிலப்பு, பிருதிவில்வாயு, பிருதிவில் ஆகாயம் இப்படி இவ்வைந்துக்குள்ளேந்தாயோடும் இதனைப்பற்றி நூற்பயன்யாவையும் குருமுகாந்தரத்திலறிந்துகொள்வதல்லால்தேவர்களேயானாலுந்தனியே சுருதியைக்கொண்டு வருவதன்றிச் சுவாநுபவத்தால்இந்நூலைக்கொண்டே அறிவதுகூடாது அல்லாமலும்சரம்பார்க்கிறவனை ஒருவன்வந்தழைத்தால் அவன்சூரியகலையியங்கும்போதே போகவேண்டியது பேசுகிறதினாலும் சூரியனியங்கும்போதே செல்லவேண்டியது மற்றப்படிகூடாது மிஞ்சிநடக்கில் மத்திபமென்றறிக. இன்னமுஞ் சொல்லுகிறேன் மனதுற்றுக்கேள்.

முன் 16-ங் கவியிற்சொல்லிய முதியசரங்களி
னியல்பு கூறுகின்றார்.

கேளிதனை நிலத்திற்கு நீரிற்குங்குணமாங்
• கெற்பமெனிலாணாகுங் கிளர்ந்தொருவன்வினவி
ஞானின்மிதுலாபங்கள் சாந்திபோக்கு
நாயகன் ரகுமிங்கித னிலங்கம்வெல்லும்
வாளமிறிற்பொல்லாது கெற்பங்கேடாம்
வாயுவெனிற்பெண்ணாகு மற்பர்தோற்கு

நீள்விசும்பிற்றனுவித்தை யோகந்தானு
நீடுமிகமெகற்பமெனி லலியாம்வீயும்.

இ-ள். பெண்ணே கருத்துற்றுகேட்பாயாகமுன் கக-ங் கவியிற்சொல்லியபூதியசரங்களினியல்புகூறு மிடத்தில் பிருதிவும் அப்பும் நன்மைகளேயே தருவ னஇதன்பின் கூகூ-ங்கவியிற்சொல்லியபடிஜந்து நா ழியிருக்கு மிஞ்சி நடக்கையில் இவ்விரண்டுபூதியங் கள் அதிகமாக நடந்தால் லாபமுண்டு வேண்டில் கஅ-ங் கவியையும் பார்க்கில் ஈதிங்ஙனம் நிற்க முன் கச-ங் கவியிற் சொல்லியபடி ஒரு பிராணியைக்கை ப்பற்றுமலும் அதின்பேரிலூர்ந்துநில்லாமலுங் தனி வழியேவந்து சூனியபத்தினில்லாமல் பூரணத்தில் நி ன்றுகெற்பக்குறி கேட்டால் அப்போதுசரம்பிருதி வாவது,அப்புவாவது நடந்தால் ஆண்பிள்ளை பிறக் குமென்க, கூ-வது கவியிற்சொல்லியபடிசாந்திபண் ணுதல் போக்குகழித்தல்செய்யவேண்டியது அங்ங னஞ்சொல்லிய கலையில் இவ்விரண்டுபூதியங்களிலே தாவது நடக்கும்போது செய்தால்பலிக்கும்.இதன் றித்தேயுபூதியும் நடக்கையில் போர்முதலியவைபுரி யில் வெல்லும்.அப்போரில் வாளெடுத்தால் மத்திப மாம். அப்போது கெற்பத்தைக் கேட்டால் அது அழிந்துப்போகும், வாயுநடக்கையிற் கெற்பம் பெ ண்ணென்க மற்போர் தோல்வியடையும். ஆகாய மாகில்விற்சமர்செயிக்கும். இப்போரிலக்கணஞ்செப் பிய உ0-ங்கவியையும் கஅ-ங் கவியையும் க0.ங் கவி யையும் பார்க்கவும் கூ-ங் கவியிற்சொல்லிய யோகம் புரிய நன்மை ஆகாயச்சரம்நடக்கையில்கெற்பங்கே ட்டால் அலியாய்ப் பிறக்கும் பிறந்து மிறக்கும் என்க எ-று. 23

திதிவாரம் நடத்தி காலசரமுன்பின்ச-ங் கவியிலும் நு-ங் கவியிலுஞ்சொல்லியபடிபிராதகாலத்திற் சரம்பார்க்க வேண்டிய கிரமத்திலும்விசேடமாய் பார்க்கவேன்டியது இதுவென்றுங் கூறுகின்றார். (24)

வீழாதபித்தம்முதல் விளங்கும்பக்கம்
விரவிவருமுப்பதினுல் மும்மூன்றாக
மாயாதுவருஞ்சோம னிடமதாக
வருகின்றவருக்கனும் வலமதாகச்
சாயாதுபுதன்வெள்ளி திங்கண்மூன்றுந்
தப்பாதுசந்திரனுஞ் சாற்றுங்காலை
தேயாதுகதிர்செவ்வாய் சனிவியாழஞ்
செங்கதிரோன் றினமென்று தேறுநீயே.

இ-ள். முன்-ச-ங்கவியிலும்பின்-நு-ங்கவியிலுஞ்சொல்லியபடி பிராதகாலத்தில் சரம்பார்க்கவேண்டியகிரமத்திலும்விசேடமாய்ப் பார்க்கவேண்டியதெதுவெனில், பொழுதுவிடிய ரு-நாழிகை யிருக்கையில் எழுந்து மேல் ச-ங் கவியிற் சொல்லியபடி சரம் பார்க்கும்போது வளர்பிறை பிரதமைக்கும் துவிதிகைக்குந் திரிதிகைக்கும் சந்திரகலை யுதித்துநடக்கவேண்டியது இப்படி இம்முன்நான்கு பன்னிரண்டு போக தேய்பிறையில் பிரதமைக்குந் துவிதிகைக்குந் திரிதிகைக்குஞ்சூரியகலையுதித்து நடக்கவேண்டியது பொழுதுவிடிய ரு-நாழிகையிருக்கையி லுதித்தசரம்,மற்றவைந்துநாழிகையுங் கலங்காதோடவேண்டும், திதி யோகவாரங்களிலெவை நிகழவேண்டுமெனில் ஞாயிறுக்குஞ் செவ்வாய்க்குஞ் சனிக்கும்வியாழத்திற்கும் சூரியகலையுதித்தோடவேண்டியது திங்களுக்கும்புதனுக்கும் வெள்ளிக்குஞ் சந்திர னுதித்தோடவேண்

டியதுஇப்படி யுதிக்குஞ்சரம் எந்தப்பூதியத்தி லுதி க்க வேண்டியதெனில், பின்-சுரு-கவியைப் பார்க்க வேண்டியது. இதில் பூதியங்கள் அதிகமாய்க் கதித் தோடில் பயன்கள் என்னவையாமெனில் முன் உரு-ங்கவியிற்றெரியும் அன்றியும் விபரம் ருரு-ங் கவியிற் காண்க-எ-று. 24

இதனுள் நக்ஷத்திரங்களுக்கு நடக்கவேண்டிய கா லசரமும் இதன்மேற்கவியிற்கூறிய வாரங்களுக்குரிய னவாகிய காலசரங்கள் சரம்வரில் இடரில்லை பிழைக் கில் இன்ன வின்ன நிகழுமென்றுங் கூறுகின்றார். 25

தேறிடுகியொன்பதுநாள் பூரமாதி
 சிறந்தரோகணிரதய முத்திரட்டாதி
கூறிடுஞ்செங்கதிரோனு ளாகக்கொள்க
 கூறுனவடையமதிக் கொன்றுகொள்க
வீறிடுஞ்செங்கதிபிழைக்கி னேய்காரிக்கு [சாவசம்
 மிடித்திடுமண்டலஞ் செய்விக்கும் வெம்போர்ச்
பூறிடும்பொன் பிழைக்கின்மன்னர் கேடாம்புந்தி
 பதிக்கதிபன் கெடுமிநது கிளைஞர்போக்கே.

இ-ள். பெண்ணே திதிவாரமென்று இரண்டு வே றுபாடாய்க் கூறினேமென்று தியங்கவேண்டியதில் லை விபரம் மேற்கவிகளிற்றானே சொல்லி யிருப்பது னைக்காண்க இவ்விரண்டினில் கீழ்வரும்நக்ஷத்திரபல னுகிய மூன்றினுள்ளும் ஏதேது கஷ்டமோ அதினு ம்வேதது இஷ்டமோ தெரிந்து அதினும் வீக்கந்தாக கமநோக்கிப்பார்ப்பதென்று காண்க கண்டுதேறியிரு அக்கிநக்ஷத்திரங்களுக்கு நடக்கவேண்டிய காலசர மாம் ஏதெனில்பூரம்-உத்திரம்- அஸ்தம்-சித்திரை-

வாதி-விசாகம்-அனுஷம் - கேட்டை-மூலம்-உரோக ணி-சதயம் உத்திரட்டாதி-இப்பன்னிரண்டிலுஞ் சூ ரியனடக்கவேண்டுமெனக்கொள்க மற்றப் பதினைந்தி லுஞ்சந்திரனடக்கவேண்டுமெல்லாமலும் மேற்கவியிற் கூறியவாரங்களுக்குரியனவாகிய காலசரங்களில் ஞா யிறு தப்பில்-வியாதி-சனி- வறுமை-செவ்வாய் - சண் டை-சாவு-வியாழம்-தன்மன்னனுக்குக் கேடாம் புத ன் அவ்வூரதிகாரிக்குக்கேடு திங்கள்சுற்றத்தாருக்கு க்கேடுவரும்(தன்மன்னனென்பதும் அவ்வூரென்பது சரம்பார்ப்பவனுக்கு குறியெனவாம்) வெள்ளி பின் கவியிற்காண்க சனிகருமையுடன் தான்காண்க சனி- வறுமையுடன் தன்கையிலிருப்பதும் போகும்பொன் பிழைக்கில் மன்னர் கேடாமென்பதில் தனதாவிற்கு வருத்தம்வரில் தனக்கு எப்படிப்பொருள்வரும் வரா து பதிக்கதிபன் கெடுமென்பதில் அவனிவனால் பறி கொடுக்கப்பட்டா னெனவரும். எ-று. 25

(இதன் மேற்கவியிற் கூறுத வெள்ளி பிழைக்கில் நிகழ்வன விவைவெனவும் மற்றதன்மேற்கூறிய திதி பிழைக்கில் நிகழ்வன விவைவெனவுங் கூறுகின்றார்.

போக்கரியபுகர்பிழைக்கி லூர்விட்டேகல்
பொருந்தியதோர்மெய்ந் நோதல்புணர்ந்தோர்
லாக்கமதிலிடராமுற் பக்கந்தன்னி [சாத
லருங்கலகமிரண்டாகி லர்த்தநாச
மூக்கமுடன்மூன்றதனிற் போக்குண்டாகு
மூரைத்தநான்கிற்கிளைஞர்க் குறுநோயுண்டாந்
தேக்கியவைந்திற்றேச மலையுமாறிற்
செகத்தரசர்கெடுமேழிற் சேருநோவே.

இ-ள். வெள்ளி தப்பில் தான்வசிக்கும் பதியைவி ட்டு ஒழிந்துபோதலாகவேணும் அவ்வெல்லையை வி ட்டு மற்றொரெல்லையைப்போய் மிதிப்பதாகவேணு மவரவரும் தேகாலிவரும் தன்மனைவிக்குச் சாவுவ ரும் (சாவென்பதில் சண்டைபிணக்கு நோய் முதலி யவருத்தமாதலையும் சதிபதிகளுக்குப் பொருத்தம் போதலையுங்காண்க) நூலாசிரியர் புணர்ந்தோர் சா தலென்றும் சாமுடிவரைக்கும் வருத்தம் வருமென் றுந் துணிந்து கூறினமையால் நன்மையே தவறாக அட்டமாசித்திமட்டும் பெருகுமென்ற கருத்தாக்க ண்டு இதன்மேற் கவியில்கூறியது காண்க. மற்றுத் னிற் சொல்லியபடி ஊருக்கும் மன்னனுக்கும் அதி காரிக்கும் வந்தானும்வரும் இதன்றியில் வளர்பிறை காலத்தில் பிரதமைதப்பில் யாதேனு மிடர்வருவது விதிகை கலகம்-திரிதிகை-பொருட்சேதம், சதுர்த் தி போக்குண்டாகும், (சகலவித நஷ்டத்துக்குங்கா ண்க) பஞ்சமி பந்துக்களுக்கு வியாதி-சஷ்டி - அத் தேசத்தாருக்கும் அரசனுக்கும் வருத்தம், சப்தமி- நவி-அரசனுக்குந் தேசத்தாருக்குமே யுண்டு தனக் கில்லையென்ற மாத்திரத்தற் கூடாவாகுந் தன்று லே யவர்களுக்கு வருத்தம்வந்ததென்று அவதூறு ன பொச்சாப்பினாலாவது தான் வருத்தப்பட வரு மென்ற விவரம் மேற்கவியிற்றானே செப்பியிருப்பத னைக் காண்க. எ-று. 26

திதிபிறைக்கில் நிகழ்வன விவையென்றும்
சந்திரசூரிய ரியல்புங் கூறுகின்றார்.

கோவுடனேசாவுமா மெட்டாகின்மற்றை
நுவலாதபக்கமுமிம் முறையேகொள்க
தாவில்வெங்கதிரவனின் மதியமுண்டாஞ்
சந்திரனுள்வெங்கதிருந் தப்பாதுண்டே

மோவரிபவிவர்களையே யுணரும்போதி
லுற்றசரங்குருமுகத்தா லுணர்ந்துகொள்க
தேவர்பிரானுரைத்தருள வுமையாள்கேட்கச்
செவ்வியிதன்முறைமைதனைத் தெளிந்துதேறே

இ-ள். அஷ்டமிபிழைக்கில் நோவுஞ்சாவும் வரும் வளர்பிறை இவ்வண்ணம் நடக்கத் தேய்பிறைக்கு மிம்முறையே கொள்வது இதல்லாமலும் சூரியனுக்குள் சந்திரனும் சந்திரனுக்குள் சூரியனு மொன்றுக்கு ளொன்றா யிருந்து கோணுறுவது முண்டாம் உமையவளே தன் சுயவல்லமையினால் தெரிந்துகொள்ளவல்லவ ளல்லவளாகிப் பின் சங்கரனருளினால் தெரிந்துக்கொள்ளத்தக்க சிறப்பினதாகில் இந்நூலை யார்தான் தம்மாற்றலே தெரிந்துக்கொள்வர் கொள்ள மாட்டார்கள் ஆதலாற் குருவருளினாற் றெளிக. எ-

மேற்கவிகளிற் கூறியசரம் பிழைக்கில் இடர்
வரும் வந்தாலும் அதற்கு உபசாந்தங்
கூறுகின்றார்.

தெளிகதிர்சேய்மூன்றடியாந் தெற்குமந்தன்
செம்பொன்மூன்றடிமேற்குத் திங்கள்வெள்ளி
இளகியநாலடிவடக்குப் புந்திமூன்போ
லிரட்டையதுகிழக்கிரவி யெழுதன்முன்னே
வளமுடனேபூரணபக் கத்திற்சென்று
வந்திருந்துநமைநினைந்து வழுத்தல்செய்தே
உளமகிழ்ந்துபோகிலெல்லாம் பலிக்குந்துன்ப
முண்டாகாவினையனைத்து முணர்ந்துதேறே.

இ-ள். பெண்ணே மேற்கவியிற் சொல்லியபடி காலசாரஞ் சரிப்பட்டுவருமோ வாராதே ஊழ்வினைப்படிக்கல்லவோ நடக்கும். அதை நம்முடையவசமாக்க

இலைசோ, எனத் தளர்வுற்றிருக்க வேண்டியதில்லை சரம்பார்க்கிறவன் முன்கவிகளிற் சொல்லியபடி பிராதகாலத்தில் அருணோதயத்திற்று முன்னெழுந்து ஞாயிறு-செவ்வாய்க் கிழமைகளுக்குத் தென்புறமாய் மூன்றடிமன்-கக-ங-கவியிற் சொல்லியபடி சரத்தை பூரணமாக்கி யக்காலையே முன்னிட்டுக் கொண்டுபோகவும் சனி வியாழங்களுக்கு மூன்றடி மேற்கேபோகவும், திங்கள்-வெள்ளிக்கு நாலடிவடக்கேபோகவும், புதனுக்கு இரண்டடி கிழக்கேபோகவும் இப்படியாகப் போய்வந்து ஒரு திவ்வியமாகிய ஆதனத்திலிருந்து என்னை நினைத்துத்துதிசெய்து பின்னெழுந்து எங்கேசென்றாலும் அல்லது அங்கேயிருந்தாலும் முற்கவிகளிற்கூறிய துன்பங்கள் யாதேனுமடாது.

(இதன் மேற்கவிகளிற்கூறிய ஒரு வாரத்திற்குச் சரந்தப்பில் இன்னவையாமெனவும் எழுநாட்களுஞ் சரிவரில் இன்னவையாமெனவுங் கூறுகின்றார்.)

தேறுமீயிவையெலாஞ் செவ்விதாக
  செக்கதிரோன் றன்னுளிற் றிங்களோடி
மாறிவருங்கதிர்வனுஞ் சோமனாளின்
  மறிந்தோடி வருங்கிழமை யேழுமாறிற்
கூறுபடவுடனுயிர்விட் டேகுமென்க
  குணமாகுமிக்கிழமை கோணோதோடிற்
சீறி வருங்காலனையும் ஜெயிப்பர்மற்றச்
  சித்தயோகத்துநிலை சித்தியாமே.

இ-ள். இவையெல்லாந்தேர்க் தறிசூரியனடக்க வேண்டியநாளிற் சந்திரனடந்து சந்திர னடக்கவேண்டியநாளிற் சூரியனடந்து இம்படியாக மாறுப்பட்டு ஒருவாரமுழுதும் நடந்தால் மரித்துப்போவன் அ

ப்படியல்லாமல் கிழமையேழுந் தவறாமல் மேற்கண்ட நாழிகையுங் கோணாமல் திக்குநோக்கிச் செல்வதுடன் பிராணாயாமமு மாறாமல் நிகழ்ந்துவருமாகில் இயமனடரான் பிராணனுக்கழிவில்லை சிவன் முத்தனாய் வாழ்ந்திருப்பன் அஷ்டமாசித்தியு மவனுக்குச் சித்திக்கும். 23

குறிசொல் மார்க்கங் கூறுகின்றார்.

சித்தமுடனிரேசகத்தில் வந்துகேட்டாற்
செப்பியவப்பொருள்களெல்லாந் தீதேயாகும்
உத்தமமாம்பூரகத்தில் வந்துகேட்டா
லுரைத்தபொருளத்தனையு முண்மையாகு
பெத்தியகும்பத்துரைக்கி னன்றேயாகும்
வேண்டாரைரேசகத்தில் விளிப்பார்க்க
வைத்தமலம்வாயுநீர் கழிபோதென்னின்
மாற்றலர்தாங்கெடுவரிது மாறிலாதே.

இ-ள். சாம்பார்க்கிறவன் ரேசகஞ்செய் போதில் வந்து கேட்டால் கேட்டகாரியஞ் சித்தியாது பூரகத்திலென்னில் நன்மையவன் சொல்லுகிறது முண்மையாயிருக்கும் கும்பகஞ்செய் காலத்திலாகில் நற்காரியம் அது சித்திக்கும் மலம்-சலம்-வாயு-கழியும் போதானால் பகைவர் கெட்டுப்போவார்கள் இன்னமிதற்குவிபரம் குருமுகாந்தரத்திற் றெரிந்துகொள்ளவேண்டியது அல்லாமற்றெரியாது-எ-று. 30

சனி வியாழன் பகல் கூறுகின்றார்.

மாறுவளர்பக்கங் குறையும் பக்கமதி
நாடிகதிர்நாடி வளர்பொன்னேடிற்
பேறுமிகவுண்டாகும பிராணனிற்கும்
பின்புரைத்தகாரியங்க ளெல்லாமேறுங்

கூறுகின்றசனிநாளிற் பகலிராவிற்
குலவுசரம்வலமிடத்திற் கோணுதோடி
ஞறுமலர்ப்பெருந்திருவே சொன்னேனிந்த
ஞாலமெங்கு மபுகழ்பெறவே நடக்குமென்றே.

இ-ள். வளர்பிறை வியாழத்திற்குச் சந்திரனுந் தேய்ப்பிறை வியாழத்திற்குச் சூரியனுந் தப்பாமல் நடந்துகொண்டேவந்தால் சிறந்த பேருண்டாகும். ஜீவன்முத்தனுப் தளர்வின்றி வாழ்வான் இதல்லாமல் சனிக்கிழமைக்கு இரவிலும் பகலிலுஞ் சந்திர சூரியசரங்கள் மாறுபாடில்லாமல் நடக்க வேண்டியது நடந்தால் இவ்வுலகமெங்கு மெச்சத்தக்க கீர்த்தி வந்துறும் மற்றும் முன்காலசரனு சொல்லிய கவியை நோக்கவேண்டியது. எ-று. 31

குறிசொல்மார்க்கங் கூறுகின்றார்.

நடப்புடையவொருவனெங்கே யென்றொருவன்கேட்
ஞனிலத்திலகத்திருப்பு னன்னீர்முற்றும் [கில்
அடக்குமுழுவாகிலுள்ளோர் வாயுவேற்று
ரப்பலமென்மலைமேற் றுயிலலாகும்
விடப்போனுன்புவிக்குநிலை நீர்க்குமீண்டாள்
வெவ்வழற்குவருகின்றான் வெயில்காலுக்கு
மடற்குழாயூர்வநதான் வானமாகில்
வருவனொருநாழிகையின் மாறிலாளே.

இ-ள். ஒருவன்வந்து இன்னானெங்கே யிருக்கிறானெனில், அப்போது சரம பிருதிவாகில், வீட்டுக்குள்ளிருக்கிறான் அப்புவாகில் முற்றத்திலிருக்கிறான தேயுவாகில் அக்கிராரத் தெல்லைக்குள் தானே யிருக்கிறான் வாயுவாகில் எல்லைக்கப்பறப் பட்டான், ஆகாயமாகில் மலையேறுகிறான் அல்லது தூங்குகின்

ருன் என்று சொல்லவேண்டியது இதைவிட புறத்தேசம் போனவனைக்குறித்துக் கேட்டபோது பூதியமைந்தில் முதலாகில், அவ்வூரில்தானே நிலையாயிருக்கிறான் இரண்டாகில் திருமபிவருகிறான் மூன்றாகில் திரும்பினவன் நில்லாமல் நடந்துவருகிறான் நான்காகில் அவனிருக்கு மூருக்குள்வந்தான் ஐந்தாகில் ஒரு நாழிகைக்குள்வந்து வீடு சேர்வானென்று சொல்லவேண்டியது—எ-று. 32

இச்சரம் மனதுடன் லயப்பட்டால் இன்னவையாமெனக் கூறுகின்றார்.

மாறிவருவாயுமன்றோ வலயந்தன்னின்
மயக்கவுயிர்சித்திநிற்க வதுதானிற்கும்
கூறுசமயங்கூற்றார் பயமுமில்லை
குறித்திருமண்ணொன்றரைநாழிகையாக்கொள்க
தேறுபுனற்கொன்றேகால் வன்னிக்கொன்று
சீவன்முக்கால்வானமரை சிறந்தநாடி
பாருமைந்துநாழிகைக்குள் வசிநற்றூன்றிற்
பழுதுபடுமுடப்பிலிது பற்றிப்பாரே.

இ-ள். இடது பக்கத்திலும் வலது பக்கத்திலும் ஒன்றைவிட்டொன்றை மாறிமாறி நடக்கு மிச்சாமானது தேகத்தினூடே லயப்பட்டுப் போகுமேயானால் பிராணனுக்கழிவில்லை அப்படி லயப்பட்டு நிற்கில் மனமுதலிய வந்தக்கரணங்களுக்கும் வேலையில்லை அசைவுற்றிருப்பனவாகும் பின்பு மற்றெச்சமயத்தாராலும் பயமில்லை யமனாலும் பயமில்லை முன்சொன்னபடி இடதுபக்கமும் வலதுபக்கமும் மாறியோடுஞ்சரம் ஒவ்வொரு பக்கத்தி லென்னேரந்தரித்துநடக்குமென்னில் ஐந்துநாழிகையாம். அதிலும் பூதியங்களின் கூறுக்கெவ்வாறுபகுப்படுதெனில் மண்ணில் ஒன்றரைநாழிகையும் நீரில் 1¼ ம் நெருப்பில்

1-ம் காற்றில் முக்காலும் வெளியில் அரையும் ஆக நிறைந்தோடும் இப்படியாகிய பூதியங்கள் கூறுகொண்ட ஐந்து கடிகைகளும் ஒவ்வொரு பக்கத்திற்குச் சரியாயச் சிதையாதோடவேண்டியது இதை விட குறைந்தாலும் வளர்ந்தாலும் தேகநலியாம் சரம் லயப்படும்வழி தேடவேண்டியது தேடில் முன்கண்ட பயனுண்டா மில்லையேல் நாலடி யொன்றுக்கு ஐந்துநாழிகையும் பூதியங்களினளவே சிதறாமல்நடப்பிக்கவேண்டும் அதுவுமின்றெனில் தேக நலிவே வரும்

தத்தமதுவாழ்நாட் பிரமாண மறியும்படி அயனசங்கற்பம் கூறுகின்றார்.

பற்றினுஞ்சொன்னபடி மயானமுன்னாட்
பாலொருமோதாண்டுபரி சுத்தனாகி
மற்றைநாளுத்தரமா மயானந்தன்னின்
மாறியிடந்தனிலோடும் வலந்தெற்காகும்
பெற்றதொருநான்கைதா னைந்நூறாகும்
பெறுங்கடிகைதனிற்குறையிற் பிராணனில்லை
முற்றொருமாநாழிகைக்கோ ராண்டுதாழு
மும்மையேநான்சொன்னகணக் குண்மைதானே.

இ-ள். சரம்பார்க்கிறவனுக்குச் சென்ற நாட்கள் போக மற்றும் நின்றநாட்கள் எவ்வளவோ என்னுங் கருத்துக்கொண்டு பார்த்துத் தெளிவுமாறு யாதெனில் அயனசரமாம் அதனைப்பார்ப்ப தெவ்வாறெனில் தைமாத முதற்றேதியில் உத்தராயண காலம் இவ்வயன காலத்திற்குமுன்னாள் பகலில் ஒருபொழுதன்னமுண்டு தத்துவங்களைப்பரிசுத்தமாக்கித்தேக மெலிவதனால் மனதுக்கும் மற்றவாயுவாதி காணுஞ்ச

ளுக்கும்வரு மிடையூறினை நிருவி தைமாதம் முதற்றேதியில் பொழுதுவிடிய ஐந்து நாழிகை யிருகலையில் பார்க்கும்போது சரம்-வாரம்-திதி நட்சத்திரங்களைத்தள்ளி இடதுபக்கத்திலுதிக்கது முன்கவிகளிற் சொல்லியபடி ஐந்துநாழிகைகளுஞ் சிதருமல் ஓடுவதனைப்பார்க்கவேண்டியது இதுபோக ஆடிமாதமுதற்றேதியில் இந்தப்பிரகாரமாய்ப் பார்க்கவேண்டியது அப்போது சரம் வலதுபக்கத்திலோடும் அப்படியோடியசரம முற்கூறியவண்ணம் ஐந்து நாழிகைகளுஞ் சிதருமலோடினுல் சரம்பார்க்கிறவன் தான்செய்யும் பிராணுயாமவுசுவியினுல் அன்றுதொட்டுவரும் நூறுவருஷகாலம வாழ்ந்திருப்பன் இதுவின்றி குறைந்தால் அவ்வைந்து நாழிகையை தூற்ருருமா ஐந்தாக நூருக்கிக் குறைந்தநாழிகை ஒருமாவோ இரண்டுமாவோ அல்லததன்மேற் ருகைப்பட்டவையோ அதற்கு ஒவ்வொரு வருஷத்தைக் கூட்டிப்பார்த்து குறைந்த ஒவ்வொருமா நாழிகையின்பேரில் கணக்காக்கிக்கொள்ளவேண்டியது முழுவதுமேதப்பிச் சரம்இடத்திற்கு வலமாகவும் வலத்திற்கு இடமாகவும் ஓடில் அவனுக்குட் சீணகாலமென்றறிக எ-று. 34

போசனவிதி கூறுகின்ருர்.

உண்பவனுக்கப்புவிட பதிக்குவெய்ய
வவர்த்தனைத்தனகார்தத லுண்கமுன்னே
பண்மயில்செங்கதிர்க்குநெய்பால் புளித்தல்கன்னல்
பாகுடனே துவர்த்தனமு னுண்டுபார்க்க
நண்பனமவயிற்றிற்குச் சோறுபாதி
நன்னீர்காய்நாற்றுக்கா லாகநல்கிக்
கணபயினுடிகள்சத்தி பண்ணிதூபங்
கூட்டிழலர்சூட்டியிருள் கழியுங்காலை.

இ-ள். முன்கவியிற்சொல்லியபடி சரம்பார்க்கிறவன் சூரியகலையிபங்கி வருகிறமட்டும் போஜனமில்லாமல் மற்றவனுக்காக காக்கவேண்டியதில்லை, சந்திர நடக்கும்போதுஞ் சாப்பிடலாம் எப்படியெனில் உஷ்ணமானபண்டங்களும், உப்பு, கசப்பு, காரமாகிய பண்டங்களைவைத்துக்கொண்டு தாகபானத்தைதிருத்தி யுண்ணவேண்டியது, சொல்லியபடியே சூரியனடக்கில்நெய்பால்புளித்தல்-தித்தித்தல்,துவர்த்தலாகியபண்டங்களுடனே சாப்பிடலாம், தாகபானமுமப்போதே செய்யலாம் சந்திரனுக்கு அப்போது கூடாதாயினும் பின்பு சூரியனடக்கில் சாப்பிடவேண்டியது அதுமாறினாலும் ஆத்திரத்தினாலும் அவாவினாலுஞ் சூரியனுக்காக காத்திராமல்அடுத்தடுத்துச் சந்திரனிற்றானே தின்றுகொண்டுவந்தாலும் நலியாம். இப்படியாகச் சாப்பிடுகிற தாயினும் அவ்வுணவு வயிற்றிற்கும் பாதிதானாகும், மிஞ்சி லாகாது.மற்றப்பாதிக்கு சலங்காலாகவும் கொள்ள வேண்டியது கொண்டு தசநாடிகளையும்பிராணயாம முன்னிலையில் சுத்திசெய்துவகாக்கிர சித்தனாய்ச் சரம் பார்க்கவேண்டியது. 35

சரத்தை யேறவொட்டாமலுங்குறையவொட்டாமலுந் தன் வசப்படுத்திக் கொள்ளு மார்க்கங் கூறுகின்றார்.

கால்கொண்டுகணக்கறிவார்க் கியாதுக்கப்பா
கருதரியவெல்லாமுடியுங்காண்போர்க்கெல்லா
மேற்கொண்டபுவியுடனே யப்புவன்னி
விளங்கியகால்வானமுடன் வினவுவாற்குப்
பால்கொண்டமொழியாளே பவனங்கட்டிப்
பற்றியவாராதாரம் பரிசுபார்த்துச்

சால்கின்றமுதனாடி தன்னுணின்ற
    தபனன்மதிசெந்தழலா தண்மைபாரே.

இ-ள். பால்போலுமினியசொல்லையுடைய பெண்ணே, சரம்பார்க்கிறவனுக்கு அநுபவமிந்நூற்சொல்லியபடி வருமோ மற்றவ்விதிப்படி பிறழாது போஜன முறையையும் வந்தொத்துக் கொள்ளுமோ மிகினுங் குறையினும் நோய்செய்யுமே எளிதிற் சரிப்பட்டுவராதெனில்தானெப்படி நன்கடைவன் வினவுவார்களுக்கெவ்வாறாய் நன்றெனவுந் தீதெனவுமுழறிக்கெடுத்தோதுவனென்று ஐபமுறவேண்டியதில்லை சரம்பார்ப்பான் பரம்பார்ப்பானென்பதுபோல் சரத்தைக்கணக்கின்படியறிந்து பார்க்கிறவனுக்குமெந்தகாரியமானாலுந் தப்பிப்போகாது அவனைக்கண்டபேர்களுக்கும் நினைத்தகாரியமெல்லாமுடியும் எப்படியென்னில்-பிரிதிவு-அப்பு-தேயு-வாயு-ஆகாயமாகிய பஞ்சபூதியங்களின் கூறுகூடியவாயுவினைப்பாழ்போகாமல்மனவறிவுடனேகட்டி ஆரக்கரத்திலுள்ள பரிசினையறிந்து தசனாடிகளுக்கும் முதனாடியாகிய பிராணநாடியினின்று மற்றங்கிருந் துதித்தோஞ் சந்திரன்சூரியன் அக்கினியென்னுமிம்மூன்றினுடைய குணங்களையும் பார்த்தால் கைக்கனிபோல் இலைசிற்றெரியவரும் எ-று. 36

சரம்பார்க்கிறவனுக்கு நன்மைதீமை மரணகாலமறியும்படி சாயாபுருஷ தெரிசனங் கூறுகின்றார்.

பாரிலொத்தநிலத்தகல்வான் களங்கமற்றாற்
    பத்தடிக்குளேந்தடியாம் பருவந்தன்னிற்
சீரிப்மெய்நிழல்கழுத்து கைகால்சென்னி
    இமிட்டிப்பார்த்திமையாமற் றிகழ்வான்பார்க்கிற்

கூருருவம்பொன்கண்டாற் செல்வம்பிள்ளை
குறவிலுயிர்மெய்மையுபி ரிளைக்குங்குற்றம்
காருருநோயாறுபிறை கைகால்குன்றிற்
கங்குறைபின்மும்பிறையிற் காட்டுஞ்சாவே.

இ-ள். பூமியிலே மேடுபள்ளமில்லாத இடத்தில் ஆகாயத்தில்மேகமறைவில்லாமல் வெயில்காயும்போது தன்னிழல் ஐந்தடி நீளமுதல் பத்தடிக்குட்பட்டதருணத்தில் தான் அந்நிழல் முகமாய்நின்று கைகளிரண்டையுந் தொங்கவிட்டு கண்களிமையாமல் அந்நிழல்களை கழுத்து கைகள், கால்கள், இவ்வுறுப்புகளிலொன்றைப்பார்த்து அப்படியே இமையாமல் ஆகாயத்தைப் பார்த்தாலங்கே அவனுருவம் தோன்றும் அவ்வுருவம் பொன்னிறமாயிருந்தாலவனுக்குச் செல்வம்வரும், வெண்மையெனில் பிராணபயமில்லை, ஆயுள்வளரும் செம்மையாகில் ஆயுள் தேயும், அதற்கொரு குறைவுவரும் கருமையேல்நலி இதைவிட அவ்வுருவில் கைகளாவது கால்களாவதுதோன்றாமலிருந்தால் ஆறுமாதங்களுள் மரணம் இதுவன்றித் தலையேகாணாமல்கவந்தமாய்த்தோன்றில் மூன்றுமாதத்தில் மரணம், இல்லாமலுஞ்சந்திரனுமிப்படியே பார்ப்பதுண்டு, இதனை சாயாபுருஷ தெரிசனத்தை விடாமல் பன்னிரண்டுவருஷம் பார்த்துக்கொண்டுவந்தால் தன் முன்னிற்குமந்நிழல் தன்னுடன்பேசும் பேசில், அதன்முகாந்தரமாய் அஷ்டமாசித்தியையும் பெறலாகும், பெருவதன்றிப் பின்னுஞ் சிலநாட்களில் அந்நிழல் ஓராருருவமாகித் தன்னுடனே திரியும் படுத்தால் தானும் படுக்கும் எழுந்தா லுடனே எழும்பும் இவனுக்கு வருநன்மை தீமைகளை முன்னதாகவுணர்த்தும். இ

ன்னமு மிப்படிப்பட்ட அனேக வற்புதங்கள் விளைக்குமென்று பெரியோர் சொல்லுவார்ர்கள். ச-று.

மாணவிலக்கணம் வில்லுருவின்
பயன் கூறுகின்றார்.

காட்டியகாளிழற்றனக்கு முன்பின்னேனக்
கடிபுனல்வாய்கொண்டகல்வான் களங்கமற்றால்
பூட்டிபநீர்துகள்பிறக்க வுமிழ்ந்தால்வானிற்
பொருந்திபவில்லைந்துருவாய் பொலிந்துதோன்று
மீட்டியவில்லு நுவுளதே லாண்டுவாழ்வ
இது முறிவிலவ்வாண்டி னிறந்துபோவான்
கோட்டிபவில்லு நுமுறிப வணங்குதோன்றிற்
கொண்டுபோம்பிறைபாறிற் குறித்துக்கூறே.

இ-ள். வானிற்களங்கமில்லாமல் சூரியனெறிக்கையில் மாநிழல்விட்டுத் தாழ்வாரநிழல் இப்படிப்பட்ட யாதொருநிழல் தனக்கு முன்னிருக்கச் சரம்பார்க்கிறவன் பின்னின்று வாய்நிறைய சலங்கொண்டு அந்த நிழலருகில் துகள்பரந்து அணுப்போல பறக்க ஒரேதரமாய் உமிழ்ந்து அத்துகளைப் பார்த்தால் அதிலிந்திரதனுசு அமைந்து வானங்களுடனே தோன்றும் தோனறில் பார்க்கிறவனுக்கு அன்றுமுதல் ஒருவருஷமட்டுக்குஞ் சாவில்லை இலலையேயலது வரும் வருவதிலும் அவ்வில் நிறமாறி அங்ஙனே ஒருபெண்ணுருத் தோன்றில் ஆறுமாதங்களிலிறப்பன். எ-று.

சந்திரசூரியரைப் பார்க்கு மிலக்கணங்
கூறுகின்றார்.

குறிகொண்டநிறமதியங் குறைமதியந்தன்னிற்
குலவியதோர்செப்பகலில் கோநெய்யைவிட்

டெரிகின்றமதிக்கதிரைப் பகத்திரைப்பார்த்தா
வியல்வெண்மைசெம்மை பொன்மைபசுமைகறுப்
நெறிகொண்டவுயிர் வாழ்கெடநோய்சா [பென்னி
ணிரை நிரையேயறிபிறனிற் றெற்குமேற்கு
மறிகின்றவடக்குடனே கிழக்குநடுகுறைந்தா
லாண்டுதிங்களாறு முன்றொன்றுநாட்பத்தறிவே.

இ-ள். ஒருசெப்பகலில் பசுவின்நெய்யை யுருக்கி விட்டு அதிற்பூரணச் சந்திரனைபல்லது அமாவாசையின்பொது சூரியனைப்பார்த்தால் அதிற்றோன்றுகிற சந்திரன் அல்லது சூரியன் வெண்மை செம்மையெனில் வாழ்வுண்டாம பொன்மையாகில் கேடு பசுமையாளுல்-நோய், கருமையோ-சாவுவரும், அதிலு-மப்படிச் சாகிறவனுக்குக் காலமெப்போதெனில், தென்புறவட்டங் குறைந்தால் ஆறுமாதம் வடபுறம் மூன்றுமாதம கீழ்ப்புறம் ஒருமாத நடுவே தொள்ளையாயிருந்தால் பத்துநாள் நிறைமதியும் பௌரணை குறைமதியம் அமாவாசை யென்றறிக. எ-று.

சரீரபழுதுமுதலான மரணவிலக்கணங்
கூறுகின்றார்.

அழிந்திடுங்கைகானெற்றி கன்னந்தம்பி
லடர்ந்துதுடிப்புறிவாண் திங்களாறு
மொழிந்ததிங்கண் மூன்றுநாள்மத்திலாவி
முடிந்துவிடுமிதுவொழிய செவியிலோசை
யொழிந்திடுனேழுகண்ணி லொளிதானேந்தா
முபர்ந்தகணமூன்றிரண்டி லுரைவேறானல்
கழிந்திடுநல்லுயிரென்று கருதுமீசன்
கழலிணையைப்போற்றில்வினை கழிந்துபோமே.

இ-ள் கை-கால்-நெற்றி-கன்னம் இவை அடர்ந்து துடித்தால் மரணகாலம் வந்ததென்றறிக, அதிலும் கை துடிக்கில் ஒருவருஷம், கால் ஆறுமாதம் நெற்றி மூன்றுமாதம் கன்னம் பத்துநாள் என்று கொள்ளவேண்டியது இதுவொழிய காதுகேளாவிட்டால் ஏழுநாளில்மரணம கண்பார்வை மழுங்கினால் ஐந்துநாள் மூக்கில் சந்தம்போனால் மூன்றுநாள் வாய்குழறிப்பேச்சழிந்தால் இரண்டுநாள் இதையறிந்து கடவுளுடைய பாதங்களை நினைத்து போற்றி செய்தால் வினையென்பதிராது அங்ஙனே கலந்துபோதலுமாகும். எ-று. 39

உசுவாசநிசுவாசங்களின் பயனுங்கூறுகின்றார்.

போம்வாயுசிவமுள்ளே புகுதற்சத்தி
 போகில்விடப்புகிலமுதம் புகன்றதெல்லாம்
ஆம்வாயுவதிற்போகி லல்லலாகு
 மடங்கில்விடங் கொடுப்போகிலகனுமமபாந்
தேமேவுசத்தியிரண் டொற்றையீசன்
 செவியிற்போவார்வருவர் சாமீனமாகில்
ஓமேவுமுயிர்போகி னேபாமற்ற
 துட்புகினோபாகாமெய் யுரைத்தோனே.

இ-ள். உசுவாசம்-நிசுவாசம் அல்லது ரேசக பூரக காலபலனைச் சொல்லுமிடத்தில் உடலைவிட்டுப் போகிறவாயுவே சிவம் உட்புகுவது சத்தியாம் வெளிப்பட்டுப் போவதெல்லாம் விடமுண்பதற்குச் சரி சரம்உட்பட்டுப்போவதெல்லாம் அமுதமுண்பதற்குச்சரி சரம்உள்ளேபோகும்போது ஒருவன்சொன்னது அல்லதுநினைத்தகாரியம்ஆகும் வெளிகொள்ளுகையில் ஆகாதுஅந்தவாயு கும்பகத் தடங்கில்உண்டவிடங் கெடுமெனச்சரி அடங்கியது நடுநாடிவரும்போதில் பாவமென்பதில்லை இதன்றியில் ஒருவன் வந்து கூறிகேட்கையில் அவன்முதற்சொன்ன கொ

லின் எழுத்தையெண்ணிப்பார்க்கில் ஒற்றைபாகில் சிவன்கூறென்றும் இரட்டையாகில் சத்திகூறென்று ங் கொள்ளவேண்டியது சரம்வெளியேபோகும் போது ஒருவன் வந்து இன்னான் போவானோ வெனில் போவான் வரான் உட்கையில் வருவான் சரம்போகும்போது வருவானோவென்றும், புகும்போதுபோகானோவென்றும், மாறுபட்டு வினவில் சரிப்படாது போகும்போது போவானே யல்லது வாரான் புகும்போது வருவானேயல்லது போகான், சரம்போகும் போய் நோய்தீருமோ வென்னில் தீராது புகும்போது தீருமென்க. எ-று. · 40

குறிசொல்லவும் போர்புரியவு மார்க்கங் கூறுகின்றார்.

உரைத்தொருவனிறைவிற்போய்குறைவிலுறதீதாம்
உபிரில்புறத்துறைத்து நிறையுறமத்திபமாம்
நிரைத்துநிறைபகத்தினின் றிடினன்மைபதாம்
நிறைமதியந்தனிலேகி நேர்ந்திடும்போர்களத்து
சுதைத்தசெழுங்கதிர் வெட்டவல்லவனேதோற்பன்
வாகானசந்திரனே வெல்லமாட்டான்
விரித்தகதிரினிலேகி வெங்கதிரில்வெட்ட
மேனியிலும்வடுப்படான் வெல்வான்றானே.

இ-ள். குறிகேட்கவந்த வொருவன், தன்காரியத்தைச் சொல்லிக்கொண்டேமுன்னர் பூரணத்தில்வந்தாலும் பின்னர் சூனியத்தில் வந்து விடுவானாகில், அக்காரியம்தீதாம் முன்பு சூனியத்தில் நின்றுபின்பு பூரணத்தில் வருவானெனில் மத்திபம் இவ்விரண்டு மாறுபாடுமில்லாமல் வந்தவன் கதறாமல்பூரணபக்கத்திற்றானே யிருந்து தான்வந்தகாரியத்தைச்சொல்

வி முடித்துவிடுவானெனனில் அக்கரு'மம் நன்கினதால் என்றறிக. போர்க்குறிபைச் சொல்லுமிடத்து சந்திரகலையியங்கும்போது சென்று சூரியனியங்கும்போது களத்தினேனில் எதிரி எப்படிப்பட்டவனுனாலும் தோற்பன் இப்படியுல்லாமல் சந்திரனியங்கும்போது புறப்பட்டுச் சந்திரனிற்றினை போர்கலக்கில் தோற்பன் இது நிற்கசூரியனிற்றினை புறப்பட்டு அச்சூரியனிற்றினை போரில் வெலவதினாலும் தன்மேலொரு படைபடாமல் வென்று வருவான் எ-று. 41

போர்வெல்லுமார்க்கங் கூறுகின்றார்.

வெல்வனமிருவர்பே ரெழுத்தினைபுமெண்ணின்
மிதந்தவெழுத்துடைய அ-இ-உ-எ-ஒ-வென்னு
நல்லவெழுத்துடனே ஆ-ஈ-ஊ-ஏ-ஓ-கூட்டி
நலந்திகழ்பாலன்குமர னரசனைவிருத்தன்
சொல்லுமவர்பேரின்முத லெழுத்திலுபிரெழுத்தை
துலங்கியவத்தானத்திற் றுகளறவேகூட்டில்
எல்லைமுதற்றனத்தி லெழுத்துடையோன்வெல்வ
னிருவரையுமிவரார்காமிரட்டையெழுத்தோனே

இ-ள். அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-ஒ-ஓ-இவை முதலானது பாலன்கூறெனவும், இரண்டாவதுகுமாரன் கூறெனவும்-மூன்றாவது அரசன் கூறெனவும் மற்றவிரண்டும் விருத்தன் கூறெனவும் கொள்ளவேண்டியது, அதில்சண்டைகாரனுடைய பேரில் முதலெழுத்தைப் பார்க்கும்போதும் ஆ-வொலியேலாவுடனேயும் ந-யொலியே லீயுடனேயும், ஓ-வொலியேலோவுடனேயுங்கூட்டிக்கொண்டு அவர்களை இவ்வெழுத்துக்களின்படி பாலன்-குமரன்-அரசன்-விருத்தனுக்க பாலன்-குமரனையும் அரசனையும் வெல்வானெனவும்,

விருத்தன், மற்றவர்களால்படுவானெனவுஞ் சொல்ல வேண்டியது, அதிலும் 'எ-ஏ-ஒ-ஓ-விருத்தன் கூறு இவ்விரண்டெழுந்துக்களைக் கொண்டவன் அவர்களாற்படுவான். எ-று. 42

கருப்பக்குறியின்முறை கூறுகின்றார்.

இரட்டையாமுப்பத்திற் கேட்டபிள்ளை
யினிபூரணத்திலாண் சூனியத்திற்பெண்ணும்
மருக்குழலானிடத்துயிரை விடியற்கால
மகிணன்வலத்துயிரதனால் வாங்கநட்பாந்
தரிக்குநிலம்புகன்வெய்யோ ளப்புமந்தன்
சந்திரன்றீவிபாழஞ்சேய் தன்கால்வெள்ளி
நெருக்கியவம்பரம்பூதங் கிழமையிந்த
நெறிநிற்கினன்மைமிக நிகழுந்தானே.

இ-ள். முன்சொன்ன கருப்பக்குறிகளு மல்லாமலிதுவுமொன்றெனக்காண்கயாதெனில், உபயசரங்கள் நடக்கும்போதுகேட்கப் பெற்றபிள்ளை இரட்டைபேறெனலாம், எப்பக்கமாயிருக்கினும் பூரணபக்கம் ஆண்-சூனியபக்கம் பெண் ஆனாலும் மேற்கவிகளிற் சொலபிய பயன்றானு மெனக்கொள்க, இதுநிற்க வைகறைபபொழுதில் மனைக்குச்சரம் இடதுபக்கத்தில்நடந்து பெண்ணுக்கு வலத்தில்நடந்தால் அதை அம்மகிணன் அவ்வலச்சரத்தாற்றானே வாங்கியுட்கொள்ளுமப்பியாசஞ் செய்துகொண்டு வருவானெனில், மனைவியிவள் வயமாவாள் பிறன்முக நோக்குங்கருதது விழையாள் அப்படி வாஙகுவது பன்னிரண்டுதரம் வாங்கி யுட்கொள்ளவென்றுஞ்சொல்லுவார்கள், அல்லாமலும் வாரசரங்கள் எநதெந்தப் பூதியங்களி லுநிக்கவேண்டுமெனில், புதன் பிரு

திவியில், ஞாயிறு-அப்பில், சனியுந்-திங்களுந் தேயு வில் வியாழமுஞ்செவ்வாயும்-வாயுவில், வெள்ளி ஆ காயத்திலுதிக்கவேண்டியது, உதிக்கில் அவ்வாரஞ் சரியாய்நடந்து அதனால்வரும் நன்மைகள் மிகுபல வைவிளைக்கும். எ-று. 43

இன்னதற்குமூல மின்னதென்றுங்கூறுகின்றார்.

நிசழ்புவிக்குமூலநீர் வாயுசீவ
நெறிதாதுகனவிண்ணு நினைக்குங்காலை
புகமுடனேபூதத்திற் குளவேசொல்க
பொருவில்சராசிவெய்யோன் புதுவெண்டிங்கள்
மகிழ்கொள்திரராசியா முபயராசி
மறங்கிளருஞ்சுழிமுனையாம் வாரந்தோறு
பகுதல்படர்துயர்பலிக்கு நிலைமைதன்னைப்
பங்கயவர்தனத்திருந்து பரிந்துபாரே.

இ-ள். பிருதிவிற்கு மூலம்-அ-வா-வா- சீவன்-க-ஆ-தாது-இப்படி-நிரைநிரையே ஒன்றுக் கொன்று ஆதாரமாய்வரும். அவைதலைவிளங்கவிங்ஙனம், விப ரமாய்ச் சொல்லவில்லையாயினும் இதனையும்சராசி யெனப்பட்ட சூரியனையும் திரராசியாகி சந்திரனை யும், உபயராசியாகியசுழிமுனையையும் மற்றவற்றின் பயன்முதலிய கூறுபாட்டையும் பங்கையாதனத்தி லிருந்து பரிவுற்று சிவயோகஞ் செய்தாலல்லதுநன் குணர்தலரிது, உயிர்பாழ்போகாதுசீவன்முத்தனுத லுக்கு அதுமார்க்கம் இல்லையேல் அவம்போகுமெ ன்றறிக. எ-று. 44

மூன்றுநாடிகளின் முறைமை கூறுகின்றார்.

பாதரினைக்கதிர்மதிச்சுதன் வாழ்வுகேடு
பண்டைநிலையிம்மூன்றும் பரிந்துகேட்கில்

மோடருஞ்செல்வம்வரும் வெய்யோனாகில்
வெண்மதியங்கேடாகும் விரைந்துவாயு
தீரமிகுசுழிமுனைதா னாகில்முன்பிற்
சிறுகாலும்பெருகாது தேவராலோர்
போரருகில்வருமெனினு மதியில்வாரார்
பொங்கியசெங்கதிர்வருவர் புகன்றோரோமே.

இ-ள். நாம்சொன்ன இச்சரநூலிப்பரிவுடன்பாரிப்பாயாகசூரியன், சந்திரன்சுழி முனையென்னு மிம்மூன்று நாடிகளுள்ளும் வாழ்வுகேடு நிமையென்கிற மூன்றுகரும நிதானப்பலன்களைக் கேட்குமிடத்தில் சூரியனாகில் நன்மையையும், மிகுந்த செல்வத்தையு மடைவார்கள் சந்திரனாகில் கேடு முதலியகன்னியக் குறைவாகும் சுழிமுனையாகில் முன்உள்ளபடி ஏராமல் குறையாமல் நிறைவாகும், அன்றியுந்தேவாதி தேவர்களாலே வசீகரிக்கப்பட்டவனாகினும் ஜெயாபஜெபத்தில் முன்னிலையில்வருவோ மென்றுறுதியாக சொல்லினுஞ் சந்திரனே யதிகமாக விபங்கிடில் வாரார் சூரியனே யதிகப்படில் வருவாரென்றுகாண்க.

இதுவுமது உபசாந்தங் கூறுகின்றார்.

நாமுரைத்ததொகையளவுஞ் சூரியனோடாம்
னன்மதியமேல்வாயு நடக்குமாகிற்
றமிளைத்தல்கிளையிணைத்தல் பொருடேடாதல்
சாடிவருண்டாதவிவை தப்பதாகும்
போமிடத்தின்மதியாகின் மருந்தைப்போக்கிப்
பொருந்துமடியிரட்டித்துப் போகநன்றாந்
தேமருவுகதிராகி னுயிருள்வாங்கித்
திகழும்வலக்காலொற்றிச் செய்கநன்றே.

இ-ள். முன்சொன்னபடிசந்திரனே யதிகமாய்நட ந்தால் நமக்கு கேடுவருவதல்லாமலும் பநுக்களுக் கு மதுவேவ்வாறும் சத்துருக்கள் தோன்றி வருவது தப்பாது சந்திரனிற்போகவேண்டிய காரியமல்லாத காரியார்த்தமாய்ப் போகும்போது சந்திரனடந்தால் சரத்தைநீளவெளிவிட்டு அப்பக்கக்காலையே இரண் டு மூன்றடி முந்திவைத்துக் கொண்டுபோகவேண்டி யது சூரியனிற்போகவேண்டிய காரியமல்லாதகா ரியார்ததமாய்ப் போகும்போது சூரியநடந்தால் அ ச்சரத்தையேற வுள்ளேவாங்கி அவ்வலதுகாலைமுன் னிட்டுக்கொண்டு போகவேண்டியது அப்படிப்போ கில் போங்காரியம் நன்று. எ-று. 46

சந்திரகலையில் நடக்கும் பூதியங்களைக்
கூறுகின்றார்.

செல்லுமதிதனிலேறி சஞ்சரித்திடவும்வாய்வு
சிவாலயங்கணிமதிற்செய் சாலில்லங்கட்ட
நல்லமுடிசூட்டல்குடி புகுதல்போக்கும்
நயந்துமரம்வைத்தனன்று நளிர்நீதன்னி
லொல்லைநறும்வாவிகுளஞ் சோலைவைக்க
வழுதுரைக்கமனமுளதே லுவக்கவாகு
நல்லமுலிற்றீப்பிணியாங் காற்றிலானை
நற்பரிசோரொட்டகங்க ளுவாயோட்டே.

இ-ள். சந்திரகலையில் பிருதிவுநடந்தால் சிவாலய ம்மதில்-வீடுகெட்டல்-குடிபுகுதல்-போக்கு சாந்திக ழித்தல் மரம்வைத்தல் இவைநன்றும் அப்புவாகில் குளமுதலிய வெடுத்தல்-சோலைவைத்தல்-நிலத்தை உழுதல், விரைக்குதல் விவாகஞ்செய்தல் நன்றும் தேயுவாகில் பிணிதீர்த்தலாம் வாயுவாகில் குதிரை முதலியதேர் கப்பல் ஓட்டலாம். 47

இதுவுமது.

ஓட்டியவானத்திற்செபிக்க விற்போர்செய்ய
வுள்ளன்பின்கலைக்குழைக்கு மீதேசொல்க
நாட்டுமதிவெயிற்கதிரோ னறுகிலந்த
நாடிகளிற்பூரணஞ்சேர் னன்றேயாகு
மீட்டுதிசைபிடிதகவைகள் செயல்களாண்பெண்
ணிபங்கிடலுஞ்சூனியபூரணமெழுத்தும்
வாட்டமறமதித்தெண்ணி நிருமித்தற்கு
வல்லவனேசரம்பார்க்க வல்லனென்றே.

இ-ள். ஆகாயத்தில் மந்திரஞ் செபிக்கவிற்போர் செய்யநன்று இது சூரியகலைக்கு மொக்கும்இதுநிற கச்சந்திரன் றிசையானாலும் அல்லது சநதிரனேயா னாலும் சூரியனேயானாலும் வநதவன் பூரணபட்சத் தினின்றால் அவன்வநதகாரியம் நன்றாம். இதுபோக திசை ஆண்பெண் சூனியம்பூறணம் எழுதது இவை முதலாய்ச் சொல்லபபட்ட இச்சரநூலினுள் நுட்பப் பொருள்களைக்கண்டு இது இன்னதென்றும் அது இன்னதென்றும் நிறுமிக்கவல்லவன் சரம்பார்க்கவல் லவன் அல்லாதவ னென்றறிக.

சரம்பார்ப்போரியல்பு.

நன்றானமறைவல்லோர் குலமானாலென்
னுமுரைத்தசர நூலினடைதப்பாம
லென்றாரும்பார்ப்பவரே பூமிதேவ
ரிசைந்தமானிடப்பிறப்பி னின்பங்கொள்வார்
குன்றாதமாபறவை யெரும்புதாரும்
கொடிமருந்தினளவறிந்து கொண்டுவாழ்ந்து
பொன்றாததெய்வீகம் பொருந்துவார்கள்
புகுவார்கள்முன்பிறப்பிற் புகலாதாரே.

இ-ள். நல்ல பிராமண குலத்தவராய்ப்பிறந்தாலு மென்றும் அல்லதிழிந்த குலத்தவராய்ப்பிறந்துமெ ன்றும் இச்சர நூலுணர்ந்து இதனடைதப்பாமல்பா ர்ப்பவரே பிராமணராவர் சராசரங்களினுடையதன் மைகளை யறிந்தவராக இப்பூமியின்கண் இவரேதேவ ரென யாவராலும் பூசிக்கப்பட்டு வாழ்ந்துபரம்பொ ருளிற்சாயுச்சியமடைவர் பார்க்கமாட்டாதவர் இழிந் தகுலத்தினராய்ப்புண்பிறப்பிறந்து கொண்டிருப்பா ர்கள். 50

இழிறக்கினுஞ் சற்குருமுகத்தாற்
பொருந்தியயிச்சர நூலைப் புகலக்கேட்டு
நன்குணர்ந்துநெறிநடப்போன் யாவரேனு
நாகவனென்றிரண்டில்லை நல்லார்கேட்கின்
பின்பிறக்குஞ்செந்தழலை யடுத்தவெல்லா
மிக்கத்தழல்வடிவான விதமேபோலத்
தன்பிறப்பினிபிறவான் வசமேசாகான்
சடைமேனுமணிந்தசந் திரனெப்பானே.

இ-ள். இழிந்த குலத்திற் பிறந்தவனானாலுங் குரு முகாந்தரமாயிச்சர நூலை சொல்லக்கேட்டு இதனையு ணர்ந்து இவ்வழிநடப்பவன்யாவனானாலும் அவனியா மேயாவன் வேற்றுமையில்லை நெருப்புத்தன்னை ய டைந்தவற்றையுந்தன்னுருவாக்கிக்கொள்ளு மியல்பு போல அவன் யாமேயாவன் அவமாய்ப்பிரந்திறவா ன். இன்னம்விசேஷமாய்ச் சொல்லுகையில் சடாபா ரத்தில் நாமணிந்திரானின்ற சந்திரன்போன்ற என் முடிமேல் வீற்றிருப்பான். எ-று. 51

ஞானசர நூல் சாஸ்திரம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

சிவானந்தபோதம்.

காப்பு.

வெண்பா.

சிவானந்தபோதகமாஞ் சித்திமுத்திதந்து
பவானந்தமானவினை பாழாம்-நவானந்த
ஈசனே தானுரு மேன்வடிவுத்தாளிணையைப்
பாசமறமின்றொழுவார் பார். 1

தியாகரருள்போதஞ் சிவசுந்தரன்சொல்
தயாபரியென்றும்வடிவந் தானும்-செயாவெனவே
பொய்யாவிநாயகனும் பொற்குருவாஞ்சண்முகனும்
அய்யாவுமென்னுள்ளே யாம். 2

முத்திபெறுமென்னெஞ்சு மூர்க்கருடனேவணங்கி
சித்தந்ததும்பிச் சிதருமன்-முத்தனும்
பட்டினத்தார்சாக்ஷிப் பகுத்தறிதலிந்நூலைத்
தொட்டவர்க்குமுண்டாஞ் சுகம். 3

பணியறுத்தாலாகப் பரபோகங்கொண்டு
துணிவுறுத்தநெஞ்சுக்குச் சொல்லின்-அணியாய்
படபடென்னும்நெஞ்சம் பகருசிவானந்தத்
திடமுறுவார்தானே சிவம். 4

சிங்காதனமுடைய செல்வவடியார்கள்
தங்காற்சிரமேற் றரித்திட்டேன்-பொன்கால்
எற்றிப்புகழ்ந்ததன்பா லிந்நூலென்புன்கவியால்
சாற்றத்துணிந்தேன் சரண். 5

நூற்பயன்.

விருத்தம்.

அறிவதனைமனங்கேட்கச் சிவானந்தபோதத்தை யறியநன்ருய், நெறியுடையமுத்தர்கள்தன் திருவடியிற்பணியவருள்நிலைக்கக்காட்டிக், குறியுடனேயனுபவத்து வழியடைந்துகதிபெறவே கூறவென்றும், பிரிவறவேவாழ்ந்துசிவப் பேரானந்தம் பெருகப் பேசுமிந்நூல். 6

ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள் துதி.

நிறைந்தபரிபூரணமாய் நிற்குணமாய்நிர்மலமாய் நித்தனாகித், துறந்தமனத்துடையோர்க்குந் துரியனுமாயதீதனுமாய்ச் சோதியாகிக், கறந்தமுலைப்பாலாகிப் பாலினுள்ளருசிகாட்டுங் கர்த்தனாகிச், சிறந்தகுருமாணிக்க சுவாமிகளையெம்முளத்திற் ரெழுதல் செய்வாம். 7

சமயாசாரியர் மூவர் துதி.

இசைக்குருகிப்பரந்தானை யெழுந்தருளிவேண்டியபேதா ரின்பந்தந்து, இசைக்குளவாயெதிர்த்தவரை மதித்திடாச்சிவமய மேயாயச்செய்து, இசைக்குள்ளோர்புகழ்ந்தேத்தச் சிவாலயத்திற்றேவாரஞ் சிறக்கவோதிப், பசைக்கருதியருள்பெருகு மூவரிணைமலரடியிற் பணிகின்றேனே. 8

புஜவண்ணர் அல்லமாப்பிரபு துதி.

பத்திநிலைதவருமற் கிருபையுமேவழுவாமற் பாரின்மீதே, யுத்திசிவகணேசருக்குப் போதமுற்றுப்பூசைசெய் துகந்துஞானத, தத்துவமேயுணர்ந்துசிவந் தானாகும்புஜவண்ணர் சாக்ஷாத்கார, முத்திதருமல்லமாப் பிரபுசிவரிருவர்தாள் முடிகொள்வாமே. 9

மருத்துமலைதேசிகர் துதி.

பன்னுமறைசாத்திரங்க ளாகமங்கள் விரிந்தநூற் பலத்திற்சென்றே, யன்னுகின்றமனத்தாலே பிறப் பிறப்பாம் நோய்பலவற்றுற்றிடாமற், பொன்னுடை யவம்பலவர் கழற்பணிபச்சிந்தையற்றுப் பூஜைசெ ய்ய, வென்னைதென்றேனையாண்ட மருத்துமலைத் தேசிகன்றா ளிறைஞ்சுவோமே. 10

நூல்.

* அறிவுக்கும் மனத்துக்கும் வாக்குவாதம்

அறிவு கூறுதல்.

ஆனநெஞ்சமே யிமைப்பொழுதாகிலு மலைவறுத் திருந்தாயோ, போனநாளிலே நடந்ததுமிருந்ததும் புதுமைகளறியாயோ, ஈனமாகியகவலையைநீங்கியை ம்பொறியினி லிணங்காமல், தானமொத்துநான் சொன்னமொழிகேட்டுநீ சரியென்றுமகிழ்வாயே.

மனங்கேட்குதல்.

(அவதாரிகை.) ஏதேது விபரீதமாக இருக்கிறது இமைப்பொழுதாகிலும் பிரியாமலிருந்து நீஇப்போ தென்னை அன்னியமாகக்குறித்து சொற்படி கேட் கச்சொன்னதும் சந்தோஷமாயிற்று, ஆகிலும் உத வியான காரியமாக விரும்பிக் கேட்கவேண்டுந்தா னே, ஆதலாற் சொல்கவென்று மனங்கேட்கவறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

முத்துபெறுமழகான நெஞ்சமே பணிபறுத்தே ன்மொழியக்கேணீ, சத்துசித்தானந்த பராபரமே கெதியென்றுஞ் சார்ந்திடாமன், முத்தர்களுநேமாதி

---

* பாக்கள் அறிவுசொல்வது, வசனம் மனது சொல்வது.

வைக்கநூலதனை யாராய்ந்துமுனைந்திடாமற், பத்திநிலைநில்லாமற் சிந்தனையுமோயாமற் பார்ப்பதென்னே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆயினிபாதோ பரத்தைச் சாரவில்லையெனவும், நூலினுட்பொருளையறிந்து முனைகொள்ளவில்லையெனவும, பத்திநிலையி னிற்கவில்லையெனவும் சிந்தனைகளை யறுக்கவில்லையெனவும், சொல்கின்றனவற்றை எக்காலத்திலு மியானறியாதவனாகவிருக்கிறேன், இஃதந்தரங்கப் பாஷையாக விருக்கின்றது. மாடு, மக்கள், பெண்டிர், சுற்றம், வாழ்வுள் முதலியனவே பொருளென்றுன்னி யிருந்தவெனக்கிப்போது திடீரென்று நான்குவகையிற் சிந்திக்கச் சொன்னீர் ஸ்பஷ்டமாகப் புலப்படுமாறு புகல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

மாடுமக்களுஞ்சுற்றமும் பெண்டிருமாளிகை யுடன்வாழ்வும், நாடுராச்சிய மாண்டிடும்புகழ்ச்சியு நம்மதென்றேதேகத்தி, னாடுசென்றுநீ யெனதுடலியானென வுழன்றனுத்திடுநெஞ்சே, வீடுவிட்டுயிரேகிடும்போதினில் வினைவழி நுழைந்தாயே. 3

மனங் கேட்குதல்.

அ-கை. தேகத்தினுள்ளே புகுந்து மாடு, மக்கள், சுற்றம், பெண்டிர், உயர்வாழ்வு, தேசாதிபத்தியம் எனபுகழ்ச்சி முதலியவை சுதமென்றும்தேகம் நான் என்றுபாராட்டி உழலுகிறாயென்றும், முடிவுகாலத்தில் வினைவழியிலே உயிரைநுழைக்கிறாயென்றுரை

சொல்லுகிறாய் நீ இதுகாறுங்கூட இருந்தையாயில்லையா இதுகாறும் யாதும் புகலாதிருந்தவா றென்னை இப்போது இங்ஙனஞ்சொல்லுதற்குக் காரணமென்னையென்றுமனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவுகூறுதல்.

கேணெஞ்சமேபுன்னிட வயதிலேகிடைந்துலேந்தனமின்றுர், வீணிலேபலசென்னமு மெடுத்ததின் மெலிக்கிடும்போது, ஊணிலேனென யானறியாமலே யுக்கமர்நோக்கத்தாற், காணுமிப்படி மானிட தேகமுங் கண்டதுமறிவாயே.

மனங்கேட்குதல்.

அ-கை. அனேகந்தேகத்திற் பிறந்துபிறந்திறக்கின்றதாகவுஞ்சொன்னீர், அவற்றுளிம்மானிட தேக மருமையாக பெரியோர் கிருபாநோக்கத்தாற் கிடைத்ததாகவுஞ் சொன்னீர், அதுதெரியும்படிக்குச் சொல்லுமென மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

நாலுவகையோனியிலு மெழுவகையின் றோற்றத்துநளினமாக, மேலுகந்தமானிடந்தா னெடுப்பவேயருமைபாய் மெய்யனுகி, பாலுபோன் மனமுடைந்தாய் புண்ணியமே யிருந்துபவங் கிழாய்த்தள்ளி, நூலுணர்வதருமைநெஞ்சே யிருவினையிலொருவினையை நொறுக்கித்தானே. 5

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனால் மானிட தேகமெடுப்ப தருமையென்றுசொன்னீர், அதிலும் மெய்யனுகிக் களளமற்று பாவம்போக்கி யுண்ணியமிருந்து நூலுணர்வ

தருமையென்றுங் காட்டுநீர். அப்படியானால்மானிட தேகத்தில்தானே பலவிதமாயருமையாகிய தேகமுண்டோவென்றுமனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவு கூறுதல்.

மனிதரிலும்பறவையுண்டு விலங்குண்டுகல்லுண்டு மரமுமுண்டு, மனிதரிலுநீர்வாழுஞ் சாதியுண்டு அநேககுல மனிதருண்டு, மனிதரிலுமனிதருண்டு வானவருமனிதராய் வருவதுண்டு, மனிதரிலேபிறப்பறுக்கவந்ததேயருமையென வகுத்தார்முன்னோர்.

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனால் தேகமெடுப்பது எவ்விதம் வினையென்பது ஒன்றோ இரண்டோ இதில் சகாயவினையெது வினைவழியாய் தேகமெடுக்கிறது யாராலேயென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவு கூறுதல்.

எழுவகையின் தோற்றமாய்க் கடந்தோறும் பலவிதமாயின்பமுற்றே, பழுதறவேதேகம்வரும் பேய்மனமேநீசெய்தபணியினாலே, உழிதருமிக்காலத்துமொழியாமலிருவினையா லுகந்துநிற்கும், கழிதருமிவ்விருவினையி லொருவினையை நோக்குவதுகடினந்தானே. 7

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனல் என்னாலே வினையுண்டாகிறதென்றுஞ்சொன்னீர், வினையினாலே தேகமெடுக்கிறதென்றுஞ்சொன்னீர், வினைவழியாய்ப் பலயோனிதோறும். எப்படிப்பிறந்து ஜநநமரண முண்டாகிறதென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

மனம்வாக்குக்காயந்தான் மருவுஞ்செய்கை
மலர்மணம்போலுறுஜன்ம மயக்கத்தாலே
இனமாக்கும்பிறவியினி லிழுத்துக்கொண்டே
யெத்தனையோஜன்மத்தி லிறக்கச்செய்யும்
தனவாக்காய்பிரம்மாவுஞ் சிருஷ்டிசெய்ய
தான்றனேவளர்ந்திருந்தத் தரணிமீதே
யினமாக்குமெம்பாசந் தன்னிற்சிக்கி
யிறந்தார்கள்பிறந்தார்க ளின்னம்நெஞ்சே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் பிறந்தாலு மிறந்தாலும்வேதாகம சாத்திரஞ்சொற்படி நடந்தால், தேவேந்திரபதவி பிரம்மபட்ட முதலானது மடையலாமென்று சொல்லுகிறார்களே, அதுசுகமல்லவோவென்றுமனங் கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

முந்தஜன்மமாம் புண்ணியமிருந்திடின் முக்கியமுண்டாகும், பிந்தஜன்மமாம் பாவமேமிகுந்திடிற் பெரியதோர்துயராகும், அந்தகெண்டையு மறுத்திடிலொளிதரு மரன்கழற்றுணையாகும், பந்தமானதோர்புராணம்வேதங்கள் படைத்ததையறிவாயே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் மும்மூர்த்திகள்பட்டமாயிருந்தாலும். தேவேந்திர புகழ்ச்சி பெற்றாலும், பின்னும் பூலோகத்திலே பிறப்பதுண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வாழுமாலய னுருத்திரனிந்திரன் வானவரானாலு
ம், சூழுமாயுகம் பிரளயந்தன்னிலுஞ் சுகமுடன்வா
ழ்ந்தாலும், தாழுமானதொல் லுலகில்வந்துறுவர்க
ள் தரணியோர்புகழ்ந்தேற்ற, வீழும்நெஞ்சமேயன்
விடன்சேர்ந்திடில் விளக்குழிவிழுந்தாயே. 10

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனால் வேதாகம புராண சாஸ்திரங்க
ளுண்டாக்கிவைத்தார் அவற்றாலே என்னபிரயோ
ஜனம் என்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவு கூறுதல்.

ராஜஜன்மத்தைதயெடுத்தும் பவத்தில்கழுகிடா தி
வ்வண்ணமே, திரமதாகவே யீசனுத்தரவிற் செய்ப
வர் புண்ணியமென்றே, வரமுடைத்தகல் வியாசரு
ஞ்செய்தவர் வழங்கிடுமதனாலே, பாவடியையுறமு
ந்தர்க ளிருவினைப் பற்றறப்பார்த்தாரே. 11

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனால் ஒருவர் செய்கிற பாவபுண்ணிய
மொருவருக்கு உண்டென்கிறது எவ்விதமென்று
மனங்கேட்க அறிவு கூறுதல்.

அறிவு கூறுதல்.

வேறு.

ஒருவர்செய்த பாவபுண்ணிய மொருவர்க்
குண்டென்றுசொல்லுகின்ற வூமைநெஞ்சே
தருகுமவரவருயிர்க்குத் துணையார்சொல்வாய்
தந்தைதாய்பெண்பிள்ளை துணையுமாமோ

வருகுமந்தவிபாதிகளும் வினைதானல்லோ
 மக்கள்பெண்டுதந்தைதாய் வாங்கிக்கொண்டு
திருகுமவர்பின்னொருவர்க் கிந்தநூண்டோ
 திருஷ்டாந்தங்கண்டுநீ தெளிந்திடாயே. 13

மனங் கேட்குதல்.

அ-கை. அப்படியானால் புராணங்களிலே ஒருவர் செய்த பாவபுண்ணியம் மற்றொருவருக்குண்டென்று பொய்சொல்லவேண்டிய தென்னவென்றுமனங் கேட்க அறிவு கூறுகின்றது.

பாசபந்தமானதொரு மூடர்க்கிந்தப்
 பதறுதலைவையாட்டால் நம்பமாட்டார்
ஆசைகொண்டுசெய்யார்கள் விகாதஞ்செய்வார்
 அதனாலேபொருத்தம்வைத்துச்சொன்னதல்லால்
நேசமிதுபோலவே பகைத்தார்பாரு
 நீங்கினால்வேறுகெதி நிலத்தோர்க்குண்டோ
மோசமிதுநம்பாதே நெஞ்சேகேளு
 முன்னந்தவற்குச்செய்தபலன் முடியுந்தானே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் ஒருவர்க்கொருவர் நன்மை தின்மைக் கூட்டுறவில்லையே அப்படியிருக்க ஒருகுடும்பத்திலேபத்துஜனங்களில் தாங்கள் ஒன்றுக்கொன்று பிறவற்றிற் கிடங்கொடாமல் உள்ளுக்குள்ளே அநேகவிகற்பத்தோடுமனம்பேதித்து வாழ்கிறார்களே, எந்தப்பற்றுதலைக்கொண்டு ஒன்றுபோ லிருக்கிறார்களென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

பெண்ணாலும்பொன்னாலும் பூமியாலும்
  பெருக்கவேயிச்சைகொண் டொன்றுக்கொன்று
தின்னார்களூறவாடிச் செத்தாரல்லாற்
  சேர்ந்துமனமொன்றாகிச் சிறந்திட்டாரோ
மண்ணாலெபார்த்துநீ சுகங்கண்டாயே
  கவலைக்கேயாளாகிக் கருத்திழந்துப்
புண்ணாகிப்பிறப்பிறப்பிற் புகுந்திட்டாய்நீ
  பூமலர்த்தாடுணையென்று புகழ்வாய்நெஞ்சே.

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனால் வினைவழியே யுபரித் தேகத்தை விட்டினிமேற்றேகமெரிக்கிற தெந்ததேகமோவதை த்தெரியும்படியும் இத்தேகத்தை விடும்போது யாதொரு குறிகளுண்டோ வென்றும் மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வெண்பா.

தேகந்தனிற்பொறியுஞ் சீராம்புலன்கரணம்
ஆகந்துறக்குமப்போ தந்நேரம்—போகமது
எவ்விடத்துச்சென்றதோ பேற்குங்கடவடிமை
அவ்விடத்தைநன்று யறி.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் வினைப்பயனு மறிந்தேன், இந்த அருமையாகிய மானிடதேகம் வந்தது மறிந்தேன் வேதாகமபுராண சாத்திரங்களது, கட்டுப்பாடு மறிந்தேன், பிறப்பிறப்பென்கிற விவரமுமறிந்தேன் வினைவழியே தேகமெடுக்கிறதென்னும் விவரத்தையும்

ன்ருல் வினையுண்டாகிறதென்பதையு மறிந்தேன் ஒருவருக்கொருவர்நன்மை தின்மை-உதவியில்லையென் பது மறிந்தேன், ஒரு குடும்பத்திலே பலஜனங்களொ ன்றுபோற்கூடி வாழ்கிற பந்தத்தையுமறிந்தேன், எ ல்லாமுள்ளபடி ஒத்துக்கொண்டேன், ஆனது திரு வடி நிலைபடைகிறதை சுகமென் றுசைகொண்டே ன் இத்தனைநாளாகவென்னை நம்பியிருந்தகுடும்பத்தா ரெல்லாம் இளமைகளாக விருக்கிறபடியினலேயவர் களைவிட்டுவிட்டால்வேறுகெதியின்றி அவர்கள்வரு ந்துவராதலா லவர்கள் பக்குவகாலபரியந்தமிருந்து காக்கவேண்டுமென்று பரிதாபப்படுகின்றமையா லத ற்கொரு வயணஞ்சொல்லவென்றுமனங்கேட்க அறி வு கூறுகின்றது.

அறிவு கூறுகின்றது.

விருத்தம்.

அவரெல்லாமிருக்கவிப்போ துன்னையேநம
னழைத்துவிடிலிபாதுசெய்வா யழகுநெஞ்சே
யிவர்களுக்குப்பிழைக்கும்வகைத் திரும்பிவந்தே
யேதுவாய்முடிப்பதுண்டோ வெண்ணிப்பாரு
தவறுகேட்டும்விட்டுப் போகும்போது
தான்கூடமாண்டாரோ பிழைப்பில்லாமல்
அவரவர்க்குச்சிவன்றுணையென் றெண்ணிடாம
லேபத்தாலிப்படியே யலைவுற்றாயே. 16

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனலறிபலானேன், இனிமேற்பாசபந்த த்தில் வீழ்வேனே திருவடியை யடையாமலிருப்பே னே ஆனலின்னுங் கொஞ்சக்காலம் பொறுத்துதா ன் திருவடியை யடைவதற்கேது பண்ணிக்கொள்

ளக்கூடாதோ இப்போது தானே துணிந்துகொள்ளவேணுமோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவுகூறுதல்.

காயமனவாக்குதான் றளர்ந்தபோது
 கருத்தழிந்துவுறுதியற்றுப்பாசமீறி
நேயமந்தமாய்கையினிற் பற்றிக்கொண்டால்
 நெற்றிக்கண்படைத்தவர்தா னிலைப்பிப்பாரோ
மாயமனமாயிந்தக் காயந்தானும்
 வல்லமைபோவெத்தனைநாள் வாழுமோசொல்
காயமதுநிலைபல்ல வென்றுமுன்னோர்
 கண்ணொளிமழுக்குமுன்னே கதியுற்றாரே. 17

மனங்கேட்குதல்.

அ-கை. அப்படியானாற் சாலவுமச்சங்கொண்டேன் இனிதிருவடி யடைவதற்குப்போன்றவழி சொல்லென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வெண்பா.

மூர்த்திப்பரிபூரணமாய் மூக்தியடைந்தவர்கள்
சிந்தைமகிழ்ந்தோதுஞ் சிவநூலை-யுந்தியுந்தி
பார்த்தறிநீநன்றாய்ப் பகுத்துப்பகுந்துநெஞ்சே
சேர்த்தறிநீ யென்வசத்திற்சொல். 18

மனங்கேட்குதல்.

அ-கை. அப்படியே சொல்லுகிற சில நூல்களைப் பார்த்தேன், திருவள்ளுவநாயனார் முப்பால்வைத்துக்குறள்சொன்னதிலே துறந்தார்க்குந் துறவாதவருக்கு மிறந்தாருக்கு மில்வாழ்வா னென்பான் றுணையென்று சொற்றன ரஃதென்னதாலெனமனம்வினாவ வவற்றிற் கறிவுகூறுகின்றது.

அறிவு கூறுதல்.

விருத்தம்.

யாவரிருக்குநிலையதனை யவர்க்கேயதனினிலையமரா, மூவர்முதலாம் ரிஷியோர்க்கு முழுக்கத்துறந்தோர் காமியர்க்குந், தேவரீர்க்குந்திறமுதலாய் சிறக்கக்கா ட்டுங்கண்ணொளிபோல், நாவிலிருந்தே அஞ்சனமா ய்நவின்றமொழியென்னுயகமே. 19

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால்முத்திநிலையை மாத்திரம் தனிமை யிற் பேசுகின்ற நூல்தா னெவ்விதமாகச் சொல்லு மென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வெண்பா.

தேகமெடுத்ததுவுஞ் சிந்தையுடைத்ததுவும்
போகசமுசாரத்திற் புக்கதுவும்-தாகமது
கொண்டுதவிர்த்ததுவுங் கூறுங்கனவெனவே
கண்டுசொல்லும் நூலதனைக் காண். 20

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் அந்த நூலும் பார்த்தேன் அதிலு ள்ளபொருளைச் சங்கையற இப்படியிருக்குமென்று தெரிந்துகொண்டாற் போதுமோவென்று அதிவின யத்துடன் மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

விருத்தம்.

அறிவுக்கேகாட்சிகொண்டு நூலைப்பேசி
அங்கத்தைத்தானழித்து அகத்தைநோக்கு
குறிவைத்தபடியிருந்து மெய்யைப்பொய்யாக்
குற்றமென்றேபொய்யைத்தான்பொய்யாய்க்கண்டு

நெற்றியுற்றஇருவினையும் நீக்கிப்போட்டு
நேசமுடனீசனுடன் பாசம்வைத்து
பிறிவற்றுஒன்றாகி வாழலாகும்
பேதித்துப்போகாதே பேணிக்கூடே. 21

மனங்கேட்குதல்.

அ-கை. அந்ததப்படிதானே யனுபவிக்கிறதா மற்றொருவருடைய சகாயமும் வேண்டியிருக்குமா என்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

புகர்சமயமாகின்றபலசமயந்தன்னிலே புகுந்திடாமல், அகச்சமயமாகின்ற சிவசமயத்திச்சைக்கே யகப்பட்டால்நீ, மிகப்பெரிதாம் புத்தியைநீபடைத்திருந்தும் பெரியோரை மேவிடாமல், தகப்படவே பிறவியென்ற நோய்க்குள் சிக்கித்தான் தளர்வதேனோ.

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனால் பெரியோர்களைச் சாரவும் வேண்டுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

பெரியோரைச் சாராமலவர்களுக்கேயன்புசெய்து பேசிடாமல், துரியமாதீதத்தில் சிவபூசைசெய்யாமல் சுற்றிசுற்றி, அறியயனுங்காணாத பரமசிவமென்றதையு மறிந்திடாமல், சரியென்று வினைப்பயனுங்கொண்டதுவே கோலமாய்ச் சாதித்தாயே. 23

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் தெளிந்த பெரியோர்களுக்கு ஜகத்திலேபிரயோஜன மில்லையே எவ்விடத்திலிருப்பார்களோ அவர்களைக்கண்டு தரிசிக்கலாமோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

தெளிந்ததுறவியிகந்தனிலே தேகப்பிராரத்துவ ப்படிக்கு, பொழிந்தேகரணத் தனுவாகப் புவனத் திருந்து மெச்செபலும், ஒழிந்துசிந்தைதெளிவுற் றேறு ஒன்றாகிவமென்றிருப்பார்க, ளிழந்தபெருமவ வைக்கொண் டேறுவார்களிகத்தோரே. 24

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனால் இகத்தில் சஞ்சரிக்கிறதினால்பெ ரியோர்களுக்கு இடறுவாராதோவென்று மனங்கே ட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

கருவியகன்றிவ் வுலகத்தைக் கனவென்றிருக்கக் கருத்ததனுள், ஒருநவைக்கண்டொப் புவமையற்றுள் ளும் புறமபுமொன்றாகிக், குருவைப்பணிந்து பூர ணத்தில் குலாவுமடியார்ஜகந்தனிலே, மருவப்பொ ருந்திவாழ்ந்தாலும் மாசற்றிருப்பார்வல்லவரே. 25

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் விபரீதமிருந்து வந்ததானால் அ தை நீக்கிக்கொள்ள வல்லமையுண்டோ வென்றும னங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

முந்தவிருந்தவஞ்ஞான மூடமானசத்தியையும், பந்தமறவேவதுணிந்து பராபரனைத்தினமும் கைக் கொண்டு, சிந்தைதெளிந்தே குருபரனைச் சிவமே னெபெண்ணு் துணிவதனால், தொந்தமறுத்துச்சிவா னந்தச் சோதியதுவாய்ச் சுகிப்பாரே 26

மனங் கேட்குதல்.

அ-கை. அப்பேர்ப்பட்ட பெரியோர்கள் எந்தச் சாதியாயிருந்தாலுந் தொண்டுபட லாகுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்

சாதிபேதந்தனைக் குறித்துத் தயங்கிமயங்கித்தளராதே, சாதியாவதெவரறிவர் சருவவுடலுமொன்றே, சாதியாவதெவதென்னில் தன்னையறிந்து சிவமான, சாதிபெரியசாதியென்று சாற்றுமறைகள் சத்தியமே. 27

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் பெரியோர்களைசாதிபிரித்து சொல்லுகிறதினாலே குற்றமுண்டோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

ஞானம்பதியாவிழிகுலத்தோர் நாட்டிற்பிரித்தே சாதிதன்னை, யீசனசாதியாரென்றேயிகழ்ந்தார் முத்தர்பத்தரையும், ஆனபெரியோர்தங்களையு மவரிலொன்றாய்க் குறித்துக்கொண்டு, ஈனமுரைத்தேசய ருகாதி விழுந்துபோனாரிகத்தோரே. 28

மனங் கேட்குதல்.

அ-கை. இப்பேர்ப்பட்ட பெரியோர்கள் ஜகத்தோரிகழத்தக்கதாகத் திரிவானேன், ஜகத்தோரிகழுவானேனிதனால் யாவருக்குத்துன்பம் யாவருக்கு இன்பமென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

பெரியோரைப்பித்தரென வுலகத்தோர்கள்
பெயரென்னவிகழ்வதென்ன பிரித்துக்கேளு

திரிவார்களிச்சைபடி ஜகத்தோர்பக்து
தீவினையுநல்வினையும் திரட்டிக்கொள்வார்
சரியாச்செனறிருவினையு மொழித்துப்போட்டு
சச்சிதானந்தமென்ற பதத்திற்சார்ந்து
துரியாதிதப்பொருளைப் பெற்றுமந்தச்
சுயஞ்சோதியாகியே சுகமுற்றாரே. 29

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் பெரியோர்க ளிருவினையும் ஜகத்தோருக்கு ஒப்பித்து சுகம்பெற்றார் களே அவர்களை யிகழ்ந்த வுலகத்தா ரென்னலாபம்பெற்றார்களென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

பெரியோரையிகழ்ந்தவர்கள் பெற்றலாபம்
பேசக்கேள்நெஞ்சகமே பெருமையாக
பரியேறிபோனவன்றான் றீயில்வீழ்ந்து
பதைத்ததுபோலடிவயற்றில் நெருப்பைக்கூட்டி
நரிவாயில்பொருள்பறிக்கு மின்பம்போல
நகைத்திகழ்ந்தே எரிவாயினரகம்புக்கு
விரிவானவெழுநரகில் விழுந்திளைத்து
மேலிந்திடுவாரென்றுமறை விசுந்தானே. 30

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் பெரியோர்கள் மகத்துவ மிப்படியென்று மறியலானேன், அப்படிப்பட்ட மகாத்துமாக்கள் தெரிசனங் கண்டுகொள்ளுகிறதற்கு மார்க்கமுண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

குற்றமேதுங்குறியாமல் குணமும்பலவாய்விரியாமல், எத்துபொறிகள்புலனைந்து முறவாய்மேயுமுகக்

திதனை, பத்தும்பதனமாகத்தான் பட்சமிகவும்வை த்துரைத்தாற், சித்தமதனைச்சிவமாக்குஞ் சிவானந் தபோதமிதே. 31

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனாலிவர்களிடத்திலும் சாத்திரத்தி ன்கேள்விகேட்டுத் தெரியும்படிச் செய்துகொள்ளு கிறதுதானோ, அவர்களாக்கினைக் குட்பட்டு தொ ண்டுபண்ண வேண்டுமோவென்று மனங்கேட்க அ றிவுகூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

ஐயமின்றியுடற்பொருளு மாவிமூன்று
மாண்டவனையுன்னதென் றளித்துப்பின்னுந்
துய்யகுருநாதனுக்கே யடிமையாகிச்
சொன்னபடிகேட்பதற்கே தொண்டனாகி
மெய்யனென்றேயவர்மனமுங் களிக்குமட்டும்
வேண்டினதோர்சோதனைக்கு மிகந்திடாமல்
செய்யதிருமலரடியிற் காத்திருந்தார்
செவியதனிலுபதேசம் செய்வார்தாமே. 32

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் வெகு பிரயாசையா யிருக்கும் போலே இருக்கிறதே சாத்திரங் கேள்விமாத்திரங் கேட்டுக்கொண்டு யுக்தியினாலே அனுபவித்து முத் தியடையக்கூடாதோ குருசமுகத்தில் தொண்டுப ட்டுதான் முத்தியடைய வேண்டுமோவென்று மன ங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

இருவினையுஞ்சமமுடைத்தே யெழுந்துவந்த
வென்குருவாமாணிக்க வீசனார்க்கும்
குருவடிவாயம்பலவ ருபதேசித்த
குறிப்பைத்தானறியாயோ குருட்டுநெஞ்சே
மருவுமிந்தவுடலுக்கு ளுடலைக்காட்டி
வாக்குக்குவாக்கருளி மனமுமொத்து
திருவடியிலடையகுரு முகூர்த்தமல்லாற்
சிவானந்தபோதமுந் தெளிந்திடாதே. 33

மனங்கேட்குதல்.

அ-கை. அப்படியானால் ஞானாசாரியரிடத்தில் அனுக்கிரகம் பெற்றுக்கொண்டால் போதாதோ சாத்திரமும் பார்க்கவேண்டுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

சேறுபோல்தளதளென மலைபூமிக்குள்
இடமானகம்பத்தை நாட்டினாக்கால்
மாறுகொண்டுவிழுந்திடுமென் றதனாற்சுற்றி
மணற்கல்லைக்கெட்டித்து முறைக்குமாபோல்
கூறுகின்றசாத்திரத்தின் சாட்சிதந்து
குலைந்திடாத்திடமுற்றுக் குறித்துநின்று
வீறுகொண்டுநெஞ்சேநீ யனுபவத்தால்
மெய்ஞ்ஞானவீடதனில் விளங்குவாயே. 34

மனங்கேட்குதல்.

அ-கை ஆனால் சாத்திரம் தெரியாதபேர்கள் சற்குருவினிட முபதேசம்பெற்று சாதித்து அனுபவமடைந்தபேர்கள் பெற்ற காட்சிநூலிலுள்ளபோ

ருளுக்கு ஒத்துக்கொள்ளுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

உறுதிகொண்டபிள்ளையென்று வாசான்வைத்த
உபதேசங்கேட்டளவு லுறுதிகொண்டே
இருதயத்தில்காட்டினது நழுவிடாம
லெப்போதும்குருபத்தி தவறிடாம
லறுகவலைசாராம லூன்றப்பெற்றால்
வழங்குநூல்பேசுகின்ற வன்மைக்கொக்கும்
கிருபைதரும்முத்தியே யடையலாகும்
கிட்டினவர்க்கேதுகுறை கேடில்நெஞ்சே. 35

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் ஞானானுபோகம் ஒருவர் பெற்றிருந்தால் பெறாதவர்கள் அந்த வனுபோகத்தைச் சொல்லென்றும் காட்டென்றும் சொன்னா லவர்களுக்கு ஒத்துக்கொள்ளும்படி சொல்லலாமோ அப்படி இப்படி யென்றுங் காட்டலாமோ ஆகிலும்மெய்ப்பொருளினிட பிரகாசத்தைப்பேசினால் மனமொத்து களிப்பார்களோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

ஒருவர் தினமொருவர்சொரிந் தூற்றபோது
வுற்றவர்க்கோசொரிந்தவர்க்கோ வுறுப்பாரு
மருவுமந்தசொப்பனத்திற் கண்டகாட்சி
மகிழ்ந்தவர்க்கோகேட்டவர்க்கோ மதித்துப்பாரு
உருசியுடனறுசுவைகொண் டுண்டவர்க்கோ
உகமையுடன்கண்டவர்க்கோ வூன்றிப்பாரு
தெரிசனமுங்கண்டுசிந்தை யற்றபோது
சிவஞானமவரவர்க்கே தெளியுந்தானே. 36

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனால் மெய்ப்பொருளினுடைய பிரகாசம் அவரவர்கள் கண்டு களிக்கப்பட்டது தானோ வென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவு கூறுதல்.

நீதானேயறிந்தல்லோ நிலைக்கவேண்டும்
நிட்டோர்சொல்லுகின்ற நெறியிற்சென்றாச்
போதாதுபோதாது பொந்துக்குள்ளே
புலியிருக்குதென்னைப் புகுந்துபார்த்தால்
வேதாளமென்றதொரு மயக்கந்தீரும்
மெய்யடியார்மனங்களிக்க மேவிவாழ்வான்
வாதாடிமுத்தர்களை விட்டிடாதே
மனமேநீயுள்ளபடி வணங்குவாயே. 37

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனாற் றனித்தனியே சுகமடைவதாயிருக்க, பெரியோர்க ளொருவர்க்கொருவர் கூடிக்கொண் டானந்தமிட் டுறவாடுகின்றார்களே அஃதெவ்விதகாரணம் பற்றியென மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

மறப்பானமூன்றுடனு மிழந்தமுத்தர்
மனவெளியாம் பெருவெளியில்மருவலாலே
துறப்பானவாகாச மொன்றுந்தன்னில்
சூரியன்றன்பிரகாசத் தோற்றம்போல
சிறப்பாகத்தேகத்தி லிருந்தமுத்தர் [ள்
திருஷ்டியினாற்கலந்தொன்றாய்த் தியானிப்பார்க
மறைப்பானதில்லைநெஞ்சே கண்மணிக்குள்
வன்னியொளிமருவுமந்த வண்மையாரே. 38

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனாற் சாத்திரங்களிலே சரியை, கிரியை, யோகம், ஞானமென்று சாற்றுகின்றதேயவற்றுள் முன்சொல்லிய முத்தொழிலுஞ்செய்து முடிந்தபின்னரன்றோ ஞானமறியவேண்டியது அப்போதன்றோ ஞானாசாரியர் கிருபாகடாக்ஷம் வேண்டியதென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

சரியைமுதன் முத்தொழிலுஞ் செய்கின்றோர்கள்
சாயுச்சியமுத்திரையைப் பணியவேண்டும்
உருத்திரடனமுதளித்துப் பாதபூசை
யுண்மையுடனுபசாரஞ் செய்யவேண்டும்
பரிசைகொண்டுசோதித்து விந்தைசொல்லி
பகைத்துவிடினகைத்திடுவார் பலனோபாழாம்
விரிவுகொண்மயங்காதே யுற்றுப்பாரு
வீணருடன்கேள்விவிட்டு மெய்ம்மைப்பாரே

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனாலவ்வளவு மகத்துவமிருக்கிறபடியினாலேயும் முத்தொழிலினது லாபமுஞ் சுருக்கிலே முடித்துக்கொள்ள லாகாதோவென மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

சாயுச்சியமுத்திரையை யடுத்துக்காத்துச்
சங்கையற்றுத்திருவுளத்துப் பாங்குக்கொத்தால்
சீயுச்சியமாகவென்று கிருபைநோக்கில்
சோனமுத்தொழிலி னிலாபநேர்ந்து

ஸாயுச்சியமாகவே யம்பலத்தான்
மலரடிக்கேயன்பாகச் செல்வாய்நெஞ்சே
பாயுச்சியமாகவே பெற்றோருண்டு
பராபரத்தையடைந்தநின் பண்பிதாமே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனாலித்தகை யனுபவத்தை, யில்லறத்தினின்று பெற்றுளரெவரேனு முண்டோகொல்லோ, அன்றேல்துரவறம்பூண்டு, சந்நியாசியாய்பற்பலவிரத வைராக்கியமும் சர்வசங்க நிவர்த்தியுஞ் செய்து, ஜெகசஞ்சாரத்தைவிட்டகன்று, ஆரணிய சஞ்சாரமுற்று வருபவர்களின் ஞானமென்னுமறிவுபிரகாசமாகிஸ்பஷ்டப்பட்டுளரோவென்றும், இவர்களிலுந் தன்மனதுட் குடிகொண்ட வஞ்ஞானாந்தகாரத்தையோட்டும் வன்மையிலராகி மூடராதலு முண்டோ? வென்றும் மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

சன்னியாசியானதிலு மூடருண்டு
சமுசாரஞ்செய்வதிலு ஞானியுண்டு
முன்னாலேயேதுவாய் பிராரத்துவங்கள்
மூட்டிவிட்டுஞானிக்கு முறைதப்பாது
பின்னாலேயிருவினையுந் தொடாச்செய்து
பெற்றிடுவாராசான்றன் கிருபைகொண்டு
பின்னுமின்னங்களா லென்றெண்ணாதே
பெருஞ்சோதிமுத்திரையைப் பேணிக்கூடே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் இல்லறத்திலே யிருந்தும்ஞானம்பெற்றுக்கொள்ளலா மென்கிறது சுருவர்கவிருக்கின்றதே உலகத்திலுள்ளபலரும் ஞானாசிரியரிடத்தனு

க்கிரகம் பெற்றுக்கொண்டு முத்தியையடைவ தருமையாயிருக்கிறதே, அதிலென்ன பிரயாசையென்றுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

யாவர்களும்பெரியோரை யடுத்துக்காத்து
அவரடிக்கேபணிந்துமிக வன்புசெய்து
ஆவலுடன்பன்னிரண்டு வருடங்காத்து
மப்போதுபக்குவத்தை யச்சோதித்துத்
தேவர்முதன்மூவர்களுந் தேடிக்காணுத்
திருவடியுமுடிநடுவுந் தெரிசிக்கத்தா
னுவதனுலுபதேசஞ் செய்வார்நெஞ்சே
நல்லறிவால்வெகுபூசை நவின்றதாமே. 42

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனல் புண்ணியமிருந்து, சிவசாரபக்தி, நேயம் சிவார்ச்சனை வெகுகாலஞ்செய்து பின்னைநல்லறிவு பிரகாசித்திருக்கும் பேர்களுக்குப்பெரியோர்கள்தெரிசனங்கிட்டும், அப்பேர்ப்பட்டவன் ஆசான் திருவுளத்துப்பாங்குக்கொத்து நடந்துபரகதியடைவானென்று சொன்னது மறியலானேன், ஆகிலும் பெரியோர்களை யடுத்து அவர்திருவுளத்துக்குப்பாங்குபோல நடந்து, தீக்ஷையும் பெற்றுக்கொண்டு ரசாத்தித்திலுள்ள பூட்டை அனுபோகத்துக்கும் ஒப்பும்படி தெரியவுங் கேள்விப்பட்டுக்கொண்டு ஆசாரியரைக் கனியாமல், மதங்கொண்டு, ஆசாரியார் திருவடிகூட்ட மகிழ்ச்சியில்லாமலும், பூரணதீக்ஷையாகாமலும், தட்டிப்போடுகிற துண்டோ வென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

அடியருக்குத்தொண்டாவ தருமைநெஞ்சே
யவரவர்க்குவிட்டகுறை யடுத்தகாலம்
பிடியாமலிருப்பாரோ தொட்டுக்கொள்வார்
பேதமைகளாலுலகம் பிணக்குவந்து
குடியாகுமதனாலே நழுகிப்போவார்
குற்றமறச்சற்குருவைக் குறிக்கச்சொல்லும்
விடியாதகாலத்தி லிருளேயாகும்
விடிந்தபின்புகண்ணுக்கு வெளிச்சமாமே.

மனது கேட்குதல்.

அ-கை. நீர் உலகவிபரீதம் வருகிறதாகவும், அதனாலே ஆசானைவிட்டு நழுகும்போது ஆசானைக்குற்றமாகக் குறித்துக் கொண்டு போகிறதாகவுஞ் சொன்னீர் அறியலானேன், ஆகிலுமிவ்வளவிலே நழுகினாலும், இன்னொரு தேகம் புண்ணிய மிகுந்த மானிடமாயெடுத்து, சடுதியிலே விட்டகுறை குடியும்படி ஞானசாத்திரியார்கிருபையடைந்து,முத்தியடைவார்களோவென்றுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

இவ்வளவுந்தொட்டேகும் போதுமீண்டும்
இகபோகவிபரீதம் வந்தாலுந்தான்
அவ்வளவுந்தான்குருவின் றிருவுளத்துக்
கன்புதவறாமலே யகன்றானாகிற்
றெவ்வளவாய்விட்டகுறை தாகுஞ்சேர்க்குந்
தேசிகனைக்குற்றமென்னில் தெளிந்துமேலாம்
நவ்வளவாயிழிந்துவிடும் பின்னுமந்த
ஞானகுருத்துரோகமுற்று நரகெய்வாரே.

மனங்கேட்குதல்.

அ-கை. ஆனால் ஞானாசாரியரிடத்தி லொத்தாப் போலிருந்துதெரிந்துகொண்டு ஞானகுருத்துரோகி தானே தான் றெளிந்தவன்போலே பேசுகிறானே உலகத்தார்களுஞ் சிறிதுபேர்கள் அதைக்கேட்டு மயங்கி ஒத்து வணங்குகிறார்களே அவர்களுக்கு மிவர்களுக்கு மென்னலாபங் கிடைக்குமென்றுமனங்கேட்கஅறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

புலித்தோலைபசுவுரித்துப் போர்த்துக்கொண்டு
புலியென்றாற்புலியாமோ வின்னுங்கேளு
பலிப்பாகபெண்போலே புருடன்வேடம்
பகட்டினாலவனுருவம் பாவையாமோ
கலிப்பானநரகத்தில் வீழுமாண்பர்
சற்குருவின் றன்னிடத்திற் கற்றுக்கொண்டு
நலிப்பாகப்புலிப்பாயு மியல்புபோலே
நானிலத்தோர்வணங்கினகா லீனமாச்சே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனாலவன்றானுங் குருத்துரோகியானபடியினாலே எவ்வளவு தெளிவாய் பேசினாலும் முத்திவிலக்க னென்பது சரியே, அவன் நிச்சயவானென்று நேசிக்கிறவர்கட்கு என்னவிலாபமென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

மரப்பாவின்முலைபதினிற் பாலுண்டாமோ
மலடிக்குச்சுதனுடைய மகிழ்ச்சியுண்டோ
தூரத்தறியாத்தண்ணீர் பாம்பதன்தலையிற்
றுலங்குமணியிரத்தினமுந் தோன்றுமோசொல்

பாத்திணிடநிலையதனைக் குருமுன்பாகப்
பதியாடமுடனையே பணிந்ததாலே
வியர்த்தமேயல்லாம லுதவிசெய்ய
மெஞ்ஞானமுண்டாமோ விளங்குநெஞ்சே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனாலறியலானேன், ஸ்ரீகட்குஞானம் வாராதென்றும், புருடர்க்குமாத்திரம் ஞானமுண்டெனல் எதனாலே? அஃது விளங்குமாறுசொல்கவென்று மனங்கேட்க.

அறிவு கூறுதல்.

அஞ்சுகின்றபெண்ணென்று மாணென்றுந்தா
னஞ்சுபஞ்சபூதத்திற் பிரிந்ததுண்டோ
நெஞ்சிலுள்ளவஞ்சங்கள் வேறுமுண்டோ
நிறம்வேறோகுணம்வேறோ நேசம்வேறோ
மிஞ்சுகின்றவயிர்தானாண் பெண்ணென்றுண்டோ
மெய்கண்டநூலதிலே பிரிந்ததுண்டோ
சஞ்சலத்தாற்சொற்கேட்டு மயங்கிடாதே
சங்கையறமுன்னூலைச் சார்ந்துபாரே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனாற்பேதமையென்பது மாதர்கணிகல மென்றும ஔவையார் கூறியதென்கொலென்றறிவு வினவமனங் கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

ஆணுக்கும்பெண்ணுக்கு மவ்வொன்றேயாம்
ஆனாலும்பேதைக்குணம் பெண்ணுக்குண்டு
வீணுக்குளெடுத்தசென்ம மனந்தங்கோடி
விலைகைமுத்தியடைந்தவர்களதிலுமுண்டு

ஊனுக்குத்தேடியுண்டு வுறங்கிச்செத்த
வுறுத்தருண்டுபுருஷரிலே யனந்தங்கோடி
தானுக்குஎகசரா சரந்தாநெஞ்சே
சற்குருவுக்கப்படியே சார்ந்துபாரே. 43

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனாலதுவுமறியலானேன், நான்கேட்கப்பட்ட சங்கைக்குச் சரியென்னும்படி சமாதானங் கொடுத்து நன்றாக வருமையாய் தெளிவுடனேயார்சொல்லப்போகிறார்கள், இனிமேல் நடக்கவேண்டியதென்னவென்று குதூகலங்கொண்டு மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவு கூறுதல்.

இன்னமின்னபிறவிதனிற் பிறந்தனன்றோ
வினிமேலும்பிறவாம லிருக்கைநன்றோ
வுன்னுகின்ற நினைவேது கருத்தங்கேது
வோதுகின்றவாக்கேது செவிதானேது
பன்னுகின்றகலையேது பண்தானெங்கே
பாடுகின்றசத்தந்தான் செனித்ததெங்கே
முன்னிலைபாய்ஞானகுரு மொழிந்ததேது
முத்திநெறியாய்மனதே முனைந்துபாரே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனாலெவ்விதத்திலேயும் பார்க்குமளவில் இந்த குடும்பச்சேற்றில் உழைத்துக்கொள்ளுகிறதும், அதற்கொத்தாசையா யுலகத்தார்சொல்லை விசுவாசமாய் ஒத்துக்கொள்ளுகிறதும், துக்கமேயொழியவுள்ளபடிகுடும்பத்தார் என்மேல் பிரியமாயிருக்கிறதேயில்லை எப்படியெனில், நான் சிலநாள் சம்பாதனை யில்லாமலும், தேகசௌக்கிய மில்லாமலும்

ரோகஸ்தனாக விருக்கும்போது சர்வத்திரபேர்களும் என்மேல் மனது சலிப்புற் றிருந்தது கண்டேன், ஏவல் பணிவிடையில் வெறுப்பானதுங் கண்டேன், சாலவும் பிரக்ஞைகப்பி யிருக்கும்போது பெண்டுபிள்ளைகளை எதிர்வீட்டார் ஆஸ்தியைக்கேட்கச்சொன்னதுக்கண்டேன் அவரவர்களழும்போது? ஒப்பனை சொல்லி அழுகிற வயணமுங் கண்டேன், எல்லாம் பொருளையிச்சித்திருப்பதென்று மறியலானேன், எனக்கு உரிமையானபேர் ஒருவரையுங்காணே, னல்லது சிலதுநாளுழைந்து மக்கண்முதலாகியபேர்சம்பாதிக்கச் சாமார்த்தியம் வருந்தனிலும்உழைத்துப் போட்டு அதன்பின் சும்மா யிருப்போமென்றாலும் என்னிச்சைப்படி நடக்கவுமாட்டா அதுவுமறியலானேன் ஆகையால் சத்துருவாகிய இந்தப்பேய்க்கூட்டங்களைவிட்டுப் காயந்தளராமுன் சிவன்றிருவடியடைவதற்கு நீ சொன்னபடி சத்தியமாய் நடப்பேனென்று மனஞ்சொல்ல அறிவு கூறுகின்றது.

பணியறுத்தல்-முற்றிற்று.

அறிவு கூறுதல்.

வேறு.

பொன்னுநெஞ்சமே சொற்படிகேட்கவும் பொருந்திநேயநன்றாக, இன்னமின்னமும் பேதமை கொள்கையோவில்லறந்தனைவிட்டு, தன்னைத்தானறியாமலுஞ்சிவனடிசார்வதுமிழந்தாக்கால், பின்னம்பின்னமா

விரண்டுங்கெட் டானென்றே பேதமை கொள்வா யோ.

மனங் கேட்குதல்.

அ-கை. இதனால் நான் தெளிந்தவிதத்திலே பேதமையென்பதிருக்குமிடமுங் காணேன், சர்வபணியுமறுத்து விட்டேன் ஆனால் தெளிவாய்க் கேட்பதற்குத் தெரியும்படி செய்யுமுதவி வேண்டுமென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

சுத்தநெஞ்சமே சற்குருமலரடி தொழுவகைகேட்பாயேல், பத்தனாகியே மானாபிமானமும் பற்றறவிட்டேநீ, குற்றமேதுமற் றெவ்விடங் காண்கிலுங் கூறுடற்களிப்புற்று, பற்றுமாகியே திருவடி கெதியெனப்பண்புடன் பணிவாயே. 51

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் மானாபி மானம் விட்டு, குருவை யெவ்விடங் காண்கிலு மனோவாக்குக் காயம் ஒத்து அன்பு களிகூர்ந்துஎண்சாண்தேகத்தை இருகையாக்கி நன்மலரால் அவர் திருவடிக்குச்சாத்தி தீர்க்கதெண்டம் பண்ணச்சொன்னீர். அதற்குச் சந்தேகமில்லை இவ்வளவு மிழந்து நான் இதற்கு அஞ்சுவேனோ அப்படியே செய்வேன் ஆனால் அதிகமாக உலகத்தார் இகழத்தக்கதாக குருமிருந்த அசங்கியரூபமாக விருந்தால் நான் பணியுமளவிலேலந்தி நிர்ப்பார்

களே, அல்லது அவ்வாறிருக்கினும் அப்படி தான் செய்தே முறைமையோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

குவலயத்தோர் சொல்கின்ற கேள்வியாலே
கூசுகின்றநெஞ்சகமே கூறக்கேளு
அவலமாங் கடலுக்கு ளாழுமாண்பர்
அபிமானம்வந்துன்னை அண்டித்தானல்
சவலையாய் நழுகிடுவாய் முத்திமார்க்கந்
தான்கிடைப்ப தருமையதைச் சார்ந்தேநீ தான்
சிவனடியை யடைவதற்கு சற்குருத்தான்
றிருவுளத்துக்கொத்தவழி செல்லுவாயே.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனல் சற்குருவின் றிருவடியில் சரணஞ்செய்வதற்கு மார்க்கமுண்டோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

ஓம்நமசிவாயவென்ற வக்ஷரத்தை
உச்சிக்கண்வுருவம்வாய் மூக்குநாசி
தாமதங்களில்லாமல் முக்காலுந்தான்
சற்குருவின்றிருவடியில் தானழுத்தி
நேமமாயிப்படியுஞ் செய்வதுந்தான்
நேரானகாரணத்தின் தீக்ஷையாகும்
ஆம்பின்னேயென்றெண்ணி யிருந்திடாதே
ஐம்புலங்களித்திடவே யாசைவைப்பாய்.

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் சரணதீக்ஷையு மறிந்தேன் செய்யவுந் துணிந்தேன், கருத்தில் செய்யும்படி குறித்தால் போதாதோ, காயத்தினாலு மிருதியாய்வணங்கிக் கொள்ளவேணுமோவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

காயமனவாக்கினா லடைந்தகன்மங்
   காயமனவாக்கினாற் கடக்கவேணும்
காயமனவாக்கினா லொன்றொளித்தால்
   கடமெடுக்கவேதுவாங் கண்டுபாரு
நேயமுளவைம்புலனாற் சூழ்ந்ததுன்பம்
   நீக்குதற்குமுறையிதுதா னினைத்துப்பார்நீ
மாயவித்தையாமென்று நழுகிடாதே
   வஞ்சகத்தைநீவிட்டு வணங்குவாயே. 45

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனைப்படியே செய்கிறேன் இன்னுஞ் சற்குரு திருவுளத்துக்குப் பாங்காய் நடக்கு மார்க்கங்கள் சொல்கவென்று மனங்கேட்க அறிவுகூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வஞ்சனைபொய்சூது கபடங்களைநீக்கி
   மானவபிமானமுதற் பெருமைநீக்கி
யஞ்சுகின்றகோப மாங்காரநீக்கி
   ஆசையதைப்பாதியடி யோடேநீக்கி
துஞ்சவேசோதித்துப் பார்த்தாலுந்தான்
   துணிவாகித் திருவடியே கெதியென்றெண்ணி

தஞ்சமென்றேயையன்று நிழல்போற்காத்து
சரணத்திலேவல்செய்து தழைத்திட்டாயே.

மனங் கேட்குதல்.

அ-கை. அப்படியே தொண்டு செய்கிறதற்குமா னானேன், எத்தொழிலு மில்லாமல் சர்வ ஆசையு மிழந்து நிரந்தரமாயிருக்கிற பெரியோர்களிடத்தில் தொண்டுபட்டிருந்தால், வயிற்றுப்பசிக்கு அன்னம் வேண்டியிருக்குமே யதற்கென்ன வயணமென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

இச்சையுடனெத்தனைநா ளிவ்வுலகில்வாழ்ந்தாலு மிடரேசொல்வார், லச்சைவருமிதனாலேதெளிவுற்ற மனதென்றுநல்லோர்சொல்வார், கச்சடியைவிட்டுவி டுமுப்பொருளோயோர்பொருளாய்த் தனித்துப்பாரு பிச்சையென்ன விசாரமென்னதலைமேலே சுமந்துவ ரப் பெருமானுண்டே.

மனங் கேட்குதல்.

அ-கை. அப்படியிருக்கச் சிவசொரூபத்தைப்பெற் றிருக்கின்றபேர்கள், ஆகாரத்துக்காகப்பலவிதங்க ளான தொழில் செய்கிறதும், சித்துகள்வித்தைகள் செய்கிறதும், பொய்சொல்லுகிறதும், சிவசின்னவே டத்தைக்கபடாகத் தரித்துக்கொள்ளுகிறதும் என் னவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

ஆனைமுத லெறும்புகடைக் கமுதளித்துக் காக்கு மொருவனையல்லால், சேனைவிதமாகவித்தமானிட ர்கள்செய்வதெல்லாஞ்சகத்தின்மாயை, ஊனைமுத ல்சுமந்தவாரார் உண்டபின்புகளித்தவாரார் உற்றுபார

ர்க்கில், தேனையுண்டு ருசிகண்ட திருடனைத்தான் கண்டவர்க்குத் தெரியுந்தானே. 57

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனாலறியலானேன், பெரியோர்களிடத்தில் பக்திவைராக்கியத்துடனே நிமிஷநேரமாகிலும் பிரியாமல் சரணடைந்தேவலுஞ் செய்துகொண்டிருக்கிறவர்களுக்கு எந்தபதவிகிட்டும், எனறுமனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

ஆசான்கிருபைமிகுந்தவனு லந்தவுடற்போய்மறுவுடலில், கூசாதிருந்துந் தன்னண்டைகுறைவொன்றில்லாநிறைவாகத், தேசரநேகர்சூழ்ந்திருக்கத்திருவோலக்கஞ்சேவிக்க, ஈசாவென்றே மறைபோற்றவெய்தும்பரமபதம்நெஞ்சே. 58

மனங் கேட்குதல்.

அ-கை. ஆனால் நிழற்போற் பிரியாமல் சரணத்தேவலுஞ் சலிகாமலும் செய்கிறேன் ஐயோ வெத்தனை பிறவியே எடுத்து வந்து நொந்திருக்கிற நான் இன்னுமோர் பிறவி பிறப்பேனோ, முழுதும் பிறவாமலிருக்கிற மார்க்கமுண்டோ அதைச் சொல்லவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

வேறு.

உடல்பொருளுமாவியுஞ் சற்குருநாதற்கே
வுண்மையுடனுதகத்தால் தாரைவார்த்து
நடமாடும்பிம்மூன்று மெனதென்றெண்ணி
னீயகனுஞ்சிவனையே யடிமையாக்கு

இடவாக்குத்தவறாமல் நிலைக்குநெஞ்சே
　தேகந்தானெறியளவு முதலிசெய்தால்
படமாமரவத்தை யணிந்தவீசன்
　பதம்பெறுவாயுள்ளபடி பகர்ந்திட்டேனே.

மனங் கேட்குதல்.

அ-ஙை. ஆனால் நல்லதாயிற்று, இதுவரைக்கும் நானே உடல் பொருள் ஆவி மூன்றுக்குமுடையவ னென்று நீர்சொன்னபடி கேட்டு சருவசங்கையு மிழந்து நிருவிகாரியாய் என்னசெய்தியென்று கேட் குமளவிலே சீவனுன்டென்றும் சீவனுக்கு உடல் பொருளாவி தொந்தமென்றும் அதைக் குருவுக்கு த்தத்தஞ்செய்து சீவனை அடிமையாக்கி ஆசான் சொற்படி நடந்து ஜீவசனிக்கிறதாய்ச் சொன்னீர், மகாசந்தோஷமாயிற்று அப்படியே சீவன்முத்தி ய டைகிறதானால் நானித்தனைப் பிரயாசைப் படவே ண்டியதென்ன? நான்-நீயார்? இவ்வளவு நான் சந் தேகமற்றுத் தெளிவுகொண்ட லாபமென்னவாகப் போகிறதென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்

சீவனே நீயாகு மறிவுநீயாஞ்
　சிவன்றானே நீயாகும் பரமுநீயாம்
தாவின்றிசெபனுடனே மனதென்றுன்னை
　சாற்றியதோர்காரணமாஞ் சர்வசங்கை
மேவி[illegible]மொழிகிறது முனதாலெனெஞ்சே
　மெய்யெல்லாமுன்சொற்படியே மேவினுக்காச்
நாவுகள்[illegible]விக்கின்ற பேதமற்று
　கா[illegible]மூலாம் நாடிப்பாரே. 60

மனங் கேட்குதல்.

அ-கை. ஆறு லறியலானேன், இனி உடல்பொருளாவி மூன்றும் குருவுக்குத் தத்தமபண்ணச்சொன்னீர், இந்த மூன்றையுந் தெரியப்படுத்துமென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

உடலென்றாற்சடாதார உடலேயாகும்
  உயிரானபிராணனே யாவியாகும்
இடமாகவிரண்டையுந்தா னெனதென்றுற்ற
  ஜீவனேசிற்றம்பலம் பொருளதாகும்
அடவாகவிம்மூன்றுங் கொடுத்துத்தன்னை
  அடிமையெனச் சத்தியமாயிருந்தால்நெஞ்சே
இடமானகதிபெறவே யுபதேசிப்பார்
  இப்படியேகுருபதத்தி லிஷ்டம்வையே. 61

மனங் கேட்குதல்.

அ-கை. அப்படியே செய்யலுற்றேன், இனி தீக்ஷையென்பதும், நூலென்பதும், குருசொல்லென்பதும், சாதகமென்பதும், முத்திவீடென்பதும், தெரியச் சொல்கவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

தீக்ஷையது நூலாகும் நூல்விளக்காம்
  திறமானசற்குருசொல் லுபாயமாகும்
தாக்குகின்றசாதகந்தா னேணியாகும்
  சபையென்றவெளிதானே வீடதாகும்
மார்க்கமென்றறிதுநெஞ்சே முன்னோர்கூட
  வாழ்ந்தவருமிப்படியே மருவிப்பாரு
நோக்கையிலேயிதிலொன்று நழுவிற்றானல்
  நொந்துநொந்துபிறவியினி லுழைக்கும்பாரே,

மனங் கேட்குதல்.

அ-கை. எல்லாம் உள்ளபடியென்றறிந்துகொண்டேன், இனிமேல் சற்குருவினுடைய திருவுளமகிழ்ந்து நான் கடைத்தேறும் பொருட்டாய் உபதேசம் செய்யும்படி சொல்லுவென்று மனங்கேட்க அறிவு கூறுகின்றது.

அறிவு கூறுதல்.

அப்படியேசெய்விப்போ மழகுநெஞ்சே
 யாசான்றன்றிருவடிக்கே யன்பதாக
வெப்படியாகிலுமுன்னை மாயைகிட்டி
 யிதம்போலாம்ஜெனனமதற் கிடங்கொடாதே
செப்படிபோல்வந்தொரு ஜெனனநீங்கி
 சிவானந்தபோதமாய்த் தெளிவாய்நீயும்
மைப்படியுங்கன்னிபங்கன் குருவாய்வந்து
 வாதனையைத்தீர்த்திடுவார் வணங்குவாயே.

பொது கவனிப்பு.

அ-கை. இதுவரையிலுஞ் சீவனைப்பின்னிட்டு மனதை முன்னிட்டு, சற்குருவைப்பின்னிட்டு, அறிவு முன்னிட்டுக்கொண்டு மனத்தினுடைய பிணியறுத்து சற்குருகடாக்ஷம் பெற்றுக்கொள்ளும்வகைகூறினது, இனிமனதைப்பின்னிட்டு ஜீவனைமுன்னிட்டு ஜீவனுக்குள் மனமொடுங்கி முத்தியடையத்தக்கதாக அறிவைப்பின்னிட்டு சற்குருவைமுன்னிட்டு அறிவை சீவனுக்குப்போதித்து நீ நானென்று இரண்டில்லாத பரிபூரணமாய் ஆக்கும் பொருட்டு சீவனுக்குக் குருசிவானந்தம் போதிக்கு மார்க்கம் கூறுகின்றது.

ஜீவன் சொல்லுதல்.

ஆதியேயந்தமே யருமையான
 வருட்கடலேபையனை யகண்டமுற்ற

ஒப்பவேயுடற்பொருளு மாவிமூன்று
முதகத்தால்தாரைவிட்டு வுனைநானென்று
செப்பவுந்தானுவிழந்தே யடிமையாகிச்
சிந்தையுற்றுச்சிவமாகி வாழ்கநீயே. 67

ஜீவன் சொல்லுதல்.

பாக்கியங்கள்பெறவேண்டி குருவடிக்கு
பதறியேவந்ததொரு பாரிலுள்ளோர்
வாக்கினுல்மனத்தாலுஞ் சாதகத்தின்
வருத்தத்தாற்சிதறினபே ராராரையா
ரோககினை திற்றவருமற் பிடித்துமுத்தி
துணைறிவாற்பூரணத்தை யடைந்ததாரோ
பாக்கியரோ மைந்தர்களை யறியச்சொல்லும்
தயாபரனேகுருமூர்த்தி சொல்வாய்நாதா. 68

குருசொல்லுதல்.

எத்தனையோமைந்தர்களைப் பெற்றேனப்பா
வெடுத்துரைப்பேன் மதலையேயின்பமாக
பத்திவைராக்கியமு நழுகிடாமல்
பாரிலுள்ளோர்தங்களுக்குச் சொந்தமாக
முத்திபெறுமணக்கண்ணும் பிரகாசித்து
மூதறிவால்தத்துவத்தை முழுதுமான
சத்து சித்தானந்தமுமாய்ப் பூரணத்தைச்
சார்ந்திட்டான்குழந்தையென்றதங்கந்தானே.

ஆமென்றவந்தவர்க ளின்னமுண்டு
அரைவர்க்குத்தீக்ஷைவைத்தோ மன்பதாக
ஓமென்றமுத்திநெறிக கொவ்வுவாரே
ஒதுக்கியேபதுங்கியே யோடுவாரோ
நாமென்றவசங்கொண்டு நழுவிப்போனார்
நாதனையேபூஷித்து நலம்பெருமல்

சோதியைச்சொரூபமே சுதந்தரத்தைக்காட்டும்
சுத்தவெளிச்சத்தினை சுப பிற்பரங்கும்
பாதியையாமனை பாரின்மீதே
பரம்பொருளைச்சுதந்தரமா மெய்ஞானத்தை
ஊதியையென்னுடைய பிறவிநீக்கும்
நிச்சயமேதிருவடிக்குச் சரணஞ்சரணே. 69

குருசொல்லுதல்.

தீக்ஷைமுறையாகவே சரணஞ்செய்து
செல்வனைஞானமென்ற தீரம்பெற்று
பாக்கியமாய்மெய்ப்பொருளைக் கொள்ளவேண்டிப்
பாரினிலெவருபேர்கள் பதைத்துவந்தார்
பாக்கியத்தாற்சித்தியினார் சிலதுபேர்கள்
பாழ்மனைத்தாற்சிதறினார் சிலதுபேர்கள்
தாக்கியதோர்சாதகத்தில் தளராமற்றான்
தவறுண்டேபோயினார் சங்கையுற்றே. 70

சங்கையதுவிட்டார்போற் றொண்டுபட்டு
சாத்திரத்தின்பூட்டுகளைத் தெரிந்துகொண்டு
மங்களமாய்த்தீக்ஷைதனைப் பெற்றுநன்றாய்
வையகத்தின்சுழலினிலே மயங்கிச்சென்று
பங்கயமாயபிமானத் தொழிலேசெய்து
பதுங்கினார்குருமுகத்துச் சாகாமற்றான்
திங்களணிசடையார்தன் பாதஞ்சேர
தீவினையில்மெலிந்திட்டார் சிலதுபேர்கள். 17

அப்படியேநழுவித் தடத்தைவிட்டே
யம்பலத்திறகாமற் காலன்பாசத்
தப்பவகையறியாமற பிறவிதன்னிற்
சாருவைபோதிலேகொண்டு சாதிப்பாயோ

போமென்றே றசள்ளவில்லை யவர்கள்தானே
பொல்லாங்கைக் குறித்தல்லோ போய்விட்டாரே.

நிலைக்கவென் றுவந்தவரில் தவறிப்போன
நெஞ்சரைச்சொல்லக்கேள் நினைவாய்நீயு
முலைகருதிக்கைபிடித்துப் பாலுண்ணாமல்
முடத்தால்நானென்ற வகத்தையுற்று
சலைகருதிநில்லாமற்சாதிக்காமல்
கற்றபொருள்போதுமென்ற பெருமைகொண்டு
கொலைகள்வாய்வஞ்சகத்தை விடாமற்றானே
குலைந்திட்டான் வைத்தியலிங்கன் குருசன்றானே.

ஜீவன் சொல்லுதல்.

அப்பனேமைந்தர்கள்தன் றிரத்தைக்கேட்டு
அறிந்திட்டேன்முத்திபெற்றோர்க்கடியேன்றானே
செபபமாஞ்சரணங்கள் கோடிசெய்தேன்
சிதறினவர்பால்மனமுஞ் சொல்லவொட்டேன்
கோப்பெனவேயென்னையாள விங்குவந்த
கொற்றவனேயுனைப்போலத் துலக்கங்காணேன்
இப்பவேயடிமைகொண்டு காக்கவேண்டி
யிரங்கியேயருள்புரிவா யெந்தன்கோவே. 72

அறிவாளனாகியே பணியறுத்து
அச்சங்களெல்லாந்தா னறுத்துபபோட்டு
குறியாளனாகவே துணிந்துவந்த
கொடும்பாவியென்னையாளக் கூச்சமென்றே
தறியாளனாகின்ற வுலகத்தேதான்
சங்கையதுவந்தாலுந் தாளமாட்டேன்
முறியாளவந்தகுரு நாதாவுந்தன்
முகிழ்மலர்த்தாள்கதியென்றுமுளைந்திட்டேனே.

குருசொல்லுதல்.

நிலமதனைச்சலக்கினாற் சுத்திசெய்து
நிராமயமாங்கணபதியை நாட்டிவைத்து
பலமுடையசோதிமலர் சாத்திமிக்கப்
பரிவானபுகைதூபங் காட்டிப்பின்னாந்
தலமுடையவெளியதனை நிவேதனஞ்செய்
சரணஞ்செப்பென்மகனே புபேதசிப்போம்
பிலமுடனேயிடம்வலமாய்ச் சுற்றிவந்து
பெருவிரலைப்பற்றிக்கொள் பேரின்பத்தே. 74

அன்புடனேயுடல்பொருளு மாவிமூன்றும்
அறுதிபாயருத்துவிட்டு நீதானேயா
தென்புடனேயடிமையெனச் சத்தியஞ்செப்
பிதருமல்நில்லப்பா தீக்ஷைவைப்போல்
பின்புந்தன்செவிதானே யோனியாக
பேசுமெந்தனுவுதா னிலிங்கமாச்சு
இன்பமுடனனுபோகத் திருக்கவென்றே
இருசெவியிலுபதேச மேற்றுவோமோ. 75

ஜீவன் சொல்லுதல்.

அப்படியேபஞ்சசித்தி பூசைசெய்தேன்
அழகாகச்சாரணங்கள் பிரகாரஞ்செய்தேன்
செப்பினதோர்பெருவிரலைப் பற்றிக்கொண்டேன்
தேகமுடன்பொருளாவி தத்தந்தந்தேன்
ஒப்பதுவாயானுமே யடிமையானேன்
புகழுமுகத்தடைவரினு மசையாதிற்பேன்
தற்பரனே தீக்ஷைசெய்யுங் கருணைவைத்து
சற்குருவேதிருவடியிற் சரணென்றேனே. 76

குரு சொல்லுதல்.

ஞானமென்பதில்நால்வகையுண்டதை நாமுரைத்
திடக்கேளாய், தானமுற்றனர் சரியையுங் கிரியையு

ஞ் சாரூபமேசிவயோக, மோனமுற்றே மெய்ஞ்ஞானமோனங்கதாமுடிவானதைப்பெறுவாயே, யினைதற்றறிவன்மைத்தனையுமனிட. வின்பமேதுரைப்பாயே. 77

ஜீவன் சொல்லுதல்.

தேசிகாவிந்தநால்வகையென்றதைதெரியவுமுரைத்திட்டால். போகமாயின்பமுற்றிருப்பதுதனையொழிந்திடுமெனக்கேட்டேன், ஆசையற்றதாயிருந்திடுமுழைத்திட வதிசயங்கொள்வேனுன், நேசமுற்றதிற் பத்தியேயுறைக்கிடில நிலைத்திடுமையாவே.

குரு சொல்லுதல்.

அங்கசுத்தியு மாலயந் தொழுவதுஞ் சரியையென்றறைவார், மங்களத்துட னட்டமாசித்தியும் வரையுஞ் சக்கரபூசை, பொங்குமானது கிரியையாம் வாயுவை யிரண்டிடாதிழுத்திட்டு, தங்கிநின்றதோர்யோகமெனறிதனையே சாற்றிடு மறைதானே.

ஞானமேயிதனைக் கேட்டிடின்தத்துவ நாடனைவுணர்ந்திருந்த, ஊனைநாடினை வுரைத்ததையகன்றுபின்னொருவறக்தனைக்கண்டு, மானம்வெட்கமுந் துக்கமுங்கவலையும் வஞ்சனைதான்போக்கி, யீனமற்றுநான் சிவமெனத்துணிந்தது மிழந்தது முடிவாமே.

ஜீவன்கேட்கக் குருசொல்லுதல்.

இந்தநாளினிலின்பமுற் றிருக்கையிலிச்சடம்விழுந்திட்டால், தொந்தமானதோர்பலனென்னதெரிந்திடச்சொல்லுவாய் குருமூர்த்தி, சொந்தமாகவேகேள்மகனேமதன் சுகமதையறிவிப்போம், தந்தனங்களாய் விடாமலேகேட்பது சரியெனமகிழ்ந்தேனே.

சரியையென்பதுகுறைவறச் செய்துமே தன் கடம்விழுந்திட்டால், கிரியைசெய்பதமே பெறுத்திடுங்க

டமது கிரியையு முடிந்தேதெனில், உரிசையாகிய யோக மேசெய்யவு முடலெடுத் துழைக்குங்காண், பரிகொ ள்யோகமு முற்றவுமுடிந்துடற் பாரினிலுறுவாமே.

ஞானமேபெறவெடுத்திடுமவ்வுடல் நழுவிடாதுனை த்திட்டா, லீனமாகிய செனனமும்போக்கிடுமீசனே தானுகி, வானமுற்றதோர் சச்சிதானந்தமாய்வாக்கு மைக்கெட்டாத, மோனமுற்றுதா னெங்குமாய் நி றைந்தது முத்தியென்றுணர்வாயே. 83

ஜீவன்சொல்லுதல்.

அப்பனேயென்னை யடிமையாய்க் கொண்டவோரமு குள்ள குருமூர்த்தி, தப்பவேகெதி வேறெனக்கில் லையின் றுளதுகதியென்றே, ஒப்பவேஞானமு மு ணர்ந்திடி லுகந்தநி லூன்றிக்கொண், டிப்பவேபரி வீடதிலேகுவ னீசனேயருள்வாயே. 84

குருசொல்லுதல்.

வேறு.

தத்துவமேயுடற் றானெனுமனது தன்னையழித் திடுநீ, சித்ததுவாய் பிராணவிரா னதில்திரண்ட தைக்கண்டிடுநீ, கற்றுமேகானைக்கண்மணியானதை கண்டுதெளிந்திடுநீ, முற்றுசிவானந்தத்தைபோதக மானது முத்தியுமிதுதானே.

வேறு.

அறிவுபோதகமென்ற நூலைப்பாரு
அதற்குமுன்னேஉடலறியும் விளக்கம்பாரு
பிறிவின்றிமேவிவிளைறி மறைப்புகுன்றிப்
பேரின்பவமுதமன்ற பெய்தநூல்தான்
நெறிகொண்டவந்நாலை யிசைந்துபாரு
நிலைக்கவேயப்படியே நிகைக்கவைப்போம்

பொறிவிட்டுசபைபுகுவான் பிக்கோயில்லை [ள்ளே
பெரும்பொருளைக்கொண்டு பிழைத்துக்கொ

ஜீவன் சொல்லுதல்.

அப்படியேபோதித்த முத்திபெறறேன்
அரியயனுங்காணாத வடிவங்கண்டேன்
தப்பியேயிளைக்காமற் பிழைத்துக்கொண்டேன்
சஞ்சலத்தையிழந்துநான் சுகத்தைபெற்றேன்
ஒப்புவமைசொல்லவொரு வகையுங்காணேன் [ன்
உனைப்போலேதெளிவுரைக்குங் குருவுங்காணே
செப்பவேநாவிழந்தேன் பரமானந்தத்
தீயிலேசேர்ந்திட்டேன் வாழ்ந்திட்டேனே. 87

ஞானியென்றபெயர்களையே கண்டுகொள்ள
நல்லதொருகண்பெற்றேன் பேசவென்று
வீணமறசொற்கற்றேன் சிரவணத்தால்
ஏகாந்தபாசுவண மெய்தலானேன்
மானமற்றவடியரு[illegible]றைசைகொண்டேன்
மருவுமுடல்குருவுக்கே வணங்கப்பெற்றேன்
தானமுறறேன்சிவானந்தந் தனிலேநின்றேன்
சச்சிதானந்தமென்றே தழைத்திட்டேனே. 88

வாழ்வுமுதற்சம்பத்தை மதித்திடாமல்
மலைமேலேயேறினதோர் பறவையானேன்
தாழ்வுகளாயுலகோர்சொல் நிந்தையெல்லாம்
சகாயமென்றேயெண்ணிச் சந்தோஷமானேன்
வீழ்வதருணரகிலுள்ள மாண்பர்க்கெல்லாம்
வீழாமலேமனிதர் மேலுமானேன்
ஏழுலகும்மேலேழும் நானேயானேன்
ஏகாந்தத்தீவினிலே யிறங்கினேனே. 89

குரு சொல்லுதல்.

மைந்தனேயுனைப்போல வோடிமென்ன
வாதனையேதீர்த்துமதி மயங்கிடாமல்

பந்தமறுத்தேபின்பு ருநனைவத்தேடி
பரமாகிவாழ்ந்தவர்க ளுண்டோவப்பா
சிந்தையற்றபெரியோரை வணங்கிக்கொள்ளு
சிவஞானிதனையுடனே நேசஞ்செய்தே
எந்தனைப்பெற்றவனே யப்பாவப்பா
வெடுத்தணைத்தேயம்பரத்தி லிருப்போம்யாமே.

ஜீவன் சொல்லுதல்.

வெண்பா.

மறந்தேனோர்வார்த்தை மகிழ்ஞானமூர்த்தி
துறந்தேனினித்தெரியச் சொல்வாய்-சிறாதிலகு
பத்திசெய்வோருக்குப் பலனேதனைக்கெடுக்கும்
குத்திரருக்கென்ன குணம். 91

குரு சொல்லுதல்
விருத்தம்.

எண்ணிலாத்தலங்க ளிபாகங்கள்செயினு மீஸ்வ
ர விஷ்ணுவாலயங்கள், பண்ணுலாக்கவிதை பாடி
னு மனேகர் பாரினில்வருபலனேது, கண்ணுலாவிய
நச்சுருதிமெய்ப்பொருளைக் கண்டாரடியாருக், கு
ன்னலாமென வமுதளித்தலனைட பலனுரைக்கவு
முடியாதே. 92

வேதாகமசாத்திர புராணங்கள் விரிந்தநூலறிந்தி
டாவிந்து, நாதமேயுருவா மத்விதானந்த ஞானமே
பெற்றிடவேண்டின், ஓதவல்லவர்சத்துச்சிதானந்
த முள்ளநல்லடியார்க்கும், பாதபூஜைகளடங்கலு
ஞ்செய்தவர் பலனுரைக்கடங்காதே. 93

கலித்துறை.

அன்னமளிப்பாரைக் கலைப்பாருமித்தவவனிமிசை
பின்னலவர்க்குப்புரிவார் நினைப்பாரிகழ்ந்திடுவார்
மன்னவராயிருந்தே மறிப்பாரையுமறவியினி
என்னென்னவேதனைசெய்தான்முடிவிலியம்பரிதே.

சிவனருள்பெற்றுயர்மேலோர் தமக்குஞ்சிவனையு ன்னி, தவஞ்செயுமன்பற்குச் சிவவேடம்பூண்டக ன்னியற்கு, மூவந்தேபணிபுரியார்மே லுலகருண் மைத்தாய், அவஞ்செய்தவரை யிகழ்வோரடையவ ராகுநரகே. 95

பெரியோர்க்குத் தொண்டுசெய்வாரைத் தடுத்தி டும்பேதையரும், சரியாடுநிலை சார்ந்தவர்க்கல்லல் சமைப்பவரும், பரிவானதீட்சைகொண்டாரே மறி க்கும்பாதகரும், எரிவாய்நாகத் தெண்ணிறுபரிவி ருப்பரென்றும். 96

வெண்பா.

இந்நூலைப்பார்ப்போர் எடுப்போர்படிப்போர்
நன்னூலெனமதி னுடுவோர்-பொன்னூற்
படிபேறித்தாண்டிப் பவசாகரத்தைக்
கடவுளர்க்குமுன்னிற்பர் காண். 97

சந்தேகமாதிகளைச் சாராமலையகற்றிப்
பந்தபாசங்களைப் பாழாக்கும்-இந்நூல்
எந்தநாளுமமழியா யேகாந்தவீடதனைச்
சொந்தமாக்குமெனவே சொல். 98

கலிவிருத்தம்.

அரனங்கிரிவாழி யம்பிகைதான்வாழி
பெருமான்பதமவாழி பிள்ளைசரணம்வாழி
பரமேட்டியடிவாழி பாரதிபாதம்வாழி
கரிமுகன்கழல்வாழி கந்தன்திருவடிவாழியே. 99

கொச்சகம்.

வீர்ன்வாழிவானையளி மாதவரும்வாழி
கோன்வாழிகுருவாழி குவலயத்தோர்வாழி
ஆன்வாழி மார்முக விருடிசித்தர்வாழி
நான்நீயெனதற்ற நாதாக்கள்வாழி. 100

சிவானந்தபோதம்-முற்றிற்று.

உ

சிவமயம்.

பதினெண்சித்தர்கள்

பெரிய

ஞானக்கோர்வை.

மூன்றாம்பாகம்.

இஃது.

வா. சரவணமுத்துப்பிள்ளையால்

ஞானவான்களுக்கு உபயோகமாகும்பொருட்டு
சில ஏட்டுப்பிரதிகளிலிருந்தும்
அச்சுப்பிரதிகளிலிருந்தும் நூதனமாகசேர்க்கப்பட்டு
26-சித்தர்கள்பாடிய மூன்றுபாகமும்
ஒரேகட்டடமாக அச்சிட்டது.

சென்னை

வித்தியாரத்நாகர அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

40

புனுகு சுகந்த எண்ணெய்.

இந்த எண்ணெயிலிருக்கும் பரிமளமான து டனேராஞ்சித மலரைப்போல பலவித வாசனையைக் கொடுக்கும். சில வாசனை எண்ணெய்கள் கூந்தலில் தடவிக்கொண்ட சற்று நேரத்திலேயே மாறிவிடுவதுண்டு. இந்த எண்ணெயை கூந்தலுக்கு தடவிக் கொண்டு உங்கள் வழக்கப்படி எத்தனை நாள்பொறுத்து தலைமுழுகினபோதிலும் இதன் பரிமளத்தைப் பார்க்கலாம்.

ஒரு டப்பியின் விலை ரூபா—1.

என்னுடைய பெரிய கேட்லாக் வேண்டுமானால் அரையணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பி. நா. லோகநாதமுதலியார் அண்டு கோ,
'நாராயணவிலாஸ்'
பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதராஸ்.

இராயவேலூர் முனிசிபல் ஆபீசு
இரத்தின முதலியாரவர்கள் இயற்றிய

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

உலகிலோர்சாரா லுண்மையெலாமுணர்ந்த தன்
மே நிஜானந்தபோதந்தன்னை, நலம்பெறவேயடைவ
ரெனச்சித்தர்சொன்ன நன்னூலையாராய்ந்து நயப்பி
னோடு, திலதமணி முகம்போலத் தெளிவாயார்க்குந்
தெரிந்திடவே வெளியிட்டான்றிருத்தமாகப், பலக
லைகளுணர்ந்த பண்டிதனாயிந்தப் பாரிலருணாசலப்
பேர்படைத்தானன்றே.

உருவாயவன்னமாதிபஞ்சகோச மொன்றொன்றா
ய் நீங்கியதை யுணர்வறிவுதானாய், இருவாதனைநீங்
கி சகலகேவலமும்யிராப்பகலில்லாத நிட்டையினிலி
ருந்தெப்போதும்பொருவிலாநிரதிசய வானந்தமேவு
ம்புண்ணியர்களெச்சமய சாதிகளிலேனும், நிருபாதி
கப்பிரமவாருதியின்மூழ்கு நிலைமையரேபிரமகுலநிக
ழ்த்தவும் தகுமால்.

நல்லோர் பிரர்குற்றம் நாடார் நலந்தெளிந்துகல்
லார்பிரர்குற்றம் காண்பரோ ஆதலினாலேஇன்னூல்
கண்ணோக்குறும் அன்பர்கள் இதிலடங்கிய நன்னி
லையுண்மையினை அனுபவம்பெற்ற அஷ்டமூர்த்த
மாயும் சத்துசித்தானந்தமாய் விளங்கும்பெரும்
பொருளின் திருவருள்விலாசமுற்று மார்க்கண்டர்
மதியின்கலைசோடசமும் குரவிலாநிலைபெற்றா எண்
ணும்-16 வயதுபெற்றதுபோல்சிரஞ்சீவியாகவிருப்ப
ரென்பாம் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம் கற்றதி
னால் றொல்வினைகட்டறுமோ நல்லகுலம் பெற்றதி
னால் போமோ பிரவிநோய்போகா சாதிபேதமசமய
பேதம் பொருள்பேதமென குதர்க்கமொழிகளைப்
பாராட்டுவதை நீக்கி முன்னோர்கள் நின்றநிலையிதெ
ன்றுணரும் சித்தசுத்திபெற்ற மானிடப்பிரவிகளே
பிரவியென யாவராலும்புகழப்படுவர்.

குருஸ்துதி வெண்பா.

சித்தவிசுப்பெலசத்தந் தேசலருஞ்சாசுவித
வத்துமயஞ்செய்தவன்றாள் வந்துதித்து-நித்த
நிருமலப்பேரா௫ நிஜானந்த போத
மருமமிசைப் பேறுண் மகிழ்ந்து.

மஹான்கள் வணக்கம் வெண்பா.

மனத்துரு சங்கற்ப மயமாயா லோக
மனைத்து மகண்டா காரமான-தனைத்தவிர
வன்னியமன் றுமெனக்கண் டாரவர்கடாடுமெணஞ்
சென்னிகொடு சிவிப்பன் சீர்.

சித்தர்கள் வணக்கம்.

சீரார்ந்ததுணர்மலியுதளிகன்பண்பாட்டவி திகழ்கின்றபொதிகைமுநிவர், திவ்யகுணபோகர்நந் தீசர் புண்ணாக்கீசர் சிலகருவூரரெங்கும், பேரானசுந்தரானந்தர் திருமூலர்மிகு பெருமைசேர்கொங்கணமுநி, பிரமமுநிரோமமுனி வாசமுநியமலகுரு பிரமமுநியிடைக்காடர்க்காளாகியோர், டின்னமுயர்முத்தருயர் முத்தர்நவநாதர்புவி யிவர்மரபிலுற்றபுனிதர், காராாந்தசுந்தரக்கடவுளடியார்மலர்க் கண்ணனடியாரிவர்கடங், கனமிகுந்திருவனை பாதமலரென்றெனகருத்திலஞ்சலிசெய்குவாம்.

இராயவேலூர் அமுதசித்தர் வணக்கம்.

செய்யவேலூரமுதசித்தரோநாயடியேன்
துய்யவொருமொழிகீரோதிறல்-வையகத்தில்
பொய்யனைதரும்பாழாக்கி புண்ணியத்துக்காதரவா
மெய்யனைத்துமே மேலாகுமே. [ய்

பெரளூர் ப்ரமம் ஸ்ரீஷம்பத்திரி
அச்சுததாசவர்களால் இயற்றப்பட்டது.

விருத்தம்.

உருவருவுண்மையாகி யொளிபொருட்டண்மையாகித்
திருவருளண்மையாகித் திகழ்நிஜாநந்தபோதங்
கருவருத்தங்கடந்து கனகுலகுய்யசொற்றாள்
குருவருணசலன்றன் குறியுள்ளகுணக்குன்மாதோ.

சிவமயம்.

பரிபூரணர் கிருபை

நிஜானந்தபோதம்.

அறிவான படம்நாலு வாலோவென்று
அப்பனே யைந்துகலை விரித்துபாடும்
குறிபான நாவதுவும் கூழைகூழை
குறித்துப்பார் கைவசமா யாகும்பாரே.

பூதலத்தில் பலவிதியாய் பேசலான
பெருமையினை பொருவழியி லிருந்துபார்க்க
மாநிலத்தி லறிவுடைய பிள்ளாய்கேளு
மகத்தான மேருகிரி சிகரந்தன்னில்
நீதலத்தும் பாதலத்து மெங்குமான
பெரும்பொருளாயரும்பொருளாய்பிரகாசிக்கும்
சீதமுரு மதியெனவும் ரவிசுடருமாகி
பொற்கொடிபோல் காந்தியும் பொருளுமாமே. 1

மெய்யான பொருளென்ன சோதிசோதி
மேவிநின்ற தலமென்ன வன்னிவன்னி
மெய்யான தலமென்ன யப்புவப்பு
மேகாந்த வெளியென்ன வாய்வுவாய்வு
மெய்யான தெய்வமென்ன யண்டமண்டம்
மேவிநின்ற யிடமென்ன மண்ணுமண்ணு
மெய்யான தெய்வமென்ன பஞ்சகர்த்தாள்
மேவுசடா க்ஷரமுடிவி லமர்ந்தமூலம். ௨

உரைத்திடவே யோங்கார மொன்றேகோணம்
வோங்குமதில் சுழியொன்றுநடுயிகாரம்
வரைத்திடவே யிகாரவக் தனிலேவாசி
வளமாக தீர்க்கபின்பு சுவாசமுண்டாம்

கரைத்திடவே யிடைகலையின் கலையுமாகி
    கனத்தபரி வளையம்போல் சுழன்றுபொங்கி
அரைத்திடவே சுழிமுனையால் ரேசகபூரகமாகி
    யமர்ந்துநின்று சுவாசமது கும்பகத்தில்
யுரைத்திடவே யொன்றுக்கொன் றுதவியாகி
    யுகங்கோடி காலமதா யுருதியாச்சே. 3

உருதியென்ன ரேசகமும் வன்னிவன்னி
    யுண்மையென்ற பூரகமும் யப்புவப்பு
கருதியென்ன ரேசகத்தால் கும்பித்தாக்கால்
    கடுகிடென்று சுழன்றியது யிகாரம்புக்கும்
வருதியாயிந்தவகை மகாசூட்சந்தான்
    வளமாக சகலமுந்தா நிதிலடங்கிபோச்சு
மருகாமல் மாய்கைவிட்ட மாண்பருக்கு
    மகாசித்தந் தொழிலெல்லா மவர்க்கீடாமே. 4

வாங்கவே நவக்கிரகம் தன்னால்மைந்தா
    வனமான யனுக்கிரகம தன்னைக்காணு
தாங்கவே யனுக்கிரகம் விந்துவிந்து
    தனதான நவக்கிரகம் நாதம்நாதம்
பாங்கவே முடியதுதான் யனுக்கிரகமாகும்
    பரமான கெற்பமது நவக்கிரகந்தான்
மாங்கவே வனுக்கிரக மிரவுயுச்சம்
    மைந்தனே நவக்கிரகம் பகல்தானுச்சம். 5

உச்சமென்ற வளர்பிறைக்கி யிவ்விதமாய்மைந்தா
    வுதகமென்ற தேய்பிறைக்கி நவக்கிரகமுச்சம்
உச்சமென்ற தேய்பிறைக்கி யனுக்கிரகம் பெண்ணு
    யுதகாதி நவக்கிரகம் ஆணுயாணு
உச்சமென்ற வளர்பிறைக்கி யனுக்கிரகம்யாணு
    யுண்மையென்ற நவக்கிரகம் பெண்ணுபெண்ணு
உச்சமென்ற யனுக்கிரகம் நவக்கிரகம்கூடு [னே
    முண்மையெல்லா மறைகொடியி லுரைத்திட்டே

வேளையென்ற நோய்வந்தால் நாளைப்பார்த்து
யிரக்கிவிடவுபாயத்தை யினிமேல்கேளு
சாளையென்ற கிழமையொடு நட்சத்திர
திதிமூன்றும் மெண்ணிப் பார்த்து
வேளையென்ற விவன்பேரை வட்டத்திட்டு
விதித்தபிணி நாள்கட்சி யாக்கிக்கொண்டு
சாளையுமே வாறுமே லுருவேசேவி
தணிந்துவிடு மின்னமிது சைகைகேளே. 7

சைகையென்ன யவன்படுத்த நாள்செவ்வாயே
தானனை திங்களைமுன் தாக்கிச்சேவி
மாய்கையென்ன செவ்வாயை கட்சியாய்வை
மற்றவாரங்களு மப்படியேசேவி
எய்கையென்ன மதியிரவி காரிவெள்ளி
யேதுகுரு புந்திசெவ்வா யென்றுசேவி
வாய்கையவன் பிணிதணியு மேழுநாளில்
வாங்குமடா யதுநிற்க வேறேகேளே. 8

வேறென்ன பாணிக்கு வருமுன்பின்னே
விளம்பட்டா முன்மொழியி னுபாயம்போல
கூறென்ன கார்த்திகையை முன்னேகூறி
குதிரையின்பேர்பிரகுரோகணிதொட்டெண்ணு
மாறென்ன பாணிதன்னை துயர்ந்திடாதே
மனையடுப்பு நடயாக தரவேதாக்கு
பேறென்ன மூதொன்ப துக்குமிந்த
பிரையோகம் செபித்திடவே பிணிகள்போமே. 9

பிணிபோமே திதிக்குமிந்தப் படியாமப்பா
பிரயோக மந்திரத்தை யினிமேல்கேளு
அணியணியாய் வாரம்நாள் நட்சத்திரங்க
ளடுக்கடுக்கா நீயோதி யுவன்நோய்நாமம்
தணிபநசி நசியென கணக்கானுள்ள
சாத்திரமே யுருவோதி விபூதிபோடு

டணிபென்ன கொண்டபதி னைந்துபக்கம்
பத்திரண்டெழுக்கும நட்சத்திரமாமே. 10

ஆமப்பா நாளுக்கு யுநவென்னப்பா
வப்படியே சிரசுபலன் யதுக்குமாகும்
போமப்பா திசைபலனு மிப்படியேயாகும்
பொல்லாது நாள்போச்சு கோளும்போச்சு
ஆமப்பா லக்கினத்தின் பதியாளுடம்
நட்பாட்சி யுச்சமுறு நவக்கிரகாதி
யேவப்பா சாபமது பிடியாதப்பா
யெடுபடுமே வியாதிமுத லெல்லாந்தானே. 11

எல்லாரு மறியவொரு மருந்துகேளு
பெந்தெந்த நோயாளி தனக்குஞ்செய்ய
வல்லாண்மை யவன்படுத்த தலத்தின்மண்ணை
மருந்துடனே முன்சேர்த்து மாப்புகூட்டி
கொல்லானே யெதனையிந்த மண்ணைவாரி
கூறிட்ட வைத்தியனே குருவாச்சப்பா
யொல்லாத பேர்களுக்கு யிம்மார்க்கத்தை
புகலாதே பூராய குருவென்றெண்ணே. 12

எண்ணியே கைபார்க்கும் போதுநீயு
மிரக்கவா நாளுக்கால் பிணிகொண்டோனை
நண்ணியே யவன்தலையில் நடுவே தீயை
காட்டியதி லாறிட்டு நாசிமூச்சால்
நுண்ணியே மூச்சடக்கி யுருஞ்சிப்போடு
யுனக்குவரும் காய்ச்சலிர்க்கு யுபாயங்கேளு
தண்ணியிலே சுரதிநசி யென்றுமூழ்கி
தானயானஞ் செய்துநீ தீர்த்துக்கொள்ளே. 13

தீர்த்தமது யாடிநீ நவக்கிரகாதி
ஜெபம்செய்து முப்பது நாழிகைக்குள்ளே
வேர்த்துவிடும் முன்தேக காந்தல்போக்கு
விபூதியிலே சதிரமிட்டு பிரையும்போட்டு

பார்த்திருக்கும்போதல்லோ தானும்நல்ல
பண்டிதமாருபாயமது பார்மேல்செய்வர்
கோத்திரத்திலுனக்குவெகு புண்ணியமுண்டா
யுலகருக்கு மிதுவயணங் கொண்டுசெய்யே. 14

கொண்டுவர நிதமுமிந்த படிதண்ணீரில்
குறியிட்டு முச்சிரங்கைகீரை
உண்டுவர பூமதியங் கையிற்கிறி
யூட்டினம்மே யுனக்குவர மாட்டாதப்பா
யுண்டுவாரவரவரை சினேகியாதே
முருக்கமிட்ட வேழாநாள் ஸ்திரீயைச்சேரு
பண்டுபார் பெரியோரை யடுத்துக்காரு
பரிகாரி பரிபாகி யரவாய்தானே. 15

பிரமன்விஷ்ணு ருத்திரர்மகேசர்சதாசிவமானபஞ்சமூர்த்திகள் மூலாதார கணபதியோடு ஆறுஆதாரங்களிருப்பதாக மறை கூறப்படுகின்றன. மண்ணு, சலம், அக்கினி, காற்று, ஆகாயமும் சர்வநால்வகையோனிவடிவ சீவர்களுக்கும் ஆதாரமாயிருப்பதுயாவருக்குந்தெரிந்தவிஷயமே. மிருகாதி மானிடங்களைவருக்கும் நாசியில் உஸ்வாச நிஸ்வாசமா யுலவிவரும் இடகலை பின்கலையாக சுழிமுனை ஆதாரத்தில் மாறி நடந்துவரும் சத்திசிவ சந்திர சூரிய னெனும் சுவாசமான வாசியானது நாள் ஒன்றிற்கு 21600 சுவாசம் நடந்து வருகின்றது அப்படி நடந்து வருவது மனமாகவும் வாசியாகவு மிருப்பதில் நாள்ஒன்றிற்கு 12-வட்டமாயும் சந்திர பாகத்திலும் சூரிய பாகத்திலும் ஐம்பூத பிரிவாய் பிரிந்து காட்டுகின்றன. இப்படி கலையில் நடக்கும் ஐம்பூதம் அந்தக்கரண வியாபாரத்தால் அறிவை தோற்றுவிக்காமல் ஆயுளையும் க்ஷீணியப்படுத்தி நரை திரைமூப்பை எளிதிலுற்பவம் செய்துவிடுகின்றன.

சத்தியென்ற வடிவேது வொளியாய்நிற்கும்
சாதகமாய் சிவமேது வொளியாய்நிற்கும்
வெத்தியென்றவொளி வொளியுமொன்றித்தானும்
வேதாந்த மிரண்டுமொன்ருய்
முத்தியென்றவடிவாக தோற்றும்பாரு
மூதண்டரூபமெனும் கேசரியுமாகும்
வெத்தியென்றவிந்தைஎல்லாம் வொளியாப்போகும்
வேதமென்றமுடிவதனை புகன்றிட்டேனே. 16

ரூபமென்ருல்ரூபமல்ல பச்சையல்ல
வுத்தமனேமஞ்சளல்ல வெள்ளையல்ல
ரூபமென்ருல்சிகப்பல்ல புகைமேகமல்ல
யூணிப்பார் மனதனி வின்னதென்று
ரூபமென்ருலடியல்ல முடியுமல்ல
வோகோகோசிவரூபம் நன்ருய்த்தானும்
ரூபமென்ருல்விளக்கொளியின் பிரகாசம்போ
லுண்மையிதையறிந்தவனே தலைவனுமே. 17

பாரடங்களுள்ளதுவும் பரந்தவானமுள்ளதுவும்
வேரிடமுமன்றியே வொன்றிநிறைதொன்ற
ஆறிடமுமொன்றியே யசுத்துளும்புரத்துளும்
சீரடங்ககண்டவர் சிவந்தெரிந்தஞானியே
பாரப்பாபிராணனெனும் பிராணவாய்வு
பக்தியுடன்தானியங்கும் வகையைக்கேளு
நேரப்பாகடனாவி சுழியிற்றோன்றி
நின்றுசுத்திநாடியிலே சிம்மெனவேயிரங்கி. 18

காரடாவோமெனவே மூலாதாரம்
• சந்திருந்துநாபியிலே ஆவென்றெட்டி
சாரடாசாவெனவே கதிர்மதியில்சென்று
கபாலத்தைசுத்திநடு நாசிகாணே.

பிராணவாய்வானது தசவாய்வாக தசவித தொ
ழிலைநடத்தி முடிவில் பிராணவாய்வாகநிற்கும் மன

அசைவால் பிராணாதி வாயுகளதிப்பு மன அசைவி லாதிருந்தால் வாயுகளுக்கு தொழிலில்லை மனமாகி யவாசியே மனம் மனமானது சலம் கனல் வாய்வுயி ம்மூன்றும் கூடியது.

தாரணைமூலமுத லாறுவீடும்
சாக்கிரத்தின் கோட்டையிலேசார்ந்துநிற்கும்
கூறுனபஞ்சகர்த்தா ளிருக்குமிடமொன்று
இவ்வனுபவங்களை மேலோர்கூறியிருப்பதும்.

"ஒன்பதுவாயி லொருமந்திரத்தா
லைம்புலன்கதவை யடைப்பதுங்காட்டி
களுவிகடொடுங்குங் கருத்தினையறிவித்
தலமொருநான்கும் தந்தெனக்கருளி
யிடைபிங்கலையின் னெழுத்தறிவித்து
கடையிற்சுழிமுனை கபாலமுங்காட்டி
குண்டலியதனிற் கூடியவசபையின்
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலை
காலாலெழுப்பும் கருத்தறிவிக்க."

ஔவையார் கணபதியை பிரார்த்தித்திருப்பதால் ஜெனன மெடுத்த ஒவ்வொருவரும் மேற்கண்ட அனுபவத்தை சற்குருவால் சுவானுபவம்பெற்றுவா ழ்வதே நற்பயனாகும்.

வகையான வாசியது மனமும்கண்ணு
மயங்காதே சிவாயமென்று புலம்பிடாதே
பகையாதே அட்சராங்க ளன்பத்தொன்றும்
பரிபாஷை யாயுரைத்த நாமபேதம்
திகையாதே நாமமென்று மட்சரங்களென்றும்
செபியாதே யறிவுகெட்ட மானிடரைப்போல
நகையாதே மானிடரை பலசாதியென்று
நம்பாதே நல்வழியின் காலைப்பாரே.

திருமூர்த்தி தேவர்முதல் மனிதரோடு
 சிவயோகம் பெற்றிருந்த மார்க்கந்தன்னை
பிரியமுடனேநினைத் தொழுது கேட்டபிள்ளாய்
 பின்கலையு மிடகலையும் மாறும்போது
அறிவானசுழிமுனையில் மனதைவைத்து
 வசையாம லொருமனதாய் காக்கும்போது
குறியான சிவயோகம் சித்தியாச்சு
 கோடிசென்மம் சித்தரைப்போல் வாழலாமே.

எட்டுதிசையும் பதினாறுகோணமு மெங்குமொ ன்றாய், முட்டித்ததும்பி முளைத்தோங்கும் சோதி யை மூடரெல்லாம், கட்டிச்சுருட்டிக் கக்கத்தில் வைப்பர் கருத்தில்லையார், பட்டப்பகலையிரவென் றுஅறிநதிடும் பாதகரே.

ரேசகம் வன்னி, பூரகம், அப்பு, பிராணவாய்வு, அம்சம்வாசி, தசநாடிகள் இருதயத்தினசைவு அறி வுநேத்திர கருபணிவொளிவு, நாசிமூலமாய் வெளி கழிவது விடய்பொருந்திய சூரியகலை ஆகாய சந்தி ரகிரணங்கள் முன்னிலையில் அமுதம் உள்புகுவது சந்திரகலையென்றும் உள்செல்லும் சுவாசந்தோறு ம் அமுதம் உள்புகுந்து சந்திரகலை யென்றும் உள் செல்லும் சுவாசந்தோறும் அமுதம் உள்சென்று உதிரத்தில் கலந்து உதிரசுத்தியும்செய்துசீவனுக்கு ஆதாரமாக யிருக்கின்றன. இவ்வமுதபலத்தால்தப சிகள் தேகத்தை போஷித்து நெடுங்கால மிருப்ப தாக மதியமுதம் உட்கொள்ளும்படி செப்பியிருக் கின்றனர். கைலாயமென்னும் சுழிமுனை வீட்டில்ஓ ங்காரித்துக்கொண்டு தலையெழுத்தாக யிருப்பதுஉ ணர்வு, அவை அசைவற நிற்கில் சிவமாம். அசைவு றில் சீவனும் மூச்சாகவும் பேச்சாகவும் சப்திப்பது நித்தி இவையே பேசுமெழுத்து பேசாவெழுத்தெ னப்புகல்வது, பேசுமெழுத்து மனம்பேசாவெழுத் துவாசிசாகால் வேகா தலைபோகா புனர்யென மனை

கூறும், வாசியாகிய வாய்வையும், ஆகாயவெளியையும், ஆவியாகிய வன்னியையும், எச்சமயமஹான்களும் அடையவேண்டியதிருக்கிறது.

கால்யென்பது பிரிதிவி தலையென்பது ஆகாயம் மத்தி அப்பு உடல் வாய்வு உயிர் அக்கினி அறிவுயமாய் நின்றன.

தானாகிதான்முடிந்த சூட்சந்தன்னை
தாரணிதனிலறியாமல தான்தானென்று
ஊனாகிநின்றதிரு வுடலைகாணான்
யுடலில்நின்றவட்சரத்தி னுறுதிகாணான்
ஆனாகிநின்றதிரு வாசிகாணான்
யமர்ந்துநின்றவாசிதிரு நயனங்காணான்
வானாகிநின்றவடி முடியுங்காணான்
மதிகெட்டுவிதியழிந்து மாளுவானே.

ஆகாயரவியினிடத்து உஷ்ணகிரணம் மழைகிரணம் பனிக் கிரணமுண்டாகியதுபோல் அறிவினிடத்தில் இடகலை பின்கலை சுழிமுனையெனு மூன்று கிரணமுண்டாயின.

மணிமந்திர ஔஷதபரிகாரமாகிய மூன்றில் சமமாகிய வாசியின் லட்சியந்தெறிந்து அவ்வனுபவத்திலிருந்து பிணியாளன் வியாதியை நேத்திரத்தால்கண்டு வாசியினால் ஆக்கிருஷ்ணம்செய்வதே மணிமந்திர பரிகாரமாகும். ஔஷாதிகளால் வியாதியை நிவர்த்திப்பதாக யிருந்தாலும் வைத்தியனுக்கும் மற்றவர்களுக்கும் சர அப்பியாசம் வேண்டியிருப்பதால் அதற்குரிய அனுபவிகளையடைந்து ரேசக பூரக கும்பக மின்னவையென்றுணர்ந்து அடைதலே நன்மார்க்க நிலையாகும்.

சரியை கிரியை யோக ஞான மாவன, மன்னுயிரும் தன்னுயிர்போலெண்ணுவது சரியை மனுநீதி குருமொழியுந்தப்பாதிருப்பது கிரியை ஒன்ணுமே

யனையுமனம் ஒடுங்குவதுயோகம் எப்போதும் தற்பரமாய் நின்றதுவே ஞானம்.

நான்குபதமாவன:-கடவுள் சிருஷ்டித்தகாலத்தில்வசிப்பதே சாலோகபதம், கடவுளையெதிரிட்டு போற்றிவாழ்தலே சாமீபபதம், குரோதாதிகுணங்களைநீக்கி சத்வகுணமாகயிருப்பதே சாரூபபதம், துவிதபாவனைநீக்கி ஆத்மவிசாரணைசெய்து கடவுளோ டொன்றாகக்கூடி அதுதாளுய் தானதுவாய் நிற்றலே சாயுச்சியபதமாகும்.

அஷ்டகர்மமாவன:- பிராணயாமத்தால் வாசியைவசப்படுத்தி கடவுள் திருவருள்மீதுமோகித்து நித்திரையைநீக்கி கண்பார்வை பகிர்முகப்படுத்தாமல் ஐம்பொறிகளைவித்வேஷித்து நானென்னும் அகங்காரத்தைபேதித்து பூரணமனதை ஐக்கியம்செய்து சஞ்சிதவினைகளை மாரணம்செய்வதாகும்.

அஷ்டாங்கயோகமாவன:-காமமாகிய யிச்சையை தோன்றுமற்செய்து தக்க ஆதனத்திருந்து நாமரூபத்தைநாடு மனதை யிருதயாம்பரத்திலிருத்தி புரவிடயங்களைநீக்கி விகற்பமில்லாமல் தத்சொரூபத்தைநாடி வொளி ஒலி தானேதாளுய் வொத்து நிருவிகற்ப மாகுதலாம்.

அணிமாதிசித்தியின்விபரம்:-அணிமா, சூட்சும காரண மகாகாரண சரீரமென்பதில் மகாகாரண சரீரமாய் யணுவிலணுவாக நுழைவதும் மஹிமா விஸ்வரூபமாய்த்தோன்றல் ஹரிமா யதிகபளுவாக யிருத்தல் லஹிமா தக்கையைப்போல் லேசாக காட்டல் பிராப்தி ரவிமதியோரை வசப்படுத்தல் பிராகாமியம் பிரர்காயத்தில் நுழைந்து நினைத்தவரிடம் அக்கணமே தோன்றல் ஈசத்துவம் பஞ்சகிர்த்தியத்தொழிலைகாட்டல் வசித்தம் அண்ட முதலிய அனைவரையும் தன்வசமாக இருக்கச்செய்தல்.

தேகம் மைந்தின் விபரம்:—இருள் தேகம் மருள் தேகம் சுத்ததேகம் பிரணவதேகம் ஞானதேகம் இருள்தேகமாவன, ஸ்தூல தேகத்தில் அபானத்தில் மலகுற்றம் நாவில்நாடி குற்றம் கண்டத்தில் கபகுற்றம் மேல் மூலத்தில் நிரைகுற்றம் மனதில் ஆணவ மலம்பொருந்தி நானெனும் அக்கியானகுற்றம் மருள் தேகமாவன:-மாயாமல் சம்பந்தமாய்தனக்குத் தெரியாமல் அகங்காரங் கொள்வது, சுத்ததேகமாவன:-கருவிகாரணாதிக ளிறந்து அறிவு அருள்வடிவாய்பார்வைக்கு தேகம் தோற்றும் கைக்கு புலப்படாது நிழல்சாயையும் கிடையாது ஞான தேகமாவன:-கண்ணுக்கு தோற்றாது அறிவிற்கு புலப்படும்.

திருக்கு திருக்ஷியமாவன:—நாமரூபபிரபஞ்சம் இந்திரியங்களுக்கு விஷயம், இந்திரியம் காரணங்களுக்குவிஷ்யம் காரணங்கள் சீவனுக்கு விஷயம் சீவன் சீவசாட்சிக்கு விஷயம் சாட்சி விவேகஞானத்திற்கு விஷயம் விவேகஞானம் பரிபூரண சைதன்னியமேனும் அறிவொன்றுக்கும் விஷயமாகாது இந்த சொரூபநிலையே தானென்றுணர்ந்து ய்துவாய் விளங்குவர் ஞானிகள்.

ஞானிகள் தேகசித்தி யாதவர்க்கு தசதீட்சை விபரம்:—முதல் தீட்சையில் ரோமதுவாரங்கள் வழியாககெட்ட நீர்கள் வியர்வையாக கசியும் 2-வது முத்தோஷமாகிய வாதபித்த சிலேத்மதோஷம் நீங்கும் 3-வது பழயகெட்டஉதிரங்கள்கசியும் 4-வது சர்ப்பம் தோலுறிப்பதுபோல் சரீரத்தில் தோலுறியும் 5-வது கட்டை கழன்று தேகம் சிவந்தநிறமாய்பஞ்சமூர்த்திகள் கோறியகைதருவர் 6-வதுகட்டைகழன்று சுழிமுனைவாசல் திறந்து தூர திருஷ்டி தெரியும். 7-வது சட்டைவெளுப்பாக கழன்று தேகம் தீபம்போல்பிரகாசிக்கும் 8-வது. சடத்தை

உயரதூக்கும் லகிரியுமாகும் கூடுவிட்டு கூடுபாயும் 9-வது தேகம் சூரிய பிரகாசமாய் அஷ்டமாசித்தியும் கைலாய தேகமாய் தேவர்கள் யேவல்புரிவர் 10-வது தேகம் தீயம்போல் பிரகாசித்துதேகத்தைவெட்ட கத்தியோடும் சொரூபசித்தியும் அண்டத்தில் மௌனம் நரை திரை மூப்பு பிணி மரணம்கிடையாது.

தபசிகளுக்கு ஆதாரம் வாசி வாசி வாசி என்பது பிராணவாய்வு இதைக்கொண்டு சகலசித்திகளையும் பெற்றனர் சுடரான சுழிமுனையில் சந்திரனசேரில் பஞ்சபூதமும் அறிவும் ஒடுங்கும். இரவிசேரில் ஐம்புலனும் அறிவும்பெருகும். இரவிமதி ஒன்றாக கூடி சுழியிடம் வொடுங்கில் அறிவும் தசவாய்வும் ஒடுங்கும் வாசி நடுநிலையினும் மூலத்திலும்நாபியிலும் கண்டத்திலும் சுழியிடமும் சதாநிற்பவர்கள்தான் மெய்ஞ்ஞானிகள்.

சாகாநிலையும் வேகாதலையும் மணியாடும்கோணத்தையும் ஆசான் முன்னிலையில் தெரிந்து மும்மூலமாகியஉகதிமார்பு நெற்றிக்கண்ணிட மிருப்பர் அமாவாசை அன்னந்தண்ணீ ரிரங்குமிடம் பருவம் அன்னரசம்பிரிக்குமிடம் நாதமென்பது தீமனம்வி நதென்பது வாசி தீயானது வாசிமீதேறிவிளையாடும் சாகாதால் வாசிவாய்வு வேகாதலை ஆகாசவெளி போகாபுனர் ஆவியானவன்னி ஆகமூன்றும் கூடியந்த நாதமென்றும்பசந்த மண்ணும் தண்ணீரான வ்ண்டும் விந்துவாக விளங்கும்.

மூன்றெழுத்து—
பதி. பசு. பாசம்
அறிவு-வாசிசோதி
ஸ்தூலம்-சரீரம்
சூக்ஷமம்-ஆவி
காரணம்-பரம்
பதி-பரம்
பசு—வாசி
பாசம்-கயர்
சத்தி-தீ
சிவம்-வாசி
பூரணம்-சலம்
அடி-இந்திரன்
நடு-சுழி
முடி-சூரியன்
ரேசகம்-சூரியன்
பூரகம்-சந்திரன்
கும்பகம்-சுழிமுனை
காமபால்-ரவி
கானர்பால்-மதி
சோமபால்-அக்கினி
சீவாத்மா-மூலத்தீ
பரமாத்மா-வெளி
பேசுமெழுத்து - மனம்
பேசாஎழுத்து -வாசி
அந்தி-சூரியன்
சந்தி-சந்திரன்
உச்சி-சுழிமுனை

விட்டயிடம் - ஆகாயவெளி
தொட்டயிடம் - வாசி
மூலஅனல்-வாசி
வாசி-பிராணன்
பிராணம்-தீபம்
தீபம் - யோகமாகும்
மதம்-3.
சாதிமதம்
பொருள்மதம்
கல்விமதம்
குலம்-சுக்குலம்
சட்டைஉரிப்ப 96
தத்துவம் 69
புளியால்-திசை
உப்பால்-கரை
துவாரு-10-
சீவத்துவாரு
விகாரதுவாரு
அங்கத்துவாரு
விசேட சாதிதுவாரு
ஆசிரமதுவாரு
நாமத்துவாரு
சமஸ்காரதுவாரு
வேஷத்துவாரு
கிரிகையாதி துவாரு
மும்மணி
ரவி-சொரூபமணி
மதி-கமலனி
சுடர்-அட்டமாசித்தினி

பூமி-சத்தி
ஆகாயம்-சிவம்
சத்தி-உடல்
சிவம்-உயிர்
தீபம்-அறிவு
வாசிமூல அனல்பிராணம்-தீபம்
நந்தி-நேத்திரம்
மனோன்மணி - மனம்
புருவமுனை-சொர்க்கவீடு
பரகெதி-துவாதசாந்தம்
அகாரம் - சத்தம் அதுவே ஆத்மா
அந்தயகாரத்தைதியாளிக்க அகத்தீசருஞர்
ரவிமதி சுடர்மூன்றும் ஒன்றானல் நவநீத கிஷ்ணனெனபுகலும்
சந்திரனைநோக்க வெட்ட வெளி போல்காணும் அது சிவபதமாகும்
ரவியை பார்க்க இருதயத்தில் ரவி பிரகாசம் தோற்றும் அது சத்தி பாதிபமாகும்.

ஸ்தூல தேகத்தை போஷிக்க ஆகாரம் கொடுப்பதுபோல் சூக்ஷமதேகமாகிய ஆவியாகிய வக்கினிக்கு ஆகாரம் சந்திர கிரணங்களின் அமுதத்தைகொடாதால் மூல அனலுக்கு ஆவிகுறைந்து ஆயுள் க்ஷீணப்படுகின்றன.

குலம் என்பதும் சாதிஎன்பதும் முடிவாக பார்க்கில் மானிடப்பிறவிகளில் ஆண்பெண்ணாக விளங்குவதில் கொலைகளவு கள் காமம் பொய்யாகிய ஐந்துபாதகத்தொழிலை நிக்கிரகித்து சத்வகுணத்தோடு பரமமெனும் பொருள் யாதோ காரணம் விபரமறிந்தது தானே ஞானமென ஆத்ம விசாரணைசெய்து முடிவைநாடி நிற்பவரேமேலாம் குலமெனப்படும் காமாதிகளை கைக்கொண்டு நன்றுதீதெனத்தெரிந்துநடவாமல் புலால் மதுபானங்களையுண்டு வூண் உரக்கமைதுனமே பெரும்போகமென வாழ்நாட்களை மிருகாதிகளின் பாவமாயிருந்து நடிப்பவரேகீழ் குலமெனப்படும் மனதை ஒருமைசெய்யாமல் காவி காம்பிர தண்டு கமண்டலவிபூதி பூசினும் துவாதசநாமம் தேகத்தில் சாற்றினும் சதா ஆலயம்புகினும் ஐந்துகால சபதப சந்தியாவந்தனம்புரினும்யாதொருபயனுமிறாது தனக்குத்தானே வஞ்சகக் கள்வனாவன்.

மணிக்கடல்யானை வளர்குழன்மேக
மணிவண்டுதும்பி வளைபேரிகையாழ்
தணிந்தெழுநாதங்கடாமவைபத்தும்
யணிந்தவர்க்கல்லது பார்க்கவொண்ணாதே.

மானிடசரீரத்தில் தசவிதநாதங்களும் பகிர்முகநோக்கியல்லாமல் அந்தர்முக நோக்குடையவர்க்கு விளங்கும் சத்தம் ஓசைஎனப்படும் அவையே நாதமாகும். நாதம் ஆகாயத்திலுர்ப்பவம் சத்தம் பிறந்திடத்தில் சகலகலையுமுதிக்கும் நாதவிந்துகளென்னப் புகல்வது நாதமானது பெண்பாலிடமென்றும் விந்தென்பது புருடனிட மிருப்பதென்றும் கூறுவது சகசமாக யிருந்தாலும் ஆணிடத்திலும் பெண்ணிடத்திலும் நாதவிந்திருப்பது உண்மையாக இருக்குமிதை அனுபவத்தால் நிச்சயிக்கக் கூடும் குளவியானது கீடமாகிய புழுவை எடுத்து

க் கொண்டுபோய் மண்கூட்டி லடைத்து சிறிய வழிவிட்டு அவ்விடம் குளவியானது தனது வால்முள்ளினால் பலதரமும் புழுகைகுத்தி றீங்கார மான பிரணவ நாதத்தை குளவியானது வொலிக்க குளவி குத்தியதுன்பத்தை சகியாத மகாதுன்பத் துடன் நாதஒலியை கேட்டிருந்த புழுகானது அந்த வடிவம் நீங்கி குளவி வடிவம் பெற்றன அவைபோல் மானிட தேகமுடையவரும் தனக்கு யெதிரிட்டிரு க்கும் மரண பாதைக்கு மிகபயந்து சதா ஆகாய அம்சமான பிரணவ நாதமின்னதென்று ஆசிரியரிடம கேட்டு மனதை அதில் லயப்படுத்தியிருக்க சூட்சும சரீரம் சித்தியாகும்.

என்செயலா லெய்துமிவ் விதியுமல்ல
தன்செயலா லுண்டோ தந்தைவிதி யென்செயலோ
முன்னாலமைந்த மொழிதவறு தன்னுள்

யெனவும் தந்தை விதியல்லவோ அடண்ணே இந்த விதிகளெல்லாம் எனவும்.

பாவங்கள் போமென்றீர் பாவமென்ன
பரமான யென்குருவே யருளிச்செய்வீர்
சூதகமாம் நாகத்துள் விந்துபூர்ந்த
சுகம்போல யிருந்துதடா யதுவேபாவம்
பேதையரை பெண்டுவைத்து மைதுனமேசெய்து
பிறந்தாயே யவற்றுட் சென்மித்தேதான்
மாதாவே யென்தாயே கொடும்பாவிநீ தான்
மகவாக புறப்பாட்டால் ஞானமாமோ.

ஆதாரமாகிய ஆகாய அம்சத்தில் ஒருகோடிவொ ன்பது லட்சம் அறுபதாயிர கணமான 50-நாள் 414-நாழிகை, ஆயிரத்தறுநூறு கோடிகணக்காய் புருடனிடம் சுக்கிலத்தில்.

மேவியசிவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு

மேவிய கூறது வாயிளமாயினு
வாவியின் கூறு நூறாயிரத்தொன்றே.

அணுவிலணுவினை யாஇப்பிரானை
யணுவிலணுவினை யாயிரங்கூறிட்
டணுவிலணுவை யணுகவல்லார்கட்
கணுவிலணுவை யணுசணுமாமே.

அணுவுளவணுவு மவனுளணுவும்
கணுவறநின்ற கலப்பதுணரா
றணையிலியீச னவனெங்குமாகித்
தனிவறநின்ற சராசரந்தானே.

புருடன் சுக்கிலத்தில் அணுவுக்கணுவாய் முன்கண்டநாளளவாக் கீடவடிவாக கெர்பமிருக்து மோகங்கொண்டு ஸ்திரீயை நினைத்து புணர்ந்து ஸ்திரீசுரோணிதத்தில் சுக்கிலத்திலிருந்து கீடம் சம்பந்தமாகும், முறையான ஆண்பெண்ணும் மவுனமுற்றால் மோகசமில்லை கருவங்கே தரிக்கும்பாரு இருமனமும் ஒருமைமன துடனிருக்க வேண்டும். அவ்வகை உத்தம புணர்ச்சியில் ஸ்திரீயின் மனமானது புருடன் வடிவமீது நோக்கமிருக்கவேண்டும். வேறுரூபத்தின்மீது மனம் வைக்கலாகாது என்றதனை லிருவரும் கூடியே யுற்றவுள்ளம் கணவன்றன் மேலுறில் கன்றதான கணவன்றன் யுருவெலாம்நாடும் காதலிமேதவ நாட்டில் நின்றதாயுருவைவடிவாயுரும் நேசமாதலன்போ லிருந்தால் வழியன்றியே யவள் முன்னவன் பின்னவனுக்கு மைந்தன் கூறுமெனு நீள்மறை யிவ்வண்ணமாகி வடிவம் பொருந்தும் புருடன் கலை சூரியனாக யிருந்தால் கரு ஆண்வடிவமும் சந்திரகலையாக யிருந்தால்பெண்வடிவாகவும் பிரிதிவி அப்பு தேய்வு, பூதியமாக யிருக்கில் அவையவைகளுக்குறிய கணக்கின்படி ஆயுளமைவதாக யிருக்கிறது அப்படியமைந்த கருவானது ௨௪0-நாள், அல்லது 300-நாள்

பெண்வயிற்றில் வளர்ந்து வெளிகண்டன அவ்வகை செனமித்தசிசு ஏழ்விதபருவமடையும் அதை ஏழு பிறவி என்றும்புகல்வர் அவையாவன, புருடன் ஸ்ரீ யைநினைந்து மோகங்கொண்டது. 1 சம்பந்தமுற்று சுரோணிதத்தில் சம்பந்தமானவை 2 கருப்பையில் வளர்ந்தவை 3 வெளிதோன்றி குழந்தை பருவம் 4 பாலபருவம் 5 எவ்வன காமாதிகளா லலைவுபருவம் 6 நரை திரை மூப்பு பிணிமரணபருவம் 7 இந்த ஏழுபருவங்களிலும் வடிவமுங்குணமும் நடக்கையும் பேதங்களாகவேயிருக்கும் புருடன் ஸ்ரீ இருவருக்கும் மோகவுற்பவ விபரம்.

கேளப்பா மனமானவாய்வுகூடி கெடியானசித்தமாகாயம்பொங்கி, வேளப்பாயாங்காரசிகாரமிஞ்சிமேவுதற்குபெண்மேலேமோகமாகும், நாளப்பாஜங்கிற்கும்பலமேதென்றால் நலம்பெறவே சொல்லுகிறேனன்றாய்க்கேளு, தாளப்பாமனதோடேவியானன்கூடி தனியானநாதத்திலபானனன்றானே.

தானென்றவிந்துவினிற்சமானன்கூடுங் தனியானசித்தத்தில்வியானன்கூடும், தானென்றவாங்காரக்கொர்ச்சிப்போடு கலந்துநிற்கும்வுதானனப்பாகண்டுகொள்ளு, வேனென்றபத்துமொன்றாய்மனதுங்கூடி மேவியவன்கலந்துவந்துவிழுகும்போது, மானென்றமௌனபரவசமேயாவான் மருவுகின்றபெண்ணுக்குமம்முறைதான்காணே.

ஒன்றானவிந்துவிலே விட்டகுறைவந்து வுருதரிக்கு மவ்வுருவேயவனவளுமாவார் என்றும் தனது நல்வினை தீவினையளவாகபெண்கெர்ப்பத்தில்தானே பிறவி எடுத்து அனுபவிக்கவேண்டுமென்று ரிஷிகள்கூறிய மகாவாக்கியம்.

பிராணவாயு பித்தம் அக்கினி சலத்தில் அபானவாயு வாதம் மலத்தில், சமானவாயு அய்யம் சுழிவிந்தில்.

தீயும் காற்றும் மலத்தில்சார, வாதவ்ாயுருவம் அக்கினியும்காற்றும் ஆகாயத்தில்சார, பித்தமுரும் சகலமும்காற்றும்சுழியில்சார சிலேர்ப்பனமுரும.

வாசியுலாவுமிடம ஐந்து, நாசிமுனை சகஸ்திரம் பிடரி நெஞ்சு மூலம்.

முத்தியின்விபரம்:- குதஸ்தான தீயொன்று, ருத்திரஸ்தான தீயொன்று, புருவமைய சதாசிவஸ்தான தீயொன்று.

சந்திரசூரிய அக்கினியிடமாவன:- மூலத்தில் அக்கினி, மார்பில்சூரியன், முடியில் சந்திரன்.

உலாவுமிடம்:-சூரியகலைநடக்கும்போது சுவாசம் பிடரிவழிசென்றுவருமசந்திரகலைநடக்கும்போது 312 பாகமாகிய மூலையில்சென்றுவருமம மந்திரங்கால் மதிமுககாலெனபது மநதிரம் சூரியன் கால் மதி சந்திரன் முக்கால் அங்குஷ்டபிரமாணமெனும் அகத்தீசர் ஒரு அங்குலமுள்ள நேத்திரஸ்தானமிருந்து ஆயிரதெட்டு கிரணங்கள்பொருந்தி பகிர்முக நோக்கால் யாவும் பார்த்தும் தான் சர்வசாட்சியாக விளங்கும்.

ஸ்தூலபஞ்சீகரணம்
பிரிதிவில் பிரிதிவ-அஸ்தி
பிரிதிவில் அப்பு மாமிஸம்
பிரிதிவில் தேய்வ சர்மம்
பிரிதிவில் வாய்வு நரம்பு
பிரிதிவில் ஆகாயம் ரோமம்
அப்பினிலப்பு மூத்திரம்
அப்பினில் பிரிதிவ உமிநீர்
அப்பினில் தேய்வு வியர்வை
அப்பினில் வாய்வு உதிரம்
அப்பினில் ஆகாயம் சுக்கிலம்
தேய்வினில் தேய்வு பசி
தேய்வினில் பிரிதிவ தாகம்
தேய்வினில் அப்பு நித்திரை
தேய்வினில் வாயுவு ஆசை
தேய்வினில் ஆகாயம் சங்கம்

ஆகாயமும் வாய்வுக்கண்டம்
ஆகாயமும்தேய்வும் மார்பு
ஆகாயமுமப்பும் நாசிபித்தம்
ஆகாயமும்பிதிவும் இருதயம் மகங்காரம்
வாயுவும்பிரிதிவ்கூடில் இருதயம் பிராணன்
வாயுவும் அப்பும் குதம் அபானவாயுவும் தேயவும், கண்டம் உதானன்
வாய்வும வாய்வும் சர்வசரீரி வியானன்
வாய்வும் ஆகாயம் நாபி சமான[ன]
தேயு ஆகாயமும் செவி
தேயுமவாயும் சரீரம்
தேய்வும் தேய்வும் நேத்திரம்

வாய்வினில் வாய்வுவோடல்
வாய்வினில் பிரிதீவநடத்தல்
வாய்வினில் அப்புயிருத்தல்
வாய்வினில் தேய்வுததல்
வாயுவினிலாகாயம் கிடத்தல்
ஆகாயத்திலாகாயம் மோகம்
ஆகாயத்தில் பிரிதிவ்-ஆசை
ஆகாயத்தில்அப்பு துவேஷம்
ஆகாயத்தில் தேய்வு பயம்
ஆகாயத்தில் வாய்வுவெட்கம்

சூக்ஷமபஞ்சீகரணம்

ஆகாயமுமாகாயமும் நேத்திர மறிவு
தேய்வும் அப்பும் சிங்குவை
தேய்வும் பிரிதீவும்-நாசி
அப்பும ஆகாயமும்-சத்தம்
அப்பும் வாய்வும-பரிசம்
அப்பும் தேய்வும்-பார்வை
அப்பும் அப்பும்-ரசம்
அப்பும் பிரிதீவும்-கெந்தம்
பிரிதீவ் ஆகாயமும்-வாக்கு
பிரிதீவ வாய்வும்-பாதம்
பிரிதீவ்-தேய்வும்-பாணி
பிரிதீவும்-பிரிதீவும்-குதம்
பிரிதீவும் அப்பும்-குய்யம்

ஐவகை உற்பவம் பிரிதிவினிடம் சராயுசமான வித்துகளால் புல் பூண்டு கொடி செடி மரமுதலியவைகள்.

அப்பு பூதம் உற்பிஜம் பையினிடமாக மானிடம் பசு ஆடு மிருகாதிகள்.

தேய்வுபூதம் சுவேதசம் வியர்வை வெப்பத்தால் ஈ பேனு கிடம் கம்பளிப்பூச்சி புழுகு.

வாய்வு பூதம் அண்டம் முட்டையில் கோழி பாத்து பல்லி ஓணான் சற்பம் கோட்டான் கெருடன்.

மந்திரபீசம் ஆகாயம் மஹான்களால் சிருஷ்டிக்கப்படும்.

இதில் ஓரறி உடைபது புல் மரம் செடி பரிசமறியும்.

ஈரறிவு-சிப்பி, சங்கு, பரிசரசமறியும்.

மூவறிவு-கரையான், எரும்பு, பரிசரசகெந்தம்.

நாலறிவு-தும்பி, வண்டு பரிச ரச கெந்தரூபம்.

ஐயறிவு-பறவை, மிருகங்கள் சத்தபரிச ரூப ரசகெந்தமறியும்.

ஆறறிவுடைய மானிடம் ஞானமாகி அறிவும் பொருந்தியவர்கள்.

ஆணுவம் மாய்கை காமியம் மும்மலமும் நீங்கில் ஆத்மா அருளோடு கூடிய ஞானமாகும்.

ஒரு பாதையுமின்றி தானாகயிருப்பது பிரமம் பிரமம் மாயையாகிய அவித்தையிற் பிரதிபலித்த போது சீவன் சீவன் அவித்தையிற் கூடியபோது சுழுப்தி சுழுப்தி அந்தக்கரணத்தில் கூடில்சொற்பனம் சொற்பனம் ஐந்து இந்திரியத்தில் கூடில் சாக்கிரம் சாக்கிரம் கூகூ-தத்துவங்களுடன் விவகாரம்.

ஆச்சப்பாதேகமென்றவாதாரத்தில் வித்தையென்றயஞ்சைபு மெசொல்லக்கேளு, மூச்சப்பாலலாடத்திற் சாக்கிரந்தானொன்று, நீச்சப்பாமார்பின்கீழ் சுழு[illegible]யொன்று நிசமானஉந்தியிலேதுறியுமொன்று, விச்சப்பாவிக்தின்மேல்துரியாதீதம் விளங்கினின்றபவித்தையஞ்சும்கண்டுகொள்ளே.

முரசுகொண்டு ஆடுகிறசக்கரத்தை வினையும்கொண்டுபொருமல்வினைப்போன, பிரசைகளைகண்டதினாலேதுள்டய்யா பிலமானமூலமதில்மனதைவைத்து, யுரவானவாசியினால்மைந்தாமைந்தா யூடாடும் சக்கரத்தையுன்னியாட்ட, திரமாகசீவர்கெதிகொண்டாடும் தீர்க்கமுடன்கேசரியி லிருந்துபாரே.

களையானசீவகளை தீபம்போலே கண்[illegible]யென்னை திரிமாண்டபோது, களையானசீவகளைபோங் கேபோச்சுகனவொளியின் பூரணந்தானெங்கேபோச்சு, [illegible]களிருலேசாயும்போது காரணமாய் முன்போலேயின்புண்டாமே, களையானசீவகளைபக் கத்தேதான் கண்வெடித்தகதையாச்சு சீவன்காணே.

நாளுகி நான்முடிந்த சூட்சந்தன்னை நாணிதனி லறியாமல் தான்தானெனவறு, ஆறுகின்றதொரு யுடலைகாணுன் யுடலில்நின்றயட்சாத்தி ஞானநிகாணுன், ஆறுகின்ற திருவடிமுடியுங்காணுன் மதிகெட்டுவிதியழிந்து மாளுவானே.

மாளுவதுரெண்டுவிதம் மைந்தாகேளுமகத்தான சீவர்கலைமாளும்போது, ஆளுவதுபூரணமாய் யறிவோடையா ரடங்குவது பராபரத்தை யமைப்பேயாகும், சூளுவதுநோயுடனே பாசம்சூழ்ந்தால் சுளிவானமதுமயங்கி யலைவான்பாரு, காலிநிலையறியாமல் வலைந்துகெட்டு கானலினும்நீனிலும்கரைந்துபோமே.

ஆகையால் அந்தகரண வியாபாரங்கள் நீக்கி அந்தர்முகநோக்கால் பேச்சுக்கும்மூச்சுக்கும் மத்தி கண்ணுக்கும் காதிற்கும்மத்தி. கங்குல்பகலாகு மிடத்திற்கு மத்தி. ரவிமதிக்குமத்தி. அறிவிற்கும் மனதிற்கும் நடுநிலையில் நின்றவற்கேமெய்ப்போத முதயமாகும்.

—நினைவைநீக்கி நோக்கியிடி விமலசொரூபந் தோன்றியிடும், நினைவைமேவிநோக்கியிடி னிலையிலுலகந் தோன்றியிடும், நினைவிலுலகமறிந்ததுவும் நீங்கிச் சொரூபமறிந்ததுவும், நினைவிநோக்கிற்குனில்லை நிசமுமாயா மோகமதில்.

தன்னைமறைத்தபந்தமதை தன்னிநீங்கிற்குன் விளங்கும், தன்னைமறந்ததே பந்தந்தன்னையறிந்ததே முத்தி, தன்னைவிடவோர் பொருளில்லைத்தானே பிரம்மமாயையும்பின், தன்னை விடவேறுய் விளங்கா தானேயாகி விளங்கியிடும்.

ஞானதிருஷ்டி பிராணயம் நிலைதிருஷ்டி பிராணயமா மென்ற நினைந்தலும் மாத்தலும் நித்திரையில் தன்னையே மறந்தலாகின்றபடி, மரணகாலம் எதிரிட்டு

ருப்பது இன்னதென்று தெரிந்து அதற்குள் அடையவேண்டியபயனை யடையாத நமது யிகபோக சுகமும் நடக்கையு மனவிகாரமும் யாதுபயன்.

ஐம்புலனை வென்றவிரன் வீரமேவீரம். கடவுள் ஒன்றெனத்தெளிந்த பேரறிவே அறிவு. பிரா யேமா லுண்பதே ஊண்தான் சாகாமல் கற்பதே கல்வி ஆதலால் ஆதிசிருஷ்டி காலமுதல் யோனியாசை கொண்டு யோனி மூலமாகவேயிச்சைகொண்டபடி ஜெனித்து வருகிறோம். அவ்வகையோனிவழியாக அளவிறந்த ஜென்மங்கள் எடுத்தும், இப்போதாகிலும், பிறந்துவிட்டேன் யினியிரவாதிருக்க வரந்தரவேண்டுமென பட்டணத்து சுவாமிகள்கேட்டபடி யினிபிறவிபெரு வண்ணம் பெறவேண்டுமல்லவா. தேகம் நரை திரை, மூப்பு சாக்காடுபெற்று தேகம் நசிப்பது சித்தப்தேகத்திலிருந்த சத்து எக்காலமும் புசிப்பதில்லை என்றுயனைவரும் புகல்வது பழமொழியாக யிருந்தாலும் அநுபவத்தில் சித்தாந்தமாக வேண்டும்.

இப்புவி அத்தி பழம்போல் பேரண்டம் அதற்குள்ளமைந்த வித்துகள்போல் சித்தண்டங்கள் மேற்கண்ட பேரண்டம் ஆயிரத்தெட்டு கூடியதுஒருபுவனம் இவ்வகைகொண்ட புவனம் 2,214-கூடியது ஒருசாகரம் சாகரம் ஏழுகூடியது ஒருபதம் இப்படி 814-கூடியதை பிரபஞ்சமெனமேலோர் கூறினர்.

தாணி சலம் கனர் காற்றத்தவான வாணியபாணிவ்ருந்திங்களங்கிமூரணிய தாரகைமுன்னிய ஒன்பான்பிரணவமாகும்பெருநெறிதானே, சிவம்சத்திநாதபிந்துசதாசிவமதிகழுமீசன், கூவந்தருள்ருத்திரன் மாலயன் யொன்றிெனன்றும், பவந்தரும் அருவம் நாலின்யுருவம் நல்லயுபாய மொன்றுய்நவந்தருபேதமகாக நாதனைநடிப்பனென்பர், பிரிதிவு அப்புதேயுவாய்வு ஆகாயம். உகாரநாதாவி, மகாரவிந்துசந்திரன்

ஓங்காரமகம் மேரு சுழிமுனை ஆக அஷ்ட மூர்த்தி யாயும் விளங்குவர் கடவுளென வேதம் கூறும், ஆச்சுதே அறிவொன்றின் விசாரணையே, யனைத்தையுமே பார்த்திருந்து வகண்டத் தன்னில், கோச்சுதே குருவா தத்துவங்களாகி கொடியதீவினையு நல்வினையுமாகி போச்சுதே பெண்ணாய் பிரபஞ்சமாகி புகழறிய நிற்குணமாய் நிர்மலமுமாகி, தீக்குதே சிவமாகி சீவனுகிசெழுஞ்சுடரின்கதிரொளியாய் சிறந்தவாறே.எட்டுத்திசையும் பதினாறுகோணமு மெங்குமொன்றும் முட்டித்ததும்பி மூளைத்தோங்கும்சோதியைமுடரெல்லாம் கட்டிசுருட்டிகக்கத்தில் வைப்பர்கருத்தில்லையார், பட்டப்பகலையிரவென்றுசொல்லும் பாதகரே. மேலோர்முன்குறித்தவாக்கியங்களுண்மையென விளங்குவதேயாம். ஐயமின்றி தெய்வவுரு தியானித்தாலதுவா மருவுருவை தியானித்தா லட்டமூர்த்தியுமாம், பொய்யாவிரண்டையும் தவிர்த்து தானாகயிருக்கிடில் பூரணமாம். சீவனெதிர்ப்பொருந்துமதுவாமின் மையனுருமனம்விடயத்தாசையுற்றே யதுவாய் மாண சென்னமும் விளைந்தவா ரேதென்தே யுணர்ந்து, மெய்யறிவே தானாகபாவித்தாலதுவாய்விளங்குவார் யாவரும் செனியாவீட்டையு மெய்துவரே.

ஐயுணர்வெய்திய கண்ணும்பயனின்றே, மெய்யுணர்வில்லாதவர்க்கு.

வாரசரம்—ஞாயர் செவ்வா சனி வலநாசியில் சூரியகலையாகவும், வெள்ளிதிங்கள் புதன் யிடநாசியில் சந்திரகலையாகவும், பூர்வபக்ஷ குருவாரம் சந்திரகலையும், அமரபக்ஷம் குருவாரம் சூரியகலையாகவும், காலை 4-மணிக்குநடக்கவேண்டியது அவ்விதம் நடந்தால் தனது காரியங்களனைத்தும் சித்தியாகும் அவ்வகை நடவாமல் பேதமாய், சூரிய நடக்க வேண்டியதினம் சந்திரரும், சந்திரர் நடக்கவேண்டிய அ

ணம் சூரியருமாக நடந்தால் அடியிற்கண்ட பலனுண் நடக்கும் ஞாயர் சந்திரன், சனி, யிருமல் திங்கள்சூரியர் சலதோஷம் சுற்றத்தாருக்குக்கேடு, செவ்வா சந்திரர் சுரம் சண்டை சாவு புதன் சூரியர் ரீரேத்தம் தலைகுத்தல் தீங்கு வளர்பிறை வியாழம் சந்திரர் தேகநோவு வெள்ளி சூரியர் கண் காதுநோய் வெளியூர் பிரயாணம். சனிசந்திரர் சீதள சன்னியாகும்.

சந்திர சூரிய நிருகலையினும் ஐம்பூதம் நடப்பதுண்டு பிரிதிவு நிரம்பொன்மை தித்திப்பு-அப்புவெண்மை, துவர்ப்பு, தேய்வு, செம்மை, உவர்ப்பு, வாய்வு, கருமை, புளிப்பு, ஆகாயம், படிகம், கசப்பு, பூர்வபட்சத்தில் குருபிரிதிவ், சுக்கிரர்; அப்பு, குரு தேய்வு, புதன் வாய்வு, சனி ஆகாயபூதிகமாகொள்க.

ஞாயர் ஆந்தையாகி அப்பும் திங்கள் செவ்வா வியாழம், காசமாகிய தேய்வும். புதன் வல்லூறாகிய பிரிதிவும், வெள்ளி கோழியாகிய வாய்வும், சனிமயிலாகிய ஆகாயம் பூதியமாக நடக்க மிக உத்தமம்.

• பூதியங்கள் பிரிதிவ் அப்பு நடந்தால் சத்வகுணமாயும், தேய்வு ராசதமாகிய கோபமாங்காரமாய் ஸ்ரீவிச்சை வாய்வானது அலைவுரும். ஆகாயம் பரயிச்சையை நாடும் காலை படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போது சுவாசத்தை உள்ளிழுத்துக்கொண்டு எழுந்திருக்கவேண்டும். ஆகவேண்டியகாரியங்களுக்கு போகும்போது ரவியில் பிரிதிவ் அப்புநடக்கச் சென்றால் தாமதத்தில் பலன் சித்திக்கும், படுக்கும்போது யிடதுகை கீழ்வைத்து வலதுகை மேலாக வைத்துகால்நீட்டி படுக்க வேண்டியது அவ்வகை படுக்கும்போது மனதைபலவாறு சிந்தையில் செல்லவிடாமல் சுவாசமீதுசெலுத்தியிருக்கவேண்டியது அவ்வகை அப்பியாசம்செய்துவருகையில் சொற்பனுதி அவஸ்தைகள் நீங்கி அந்தர்முக விவகாரங்க

ள் விளங்கும் இவ்வகைநடப்பதுமன்றி வயற்றில் ஆகாரமில்லாமலிருக்கும்போது பசி அதிகமாயிருப்பதென்றுசொல்வது அப்போதுமேற்கூறியபடிபடுத்திருந்து பார்க்க பசி அதிகமாயிருப்பதென்று சொல்வது அப்போது மேற்கூறியபடி படுத்திருந்து பார்க்க பசி எழும்பிய பரமிடம் நன்றாகத்தோன்றும்; அமாவாசைதினகாலை ரவியைராகுவும், பருவத்தின் சந்திரனை கேதுவும் மறைப்பதுபோல் நமது ரவிமதியைராகுகேது சாயை மறைப்பதால், மனதிற்குயிருளாகிய மாயை மூடப்பட்டது. சந்திரன்மனதிடமும் சூரியன் நேரத்திலுமிருப்பதால் ரவியிடம்மதியைசெலுத்த மதிக்கு கிரணங்கள் குறைவுபடாமல் அறிவுதயமாகும்.

ஆகாயமும்வாய்வும்கலந்திருக்கிறது மண்ணும் சலமும் கலந்திருக்கிறது. அக்கினிமத்தியமாநின்றன மாமுஷ உதிரசலம், ஒன்றாயிருக்கிறது சாமாகிய வாய்வு ஆகாயவெளியில் சம்பந்தமாகயிருக்கிறது அக்கினி பொதுநிலையாய்நின்றன.

தானென்றசித்தர்முதல்முனிரிஷிகள் தன்மயமே தானாகதவமேசெய்து, ஊனென்றவுடல்வெறுத்துபசியடக்கி வுத்தகலைவாசியென்றதாரகத்தை, கோனென்ற ஆகாச வெளியில்சென்று மகத்தான சோதியுடன் சோதியானார், யேனென்றிவந்ததுவும்சோதி சோதியெங்கும் சிவமயமானசோதிதானே.

சோதியென்றசோதியிலேசோதியானார் சூழ்ந்திதடாயண்டமதில்நன்றாய்ப்பாரு, வோதியதோர்மந்திரகலைசோதியெல்லாம் யொளிவிளக்காய்நின்றுந்திடாயங்கேபாரு, நீதியுடன்பார்க்கையிலேயண்டந்தன்னில் நிறைந்துநின்றநட்சத்திர சோதியெல்லாம், ஆதியென்றநாதாக்கள்காந்திகாந்தி யண்டமதில்சூழ்ந்துதடாயங்கேபாரே.

ஸ்தூலதேகம்சத்தி, சந்திரனென்றும் யிதில் உயிர்ப்பாகிய உயிர்சூரியர் சிவமாகும், பிரிதிவ்குரு நாசியிடமாக வாசனையறிதலும் அப்பு சுக்கிரர் நாவிடம் சுவையறிதலும், தேய்வு அங்காரர் நேத்திரமிடம் ரூபமறிதலும், வாய்வு புதன் சரீரத்தில் பரிசமறிதலும், ஆகாயம் சனி செவியினிடம் ஆகாயசப்தமறிதலுமாகும் இராகு கேது சாயையென்றும் குதம்குய்யம் யித்தானமிட மிருப்பதெனப் புகலும்.

மனனமென்றுதள்ளாதேவாசியோகம் கண்மூக்குமத்தியிலேகருதிப்பாரு, தூடிமிருத்தசுழிமுனையிலாதொக்கு சூரியனும்சந்திரனும்வொன்றாய்போகும், குடியிருப்புசாகரத்தின்கோட்டையாச்சு கோடானகோடியுகம்வாழுவாச்சு, நொடிநிமைக்குநேரமல்லோபிரமன்வாழ்க்கை நுண்ணிமையாய்பார்த்தறிந்துநடங்குவாயே.

சாக்கிரபகிர்முக விவகாரங்களிலிருந்து நித்திரை சொற்பனத்தில் அநேகவிஷயங்களைக் கண்டதாயும், செய்ததாயும், சென்றதாயும், நடத்தியதாயும் அநேகமாய்காணுகின்றோம் அவைகள் நித்திரைநீங்கியபிறகு யாதொருபயனையும் அடையாதவர்களாகின்றோம். அவைகளன்றி ஒரு ஸ்திரீயைகூடி சம்போகம் செய்ததாக காண்கின்றோம். அப்படிகண்டு நித்திரைநீங்கியபிறகு சுலிதமான விந்தை பிரத்தியக்ஷமாக காண்கின்றோம்.

இதை புத்திமான்கள் அறிவு முன்னிலையில் யூகமாய் யோகிக்க விந்தின்செயலும் பெருமையும் அறிந்து அதில்தேறும் அனுபவசித்தாந்தநிலையில் சதாஆனந்தபரவசராக விளங்குவர் வேதசம்மதமாக விருக்கும் மாயாள்வசத்தேசென்றுவரவேண்டி லோயாவிருபக்கத்துள் வளர்பக்கத்து, ளேயாவெண்ணுரின்பமேற் பனிமூன்றிரண் டாயரவபாத்து, ளாதிநாளாறுமே ஆறைந்துபன்னொன்றுமன்றிச் சகு

மார்க்கம் வேறன்பு வேண்டுதோர் பூவரிற்பின்னர்ந்
தோடேறு மிருபத்தொருநாளிடைத தோங்குமா
றின் மிகுத்தோங்கு மக்காலஞ்செய்யவே, செய்யும
ளவிற்சுழிநான்முகூர்த்தமே, மெய்யுங்கலை காலமி
குந்து பருதிகாலையு மிடத்தோடினன் காமநூலை
றி, செய்கவலமிடந் தீர்ந்து விடுக்கவே, கலக்குநாள்
முன்னுடன்னிடைக் காதனலத்தகவேண்டி லங்காரி
யுதாக், கலந்தின்மலத்தைத் தண்சிதத்தைப்பித்
தை, விலக்குவிலக்குவனசெய்து மேவலைவீரே, வி
ழுந்ததுலிங்கம் விரிந்ததுயோனி, யொழிந்தமுதலை
ந்து மீரைந்தோடேறிப், பொழிந்துபுன பூதம்போ
ற்றுங்கரண, மொழிந்ததுத லுச்சியுள்ளே யொளி
த்தே மாதரிடத்தே செலுத்த லுச்சியுள்ளே யொ
ளித்தே மாதரிடத்தே செலுத்தினு மவ்விந்து காத
லினல்விடார் யோகங்கலந்தவர், மாதருயிராசைக்
கைகொண்டேவாடுவர், காதலர்போன் றங்ஙன் கா
தலர்போன்றங்ஙன் காதலாஞ்சாற்றிலே.

மூலாக்கினி, பசி தீபாக்கினி, கோபாக்கினி, ஸ்ரீ
தாபாக்கினி, யோகஞானக்கினி, இவற்றுள் ஆகிய
மந்தமும்தவிர மற்றமூன்று அக்கினி உற்பவமாய்
தோன்றலை யாவரும் சரீரத்தில் கண்டிருக்கிறோம்.

உரமடிமேதினியுத்தியிலப்பாம் விரவிய தன்முலை
மேவி கிழங்கி கருமுலை மீமிசைகை கிழிக்காறும்
விரவிலையங் கந்தரமேல்வெளியாமே, சத்தமுசத்த
மனமுமனக் கருத்தொத்தறிகின்ற விடமுமறிகிலர்
மெய்த்தறிகின்ற விடமறிவாளர்க்கு, வத்தனிடப்பி
டமவ்விடந்தானே, அங்கமதிகூட வாகுமதிவொளி,
யங்கிசிவத்தினில் கூடவத்தாரகைத் தாங்கியதுவே
சகலமுமாமே பத்துமிரண்டுபகலோ னுயர்கலைபத்
தினோடாறு முயர்கலைபான்மதி, யொத்தநல்லங்கிய
தெட்டெட் டியர்கலை, யத்திறனின் றமையாய்ந்து
கொள்வீரே.

மேலாம்பதத்தைதயளிக்கும் பூரணஅக்கினியைநா
ம் கேவலவிடயங்களிற் செலவிட்டு வாழ்நாட்களைக்க
வலைப்படுத்துகின்றோம் அவ்வகைசெய்கினும், அதி
னு லனேகவியாதிகளனுபவிக்க நேரிடுகின்றது உ
ன்னும்போ தாயிரெழுத்தாலுயிரைவாங்கி யுறங்
குகின்றபோதெல்லா மதுபோலாகும், பெண்ணின்
பா லிந்திரியம் விடும்போதப்பா பேணியுயிர் மேல்
வாங்கென்று, மேலோர் செப்பியதை நாம் என் அ
னுபவத்தில் கொண்டுவரக்கூடாது.

விந்து அதிகமா சிலவழிப்பதில் பிணி மூப்புசா
க்காடு எளிதிலடையக்கூடும். ஆகாரத்தில் பிரிந்த
அன்னரசமானது உதிரமாய் 7-வது நாள் சுக்கில
மாகின்றதை விரயம் செய்யாமல் மாதத்தில் இர
ண்டுதரம்ஸ்ரீ பூர்வகாலத்தில் பயன்படுத்தும் தின
ம் சையோகிப்பதில் அவ்விதம் தரிக்கும் கருசிசுவா
னது ஆயுள்விர்த்தியும் தேகதிடமும் பிணியில்லாம
லு மிருக்கும்.

உந்தியிலிருக்கும் உதானவாய்வால் காமம்கண்ட
ஸ்தனத்தான குழியிடமிருந்து சமானவாய்வானது
கமலபிறைசொலிக்கும் ஸ்தானமடையுமாகில் க
பாலசூலையிடி, அசதி, வயிறிரைச்சல், பேதி, நர்வு
லால் முதலிய வியாதிபுருடர்களுக்கும், ஸ்திரீகளு
க்கு வயாநோய், தேகவெதுப்பு சூதகவாய்வுமுதலி
யது நேரும்.

ஓமென்றமூலகணபதிபேகாப்பு யுண்மையுடன் ந
மேனையிலுகந்துநின்று, ஆமென்றயமூர்த்தகலை யுள்
கொண்டேதா னடங்கவந்தமனோன்மணியின்கிருபை
யாலே, ஊமென்றவுண்மைதனைமவுனமாக வுருபெ
த்துக்கருபெத்துயுறுதிபெத்து, தாமென்றமதிதனை
யோவியில்தாக்க சச்சிதானந்தமென்ற ஆதிகாப்
பா. ௩

புருவமென்றசுளினையிலே மைந்தாகேளு போதமென்றஅருள்ஞானசெந்தீபத்தி, திருவிருந்தமசளிகையில்தீபங்காணும் செங்கமலக்கண்ணாலேவேறன்றாய்ப்பாரு, குருவிருந்தயிருந்தயமாமுக்கோணத்தில் குவிந்துமனக்கண்ணாலேதன்னைபார்த்தால், கருவிருந்தபதியதுதான்மைந்தாமைந்தா கண்காணதோணுமடாகருவைப்பாரே.

விண்ணைப்பார்தன்னைப்பார்மண்ணைப்பாரு மேன்மைபெருகுருவருளைமேவிப்பாரு, பெண்ணைப்பார்த்தலையாதேபெண்தான்தேகப் பிரியமுடன்தேமககைதபேணிப்பார்த்தால், கண்ணப்பாதுலங்குமடா அந்தக்கண்ணால் காணலாஞ்சித்துவெகுகண்ணில்காணும், மண்ணைப்பாவென்றசடந்தன்னைப்பேணு மாந்தருக்குயென்னவரும்மண்தானுமே.

பிரண்மெனம்நிலையாதேயித்தருண்டு பிராணநிலையறியாதமூடருண்டு, மூரண்டுடனேமுறடுகட்டிவளையாருண்டு மோகமென்றமாய்கையிலேதிரிவாருண்டு, திரண்டகோளுமுனிருணியையறியாருண்டு செகத்திலிப்படியதிகஞ்செப்பப்போமோ, அருண்டகண்ணுமிருண்டகண்ணுமறியாபாவி அடக்கமென்றகாவியத்தையறிந்துபாரே.

தன்னிலையைதானறியாமூடர்காணும் சாத்திரத்தின்பயனறியாசண்டிமாடு, கண்ணறிந்துவிண்ணொளியைக்கருதிப்பார்க்க கருத்துடனேவாசிநிலைகாலைக்காணார், யெண்ணிறைந்தவட்சாத்தினியல்புகாணார் யெட்டிரண்டுமறியாமல்யேகமென்பான், வினைநிறைந்தயேகபராபரந்தான்மைந்தா மெய்ஞ்ஞானமான திருவிளக்குத்தானே.

மஹான்கள் வாக்கியம் அனுபவத்தைப்பெறாமல் வாய்மதமாய்பேசினவர்கள் பெருங்குடலும் சிறுங்குடலும்பிண்டு மஹாதுன்பமடைவர். மஹான்களை

தரிசிக்கவேண்டி அந்தர்முகமா அடியிற்கண்டபடி தியானிக்க அவர்கள்பிரத்தியக்ஷமாய் திருவருள்பாலிப்பார்.

செய்ததமிழ்தனையறிந்துபதினெண்பேரை செம்மையுடன்காண்பதற்குமூலங்கேளு, சைதன்யமான பொருதன்னைப்போற்றி சதாகாலம்ஓம்ஸ்ரீம் அங் சிங்கென்று, மெய்தவராபூரணமேயுருவேசெய்தால் வேதாந்தசித்தரைத்தான்வசமாய்காண்பாய், உய்த முடனவர்களைத்தான்வசமாய்கண்டால் வுத்தமனே சகலசித்துக்குதவியாமே.

புரியஷ்டமாவன:-சடம் பிரமன்கூறு,உதிரம் மாலின்கூறு, இதில்சூக்ஷமமாவன, சிகரதீ சீவன், வகர காற்று மயேசன், யகர ஆகாய சதாசிவம்,விந்து, நாதம், சத்தி, சிவன் விருட்டு, பரை ஆக 8 இதின்மீது வெளி பாழ், ஒளி பாழ், வெளியொளிபாழ் இவைகள்கடந்து உன்மனையாளிடமென்றும் அவ்விடமிருப்பவர் சிவயோகிகளென்று மறைகூறும் இவ்வனுபவம்பெறுவது, தக்க ஆசான்கிடைத்ததும் அவராதுசாயையபோ லவருடனிருந்து சதா அவரால்பெற்றீ திருவருள்நோக்கத்தில் நெடுங்காலமிருப்பவர்களுக்கு அமையும்பதமாகும். ஆகிலும் அனைத்திற்கும் மனமே முன்னிலைகாரணமாகயிருக்கிறது மனது அலைவுறாதிருக்கவேண்டும் மனமானது எப்போதுநன்றை நாடியேநிற்கும். அசைவற்றுநிற்கும் சுபாசுபம் கிடையாது நன்மார்க்கத்திலேனு சொல்லும் சமனதாகயிருக்கிறது. மனதளவை நிறுத்துவோர் வல்லோர்கடமை.

ஔவையார் குறள்.

தருமம்பொருள்காமம் வீடெனுநான்கும்
யுருவத்தா லாயபயன்
யீசனெனக்கருதி செல்லாவுயிர்களையும்
நேசத்தால்நீ நினைத்துக்கொள்

மெய்ப்பரிசறியாத மூடர்தம்நெஞ்சத்தின்
யப்பால் நிற்குஞ்சிவம்

உடம்பினாற்பெற்ற பயனாவதெல்லாம்
இடப்பட வீசனைத்தேடு

தன்னையறியு மறிவுதனைப்போற்றில்
பின்னைப் பிறப்பில்லைவீடு

எண்ணிறைந்தயோனி பலவாய்ப்பரிந்தெங்கும்
உண்ணிறைந்து நிற்குஞ்சிவம்

விண்ணிறைந்துநின்ற சுடர்போலசீவர்
தண்ணிறைந்து நிற்குஞ்சிவம்

நினைப்புமறப்பு மில்லாதவர்நெஞ்சந்
தனைபிரியாது சிவம்

நரம்பெனுநாடி யிடையினுக்கெல்லாம்
உரம்பெறுநாடி யொன்றுண்டு

உந்திமுதலாகி யோங்காரத்துட்பொருளாம்
நின்றனை நாடிநில்

உந்தியினுள்ளே யொருங்கசுடர்பாக்கில்
அந்தியழ லுருவமாம்

நாபியகத்தே நலனுறநோக்கில்
சாவதுமில்லை யுடம்பு

ஆவிபாழ்போகா தடக்கியிருந்தபின்
ஓவியமாகு முடம்பு

மயிர்க்கால்வழியெல்லாம் மாய்கின்றவாயு
உயிர்பின்றி யுள்ளேபதி

மூலத்திற்றோன்றி முடிவிலிருநான்காகி
கால்வெளியிற் பன்னிரண்டாங்காண்

வாசலீரைந்து மயங்கிவாயுவை
ஈசன்றன் வாசலிலேற்று

சத்தியாகுஞ்சந்திரனைச் செங்கதிரோனூடுருவிச்
முத்திக்கு மூலமது

வாயுவழக்கமறிந்து செறிந்தடங்கில்
    ஆயுட்பெருக்க முண்டாம்.
அசையையறிந்துள்ளே யழலெழநோக்கி
    இசையாது மண்ணிற்பிறப்பு
ஓசையினுள்ளே யுதிக்கின்றதொன்றுண்டே
    வாசமலர்நாற்றம் போல்வது
துரியங்கடந்த சுடரொளியைக்கண்டால்
    மரணம்பிறப்பில்லைவீடு
அடைத்திட்டவாசலின் மேல்மனம்வைத்து
    படைத்தவன் தன்னையேபார்
எழுஞ்சுடருச்சியின்மேல் மனம்வைக்கத்
    தொழிலொன் றிலாதசுடர்
கண்ணகத்தேநின்று களிதருமேகாணுங்கால்
    உண்ணகத்தே நின்றவொளி
உரைசெயுமோசை உரைசெய்பலருக்கு
    நரைதிரை யில்லைநமன்
பேசுமெழுத்துடன் பேசாவெழுத்தினில்
    ஆசான பரநந்தியாம்
நின்றவெழுத்துடன் நில்லாவெழுத்தினை
    யென்றுவிக்கி லொன்றேயுள்
வாக்குமனமு மிறந்தபொருள்காணில்
    ஆக்கை யழிவில்லையாம்
கூடகமானகுறியெழுத்தை தானருகில்
    வீடாமாகும் விரைந்து
பிறந்திடமாவிடம் பேருதிருப்பின்
    இறந்திடம் வன்னியிடல்
வலத்திற்சனிக்கே யிருப்பகல்வாயு
    செலுத்தபேறது செயல்
மயிர்முனையிற்பாதி மனத்தடியுண்டேல்
    உயிர்ப்புண்டல் சாதிநிலை

உறக்கமுணர்வு பசிகெடப்பட்டால்
    பிறக்கவும் வேணும்பிறப்பு
நினைப்புமறப்பு நெடும்பசியுமற்றால்
    அனைத்துலகும் வீடாமது
மறவாநினையா மவுனத்திருக்கில்
    பிறவாரிறவார் பின்னை
அண்டத்திலுமிந்த வாவென்றறிந்திடு
    பிண்டத்திலு மதுவேபேசு
சூரியன் வன்னியொன்றேயா
    கிடிற் சோமானும்
மதியொடுவன்னியொன் றாகவேவந்தால்
    கதிரவனுமென்று காண்
கதிரவனுள்மதிபுகில்
    அமாவாசை
மதிக்குட்கதிரவன் வந்தங்கொடுங்கிடில்
    உதிக்குமாம் பூரணசொல்.

ஓசையில்சத்தம், முட்டையிலுயிர்ப்பு, வித்தில்வித்தாகியமுளை, பூவில்வாசம், பழத்தில்சுவை, யிரும்புண்டநீரை பிரித்துகாட்டயில்லாமை போலும் நிறைந்தனர் எள்ளிலெண்ணை, பாலில் நெய் கரும்பிற் சக்கரை, தேய்வில், அக்கினி, சொல்முடிவில் பொருள் தோன்றுதல்போல் அகநோக்குடையவர் காண்பர், நால்வகை தோற்றத்தில்மானிடமெனும் வடிவங்கொண்டு மேற்கண்ட அனுபவங்களை தரித்து நான்யோகி, சோகி, தம்பிரான், சாமி தபசி தாசன், பக்தன் யென்று வீண்காலங்களைப்போக்குவதில் அருமையான பிறவி வீணாக பிரிதீவில் லயமாய் விடும். தான் தான் யென்பது யாது அதைசூழ்ந்த கருவி காரணாதிகள் எவ்வாறொடுங்குமெனசித்தாந்தமுற்று நிற்பதே எம்மத சார்பினரும் பெரும் நிலையாகும்.

திருவருள் போகத்தை யளித்து சென்ன மரண துயரத்தை நீக்கி துரியாதீத நிலையிலிருந்தும்குருவிற்கு உடல்பொருளாவி யெனும் யுடல் சரீரத்தையும் ஆவி, உயிர்ப்பையும், பொருள் அறிவையும் தத்தம் செய்த மாணாக்கரில் மந்தன், மந்தரதரன், அதிதீவர பக்குவதிரங்கள் நான்குவிதமாக யிருக்கிறது அதிலும், பிர்மசாரி, கிரகஸ்தன், சந்நியாசி,வானப்பிரஸ்தன், அதிவர்ணாசிரமம் பெற்றவர்களாகவுமிருக்கின்றனர்.

இருக்கு, எசுர், சாம, அதர்வணமாகிய நான்குவேதத்தில் இருக்கும் ஞானகாண்டத்துள் தைத்திரிய உபநிஷத்தில் பிரக்கியமான பிரமமெனும் குருவாக்கியம் அறிவேபிரமம். எசுர்வேத அயித்திரிய உபநிஷத்தில் அகம் பிரமா அஸ்மி சீடன் வாக்கியம் நானே பிரமம். சாமவேதஞ் ஞானகாண்டத்துள் சந்தோக்கிய உபநிஷத்தில், தத், துவம், அசி, மெனும் வாக்கியம் நீயானாய். அதர்வணவேத ஞானகாண்டத்து மாண்டோக்கிய உபநிஷத்தில் என்னுடைய ஆத்மாவே பிரமமாய் விளங்குகின்றன. இவ்வனுபவம். குருகடாக்ஷத்தால் சுவானுபவமாக வேண்டும்.

பஞ்சாக்ஷரம்:—நகாரம் அருட்சத்திதேகத்தை தரும், பிராரத்துவத்தை யநுபவிப்பது. மகாரம் ஆணுவமலம் யசுத்தமாயை, சிகாரம் சிவம்வகாரம் அருள் யகாரம் சீவன். ஆதலால் மகா அசுத்தமாயை நீங்கில் அருட்சத்தி செய்கை யொடுக்கும். பிறகு யகா சீவன்வகா அருளால் சிவத்தை யடையு மெனவும், நகாரமாகியசேரியை நஞ்சென வெறுத்து மகாரமாகிய மயலெல்லாம் வேரறக்களைந்துவகாரமாகிய வனத்தினி லிருந்திளைப்பாறி சிகாரமாகிய சிவகதி யடைந்தனன் சீவனென்று அனுபவிகள் வாக்கியம் ஆகையால் நகார மகாரத்தை நீக்கிமற்ற மூன்று அட்சர

ங்களை யிருதலை மாணிக்கமாக தியானிக்கின்றனர் இவை ஆகம் விதிப்படி கூறியதாக யிருக்கின்றனர்.

பிரணவ பஞ்சாக்ஷர விபரம்

கணபதிநாசிசுவாசமுன்னிலையில் 4-விதபேதங்களை யறியும், அப்பேதங்களறிவது இடைகலைபின்கலையுஞ்சுழிமுனையில் கூடில் நீங்கும் ஓங்காரசத்திபிரமன், நாவுபிரிதிவு, 6-வித சுவைகளறியும். அறிவது நீங்கில்நகாரம்சித்திநேத்திரம்சகலம்அப்பு10விதபேதங்களாகிய பஞ்சவர்னம் உபரம் குள்ளம் சிறுத்தல் பெறுத்தலாமென யறிவது நீங்கில் மகாசித்யாகும். சர்மம்:—தீ தேய்வு இவை முன்னிலையில் சூடு குளிர்ச்சி யிருது கடினமென யறியும் பரிசபேதம் 12-ம் அறிவது நீங்கில், சிகர சித்தியாகும்.

செவி வாயு ஆகாய அம்சம்:—16-விதஅக்ஷரபேதங்களை யறிவது நீங்கில் வகரம் சித்தியாகும்.

புருவமத்தி ஆகாயம்:—அவ்விடம் விருப்பு வெருப்புமறியும் இரண்டு தன்மை நீங்கில் யகாரமனல் சித்தியாகும். இவ்வகை சத்த பரிச ரூப ரச கந்தங்களறியும். மனம் அசைவர அம்பலமாகிய உச்சிக் குழியில் சங்கல்பமிலாதாகிய அறிவு சுயம்பிரகாசமாய் விளங்குமென தபத்தினர் செப்பியிருக்கின்றனர் இதை 51-அட்சரமென்று புகல்வர்.

ஆக்கிருஷணம் தம்பன நகரம், மோகனம் மகரம் பேதன மாரணம் சிகர வித்வேஷணம் உச்சாடனம் வகரம். வசியம் யகரமாகும்.

நகரம் ஆண் என்றும் அதற்கு மூன்றுவது சிகரம் பெண் என்றும் ஆண் எழுத்தை சுற்றி பெண்ணெழுத்து சுத்திருக்க, அவ்வகையாக, ஒவ்வொரு எழுத்திற்கும் மூன்றுவது எழுத்து பெண்ணெழுத்தாக சக்கரங்களி லடைக்கின்றன. பன்னிரண்

கொலான புரவியப்பா, பாங்கான மூல்வெளிதன் னில்நிற்கும், நன்னயமாய் வாசிதனிலேறிக்கொண் டு நாட்டியந்த நடுவீதி தன்னில்நின்றால், முன்னி ன்ற முபபாழுக் கப்பாலேயோர் முகப்பூண்டு முச் சந்தி வந்துகூடும், சின்னஞ்சிறுவாசல் கடந்தப்பாற் சென்றாற் சிதம்பரமும் கரணமும் சித்தியாமே.

பிரணவமென்னும் ஓங்காரத்தில் அகாரசோதிபி ந்துவுதித்து இதில் நகரமகர முதித்து, உகாரவொ லியால் நாதமுதித்து இதில் சிகர வகர முதித்து ம காரத்தில் யகாரஆன்மா தோன்றிப தெனவும்.

நகரம் திரை, மகரம் மால், சிகரம், பதி, வகரம் திரை, யகரம் சிவாக்ஷரமாய் விளங்கும், யோகாக்ஷ ரம், கிரியாக்ஷரம், பஞ்சாக்ஷரம், சடாக்ஷரம், அஷ் டாக்ஷரமாக சிந்திப்பதெல்லாம் பகிர்முக நோக்கு டையதாயிருக்குறது. அக்ஷரமானது அச்சரமாம்எ னகூறுவதில் சாம்பார்ப்போன் பரம்பார்க்கக்கூடும்.

அகாரமான நேத்திரத்தில் மனோன்மணியென் னும் மனமானது அறிவு சதாசிவமாயிலங்கும். அ றிவுஎன்பது, அகாரம் சூரியகலைபாகவும், உகாரம் சந்திரகலையாகவும் றீங்காரம் சுழிமுனையாகவு மிரு க்கின்றன. இம்மூன்றுங் கூடியது அறிவு இவ்வகை யுடையவர்கள் அறிவுடையவர் சிங்கார யிடை பிங் கலைசங்கார வழிபோகாமல் பொங்கிநிறுத்தி யெங் கள் குருநாயகைபாதம் போற்றும்படி முத்துத்தா ண்டவசுவாமிகள் செப்பினர். இச்சா பிராரத்வம் அனிச்சாபிராரத்துவம், பரேச்சா பிராரத்துவமாக அனுபவித்து வருவதில், இவனது செயலால் யா தொருவினைகளையும் நடத்தாமல் யாவும் கடவுள் செயலாக முடியவேண்டுமென நிக்ஷபமுடையவரா னல்அவர் அடிமைத் திறமாக யாட்கொள்ளக் கூடும்.

எதிரிட்டிருக்கும் மரணத்திற்குள் கொடுமையா ன காலனுக்கு, யேவலாளிகளாகிய 444-வியாதிக்கு

ம் மரணத்திற்கும் மிகப்பயந்தவர்கள் உள்ளமானது அதிதீவிரமாய் நன்முயற்சியி லிருப்பார்கள்.

புவியின்கண் மாதிடங்கள் அடியிற்கண்ட பேதங்கள் ஒருவாரெனகூற யாவரால் முடியும்.

ஆத்மம்.

வேதாந்திகள்-ஞப்த்தி மாத்திரமே, ஆத்மாவென்றுரைப்பார்.

கூடஸ்தன்-பிரமம் விடயங்களைத் தெரிந்து அவைகளில் மறைந்தபிறகு அவை தன்னரூபமென்று அரிவதே ஆத்மா விஷயசிதாகாச சீவன்.

பாசுபத காபாலிகாவிரதர். நித்திய விபாபக சைதன்னியமே ஆத்மா.

சாங்கிய பாதஞ்சலிகர் - அசங்க சின்மாத்திரமே ஆத்மா நியாய வைசேடிகர் ககனம்போல் மகத் பரிணமனைப் பாஷாணம்போல் சடரூபமானாலும் மனது சம்போகத்தில் சித்து சம்யுத்தனை யிருப்பது ஆத்மா.

சைனன் - தேகாதி விலக்ஷிணவாய்வு தேகபரிணமிதனைய், பரிணமிக மத்தியில் சாங்கோச விகாரதர்மமே ஆத்மா

கவுளயாமளா சாத்விகர் - ஆனந்தமாக நிற்றலே ஆத்மா லௌகீகன் - தேகபுத்திர களத்ராதிரூபமே ஆத்மா உலகவாசிகள் தூலசரீரமே ஆத்மா.

சார்வாகன் - தேகம் நீங்கியபோது பார்த்தேன் கேட்டேன் என்று சொல்வது நீங்குவதால் பஞ்சேந்திரியமே ஆத்மா.

சார்வாகயேகதேசன் - பிராணவாய்வு போனபின்பு யிந்திரியமில்லாமையால் பிரமணவாயுவே ஆத்மா.

உபாசகன் - மனதில்லாத பொழுது பிராணவாய்வு நீங்கலால் மனதே ஆத்மா.

க்ஷணிகவாதி - புத்தியில்லாதபோது மனஞ் சலிக்கிற படியால் புத்தியே ஆத்மா.

பௌத்தன் - சுழுப்தியில் அந்தக்கரணமுதல் சகலயிந்திரியங்களும் லாபமடைகின்றமையால்சூன்னியமே ஆத்மா.

பாட்டாசாரியன் - சுழுப்தி சூனியமென்று அறிந்து சாக்கிரத்திலவந்துசொல்வதால்சத்தே ஆத்மா

அந்தராளன் ஆகமஸ்தன்-சூஷ்மநாடி மூலமாய் சஞ்சரிப்பதால் அணுவே ஆத்மா.

டிகம்பரன் பாதாதிகேசமுதல் அறிவு வியாபகத்திருப்பதால் அணுவே ஆத்மா.

தார்க்கிகன்—பிரபாகரன் ஆத்மா கண்டமாயிருந்தால் ஆத்மா நசித்துவிடுமாதலால் ஆத்மா பரிபூரண மென்றும் சடமென்றும் புகல்வர்.

பாட்டன் - ஆத்மா சுழுப்தியில் சடமாயும் சாக்கிரத்தில் அறிவாயு மிருப்பதால் ஆத்மா சடசித்தெனப்புகல்வர்.

சாங்கியன் - பரிபூரணத்திற்கு பிரண்டுலக்ஷணம் கூடாதாகையால் ஆத்மா அறிவாயும் பரிபூரணமாயுமிருக்கும் சுழுப்தியில் காணப்படும் சடம் அந்த ஆத்மாக்களுக்கு சுகதுக்கத்தை கொடுப்பதால் ஆத்மா சுபாவம்.

யோகி - பிரதி என்னும் சுபாவத்திற்குநடத்துவோனில்லாவிடில் சேஷ்டியாதாகையாலும் ஆக்கினைசெய்து காப்பாற்றுகிறவனில்லையாகில் சீவர்களுக்கு பந்தமோக்ஷமில்லாமையால்ஈஸ்வரன் சீவர்களுக்கு அன்னியமாயிருக்கிறார்.

பாதஞ்சலி மதத்தோர் - பிராணிகள் மனதில் அந்தரியாமியாக ஆத்மா.

தார்க்கிகன் - அந்தக்கரணமில்லாவிட்டால் சகலமுமில்லை ஆனபடியால் அந்தக்கரணமொற்று

மைப்பட்டபோது இரண்ணிய கற்பனாக யிருப்ப
தே ஆத்மா.

விஸ்வரூபன் - தூலத்தை விட்டு சூக்ஷ்ம மிரு
க்காதாகையால் கிருஷ்ணன் விஸ்வரூபமெடுத்து எ
ங்கும் காலே காட்டியபடியால விருட்டு விஸ்வரூப
மே ஆத்மா.

மதாபிமானிகள் கூறுவதிலுண்மை யின்னதெ
ன்றுணர்பவர் ஞானிகள்.
உலகிவிவ்வகை பேதங்களாக புகல்வர். (மோக்ஷம்)

வேதாந்திகள் - ஆணவம் மாயை காமியம் இம்
மும்மலங்களும் நீங்கி ஆத்மா அருளோடு கூடிநிற்ப
தே முத்தி பிரமாத்தும ஐக்கிய ஞானத்தால் விஷ
காராதி சம்சார பந்த நிவர்த்தியே மோக்ஷம்.

பாதஞ்சலிகர்-யோக அப்பியாச பலத்தால்மனோ
லயத்தால் அஞ்ஞான மழிந்ததே.

சாங்கியன்-பிருகிருதி புருஷ விவேகத்தால் அவி
த்தைநாசமானதே.

சங்கிறுந்திவாதி பாலிகமாவிரதி-பசுநாணம்கெட்
டுசிவகரணமாகிறதே, கர்த்ருவமான சம்சாரபாவத்
தை விட்டுஞப்திமாத்திரமா யிருப்பது.

பார்க்கரியன், பேதவாதி-ஆத்மா கெடுகிற தென்
றும் ஆணவமலம் கெடுகிறதும.

மாயவாதி-சரீர தொந்தனைபட்டு நிற்கிற சீவாத்
மாவிற்கு விவேகஞானமுண்டாகிறதே.

பிரபாகரன் அமணன்-எங்கு மறிந்த காமியகன்
மங்கெடுகிறதென்றும் முக்குணங்கள் கெடுகிறதெ
ன்றும்.

புத்தன்-உருவம் வேதனை குறிப்பு பாவனை விஞ்
ஞானம்கெடுகிறதே.

சமவாதி-சுத்த மாயாசரீர மழியாதாகையால் நி
தியமாகயிருப்பதே.

பாஷாணவாதி-ஆத்மாகேவலத்தில் கிடக்குர்தன்மையைப்போல் முத்தியிலும் ஒன்றுமறியாமலிருப்பதே.

சாத்வீகன், சார்வாக லௌகீகர்-ஆனந்த பிராப்தியென்றும், மாணமே மோக்ஷமென்றும்.

பூர்வமீமாங்கிசிகன். உலகாயுதர்-சுவர்க்காதிலோகபிராப்தி என்றும் மகளிரிடத்துண்டான போகமென்றும்.

சைனன், கௌலயாழ்மகளா - ஆகாசமத்தியத்தானுத்திரோத்ரகமனம், ஆகாசமனுதிசித்தி பிராத்தி

பௌத்தன்-சுகஜுக்காதிகளிற் மயக்கப்படாமலிருக்கும்சுத்தபுத்தி சந்ததியே.

பஞ்சாத்திரிகள்-வாசுதேவாத்துமகப் பிரகிருதியில் சொரூபஆனியில்லாம லடங்குவது.

லௌகீகர்-இகத்தில் புத்திராதிகளுடன் கூடிவியாதிதுக்கமில்லாமல் சுகத்திலிருப்பது.

நியாய வைசேடிகர்-ஆடுமெஞ்சரீரேந்திராதி 211-துக்க ஆத்யந்தநாசத்தால் பாஷாணம் போலிருப்பது.

பாசுபதர்-பிரவகேஸ்வத்தால், யீஸ்வரத்துவம்அன்னியருக்குகொடுத்து ஆத்மன் ஞப்திமாத்திரமிருப்பது.

மாந்திரசமிமாஞ்சா சித்தாதிகள்.

ஆத்மன் சடத்துவாதீதசிவசமானத்துவமாவதே முத்தி எனப்புகல்வர்.

மதி லக்கனுதி கண்மாதி மூவரும்நட்பாக கலந்திருக்கில் நரை திரை நீங்கி நெடுநாளிருந்து மோட்சம்குருகோபுராம்சம் பெற்று கேந்திரத்தில் நிற்கவெள்ளி திரிகோணத்தில் பாவதாம்சம் பெற்றுநிற்க கடக லக்கணமாஞல் வுகாந்தவரை யிருப்பன் கடகலக்கணமாய் மதிகுருயிருக்க, கேத்திரத்தில் வெள்ளி புதனிருக்க மற்றவர்-ரு-சு-கக-ல் யிருக்க

ஆயுளில் வளவென முடியவில்லை, குரு சனி ஒருபகைக்குட்கூடி பாக்கியத்தி லிருக்க மற்ற யிடமாகிலும் இப்படியிருக்க நாற்கோள்பார்க்க பானு உதயத்தில் பிறந்தவன் முனியீஸ்வரனூர் பாக்கியத்தில் புதன் குரு ராகுகூடி சனியங்கிசத்தை யேவிடாதிருந்து தனதுஅங்கிசமேற்மதியுதயத்திலிருக்க யுகாந்தகால மிருப்பன் ராகு குசன் சனி சர அங்கிசத்தைமேவி குருவெள்ளிஸ்திர அங்கிசத்திருக்கம்ற்றவர்உபயஅங்கிசத்திலிருக்கும்ஆயுள் 1000லக்கணம் உபயராசியாய்உபயத்தோன் கேந்திரமுச்சம் மூலதிரிகோணத்திருக்க சனி அட்டமாதிகூடில் 1000-ஆயுள் லக்கணதிபதிக்கு 6-8-மிடத்தில்பாபகிரகம் நிற்க ஒன்பதா மிடத்ததிபதியும்சுபாவும் 9-மிடமில்லாதிருக்கில்- பரதேசியாய் திரிவன். வாக்காதியும் குருவும் கூடியிருந்தால் சாஸ்திரவிசாரணையும் மந்திரஉபதேசம்செய்யும் திரமுமாகும். அங்காரகர் சனி சூரியன் குரு இந்நால்வரும் லக்கணத்திலிருக்க திரிகோண கேந்திரங்களில் சுப * இல்லாதிருந்தாலும் சந்நியாசியாவர், குரு சந்திரன் சூரியன் இவரிலொருவர் லக்கணத்திருக்க, அல்லது 10-மிடமிருக்கினும் சனி 12-ல் இருக்கினும் சந்நியாசியானவர் சுக்கிரன் பகை நீச்சம் பெற்று அவருக்கு, 5-9-ல் பாபர்நின்று லக்கணத்தை சுபகிரகம் நோக்காதிருந்தால்முத்திபெறுவர் 5-ம்மிடத்ததிபன் லக்கணத்திற்கு 9-ல்யிருக்க அவர் ராகுவாகில் அகாயமானமும் சந்திரனாகில் காந்தருவசித்தி புதனாகில் அவிழ்த பிரயோகசித்தி குரு சுக்கிரன் சனியாகில் பொன் வெள்ளி ரசவாத சித்தியாகும். ராகுகேது 6-ம்மிடமிருக்கில் கல்வியுள்ளவன் செவ்வா ஆட்சி உச்சகேந்திரங்களிலிருக்கில் பெருந்தவசி சிவமனோகரஞானி. துலாத்தோர்கடி, வாசிதேவிடயோகம், மந்திரம், குளிகை, வாதம் காயசித்தியாகும் கன்னி மீனம் மத்திபசித்தி மேடம் •தனசு

தாயை போசத்தி சித்திகள் பெறுவர். ஜென்னகால மானாலும் யோகம் பூசைசெய்தாலும் மாதம் சிங்கம் சிலைகோல் மீனம் ரிஷபம் கடகம் சனி, வாரம் குருமதி புகர்புந்தி, லக்கணம் மீனம் வில் துலாம் கன்னி, திதி பஞ்சமி சஷ்டி சத்தமி தசமி திசமி திரிதிகை சதுர்த்தி, யோகம் அமுதயோகமாயிருக்கில் உத்தமம். ஞானி சித்தனாகுவர் ஜெனனநாள் உத்திரம் அஸ்தம் சித்திரை சுவாதி மூலம் உத்திராடம்அஸ்வனி பரணி உத்திரட்டாதி காயசித்தி யோகசித்தியாகும்.

கர்ப்பம் உண்ண தனது லக்கணத்திற்கு சாரத்தில் கிரகங்கள்சுக்கிரன் 5-ல் குரு 9-ல் குஜன் 2-ல் புதன் 11-ல் சூரியர் 7.ல் சந்திரரிருக்கவேண்டும் கர்ப்பமென்பது முப்புவென்றும் அவரை விமதி சுழி என்றும் பகிர்முகத்தில் தாதுமூல சீவமாயுள்ளவையில் எப்பொருளாக அமைந்திருக்கும் முப்பைகுருவல் தெளிந்து அவை கொள்வதற்கு மூந்திலோகுருவாகிய அயக்காந்தசெந்தூரத்தை அகத்தியர்செந்தூர 300-ல் கூறியபடி கொள்ளவேண்டும்சந்திரகலையில் பிரிதிவு பூதம் நடக்கும்போது சிவாலயம் வீடுகட்டல் குடிபுகுதல் மரம்வைத்தால் சாந்தி கழித்தல் அப்பிறகு குளமெடுத்தல் சோலைவைத்தல் விவாகம்செபதல், உழவு விதைவிரைத்தல், தேயுபிணிதீர்ததல், வாயு குதிரை தேர் கப்பல் ஏறுதல், ஆகாயம மநதிரம் சாதித்தல் பூமியபிரிவு தெரியாவிடில் இடநாசிபக்கம் கலைசந்திரனுகையால் அப்படிநடக்கும்போது வஸ்திர ஆபரணம் பூணல் தூதனுப்பல் அடிமைகொள்வது விவாகம்செய்தல் இணறுவெட்டல் குடிபுகுதல் அரசரைக்காணல் சாந்தி தெய்வபிரதிஷ்டை செய்தல் சுரம் தீர்த்தல் சமாதானம்செய்தல் தனம்வைத்தல், வலநாசி சூரியகலையில் உபதேசம்பெறல் வணங்கல் யுத்தம் வியாபாரம்சூதுவிழுக்குறைததல் சவாரிசெய்தல் சங்கீதம்பாடல்

நித்திரைசெய்தல் பிசாசுவேட்டல் போஜனஞ்செய்தல் அமிழ்தம்பொசித்தல் ஸ்நானஞ்செய்தல் உத்தமம் சத்தியமாய் சிவம ய் தாண்டவமாடும் வாசிபாகும் சரீரத்தில் துடிபயன் அடர்ந்து கைதுடிக்கில் ஒருவருடம் கால் 6-மாதம் நெற்றி 3-மாதம் கன்னம் 10-நாள், காதுகேளாவிடில் நாள் 7-பார்வை தெரியாவிடில் 1-நாள் 5-வாசனை தெரியாவிடில் நாள் 3-நாவுதூளில் 2-ல் மரணமெனக் கொள்க வாயில் சலம்வைத்து நிழலிலிருந்து ரவியில் உமிழ அனல் இந்திரதனுசு பஞ்சவர்ணமாக தோன்றுமாகில் ஒருவருடம் வரையில் மரணமில்லை முறிந்திருக்கில் அந்த ஆண்டில் மரணம் நிறம்மாறி பெண்ணுருதோன்றில் 6-மாதத்தில் மரணமாவார் அமாவாசை ரவியிலாகிலும் பருவ சந்திரனிலாகிலும் உருக்கியநெய்யை கிண்ணத்திலிட்டு பூமியில்வைத்து முன்கண்ட ரவிமதியி லொன்றைப்பார்க்க வெண்மை நிறமாககாணில் பிராணபயமில்லை, செம்மை-வாழ்வு, பொன்கேடு, பசுமை-நோய், கருமை-சாவு, தென்புறம் வட்டம் குறைந்துகாணில் ஒருவருடம் மேற்புரம் குறைந்தால் 6-மாதம், வடபுறம்குறைந்தால் 3-மாதம் நடுவேதொள்ளையாகயிருக்கில் 10-நாளில் மரணமாம். விசேடபலனை சரநூலைப்பார்க்க.

வேதம்-4, உபவேதம்-4, அங்கம்-6, உபநிஷத்து 23, ஸ்மிருதி-19, சிவபுராணம்-10, விஷ்ணுபுராணம்-4, பிரமபுராணம்-2, சூரியபுராணம்-1, அக்கினிபுராணம்-1, உபபுராணம்-18, இதிகாச ராமாயண பாரத பாகவத வசிஷ்ட பகவற்கீதை பிரபந்த தேவார ஞானநூற் சித்தர் வாக்கியங்கள் இன்னுமநேகமாயுள்ள கிரந்தங்களுக்கும் கூறன் பையல் முதலியனவும் கடவுளொன்றெனத்தெளிந்து விகற்பமற்று அகண்டாகாரப்பொருளி லயமுறும் பொருட்டேயன்றி வேறில்லை நீர்துறைபாயிடம் நெய்செல்லும் நெய்செல்லாவிடம் புகைசெல்லும் புகைசெ

ல்லாயிடம் மனம்செல்லும் மனம்செல்லாயிடம் அறிவுசெல்லக்கூடும் ரவிநிழல் அல்லது மதிபிரகாசத்தில் தனது நிழல் பூமியில் தனது உருவ அளவாகயிருக்கும்போது அந்தநிழலை தனதுநேத்திரம் இமையாமல்பார்த்து களங்கமிரு ஆகாயத்தைப் பார்க்கில் தனது உருவம் பெரிதாக தோற்றும் அவைபொன்னிறமாகில் செல்வம், வெண்மை ஆயுள்வளரும் செம்மை ஆயுள்குறைந்தும், கருமை நலி அவ்வுருவில் கைகால்தோன்றுதாகில் 6-மாதத்தில்மரணம், தலை தோன்றுமலிருந்தால் 3-மாதத்தில்மரணம்,இந்தசாயைவடிவமானது தனதுமனமும் நேத்திரமும் ஒற்றுமையாய் தோற்றமாயிற்று சாயைமறையாதோதன்னுடம்பு தன்வெளிக்குள்ளாய வகத்தினிடையோடாதோவென்று கூடியவடி கண்ணும்கருத்தும் ஒற்றுமைசெய்த அகநோக்குடையவர்களிருந்தபடி சராசரங்களின் இயல்பையும் மூன்றுகாலவர்த்தமானமுந்தெரிந்துக்கொள்ளக்கூடும சாயை தீபபிரகாசமிருப்பது தெரிந்தவிஷயம். அதுயாதென்று கவனிப்பதில்லை அதுவெங்கும் நிறந்தவை என்றறி தெரியாமையால் சிலருக்கு சங்கைதரும் ஒருவீட்டில் நால்வராகக்கூடி அந்தவீட்டில் ஒருபொருளையானலும் ஒருகட்டடத்தையானும் நால்வரும் நினைந்துக்கொண்டு நாம்நினைந்தசங்கதியறியாத ஒருவன் நேத்திரத்தை துணியால்மூடி அவன்தோள்மீது நினைத்த நால்வர்கையும்வைத்து அவன் இஷ்டப்படி போகும்படிசொன்னால் அவிடம்விட்டு நால்வர் குறித்தயிடமேபோய் நிற்கின்றான் குறித்ததை தன் கையால் தொடுகிறான் இதன்றியில் ஒருவனை நமது சுவாசம் உள்செல்லும்போது நினைந்தால் அதேசமயம் அவன்நம்மைநினைக்கின்றான், எதிரிலிருக்கும் ஒருவனுக்கு நடக்கும் கலையும் அதிர் பூதியமும் நாம் தெரிந்துக்கொள்ள வேண்டுமானால் நமது கலையைப் பார்த்தால் அப்போதுகலையும் பூதியமும் நின்று எ

திரிக்கு நடக்கும் கலையும் பூதியமும் நடந்து தெரிவி
த்து உடனே முன்நமக்கு நடக்கதுபோல் நடக்கும்
கடவுள் எங்கும் வியாபகராயிருப்பது இன்னமனேக
திருஷ்டாந்திரங்களிருக்கின்றன. அநேகசமயவாதி
கள் பேதாபேதங்களாய் எங்கள்சாமி உயர்ந்தவர்
உங்கள்சாமி தாழ்ந்தவர் என்று தர்க்கிப்பதுசரியல்ல
பார்க்குமிடத்து பூமி, ஆகாயம், சந்திரர், சூரியர்,
இடிமின்னல், மேகமிவைகளும் மத்தியில் உலவும்
வாய்வும் யாவருக்கும் பொதுவாகயிருக்க நூல்விசா
ரணையும் நல்லோர்பழக்கமும் அவர்களால்பெற்று
அடையவேண்டிய பயனையுமடைய சக்தியில்லாதவர்
கூறும் வீண்வாதமாக இருக்கின்றன. எம்மதசார்பி
லுதித்தவருகினும் ஏற்பட்டிருக்கும் மரணபயத்திற்
கஞ்சி பந்துநிகிலடைந்து உலகில்சத்துயின்னதெ
ன்றுணர்ந்து சதா எதைநாடி நிற்கவேண்டுமோ
அதில்நின்று முடிவுபெறுவதே மாணிடமாகும் சிவம்
விஷ்ணு அல்லா பராபரன் அவரவர்கள் சார்பின்
படி கடவுள் நாமம் அனேகமாய் புகன்றாலும் அப்
படி புகலும் வஸ்து யாது, அதை இன்னதென்று
ணர்ந்தால் எம்மத சார்பிருந்தாலும்கடவுள் ஒன்றெ
னத்தெளிந்த பேரறிவாளரென யாவராலும் புகழ
ப்படுவர். மாயையின் கூறாகிய அசத்து, சடம், துக்
கம், அனித்தியம், கண்டமிவைகளை நீக்கி சிவத்தின்
கூறாகிய சித்து, ஆனந்தம், நித்தியம், பூரணமாகிய
இவ்வைந்தின் தாற்பரியங்களை யுணர்ந்தவர் இன்
னார்க் குறியராவர் (சாதிகுலம் பிறப்பிறப்பு பந்த
முத்தி யருவுருவத் தன்மைநாம, பேதமின்றியெப்
பொருட்கு மெவ்விடத்தும் பிறிவறநின்றியக்குஞ்செ
ய்யுஞ், சேதிமை மாதுரவளிமை மனதவிழ நிறை
வானதுரியவாழ்வைத், தீதில்பரமாம்பொருளைத்
திருவருளை நினைவாகச் சிந்தைசெய்வாம்) சரியை
கிரியை யோகஞான மாகிய நான்கு பக்குவர்களும்
மோக்ஷமாகிய முத்தியடைய வேண்டுங்கருத்து,

அதிலும் சரியை கிரியையுடையவரிப்பிறவியிலாகினு மல்லது மறுபிறவி மானிடமாகத் தோன்றி இக போக சுகங்களை யடையவேணுமென்ற ஆவல் பூண்டவர்களாகவு மிருக்கின்றனர் எவரெவர் உண்மையாக எந்தவித பாவனையும் கோறிக்கையுமாக யிருந்துவருகிறார்களோ அவையே ஆத்மா தேகத்தை விட்டு நீங்கும்போது அந்தயெண்ண முதிக்குமென்றுகோறிக்கைப்படி செனனமும் இச்சுகமுமபெற்று அனுபவிக்கவேண்டுமென்று ஆகமநூல் கூறுகின்றன, யோகவான் ஞானி இவர்கள் முடிவுபெரும் போது கூரு-தத்துவங்களும் ஒன்றிலொன்று அயிக்கியமாய் முடிவு அவைகளுக்கு ஆதாரமாயும் அணுவுக்கணுவாயிருந்த ஆன்மா தேகத்தை விட்டு மகாகாயத்தில்லயமானதும் அல்லது அத்தேகத்தில் தானே அயிக்கியமாவதும் நமதுசிற்றறிவிற்குவிளங்காது அல்லது வினைக்கீடாய் வேறு பிறவி எடுப்பதற்கு எவ்வகையாக ஒருபுருடன் சுக்கிலத்தில், அணுகினவன் ஆத்மா சீவனென்பதுபோய் சம்பந்த முற்றதும் உண்மை யிவ்வாறெனஅறிந்தால் மாத்திரம் நரகமோக்ஷம் உண்மை என்றும் அனேகபிறவிகளெடுத்து அதின் புண்ணிய பலத்தால்மானிடம் பெறுவதும் கயிலாய வைகுந்த பரமபதமிடமும் எமலோக நரகமிடமும் காலதூதரும் நன்றாக விளங்கும் ஆகையால் காலதாமதம்செய்து உலகவியாபார பெருந்திரையி லாழாமல் மனதை ஒருவாறாக நிருத்தினால் விசாரணையும் சாதுக்கள் சங்கமும் பெற்ற நிரதிசயானந்த பேரானந்த சுகம்பெறநன்னிலை பெருக்கால் மேற்கண்ட சங்கைகள் நிவர்த்தியாகும் சுக்கில சுரோணித சம்பந்த காலம் அமைந்தபடி செனன மெடுத்தும் மரணமாகும் வரையில் அனுபவிக்கவேண்டிய திருக்க நாம் மத்தியில் என்ன முயற்சி செய்தாலும் யாதும் பயன்படாது என்று சிலர் புகல்வர். அவ்வகை கருதுவது நமது அக்கிய னம் அனுபவிக்க வேண்டியதை அனுபவிக்கவேண்டியதானாலும்

கடவுள் சிந்தை சதா உடையவர்களாகில் பாயிச்சா பிராரத்துவமாக சகல சுபங்களையும் கடவுளளித்து ரக்ஷிப்பார் வலதுகையை முகந்து நாசிக்கு நேராக நிறுத்தி யிரண்டு கண்ணினுலும் கைநாடிதுடிக்கு மிடத்தில் நிமை ஆடாமல் பார்க்க கைசிறிதுறுப்பு கெனமாகதோற்றுமாகில் 6-மாத வரைமரணமில்லை. அல்லது கைபிரமாணமாகவே தோற்றுமாகில் சீக்கிரம் மரணமென்றறிக. முன்கண்ட பார்வையாக பார்த்துகைசிறுசாக தோற்றி பின்பு யிருளாக தோற்றும் அவையும் நீங்கி தீப்பிரகாசமாகவெளிச்சமுண்டாகும் அப்படி செய்யும், அப்பியாசிகள் அந்தப்பிரகாசத்தில் அனேகயற்புதங்களை காணுவதுமுண்டு அந்தசாதகமாக சிலகாலம்செய்தவர்களுக்கு விளங்கும் நிழலுள்ள தாழ்வாரத்தில் வெளியாக யிருக்குமிடம் உட்கார்ந்துக்கொண்டுமுகம்பார்க்கும் கண்ணுடியை வலது கையிலெடுத்து தனது முகத்தின் வலதுநேத்திர கருமணியில் விளங்கும் வடிவை கண்ணிமை யாடாமலும் மனது வேறுவழி செல்லாமலும் பார்த்திருந்த கண்ணிலிருந்து சலம் வடியும் அதற்கும் இமையால் பார்க்க இருளாக தோன்றும். அந்தயிருளை அவசியம் பார்த்திருக்க வெளி தோன்றும் அந்தவெளியினிடத்திலும் அனேகயற்புதங்களை அனுபவிகள் காணுவர் உலகில் அஞ்சனமென்று கருப்பு நிறமுள்ள மையை கையில்பொட்டு போல் வைத்துதீபமுன்னிலையில் கண்ணிமையாடாமல் மையைப் பார்த்து அதில் அனேகதேவதைகளைக் கண்டதாயும் தாங்கள் கோறியயிடம் பொருள் இவைகள் தெரிந்ததாகவும் சொல்ல நாம்கேட்டியிருக்கிறோம் சுத்த பரிச ரூப ரசகெந்தமாகி ஐந்தும் கூடியது அஞ்சினம் இதைப் பார்க்கு மிடத்து (கண்ணாரமுதமுமாய் விளக்கொளியாய் நின்றானை) யென்று கூறிய வாக்கியம் உண்மையாக விளங்குகின்றன. மஹான்கள் உரைத்த லக்ஷியங்களை பரியாக பூக்குவப்படிக்கு சாதித்து அவைகளினுல் முடிவுபெறும்

பயனை தேசம் பிணமென்றுபுகலாமுன் அனுபவமுதிர்ந்து நிரதிசயானந்த நிர்விகல்பமாய் ஜீவன் முக்தனாக மனம் வாக்கு காயத்தால் மகான்களை போற்றுவதே நமது கருத்தாகும்.

உலகில் நால்வகையோனி அவை பையிடம் முட்டையிடம் வியர்வை வெப்பம் வித்துகளால் யுற்பவம் அதில் 84-லட்ச பேதமாவன தேவர்-14-மானிடம்-9-மிருகங்கள்-10-யூர்வன சர்ப்ப வகை-11-நீர் வாழும் பிறவிகள்-10-தாபரம்-20-பாதாள ராக்ஷஸ யோனி-10-ஆக-84-லக்ஷபேதமெனக் கூறும்.

பூதம்-5. பிரிதிவி, அப்பு, தேயுவு, வாய்வு, ஆகாயம்பொறி-5. சோத்திரம்.

தொழில்-5. தேவ, தானம், விசர்க்கம், ஆனந்தம். பயம்.

கோசம்-5. அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்கியானமயம், ஆனந்தமயம்.

சயம்-5. தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிருணம். புலன்-5. சத்தம், பரிசம், ரூபம், ரசம், கெந்தம். கரணம்-4. மனம், புத்தி, சித்தம், ஆங்காரம். குணம்-3. இராசதம், தாமதம், சாத்வீகம். மலம்-3 ஆணுவம், மாயை, காமியம்.

கன்மேந்திரியம்-5. வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம், லோபமோடம், மதமாச்சிரியம், இடும்பை வேகம்.

நாடி-10. இடைகலை, பின்கலை, சுழுமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அசுவநி, அலபுருடை, சங்கினி, அமரசயம், பக்குவரசயம், மலவசயம், சகலசயம், சுக்கிலசயம்.

ஆதாரம்-6. மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்கினை.

மண்டலம்-3 அக்கினிமண்டலம் ஆதித்தமண்டலம் சந்திரமண்டலம்.

அவித்தை-5. சாக்கிரம், சொப்பனம், சுழுப்தி, துரியம், அதிதுரியம்.

தோஷம்-4. வாதம், பித்தம், சிலேத்மம்.
ஏஷணை-3. அர்த்தஏஷணை, புத்திரஏஷணை லோக ஏஷணை.
இராகம்-8. காமக்குரோதம், குறை.
வாயுகள்-10. பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன்.
வினை-2. நல்வினை, தீவினை, அறிவு-1.

கைலாயவர்க்கவேடம் 6-முகமுள்ள 16-ருத்திராக்ஷசபமாலை, மணிவிரல், 36-கொண்ட யோகதண்டு பரிசெப்பு, 11-16-மஞ்சாடியுள்ள குண்டலம் 93-அங்குலமுள்ள யோகவேட்டி 4-அங்குலமுள்ள கபீர் மண்ம, புலிபாசனம், ரசலிங்ககடகம், உப்புமணி திருமூலவர்க்க வேடம் சடைபிரம்பு 5-பட்டை உப்பு கெதை படிகமணி யோகவெட்டி படிகலிங்கம்காதில் செம்புருட்டு புத்தம் ருத்ராக்ஷம் பாதக்குறடு புலித்தோல் ஆசனங்கள் மான்றோல்-ஞானம் புலித்தோல் செல்வம் தர்ப்பாசனம் மோக்ஷம் சித்திரக்கம்பளம் நன்மை வஸ்திரம் தீமை நீங்கல் உடலுக்குள் நீர் நின்றுலாவுவதனை காணாமல் கடகமலைதோறுந் திரிந்து காலலுத்தேன் பூரணமே, நானெனீ நீயெனு மிரண்டு மொன்றானால் தேனின் ருசியதுபோற் றெ விட்டாய்நீ பூரணமே கண்காணியில்லென்று கள்ளம பலசெய்வர் கணகாணியில்லை யிடமில்லை காணுங் கால், கண்காணி யாகவந்து தங்குநின்றோகண்காணி கண்டார்கள் வொழிந்தாரே, இவ்வநுபவம் பெறுபவர் மெய்ஞ்ஞானிகள்.

மந்திர மென்னும மனத்திரதியானத்தால் பிணி முதலியவை நீங்க வாயில் சபியாமல் மனத்தால் தியானிப்பது சித்தர்கள் வாக்கியம். சகலவியாதியும் நீங்க மஞ்சளால் கணபதிவைத்து அருகு புட்பம்சாத்தி தாம்பூலம், தேங்காய், பழம், தூபதீபம்செய்து நேத்திரபார்வையை புருவமையம்வைத்து யிட்டு கையில் விபூதியைப்பரப்பி அதில் பிரணவமெழுதி

யும் சிங்கிலியென்று தியானம் ஆயிரத்தெட்டுசெய்து விபூதியை நோயாளியை உட்கொள்ளும்படிகொடுத் துவர நோய்தீரும் பிசாசம்போகும் கெர்ப்பநோய் தீர்ந்து கெர்ப்பமாக தேனும் மூலைப்பாலும் கூட்டி ஓம் சிவ சிவவென்று ௱அ-தரம் தியானித்து ஸ்திரீக ளுக்கு உட்கொள்ள செய்யவும் பிரசவகாலநோயிக்கு வெண்ணையை டங் டம் என்று தியானித்து வயிற் றில்பூச பிரசவமாகும் சிலந்தி கட்டிகள் உடையவும் வீக்கம்வாடவும் வெண்ணையை உம் வங் தம் ஓங் றீங்-நசிமசி என்றாலும் அல்லது உம் வங் தம் என்று தியானித்து தடவி விபூதி உள்ளுக்கு கொடுக்கவும் கண்புகைச்சல் மாலை கண்ணு கூடு குத்தல் சதைப் படலம் தீர ஒரு பாத்திரத்தில் சலத்தைவிட்டு அதை கையில்வைத்துக்கொண்டு லாலுவீஎன்று தியானித்து அந்த சலத்திஞல் கண்ணை கழுகிவரச் செய்யவும் விஷமிரங்க சலத்தை ஓம்-கிலி-நசி-நசி என்று 108-தியானித்து சலத்தை உள்ளுக்குகொடு க்கவும். சகல சாபமும் நிவர்த்தியாக ஓம்-றங்-றீங்ய நம சிவ சகல பாவ நிவாரணீயாமி.

ஓங்கார கம்பமென்பது உணர்வு எழுத்தாகிச சப் திப்பது தேவியாகும் இருண்டவன் கண்ணுக்குமரு ண்டது பேயென புகல்வதுபோல் அக்கியானத்தால் பேய் பிசாசு காட்டேரி சாமுண்டி துர்க்கி காளி முனி அனுமார் வீரபத்திரன் இன்னமனேக நாமங் களுடையதாக விருப்பதாயும் அதை மந்திரங்களால் உருவேத்தி வசியம் செய்துகொண்டு அதிஞல் இக அஷ்ட கர்மங்களை நடத்துவதாக மந்திரவாதிகள் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோம். அவைமுடி வாக பார்க்குமிடத்து அவரவர் கற்ற நூல்களவும் விசாரணையும் எவ்வளவு மனத்திடம் நிக்ஷயப்பட் டிருக்கிறதோ அவர்கள் பாவப்படி கடவுள் எங்குநி றைந்தவராதலால் கோறியவண்ணம் தோற்றலும்ப லனுமளிக்கக்கூடியே விளங்குகின்றன. பாவமும் தோற்றமும் மழிவுவருமெனவும் நிறைந்த பரிபூரண

ம் முடிவென்று வேதமும் அனுபவிகளும் கூறும் கி ரசையாட்டி சரீரமசைத்து நடக்கையாலும் மல்லா ர்ந்தும் மார்மீது கைவைத்தும் பிரண்டு பிரண்டும் இருகரத்தை துடைக்குள் வைத்தும் நெடுமூச்சு வி ட்டு படுக்கையாலும் மலசல மடக்கையாலும் மன தேகத்தாலும் இராசத தாமத உணர்வினாலும்வியா திகளுற்பவமும் சொற்பனாதி அவஸ்தையும் சேரும்.

காராரேபார்சமாதிதனி லியங்கிநடக்கிலிரெட்டா ம், மாராதோடிலைஞ்தாம் மருவிதுயிலிலய்யாறும், காரார்குழலாருடன்கூடி, கலவிகழித்தாலெட்டெட் டாம், நேரேநோக்கிநிலைநிருத்த நிர்க்குஞ்சிவமுமது தானே.

நெடிதானகாரையொன்று சங்கிரண்டு நின்றாது ம்திருக்கோவிலமையினுள்ளே, வடிவாகவொருபாத மாடிநிற்கும் மைத்தொருகால் தூக்கிநின்ற சிவனைக் கண்டோர், கடிதாகவுடல்வெருத்து தவங்கள்செய் து கண்மூடிபூசித்துகலக்குவாரோ, படிமீதில்திருக் கோவில்நதிகள்தேடி பரதவித்துழல்வதென்னபகர்ந் திடவோ.

உருத்தறித்தநாடிதன்னி லோடுகின்றவாயுவைக், கருத்தினாலிருத்தியே கபாலமேத்தவல்லிரேல், விரு த்தராளும்பாலராவர் மேனியுஞ்சிவந்திடும், அருட் டறித்தவம்மையாணை யப்பனாணையுண்மையே.

பொய்யென்றுசாத்திரத்தை சொல்வானாகில் புழு வானபாழ்நரகில் வீழ்வான்பாவி, மெய்யென்றுகுரு பதத்தைத்தொண்டுபண்ணி வேதாந்தபலநூலுமவி ரித்துப்பார்த்து, கைமுறையுங்குருமுகமாய்க் கண்டு தேறி கற்றவரைவணங்கியேசொல்லக்கேட்டு, பொ ய்மறந்துமெய்யுகந்து அறிவிற்கூடி பூரணமேதெய்வ மென்று போற்றிநில்லே.

ஆணுக்குபெண்ணுக்கு மறிவேயொன்று யானை லும்பேதைகுணம் பெண்ணுக்குண்டு, வீணுக்குயெ டுத்தசென்மமனந்தங்கோடி விவேகமுத்தியடைந்த வர்களதிசமுண்டு, ஆணுக்குகேடியுண்டு யுறங்கிசெத்

த னுத்தருண்டுபுருடரிலேயனந்தங்கோடி, தானுக்குவகசரா சமந்தநெஞ்சே சற்குருவின்சொற்படியே சார்ந்துபாரே.

பேதமையென்பது மாதர்க்கணிகலம் மாதர்கள்மனம் கேவலத்தில் எக்காலமும்செல்லும் அநேகமாய் கூடிய பாபங்கள் திரண்டுபெண்வடிவமாக ஜெனிப்பவென்று அகஸ்தியர் செப்பியிருக்கின்றனர்.

முத்தரையும்பெத்தரையு முகக்குறியானகக்குறியான்முழுதுநோக்கின், மெத்தனவாகியமொழியுமானந்தப்பரவசத்தான்மிகுந்தசோர்வும், சித்தநிலைதிரியாதசெல்வமுமாயிருப்பர்நல்லோர் தீயோரெல்லாம், இத்தகமையோர்களையு மிகழ்ந்துபுகழ்ந்தோர்க்குறவாயிருப்பர்காமே.

பேசாமலிருக்கவென்று லாசான்தன்னை பொற்பூவைசாத்தியல்லோ கார்க்கவேணும், வேகாததலையல்லோமுன்னேகேளு விளம்பியபின்சாக்காலே விரும்பிக்கேளு, வாகாகவாதவித்தைகண்டோர்க்கையாவலதுமுழந்தாளிலொருமருவைப்பாரு, ஆகமுடன்கண்டமதுசாய்வுகாணும் அப்பனே யின்னமுருவங்கங்கேளே.

கேளப்பாயிடமுதுகில் மருதான்காணும் கெடியானயிடதுகையில்சங்குசக்ரம், காளப்பா யிக்குறியையகன்றுப்பாரு நாசியிடநாசியிலே மருவைப்பாரு, வேலப்பாயிடமுதுகில் மருவைப்பாரு வேதாந்தவாதியே வடையாளங்க, ளாரையும்நீ கண்டவரையடுத்துக்காரோ நெத்தியில்சூலரேகையுமிருக்கும்.

மாணுக்கருக்கு உபநயனம் சந்தியாவந்தனம் உபதேசம காயத்திரி ஜபதபமுதலியவைகளை ஆசிரியராயும் குருசெய்துவைக்கின்றனர், வேதமென்றவாகமங்க ளாறுசாத்திரம் வெவ்வேறு மதபேதம் காதமென்ற, சாதியும் நால்பதினெட்டாக வுந்துமாயுலகோரை மயக்கங்காட்டி, கீதமென்றுலறிகீதம் சிவகீதமென்றும் கிருபையுடன்வெவ்வேறாய் பிரித்துக்காட்டி, பாவமென்றாவதுவே நிசந்தானென்று பாடி

ஞாசாத்திரத்தைபாடினாரே என, வியாசர்கூறியதாக அகத்தியர் கூறியிருக்கின்றனர், உபநயனமென்பது மூன்றாவது நேத்திரம் அறிவு உணர்வு அதினால் சந்தியாவந்தனமென்பது ரவிமதி தனதிடம் ஒற்றுமையாகும் காலம் உபதேசமானது பகிர்முகனைக்குநீங்கி, ஞானதேசமாகிய அகமுக சுத்தவெளி அவ்விடமிருந்து சபதபங்களை செயவிக்க திருவருள் புரிபவர்தான் குருவெனப்படும்

வசிஷ்டர் ராமமூர்த்திக்கருளிய நிலை.

ஆதலாதுயிரசைவால் வாசனைப்பாலழுத்தத்தாலறிவை விறிவரிக்காவெண்ணி, ஓதுபாதபருமறிவின்விறிவேயுள்ள முள்ளத்த விவ்வனந்தவுயிர்கள் வாழ்வாஞ், சேதனபோகிகளெல்லாம் பிராணாயாமத்தியானமருந்தாகத்தின்றிறங்களாலே, பேதமனமோடுங்குவதுபொருட்டாயன்றோ பிராணவாயுவை நிருத்திபிடிக்கின்றாரே.

உண்டாகிஎவ்விடத்து முற்றபோத முயிரசைவாலுணர்வருமப்போதந்தன்னை, மண்டாமற் றடுக்கைபெறுநன்மையாகும் வளர்போதங் காண்பவற்றைமறுவுமாலார், றண்டாமற்காண்பவையே மனதுக்கென்றுந் தவிராததுபெருமத்தனிப்போதந்தான், மீண்டீர்தசுமுத்திபிற்போதம்போநிற்கில் வீடதுபோது விமலபதம்வேறில்லை.

கருவிகரணங்களோய்ந்த தொண்டர்களிடத்தில் வீற்றிருப்பனவென்றும், மதுவுண்ட வண்டெனவுசனகாதி மன்னர்முதல்சுகர்முதலோர் வாழ்ந்தாரென்றும், பதியிந்தநிலையெனவுமென்னையாண்ட படிக்குநிருவிகற்பத்தார் பரமானந்தத்திற், கண்டுகொள்ளவுநின்னருள்கூரிந்தகதியன்றி யுரங்கேன்மேற் கருமம்பாரேனென்றவுண்மைவாக்கியம்.

இந்நிலையிலிருக்கும் மஹான்கள் கிருபை
பொருந்திய நலங்கள்.

அகத்தியர் அனந்தசயனம்   புலத்தியர் பாபநாசம் ஆவுடை-
கும்பமுனி கும்பகோணம்   யார்கோவில்

திருமூலர்-சிதம்பரம் (றம்
திருமூலவர்க்கம்- நெடுங்குன்
திருமூலர் நோக்கம் மேலைசித
ம்பரம் (கம்
சட்டமுனி-சீர்காழி, ஸ்ரீரங்
கோரகர்-திருக்கோணமலை
கருவூரார்-திருக்காளத்தி
பதஞ்சலி-ராமேஸ்வரம் ராம
தேவர் அழகர்மலை
அழுகண்ணர்-நாகப் பட்டண
நாரதர்-திருவிடைமருதூர்
மார்க்கண்டர்-கருவை நல்லூர்
மச்சமுனி-பரங்குன்றம்
மயிரேசமம்-திருவானைக்காவ
கொங்கணர்-திருப்பதி-கோடி
துறை-திருக்கணங்குடி
பாம்பாட்டிசித்தர்-திருஞ்ஞா
லம்-துவாரகை
புண்ணுகீசர்-நாண்கணுசேரர்
காசிபர்-ருத்திரகிரி
வரதர்-தென்மலை
கன்னிசித்தர்-பெருங்காவூர்
தந்வந்திரீ - வசிட்டவைத்தீசர்
கோவில்
கோரக்கர்-போகர்-திருக்கழுக்
குன்றம்
நந்தி-விஸ்வாமித்திரர் - காசி-
திருவாடுதுறை
காளாங்கி-கடுவெளிசித்தர்-தி
ருக்காஞ்சிபுரம்
இடைக்காடர்-கௌதமர் - தி
ருவருணை
சேது-திருவிடைமருதூர்
கமலமுனி -சுந்திராநந்தர்-மது
ரை, ஆரூர் திருவாஞ்சி
சுந்தர்-வாரிக்ஷ,காளாங்கி-திரு
ங்குடையூர்-திருப்பநதாள்-
வால்மீகர், அகப்பைசித்தர்
எட்டிக்கொடி திருவையார்
போகநாதர்-பழநி-கதிர் காமம்-
திருச்செந்தூர்,தணிகை, ப
ரங்குன்றம்
இவ்வகை போகர் 500-கூ
றியிருக்கின்றனர்.

போமடாவெளியோடே வெளிதான்சேரும் புது மையடா வாய்வோடே வாய்வுசேரும், ஊமடா தீயோடே தீதான்சேரும் உத்தமனே யப்பனையப்பு சேரும், ஆமடாமண்ணுடனே மண்தான்சேரும் யுவரவர்களினை தமேதாடே யுவர்கள்சேர்ந்து,தாமடா தன்னிலையிலறிவைபுக்கி சதாணந்த பூரணமா யிருந்து வாழே.

இருந்தறிவுசுழிமுனையில் புக்கித்தானல் ஏகாந்தமானதொருலிங்கமாகும், அருந்தவஞ்சேர்யந்தறிவு ரவியில்சேர்ந்தால் பரகாரசத்திமயமானதெய்வம்,பறிந்தறிவுமதிதனிலேசேர்ந்துநின்றால்புத்தியில்லாபிறவியிலேபுகுவான்பாரு, வருந்திமனக் கனிவாலேகுருவைக்காத்துமதிசதிரில்நின்றகுறிவணங்கிப்பாரே.

60-நாழிகை கொண்டது ஒருநாள், நாழிகை 1-க்கு சுவாசம் 369, 60-நாழி சுவாசம் 21600.

நாள் ஒன்றிற்கு 2-லக்ஷத்து பதினையிரம் கொடி. கொடி 60-கொண்டது ஒருவிநாடி, 60-கொண்டது ஒருநாள் 360 நாள் கொண்டது ஒரு வருடம், 21600-இதை 80-ல் பெருக்க கிரேதாயுகம், 60-ல் பெருக்க கலியுக மொத்தம் ஆண்டாகும்.

யுகங்கள் தோறும் மகான்கள் பெற்ற தபோபலத்தால் அரசு திருஷ்டியாதிகள் நடத்தி வருவதாக கூறி யிருக்கின்றனர்.

அறிவிற் கண்ட ஔஷதங்கள் உபயோகப் படுத்தும் போது அறுசுவை, புகையிலை, அபினி, கள் சாராயம், ஸ்ரீபோகம் மச்சமாமிஸங்கள், கோபம். அதிக நித்திரை நீக்கவும்.

1. மேகநீர் நீங்கி சுத்த உதிரம் பெருக—பாலில் வெகித்த நெல்லிக்கா சூரணம், சுத்திசெய்தகெந்தகத்தூள் சமநிடையாகக் கூட்டி அறை விராகனிடை தேனில் குழைத்து இருவேளையாக மண்டலம் கொள்ளவும்.

2. மலக்குற்றம் நீங்க-கடுக்கா 4, திப்பிலி-1, சுக்கு-1, சீரகம் ஓமம்-1-திப்பிலி மூலம்-க, இந்துப்பு-1, சூரணங்கள் தனித்தனி செய்து மேல்கண்டயிடைகளாகக் கூட்டி கடிகைசூரணம் வெந்நீரில் கொள்ளவும்.

3. அய்யசீதல் கலழவெள்ளை காக்கணுவேர், கடுக்கா, நெல்லிவத்தல் ஒவ்வொன்றும் புன்னைக்காயளவு 4-பலம் சித்தாமணக்கு எண்ணையில் கலந்து காலையாக 3-நாள் உள்ளுக்குக் கொள்ளவும்.

4. தேகத்திலிருக்கும் சுண்ணும்பு நீங்க—பச்சைமஞ்சள் சலமும்-81-கியாழம் வடித்து கூர்ளள்ளு எண்ணை பலம் 3-விட்டு இவ்விதம் 3-நாட் கொள்ளவும்.

5. தேகத்தில் எண்ணை நீங்க—விரைநீக்கி சீக்காத்தூள் இலுப்பை எலை, தாளிஇலை வகைபிடி 1

இவைகள் அமுரியில் கியாழம்-8, 1-ஆக வடித்து பூ நீர் களஞ்சி அரையடி காரசுன்னட் களஞ்சி அரை கூட்டிக்கொள்ள இவ்விதம் 3-நாள் கொள்ளவும்.

6. வாய்வு நீங்க சுக்கு,மிளகு, திப்பிலி,சீரகம் இந்துப்பு கரிசலைப்பிலை சூரணம் வகைபலம்-1 பொரித்தகாயம் பசும்பால் கூட்டி கடிகை பிரமாணம் அன்னத்திலிட்டு புசிக்கவும்.

7. தாகம், மயக்கம், சூடு மூர்ச்சைக்கு தாளிசபத்திரி, சுக்கு சீரகம் வகைக்குபலம் கியாழம் வடித்து கொள்வதாலும் அதிமதுரம் சிறுதேக்கு பனங்கற்கண்டு கியாழம்வடித்து கொள்வதாலும்.

8. மேகவெட்டை, மூலசூடு, காந்தல், பித்தவெறி கபாலபித்தம்தீர-சுத்திசெய்த சீந்தில்கொடி சூரணம் கற்கண்டும் கூட்டி கடிகை நெய் தேனில் மண்டலங்கொள்வதாலும், கரந்தை சூரணம் 4-சீனி 1 கூட்டி கடிகைப்பிரமாணம் 10-நாள் கொள்வதாலும் நீங்கும்.

9. மேகநீரால் சர்மத்தில் காணும் வியாதிக்கு கீழாநெல்லி மூலசூரணம், சீனி-நெய் - தேன்கூட்டி பாகப்படுத்தி தானிக்கா பிரமாணம் 6-மாதம் வருடம் கொண்டுவர குட்டவியாதியும் தீரும்.

10. கண் துலக்கமாய் நரைவறாதிருக்க-சரக்கறை மேனி கரந்தை வல்லாரை அலரி பொற்றலை பொடுதலை பிரமாணம் தேனில் கொள்ள மண்டலம்.

11. மந்தபுத்தி மதிமயக்கம் சோகை எரிபித்தம் நீர்க்கட்டு மலபந்தம் பித்தமூர்ச்சை நீங்க மேனி சிறுசெருப்படை கரிசலை சமனிடை சூரணம் கூட்டி இவைகளுக்கு 4-க்கு-1-கற்கண்டு கூட்டி மண்டலம் கொள்க.

12. உதிரத்தில் மேகநீர் நீங்க திரிகடுகும் ஓமமும் வறுத்து தூளாக்கி பனைவெல்லப்பாகில் கிளறி தயத்தில் கழற்சிக்காய் பிரமாணம் கொண்டு வரவும்.

கருங்குருவை பச்சமுதும் சிறுபயறுங் கூட்டி பொங்கி சர்க்கரை தேன் ஆவின்பால் முப்பழங்கூட்டிஉண்பதும் மேல்கண்ட அமுதம் பசும்பால் கூட்டி பொங்கி தேங்காய் திருவலும சர்க்கரையுங் கூட்டி உண்பதும் முன்னமுதும் துவரை பருப்பும் பொங்கி தேங்கா திருவல் சர்க்கரை நெய் கூட்டி உண்பதுமுண்டு. அமுதுபொங்கி ஏலரிசிதூளும் சர்க்கரை கூட்டி உண்பதுணடு. அமுது சீரகம் சர்க்கரை கூட்டி உண்ண பித்தமயக்கந்தீரும். இரும்புகியாழத்தில் அமுதிட்டு பொங்கி சர்க்கரை கூட்டி உண்டுவரமூல வியாதிதீரும். பருத்திக்கொட்டையின் பால்எடுத்து அமுத்திட்டு பொங்கி சர்க்கரை தேன் கூட்டிஉண்டு வர மேகம் நீங்கி தாதுக்கள் வலிவுபடும்.

பழுபகம்பு தினை பசும்பாலில் பொங்கிசர்க்கரை கூட்டி உண்டுவர தசையிலுள்ள பித்தநீர்கள் நீங்கி குளிர்ச்சியாகும் அமுதும் பயறும் ஆவின்பாலும் பொங்கி கறிவேப்பிலை மிளகு சூரணம் அமுரி உப்பு கூட்டி உண்பதும் இதில் கண்டவைகளில் தனதுசரீர தன்மைக்கு ஒற்றுமையானதாக பாகப்படுத்தி.

ஆகாரம்.

உச்சிகால போஜனம் செய்து இரவில் ஆவினை பாலைகொண்டு தனது சாதனத்தி லிடைவிடாம லிருப்பவர்கள சத்வகுணமுடையவ ராவார்களென்று சுசீப்பநூலில் அனுபவிகள் கண்டிருக்கின்றனர்.

கண்டத்தில் கபம் காலனுக யிருப்பதால் ஆவி நெய்யுடன் பொற்றலை ரசம் சமனுசக்கூட்டி ரவியில் வைத்து கண்டியபிறகு உதயத்தில்பெருவிரலில்கொஞ்சமெடுதது உண்ணுவிடம் தேய்த்துவர கபங்கள் நீங்கும்.

கபாலகொதிப்பும் நேத்திர பெரிவும் சூடாக யிருந்தால்,—ஆவின்பால் படி-3 பொன்னுங்காணி ரசம் படி-1-கூட்டி காய்ச்சி யிரக்கி கீழ்வைத்து ஆறி

யபிறகு பரைமோர்விட்டு மறுநாள் மத்திட்டு கடைந்து வெண்ணை யெடுத்து உருக்கி நெய்யாக வடித்து வைத்துக்கொண்டு பக்ஷத்திற்கொருதரம் சிரசிற்கு தேய்த்து ஸ்நானஞ் செய்துவர குணமாகும்.

பஞ்சகர்ப்பஸ்தானம்-நெல்லிபருப்பு வேப்புபருப்பு மிளகு கஸ்தூரிமஞ்சள் கடுக்கா இவ்வைந்தும் பசும்பாலிலரைத்து சற்று கொதிப்பித்து சிரந்தேய்த்து ஸ்நானஞ்செய்து வரவேண்டும்.

சிலர் அம்பாள்பூசை செய்வதாக மதுமாமிஸாதிகளைபடைத்து அதை தாங்களுண்டு சுபாபகுணத்தையும் போக்கி போதைமயத்திலாழ்ந்துவதாகயிருக்கிறது மதுவுண்டா நாங்களெல்லாம்ஞானியாளும் ஆத்தாளுக்கெண்செய்யும் கள்ளுஞ் சுள்ளுமென்று தபசிகாமணிகள் கூறியிருக்கின்றனர்.

மூக்காலுணவன்றி யெத்தேசிகட்கு முழுவுணவிலக்காரணமன்ன சாகாதிகூடியரையதிர்பால், சிக்காவமுதம் பதக்கிரங்காலுண்டிடச் சேடம்வெளிவைக்காவிடி லுண்டிவேகாதனலும் வளியுமன்றே, ஒருபொழுதரையவருனுவளவர்களுங்கானமுமறுவரே.

உண்ட மறுநாள் திப்பிநீங்கி அன்னரசமாம் 3-வதுநாள் உதிரமாகும்4வதுநாள்மாமிசமாம்5-வது நாள் மேதையாகும் 7-8-வதுநாள்மச்சையாகும்,இதற்குமேல் இந்திரியமாகுமென வைததியநூலில் கண்டிருந்தாலும் ஐரோப்பிய பண்டிதர் கிரமமாக குறிப்பிட்டிருப்பதைப் பார்க்க தெரியவரும்.

கைநாடி துடிப்பு 3-துடித்தால் 2-திரம் சுவாசம் நடக்கும்.குழந்தைகளுக்குநாடி 120-துடித்தல் சுவர்சம்-314 நடக்கும் இதில் பேதமாக நடக்கில்நூரையீரல் இரத்தாசயத்தில் வியாதியாகும்.

நாடி துடிப்புக்கு காரணம்இரத்தாசயத்திலிருந்து ரத்த நரம்புகளின் வழியாய் உதிரம் ஓடிவரும்போதுண்டாகும் அதிர்ச்சியே நாடியெனக் கூறப்ப

டும் துருத்தி விரிந்து குவிதல்போல் இரத்தாசயபை விரிந்து நுரையீரலிலிருந்து சுத்தமான ரத்தத்தை யுட்கொண்டு திடீரென சுருங்குவதினாலே அதினுள் ளிருக்கும் ரத்தம் விரைவுடன் ரத்தநரம்புகள் வழி யாய் சென்று தேகமெங்கும் வியாபிக்கும் சரீர உள் உறுப்புகளின் விபரத்தை ஆயுள்வேத சுருக்கமென் னும் வைத்திய கிரந்தத்தில் விரிவாய் காணலாகும்.

திலமத்தனையே சிவஞானிக்கீந்தால்
பலமுத்திசித்தி பரபோகமுந்தரும்
நிலமத்தனைபொன்னை நின்மூடர்க்கீந்தால்
பலமுமற்றே பரபோகமுங் குன்றுமே.

உள்ளத்தேதனுள்ள யுளபலதீர்த்தங்கள்
மெள்ளக்குடைந்து நின்றாடார்வினைகெடப்
பள்ளமுமேடும் பரந்துதிரிவரேற்
கள்ளமனமுடைக் கல்வியிலோரே
உள்ளத்தினுள்ளே யுணருமொருவனைக்
கள்ளத்தினாருங் கலந்தறிவாரில்லை
வெள்ளதனைநாடி விடுமவர் தீவினை
பள்ளத்திலிட்டதோர் பத்தனுள்ளாமே.

மனத்திலெழுந்ததோர் மாயக்கண்ணாடி
நினைப்பின்றனி னிழலையுங்காணார்
வினைப்பயன்போக விளக்கியுங்கொள்ளார்
புறக்கடையிச்சித்துப் போகின்றவாறே
உடலிற்றுவக்கிய வேடமுயிர்க்காகா
உடல்கழன்றான் வேடமுடனேகலு
முடனுயிருண்மையென் றோர்ந்துகொள்ளாதார்
கடலிலகப்பட்ட கட்டையொத்தாரே.

குருட்டினைநீக்குங் குருவினைக்கொள்வார்
குருட்டினைநீக்காக் குருவினைகொள்வர்
குருடுங்குருடுங் குருட்டாட்டமாடிக்
குருடுங்குருடுங் குழிவிழுமாறே.

தொழிலறிவார் சுருதிகண்ணாகப்
பழுதறியாத பரமகுருவை.
வழியறிவார் நல்லழியறிவாள
ரழிவறிவார்மற்றை யல்லாதவரே.
உள்ளம்பெருங்கோயி லூனுடம்பாலயம்
வள்ளற்பிரானார்க்கு வாய்கோபுரவாசல்
தெள்ளத்தெளிந்தார்க்குச் சீவன்சிவலிங்கம்
கள்ளப்புலனைந்துங் காளாமணிவிளக்கே.

(புலஸ்தியர் 100-ல்.)

காணுமூச்சடக்கி விழியதை முருட்டி கபாலமும் திறந்தனர்கோடி, கனத்தவாய்வதனால் குன்மரோயனாகி கலங்கினோ ரவரொருகோடி, தோணுமெய்மாந்து சுழன்றுடனெழுப்பி சொக்கினோ ரவரொருகோடி, சூலைவாய்வனாகி சுவாலையு மெழும்பிசுரமதாலிறந்தனர்கோடி, உள்ளவுண்ணாக்கி லண்ணாக்கை யுள் தூக்கி யுள்ளடங்கி மாண்டனர்களுங்கோடி, உயர் சாணீள முழமதுமெழும்பிவாங்கியேயொடுங்கினோர் கோடி, பேனதிசார பேதிவந்தனாகி பிறவியுமிழந்தனர்கோடி, பெருமையாய்கர்ப்ப சாதனையறியா பிராணனு மழிந்து மாண்டனரே.

இமைமறியாம லிருத்தியே வாயுவை யிறந்தன ரவரொருகோடி, இனியதம்பனஞ்செய் தெழும்பியே கும்பித்தேங்கினோ ரவரொருகோடி, கனமறியாமல் கரத்தை வாயினால் கருதியேயிறந்தனர்கோடி, கண்டு வாசியினி லொன்றைவிட்டொன்று கலங்கியே மடிந்தனர்கோடி, தினமொருநாழி வாசிகொண்டிழுத்து சிவகரமேகினோர்கோடி, தெளிந்திடு கண்மூக் கெனுமதை போற்றி சிறந்தனரவரொருகோடி, தன்பெருவிரலால் யண்ணாக்கையேத்தி தயங்கினரவரொருகோடி, தலமதில்மூழ்கி சாதனையதீதசாக்காடுவந்தெய்தினோ ரறிந்தே.

அறிவதிவ்வாரின் கருத்தினியியம்ப யவனிமாந்தரினில் சிலபேர், அம்புவிதனிலே மறைபவுங்குழிசெய் ததனிலும் பதுங்கினோர்கோடி, சறிந்திடுகதலிவாழையின் குலைபோல்தத்தளித்தனயவைபோலும் தயங்கினரனேகம்சாகரமதனில் சான்விழுந்தலைபோலும், தரணியிற்சிலபேர் தாமரையிலைதண்ணீர்போல் தவித்தனரப்பா, பாருலகதீதம்தேடியும்குருவின்பதமடையாமலு மாண்டார், தெரிந்துயிப்பரிட்சை யுத்தமரனேகம் தெளிந்தவரறிந்துமே செப்பசீறிடும்வாசியோகத்தின்பெருமைதிருத்தமாயுரைத்திடலாமே

வாசியோகத்தின் மகத்துவமுரைக்கவகுக்கரேதகத்தின்சிறப்பை, மாத்திரை முப்பத்திரெண்டுமே வளமாய்மாரவு மதனைமீரையா, வீசுபூரகத்தில் யறுபத்துநாலு விளங்கியேமாறிமாறிடவும், விகல்பம்வநதணுகா வாசினின்றுலவுமே •தறிதிரவுகோலறிதல் பாசம்வந்தணுகா கும்பகமதனில்பதினாறெனவறிந்துமேதிரு, பழக்கமிதாகு மகத்துகளுரைக்கும் பரிபூரஞானந்ததீட்சை, பூசிதமாகும்வாசிதான்வசியம்பெருந்திடும் கால்தலைமாறி, புனல்சொரிந்திடவும் சுழியதுநாடி புகலவும் சூட்சமிதாமே.

நாடிடுமினிமேகள் மகாராஜயோகம் நாட்டுரேன்வயித்யராக்ஞானம், நடத்தையென்றறியவாசியோகத்தின் நற்குறிவிளக்கவும் நடத்தை,தேடும்பூரகத்தில் முப்பத்திரண்டு சிவசிவா ரேசகம்பதினாறு, தெளிந்த கும்பகத்தில் யறுபத்திநாலு திருத்தமாய் திருமிவ்விதமாய், கோடுதப்பாமல் சுழிமுனைமேவிகுருத்திருகண்ணஇன்கூறுகும்பியும்வாசியொளிவது வீசும் குறிப்பதா மொளிவினில் கூடகூடுமேயிதுதான்மகாராஜயோகங்கொண்டுமாத்திரைக்கொருதீட்சை,கோர்குமேயிதுபார் தலைசுத்தி நொடிக்க குறித்தொன்றுமாச்சுதிவ்வாறே.

திருமூலர் 3000-ல்

ஏறுதல் பூரக பூரக மீரெட்டுமைந்தா, லாறுதல் கும்பக மறுபத்துநாலதி, னூறுதல் முப்பத்திரண்டதி ரேசகமாறுதலொன்றின் கண்வஞ்சகமாமே.

வளியினைவாங்கி வயத்திலடக்கில், பளிங்கொத்துக்காயம் பழுங்கினும் பிஞ்சாந், தெளியக் குருவின்றிருவருள்பெற்றால் வளியினும் வேட்டு வளியனுமாமே, எங்கேயிருக்கினும் பூமியிடத்திலே, யங்கேயது செய்ய வாக்கைக்கழிவில்லை, யங்கேபிடித்தது விட்டளவுஞ்செல்லச்சங்கே குறிக்கத் தலைவனுமாமே.

ஏற்றியிருக்கி யிருகாலும் பூரிக்குங், காற்றைப் பிடிக்குக் கணக்கறிவாறில்லை, காற்றைபிடிக்குங்கணக்கறிவாளர்க்குக், கூற்றையுதைக்குங்குறியதுவாமே.

மேல்கீழ் நடுபக்க மிக்குறப்பூரித்தும், பாலாமிரேசகத்தா லுட்பதிவித்து, மாலாகியுந்தியுட்கும்பித்துவாங்காவ, யாலாலமுண்டா னருட்பெறலாமே.

வாமத்திலீரெட்டு மாத்திரைபூத்தே,யேமுற்ற முப்பத்திரண்டு மிரேசித்து, காமுற்றபிங்கலைக் கணணாவிரண், டோமத்தா லெட்டெட்டும் கும்பிக்க வுண்மையே.

இட்டதவ்வீ டின்காதிரேசித்துப், புட்டிபடத் தசநாடியும் பூரித்துக், கொட்டிய பிராணன்பாலுங் கும்பித்து, நட்டமிருக்க நமனில்லைதானே.

பெண்ணல்ல வாணல்ல பேடல்லமூடத்துளுண்ணின்றசோதி யொருவர்க்கறியொண்ணாக், கண்ணின்றிகாணுஞ் செவியின்றிக் கேட்டிடுமண்ணாற் பெருமையை யாய்ந்ததுமுட்பே, அண்டங்களேழு மகண்டமுமாவியுங்கொண்ட சராசரமுற்றுங்குணங்களும், பண்டைமறையும் படைத்தளிப்பதியுங்கண்டசிவனுமென் கண்ணன்றியில்லையே.

நிஜானந்தபோதம்-முற்றிற்று.

சிவமயம்.

நெஞ்சறிவிளக்கம்.

விநாயகர் காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வஞ்சகமனத்திருளை மாற்றியபெரியோர்தன்னில்
கஞ்சமாமலரிட்டோதுங் கணபதிதாசனன்பால்
நெஞ்சறிவிளக்கஞான நீதிநூனூறும்பாடக்
குஞ்சரமுகத்துமூலக் குருபரனைக்காப்பாமே.

நூல் வரலாறு.

பூமியிற்சௌந்தரப்பெண் புணர்ந்திடுநாகைநாதர்
நாமமெந்நாளுநாவி னவின்றுசெந்தமிழாற்பாடிக்
காமமுமாசபாசக் கன்மமுமகற்றிமூலா [ஞ்சே
ஓமெனுமெழுத்தைந்தாலே யுனைபறிந்துணர்வாய்நெ

தந்தைதாய்நிஜமுமல்ல ஜனங்களுநிஜமுமல்ல
மைந்தருநிஜமுமல்ல மனைவியுநிஜமுமல்ல
இந்தமெய்நிஜமுமல்ல வில்லறநிஜமுமல்ல
சுந்தரநாகைநாதர் துணையடிநிஜம்பார்நெஞ்சே. 2

காண்பது மழிந்துபோகுங்காயமுமழிந்துபோகும், ஊன்பொருளழிந்துபோகும் முலகமுமழிந்துபோகும, பூண்பணிநாகைநாதர்பொற்பதமழியாதென்று, வீண்பொழுதினைப்போக்காமல்வெளிதனிலொளிபார் நெஞ்சே. 3

மனமெனும்பேயினாலே மாய்கையாயிருடான்மூடச், சனமெனுமாசாபாசந் தலைமிசை யேற்றிக்கொண்டு, கனமெனுஞ்சுமையைத்தூக்கிக் கவலையுற்றிட்டாய்நீயுற், பனமெனும் நாகைநாதர் பதம்பணிந்தருள்சேர்நெஞ்சே. 4

இருவினைப்பகுதியாலே யெடுத்திந்ததேகந்தன்னை, மருவியநாளுன்னென்று மாயையிலழிந்தாய்நீதான்,

குருவினாற்குறியைப்பார்த்துக் குண்டலிவழியேசெ
ன்றநீ, குருவினாநாகைநாத ருண்மையை யுணர்வாய்
நெஞ்சே. 5

வான்மதிலிரவியுன்றன் வயதெலாங்கொடுபோ
கின்றான், தானதையறிந்திடாமற் றரணியிலிருப்போ
மென்றே, ஊனமாமுடலைநம்பி யுண்மைகெட் டலைந்
தாய்நீ மெய்ஞ், ஞானமேபொருளாய்நாகை நாதரை
த்தொழுவாய்நெஞ்சே. 6

எட்டுடனிரண்டுமாகி யிருந்ததோரெழுத்தைக்
காணார், விட்டதோர் குறையுங்காணார்விதியின்றன்
விவரங்காணார், தொட்டதோர் குறியுங்காணார்சோ
திமெய்ப்பொருளுங்காணார், கிட்டுமோநாகைநாதர்
கிருபைதா னுரைப்பாய் நெஞ்சே. 7

வஞ்சகநடைமரத்தில் வளர்வினைக்கொம்பிலேறிச்
சஞ்சலமனக்குரங்கு தாவியேயலையநீதான் [ணுய்
பஞ்சபாதகங்கள்செய்து பாம்பின்வாய்த்தேரையா
நஞ்சமுதருந்துநாகை நாதரைவணங்குநெஞ்சே. 8

உடலினை நிசமென்றெண்ணி யுலகெலாமோடி
யசடிக், கடன்மரக்கலப்பாய்கம்பக்காகம்போற்கலக்
கமுற்றாய்த், திடமருள்குருவின்பாதஞ் சிக்கெனப்பி
டித்துநின்றாய், நடமிடுநாகைநாதர் நற்பதம்பணிவா
ய்நெஞ்சே. 9

வீட்டிருள் போகவென்றே விளக்கினை யேற்றி
வைத்தால், வீட்டிருளெங்கேபோச்சு விளக்கொளி
யெங்கேபோச்சு, கூட்டினடஞ்செய்யீசன் குறிப்பறி
யாமனீதான், நாட்டினிலலைந்தாய்நாகைநாதரைவண
ங்குநெஞ்சே. 10

காட்டினின்மேவுகின்ற கனபுழுவெல்லாம்பார்த்து
வேட்டுவனெடுத்துவந்து விரும்பியகிருமிதன்னைக் [ம்
கூட்டிலேயடைத்துமந்தக் குளவுதனுருவாய்ச்செய்யு
நாட்டினில்நீதாநாகை நாதரைவணங்குநெஞ்சே. 11

குளத்திலேகிடைக்குமாமை குளக்கரைமூட்டையிட்டுக், குளத்துநீர்க்குள்ளிருந்துகுறிப்புடநினைக்கும்போது, களத்திலேபுதைத்தமுட்டை கருவுருவானாற்போலுண், உள்ளத்திலேநாகைநாத குருவறிந்துணர்வாய் நெஞ்சே. 12

மருவியசிலந்திப்பூச்சி வயிற்றினனூலுண்டாக்கி, உருவுடன்கூடுகட்டி யுகந்ததிலிருக்கு மாபோல், குருபரனுனதுகூட்டில் குடியிருப்பதுவைப் பார்த்துப், பெருவெளிநாகைநாதர் பெருமைகண்டருள்சேர் நெஞ்சே. 13

வாரணமுட்டையிட்டு வயிற்றில்வைத்தணைத்துக்கொண்டு, பூரணகூடுண்டாக்கிப் பொரித்திடுங்குஞ்சிபோலக், காரணகுருவைமூலக் கனல்விளக்கதனாற்கண்டு, நாரண னறியானாகை நாதரைப் பணிவாய் நெஞ்சே. 14

புல்லினுள் ளிருக்கும்பூச்சி பொருந்தவெண்ணுரையுண்டாக்கி, மெல்லியதண்ணீர்வீட்டில் வெயிற்படா திருக்குமாபோல், சொல்லிலேநாகைநாதர்தோய்ந்திடாச்சூட்சங்கண்டாற்போல், கல்விலே தெய்வமில்லைக் கருத்திலே தெய்வநெஞ்சே. 15

தண்ணீரிலிருக்குமீன்க டண்ணீரிற்கருவைப்பித்திக் கண்ணினாற்பார்க்கும்போது கயலுருவானாற்போல நண்ணியகுருவைக்கண்டுநாதனல்லுருவைச்சேர்த்து விண்ணின்மேனாகைநாதர்மெல்லடிவெளியாநெஞ்சே.

இலகியஊசிகாந்த மிரும்பினையிழுப்பதேபோல்
உலவியகுருபரன்று லுன்னையாட்கொண்டதன்மை
நலமுடனறிந்தநீதா னுயனையறிந்திடாமல்
நிலமிசையலைந்தாய்நாதலிங்கரைநினைப்பாய்நெஞ்சே

சூரியகாந்தம்பச்சைச் சுட்டிடுஞ்சுடரேபோலக்
கூறியவடிமூலத்தின் குண்டலிக்கனலைமூட்டி

வீரியவிருந்துறைத வெளிவீடுதென்னிற்சென்றே
ஆரியநாகைநாத ரடியிணைதொழுவாய்நெஞ்சே. 18

ஐவகைப்பூதந்தொண்ணூற்றாறு தத்துவங்களா ட்டும், தெய்வமுமுன்னிடத்திருக்க தேசத்திலலைந் தாய்நீதான், பொய்வசதவேதகபந்தம் போக்கிமெய்ப் பொருளைநோக்கி, ஐவரோரிடத்திற்கூடு மானந்தம றிவாய்நெஞ்சே. 19

ஊனமாமுடலம்பொய்யென் றுணர்துமெய்யறி வைக்கண்டு, தானவனுனபோதே சற்குருபதத்தைச் சேர்ந்தாய், வானதிலிரவிதிங்கள் வந்துபோவதுவுக ண்டால், ஞானவர் நாகைநாதர் நடனமுங் காண்பா ய் நெஞ்சே. 20

கிட்டுமோஞானயோகங்கிடைக்குமோகுருவின்பாத
கட்டுமோமூலவாசி காணுமோகயிலைவீடு [ம்
எட்டுமோநாகலிங்க மேற்றுமோ தீபசோதி
தட்டுமோபளிங்குமேடை தனையறியார்க்குநெஞ்சே.

ஒருபாதந்தன்னைதூக்கி யொருபாதந்தன்னைமாற்றி
இருபாதமாடுகின்ற வியல்பைநீயறிந்தாயானால்
குருபாதமென்றுகூறுங் குறிப்புனக்குள்ளேயாச்சு
வருபதநாகைநாதர் மலரடிகாண்பாய்நெஞ்சே. 22

நாடென்றுநகரமென்று நலந்திசழ்வாழ்வதென் றும், வீடென்றுமனையாளென்று மிக்கதோர்மைந்த ரெனறும், மாடென்றுஞ்சம்பத்தென்றும் வாஞ்சை கெட்டலைந்தாலந்தக், கூடொன்றுமழிந்தாற்கூடத் தொடருமோ கூடுநெஞ்சே. 23

எட்டிலேஎழுதுநூல்க ளெத்தனைபடித்துநீதான்
காட்டிலேஎரிததிங்கள் கானலிற்சலம்போலாய்
நாட்டிலேதெய்வமென்று நடந்தலையாமலுன்றன்
கூட்டினிறுனகநாதர் குறிப்பறிந்துணர்வாய்நெஞ்சே

கற்பிடி சோறுரைத்த நாயனென்றறிந்துக்கொ ண்டு, செ'ற்டிபின்னேஓடுஞ் சுணங்கன்போற்குண

முண்டாகி, விற்பிடித் தடிக்கப்பெற்ற விமலனார் கமலபாதம், பிறப்பதைநீக்கும்நாக லிங்கரைக்காண்பாய்நெஞ்சே. 25

விரகநாயகனைத்தேடி விரும்பியமங்கைபோலக்
குரவனாருபதேசத்தைக் குறிப்புடனிதமுந்தேடி
இரவுடன்பகலுமான விருபதநடனங்கண்டால்
சிரமதிநாகைநாதர் சிலம்பொலிகேட்குநெஞ்சே. 26

வாரணனயன்மால்ருத்ரன் மகேசுரன்சதாசிவன்றன்
காரணமாறுவிட்டிற் கலந்தவரிருக்குமப்பால்
பூரணநிராதரத்தின் புதுமையுங்கண்டுபோற்றி
ஆரணநாகைநாத ரடியிணைதொழுவாய்நெஞ்சே. 27

மோரிலேலநீரைவிட்டால்முறிந்திடுங்கொள்கைபோல
காரியகுருவைவிட்டுக் காரணகுருவைக்கண்டு
சீரியசாலுநீர்போற் சேர்ந்திருவருமொன்றாகி
ஆரியநாகைநாத ரடிபணிந்தேத்துநெஞ்சே. 28

நித்திரைவந்தபோது நினைவுதானிருந்ததெங்கே
புத்திரர்தாமுமெங்கே புணர்ந்திடுமனைவியெங்கே
பத்திரபூசையெங்கே பலதொழில்செய்வதெங்கே
சிற்பதநாகைநாதர் செயலினையறிவாய்நெஞ்சே. 29

வேடத்தைத்தரித்தாலென்ன வெண்பொடியணிந்தாலென்ன, நாடொாத்துவாழ்ந்தாலென்ன நதிதலங் கண்டாலென்ன, தேடொாததநாகைநாதர் சீரடிசிந்தைநேசாநதே, ஓடத்தாமரையின்பூப்போ லுயர்த்திடும் பெரியோர்நெஞ்சே. 30

தள்ளிடுசுணங்கன்போலச் சாஸ்திரம்படித்தாலென்ன, வெள்ளியதுகிலேத்தூளி வேட்டியாய்த்தரித்தாலென்ன, உள்ளிருந்தாட்டுவிக்கு மொருவனையுருகித் தேடிற், தெள்ளியநாகைநாதர் செயல்காணார்மாந்தர்நெஞ்சே. 31

பளிங்குற்றகுளத்துநீரைப் பாசிதான்மறைத்தாற் போலக், களங்கற்றபுத்திதன்னைக் காமந்தான்மூடி

க்கொண்டு, விளங்கத்தான்செய்வதில்லை மெய்யறிவி
ளக்கையேற்றி, முழங்கத்தாரநாகைநாதர் முழுமொ
ழி பகர்வாய்நெஞ்சே. 32

மண்ணையெடுத்துனீரால் வகையுடன்பிசைந்து
பாண்டம், பண்ணியேகனலாற்சுட்டுப் பாதையென்
பதுதான்விட்டே, அண்ணலார்வாய்வாகாச மடைந்
தவைம்பூதக்கூட்டை, விண்ணமாநாகைநாதர் விளை
யாட்டென்றறிவாய்நெஞ்சே. 33

கண்ணாடிதன்னிற்றோற்றுங் காரணவுருவம்போ
ல, உண்ணாடிமூலாதாரத் துதித்தசற்குருவைக்கண்
டு, விண்ணாடிவெளியைப்பார்த்து விளக்கொளிமகி
மைசேர்ந்தால், மண்ணாருநாகைநாதர் வந்துனையா
ள்வார்நெஞ்சே. 34

உருவமுநிழலும்போல உகந்துபின்றொடருநாயன்
பருவங்கண்டறிந்திடாமற் பருந்திங்காற்பட்சியானு
புருவனைநடுவணைக்குட் பொருந்தியநடனங்கண்டா
ல் குருபரநாகைநாதர் கூப்பிடவருவார்நெஞ்சே. 35

கணக்கில்லாவெழுவகைக்குட் கலந்துருவெடுத்த
வின்னாள், பிணக்கிலாநரஜென்மந்தான் பிறப்பதே
யரிதென்றெண்ணிக், குணக்கிலாகுணமுண்டாகிக்
கோதிலாஞானம்போற்றிக், கணக்கிலாநாகைநாத
ரிணையடிசேர்வாய்நெஞ்சே. 36

அரியதோர்நரஜன்மந்தா னவனியிற்பிறந்துபின்னாள்
பெரியபேரின்பஞானம்பெறுவதேயரிதென்றெண்ணி
உரியவேதாந்ததன்மை யுரைக்குமாசானைப்போற்றி
தெளியொணாநாகைநாதர் சீர்பதந்தேடுநெஞ்சே. 37

பசும்பொன்னிறமென்றிற் பணத்திலேவருனாற்
போலே,விசும்பெலாங்கலந்தசோதியெவ்வேறுதெய்
வமாகி, உசும்பிசீவாத்துமாக்க ளுடல்பலவானவ

ண்மை, கசிந்துகண்டுருகிநாகை லிங்கரைக்காண்பாய்நெஞ்சே. 38

விண்டவர்கண்டதில்லை விட்டதோர்குறைமெய்ஞ்ஞானம், கண்டவர்விண்டதில்லைக் ககனவம்பலத்தினகாட்சி, அண்டர்கோடஞ்சையீச னடியிணைவாசியுச்சி, மண்டலநாகைநாதா வாழ்பதிவழிபார்நெஞ்சே. 39

காதுடனுக்குமூக்குக் கண்ணுயிர்சிரங்கருத்து, மாதுடனீசனொடு மலர்பதமறிந்திடாமல், வாதுசொற்றர்க்கநூல்கள் வகைபலபடித்தாலென்ன, சாதுவாய்நாகைநாதர் தாள்கண்டுதனைப்பார்நெஞ்சே. 40

தீபத்தைமலரென்றெண்ணிச் சென்றிடுவிட்டில் போலக், கோபத்தின்கனலில்வீழ்ந்து கொடியதோர்பிறவிபெற்றாய், ஆபத்துவந்தாலுன்னோ டியாவர்தாமவருவாரந்தச், சோபத்தைமறந்துநாகை லிங்கரைத்தொழுவாய்நெஞ்சே. 41

மின்மினிப்பூச்சிதன்னுண் மெய்யொளிகண்டாற்போல, உன்மனதொடுங்கியேயுன் னுள்ளொளிகண்டாற்பினைச், சென்மமுமில்லைபந்தச் சிவத்துளேசேர்வாய்நாளும், பொன்மலைபுகழுநாகை நாதனைப்போற்றுநெஞ்சே. 42

செம்பினிற்களிம்புபோலச் சீவனுஞ்சடமுங்கூடி, நம்பினவுடலைக்கண்டு நல்லுயிர்வடிவங்காணாய், வெம்பிபநாமமாயை விட்டுமெய்ப்பொருளைத்தேடிக், கும்பிபநாகைநாதர் கூத்தாடல்காண்பாய்நெஞ்சே. 43

இலவுகாத்திருந்தபட்சி யேங்கியேபரக்குமாபோல், உலகமேபொருளாய்நம்பி யொருபலனற்றாய்நீதான், நலைவையாங்குருவைப்போற்றித் தாளிணைவாசிகண்டால, நிலைமையாம்நாகைநாதர் நிலையிடைநிற்பார்நெஞ்சே. 44

ஆத்துமலிங்கங்கண்டு ளன்பெனுமலரதென்றாய்ச், சாத்தியேபிரணவத்தாற் றனிப்பெறுவட்டஞ்சூ

ட்டி, போற்றிபேதிபமூல வரிசுடர்விளங்கும்பார்த் துப், போற்றியநாகைநாதர்பொன்னடிபூசுநெஞ்சே.

சுக்கிலவிந்துதானுஞ் சுரோணிதக்கருவிற்கூடிப், பக்குவக்கிழவியாகிப் பையுளேயடைந்தபாவை, அக்குவையதனைவிட்டிங் கவனியிற்பிறந்தரூட்சம், அக்கினிநாகைநாத ரமைந்ததென்றறிவாய்நெஞ்சே.

நீக்கமில்லாமலெங்குநிறைந்ததோர் வெளியையுன்னுள், தாக்கியேயறிவினாலே தனைமறந்திருந்துபார்வை, நோக்கியேநிஷ்டைகூடி நொடியரைநிமிஷம்வாங்கி, தூக்கியேநாகைநாத ரவரைநீதொழுவாய் நெஞ்சே. 47

கடலெனவிளங்கும்வேத காரணகுருவைக்கண்டுன்
உடல்பொருளாவிமூன்று முகந்தவர்க்குதவிநீதான்
திடமுடன்பூர்த்தியாகி செந்துசிற்பரத்திற்சேர்ந்து .
நடமிடும்வாசிநாகை நாதரைநாடுநெஞ்சே. 48

நாசியினுனியின்மீது நடனமேசெய்யுநதேசி
வாசிவாவென்றவென்னுள் வாங்கியேமௌனமுற்று
கானமாநதியுநதில்லைக் கனகவம்பலமுங்கண்டு .
பூசித்துநாகைநாதர் பொன்னடிவணங்குநெஞ்சே.

தாவுநல்லுதயகாலந் தபனன்றேரெழும்பக்கண்டு
கூவுமாக்குக்கிடங்க கூப்பிடுகாட்டிற்கம்பு
மேவியேநீயுமந்த மெய்யறிவறிந்தாயானால்
மூவர்கோநாகைநாதர் முன்வந்துநிற்பார்நெஞ்சே.

வஞ்சையர்மீதிலாசை வைத்திந்தவையமீதில்
சங்கையில்லாததுன்பச் சாகரந்தனிலேவீழ்ந்தாய்
நங்கைமேல்வைத்தபாச நாயன்மேல்வைத்துநீயும்
செங்கையாநாகைநாதர் சீர்பதந்தொழுவாய்நெஞ்.

அன்றிலும்பேடுபோல வடிமையுங்குருவுங்கூடிக்
கொண்டிருந்தடிமூலத்திற் குதித்தெழுவாசியாடக்
கண்டிமையாதநாட்டக் கருணைபால்வெளியிலேறிப்
பண்டிதநாகைநாத லிங்கரைப்பணிவாய்நெஞ்சே.

குலங்கெட்டுப் பாசங்கெட்டுக் கோத்திர பேதங்
கெட்டு, மலங்கெட்டுக்கோபங்கெட்டு மங்கையரா
சைகெட்டுத், தலங்கெட்டுததானுங்கெட்டுத் தனக்
குளேவெறும்பாழாக்கிப், பவங்கெட்டுநாகைநாதர்
பதங்கொள்வார்பெரியோர்நெஞ்சே. 53

ஓமென்னும்பிரணவத்தி னுதித்தவைந்தெழுத்து
மாகி, ஆமெனுமகாரபீடத் தமர்ந்திடுவாசிகண்டு,ஊ
மெனுமௌனமுற்றே யூரிடுமதிப்பாலுண்டு, தாமெ
னுநாகைநாதர் தாண்டவம்பார்ப்பாய்நெஞ்சே. 54

அலைதனிற்றுரும்புபோலுமாலைவாய்க்கரும்புபோ
லும்,வலைதனின்மானைப்போலு மயங்கினைந்தலைந்தா
ய்நீதான், உலைதனின்மெழுகைப்போலு முருகிமெ
ய்ப்பொருளையுன்னி, கிளைதனினின்றுநாகை லிங்க
ரைக்காண்பாய்நெஞ்சே. 55

பொறிவழியலைந்துமீளும் புலன்களையடக்கினோ
ன, அறிவெனும்விழியினாலே யம்பரவெளியைப்பா
ர்த்து, உரிதனிலிருக்குங்கள்ளை யுண்டுதற்போகமி
ட்டு, நெறிதருநாகைநாதர் நிலைமைகண்டறிவாய்நெ
ஞ்சே. 56

ஆயாதநூல்களெல்லா மாய்ந்துநீபார்த்துங்காமி
த், தீயானகுழியில்வீழ்ந்து செனனமுற்றலைந்தாயு
ன்னின், காயாதபாலையுண்டு கனகவம்பலத்தைக்க
ண்டு, மாயாமநாகைநாதர் மலரடிவணங்குநெஞ்சே.

ஆதாரமாறுந்தாண்டி யைம்பூதவடிவந்தாண்டி,
மீதான வெளியுந்தாண்டி விளங்கிய பரந்தன்கூத்
தை, நீதானுமறிந்துகொண்டு நின்மலவடிவமாகி,வே
தாந்தநாகைநாதர் மெல்லடிவெளிபார்நெஞ்சே. 58

பகர்ந்திடுந்திசைகளெங்கும் பராபரவெளிதான்
கூடிக், கோர்த்திடும்வடிவைஞான குருவினாலறிந்து
கொண்டு, பேர்த்திடுமிமையாநாட்டத் திருந்துபேரி
ன்பவெள்ளம், வாத்தியமுழங்குநாகை லிங்கரவி
ணங்குநெஞ்சே. 59

சச்சிதானந்தமான சற்குருபதத்தைப்போற்றிக், கச்சிமாநகரமூலக் கனல்விளக்கதனையேற்றி, உச்சிமேல் வைத்துப்பார்வை யுணர்வினால் வெளியிலுன்னித், தச்சிலாவீட்டுநாகைலிங்கரைத்தழுவுநெஞ்சே

காரின்பமுழையாளோடு மன்றிலேநடஞ்செய்வோனைப், பேரின்பவீட்டைக்கண்டு பிரணவவிளக்கையேற்றிச், சேரின்பவெளியில்வாசித் திருவிளையாடல்பார்த்தால், ஓரின்பநாகைநாதர்க்குகந்துவந்துரைப்பார்நெஞ்சே. 61

நாயனையறிந்திடாம ஞானனுமாண்மையாலே
ஆயனில்லாதகாலி யாகிநீயலையலுற்றுப்
காயமேகோயிலாகக் கலந்திருந்தவனைக்கண்டு
மாயொணுவாழும்நாகை நாதரைவணங்குநெஞ்சே.

உருப்படுங்கல்லுஞ்செம்பும் உண்மையாய்தெய்வமென்றே, மருப்புனைமலரைச்சூட்டி மணியாட்டித்தூபங்காட்டி, விருப்பமுற்றலேந்தாயந்த வினைமயல்விட்டுநின்னுள், இருப்பவநாகைநாத ரிணையடிபூசிநெஞ்சே. 63

உனைவிடவேறேதெய்வ முண்டெனவுலகிற்றேறடும், நினைவதேதெய்வமாகி நீகண்டுநின்றாயானால், செனனமாய்பிறவிபோகுஞ் சிவத்துளேசேர்கருமங்கோன், மனமகிழ்வாசிநாகை நாதர்தாள்வணங்குநெஞ்சே. 64

ஆசையாம்பாசமாயை யறிவதைமயங்கியுன்னுள், ஈசனைத்தேடொட்டாம விருக்குமவ்விருளைப்போக்கிக், கோசமாமுறியைநோக்கிக் குருபரன்வடிவைக்கண்டு, வாசமாமலராஞர்தன் நாதரைவணங்குநெஞ்சே. 65

கன்றதைத்தேடுங்காணுங் காலியைப்போலேயுன்னுள், நின்றபேரொளியைக்கண்டு நினைவெனுமறிவாற்றெய்வம், ஒன்றெனக்கண்டாயானு லுமையவிதேடவேதில்லை, மன்றிலாடுநாகை நாதர்முன் வருவாய்நெஞ்சே. 66

மடைவாயிற்பட்சிபோலே மனந்தனையடக்கிவாசி
விடைபெறுமீசன்பாதம் விரும்பியபெரியோர்பின்
னே, தடையறத்திருந்துஞான சாதனம்பெற்றுநீ
தான், புடைசூழ்நாகைநாதர்பொன்னடிபோற்றிநெ
ஞ்சே. 67

சிரமெனுங்குகையினுள்ளே சிவகயிலாயமன்றில்
அரனுடமையுவாசி டாடல்தான்செய்வதொன்று
பரமமெஞ்ஞானநூல்கள் பகர்வதையறிந்துபார்த்து
வரமிகுநாகைநாதர் மலரடிவணங்குநெஞ்சே.

கடமதிநிறைந்துநின்ற கனவெளிபோலேவுன்றன்
செடமதினிறைந்துநின்ற சிவனையறிவாற்கண்டு
திடமிகுசிவசாட்சி தரிசிக்கசிவன்முத்தி
இடமருநாகைநாத ரிணையடியுணர்வாய்நெஞ்சே. 69

மெய்யருள்விளங்குட்சோதி வெளிதனையறிவானு
ன்னி, ஐயமில்லாமற்காண்போ ரவரின்பமுத்தவரெ
ன்று, துய்யமெஞ்ஞானநூல்கள் சொல்வதாற்பரத்
தைநோக்கிச், செய்யதாள்வாசிநாகைலிங்கரைத்தெ
ரிசிநெஞ்சே. 70

முந்தினபிறப்புவந்த முதன்மையுமறியாயிப்பால்
பிந்தினபிறப்புவந்த பெருமையுமறியாய்நீதான்
அந்தரப்பட்சிபோல வலைகின்றாயகத்துளேமுச்
சந்தியையறிந்துநாகை நாதரைச்சார்வாய்நெஞ்சே.

காகத்தின்கண்ணிரண்டிற் காண்பதுங்கண்ணொன்
றேபோல், தேகத்தினறிவின்கண்ணைத் திடமுடனறி
ந்துகொண்டு, மோகத்தின்கனவிலவீழா முனைசுழி
வாசிபார்த்தால், ஏகத்தாநாகைநாத ரிணையடிசார்
வாய்நெஞ்சே. 72

ஓட்டிலேபட்டபட்சி யுழல்கின்றநெறிபோலாசைக்
காட்டிலேமயங்கிமாறாக் கவலையுற்றலைந்தாய்நீதான்
நெட்டிலேயோடுவாசி நிலைமையாய்நிறுத்திமேலும்
வட்டிலேநாகைநாதர் வாழ்பதியறிவாய்நெஞ்சே. 73

ஆலைவாய்க்கரும்புபோலு மாவின்வாய்த்தேரை போலும், பூனைவாயெலியைப்போலும் புலியினோடு லைந்தாய்ஞானத், தேனைவாயருநதிமுத்தி சேர்ந்திடச்சிவத்தைநோக்கி, ஊனுளே நாகைநாத ருற்றிடமறவாய்நெஞ்சே. 74

மித்திரகுருக்கள்சொல்லை மெய்யென்றுகல்லைவைத்துப், பத்திரபுட்பஞ்சாத்திப் பணிந்திடும்பாவைநீதான், சித்திரப்பதுமைபோலுஞ்செய்தொழிலொடுங்கிநின்று, புத்தியாய்நாகைநாதர் பொன்னடிபோற்றுநெஞ்சே. 75

உப்பொடுபுளிப்புங்கைப்புமுணர்விலுலறிந்துநீதான், எப்போதுமுனக்குறு யனிருப்பிடமறியாதென்னே, முப்போதுங்குருவைப்போற்றி முனைசுழியாசிபார்த்தால், அப்போதுநாகை நாதரடியிணையறிவாய்நெஞ்சே. 76

படிக்கவுநாமிருக்கப் பணியவுஞ்சிரமிருக்கப்
பிடிக்கவுங்கரமிருக்கப் பேணவுங்குருவிருக்க
நடக்கவுந்தானிருக்க நாடவுங்கண்ணிருக்க [சே.
இடுக்கமுற்றலைந்தாய்நாகை நாதரையிறைஞ்சுநெஞ்

அருவுருவில்லாநாய னணுவினுக்கணுவாய்நின்றும்
மறுபல்லுயிர்கட்கெல்லாம் வடிவேறான தன்மை
ஓருவருமறியார்நல்லோ ருருதியாலறிவார்ஞான
குருபரநாகைநாதர் குறிப்பறிந்துணர்வாய்நெஞ்சே.

ஆண்டொருநூறுகற்ப மௌஷதமுமிரண்டு
நீண்டதோர்காயசித்தி நெடுநாளைக்கிருந்தபேரும்
மாண்டுதான்போவரல்லான் வையத்திருப்பாருண்டோ, தீண்டொணுநாகைநாதர் சீர்பதந்தேறுநெஞ்சே. 79

பொருடனைத் தேடிப்பாரிற் புதைக்கின்ற புத்தியேயன்மை, யருடனைநிதமுந்தேடி யரனடியதனில்

வைத்தால், இருடனையகற்றுஞ்சோதி யெம்பிரான் முன்னேவந்துன், மருட்டனைமாற்றினாகை நாதரைவ ணங்குநெஞ்சே. 80

ஆண்டியன்வேடந்தானு மறிவுடனெடுத்திடாம ல், தூண்டிலின்மீனைப்போலத் துள்ளிவீழ்ந்தலைந் தாய்நீதான், வேண்டியபோதுநாயன் மெல்லடிவெளி தாய்த்தோன்றும, தாண்டியுவாசினாகை நாதரைத் தழுவாய்நெஞ்சே. 81

சேத்திலேநுழைத்திருக்க சிறுபிள்ளைப்பூச்சிபோ லும், நீற்றிலேநுழைந்திருந்த நேர்மையாங்கழற்சி போலும், மாற்றுபேருலகினல்லோர் மருவிரிமருவா ர்சித்தத், தேற்றியேனாகைநாத ரிணைபடிவைப்பாய் நெஞ்சே. 82

நாடகப்பெண்ணையாட்டு நட்டுவன்போலேயுன்று ன், கூடகச்சடத்தையாட்டுங் குருவைநீயறிந்திடா மன், மூடகமானுய்ஞான முதல்வனையறிவாற்றேடி, ஆடகநாகைநாதரடியிணைப் பணிவாய்நெஞ்சே. 83

சத்தியுஞ்சிவமுமாகித் தாண்டவமாடும்வாசி, சத் தியமூலநாடிச் சுழிமுனைக்கம்பத்துள்ளே, புத்தியை ச்செலுத்திமேலாம்பொருடனையெக்கடுவல்லார், பத் திசெய்நாகைநாதர் பதிதனைப்பார்ப்பாய்நெஞ்சே.

நாட்டமறிவின்கண்ணா லையனையருகிப்பார்த்துத், தேட்டமாங்கருணைபெறற சிவனடியார்கடங்கள், கூ ட்டமாம்பரத்திற்சென்று குருபணிவிடையுஞ்செய்து கொண்டாட்டமாநாகைநாத ரருடரவருவாய்நெஞ் சே. 85

காலனையுதைத்தநாயக் காலெனும்வாசிதானே
மூலநன்மனையிற்கண்டு முப்பதிமுப்பாழ்தாண்டி
பாலமுதருந்தமேலாம் பராபரைபாதம்போற்றி
மாலயனறியானாகை நாதரைவணங்குநெஞ்சே. 86

கடுமையாம்கட்டிலேறிக் கயிறுகொண்டுசூலமேந்திக், கொடுமையாககாலனவந்து கொண்டுபோமுன்னே நீதான, அடிமையாளுபனபாத மனுதினமறவாதே தனில், நெடுமையாளுகைநாதர் நிலைமைகண்டறிவாய்நெஞ்சே. 87

அரகராசிவசிவாவென் றனுதினமறவாகத்திற்கே
சிரகயிலாயவீட்டிற் சிவனைநீயறிந்துதேடி
மரகதவல்லிபங்கன வந்துமுன்காட்சிநல்கிப்
பரகதிகொடுக்குநாகைநாதரைப்பணிவாய்நெஞ்சே.

நடக்கினும்வாசிப்பாரு நாட்டமும்வாசிப்பாரு
முடக்கினும்வாசிப்பாரு முனைசுழிவாசிப்பாரு
மடக்கினும்வாசிப்பாரு மறிவினும்வாசிப்பாரு
திடக்குறுநாகைநாதர் திருநடஞ்செய்வாய்நெஞ்சே.

போனநாள்வீணாய்ப்போனாற் புதியநாள்கோவிடாமல், ஞானநாளிதுதானென்று நாடெங்குங்குருவைப்போற்றி, வானநாளத்திற்சென்னி வழிகண்டுமதிப்பாளூறும், தேனைநன்கருத்திநாகை லிங்கரைத்தெரிசிநெஞ்சே. 90

தராதரமெல்லாந் தானாய்த்தாபரசங்கமெங்கும்
நிராமயமாகக்கோத்து நின்றநீதார்பொருளாமந்தப்
பராபரவடிவங்கண்டு பரத்துளேயடிக்கிமேலாம்
புராதனமூர்த்திநாகை லிங்கரைப்போற்றிநெஞ்சே.

மாணிக்கவாசகர்க்கு மகிழ்பரஞ்சுந்தரர்க்கும், ஆணிப்பொன் திருமூலர்க்கு மறுபத்துமூவருக்கும், பேணிக்கொள்பெரியோருக்கும் பேயருள்சிவனையுன்னுள், தோணக்கண்டிருந்து நாகைலிங்கரைத்தொழுவாய்நெஞ்சே. 92

மருத்துவமடைந்தநெஞ்சே மனமாயைகொண்டநெஞ்சே, பகுத்தறிவில்லாநெஞ்சே பலநினைவானநெஞ்சே, மிகுத்திடுகாமநெஞ்சே மெய்ப்பொருளறியாநெஞ்சே, செகத்தினிநாகைநாதர் சீர்பதந்தேடுநெஞ்சே. 93

காலதுமேலதாகக் கனியுண்ணும்வவ்வால்போல
மூலநல்வாசியோடு முறைமையறிவாற்கண்டு
சீலமெஞ்ஞானபோத சிவயோகந்தனைப்பார்த்து
ஞாலமேனாகைநாதர் நடனமுங்காண்பாய்நெஞ்சே.

உறக்கவும்விழிப்பும்போல வுடல்பிறந்திருக்குந்தன்மை. சிறக்கவேயறிந்துமிந்தச் செகவாழ்வைமெய்யென்றெண்ணிக், குறைக்தலக்குலமர்சொல்லைக் குறிப்புடனம்பலாமோ, மறக்கொணாநாகைநாதர் மலரடிவணங்குநெஞ்சே. 95

எத்தனைபுத்திசொல்லி யெடுத்தெடுத்துரைத்துநீதான், பித்தனைப்போலேயாடிப் பிறவிசாகரத்தில்வீழ்ந்தாய், மூத்தமிழ்நாகைநாதர் முண்டகமலர்த்தாள்போற்றி, சத்தமுன்னுடலிற்றோன்றுந தலந்தனைப்பார்ப்பாய்நெஞ்சே. 96

சுவர்தலைப்பூனைபோலச் சுற்றியபிரவிதீரத், தவத்தினுக்குருவமான சற்குருதாளைப்போற்றிச், சிவத்துடன்கலந்துமேவச் சிதம்பரம் வழிபேசென்றங், கெவர்க்குமேலானநாகை நாதரைவணங்குநெஞ்சே.

அலைவாயிற்பூடுபோலு மானைவாய்க்கவளம்போலுங், வாலையின்மிருகம்போலு மயங்கினைந்தலைந்தாய்நீதான், உலைவாயின்மெழுகைப்போல புதுக்கிமெய்ப்பொருளையுன்னிப், பலகாலுமேத்திநாகை லிங்கரைப்பணிவாய்நெஞ்சே. 98

மூலமாநகரமீதின் முளைத்தெழுஞ்சுடரைக்கண்டு
காலதீமேலேயேற்றிக் கபாலத்தேனமுதுகுத்தி
வேலமாமதுவையுண்டு குருபதந்தனிற்சேர்ந்து
வாலசுந்தரியானாகை லிங்கரைவணங்குநெஞ்சே. 99

இறந்திடுமிருபத்தோராயிரத்தாறுநூறுபேரும்
இறந்திடுவகையபோனவீசனைக்காண்பதென்னாள்
மறந்திடாதறிவான்மூல வாசியைமேலேயேற்றிச்
சிறந்தசிற்பரத்துநாகை லிங்கரைத்தரிசிநெஞ்சே.

கதிதருமூலாதார கணபதிதாசன்சொன்ன
நிதிமணிவாலையான நெஞ்சறிவிளக்கநூறும்
துதிசெயுமறிவோர்ஞான சோதியின்வடிவமாக
மதியணிநாகைநாதர் மலர்ப்பதமபெற்றுவாழ்வார்.

நித்தியப்பொருளதான நெஞ்சறிவிளக்கநூறும், பத்தியாய்மனதிலெண்ணிப் படித்ததன்பயன்காண் பொர்கள், முத்திமெஞ்ஞானம்பெற்று மூவர்க்குமு தல்வராகிச், சத்தியுஞ்சிவமுந்தோன்றாத தற்பரமத னுட்சார்வார். 102

கனகமார்மணிசேர்மூல கணபதிதாசனாக, நினைவி னிலறிகட்செப்பு நெஞ்சறிவிளக்கநூறும், வினவி யேபடிப்போர்கேட்போர் வினையெலாமகன்றுமெய் யும், மனமெனுமோட்சநாலாம் பதம்பெற்றுப்பதத் துள்வாழ்வார். 103

நெஞ்சறிவிளக்கம் முற்றிற்று.

உ

சிவமயம்.

சேஷயோகியருளிச்செய்த

ஞானயேத்தம்.

பிள்ளையாரும்வாரி
பிள்ளையாருமங்கை
பெருத்தமூலாதாரஞ்
சிறித்தவிதழ்நாலாம
உரைத்தகமபமாகி
ஓங்கியுச்சிதொட்டு
தாங்கியதினகிழாய்
தானிரண்டதாகி

தாங்கியேவாயுவானால்
அங்கியேகடநது
சங்கிலிபிளந்து
சமத்தவாயுவானால்
இங்கிதுவுரைதந்த
இரண்டடனேவாரி
இன்னமதின்மேலே [ன்
வன்னமதைச்சொல்வே

அன்னத்தினுக்குராஜன்
ஆபன்சரஸ்வதியாம்
நயந்தலிதழாரும்
நல்லநிறம்பொன்னும்
நகாமேயெழுத்தாம்
உகாரம்கெந்தமாகும்
முத்திதந்தநாதா
மூன்றுடனேவாரி
மோசம்பண்ணமாயன்
வாசமணிபூரம்
நேசலட்சுமியாம்
வீசபத்திதழும்
ஓதுமவ்வெழுத்தாம்
தேசமேவெளுப்பாம்
ஆறுசுவையாலே
நடுவேவேதயுவீடாம்
நாலுடனேவாரி
நாலுமெட்டிதழும்
நல்லசெம்புமேனி
எல்லைருத்திரனும்
தொல்லைவிழிப்பார்வை
செல்லுமேசிகாரம்
அல்லலுண்டேயின்னம்
அஞ்சுடனேவாரி
நெஞ்சிலவ்வெழுத்தாம்
கொஞ்சியமயேசன்
மிஞ்சுமறுகோணம்
மேனிகருப்பாமே
தன்னிதழைப்பார்க்கில்
தனியேபதினாறும்
முனிந்தவேலையாடல்
அந்தரங்கஞ்சொல்வேன்
ஆறுடனேவாரி
கூறவேனேனானும்
குருவிருந்தநேர்மை
யருகிருந்தபூதம்
அமச்சனல்லாவத்தான்
என்னென்றுசொல்வே
ஏழுடனேவாரி
தாழசொன்னபேச்சு
சத்தியங்காணத்தான்
ஏழைசொன்னபேச்சு
எட்டுடனேவாரி
எட்டுசாணுடம்பு
கட்டையைநம்பாதே
ஒன்றல்லவோதெய்வம்
ஒருபதியாலெட்டாம்
ஊமையெழுந்தாலே
ஓங்காரமுண்டாச்சு
ஓங்காரத்தினாலே
உண்டாச்சுதேலோகம்
இதுவுங்குருவாலே
இருபதியாலெட்டாம்
இரைக்கிறாண்டேத்தம்
சுரக்குமேழைநாலாம்
முந்திகுருபாதம்
முப்பதியாலெட்டாம்
முப்பாழுங்கடந்து
அப்பாலேநடந்தால்
அதிசயம்பார்த்தான்
நல்லகுருபாதம்
நாற்பதியாலெட்டாம்
நாலுமூலைகுண்டம்
நடுவெழுந்தநாணும்
படுமுதலில்ரெண்டாம்
படுமுதல்பிடிங்கி

பருத்தமரமேறி
குருத்தில்கள்ளிறக்கி
கூசாமற்குடித்தாற்
பேசாதேபிறகு
அஞ்சாதேநீயத்தான்
ஐம்பதியாலெட்டாம்
அஞ்சலல்லவோபூதம்
பிஞ்சல்லோவெழுத்து
அஞ்சொடுங்கும்போது
நெஞ்சடங்குமத்தான்
ஆறுமுகமல்லோ
ஆறுபதியாலெட்டாம்
ஆறல்லோவாதாரம்
வேறல்லோசொரூபம்
வேறறிந்தபேர்க்கு
தூரமில்லையத்தான்
என்னவென்றுசொல்வேன்
எழுபதியாலெட்டாம்
எழல்லவோநாடி
வாழின்பத்துநாடி
பாழல்லவோநாளும்
பாழ்கடந்தபேர்க்கு
பத்துகோடிதெண்டம்
என்னென்றுசொல்வே
எண்பதியாலெட்டாம்
எண்ணிக்கையறிந்து
கண்ணப்பனைக்கண்டு
தின்னப்பாபழத்தை
குண்ணப்பாவறுமை
விண்ணப்பமுரைத்து
சண்ணப்பாகுருவை
சொன்னதபசாரம்
தொண்ணூறுடனெட்டே
மண்ணில்வெகுதூரம்
குண்ணறிந்தபேரை
எண்ணறிந்துவாடி
ஏகமனதாகி
பாரமுமறிந்து
நாதத்தையெழுப்பி
பேசத்தைதுறந்து
யோகத்தைநடத்தி
போகத்தைக்கடந்தால்
தாகத்தைநிறுத்தும்
சோதியறிந்தோர்க்கு
தூரமில்லையத்தான்
சாதிக்குலமில்லை
சற்குருவறிந்தால்
நித்தியமிதுவே
பத்தியாய்ப்பணிந்தால்
முத்திதருமத்தான்
வாமநெறிசிவன்
ராமயோகிதந்த
ராசயோகிசேஷன்
சாதனருளாலே
பாசமறச்சொன்னேன்
பிரியாமலையத்தான்
பிள்ளையாரும்வாரி

ஞானயேத்தம் முற்றிற்று.

பிசுமில்லாகிற்றகுமானிற்றகீம்.

ஞானத்தினக்குறவஞ்சி.

காப்பு.

பொன்னுலகுபொருந்துமனப்
பொருளறியத்தனமறிய
மின்னுலகில்மெய்ஞ்ஞானம்
விளங்ககுறவஞ்சிதனை
உண்ணமைத்தன்னினைவி
னுன்னியுதிப்பொருநான்காய்த்
தன்னிறையைத்தன்னினைவாய்த்
தரிப்பதுவேகாப்பாமே.

ஆதிக்குமுன்னமநாதியுமென்னடிசிங்கி
அந்தக்கருக்குழிமூந்தவிருளறைசிங்கா. 1

ஆதியாய்வந்தவரும்பொருளேதடி சிங்கி அது
சோதியிலாதுசொரூபமாயெழுந்ததுசிங்கா. 2

சோதியிலாதிசொரூபமானதெப்படிசிங்கி அது
வேதமாம்முப்பொருளொன்றாய்முடிந்ததுசிங்கா. 3

முப்பொருளென்றுநீ முன்சொன்னதாரடி சிங்கி
அப்பனுமாயிமாதையாம்நாமடாசிங்கா. [அது

எப்படியுலகத்திலிப்படியுருவானோம்சிங்கி அது
அப்பன்தன்னட்புக்குவொப்பியதாயாலேசிங்கா. 5

பாராபரத்திற்பஞ்சவன்னமேதுசிங்கி அது
வோராகித்தூரானவிந்துநிறமடாசிங்கா. 6

ஒன்றுக்குளைவர்களுண்டானதெப்படிசிங்கி அது
வொன்றோடேயொன்றாகவோடியிணைந்தது சிங்கா.

மூலைக்[illegible]கக்குள்ளேமுச்சுடரேதடிசிங்கி அது
நாதத்திலேப் பூதமன்பாயுதித்ததுசிங்கா. 8

மூலக்குகையெனுங்கோட்டைக்கரசர்யார்சிங்கி யது
முப்பொருளொன்றாய்முடிந்தநிலைவெடாசிங்கா. 9

மூலக்கிழங்குமுளைத்திடமெவ்விடஞ்சிங்கி அது
நாதத்திலானநடுநிலையல்லவோ சிங்கா. 10

முன்னைமுளையாய்முளைத்திடமெவ்விடம்சிங்கி யது
மூளைமூளையிருகண்ணிழலல்லவோசிங்கா. 11

பின்னையுருவாய்முடிந்திடமெவ்விடம்சிங்கி அது
பெண்ணாணுமாகப்பிறந்ததலமடாசிங்கா. 12

இந்தவுடலுக்குவேரென்னதூரென்னசிங்கி அது
இந்தவுடலுக்குயிராதிமூலமேசிங்கா. 13

இந்தவுடலுக்குயிர்வந்ததெப்படிசிங்கி அது
தொந்திநடுக்குழிதொப்பூழ்வழியடாசிங்கா. 14

இந்தவுடலுக்குயிரெங்கேநின்றதுசிங்கி அது
அந்தரமாயண்டமாக்கொடிநின்றதுசிங்கா. 15

இந்தவுடற்கனியெந்தக்கொடிகனிசிங்கி அது
முந்தியதொப்பூழ்மாக்கொடியல்லவோசிங்கா. 16

மாக்கொடியென்பதைமானிடரென்டுசொன்னார்சிங்கி
மட்டிலடங்காதமாகலிமாவடாசிங்கா. 17

எந்தவழியினால்வந்தோமுலகினில்சிங்கி அது
வெல்லாமுடிந்தபொருள்வழியடாசிங்கா. 18

முன்னையறிவாலறிவகையென்னடிசிங்கி அது
முச்சுடர்மூன்றுமுடலுயிராத்துமாசிங்கா. 19

பின்னாறிவர்களொன்றானதெப்படிசிங்கி அது
பேதகமற்றபெருவெளியானதுசிங்கா. 20

ஆசைகொண்டுநம்மையாட்டுறதாரடிசிங்கி அது
அக்கினிவாயுநீர்மண்ணின்மகிமையேசிங்கா. 21

ஆசைபாசபலனனுபோகமாரடிசிங்கி அது
அங்கம்பொருந்தியடங்குமண்ணல்லவோசிங்கா. 22

தன்னையறியுந்தலமேதுசொல்லடிசிங்கி அது
கண்ணிடையானநடுநிலையல்லவோசிங்கா. 23

என்னவிதமாகத்தன்னையறிவது சிங்கி அது
தன்னவன்றாய்த்தந்தையாகிநாமானதுசிங்கா. 24

இறையையறிவதுஎப்படிச்சொல்லடிசிங்கி அது
இறையெங்குநின்றுந்தன்நினைவாகுமேசிங்கா. 25

தன்னுள்விளங்குந்தலமென்னசொல்லடிசிங்கி நீ
தன்னைமறந்துதவத்திலிருப்பதுசிங்கா. 26

என்னவிதமாகத்தன்னைமறப்பதுசிங்கி நீ
யொன்றைப்பொருந்தியொடுங்கியிருப்பதுசிங்கா.

என்னவிதமாக வொன்றைப் பொருந்தலாம் சிங்கி
அங்-கெல்லாமறந்துயிருளாயிருப்பதுசிங்கா. 28

ஒன்றென்றுசொன்னவுயிர்நிலையென்னடி சிங்கி அங்
உன்னுதிப்பலமுன்னால்நினைவடாசிங்கா. [கு

கன்னியெழுந்துகலந்திடமெவ்விடஞ்சிங்கி சிவ
முன்னியெழுந்தவுயிர்நிலையல்லவோசிங்கா. 30

எங்கும்பரந்தபெரும்பொருளென்னடிசிங்கி அது
அங்கிங்குமெங்குங்கண்டபெருவெளிசிங்கா. 31

அண்ணினுமெண்ணுமழியாப்பொருளென்ன சிங்கி
இருகண்ணையுமூடவிருளழியாப்பொருள்சிங்கா. 32

ஆங்காரவுடலுக்குஆணியாமென்னடிசிங்கி அது
ஓங்காரமூலதினுள்ளொளியல்லவோசிங்கா. 33

ஆணியாய்வந்தவரும்பொருளென்னடிசிங்கி முன்
தோணியசற்குருமூதனுமமல்லவோசிங்கா. 34

இந்தப்பொருள்வந்தெந்தவழியடிகிங்கி அது
அந்தக்கதிர்மதிவந்தவழியடாசிங்கா. 35

கத்தனெளிவுகலந்திடமெவ்விடப்சிங்கி வழி
யத்தநடனந்தானடிபதற்பரஞ்சிங்கா. 36

உத்தமப்பொருளுக்குயிரெழுத்தென்னடிசிங்கி அது
நச்சரவாடுநடுநிலையல்லவோசிங்கா. 37

எட்டெழுத்தாகவெழுந்தெழுத்தென்னடிசிங்கி அது
மட்டிலடங்காவடிவட்டகோணமேசிங்கா. 38

அஞ்செழுத்தாகசமைந்தெழுத்தென்னடிசிங்கி அது
அஞ்சும்பொருந்திய ஆகாயவட்டமேசிங்கா. 39

ஐம்பத்தோரட்சரமறியநீசொல்லடிசிங்கி அது
வஞ்சமகாரநடுச்சுழிமூன்றுமேசிங்கா. 40

கற்பகவாசிகலந்திடமெவ்விடஞ்சிங்கி அது
உற்பனமூலத்தினுள்ளொளிவல்லவோசிங்கா. 41

சத்தம்பிறந்திடுஞ்சற்குருவேதடிசிங்கி அது
உற்றசுவாசமுயிர்நிலையல்லவோசிங்கா. 42

கண்டுதொழுஞ்சிவகாரணமேதடிசிங்கி நம்மை
யுண்டுபடுத்தியவுள்ளொளிவானதேசிங்கா. 43

எப்படிக்கண்டுயிறையைவணங்கலாம்சிங்கி அது
நட்புடனிரண்டுநடுநிலைகாண்பதுசிங்கா. 44

நடுநிலையானதைநாடுவதெப்படிசிங்கி அது [கா.
நாட்டந்தேட்ட மோட்டமாட்டமென்றாகில் சிங்

தேட்டமூநாலுக்கிருந்துறதெப்படிசிங்கி அது
திருவைப்பொருந்தியொருமித்திருப்பதேசிங்கா. 46

ஒருமித்திருக்கின்றவோரிடமெவ்விடம்சிங்கி அது
வொன்றுமிரவும்பகலுமுதிப்பிடம்சிங்கா. 47

இரவும்பகலுமொன்றானதுமெவ்விடம்சிங்கி அது
யெப்போதுமிருளாயிருப்பதுமூலையேசிங்கா. 48

இரவும்பகலும்பிறப்பிடமெவ்விடம்சிங்கி அது
யிருளிலுதித்துன்னிவந்ததடிமூலம்சிங்கா 49

இரவும்பகலுமெழுந்திடமெவ்விடம்சிங்கி அது
யேதாந்தம்உன்னல்வந்தேறியதாமரைசிங்கா. 50

இரவும்பகலும்பிறந்திடமெவ்விடம்சிங்கி அது
வெழுந்தது கோணமிடம்வலம்வாசியேசிங்கா. 51

இரவும்பகலும்நின்றுடியடெதவ்விடம்சிங்கி அது
வெழுந்துநின்றுடுஞ்சுழிமுனைமண்டலம்சிங்கா. 52

இரவும்பகலுமிருப்பிடமெவ்விடம்சிங்கி அது
யீராறுமோடியவோரானநான்கடாசிங்கா. 53

இரவும்பகலுமுதிப்பிடமெவ்விடம்சிங்கி அது
மேறுமெட்டங்குலமிருவிழிநடுநிலைசிங்கா. 54

இரவும்பகலென்றுமெனத்தைச்சொல்லலாம்சிங்கி
அது-யிரவுபகலிடபின்கலைவாசியேசிங்கா. 55

இடகலை பின்கலை என்னத்தைச்சொல்லலாம் சிங்கி
அது-இடகலைசந்திரன்பின்கலைசூரியன்சிங்கா. 56

என்னத்தைச்சொல்லலாம்சந்திரன்சூரியன்சிங்கி அ
கலையும்பொருந்துநடுச்சுழிமுனையேசிங்கா. [ஞா

சந்திரன்சூரியனென்றனதெவ்விடம்சிங்கி அது
கலையும்பொருந்துநடுச்சுழிமுனையேசிங்கா. 58

என்னத்திலேபாலமேறிநின்றுடுதுசிங்கி அது
உன்னுக்குள்வாசிநடனப்புரவிமேற்சிங்கா. 59

என்னவிதமாகவெடுத்துநின்றுடலாம்சிங்கி அது
ஏற்றவுமாற்றவுமிணங்கிநின்றுடிப்பார்சிங்கா. 60

மாற்றிப்பிறக்கமருந்தென்னசொல்லடிசிங்கி அது
மாளாமல்மாண்டுமெறந்து இருப்பதேசிங்கா. 61

அட்டகெஜங்களறிந்திடமெவ்விடம்சிங்கி அது
எட்டுவிதமாயெழுதும்பலனடாசிங்கா. 62

உற்றஞானப்பொருளுத்தியாய்ச்சொன்னதார்சிங்கி
அது-உத்தமர்பிருமுகம்மதுரைத்ததுசிங்கா. 63

ஞானரத்தினக் குறவஞ்சி
முற்றிற்று.

சிவமயம்.

ஞானக்கும்மி.

(*)

சீர்மேவுஞானவடிவானபர
தேசிகன்சற்குருதன்னருளாற்
பார்மீதின்ஞானக்கும்மிப்பாடச்சிவ
பாலன்கணபதிகாப்பாமே. 1

அம்பிகைவாலைப்பதம்போற்றியரு
ளானந்தக்கும்மித்தமிழ்பாட
தும்பிமுகனுக்கிளையவனுஞ்சிவ
சுப்பிரமணியனுங்காப்பாமே. 2

நாலாம்வேதமுமோராறும்வகு
நாஞைபதமுநின்றனை
மேலாய்ப்போற்றிக்கும்மிப்பாடச்செந்தில்
வேலவன்றன்பதங்காப்பாமே. 3

பர்சிலுயர்மதுராபுரியில்வாலை
சர்மிசொல்லுங்கும்மிப்பாடலுக்கு
மேருவதனடிமூலமுக்கோண
விநாயகன்றன்பதங்காப்பாமே. 4

ஆதியுமந்தமுமொன்றாகிவள
ரண்டபிண்டமுமிரண்டாகிச்
சாதிபலபலவேறாகிநின்ற
தத்துவங்கேளடிஞானப்பெண்ணே. 5

தேகமானமலபாண்டம்அதிற்
சிற்கனம்வந்திடுமுற்பனத்தை
யேர்கமெனுந்தமிழ்ப்பாடலுக்குமன
முவந்துகேளடிஞானப்பெண்ணே 6

ஏகப்பெருவெளிபட்டணமாம் அதி
லேதோசித்தனொருவனுண்டோ
வாசனில்லைபேசவாயுமில்லை அந்த
மாப்பிள்ளைபெண்ணென்றுஞானப்பேண்ணே. 7

சாட்சியெனும்பிர்மாபிள்ளைக்குமேல
சத்தியென்றொருபெண்ணுச்சு
சூட்சுமகாரணமிரண்டினுக்குநிலை
தூலநாமென்கிறாள்ஞானப்பெண்ணே. 8

ஊமையனென்றேயறிந்துகொண்டாளந்த
வூமைபேச்செல்லாநாமென்கிறாள்
சீமையையாள்த்துசங்கட்டினாளந்தச்
சீமாட்டிதானடிஞானப்பெண்ணே. 9

பெண்ணரசானதுரத்தினமாமதைப்
பெண்ணென்றுசொல்லவுங்கேள்வியுண்டோ
மண்ணையும்விண்ணையுங்கூட்டிப்பயிர்செய்வ
மார்க்கத்தைக்கேளடிஞானப்பெண்ணே. 10

பட்டணங்கட்டிமகாராசிதுரை
பாங்குடன்செய்தவதிகாரஞ்
சட்டமுஞ்சொல்லத்தொலையாதேவிதைச்
சற்றேகேளடிஞானப்பெண்ணே. 11

அஞ்சூரஞ்சூர்வகுப்பாச்சாமதி
லஞ்சூரஞ்சுபிரிவாச்சாம்
அஞ்சூருக்கொருவூத்தாச்சாமதற்
கானகுளமுண்டுஞானப்பெண்ணே. 12

ஊரையடுத்துமலையுமுண்டாமதற்
குள்ளேயிருந்தநிலைக்காரர்
பேரையரைக்கவினிகேளுமவர்
பெருமைதானென்னடிஞானப்பெண்ணே. 13

தலைமன்னாரிலிருப்பவராமந்தச்
சட்டையப்பிள்ளைநெட்டையராம்
நிலமுமானியமுமென்னவென்றானந்த
நிசந்தெரியுமோஞானப்பெண்ணே. 14

கும்பகோணத்திலேயப்புபிள்ளையவர்
கூட்டமற்றால்வெகுவாட்டமென்று
செம்பாதிப்பங்குகேட்டுவந்தானியாயந்
தெளிவதெப்படிஞானப்பெண்ணே. 15

மூலக்குடிவன்னித்தேவரெவரவர்
மூர்க்கமுந்தீர்க்கமுமார்க்கமுண்டாம்
நாலுகரைபங்குநாமென்கிறாரிந்த
நியாயந்தெரியுமோஞானப்பெண்ணே. 16

காத்தவராயகவண்டனுக்குத்திசை
காவலுமற்றவிசாரணையும்
பார்த்துவருவதுநாமென்கிறாரிந்தப்
படிநிலைக்குமோஞானப்பெண்ணே. 17

ஆகாயமானபரஞ்சோதியவ
ரஞ்சுக்கரைபங்குந்தன்னுக்குள்ளே
சேகரமாமென்றுஞ்சொல்லுகிறாரிந்த
சேதியைக்கேளடிஞானப்பெண்ணே. 18

அம்பலக்காரருமூன்றுபேராம்பின்
மஸ்தகநாட்டுக்கணக்கனொன்றாம்
வம்புசெய்தாலந்தமுன்னோனுப்படி
வகைதெரியுமோஞானப்பெண்ணே. 19

ஒன்பதுகூத்தரும்பங்காளியெந்த
ஊருக்குமூர்களுமப்படியாம்
ஐம்பதுசேருவைக்காரருக்குமவ
னண்ணனொருவனுஞ்ஞானப்பெண்ணே. 20

கோயிற்குருக்களொருபார்ப்பான்
தெப்பக்குளத்தின்மேலேயவன்வீடு
தாவிக்கொண்டுதொடைதட்டுகிறானிலஞ்
சாருமோகேளடிஞானப்பெண்ணே. 21

செட்டியொருவனும்பங்காளியதிற்
சேர்ந்தவனாகமிகவோங்கி
கட்டியவராகனைக்கொண்டுவந்தால்காணி
யாட்சிசெல்லுமோஞானப்பெண்ணே. 22

காரியக்காரரோவஞ்சுபேராமவர்
காரியம்பார்க்கவீரஞ்சுபேராம்
மாரீசக்காரர்சமாதிகள்மூன்றுபேர்
வார்த்தையைக்கேளடிஞானப்பெண்ணே. 23

ஊழியக்காரரனேகருண்டாமவர்க்
கும்பளஞ்சம்பளநிரம்பவுண்டாம்
பாளையங்கோட்டைக்குச்சாரிவைத்தாலவர்
பதுங்குவாரடிஞானப்பெண்ணே. 24

பர்மூறுக்கொருமேன்மணியாமவன்
பார்த்தாற்சின்னப்பயல்காணும்
வேளூரானைப்பங்குத்தன்முதல்
விற்றுக்கொடுக்கிறான்ஞானப்பெண்ணே. 25

ஆறாறுகுடியுமுண்டாமதி
லந்நியக்குடிமுப்பத்தைந்துமுண்டாம்
ஓராறுபத்துக்குடிதனிநிலையம்
தெட்டுக்குடியடிஞானப்பெண்ணே. 26

இத்தனைபேருமிருந்தாலுமதி
லிரண்டேபேர்கள்சமுசாரி
அத்தனைபேரையுந்தள்ளிவைத்தாற்பயி
ராரிடுவாரடிஞானப்பெண்ணே. 27

ஒற்றேரொற்றையெருதாகுமதி
லொன்றுபரம்புமிச்சாலடிக்குங்
கற்றுடன்காரணங்கண்டாயோஞானக்
கண்கொண்டுபாரடிஞானப்பெண்ணே. 28

இரண்டுகூரைக்குடிமானியமாமதி
விட்டவிரையொட்டிரட்டியுண்டாம்
பண்டுபழகினமேன்புள்ளிக்காரனும்
பார்த்துப்போயினான்ஞானப்பெண்ணே. 29

புள்ளிக்குரைச்சலும்வாராமன்முன்னே
போட்டபலனுங்கையாடாமற்
கொள்ளையிடச்சொல்லியோலைவந்தாலிது
கொடுமைசொல்லடிஞானப்பெண்ணே. 30

வந்தவிதியென்றிருந்தாலும்வசக்
கட்டுநிலுவையுங்கேட்கிறான்
இந்தமகிமையன்றானோவிதற்
கென்னசுகமடிஞானப்பெண்ணே. 31

தருநிச்சிக்கிடக்கிறபெட்டியிலேயேரித்
தண்ணீர்பாச்சவுஞ்சொல்லுகிறான்
வரிகொடுக்கிறதில்லையென்றாற்பூசை
மாட்டுகிறானடிஞானப்பெண்ணே. 32

ஊரிற்குடியதிருக்கவொட்டானிருந்
தூழியஞ்செய்யவும்வேலையிட்டான்
நேரமில்லையென்றுசொன்னாலுமவன்
றெண்டம்பிடிக்கிறான்ஞானப்பெண்ணே. 33

அந்தவிருபத்தோராயிரத்திருநூற்
றுக்கலநெல்லுங்கண்டுமுதல்
வந்ததுண்டோவதின்முன்றத்தொருபங்கு
வாரம்பிடிக்கானடிஞானப்பெண்ணே. 34

மிச்சமிருந்தநெல்லுத்தொகையில்வாரம்
விண்ணுநோய்கொண்டபேயனுடன்
அச்சுதன்சேயனுந்தூங்கக்கோணானுமா
யழித்துப்போட்டாரடிஞானப்பெண்ணே. 35

நிலம்விளைந்ததுங்காணீரோவதிற்
செலவழிக்கதும்பாரீரோ
அலமந்துதிரியாமலரு
ளானந்தஞ்சேரடிஞானப்பெண்ணே. 36

எண்சாணீளமொருவீடாமதி
லெட்டொருபீற்றன்மலக்கூடாம்
பஞ்சாயக்காரரைந்துபேருந்தெய்வப்
பதியிதென்கிறார்ஞானப்பெண்ணே. 37

தேகமெனுஞ்சிவவாலயமாவதிற்
சென்னிசிறுவாயிற்கோபுரமாம்
காகமனவிரண்டுகொக்கோடுங்
கையாங்கேளடிஞானப்பெண்ணே. 38

உண்ணாக்கென்றகொடிமரமாமதிற்
கோபுரசந்திரபுட்கரணி
அண்ணாக்கென்றவலப்புறத்திற்கண்ட
தக்கினிதீர்த்தமாம்ஞானப்பெண்ணே. 39

நாற்பத்துமுக்கோணமண்டபமாமதி
நடுவிருக்குதாஞ்சிங்காரம்
பார்ப்பதுசக்கரக்கோட்டையிலேயிந்தப்
படியிருக்குதாம்ஞானப்பெண்ணே. 40

பீடமிருப்பதுமையத்திலேபலி
பீடமிருப்பதுங்குய்யத்திலே
மாடமிருப்பதுசிவாலயத்தின்மணி
விளக்கிருக்குதுஞானப்பெண்ணே. 41

இப்படியான திருக்கோவிலதிற்
கெப்படிவாயலிருக்காதோ
அப்படியென்றுதெரியாமற்றெறிந்
தலைகுருராடிஞானப்பெண்ணே. 42

பூட்டைதிறப்பதுங்கையாலேமனப்
பூட்டைத்திறப்பதுமெய்யாலே
வீட்டைத்திறக்கமுடியாமல்விட்ட
விதியிதென்கிறார்ஞானப்பெண்ணே. 43

வாசலினாலயாருமேல்வாசலந்த
வாசலினாலிறுவாசலுண்டு
நேசமுடன்றிருவாசலிற்பூட்டி
நெருக்கம்பாராடிஞானப்பெண்ணே. 44

அக்ஷரமாமௌனக்ஷரமாமிது
வானல்நல்லதிறவுகோலா
முச்சிதமாகத்திறந்தாலேயந்த
உச்சிவழிகாணும்ஞானப்பெண்ணே. 45

கண்ணாலேமனக்கண்ணாலேயதைக்
கீண்டாலேவழியுண்டாகும்
பெண்ணைசைதனையடுக்காமல்வழி
பேணிப்பாராடிஞானப்பெண்ணே. 46

பார்த்துநடப்பதுமேல்வாசலந்தப்
பாதையறிவதுமெவ்வாறு
மாத்திரைநேரம்பிரியாமற்பாதை
மார்க்கங்கேளடிஞானப்பெண்ணே. 47

எருக்கிடந்தகுழிதாண்டியதி
விரண்டெறிறக்கடைமேற்றூண்டி
கருக்கிடைக்குமடையாளமதைக்
கண்டுகேளடிஞானப்பெண்ணே. 48

மாயனாண்மையைகாணீரோ வன்னி
மாயிருப்பதுந்தோணீரோ
நேயமதுகடந்தப்பாலேயற்று
கோணப்படியடிஞானப்பெண்ணே. 49

கோணத்தினின்றுமயங்காதே சுழிக்
காற்றையடங்கிச்சிணுங்காதே
வீணுக்கலைந்துதியங்காதேதூல
வேடத்தைத்தள்ளடிஞானப்பெண்ணே. 50

தூலத்தைவிட்டுவிடாயாகி லதிற்
சூட்சத்தைக்காணமுடியாது
பாலத்திலேறிநடந்தாக்காற்பெரும்
பாதையிதல்லவோஞானப்பெண்ணே. 51

பாதையானபெரும்பாதை கிட்டப்
பட்டணமுண்டொருவட்டமதாய்
நாதமுங்கீதமுங்கேட்குதடிதெய்வ
நாயகன்சந்நிதிஞானப்பெண்ணே. 52

சந்நிதியென்னடிகண்டதுண்டோ கண்டாற்
றத்துவம்பேசத்திறமுமுண்டோ
முன்னேமுப்பாழுங்கடப்பதுண்டோவதின்
முச்சுடருண்டடிஞானப்பெண்ணே. 53

முச்சுடர்வட்டமேமச்சரமா மது
மூக்குநுனியதுசுழிமுனையா
மச்சுடர்வட்டத்திருந்தவனேகுரு
வானந்தநந்தியாஞானப்பெண்ணே. 54

நந்தியிருந்ததுவன்னிவட்ட மதி
னுட்டமபுருவமத்தியானதிட்டஞ்
சந்திரனுங்கதிர்சூரியனுமந்தத்
தலத்தில்நின்றனர்ஞானப்பெண்ணே. 55

நாதவிந்தல்லோநாள்யோனி தச
நாதவிந்தல்லோவெழுதோற்றம்

காதவிந்தா லுடலுயிரும்பர
நந்தியைப்போற்றடிஞானப்பெண்ணே. 56

விந்துவிருந்ததலந்தனிலே குரு
நந்தியிருந்தார்கொலுவாகி
சிந்தைதெளிந்துமகாரம்வைத்தாலந்தச்
சீமானைக்காணலாம்ஞானபபெண்ணே. 57

சீமான்கிட்டவடுத்தாக்கான் மேலைச்
சீமைநமக்குக்குடியாச்சு
ஆமாமென்றுகும்மிப்பாடியரு
ளானந்தஞ்சேரடிஞானப்பெண்ணே. 58

ஆனந்தமானதலந்தானே அது
அத்துவிதமானதலந்தானே
தானந்தமானசதாசிவத்தைப்போற்றித்
தாண்டிக்கும்மியடியுங்கடி. 59

ஞானமாமாயிரநாற்றெட்டிதழ்ப்பீடம்
நாட்டமாஞ்சந்திரனார்வீடு
மோனமிருந்தமகாரமவுனத்தை
மூட்டிக்கும்மியடியுங்கடி. 60

குண்டலிவாசியகாரமடி பிடர்க்
கண்டமதிலேயகாரமடி
உண்டுசுழிபின்மகாரம்வைத்தாற்சிவ
யோகமிதல்லவோஞானப்பெண்ணே. 61

ஓங்காரமானபிரணவத்தால் எங்கு
முயர்ந்தசோமகலைசிறந்தாள்
றீங்காரமானபராசத்தியைநீங்கள்
சேர்ந்துகும்மியடியுங்கடி. 62

பூரகமுப்பத்திரண்டாகு மனம்
பூரணகும்பமிரட்டியதாய்
கூரவேரேசகமெண்ணிரண்டாமந்தக்
குறிப்பறிந்துகொள்ஞானப்பெண்ணே. 63

பிங்கலையால்றிரேசகத்தை வளர்
பூரகந்தன்னிலிடத்தூகி
நங்களைநந்தியிற்கும்பிக்கவேசிவ
நாட்டமிதல்லவோஞானப்பெண்ணே. 64

அறிந்துகொள்ளுமெழுத்தோடே பௌ
ரணைமுதலமாவாசிமட்டும்
மறந்திடாமற்செய்மாத்திரையின்படி
வாசிவசமாகும்ஞானப்பெண்ணே. 65

காலாலேகனலேற்றுங்கடி சுழி
மேலேகொண்டமுதூட்டுங்கடி
மூலாதாரத்தலங்கேசரமென்று
முழங்கிக்கும்மியடியுங்கடி. 66

சார்ந்துகொள்ளடிசேகரத்தை முதற்
றன்னையறியலாந்தானாகக்
கூர்ந்துமூலக்கணபதிபாதத்தைக்
கும்பிட்டுக்கொள்ளடிஞானப்பெண்ணே. 67

நவ்வெழுத்தேபிர்மனாகு மதில்
நாரணன்மவ்வெழுத்தானானே
சிவ்வெழுத்தேதெய்வருத்திரனின்னுஞ்
செப்புவன்கேளடி ஞானப்பெண்ணே. 68

செப்பவேவவ்வுமகேசரனாம் வட்டஞ்
சேர்ந்தவுபசாரம்சதாசிவனாம்
தைப்பிலாவைந்தெழுத்தாலேசராசரந்
தங்கியிருந்ததுஞானப்பெண்ணே. 69

வாலையினட்சரமூன்றாகும் அதை
வாய்கொண்டுசொல்பவரார்காணும்
மேலொன்றுங்கீழொன்றுமத்திபமுங்கூட்டி
விரைந்துபாரடிஞானப்பெண்ணே. 70

விரைந்துசொல்லுவன்மூன்றெழுத்தாற் சதம்
விரிந்துதானாயிருண்டாச்சு

தெரிந்துகண்டவர் தங்களுக்காவலே
தீட்சையிதல்லவோஞானப்பெண்ணே. 71

தீட்சையெனுஞ்சிவசக்கரத்தின் மையந்
தேவியெழுத்தேநிறுநிறுத்திக்
காட்சியுடன்சிவபூசைசெய்தாற்சித்தி
கைவசமாமடிஞானப்பெண்ணே. 72

கள்ளுண்டுதள்ளுண்டுநில்லாதே பின்பு
கஞ்சாவுறக்கமுங்கொள்ளாதே
உள்ளுண்டுசோமக்கலேயாதிபானத்தை
யூட்டிக்கும்மியடியுங்கடி. 73

கும்மியடிப்பெண்கள் அம்பலத்தையரைக்
கூட்டியமுதங்குடியுங்கடி
அம்மென்றுமும்மென்றுஞ்சொல்லாமல்நிஸ்ற
அத்வீதம்பாரடிஞானப்பெண்ணே. 74

அத்வீதமாவதுக்காதியடி மதி
ஆயிரத்தெட்டிற்பூசைபண்ண
முத்திதருஞ்சோமப்பாலேயனுதின
மூட்டிக்கும்மியடியுங்கடி. 75

மூட்டுவதென்னதிரிகோண வட்ட
மூலத்தில்குண்டலிவாசியினல்
நாட்டுவன்பூரணநாலேயுங்கட்டிஞ
னியாயமிதல்லவோஞானப்பெண்ணே. 76

கட்டிக்கொள்விந்துவைத்தள்ளாதே சுழிக்
காற்றையடக்கிப்பொருதாதே
சுட்டிமனப்பொருதுருதேகாமச்
சோம்பலேத்தள்ளடிஞானப்பெண்ணே. 77

சோம்பலுந்தூக்கமுமாகாதே அன்ன
சுகியுஞ்சோகமுங்கொள்ளாதே
சாம்பசதாசிவநாட்டத்திலேநின்று
சார்ந்துகும்மியடியுங்கடி. 78

கைவசமாமதுஷ்டிவித்தை ஞானக்
கற்பமும்வந்து லபிக்குமடி
தெய்வமிவரென்று சொன்ஞ்ரேநல்ல
சித்தருமுத்தருஞானப்பெண்ணே. 79

யோகத்துக்காதியுமைதீட்சை மற்ற
யோகத்துக்கெல்லாமுதற்றீட்சை
போகத்தைக்கைவிடலாகாதேசுத்திப்
பூசையைவேண்டிக்கொள்ஞானப்பெண்ணே. 80

வேண்டிக்கொள்விந்துமுதனுதஞ் சத்தி
மேவுஞ்சிவத்துடனேபரமாம்
தாண்டிக்கொளிந்தவகையாறும்யோக
சாதகசாக்கிரம்ஞானப்பெண்ணே. 81

சாக்கிரம்விந்துக்குமேலண்டமா மதைச்
சார்ந்திடுநிற்குணநிஷ்களந்தான்
பார்க்கினிராதாரமலத்தைஅதைப்
பாராவிடமந்தமாம்ஞானப்பெண்ணே. 82

அந்தமடியிந்தமேலாறுங் கண்டே
ஆரறிவாரடிஞானவழி
சிந்தைதெரிந்தபெரியோரைக்கண்டு
சேவித்துக்கும்மியடியுங்கடி. 83

சேவிப்பதுந்தவனந்தியடி யோக
மாய்நிற்பதுவிந்துநாதமடி
ஆவிக்கிசைந்தசதாசிவசாக்கிரம்
அவ்விடமாமடிஞானப்பெண்ணே. 84

அவ்விட்டேயுவ்விட்டேமேற்சுழியிற் சுவடி
அங்கியைவிட்டுக்காலாலே
மவ்விட்டுநாதவிந்துட்பொருளைக்கொண்டு
வாழ்த்திக்கும்மியடியுங்கடி. 85

முழக்கமென்னபிராணமய மதை
மூட்டுச்சமாதியி விரேசகத்தை

விளக்குமாகுமிரவிசாந்திநித்தம்
வேண்டிக்கும்மியடியுங்கடி. 86

பார்க்குஞ்சுழிமுனைகாணாரே யது
மூக்குநுனியெனறறியாரே
மார்க்கமறிந்தபெரியோரைக்கண்டு
வாழ்த்திக்கும்மியடியுங்கடி. 87

வாழ்த்தியடிபெண்ணேசேகரத்தை வினை
மாற்றியடிபெண்ணேபூரணத்தை
தூற்றுமாகாமியசஞ்சிதத்தை
தொலையைதொலைத்துக்கும்மியடி. 88

பாசமற்றவிடம்கேசரமாம் ஒரு
பாதியினின்றிடயோகமுமாம்
நேசமற்றார்பிர்மஞானசமாதியு
நிருவிகற்பமாம்ஞானப்பெண்ணே. 89

கற்பமடியிதுமெய்யாகு மற்றைக்
கர்மமெல்லாமிகஅற்பமடி
தற்பரானந்தசதாசிவமோனத்தைச்
சார்ந்துகும்மியடியுங்கடி. 90

பாசத்தைசொல்லுமுடலாக அந்தப்
பசுவைசொல்லுமுயிராக
நேசத்தினிற்பதுயாதுபிரம
நிஷ்டையென்பாரடிஞானப்பெண்ணே. 91

தேகத்துக்காதியாமைம்பூத மதைச்
செபனுக்காதியாம்விட்சேபம்
மோகத்துக்காதியைமாயையைபின்னும்
முழுதுங்கேளடிஞானப்பெண்ணே. 92

இன்னமுண்டவியாகிருதற்கும்
இரணியகர்ப்பன்விஷ்ணுவுக்கும்
மின்னியவிராட்புருடனுக்குமின்னு
மேலுண்டுகைவல்லியஞானப்பெண்ணே. 93

சைதன்னியஸ்வரூபமேபிரமமடி அந்த
சாட்சிக்குப்பிரதிபிம்பமடி
மெய்நின்றசுத்தவறிவாலேபிரதி
பிம்பத்தைத்தள்ளலாம்ஞானப்பெண்ணே. 94

ஆமடியிந்தப்பதந்தானே கண்டா
லாதியந்தமுஞ்தானே
நாமடிவாசிகுதிரையினால்மிக்க
நல்லகதியடி ஞானப்பெண்ணே. 95

சாதிகுதிரைவலுவேகஞ் சரு
தாருஇருக்கின்றமேலாக
வீதிக்குவீதிசாரிவைத்தாற்பரி
வேடிக்கைபார்க்கலாம் ஞானப்பெண்ணே. 96

கட்டுப்படாதக்தவச்சுமட்டம் அது
காலோபன்னிரண்டாகையினால்
எட்டுக்கயிற்றினாற் கட்டிசகொண்டாலிது
மட்டுப்படுமடி ஞானப்பெண்ணே. 97

கட்டுப்படுமோமலவாயில் நடு
ண்மயத்தின்குண்டலி வாசியினால்
எட்டையுநாலையுங் கட்டியேபோற்றிடி
லேறிநடததலாம ஞானப்பெண்ணே. 98

சூட்சக்குதிரையடங்காது சுழிக்
கோட்டுக்குட் செல்லமுடியாது
மூச்சுக்காயிரங் காதவழிமிக
முந்திநடக்குதாம் ஞானப்பெண்ணே. 99

குதிரைகட்டியலாயத்திலே மனக்
கோட்டையிலேசந்தைப் பேட்டையிலே
எதிரிதான்வந் ததட்டுகிறானதை
யேதென்றுகேளடி ஞானப்பெண்ணே. 100

காமனெனவருக்கு மூததவனா மவன்
கற்றிடும்வித்தைகள் மெத்தவுண்டாம்.

தாமதமானக்குரோதனும் லோபனுந்
தம்பியாங்கேளடி ஞானப்பெண்ணே. 101

மோகமதிரண்டு பிள்ளைகளாம் ஒரு
மூர்க்கமகசியக் காரனொடு
சேகரவிரிஷை டம்பனுஞ்சம்பனும்
சினேகிதமாமடி ஞானப்பெண்ணே. 103

சிநேகிதனுக்கேற்ற வுரவாளி பொல்லாத்
தீயவனுமோ ராங்காரி
அனேகத்தைச்செய்யு மதியில்ரோஷனு
மத்தைமகனடி ஞானப்பெண்ணே. 103

பெண்ணேகேளுபதின் மூன்று
பேர்களுண்டு பகையாளி
ஒன்றேயொன்று வசமானாலவ
ரொடுங்குவாரடி ஞானப்பெண்ணே. 104

ஒடுக்கமில்லையிவராலே பல
ஓட்டமெல்லாமனக் கோட்டையிலே
படுகளத்துக்கு மேய்ந்துவரப்பசு
பற்றுகிறாரடி ஞானப்பெண்ணே. 105

பாம்பிருக்குது புற்றுக்குள்ளே சக
பந்தமிருக்குது நெஞ்சுக்குள்ளே
வீம்பையடக்கி யுயர்ந்தாக்கால் பரி
வேடிக்கைபார்க்கலாம் ஞானப்பெண்ணே. 106

பித்துப்பிடித்தமனக்குரங்கு வெறிப்
பேயும்பிடித்துக்கொண் டாட்டமிட்டால்
அத்தையடக்க மருந்துசெய்தாற்பரி
யன்றுநடத்தலாம் ஞானப்பெண்ணே. 107

நடத்தலாமோமனவாசி ஒரு
நாலைந்துபித்தலை மூடாமல்
திடத்தினன்மனஞ் சித்தானுற்சித்தந்
தெளிந்துகொள்ளலாம் ஞானப்பெண்ணே. 108

தெளிந்த்சித்தகம்பூட்டியதிற் சேணத்
தேறுமறிவையதிற் சேர்த்துக்
குளிர்ந்துஞானவைராக்கிய குறடா
கொண்டுமோட்டடி ஞானப்பெண்ணே. 109

மூலத்தெருவிலொருபாச்ச லந்த
முச்சந்திவீதியி லோர்பாய்ச்சல்
மேலைத்தெருவி லொருபாய்ச்சற்பரி
வேடிக்கைபார்க்கலாம் ஞானப்பெண்ணே. 110

இந்தவிதங்களறியாமல் மணி
மகதிரமென்று திரிகின்றார்
அந்தரமான வெழுத்தறிந்தால் மணி
மந்திரமல்லவோ ஞானப்பெண்ணே. 111

மௌனமந்திரங்களினாலே தங்கள்
வாய்தனைமூடித் திரிவார்கள்
புவனசாரம் புசிப்பார்க்குமதி
போசனமாகுமோ ஞானப்பெண்ணே. 112

தூயென்றுசொல்லுவார் சொற்பனத்திற் காம
சன்னதம்வந்தா னினைப்பாரோ
வாய்கொண்டுவேதம்படித்தாலுஞ் சுத்த
மௌனந்தங்குமோ ஞானப்பெண்ணே. 113

தாடிவளர்த்துச் சடைவளர்த்து நல்ல
சந்நியாசியென்றொரு வேடமிட்டு
ஓடித்திரிந்தவிளையாட்டை யிங்கே
யொப்புவதாரடி ஞானப்பெண்ணே. 114

பேசாதிருக்குமிடம்பார்த்து அதைப்
பெற்றேயிருப்பது மந்திரமாம்
ஆசானென்றுவுபதேசமிட்டாற் குரு
வல்லவென்றுகும்மி யடியுங்கடி. 115

சொற்குறுவாலே கதியாமோ பொய்யைச்
சொல்லுவார்தங்க ளுறவாமோ

சற்குருவானவரைச்சேர்ந்தே யவர்
தன்சொல்லைக்கேளடி ஞானப்பெண்ணே. 116

நானென்றவாணவம்பேசார்க ளல்ல
நானென்றுங்கானென்றுஞ் சொல்லார்கள்
தானென்றியாவையுங் கண்டாரேநல்ல
சற்குருவாமடி ஞானப்பெண்ணே. 117

குருவிருப்பது முள்ளத்திலே மனக்
கோணலறுப்பதுந் தன்னுக்குள்ளே
பொருளிருப்ப தறியாமற்புடம்
போடுவதெப்படி ஞானப்பெண்ணே. 118

வாதஞ்செய்ய வறியாமல் ரச
வாதஞ்செய்கிறே மென்றுசொல்லிச்
சூதங்கெந்திபுடத்திலிட்டா லதிற்
சொர்ணம்விளையுமோ ஞானப்பெண்ணே. 119

லிங்கமுருக்க வலவார்கள் சாதி
லிங்கமிருப்ப தறியாமல்
வங்கமுந்தங்கமுஞ் சேர்த்துருக்கினால்
பங்கமிதல்லவோ ஞானப்பெண்ணே. 120

பாஷாணங்குகை தன்னில்வைத்துப்
பாலூட்டி குகைமூடி
யீசானிபப்புட மிட்டாலுமதி
விருப்பதென்னடி ஞானப்பெண்ணே. 121

காரணமானது காரியமாமதைக்
கட்டவறியார் முழுமூடர்
பூரணமென்று திரிந்தாலுமதிற்
புண்ணியமுண்டாமோ ஞானப்பெண்ணே. 122

முப்பூவென்று திரிவார்கள் அந்த
முப்பூவந்தவகைகாணார்
அப்பூவென்று மறிந்தாற்சித்தி
யாமென்றுகும்மி யடியுங்கடி. 123

சாரத்தைக்கட்டவறியார்கள் கடுஞ்
சாரத்தைநீற்றினஞ் செய்யாரே
வீரத்தைப்பூரத்தைச் சேர்த்ததினாலது
வீணல்லவோசொல்லு ஞானப்பெண்ணே. 124

கோரவித்தையை யறியாமல்லோக
வேஷத்தினின்று மலைவார்கள்
கோசபீசமறிந்தாலே வாதந்
கேசரமாமடி ஞானப்பெண்ணே. 125

வாதத்திறவுகோல் காணாரே பஞ்ச
பூதச்சரக்கையுந் தோணாரே
யேதுக்குகண்புகைந் தூதுகின்றாரிதை
யேதென்றுகேளடி ஞானப்பெண்ணே. 126

தாருசுசுன்னமுடிந்தாச்சு அதைச்
சோதிக்கவெட்டரை மாற்றாச்சு
பொருளைச்சொல்லிப் பணம்பறிப்பாரிவர்
பொய்க்குருவல்லவோ ஞானப்பெண்ணே. 127

கவனகுளிகைமுடிந்தேனென்பார் ஊசிக்
காந்தத்தைக்கின்னமுஞ் செய்தேனென்பார்
புவனவாதல் புரட்டாலேயவர்
பிணிமுக்கிறாரடி ஞானப்பெண்ணே. 128

பிழைக்கமுத்தியறியாமற் சென்ம
பூர்வக்கியானமுந் தெரியாமற்
றழையைத்தின்று சருகாகித்
தயங்குகிறாரடி ஞானப்பெண்ணே. 129

தயங்கியென்னபலனாமோ மனஞ்
சாதித்துநிற்கத் திறமாமோ
மயங்கிடாதேவமுலைமகத்துவம்
வருவதெப்படி ஞானப்பெண்ணே. 130

உப்பையறிந்தவனேவாதி சகத்
துப்பையொழிந்தவனே யோகி

தப்பிலேயேபூமி நாதமகிமையைச்
சார்ந்துபாரடி ஞானப்பெண்ணே. 131

வீட்டிலிருக்குதொருமூலம் வெளிக்
காட்டிலிருக்கு திருமூலம்
மாட்டிலிருக்கும் பெரியோர்க்குரச
வாதமிதல்லவோ ஞானப்பெண்ணே. 132

தோணுதென்றசரக்கெடுத்துக் கருஞ்
சூராசூரையில்வைத்தெடுப்பச்
சாணுன்கண்டபொருள்போலே சித்தி
தானென்றுகும்மி யடியுங்கடி. 133

நெல்லியிருக்குது நாட்டுக்குள்ளே கரு
நெல்லியிருக்குது வீட்டுக்குள்ளே
கொள்ளிமலைக்குத் திரிந்தாலும் குரு
கொண்டுவருவாரோ ஞானப்பெண்ணே. 134

காயாம்பட்டிக்குளத்துக்குள்ளே வெள்ளை
சாயாம்வேறு முளைத்திருக்கும்
வாயாற்றின்னு நிமிர்ந்தாக்காலுடல்
மாயாதல்லவோ ஞானப்பெண்ணே. 135

கற்பநிலைபறித் தெண்ணுமல் வெறிக்
கஞ்சாவுண்டு விழிப்பார்கள்
அற்பர்குகைமலை சென்றாலும்வஸ்து
அறியலாகுமோ ஞானப்பெண்ணே. 135

கொங்கணர்சொன்ன கடைக்காண்டம் அதிற்
சங்கையறிவது பிர்மாண்டம்
எங்கள்குருசட்டமாமுனியா
ரிருந்தாறும்பாரடி ஞானப்பெண்ணே. 137

நூறிலுறைத்ததுமெய்ஞ்ஞானந் திரு
மூலருணர்ந்ததுவே ஞானம்
பூரணகும்பமுனிசொன்ன சூத்திரம்
பூட்டகம்பாரடி ஞானப்பெண்ணே. 138

திட்சையின்மச்ச முனிதீச்சையவர்
செப்பினஞான மொருநூறும்
தாய்ச்சிவராது பெரியோரைக்கண்டு
காட்சிகேளடி ஞானப்பெண்ணே. 139

ரேசகபூரக கும்பத்தால் வாசி
நேரிட்டுசெய்வது மாசையடி
ரேசகமாகிய வத்விதபிர்மத்தைக்
கிட்டிகும்மி யடியுங்கடி. 140

உப்பைவிடுவது மாசையடி யன்ன
மோர்பொழுதுண்பது மாசையடி
செப்பலொண்ணாத மனோன்மணிதேவனைச்
சேர்ந்து கும்மியடியுங்கடி. 141

வாசலிலேயொரு மேல்வாச லந்த
வாசலிலேசிறு வாசலுண்டு
நேசமுடன்சிறு வாசலிற்பூட்டி
நெருக்கம்பாரடி ஞானப்பெண்ணே. 142

தேசங்கள்போவது மாசையடி குல
தெய்வமுண்டெனபது மாசையடி
நேசமெம்பிர்ம ஞானசோதியை
சேர்ந்து கும்மியடியுங்கடி. 143

சமயபேதமு மாசையடி கெங்கா
ஸ்தானபூசையு மாசையடி
மமதையற் றிருக்கின்மமதையை
வாழ்த்தி கும்மியடியுங்கடி. 144

பால்கறவாப்பசு தள்ளுங்கடி பதி
பாசத்தையும்விட்டுத் தீருங்கடி
மேல்விளங்கிய தற்பரசோதியை
வேண்டிகும்மி யடியுங்கடி. 145

தத்துவகுப்பையைத் தள்ளுங்கடி வேத
சாஸ்திரப்பொத்தலை மூடுங்கடி
முத்திதருஞான வஸ்துவைவாவென்று
மூட்டிகும்மி யடியுங்கடி. 146

ஆறுதாரமுந் தொல்லைபடி யதற்
கப்பாலேயொன்று மில்லையடி
சீராய்நின்ற நிலைபார்த்துப் பெண்கள்
சேர்ந்துகும்மி யடியுங்கடி. 147

சித்தர்சொற்படி சித்தாந்தங்கண்டு
தெளிந்துகொள்ளடி வேதாந்தம்
தத்துவமாகிய வற்பத்திருக்குமச்
சார்புகேளடி ஞானப்பெண்ணே. 148

சார்புதானென்னடி வேதாந்தஞ்சொல்லுந்
தத்துவந்தானிவ் வகையுடனே
காரணாதி யவஸ்தைநிலைகளின்
கணக்குரைக்கிறேன் ஞானப்பெண்ணே. 149

உரைக்குந்தத்துவ நாலேழிற்கண்
டோதுஞ்சித்துரு நாலாறும்
மறைக்குட்சொல்லிய சித்துருநாலாகு
மகிமைபாரடி ஞானப்பெண்ணே. 150

மகிமையாகிய தொம்பதமாமதில்
வந்தவுபாதி யுணர்த்துகிறேன்
தீகைமையென்னமுன் சொன்னவசித்திரு
தன்செயல்கேளடி ஞானப்பெண்ணே. 151

வாசன்மிகுந்த உடம்போடு பிராண
வாயுவோடிந்திரிய மானதொன்று
காசலைபாமதி சேர்ந்துவளர்ந்த
காரணநாலடி ஞானப்பெண்ணே. 152

காரணமென்ப திவையேழும் வந்து
கலந்ததாமடி தொம்பதத்தைத்
தாரணதொம்பத மானதுரியத்திற்
றன்னுடலாச்சுதா ஞானப்பெண்ணே. 153

தன்றூலமாகிய சாக்கிரத்தைத் தன
தாகவிருந்திடு மாத்துமற்குப்
பின்சொல்வுதாம்விஸ்வ னென்றபிமானப்
பேரல்லோசொல்லடி ஞானப்பெண்ணே. 154

பேர்பெறுமெந்திர வுபாதியுடன் கூடப்
பெற்றிடுசூட்சும சொற்பனத்தின்
சார்பிலிருந்த துரியற்குநாமமுஞ்
சைதஞுமடி ஞானப்பெண்ணே. 155

ஆகும்பிராணனல்ல வாயுவுடன் கூடி
யடக்கமூலத் துடன்சேர்ந்து
சேகரமாவந்த நாததுரியத்தை
சேர்த்திடிற்காரண தேகமடி. 156

சேர்ந்தவவத்தை சுழுத்தியடி யதைச்
சேர்ந்தவனும் பிரக்ஞனுமடி
கூர்ந்தமூன்றையுங் கண்டுதுரியத்தைக்
கும்பிட்டுக்கும்மி யடியுங்கடி. 157

கும்பிட்டுதொம்பதச் சித்தார்த்தங் கண்டு
கூறியஞான மிதுபோல
வம்பிட்டுதற்பத மானவிவேகத்தை
யறியச்சொல்லுவேன் ஞானப்பெண்ணே. 158

அறிவதென்னடி தொம்பதமாம்பொரு
ளானவுபாதியு மானதுபோற்
சருவதற்பர மானபொருளுக்குத்
தன்னுடசீவன் துரியமடி. 159

சர்வஞ்ஞன்சருவக் காரனுஞ் சரு
வேந்திரியாமி சர்வேஸ்வரனுஞ்
சர்வசிருஷ்டி சர்வதிதி சர்வ
சங்கரனும்பேராம் ஞானப்பெண்ணே. 160

பேரானதென்ன விவையேழு மிகப்
பேசிடில்வாதந் துரியமடி
தேராவுபாதியைப் பெற்றதினன் முக்தி
தூஷணமுண்டாச்சு ஞானப்பெண்ணே. 161

தூஷணச்சீவ னிவையேழுங் கண்டு
சொல்லும்பரனுக் குடலாச்சு
சாஸ்விதமென்ற தானத்தினற்சாயா
கிரகமென்றுபேர் ஞானப்பெண்ணே. 162

சாக்கிரந்தன்னை தானென்றுசொல்லி யப்பால்
தானபிமானிதருந் தாக்காற்.
சேர்க்கவிராட்டெனச் சொல்லுவார்நாமந்
தெரிந்துகொள்ளடி ஞானப்பெண்ணே. 163

தெரிந்தமூன்றனுபாதியுமா மதிற்
தேர்ந்தபரன்பர சொப்பனமாம்
பிரிந்திடாதபிமான னிரணிய
கற்பனென்பாரடி ஞானப்பெண்ணே. 164

பாருமிதிலொரு பாதியுடன்
பானுக்கல்லவோ பார்சுழுத்தி
சேரும்பொழுது வியாகிருதனெனச்
சிந்தையிற்காணடி ஞானப்பெண்ணே. 165

காணடிதற்பதசத்தார்த்த மதைக்
கண்டுதெரிந்த வகைபோலே
யூணடிஞானசிவ பதார்த்தத்தி
லுண்மையைக்கேளடி ஞானப்பெண்ணே. 166

உண்மையாந் தற்பரநற்றுரியங் கண்டு
முற்றுப்பாராதொரு தோஷமதாய்
தன்மைச்சிவப்பதசித்தனுக்குப் பரன்
தன்னுடலாச்சுது ஞானப்பெண்ணே. 167

ஓதும்பாரம்விஸ்வகிராசமடி யுப
சாந்தமெனும்வகை மூன்றிலொன்றைச்
சாதனைசெய்தசிவத்துக்கல்லோ பர
சாக்கிரமாகுமே ஞானப்பெண்ணே. 168

ஆகும்பொருள்சிவ சாக்கிரத்தையபி
மானிதிருந்த சிவதுரியம்
சேகரமாயிடிற் சொலிதையென்று
செப்பிடும்வாக்கிய ஞானப்பெண்ணே. 169

வாக்கியமாம்விஸ்வகிராயமடி யந்த
மார்க்கமென்னசிவ சொப்பனத்தைப்
பாக்கியனபிமானிடத்திற் பிரசா
பத்தனென்றுசொல் ஞானப்பெண்ணே. 170

சொல்வதும்மென்னவுபசாந்தஞ் சிவ
சுழுத்திதானென் றிருந்தாக்கால்
நல்லதும்பொற்புறு சாந்தமென்றாலது
நாமமதல்லவோ ஞானப்பெண்ணே. 171

நமச்சிவதுரியத்திலடி யபி
மானமிழுந்து தனித்ததினால்
நேமமிதல்லவோ வாதிதுரியத்தி
னிலைமைகண்டிலா ஞானப்பெண்ணே. 172

கண்டறியாததுமுற்றுறிய மதைக்
கண்டுசுழன்றுமே லானதடி
பண்டுபிர்மவானந்த சொரூபத்தைப்
பணிந்துகும்மி யடியுங்கடி. 173

பணிந்தஞானமதுதாண்டி பர
மானந்தமான திதுதாண்டி
துணிந்துபாருமானந்த சொரூபனைத்
தொழுதுகும்மி யடியுங்கடி. 174

தொழுதுகொள்ளுஞ்சுகஜீவ பர
சுத்தப்பொருளு மிதுதாண்டி
பழுதிலாதசொரூபக் குருவுடைப்
பாதமிதல்லவோ ஞானப்பெண்ணே. 175

பாதமாகியதொப்பதாம் அதிற்
பாதமுந்தற்பத மானதடி
பேதவுபாதி யவத்தைகளும்பல
பேர்களுமானது ஞானப்பெண்ணே. 176

பேருக்குச்சார்ந்த துரியமடி யதைப்
பேதவுந் தற்ப்ரகாசமடி
யாருக்குங்கண்டறி யாதபொருளைக்கண்
டகந்தெளிந்து கும்மியடியுங்கடி. 177

முத்திபெறுந்தேவ தத்தனைப்போற்சக
முழுதுந்தன்மய மானதடி
நந்தியேவிட்டு விடாதேவிலக்கண
ஞாயமிதல்லவோ ஞானப்பெண்ணே. 178

ஞானமாமோட்ச மிதுதாண்டி மற்ற
ஞாயமெல்லா மனமாயமடி
தானசங்கற்ப விகற்பசமயமுந்
தன்மயமானது ஞானப்பெண்ணே. 179

தூரதூரமு மில்லையடி யதைச்
சொல்வதுங் கேட்பதுமில்லையடி
தாரார்பிரம நிலைபார்த்துப்பெண்கள்
தாண்டிக்கும்மி யடியுங்கடி. 180

அண்டமும்பிண்டமும் பாழாச்சே அதுக்
கப்பாலும்பெரும் பாழாச்சே
உண்டில்லையென்று பராபரப்பிரமத்தை
யுவந்துகும்மி யடியுங்கடி. 181

சொல்லினுங்கல்லினு நில்லாதே பிர்ம
சோதியையாதியைத் தூவெளியை
வல்லததற்பிர காசமவுனத்தை
வகையறிந்துகொள் ஞானப்பெண்ணே. 182

பிருதிவியில்தூய்மை மயமாச்சே யதில்
பேதம்பல வுண்டாச்சே
சுருதிமுடிவைக் குருசொல்லுவாரந்த
சூட்சந்தெரியுமோ ஞானப்பெண்ணே. 183

அறிந்துகொண்ட பெரியோர் பாதங்க
ளர்ச்சனைசெய்து கும்மித்தமிழைப்
பிரிந்திடாமனூற் றெண்பத்தைந்துகண்ணி
பேசினேன்சற்குரு தாள்வாழி. 184

சற்குருபாத மிகவாழி வாலை
சாமிதமிழ்நிதந் தான்வாழி
நற்குணனிக்கும்மித் தமிழ்கற்றவர்
ஞானநெறியே மிகவாழி. 185

ஞானக்கும்மி

முற்றிற்று.

உ

சிவமயம்.

சுப்பிரமணியர் ஞானம்-௩௨.

காப்பு.

ஒழியாதசுழிமுனையிலொடுங்கிநல்ல
உற்றகலைவாசிசிவ யோகத்தோடு
வழியானதுறையறிந்து மவுனங்கொண்டு
மகத்தான அண்டவரை முடிமேற்சென்று
தெளிவானஓங்கார வடிவேல்கொண்டு
தெளிந்துமனதறிவாலே தன்னைக்கண்டு
வெளியானபரவெளியில் வாசமாகி
வேதாந்தசத்திசிவ ஆதிகாப்பே.

நூல்.

ஆதியிலேபராபரத்திற் பிறந்தசத்தம்
அருவுருவாய்நின்றபர சிவமுமாகி
சோதியென்றசிவனிடமாய் சத்தியாகித்
தொல்லுலகிலெழுவகையாந் தோற்றமாகி
நீதியென்ற அறிவதனால் தானாய்நின்று
நிறைந்தபரிபூரணமாய் நிஷ்களமுமாகி
சாதியென்றசத்திசிவ மருள்தன்னாலே
சண்முகனுங்கணபதியுந் தானுண்டாச்சே. 1

உண்டானசத்திசிவம் ஏகமாகி
உளங்கனிந்துபூரணமாய் நிற்கும்போது
குண்டானமாங்கனியைக் கையில்வாங்கி
குமரனுடன்கணபதியைக் குணமாய்ப்பார்த்து
நன்றாகக்கிரிவலமாய் வந்தபேர்க்கு
நல்லகனிதானீவோ மென்றுசொன்னார்
பன்றானகனியறிந்து குமரன்றானும்
பாய்ந்துமயிலேறிகிரி வலஞ்சென்றாரே. 2

சென்றபின்புகணபதியு மாலோசித்து
தீர்க்கமுள்ளமேருகிரி நீர்தானென்று
கண்டவுடன்சிவனுமையாள் பாதந்தன்னைக்
கருத்துடனேசுற்றிவந்து கனிபவைவாங்கிக்

கொண்டுவந்தசிவனுமையைத் தியானஞ்செய்து
குறியறிந்துநெறிதமக்குள் திருவைப்போற்றி
தின்றுருசிகண்டறிந்து நிற்கும்போது
தீர்க்கமுள்ளகணபதியை தாவென்றாரே. 3

வாவென்றேயெடுத்தணைத்து அருட்பாலீந்து
மகத்தானஐவருக்கும் பீடமாகி
ஆவென்றுமூலமதிற் கரசாய்நின்று
ஐந்தெழுத்திற்குயிரான ஆதியாகி
கூவென்றசத்துசித்த சுத்தமாகிக்
குவித்தெழுந்தவாதிசிரு தேசியாகி
பூவென்றவாயிரத்தெண் மலருக்குள்ளே
பொருந்திமனவறிவாலே யிருந்துவாழே. 4

இருந்துவாழென்றுரைத்த வேளைதன்னில்
ஏகாந்தமயில்வீர னெதிரில்வந்து
அருந்தலமாய்நின்றநிலை தன்னைப்பார்த்து
அருமையுள்ளகண்மணியே வாவென்றேதான்
வருந்தியேமாங்கனியொன் றீந்துநல்ல
மகத்தான அண்டரண்ட வரைகள்சுற்றி
திருந்தியேதீர்க்காயுள் பெற்றுவாழ்ந்து
தீர்க்கமுடன்மலைக்கரசா யிருந்துவாழே. 5

வாழென்றுசொன்னவுடன் மயில்வீரன்தான்
மகத்தானசிவசத்தி பதமேற்கொண்டு
ஆவென்றுமயிலேறி கயிலாசத்தை
யாவலுடன்சுற்றிவரும் போதிலேதான்
சூழென்றுஇமயகிரி வடபாகத்திற்
சுத்தசித்தமானதபோ தனர்கள்கண்டு
தாள்பணிந்துவணக்கமாய் நிற்கும்போது
தபோதனர்கள்ரிஷிகளுமே தான்வந்தாரே. 6

வந்தவரைத்தான்பார்த்து வரையில்நிற்க
மகத்தானசற்குருவென் றடிபணிந்து
இந்தமலைச்சாரலிலே வெகுநாளாக
இன்பமுடன்றவஞ்செய்து வாழ்ந்தோமையா
அந்தரமாய்ராட்சதர்க ளண்டிவந்து
அலங்கோலஞ்செய்துமே துரத்துகின்றார்

சுந்தரமாயிருந்துதவங் காருமென்று
சுத்தசித்தமாய்த்தவத்தைத் தொடங்கினாரே.
தொடங்கிமன தடங்கிநிலை தன்னைக்காத்து
சுத்தமுடனின்றுவிளை யாடும்போது
அடங்கிமனமடங்காத அசுரர்தானும்
அஞ்சாமலழும்புசெய்யு மகத்தைப்பார்த்து
திடங்கொண்டுமயிலேறி செவ்வேள்கொண்டு
சிவந்துவருமசுரர்களை மாளவென்று
படங்குவிந்துவேல்முனையைத் தியானம்பண்ணி
பாயவிடஅசுரர்கிளை பறந்துபோச்சே. 8
பறந்துபோய்பலவிதமாய் ரூபங்கொண்டு
பந்திபந்தியாயசுரர் பறந்துவந்தார்
சிறந்துவந்தசேனைகளை நன்றாய்ப்பார்த்து
தீர்க்கமுள்ளமயிலேறித் தெளிந்துநின்று
அறந்தழைக்கவேணுமென்று ஸ்தூலசூட்சம்
அரூபமென்னுங்காரணமாய் ரூபங்கொண்டு
நிறந்தரமாய்வந்தவொரு அசுரர்தன்னை
நிர்த்தூளிசெய்துதவ நிலைகொண்டாரே. 9
நிலைகொண்டுநின்றஜெபங் கொண்டசித்தை
நேர்மையுடன்தவஞ்செய்பு முனிவர்கண்டு
கலைகொண்டுமனந்தெளிந்து மகிழ்ச்சியாகிக்
ஞானமயில்வீரனடி கருதிப்போற்றி
தலைகொண்டுதாள்பணிந்து அருட்கண்பெற்று
தபோதனரும்ரிஷிகளுமே தான்பணிந்து
சிலைகொண்டுநின்றவடி வேலர்தன்னைத்
தெரிசித்துஅவரவர்கள் பதிசென்றாரே. 10
பதிதேடியவரவர்கள் செல்லும்போது
பத்தியுள்ளஅகத்தியமா முனிவர்வந்து
விதியறிந்துஅசுரர்கிளை மாளவென்று
வெற்றியுள்ளவடிவேலை தியானம்பண்ணி
கெதியறிந்துஸ்தூலமுடன் சூன்யமாகிக்
கிருபையுள்ளகாரணமாம் ரூபங்கொண்டு
சதியறிந்துசங்காரஞ் செய்தீரையா
சண்முகமேயென்குருவே சரணந்தானே. 11

சரணமென்றஅகத்தியமா முனியைப்பார்த்து
சண்முகமாய்நின்றவடி வேலர்தானும்
திரணமதாய்த்தானறிந்து நீயாரென்ன
திருவடியைப்பூசைசெய்யுஞ் சேயனென்றார்
காரணமந்தக்காரணமதாய் வந்ததேதோ
கருணையுடன்வாருமென்று கடாட்சம்நல்கி
தருணமறிந்துதவுவது தருமமென்று
சங்கையுடன்தான்வந்த வகைசொல்வீரே. 12
சொல்லென்றுமயில்வீரன கேட்கவந்த
சோதிமயமானதொரு அகஸ்தியர்சொல்வார்
கல்லென்றுவந்ததொரு அசுராள்தன்னை
சண்முகமாய்நின்றவடி வேலுங்கொண்டு
சொல்லென்றுசங்காரஞ் செய்தீரந்த
திருவுருவாய்நின்ற காரணத்தைக்காட்டி
உள்ளென்றஆகார ஸ்தூலசூட்சம்
உண்மையென்றகாரணமு முனரசெய்வீரே. 13
உரைசெய்வீரென்றுசொன்ன வுறுதிக்கேட்டு
உண்மையென்றமயில்வீரன உறுதியாகி
உரைசெய்துஎக்கியங்கள் தானுண்டாக்கி
நேமமுடன்அகத்தியமா முனிவர்வென்று
அரையறிந்துஅருகிருத்தி வோமக்குண்டம்
ஆதியென்றமந்திரத்தி லக்கினியுண்டாக்கி
புரையறிந்துமந்திரங்கள் செபிக்கும்போது
பூரணமாய்கும்பமதில் தானுண்டாச்சே. 14
உண்டானபூரணமாய்க் கும்பம்வாங்கி
உண்மையென்றமாமுனிக்கு அபிஷேகித்து
நன்றானநவக்கிரக மொன்பதுக்கும்
நலமானஅநுக்கிரக நிலையுங்காட்டி
குன்றானஅநுக்கிரக வாசல்காண்க
குவிந்துமனதறிவதனுல் விண்ணெண்றாணே.
விண்ணென்றுவிசையுடனே முனைநாவிண்ண
மெய்ஞ்ஞானவாசலது திறக்கும்போ
கல்லினென்றகபாடவழிக் குள்ளேநின்று
கலையறிந்துவாசியினுல் கமலநோக்கி

யுன்னென்றுமூலமதில் வங்கென்றுபூரி
யுறுதியென்றசமாதியிலே சிங்கென்றுரேசி
என்னென்றுமிப் படியே தொண்டுநன்றாய்
யோகமுள்ளதசதீட்சை யுண்மைகேளே. 16

உண்மையுடன்சுழினையிலே யின்னென்றாணி
உறுதியுடன் ஆதார தீட்சைகேளு
நன்மையுடன் ஓங்-ரீங்-அங்-உங்கென்று
நாட்டமுடன்பதினாறு உருவேசெய்தால்
தண்மையுடன்கணபதியும் பிரகாசிப்பார்
தானமெனறசுழினையிலே தன்னைப்பார்த்து
நுண்மையுடன்ஓம் நம்சிவாயமென்றால்
நோக்குமுன்னே பிரமந்தரிசனமுமாமே. 17

ஆமப்பாநமசிவாய நமவென்று
அதின்பிறகுவயநமசி வயநமசிவாவென்றும்
தாமப்பாதலைகாலாய் மாறிக்கொண்டு
சங்கையுடன்கால்தலைபால் மாறிக்கொள்ளு
ஆமப்பாநமசிவாய நமசிவயநமவென்றும்
அதன்பிறகுசிவயநம சிவநமவென்றும்
ஓமப்பாநமசிவய வென்றுமாற
உண்மையென்ற ஆதாரஞ்சித்தியாமே. 18

சித்தமுடனைங்கெழுத்தை மைந்தாநீயும்
செம்மையுடன்தலைகாலாய் கால்தலையாய்மாற
சுத்தமுடன் ஆதார தேவதைகள்வந்து
சொன்னபடியிருதயத்தில் சுகமாய்நின்று
பத்தியுடனிப்படியே தியானம்பண்ணிப்
பதிவாகவிபூதியுந் தளமாய்ப்பூசி
நித்தியமுமிப்படியே செய்துநின்றால்
நிலையில்லாத்தூலசடம நிலைக்கும்பாரே. 19

பாரப்பாமலைபறிந்து நிலையில்நின்று
பத்தியுடனாதார சூட்சங்கேளு
நேரப்பாஓம்கிலி அங்கென்றோது
நிலைபறிந்து அங்கிலிநங்கென்றோது
காரப்பாமங்கிலி சிங்கென்றோது

கருணையுடன் சிங்கிலிவங்கென்றோது
சாரப்பாவங்கிலி யங்கென்றோது
சலுதியாம்அங்கிலி மங்கென்றோதே. 20
ஓதியபின்யங்கிலி உங்கென்றோது
யுண்மையுடன் அங்கிலி அங்கென்றோது
நீதியுடன் அங்கிலிமங்கென்றோது
நிலையறிந்துமங்கிலி ரீங்கென்றோது
ஆதியுடன்ரீங்கிலி ஓமென்றோது
அப்பனே தலைகாலாய் மாறியோது
சோதியுடன்சுழினையிலே மனக்கண்சாற்றி
சுத்தமுடன்விபூதியைநீ தரித்துக்கொள்ளே.

கொள்ளப்பாவிபூதியைநீ தரித்துக்கொண்டு
கூர்மையுடன்கால்தலையாய் மாறிக்கொண்டு
சொல்லப்பாஓங்கிலி ரீங்கென்றோது
சுத்தமுடன்ரீங்கிலி மங்கென்றோது
வில்லப்பாமங்சிலி யங்கென்றோது
விபரமதாய்த்தோற்றுமடா செய்கையாவும்
உள்ளப்பாமங்கிலி சிங்கென்றோது
வுத்தமனேசிங்கிலி மங்கென்றோதே 22

ஓதியபின்னங்கிலி கிங்கென்றோது
வுத்தமனேசிங்கிலி மங்கென்றோது
நீதியுடன்மங்கிலி நங்கென்றோது
நிலையறிந்துநங்கிலி யங்கென்றோது
சோதியுடன்மங்கிலி ஓமென்றோது
சுத்தமுடன்ஈராறு தவமுஞ்சித்தி
வீதியென்றஆதார மேலாதாரம்
விண்ணடங்கிகண்ணடங்கி மேவிநில்லே. 23

நில்லப்பாகண்ணடங்கி விண்ணென்றாணி
நீயறிநதுபிராணாயஞ் செய்தால்மைந்தா
கேளப்பநதிரேகமது காலனைது
காலனென்னும்வியாதியெல்லாங் காணாதோடு
உளளப்பாவாசியது வுறுதியாகும்
ஓதுகின்றமந்திரமுஞ் சித்தியாகும்

சொல்லப்பா ஸ்தூலமுடன் சூட்சஞ்சொன்னேன்
　　தூலங்கின்றஸ்தூலத்தின் சுருக்கங்கேளே. ([illegible])
சுருக்கமுடன் ஆதார தூலசூட்சஞ்
　　சொன்னபடிபிராணயஞ் செய்துக்கொண்டு
உருக்கமுடன்செபதபங்கள் பூசையாலும்
　　உண்மையாயுனக்குள்ளே கண்டுதேறி
பெருக்கமுடன் தானிருந்து சிவான்மாவே
　　பிரணவமாய்நின்றபரம் நின்றுமாகி
நெருக்கியந்தஅண்டவெளிக் குள்ளேசென்று
　　நேசமுடன்பிராணயம் நினைவாய்ச்செய்யே. ([illegible])
செய்யப்பாபிராணயம் நினைவாய்ச்செய்ய
　　சிவமாகருமானஞ் செப்பக்கேளு
பொய்யப்பாபோகாது பிராணவாய்வு
　　பொருந்திநின்றுவிளையாடும் புதுமைகேளு
பையப்பாசுழினையிலே விண்ணென்றாணி
　　பதியாகமூலமதில் வங்கென்றுபூரி
மெய்யப்பாசுழிநிலை ரிங்கென்றுரேசி
　　வேகமுடன்கண்டமதில் அங்கென்றுகும்பே. ()
அங்கென்றுகண்டமதில் கும்பித்தேதான்
　　அசையாதுவாசிதிரு வாசிதானும்
செங்கமலமானசுழி பிண்டத்தேறும்
　　திரும்பியந்தபிண்டமதில் சென்றுவாழும்
சங்கையுடன் தனதகத்தில் தானேதானாய்
　　தன்மையுடநின்றுவிளை யாடும்வாசி
மங்களமாய்ச்சுழினையிலே வின்னென்றாணி
　　மார்க்கமுடன்இகபரமா யிருந்துதானே. 27
காணவேசததியவள் தியானம்பாரு
　　கருவாகச்சொல்லுகிறேன் கருத்தாய்க்கேளு
பூணவேயுரைத்திடுவாய் அங்சிங்கென்று
　　பு[illegible]தியுடன்பதினாறு வுருவேசெய்து
தோணவே விபூதிதுளிதமேபூசி
　　சு[illegible]முடன்பராசத்தி னிர்த்தஞ்செய்வாள்
உன்னை[illegible] யிப[illegible]டியே தியானம்பண்ணி
　　வு[illegible]யுடன்பிராணய வுறுதியாமே. 28

உறுதியுள்ளஅகத்தியமா முனியேகேளு
வுண்மையுள்ளசத்தியைநீ தியானமபண்ணி
பருமதிசுடரொளிபோல் பஞ்சகர்த்தாள்
பதியறிந்துபிராணபம் பதிவாய்ச்செய்து
சுருதிபொருளானதொரு பொதிகைமேவி
சுகவிகபிராணகலை வாசியேறி
கருதிமனமொன்றாகி சுழியில்நின்று
கலகமற்று அமிர்தபானங்கைக்கொள்வாயே.
பானமென்றமதியமிர்த பானங்கொள்ள
பரப்பிரமானசுழி வழியுங்காட்டி
தானமென்றஆதார மேலாதாரந்
தனையறியும்பிராணபச் சங்கைசொல்லி
ஞானமென்றநிலைகாட்டி மூலங்காட்டி
நாதாந்தஆறுமுக நிலையுங்காட்டி
மோனமென்றவடிவேலின் முனையுங்காட்டி
முனையறிந்துகலைநிறுத்தி முடிமேல்நில்லே. 30
நில்லப்பாசதுரகிரி முடியிற்சென்று
நிலையானபொதிகையிலே வாசமாகி
உள்ளப்பாதானாகி விண்ணென்றாணி
உன்மனதில்நினைத்ததொரு மந்திரந்தன்னை
சொல்லப்பாதியானமுடன் செபிக்கும்போது
சுத்தமுடன்சித்திக்கும் சும்மாய்நின்று
சொல்லப்பாஅஷ்டாங்க யோகத்தேகிச்
சிவாயகுருபாதமதில் தெளிவாய்நில்லே. 31
தெளிவானதெளிவதனால் தன்னைக்கண்டு
தீர்க்கமுடனிருந்துதவஞ் செய்யவென்று
மழியாதவனுக்கிரக வரமுமீந்து
மார்க்கமுடன்மயில்வீரன் வடிவேல்கொண்டு
அழியாதஆண்டவரை முடிமேற்சென்று
அஷ்டகிரிபர்வதத்திற் காசுமாகி
ஒளிவாகிஅண்டவெளி யெங்குந்தானாகும்
ஓங்காரவடிவேலை யுவந்தான்முற்றே. 32

சுப்பிரமணியர் ஞானம்-32 முற்றிற்று.

உ

சிவமயம்.

காயகப்பல்.

ஏலேலோ ஏகரெதம் சர்வரெதம்
பிரமரெதம் ஏலேலோ ஏலலிலோ.

பஞ்சபூதப்பலகை கப்பலாய்சேர்த்து- பாங்கான ஓங்குமரம் பாமரம்கட்டு - நெஞ்சு மனம்புத்தி ஆங்காரஞ்சித்தம் - மானாபிமானங் கயிராகச்சேர்த்து - ஐந்தெழுத்தைக்கட்டி சரக்காகஏற்றி - ஐம்புலந்தன்னிலே சுக்கானிறுத்தி-நெஞ்சுகடாட்சத்தால சினிப்பாய்தூக்கி சிவனுடைய திருப்பொருளை சிந்தையில்நினைந்து - தஞ்சவானந்த வெள்ளத்தில் தானே அகண்டாரதம் போகுதடா ஏலேலோ ஏலலிலோ. 1

களவையுங்கேள்வையுந் தள்ளுடா தள்ளு-கருணைக்கடலிலே தள்ளுடாகப்பல் - நிற்குணந்தன்னிலே தள்ளுடா கப்பல் - மூக்கணை மூன்றையுந் தள்ளுடா தள்ளு - மூப்பாழுக்கப்பாலே தள்ளுடாகப்பல்- திக்குத்திசையெங்கும் தள்ளுடாதள்ளு - திருமூந்திரஞ்சொல்லி தள்ளுடாகப்பல்-பக்கமுடன் கீழ்மேலும்தள்ளுடா தள்ளு-பரவெளிக்கப்பாலே போகுதடா கப்பல் - ஏலேலோ ஏலலிலோ. 2

தந்தைதாய் சுற்றமும் சகலமுமறந்து - தாரஞ்சகோதரம் தானதும்மறந்து - பந்தமும்நேசமும் பாசமுமறந்து-பதினுலுலோகமும் தனையும்மறந்து - இந்திரியர்கள் இராட்சித்த கப்பலிலேறி - ஏகாந்தமானதொரு கடலிலேதள்ளி - அந்திரமாவெளி அருளானந்த வெள்ளத்தில் அழுந்துதையா கப்பல் (ஏலேலோ - ஏல்லிலோ) 3

காயகப்பல் முற்றிற்று.

சிவமயம்.

ஐம்பத்தைந்தாவது

அகஸ்தியமுனிவர் ஞானம்-௧௫.

கர்ப்பமென்னவெகுதூரம் போகவேண்டாம்
கனமலையில் குவடுகளி லலையவேண்டாம்
சர்ப்பமென்னநாகமது வொருதலையில்நின்று
சாகாதகால்கண்டு முனையிலேறி
தீர்ப்பமென்றுமனமுறுத்து மனதில்நின்று
நிஜமானகருநெல்லி வெண்சாறைகாணும்
சொற்பமென்றுவிட்டுவிட்டா லலைந்துபோவாய்
தூரியமென்றபராபரத்திற் சென்றுகூடே. 1

கூடப்பாதூரியமென்ற வாலைவீடு
கூறறியநாதாக்கள் மதியவ்வாமேயென்பார்
நாட்பாஅவள்தனையே பூசைபண்ணு
நந்திசொல்லுசிங்காரந் தோணுந்தோணும்
மூடப்பாசிகாரவரை யெல்லாந்தோணும்
ஊமையென்றவுயிர்தவெள்ளம் ஊரலாகும்
தேடப்பாயிதுதேடு காரியமாகுஞ்
செகத்திலேயிதுவல்லோ சித்தியாதே. 2

ஆமென்றபூரணந்தான் சுழிமுனையிற்பாரு
அழகானவிந்துநிலை சந்திரனிற்பாரு
ஓமென்றுறீங்காரம் புருவமையம்பாரு
வுத்தமனேவில்லென்ற வீட்டிற்காணும்

வாவென்ற வுவள்பாதம் பூசைபண்ணு
மற்றொன்றும்பூசையல்ல மக்காள்சொன்னேன்
பாவென்றபரமனல்லோ முதலெழுத்தாம்
பாடினேன்வேதாந்தம் பாடினேனே. 3

பாடுகிறபொருளெல்லாம் பதிவேயாகும்
பதியில்நிற்குமக்ஷரந்தான் அகாரமாகும்
நாடுகின்றபரமனது ஓங்காரமாகும்
நலம்பெரியபசுதானே உகாரமாகும்
நீடுகின்றசுழிமுனையே தாரையாகும்
நின்றதொருபிடகலையே நாதவிந்தாம்
மூடுகின்றஓங்கார வித்தையாகும்
வெளியானஅரியெழுத்தை வூணிப்பாரே. 4

ஊணிபதோர்ஓங்காரம் மேலுமூண்டு
வுத்தமனேகிருண்டு ஊணிப்பாரு
ஆணியம்நடுநாடி நடுவேமூட்டும்
ஆச்சரியமெழுத்தெல்லாம் அடங்கிநிற்கும்
யேணியாயிருக்குமடா அஞ்சுவீடு
யேகாந்தமாகியே யெழுத்தைப்பாரு
தோணிபோற்காணுமடா அந்தவீடு
சொல்லாதேயொருவருக்குந்துறந்திட்டேனே.

துறந்திட்டேன்மேல்மூலங் கீழ்மூலம்பாரு
துயரமாய்நடுநிலையை யூணிப்பாரு
அறைந்திட்டேன்நடுமூலம் நடுநாடிப்பார்
அப்பவல்லோவரைதாக்கும் தாரைகாணும்
உரைந்திட்டஐவருந்தான் நடனங்காணும்
ஒளிவெளியும்சிலம்பொலியு மொன்றாய்காணும்
நிறைந்திட்டபூரணமு மிதுதானப்பா
நிஜமானபேரொளிதா னிலைத்துப்பாரே! 6

சும்மாகீ பார்க்கையிலே மனத்தையப்பா
சுழிமுனையிலேயாட்டியங்கே காலைப்பாரு
அம்மாநீதேவியென்று அடங்கிப்பாரு
அப்பவல்லோகாயசித்தி யோகசித்தி
அம்மாவும்அம்மாவும் அதிலேகாணும்
ஒருமனதாய்ச்சுழிமுனையில் மனத்தையூணு
நம்மாலேஆனதெல்லாஞ் சொன்னேமப்பா
நாதாக்களிதையாரும் பாடார்காணே. 7

காணுகின்றஓங்கார வட்டஞ்சத்து
கனலெழும்பிகண்ணிலே கடுப்புத்தோன்றும்
பூணுகின்றபிடகலையில் பாம்போலாடும்
பொல்லாததேகமென்று லுருகிப்போகும்
ஆணுவங்களானதெல்லா மொழிந்துபோகும்
அத்துவிததுரியாஷ்ட மாடிநிற்கும்
ஆணியதோரெழுத்தையெல்லாந் தேவியாகும்
ஓங்காரக்கம்பமென்ற வுணர்வுதானே. 8

உணரவென்றுற்சக்திரானி லேவிப்பாயும்
ஓடியங்கேதலையென்ற வெழுத்தில்நில்லு
அணுவென்றால்மனையாகுஞ் சிவனேயுச்ச
அகாரமென்னபதியுமென்ன சூட்சமாகும்
கணுவென்னவிற்புருவ மகண்டவீதி
கயிலாயமென்றதென்ன பாத்தின்வீடு
துணுவென்னசூரியன்றன் னெருப்பைக்கண்டு
சுழன்றபிடரியிலே தூங்குதூங்கே. 9

மூவெழுத்தும் ஈரெழுத்துமாகிநின்ற
மூலமதையறிந்துரைப்போர் குருவுமாகும்
ஓவெழுத்துக்குள்ளேதா னிருக்குதப்பா
உணர்வதுவேகண்டறிந்தோ னவனேயாசான்

யாவருக்குந்தெரியாது வறிந்தோமென்று
அவரவர்கள்சொல்வார்க ளறியாமூடர்
தேவரொடுமாலயனுந் தேடிக்காணார்
திருநடனங்காணமுத்தி சித்தியாமே. 10

ஈரெழுத்துமோரெழுத்து மாகியங்கே
யிலங்கிநிற்குமசைவையப்ப மூலத்துள்ளே
வேரெழுத்தும்வித்தெழுத்து மிரண்டுங்கொண்டு
வித்திலேமுளைத்தெழுந்து விளங்கிநிற்கும்
சீரெழுத்தையூணிநல்ல வாசியேறி
தெருவீதிநடந்தமணி மண்டபத்து
தாளரத்துட்பொருளாம் பரத்தைநோக்கி
சார்ந்தவர்க்குசித்திமுத்தி தருகுந்தானே. 11

ஏகமெனுமோரெழுத்தின் பயனைப்பார்த்து
யெடுத்துரைத்துமிவ்வுலகி லெவருமில்லை
ஆகமங்கள்நூல்கள்பல கற்றுக்கொண்டு
அறிந்தமென்பார்மவுனத்தை அவனைநீயும்
வேகாத்தலைசரகாக்கால் விரைந்துகேளு
அதையெடுத்துரைப்பவனே ஆசானாகும்
தேகமதிலோரெழுத்தைக் காண்டோன்ஞானி
திருநடனங்காணமுத்தி சித்தியாமே. 12

குருவானாயுமைபாக னெனக்குத்தந்த
கூறியஞானமதுபத்தின்மூன்றும்
பொருளாகச்சொல்லிவிட்டே னப்பாநீங்கள்
பொருளறிந்தாற்பூரணமும் பொருந்திகாணும்
அடியார்களிந்நூலைப் பழித்தபேர்க
ளருநரகிற்பிசாசெனவே யடைந்துவாழ்வார்
அருளாகஆராய்ந்து பார்க்கும்பேர்கள்
ஆகாயம்நின்றநிலை யறியலாமே. 13

அகஸ்தியர்ஞானம்-13
முற்றிற்று.

உ

சிவமயம்.

வால்மீகர் அருளிச்செய்த

ருத்திரஞானம்-கசு.

இருள்வெளியாய்நின்றசிவ பாதம்போற்றி
  எழுத்தினுடவிபரத்தை விரித்துச்சொல்வேன்
அருவுருவாய்நின்றதுவே யெழுத்ததாகும்
  ஆதியந்தமண்டபிண்ட மதுவேயாகும்
திருவுருவாய்ரவிமதியால் நின்றரூபம்
  சிவசத்திதிருமாலின் ரூபமாகும்
வருமுருவேசிவசத்தி வடிவமாகும்
  வந்ததிலும்போனதிலு மனதைவையே. 1

வந்ததுவும்போனதுவும் வாசியாகும்
  வானில்வரும்ரவிமதியும் வாசியாகும்
சிந்தைதெளிந்திருப்பவனே யவனேசித்தன்
  செகமெலாஞ்சிவமென்று யறிந்தோனசித்தன்
நந்தியென்றவாகனமே தூலதேகம்
  நான்முகனேகண்மூக்கு செவிநாக்காகும்
தந்திமுகன்சிவசத்தி திருமூச்சாகும்
  தந்தைதாய்ரவிமதியென் றறிந்துகொள்ளே. 2

அறிந்துகொள்ளும் 1பூரகமே சரிதைமார்க்கம்
  அடங்கிநின்ற 2கும்பகமே கிரிகைமார்க்கம்
பிரிந்துவரும் 3ரேசகமே யோகமார்க்கம்
  பிசகாமல்நின்றதுவே ஞானமார்க்கம்

---

1 பூரகம்-இழுக்கிறது. 2 கும்பகம்-அடக்குறது.
3 ரேசகம்-விடுகிறது.

மறிந்துவுடல்புகுகின்ற பிராணவாயு
மகத்தானசிவசத்தி அடங்கும்வீடு
சிறந்துமனத்தெளிவாகி சேர்ந்தோன்சித்தன்
சிவசிவா அவனவனென் றுரைக்கலாமே. 3

ஆமப்பாவுலகத்தில் பெருநூல்பார்த்தோர்
அவரவர்கண்டத்தையெல்லாம் சரிதையென்பார்
ஓமப்பாகல்லைசெம்பை தெய்வமென்று
உருகுவார்பூசிப்பார் கிரிகையென்பார்
வாமப்பாயோகமென்று காய்கனியைத்தின்று
வாய்பேசாவூமையைப்போல் திரிகுவார்கள்
காமப்பாஞானமென விண்டுமேலும்
காக்கைபித்தன்மிருகம்போல் சுத்துவாரே. 4

சுத்துவார்பெருநூலைப் பார்த்துப்பார்த்து
தூஷிப்பாருலகத்தில் சிறிதுபேர்கள்
தெத்துவாரவர்பிழைக்க வனேகவேஷம்
தேசத்திலணிந்துகொண்டு திரிகுவார்கள்
பத்துவார்குருக்களென்பார் சீஷரென்பார்
பையவேதீட்சைவைப்பார் தீமையென்பார்
கத்துவார்திரிமூர்த்தி தாமேயென்று
காரணத்தையறியாத கசடர்தானே. 5

தானென்றவுலகத்தில் சிறிதுபேர்கள்
சடைபுலித்தோல்காஷாயம் தாவடம்பூண்டு
ஊனென்றவுடம்பெல்லாம் சாம்பல்பூசி
உலகத்தில்யோகியென்பார் ஞானியென்பார்
தேனென்றசிவபூசை தீட்சையென்பார்
திருமாலைகண்ணாலே கண்டேனென்பார்
கானென்றகாட்டுக்கு ளலைவார்யோடி
காரணத்தையறியாமல் கதறுவாரே.

கதறுகின்றபேர்களையா கோடாகோடி
காரணத்தைக்கண்டவர்கள் கொஞ்சகொஞ்சம்
பதறுகின்றபேர்களெல்லாம் பராபரத்தைப்
பத்தினின்றுபார்த்தவர்கள் சுருக்கமப்பா
உதறுகின்றபேர்களெல்லா முலகத்துள்ளே
உதித்தகலைதன்னுள்ளே யறியமாட்டார்
சிதறுகின்றபேர்களைப்போல் சிதறிடாமல்
சிவசத்திவரும்போதே தன்னில்நில்லே. 7

நில்லென்றபெரியோர்கள் பாஷையாலே
நீடுலகம்தன்னுக்குள் நாலுவேதம்
வல்லமையாய்சாஸ்திரங்க ளிருமூன்றாக
வயிர்பிழைக்கபுராணங்கள் பதினெட்டாக
கல்லுகளைக்கறைப்பதுபோல் வேதாந்தங்கள்
கட்டினாரவரவர்கள் பாஷையாலே
தொல்லுலகில்நால்சாதி யனேகஞ்சாதி
தொடுத்தாரவரவர்கள் பிழைக்கத்தானே. 8

தானென்றவுலகத்தி லில்லாவிட்டால்
தன்பெருமையாலழிந்து சகத்தில்வீழ்வார்.
ஊனென்றவுடம்பெடுத்தா லெல்லாம்வேணும்
உலகத்திலவரவர்கள் பாஷைவேணும்
மானென்றசிவகாமி சிவனுங்கூடி
மாமுனிவர்முகம்பார்த்து மறைநூல்சொன்னார்
தேனென்றசிவகாமி யருளினாலே
திரட்டினார்வெகுகோடி தேசபாஷை. 9

தேசத்தின்பாஷைதனை யறிந்திடாமல்
தெளிவாகத்தாமுரைப்பார் பாஷைபார்த்தோர்
ஆசிப்பாருலகத்தில் கண்டதெல்லாம்
ஆச்சரியந்தனைக்கண்டு மறந்துபோவார்

வாசிதனையறியாத சண்டிமாண்பர்
வார்த்தையினால்மருட்டி வைப்பார்
நாசிநுனி தனிநடுவில் சிவத்தைக்கண்டோர்
நானமுகனும்திருமாலும் சிவனுந்தானே. 10

சிவசிவாபதினெண்பேர் பாடற்கெல்லாம்
திறவுகோல்வால்மீகன் பதினாறும்
சிவம்பெத்தசித்தரெல்லா மென்னால்பார்த்து
சிவனோடேகோள்கள்சொன்னார் சினந்தார்நாதன்
அவமாகிப்போகாமல் சிவனுத்தாரத்தின்
அருளினால்துறந்துசொன்னேன் உலகுக்காக
நலமானநவக்கிரகங்கள் தன்னுக்குள்ளே
காக்குவாய்செவிமூக்கு அதனுள்பாரே. 11

நாக்குவாய்செவிமூக்கு மத்திக்கப்பால்
நடுவீதிகுய்யமுதல் வுச்சிதொட்டு
தாக்குவாய் அங்கென்றே அதிலேமுட்டி
தாயாரைப்பூசித்து வேதம்வோது
வாக்குவாய் அசையாமல் மவுனங்கொண்டு
வாசிவருமிடத்தில்மனம் வைத்துக்காரு
நீக்குவாய்வாசியொடு மனந்தான்புக்கில்
நினைவுஅதிலடங்கிவரும் வரிசைகாணே. 12

காணரிதுயெவராலு மிருசுவாசம்
காண்பவனேசிவசித்த னவனேயாகும்
பூணரிதுவுலகத்தி லின்னால்கிட்டில்
பூலோகசித்தனென வுரைக்கலாகும்
காணரிதுசிவசத்தி திருமூச்சாகும்
காட்டாதேமூடருக்கு யின்னால்தன்னை
தோணரிதுவிழிமயக்கம் சும்மாப்போமே
சொல்லரிதுசூட்சமத்தை சொன்னேனப்பா. 13

சூட்சமின்னூல்சொல்லுகிறேன் வாசிகாணு
சூட்சாதிசூட்சத்தைத் துறக்கப்போகா
சாட்சியில்லை துணையில்லை கேள்வியில்லை
சந்தேகமொன்றுமில்லை விழியைக்காணு
காட்சியென்னகற்பதத்தில் வசிக்குமாப்போல்
காரணத்தைக்கண்ணாலே கண்டிருக்க
ஆட்சிதருமுறைமையாளை யப்படியேகண்டேன்
ஆனந்தத்திருக்கூத்தின் நடக்கைக்காரே. 14

காற்பதற்குபத்தியத்தைச் சொல்லக்கேளு
காய்கனிகள்பஞ்சரசம் பரமானங்கள்
ஏற்கையுடனுண்டுகொண்டு சிவத்தைக்காரு
என்மக்காள்சித்தருட குருநூல்பாரு
ஆத்துமத்துக்கழிவில்லா திருக்கவேணும்
அவரவர்கள்நித்தியகர்ம நடத்தவேணும்
தீர்க்கமுடனின்றவர்க்கு வாசிசித்தி
சிறப்புடனேபதினாறும் பலிக்குந்தானே. 15

தானவனாய்யிருக்கவென்றால் வாசிவேணும்
தன்னுக்குள்தானிற்க யிடமும்வேணும்
வானவனாய்நின்றவர்க் கெல்லாஞ்சித்தி
வானுக்குள்மனமிருக்க மதிபோல்காணும்
தேனவனாஞ்சித்தருக்குத் தெகிட்டாமூலி
சிரசப்பாவுடலுக்குப் பதியேயாகும்
கோனென்றவட்டத்துள் நடுவேநின்றால்
குமரியவள்வாலைசிறுபெண் தான்தேவி
கோனவனாயிருக்கவென்று குரிமைச்சொன்னேன்
குவலயத்தில்பதினாறுங் குருகத்தானே. 16

வால்மீகர் ஞானம்-கசு

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிவநாமாவளித்திரட்டு.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

நேரிசை வெண்பா.

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலஞ்
சொன்னவனே தூய்மெய் சுகத்தவனே-மன்னவனே
சிற்பரனே யைங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்றாள் சரண்.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-ஆதிதாளம்.

சிவசிவகஜமுக கணநாதா, சிவகுணவந்தித குணநீதா, சிவ
சிவசிவசிவ தத்துவபோதா, சிவகுருபரசிவ சண்முகநாதா,
சிவசிவசிவசிவ சின்மயதேஜா, சிவசுந்தரகுஞ் சிதநடராஜா.

அம்பலத்தரசே யருமருந்தே
யானந்தத்தேனே யருள்விருந்தே.

பொதுநடத்தரசே புண்ணியனே
புலவரெலாம்புகழ் கண்ணியனே. 2

மலைதருமகளே மடமயிலே
மதிமுகவமுதே யிளங்குயிலே. 3

ஆனந்தக்கொடியே யிளம்பிடியே
யற்புதத்தேனே மலைமானே. 4

சிவசிவசிவசிவ சின்மயதேஜா
சிவசுந்தரகுஞ் சிதநடராஜா. 5

படனவிவேக பரம்பரவேதா
நடனசபேச சிதம்பரநாதா. 6

அரிபிரமாதியர் தேடியநாதா
அரகரசிவசிவ வாடியபாதா. 7

அந்தணவங்கண வம்பரபோகா
அம்பலநம்பர வம்பிகைபாதா. 8

அம்பரவிம்ப சிதம்பரநாதா
அஞ்சிதாஞ்சித குஞ்சிதபாதா. 9

தந்திரமந்திர யந்திரபாதா
சங்கரசங்கர சங்கரநாதா. 10

கனகசிதம்பர சங்கரபுரஹர
அனகபரம்பர சங்கரஹரஹர. 11

சகலகலாண்ட சராசரகாரண
சகுணசிவாண்ட பராபரபூரண. 12

இக்கரைகடந்திடி லக்கரையே
இருப்பதுசிதம்பரச் சர்க்கரையே. 13

என்னுயிருடம்பொடு சித்தமதே
இனிப்பதுநடராச புத்தமுதே. 14

ஐயர்திருச்சபை யாடகமே
ஆடுதலானந்த நாடகமே. 15

உத்தரஞான சிதம்பரமே
சித்தியெலாந்தரு மம்பரமே. 16

அம்பலவாசிவ மாதேவா
வம்பலவாவிங்கு வாவாவா. 17

நடராசனெல்லார்க்கு நல்லவனே
நல்லதெலாஞ்செய வல்லவனே. 18

ஆனந்தநாடகங் கண்டோமேபர
மானந்தமோனகங் கொண்டோமே. 19

சகளவுபகள நிட்களநாதா
உகளசததள மங்களபாதா. 20

சந்ததமுஞ்சிவ சங்கரபசனம்
சங்கீதமென்பது சற்சனவசனம். 21

சங்கரசிவசிவ மாதேவா
யெங்களையாட்கொள வாவாவா. 22

அரகரசிவசிவ மாதேவா
அருளமுதந்தர வாவாலா. 23

நடனசிகாமணி நவமணியே
திடனகமாமணி சிவமணியே. 24

நடமிடுமம்பல நன்மணியே
புடமிடுசெம்பல பொன்மணியே. 25

உவட்டாதுசித்திக்கு முள்ளமுதே
தெவிட்டாதுதித்திக்குந் தெள்ளமுதே. 26

நடராசவள்ளலை நாடுதலே
நந்தொழிலாம்விளை யாடுதலே. 27

அருட்பொதுநடமிடு தாண்டவனே
யருட்பெருஞ்சோதி யென்றாண்டவனே. 28

நடராசமாணிக்க மொன்றதுவே
நண்ணுதலாணிப்பொன் மன்றதுவே. 29

நடராசபலமது நம்பலமே
நடமாடுவதுதிரு வம்பலமே. 30

நடராசர்பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார்பாட்டெல்லாம் வெறும்பாட்டு. 31

சிதம்பரப்பாட்டே திருப்பாட்டு
சீவர்கள்பாட்டெல்லாந் தெருப்பாட்டு. 32

அம்பலப்பாட்டே யருட்பாட்டு
அல்லாதபாட்டெல்லா மருட்பாட்டு. 33

அம்பலவாணனை நாடினனே
அவனடியாரொடுங் கூடினனே. 34

தம்பதமாம்புகழ் பாடினனே
தந்தனவென்றுகூத் தாடினனே. 35

நான்சொன்னபாடலுங் கேட்டாரே
ஞானசிதம்பர நாட்டாரே. 36

இனிதுயர்படமாட்டேன் விட்டேனே
யென்குருமேலாணை யிட்டேனே. 37

இனிப்பாடுபடமாட்டேன் விட்டேனே
யென்னப்பன்மேலாணை யிட்டேனே. 38

சன்மார்க்கம்நன்மார்க்கம் நன்மார்க்கம்
சகமார்க்கந்துன்மார்க்கந் துன்மார்க்கம். 39

நாதாந்தநாட்டுக்கு நாயகரே
நடராசரேசபா நாயகரே. 40

நான்சொல்லுமிதுகேளீர் சத்தியமே
நடராசரெனில்வரு நித்தியமே. 41

நல்லோரெல்லார்க்குஞ் சபாபதியே
நல்வரமீயுந் தயாநிதியே. 42

நடராசர்தன்னட னன்னடமே
நடம்புரிகின்றது மென்னிடமே. 43

சிவகாமவல்லிக்கு மாப்பிள்ளையே
திருவாளனுவன் சீர்ப்பிள்ளையே. 44

சிவகாமவல்லியைச் சேர்ந்தவனே
சித்தெல்லாஞ்செய்திடத் தேர்ந்தவனே. 45

இறவாவரந்தரு நற்சபையே
யெனமறைபுகழ்வது சிற்சபையே. 46

என்னிருகண்ணு ளிருந்தவனே
இறவாவரந்தரு வருந்தவனே. 47

சிற்சபையப்பனை யுற்றேனே
சித்தியெலாஞ்செயப் பெற்றேனே. 48

அம்பலவாணர்தம் மடியவரே
யருளரசான்மணி முடியவரே. 49

அருட்பெருஞ்சோதியைக் கண்டேனே
ஆனந்தத்தெள்ளமு துண்டேனே 50

இருட்பெருமாயை விண்டேனே
எல்லாஞ்செய்சித்தியைக் கொண்டேனே. 51

கருணாநிதியே குணநிதியே
கதிமாநிதியே கலாநிதியே. 52

தருணாபதியே சிவபதியே
தனிமாபதியே சபாபதியே 53

கருணாநிதியே சபாபதியே
கதிமாநிதியே பசுபதியே. 54

சப்பாபதிபாதம் தபோபிரசாதம்
தயாநிதிபோதம் சதோதயவேதம். 55

கருணாம்பரவர கரசிரபவபவ
அருணாம்பரதர ஹரஹரசிவசிவ. 56

கனகாகரபுர ஹரசிரகரதர
கருணாகரபர சுரவரஹரஹர. 57

கனகசபாபதி பசுபதிநவபதி
அனகவுமாபதி யசிபதிசிவபதி. 58

வேதாந்தபராம் பரசயசய
நாதாந்தநாடாம்பா சயசய. 59

ஏகாந்தசர்வேச நமோநம
யேகாந்தநடேச நமோநம. 60

ஆதாம்பர்வாடக வதிசயசய
பாதாம்புசநாடக சயசயசய. 61

போதாந்தபுரேச சிவகாம
நாதாந்தநடேச நமோநம. 62

ஜாலகோலகன கம்பரசாயக
காலகாலவன காம்பரநாயக 63

உபலசிர்தல சுபகணவங்கண
சுபலகரதல கண்பணகங்கண. 64

அபயவர்தகர் தல்புரிகாரண
உபயபர்தபத பர்பரிபூரண. 65

அகரவுகரகூப காவர்சினகர
த்கரவகரநவ புர்சிரதினகர. 66

வகரசிரதின காசசிகரபுர
மகரவகரவர் புரஹரஹரஹர. 67

பரமமந்திரிசக ளாகளகரண
படனதந்திரங்க மாகமசரண. 68

அனந்தகோடிகுண காகரசொலிதர்
அகண்டவேதசிர காரைபலிதா. 69

பரிபூரணஞான சிதம்பர
பதிகாரண நாதபரம்பர. 70

சிவஞானப தாடகநாடக
சிவபோதப ரோகளகூடக 71

சகலலோபகர காரகவாரக
சபளயோகசர பூரகதாரக. 72

சத்வபோதக தாரணதன்மய
சத்யவேத பூரணசின்மய. 73

வரகேசாந்தம கோதயகாரிய
பசுபாசாந்த சுகோதபசூரிய 74

பளிதீபக சோபிதபாதா
லளிதரூப ஸ்தாபிதநாதா. 75

அனூர்தபோக சருணாம்பகநாதா
அமிர்தரூப தருணாம்புசபாதா. 76

அம்போருகபத அரகரசங்கர
சம்போசிவசிவ சிவசிவசங்கர. 77

சிதம்பரகாசா பயம்பிரகாசா
சிதம்பரேசா சுயம்பிரகாசா 78

அருட்பிரகாசம் பரப்பிரகாசம்
அகம்பிரகாசம் சிவப்பிரகாசம், 79

நடப்பிரகாசம் தவப்பிரகாசம்
நவப்பிரகாசம் சிவப்பிரகாசம். 80

நாதபரம்பரனேபர நாதசிதம்பரனே
நாததிகம்பரனே நாதசுதந்திரனே. 81

ஞானநடத்தவனேபர ஞானியிடத்தவனே
ஞானவரத்தவனே சிவஞானபுரத்தவனே. 82

ஞானசபாபதியேமறை நாடுசதாகதியே
தீனதயாநிதியேயா தேவியுமாபதியே. 83

புத்தந்தரும்போதா வித்தந்தருந்தாதா
நித்தந்தரும்பாதா சித்தந்திரும்பாதா. 84

திருச்சிற்றம்பலம்.

அருள்விளக்கமாலை.

எண்சீரடி யாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கல்லார்க்குங்கற்றவர்க்குங் களிப்பருளுங்களிப்பே
காணார்க்குங்கண்டவர்க்குங் கண்ணளிக்குங்கண்ணே
வல்லார்க்குமாட்டார்க்கும் வரமளிக்கும்வரமே
மதியார்க்கும்மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும்மதியே
நல்லார்க்கும்பொல்லார்க்கும் நடுநின்றநடுவே
நரர்களுக்குஞ்சுரர்களுக்கும் நலங்கொடுக்கும்நலமே
எல்லார்க்கும்பொதுவில்நட மிடுகின்றசிவமே
என்னரசேயான்புகலு மிசையுமணிந்தருளே.

தனிச்சிறியேன்சிறிதிங்கே வருந்தியபோததனைத்
தன்வருத்தமெனக்கொண்டு தரியாதக்கணத்தே
பனிப்புறுமவ்வருத்தமெலாந் தவிர்த்தருளிமகனே
பயமுனக்கென்னென்றென்னைப் பரிந்தணைந்தகுருவே
இனிப்புறுநன்மொழிபகன்றேன் முடிமிசைமலர்க்கா
லிணையமர்த்தியென்னையாண்ட வென்னுயிர்நற்றுணையே
கனித்துநறுங்கனியேயென் கண்ணேசிற்சபையில்
கலந்தநடத்தரசேயென் கருத்துமணிந்தருளே. 2

இருளிரவிலொருமூலைத் திண்ணையில்நான்பசித்தே
இளைப்புடனேபடுத்திருக்க வெனைத்தேடிவந்தே
பொருளுணவுகொடுத்துண்ணச் செய்வித்தேபசியைப்
போக்கியருள்புரிந்தவென்றன் புண்ணியநற்றுணையே
மருளிரவுநீக்கியெல்லா வாழ்வுமெனக்கருளி
மணிமேடைநடுவிருக்க வைத்தவொருமணியே
யருளுணவுமளித்தென்னை யாட்கொண்டசிவமே
யம்பலத்தென்னரசேயென் னலங்கணிந்தருளே. 3

நான்பசித்தபோதெல்லாந் தான்பசித்ததாகி
நல்லுணவுகொடுத்தென்னைச் செல்வமுறவளர்த்தே
யூன்பொசித்தவிளைப்பொன்றுந் தோற்றாதவகையே
யொள்ளியதெள்ளமுதெனக்கிங் குவந்தளித்தவொளியே
வான்பதிக்குநெடுமாற்கு நான்முகர்க்குமரிதாம்
வாழ்வெனக்கேயாகியுற வரமளித்தபதியே
தேன்பரித்தமலர்மணமே திருப்பொதுவில்ஞானத்
திருநடஞ்செய்யரசேயென் சிறுமொழியேற்றருளே. 4

திசையறியமாட்டாதே திகைத்தசிறியேனைத்
தெளிவித்துமணிமாடற் றிருத்தவிசிலேற்றி
நசையறியாநற்றவரு மற்றவருஞ்சூழ்ந்து
நயப்பவருட்சிவநிலையை நாட்டவைத்தபதியே
வசையறியாப்பெருவாழ்வே மயலறியாவறிவே
வானடுவேயின்பவடி வாயிருந்தபொருளே
பசையறியாமனத்தவர்க்கும் பசையறிவித்தருளப்
பரிந்தநடத்தரசேயென் பாட்டுமணிந்தருளே. 5

நன்மையெலாந்தீமையெனக் குரைத்தோடித்திரியும்
நாய்க்குலத்திற்கடையான நாயடியேனியற்றும்
புன்மையெலாம்பெருமையெனப் பொருத்தருளிப்புலையே
பொய்யுரைமெய்யுரையாகப் புரிந்துமகிழ்ந்தருளி
தன்மையெலாமுடையபெருந் தவிசேற்றிமுடியுந்
தரித்தருளியைந்தொழில்செய் சதுரளித்தபதியே
யின்மையலாந்தவிர்ந்தடியா ரின்பமுறப்பொதுவி
லிலங்குநடத்தரசேயென் னிசையுமணிந்தருளே. 6

மதமொன்றுஞ்சமயமென்றுஞ் சாஸ்திரங்களென்றும்
மன்னுகின்றதேவரென்றும் மற்றவர்கள்வாழும்
பதமென்றுபதமடைந்த பத்தரநுபவிக்கப்
பட்டநுபவங்களென்றும் பற்பலவாவிரிந்த
விதமொன்றுந்தெரியாதே மயங்கியவென்றனக்கே
வெட்டவெளியாயறிவித் திட்டவருளிறையே
சதமொன்றுஞ்சுத்தசிவ சன்மார்க்கபொதுவில்
தனிநடஞ்செய்யரசேயென் சாற்றுமணிந்தருளே. 7

அருளுடையாரெல்லாருஞ் சமரசசன்மார்க்க
மடைந்தவரேயாதலினு லவருடனேகூடி
தெருளுடையவருணெறியிற் களித்துவிளையாடிச்
செழித்திடுகவாழ்கவெனச் செப்பியசற்குருவே
பொருளுடையபெருங்கருணைப் பூரணமெய்ச்சிவமே
போதாந்தமுதலாறும் நிறைந்தொளிருமொளியே
மருளுடையார்தமக்குமரு ணீக்கமணிப்பொதுவில்
வயங்குநடத்தரசேயென் மாலையுமேற்றருளே. 8

காலையிலேயென்றனக்கே கிடைத்தபெரும்பொருளே
களிப்பேயென்கருத்தகத்தே கனித்தநறுங்கனியே
மேலையிலேயிழ்மையிலோ வெருமையிலேதவத்தால்
மேவுகின்றபெரும்பயனும் விளைவையெலாந்தருமச்

சாலையிலேல்யொருப்கலிற் றந்ததனிப்பதியே
சமரசசன்மார்க்கசங்கத் தலையமர்ந்தநிதியே
மாலையிலேசிறந்தமொழி மாலையணிந்தாடு
மாநடத்தென்னரசேயென் மாலையணிந்தருளே. 9

தலைகாலிங்கறியாதே திரிந்தசிறியேனைத்
தான்வலிந்தாட்கொண்டருளித் தடைமுழுதுந்தவிர்த்தே
மலைவறுமெய்யறிவளித்தே யருளமுதமருத்தி
வல்லபசத்திகளெல்லா மருவியிடப்புரிந்து
நிலையுறவேதானுமடி யயனுமொருவடிவாய்
நிறையநிறைவித்துயர்ந்த நிலைதேன்மேலமர்த்தி
அலர்தலைப்பொருட்சோதி யரசுகொடுத்தருளி
யாடுகின்றவரசேயென் னலங்கலணிந்தருளே. 10

முறையீடு.

எண்சீரடி ஆசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மருந்தறியேன்மணியறியேன் மந்திரமொன்றறியேன்
மதியறியேன்விதியறியேன் வாழ்க்கைநிலையறியேன்
திருந்தறியேன்திருவருளின் செயலறியேனறந்தான்
செய்தறியேன்மனமடங்குந் திறத்திலோரிடத்தே
யிருந்தறியேனறிந்தோரை யேத்திடவுமறியே
னெந்தைபிரான்மணிமன்ற மெய்தவறிவேனோ
விருந்திசைசொலவறியே னெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே. 1

அகங்காரக்கொடுங்கிழங்கை யகழ்ந்தெறியவறியே
னறிவறிந்தவந்தணர்பாற் செறியுநெறியறியேன்
நகங்காணமுறுதவர்பால் நலம்புரிந்துமறியேன்
நச்சமரக்கனிபோலே யிச்சைகனிந்துழன்றேன்
மகங்காணும்புலவரெலாம் வந்துதொழநடிக்கும்
மணிமன்றந்தன்னையடையும் வழியுமறிவேனோ
கங்காணத்திரிகின்றே னெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே. 2

கற்குமுறைகற்றறியேன் கற்பனகற்றறிந்த
கருத்தர்திருக்கூட்டத்திற் களித்திருக்கவறியேன்
நிற்குநிலைநின்றறியே னின்றாரினடித்தேன்
நெடுங்காமப்பெருங்கடலை நீந்தவகையறியேன்

சிற்குணமாமணிமன்றிற் றிருநடனம்புரியுந்
திருவடியென்சென்னிமிசைச் சேர்க்கவறிவேனோ
இக்குணஞ்செய்துழல்கின்றே னெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே. 3

தேகமுறுபூதநிலைத் திறஞ்சிறிதுமறியேன்
சித்தாந்தநிலையறியேன் சித்திநிலையறியேன்
யோகமுறுநிலைசிறிது முணர்ந்தறியேன்சிறியே
னுலகநடையிடைகிடந்தே யுழப்பாரிற்கடையேன்
ஆகமுருதிருநீற்றி னொளிவிளங்கவிசைந்த
யம்பலத்திலாடுகின்ற வரியையறிவேனோ
ஏகவநுபவமறியே னெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே. 4

வரையபரமார்க்கமொடு பரமார்க்கமறியேன்
மரணபயந்தவிர்த்திடுஞ்சன் மார்க்கமதையறியேன்
திரையறுதண்கடலறியே னக்கடலைக்கடந்தே
தெள்ளமுதமுணவறியேன் சினமடக்கவறியேன்
உரையுணர்வுகடந்ததிரு மணிமன்றந்தனிலே
யொருமைநடம்புரிகின்றார் பெருமையறிவேனே
இரையுறுபொய்யுலகினிடை யெங்ஙனநான்புகுவேன்
யார்க்குரைப்பேனென்னசெய்வே னேதுமறிந்திலனே. 5

திருச்சிற்றம்பலம்.

ஆனந்தமேலீடு.

இராகம் சஹானா-ஆதிதாளம்.

திருச்சிற்றம்பலம்.

கையறவிலாதுநடுக் கண்புருவப்பூட்டு
கண்டுகளிகொண்டுதிறந் துண்டுநடுநாட்டு
ஐயர்மிகவுய்யும்வகை யப்பர்விளையாட்டு
ஆடுவதென்மேமறைகள் பாடுவதுபாட்டு. 1

சிற்சபையும்பொற்சபையுஞ் சொந்தமெனதாச்சு
தேவர்களுமூவர்களும் பேசுவதென்பேச்சு
இச்சமயவாழ்விலெனக் கென்னையினியேச்சு
என்பிறவித்துன்பமெலா யின்றோடேபோச்சு. 2

ஐயரருட்சோதியர சாட்சியெனதாச்சு
ஆரணமுமாகமமும் பேசுவதென்பேச்சு

இவ்வுலகவாழ்விலெனக் கென்னையினியேச்சு
என்பிறவித்துன்பமெலா மின்றோடேபோச்சு. 3

ஈசனருளாற்கடலி லேற்றதொருவோடம்
ஏறிக்கரையேறினே னிருந்ததொருமாடம்
தேசறுமம்மாடநடுத் தெய்வமணிப்பீடம்
தீபவொளிகண்டவுடன் சேர்ந்ததுசந்தோடம். 4

மேருமலைஉச்சியில் விளங்குகம்பளீட்சி
மேவுதன்மேலுலகில் வீறுமரசாட்சி
சேருமதிற்கண்டபல காட்சிகள்கண்காட்சி
செப்பலரிதாமிதற்கென் னப்பனருட்காட்சி. 5

துரியமலைமேலுளதோர் சோதிவளநாடு
தோன்றுமதிலையர் நடஞ்செய்யுமணிவீடு
தெரியுமதுகண்டவர்கள் காணிலுயிரோடு
செத்தவரெழுவாரென்று கைதாளம்போடு. 6

சொல்லாளப்பரிய சோதிவரைமீது
தூயதுரியப்பதியில் நேயமறையோது
எல்லாஞ்செய்வல்லசித்தர் தம்மைபுறம்போது
இறந்தவரெழுவாரென்று புரந்தாரையூது. 7

சிற்பொதுவும்பொற்பொதுவும் நானறியலாச்சு
சித்தர்களும்முத்தர்களும் பேசுவதென்பேச்சு
இப்பெரியவிவ்வுலகி லென்னையினியேச்சு
என்பிறவித்துன்பமெலா மின்றோடேபோச்சு. 8

வலதுசொன்னபேர்களுக்கு வந்ததுவாய்த்தாழ்வு
மற்றவரைச்சேர்ந்தவர்க்கும் வந்ததலைத்தாழ்வு
வலதுபுசமாடநம்மால் வந்ததருள்வாழ்வு
மற்றுநமைச்சூழ்ந்தவர்க்கும் வந்ததுநல்வாழ்வு. 9

அம்பலத்திலெங்களைய ராடியநல்லாட்டம்
அன்பொடுதுதித்தவருக் கானதுசொல்லாட்டம்
வம்புசொன்னபேர்களுக்கு வந்ததுமல்லாட்டம்
வந்ததலையாட்டமின்றி வந்ததுபல்லாட்டம். 10

நாத்திகஞ்சொல்கின்றவர்தம் நாக்குமுடையார்க்கு
நாக்குருசிகொள்ளுவது நாறியபிண்ணாக்கு

கீர்த்திபெருமம்பலவர் சீர்புகன்றவாக்கு
செல்வாக்குநல்வாக்கு தேவர்திருவாக்கு. 11

திருச்சிற்றம்பலம்.

வேட்கைக்கொத்து.

தலைமகள் பாங்கியொடுகூறல்.

எண்சீர்க்கழி நெடிலடிச்சந்த விருத்தம்.

விண்படைத்தபுகழ்த்தில்லை யம்பலத்தானெவர்க்கும்
மேலானண்ணன்பொருளை மேவுநடராஜன்
பண்படைத்தவென்னையறியா விளம்பருவந்தனிலே
பரிந்துவந்துமாலையிட்டான் பார்த்தறியான்மீட்டும்
பெண்படைத்தபெண்களெலா மவமதித்தேவலது
பேசுகின்றார்கூசுகின்றேன் பிச்சியெனலானேன்
கண்படைத்துங்குழியில்விழக் கணக்குமுண்டோவவன்றன்
கணக்கறிந்தும்விடுவேனோ கண்டாயென்றோழி. 1

சித்தமணியம்பலத்தா னென்பிராணநாதன்
சிவபெருமானெம்பெருமான் செல்வநடராஜன்
வாய்த்தவென்னையறியாத விளம்பருவந்தனிலே
மகிழ்ந்துவந்துமாலையிட்டார் மறித்துமுகம்பாரா
ராய்த்தகலைகற்றுணர்ந்த வணங்கலையார்தமக்கு
ளார்செய்தபோதனையோ வாறுலுமிதுகேள்
காய்த்தமரம்வளையாத கணக்குமுண்டோவவன்றன்
கணக்கறிந்தும்விடுவேனோ கண்டாயென்றோழி. 2

என்னுயிரிற்கலந்துகலந் தினிக்கின்றபெருமா
னென்னிறைவன்பொதுவிநட மியற்றுநடராஜன்
றன்னையறியாம்பருவத் தென்னைமணம்புரிந்தான்
றனையறிந்தபருவத்தே யெனையறியவிரும்பான்
பின்னையன்றிமுன்னுமொரு பிழைபுரிந்தேனில்லை
பெண்பரிதாபங்காணல் பெருந்தகைக்குமழகோ
கன்னலென்றால்கைக்கின்ற கணக்குமுண்டோவவன்றன்
கணக்கறிந்தும்விடுவேனோ கண்டாயென்றோழி. 3

தெருளமுதத்தனியோகர் சிந்தையுலுறுஞானச்
செல்வாறிவிடத்துநடஞ் செய்யுநடராஜன்
அருளமுதமளிப்பனென்றே யன்றுமணம்புணர்ந்தா
னளித்தறியானனுத்துணையு மநுபவித்துமறியேன்

மருளுடையானல்லனொரு வஞ்சகனுமல்லன்
மனமிரக்கமிகவுடையோன் வல்வினையேனளவி
லிருளுடையார்போருக்கு மியல்பென்னையவன்றன்
னியல்பரிந்தும்விடுவேனோ வினித்தானென்றோழி. 4

சின்மயமாம்பொதுவினிலே தன்மயமாய்நின்று
திருநடஞ்செய்பெருங்கருணைச் செல்வநடராஜ
னென்மயநானறியாத விளம்பருவந்தனிலே
யென்னைமணம்புரிந்தனனீ தெல்லாருமறிவா
ரின்மயமில்லாதவர்போ லின்றுமணந்தருளா
னிறையளவும்பிழைபுரிந்தே னில்லையவனிதயங்
கன்மயமேவன்சுவைக் கனிமயமேயென்னுங்
கணக்கறிந்துவிடுவேனோ கண்டாயென்றோழி. 5

என்குணத்தானெல்லார்க்கு மிறைவனெல்லாம்வல்லா
னென்னகத்தும்புறத்துமுளா னின்பநடராஜன்
பெண்குணத்தையறியாத விளம்பருவந்தனிலே
பிச்சேற்றிமணம்புரிந்தான் பெரிதுகளித்திருந்தேன்
வண்குணத்தாலநுபவநா னறியநின்றபொழுதில்
வந்தறியானின்பமொன்றுந் தந்தரியானவனும்
வெணகுணத்தானல்லன்மிகு நல்லெனப்பலகால்
விழித்தரிந்துவிடுவேனோ விளம்பாயென்றோழி. 6

பொய்யாதபுகழுடையான் பொதுவினடம்புரிவான்
புண்ணியர்பாநண்ணியநற் புநிதநடராஜன்
கொய்யாயிவரும்பனைய விளம்பருவந்தனிலே
குறித்துமணம்புரிந்தனனான் மரித்தும்வரக்காணேன்
செய்யாதசெய்கையொன்றுஞ் செய்தறியேன்சிறிதுஞ்
திருவுளமேயரியுமற்றென் னொருவுலகத்தின்செயல்க
னையாதவென்றனுயிர் நாதனருட்பெருமை
நானறிந்தும்விடுவேனோ நவிலாயென்றோழி. 7

கண்ணனையானென்னுயிரிற் கலந்துநின்றகணவன்
கணக்கரியான்பிணக்கரியான கருணைநடராஜன்
றண்ணனையாமிளம்பருவந் தன்னிலெனைத்தனித்துத்
தானேவந்தருள்புரிந்து தனிமாலைபுனைந்தான்
பெண்ணனையார்கண்டபடி பேசவுநான்கூசாப்
பெருமையொடுமிருந்தேனென் னருமையெலாமறிந்தா
னுண்ணனையாவகைவரவு தாழ்த்தனனின்றவன்றன்
னுளமறிந்துவிடுவேனோ வுரையாயென்றோழி. 8

ஊன்மறந்தவுயிரகத்தே யொளிநிறைந்தவொருவ
னுலகமெலாமுடையவ னென்னுடையநடராஜன்
பான்மறந்தசிறியவிளம் பருவமதின்மாலைப்
பரிந்தணிந்தான்றெரித்ததனிப் பருவமதிற்பரியான்
றான்மறந்தானெனினுமிங்கு நான்மறக்கமாட்டேன்
றவற்றேரியவத்திழியச் சம்மதமும்வருமோ
கோன்மறக்குடியேபோன் மிடியேனானவன்றன்
குணமறிந்துவிடுவேனோ கூறாயென்றோழி.

தனித்தபரநாதமுடித் தலத்தின்மிசைதலத்தே
தலைவரெலாம்வணங்கநின்ற தலைவநடராஜ
னினித்தசுகமறிந்துகொளா விளம்பருவந்தனிலே
யென்புருவநடுவிருந்தா பின்புகண்டேனிலை
யனித்தமிலாவிச்சரிதம் யார்க்குரைப்பேனந்தோ
வவனறிவானானறிவே னயலறிவாருளரோ
துனித்தநிலைவிடுத்தொருநாற் சுத்தநிலையதனிற்
சுகங்கண்டும்விடுவேனோ சொல்வாயென்றோழி. 10

திருச்சிற்றம்பலம்.

சிவதரிசனம்.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

பாவிமனக்குரங்காட்டம் பார்க்கமுடியாதே
பதிவெறுத்தேனிதிவெறுத்தேன் பற்றனைத்துந்தவிர்ந்தே
னாவியுடல்பொருளையனபாற் கொடுத்தேனுன்னருட்பே
ராசைமயமாகியுனை யடுத்துமுயல்கின்றேன்
கூவியெனையாட்கொள்ள நினையாயோநினது
குறிப்பறியேன்பற்பலகால் கூவியிளைக்கின்றேன்
தே[illegible]சிவகாமவல்லி மகிழுமணவாளா
தெருணிறைவானமுதளிக்குந் தருணமிதுதானே.

கட்டவிழ்த்தமலமெனக் கருத்தவிழ்ந்துநினையே
கருதுகின்றேன்வேறொன்றுங் கருதுகிலேனிதுதான்
சிட்டருளந்திகழ்கின்ற சிவபதியேநினது
திருவுளமேயறிந்துநான் செப்புதலென்மேல்
விட்டகுறைதொட்டகுறை யிரண்டுநிறைந்தனனீ
விரைந்துவந்தேயருட்சோதி புரிந்தருளுந்தருணந்
தொட்டதுநான்றுணிந்துரைத்தே னீயுணர்த்தவுணர்ந்தே
சொல்வதெல்லாவென்னறிவாற் சொல்வல்லேனன்றே. 2

காட்டையெல்லாங் கடந்துவிட்டே னாட்டையடைந்துனது கடிநகர்ப்பொன் மதிற்காட்சி கண்குளிரக்கண்டேன், கோட்டையெலாங் கொடிநாட்டி கோலமிடப் பார்த்தேன் கோயிலின் வாயிலிலே குறைகளெலாந் தவிர்ந்தேன், சேட்டையற்றுக் கருவியெலா மென்வசமின்றிடவே சித்தியெலாம்பெற்றேனென் றிருச்சிற்றம்பலமேல் பாட்டையெலாம் பாடுகின்றனிதுதருணம்பதியேபலந்தரு வென்னுளந்தனிலேகலந்து நிறைந்தருளே. 3

திருச்சிற்றம்பலம்.

பிரியேனென்றல்.

எண்சீரடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

அப்பா நான் பற்பலகா லறைவதென்னேயடியேன்ச்சமெலாந் துன்பமெலாமறுத்து விரைந்துவந்தே யிப்பாரிலிதுதருண மென்னையடைந்தருளி யெண்ணமெலா முடித்தென்னை யென்றுகொளா யெனிலோ, தப்பாம லுயிர்விடுவேன் சத்தியஞ்சத்திய நின்றாளிணைகளறிகவிதுதயவுடையோ யெவர்க்குந், துப்பாகித் துணையாகித் துலங்கியமெய்த்துணையே சுத்தசிவானந்த வருட்சோதி நடத்தரசே 1

படமுடியா தினித்துயரம்படமுடியாதரசே யட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப்பொழுதென், னுடலுயிராதிய வெல்லாம் நீயெடுத்துக்கொண்டுன் னுடலுயிராதிய வெல்லாமுவந்தெனக்கே யளிப்பாய், வடலுறு சிற்றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுள் மணியேயென் குருமணியே மாணிக்கமணியே நடன சிகாமணியே யென் னவமணியே ஞானநன்மணியே பொன்மணியே நடராஜமணியே. 2

உன்னை மறந்திடுவேனோ மறப்பறியேன் மறந்தாலுயிர்விடுவேன் கணந்தரியே லுன்றுணையிதுநீயென்னை மறந்திடுவாமோ மறந்திடுவாயெனில் யானென்னசெய்வே னெங்குருவே னெவர்க்குரைப்பே னெந்தாயென்னையினுந் தயவுடையாய் நீமறந்தாயெனிலு மகிலமெலா மளித்திடு நின்னருள்மறவா தென்றேயின்னுமிகக் களித்திங்கே யிருக்கின்றேன் மறவேலிதுதருண மருட்சோதி யெனக்கு விரைந்தருளே. 3

பெரியனருட் பெருஞ்சோதிப் பெருங்கருணைப்பெருமான், பெரும்புகழைப் பேசுதலே பெரும்பேறன் றுணர்ந்தே, துரியநிலத்தவரெல்லாந் துதிக்கின்றாரேழை துதித்தல் பெரிதலவிங்கேதுதித்திடவென்றெழுந்த,வரியபெரும் பேசைக்கடல் பெரிதே யதுவென்னளவுகடந் திழுக்கின்றதாதலினால் விரைந்தே, யுரியவருளமுதளித்தே நினைத்துதிப்பித்தருள்வா யுலகமெலாங் களித்தோங்க வோங்குநடத்தரசே. 4

கவலையெலாந் தவிர்த்துமிகக் களிப்பினொடு நினையே கைகுவித்துக் கண்களினீந்து களிந்து சுரந்திடவே, கவலைமனச்சலமெலாந் தீர்ந்துசுகமாய்த்தானே தானாகியின்பத்தனிநடஞ்செய்யினைத்தாள். தவலருஞ்சீர்ச் சொன்மாலை வனைந்துவளேந்தணிந்து நானாகினானுடத் தருணமிதுதானே, குவலயத்தாரதிசயிக்க வெழுந்தருவி வருவாருங் குருவேயென் குற்றமெலாங் குணமாக கொண்டவனே. 5

திருச்சிற்றம்பலம்.

வாதனைக்கிரங்கல்.

எண்சீர்க்கழி நெடிலடிச்சந்த விருத்தம்

திருச்சிற்றம்பலம்.

படமாட்டேன் றுயர்சிறிதும் படமாட்டேனினிநான்
பயப்படவுமாட்டே னுன் பதத்துணையேபிடித்தேன்
விடமாட்டேனேமாந்து விடமாட்டேன்கண்டீர்
மெய்ம்மையிது நும்மாணை விளம்பினனும்மடியேன்
கெடமாட்டேன்பிறர்மொழிகள் கேட்டிடவுமாட்டேன்
கிளரொளியம்பலத்தாடல் வளரொளிநும்மல்லால்
நடமாட்டேனென் னுளத்தே நான் சாகமாட்டே
னல்லதிருவருளாலே நான்றானானேனே. 1

தகாதகல்வியிலே தலைகாட்டித் தலைகாட்டிக்கொடுத்தீர்
சடையறியாக்கால்காட்டி தாம்பெறவுமளித்தீர்
மாகாதலுடையவனுன் மனங்கனிவித்தழியா
வானமுதும்மெஞ்ஞான மருந்துமுணரப்புரிந்தீர்
போகாதபுனலாலே சுத்தவுடம்பினராம்
புண்ணியரும்நண்ணரிய பொதுநிலையுந்தந்தீர்
ராசாதிபதிகளுநின் றேத்தவளர்க்கின்றீர்
நடராஜரேநுமக்கு நானெதுசெய்வேனே. 2

வேதாந்தநிலையுமதா னந்தந்தேவிளங்கு
மெய்நிலையுங்காட்டுவித்தீர் விளங்கியசித்தாந்தம்
போதாந்தநிலையுமப்பாற் புகலரிதாம்பெரிய
பொருணிலையுந்தெரிவித்தீர் புண்ணியரேநுமது
மாதாந்தமறிவித்தீர் சுத்தவடிவுடனே
பகர்புரணவகாரப் பரிசுமெனக்களித்தீர்
நாதாந்தத்தனிச்செங்கோல் நான்செலுத்தக்கொடுத்தீர்
நடராஜரேநுமக்கு நானேதுசெய்வேனே. 3

பாயிரமாமறைகளெலாம் பாடுகின்றபாட்டுன்
பாட்டேயென்றறிந்துகொண்டேன் பரம்பொருளுன்பெரு
ஆயிரமாயிரங்கோடி நாவுடையோரெனினு [மை
மணுத்துணையும்புகலரிதே லந்தோவிச்சிறியேன்

வாயிரங்காவகைபுகலத் துணிந்தேனென்னுடைய்
மனத்தாசையொருகடலோ வெழுகடலிற்பெரிதே
சேயிரங்காமுனமெடுத்தே யணைந்திடுந்தாயனையாய்
திருச்சிற்றம்பலம்விளங்குஞ் சிவஞானகுருவே. 4

அந்நாடிலடிச்சிறியே னம்பலவாயிலிலே
யருளைநினைந்தொருபுறத்தே யயர்ந்தழுதுநின்றேன்
முந்நாளில்யான்புரிந்த பெருந்தவத்தாலெனக்கு
முகமலர்ந்துமொழிந்த வருண்மொழியைநினைந்தந்தச்
செந்நாளையெதிர்பார்த்தே பன்னாளுங்களித்தேன்
சிந்தைமலர்ந்திருந்தேனச் செல்வமிகுதிருநாள்
இந்நாலேயாதலினு லெனக்கருள்வீரென்றே
னென்பதன்முன்னத்தீர் நும்மன்புலகில்பெரிதே. 5

திருச்சிற்றம்பலம்.

ஆனந்தக்களிப்பு.

திருச்சிற்றம்பலம்.

நல்லமருந்திடும் மருந்து-சுக
நல்கும் வைத்தியநாத மருந்து-நல்ல

அருள்வடிவான மருந்து-நம்முன்
அற்புதமாக வமர்ந்த மருந்து
இருளற வோங்கு மருந்து-அன்பர்க்
கின்புருவாக விருந்த மருந்து-நல்ல 1

சஞ்சலந்தீர்க்கு மருந்து-எங்குந்
தானேதானாகித்தழைக்கு மருந்து
அஞ்சலென்றாளு மருந்து-சச்சி
தாநந்தமாக வமர்ந்த மருந்து-நல்ல 2

வித்தகமான மருந்து-சதுர்
வேதமுடிவில் விளங்கு மருந்து
தத்துவாதீத மருந்து-என்னைத்
தானாக்கிக்கொண்ட தயாள மருந்து நல்ல 3

பிறப்பை யொழிக்கு மருந்து
பேசப்படாத பெரிய மருந்து
இறப்பைத் தவிர்க்கு மருந்து-என்று
மென்றுமதுரித்தினிக்கு மருந்து-நல்ல

அம்பலத்தாடு மருந்து-பர
மாநந்த வெள்ளத்தழுத்து மருந்து
எம்பலமாகு மருந்து—வேறா
ரென்னுந் தலத்திலிருக்கு மருந்து நல்ல 5

சேதப்படாத மருந்து உண்டார்
தேன்போலினிக்குந் தெவிட்டா மருந்து
பேசப்படாத மருந்து-மலைப்
பெண்ணிடங்கொண்ட பெரிய மருந்து-நல்ல 6

பால்வண்ணமாகு மருந்து அதிற்
பச்சைநிறமும படர்ந்த மருந்து
நூல்வண்ண நாடு மருந்து-உள்ளே
நோக்குகின்றோர்களை நோக்கு மருந்து-நல்ல 7

பார்க்கப் பசிபோ மருந்து-தன்னைப்
பாராதவர்களைச்சேரா மருந்து
கூர்க்கத் தெரிந்த மருந்து—அனு
கூலமருந்தென்று கொண்ட மருந்து-நல்ல 8

கோமளங்கூடு மருந்து-நலம்
கொடுக்கத்துஜங் கட்டிக்கொண்ட மருந்து
நாமளவாத மருந்து-நம்மை
நாமறியும்படி நண்ணு மருந்து-நல்ல 9

மூவர்க் கரிய மருந்து-செல்வ
முத்துகுமாரனை யீன்ற மருந்து
நாவிற்கினிய மருந்து-தைய
நாயகிகண்டு தழுவு மருந்து-நல்ல 16

திருச்சிற்றம்பலம்.

இராகம்-அடாணா-ரூபகதாளம்.

பல்லவி.

எனக்குமுனக்குமிசைந்தபொருத்த மென்னபொருத்தமோ
இந்தப்பொருத்தமுலகில்பிறருக் கெய்தும்பொருத்தமே.

சரணம்.

தனக்குநிகரிங்கில்லாதுயர்ந்த தம்பமொன்றதே
தாவிப்போகப்போகநூலின் றாத்திரினின்றதே

கனக்கத்திகைப்புற்றங்கோனனுங் கலங்கிவருந்தவே
கலக்கநீக்கித்தூக்கிவைத்தாய் நிலைபொருந்தவே. 1

இங்கோர்மலையினடுவிலுயர்ந்த தம்பம்நணுகவே
யேறிப்போகநூலி னிழைபோலுனாகவே
அங்கேதிகைத்துநடுங்கும்போ தென்னடுக்கநீக்கியே
யதன்மேலுயர்ந்தநிலையில்வைத்தா யடிமையாக்கியே. 2

இரவிற்பெரியவெள்ளம்பரவி யெங்குந்தயங்கவே
யானுஞ்சிலரும்படகிலேறி யேமயங்கவே
விரவித்தனித்துங்கென்னையொருகன் மேட்டிலேற்றியே
விண்ணிலுயர்ந்தமாடத்திருக்க விதித்தாய்போற்றியே. 3

மேலைப்பார்சிவகங்கை யென்னுமோர்தீர்த்தந்தன்னையே
மேடிப்படிற்றவரிநீரில் விழுந்தவென்னையே
யேலத்துகிலுமுடம்புநனையா தெடுத்ததேயொன்றோ
வெடுத்தென்கரத்திற் பொற்பூணணிந்தவிறைவனீயன்றோ.

என்னதுடலுமுயிரும்பொருளு நின்னதல்லவோ
வெந்தாயிதனைப்பெறுகநினதுகா ணின்றுசொல்லவோ
சின்னவயதிலென்னையாண்ட திறத்தைநினைக்குதே
சித்தநனைக்கக்கண்ணீர்பெருக்கி யுடம்பைநனைக்குதே. 5

அப்பாநின்னையன்றியெங்கு மணைப்பாரில்லையே
யந்தோநின்னையன்றியெங்கு மருள்வாரில்லையே
எப்பாலவர்க்குநின்னையன்றி யிறைமையில்லையே
யெனக்குநின்மேலன்றியுலகு லிச்சையில்லையே. 6

அரசேயுன்னையணைக்கவெனக்கருள் ளாசைபொங்குதே
யணைப்போமென்றுமுண்மையாலென் னுவிதங்குதே
விரைசேர்பாதம்பிடிக்கவென்கை விரைந்துநீளுதே
மேவிப்பிடித்துகொள்ளுந்தோறு முவகையாளுதே. 7

தனியென்மேல்நீர்வைத்ததயவு தாய்க்குமில்லையே
தகுமைந்தொழிலும்வேண்டுந்தோறுந் தருதல்வல்லையே
வினவுமெனக்கென்னுயிரைப்பார்க்க மிகவுநல்லையே
மிகவுநான்செய்குற்றம்குறித்து விடுவாயல்லையே. 8

என்னையாண்டவண்ணமெண்ணி லுள்ளமுருகுதே
என்னைவிழுங்கியெங்குமின்ப வெள்ளம்பெருகுதே
உன்னவுன்னமனமுயிரு முடம்புமினுக்குதே
டின்னுடனென்னைவேறென்றெண்ணி மிகவும்பணிக்குதே.

உன்பேரருளைநினைக்குந்தோறு முடம்புபொடிக்குதே
உண்டுபசிதீர்ந்தாற்போற்காதல் மிகவுந்தடிக்குதே
அன்பேயமையுமென்றபெரியவர் வார்த்தைபோயிற்றே
யன்போரணுவுமில்லாதவெனக் கிங்கருளலாயிற்றே. 10

திருச்சிற்றம்பலம்.

திருவருள்விலாசப்பத்து.

எண்சீரடியாசிரிய விருத்தம்.

சிவசண்முக சிவஞானதேசிகன் றிருவடிவாழ்க.

ஆறுமுகப் பெருங்கருணைக் கடலேதெய்வ
யானைமகிழ் பணிக்குன்றே யரசேமுக்கட்
பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரேசெவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே பிரமஞானம்
வீறுமுகம் பெருங்குணத்தோ ரிதயத்தோங்கும்
விளக்கமேயானந்த வெள்ளமேமுன்
தேறுமுகப் பெரியவருட் குருவாயென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவதேவே. 1

கண்ணிமதி புனைந்தசடைக் கனியேமுக்கட்
கரும்பேயென்கண்ணே யெங்கருணைவாழ்வே
புண்ணியநன்னிலை புடையோ ருளத்தில்வாய்க்கும்
புத்தமுதே யானந்தபோகமேசீ
ரெண்ணியமெய்த் தவர்க்கெல்லா மெளிதிலீந்த
வென்னரசே யாறுமுகத் திரையாம்வித்தே
திண்ணியவென் மனமுருக்கிக் குருவாயென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவதேவே. 2

பன்னிருகண்மலர்ந்த கடலேஞானப்
பரஞ்சுடரே வாறுமுகம் படைத்தகோவே
யென்னிருகண்மணியே யெந்தாயேயென்னை
யீன்றோனே யென்னரசே யென்றன்வாழ்வே

சின்னிருவர் புடைவிளங்க மயின்மீதேறி
விரும்புமடியார்காண மேவுந்தேவே
சென்னியினின்னடி மலர்வைத் தென்னைமுன்னே
யிறுகாலையாட்கொண்ட தேவதேவே. 4

திருச்சிற்றம்பலம்.

பாங்கியர்க்கறிவுறுத்துதல்.

கண்ணிகள்.

திருச்சிற்றம்பலம்.

அம்பலத்திலாடுகின்றார் பாங்கிமாரே-அவர்
ஆட்டங்கண்டுநாட்டங்கொண்டேன் பாங்கிமாரே 1

ஆடுகின்றசேவடிமேற் பாங்கிமாரே மிக
ஆசைகொண்டுவாடுகின்றேன் பாங்கிமாரே. 2

இன்பவடிவாய்ச்சபையிற் பாங்கிமாரே-நட
மிட்டார்மேலிட்டம்வைத்தேன் பாங்கிமாரே. 3

ஈனவுடற்கிச்சைவையேன் பாங்கிமாரே-நட
நேசர்தமையெய்துவண்ணம் பாங்கிமாரே. 4

உத்தமர்பொன்னம்பலத்தே பாங்கிமாரே-யின்ப
வுருவாகியோங்குகின்றார் பாங்கிமாரே. 5

ஊனவுலகைக்கருதேன் பாங்கிமாரே-மன்றில்
உத்தமருக்குறவானேன் பாங்கிமாரே. 6

கற்பனையெல்லாங்கடந்தார் பாங்கிமாரேயென்ற
ன், கற்பனைக்குட்படுவாரோ பாங்கிமாரே. 7

கண்டிலர்நான்படும்பாடு பாங்கிமாரே-மூன்று
கண்ணுடையரென்பாரையோ பாங்கிமாரே. 8

கன்மனமெலாங்கரைப்பார் பாங்கிமாரே மனங்
கரையாரென்னளவிலே பாங்கிமாரே. 9

கள்ளமொன்றுமறியேனுன் பாங்கிமாரே-என்னை
கைவிடவுந்துணிவாரோ பாங்கிமாரே. 10

கற்பழித்துக்கலந்தாரே பாங்கிமாரே-இன்று
கைகழுவவிடுவாரோ பாங்கிமாரே. 11

கண்டவரெல்லாம்பழிக்க பாங்கிமாரே-என்றன்
கற்பழித்தேயொளித்தார் பாங்கிமாரே. 12

காமனைக்கண்ணாலெரித்தார் பாங்கிமாரே-என்றன்
காதலைக்கண்டறிவாரோ பாங்கிமாரே. 13

காவலையெல்லாங்கடந்து பாங்கிமாரே-என்னை
கைகலந்தகள்ளரவர் பாங்கிமாரே. 14

காணவிழைந்தேனவரைப் பாங்கிமாரே-கொண்டு
காட்டுவாரையறிந்திலேன் பாங்கிமாரே. 15

கிட்டவரவேண்டுமென்றார் பாங்கிமாரே-நான்
கேட்பதன்முன்சேட்படுத்தார் பாங்கிமாரே. 16

கிள்ளையைத்தூதாவிடுத்தேன் பாங்கிமாரே-அது
கேட்டுவரக்காணேனையே பாங்கிமாரே. 17

கீதவகைபாடிநின்றார் பாங்கிமாரே-அது
கேட்டுமதிமயங்கினேன் பாங்கிமாரே. 18

கீழ்மைகுறியாமலென்னைப் பாங்கிமாரே-மனக்
கேண்மைகுறித்தாரேயென் பாங்கிமாரே 19

கீடமனையேனையும் பாங்கிமாரே-அடிக்
கேயடிமைகொண்டாரன்று பாங்கிமாரே. 20

குற்றமெல்லாங்குணமாய் பாங்கிமாரே-கொள்ளுங்
கொற்றவரெல்லாங்கொழுநர்காண் பாங்கிமாரே. 21

குற்றமொன்றுஞ்செய்தறியேன் பாங்கிமாரே-என்னைக்
கொண்டுகுலம்பேசுவாரோ பாங்கிமாரே. 22

குஞ்சிதப்பொற்பாதங்கண்டார் பாங்கிமாரே-உள்ள
குறையெல்லாந்தீருங்கண்டீர் பாங்கிமாரே. 23

கூற்றுதைத்தபாதங்கண்டீர் பாங்கிமாரே-நாங்கள்
குடைக்கெல்லாங்குலதெய்வம் பாங்கிமாரே. 24

கூறரியபதங்கண்டு பாங்கிமாரே-களி
கொண்டுநிற்கவிழைந்தேனே பாங்கிமாரே. 25

கூடல்விழைந்தேனவரைப் பாங்கிமாரே-அது
கூடுவண்ணங்கூட்டிடுவீர் பாங்கிமாரே. 26

திருச்சிற்றம்பலம்.

வெண்ணிலா.

திருச்சிற்றம்பலம்.

தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே-ஒரு
தந்திரநீசொல்லவேணடும் வெண்ணிலாவே. 1

நாதமுடிமேலிருந்த வெண்ணிலாவே-அங்கே
நானும்வரவேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 2

சச்சிதாநந்தக்கடலில் வெண்ணிலாவே-நானும்
தாழ்ந்துவிழவேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 3

இராப்பகலில்லாவிடத்தே வெண்ணிலாவே-நானும்
இருக்கவெண்ணிவாடுகின்றேன் வெண்ணிலாவே. 4

தேசுநிறமாய்நிறைந்த வெண்ணிலாவே-நானுஞ்
சிவமயமதாய்விழைந்தேன் வெண்ணிலாவே. 5

போதநடுவூடிருந்த வெண்ணிலாவே-மலப்
போதமறவேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 6

ஆருமறியாமலிங்கே வெண்ணிலாவே-அரு
ளாளர்வருவாரோசொல்லாய் வெண்ணிலாவே. 7

அந்தரங்கசேவைசெய்ய வெண்ணிலாவே-யெங்க
ளையர்வருவாரோசொல்வாய் வெண்ணிலாவே. 8

வேதமுடிமேலிருந்த வெண்ணிலாவே-மல
வேதையுளவேதுசொல்லாய் வெண்ணிலாவே. 9

குண்டலிப்பால்நின்றிலங்கும் வெண்ணிலாவே-அந்த
குண்டலிப்பால்வேண்டுகின்றேன் வெண்ணிலாவே. 10

ஆதியந்தமென்றுரைத்தார் வெண்ணிலாவே-அந்த
ஆதியந்தமாவதென்ன வெண்ணிலாவே. 11

வித்திலாமலேவிளைந்த வெண்ணிலாவே-நீதான்
விளைந்தவண்ணமேதுசொல்லாய் வெண்ணிலாவே. 12

மூப்பொருளுமொன்றதென்பார் வெண்ணிலாவே.அந்த
மூன்றுமொன்றாய்முடிந்ததென்ன வெண்ணிலாவே. 13

நானதுவாய்நிற்கும்வண்ணம் வெண்ணிலாவே-ஒரு
ஞானநெறிசொல்லுகண்டாய் வெண்ணிலாவே. 14

ஞானமயமாய்விளங்கும் வெண்ணிலாவே-என்னை
நானறியச்சொல்லுகண்டாய் வெண்ணிலாவே
வாசிவாசியென்றுரைத்தார் வெண்ணிலாவே-அந்த
வாசியென்னவேசுகண்டாய் வெண்ணிலாவே
ஐந்தலைப்பாம்பாட்டுகின்றார் வெண்ணிலாவே-அவர்
அம்பலத்திநின்றதென்ன வெண்ணிலாவே
ஓரெழுத்திலைந்துண்டென்பர் வெண்ணிலாவே-அது
ஊமையெழுத்தாவதென்ன வெண்ணிலாவே
அம்பலத்திலாடுகின்றார் வெண்ணிலாவே-அவர்
ஆடுகின்றவண்ணமென்ன வெண்ணிலாவே
அந்தரத்திலாடுகின்றார் வெண்ணிலாவே-அவர்
ஆடும்வகையெப்படியோ வெண்ணிலாவே
அணுவிலணுவாயிருந்தார் வெண்ணிலாவே-எங்கு
மாகிநின்றவண்ணமென்ன வெண்ணிலாவே
அண்டபகிரண்டமெல்லாம் வெண்ணிலாவே-ஐயர்
ஆட்டமென்றுசொல்வதென்ன வெண்ணிலாவே
அம்பலத்திலாடுகின்றார் வெண்ணிலாவே-என்னை
ஆடுகின்றாரிப்பாரத்தே வெண்ணிலாவே

திருச்சிற்றம்பலம்.

காட்சிக்கண்ணி

இராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்-உசி.

பல்லவி.

ஆணிப்பொன்னம்பலத்தே கண்டகாட்சிகள்
அற்புதக்காட்சியடி அம்மா அற்புதக்காட்சியடி
சோதிமலையொன்று தோன்றிற்றதிலொரு
வீதியுண்டாச்சுதடி அம்மா
வீதியுண்டாச்சுதடி ஆணிப்

2 வீதியிற்சென்றேனவ் வீதிநடுவொரு
மேடையிருந்ததடி அம்மா
மேடையிருந்ததடி. ஆணிப்

மேடையிலேறினேன் மேடைமேலங்கொரு
கூடமிருந்ததடி அம்மா
கூடமிருந்ததடி. ஆணிப்

கூடத்தைநாடவக் கூடமேலேழ்நிலை
மாடமிருந்ததடி அம்மா
மாடமிருந்ததடி. ஆணிப்

ஏழ்நிலைக்குள்ளு மிருந்தவதிசயம்
என்னென்றுசொல்வனடி அம்மா
என்னென்று சொல்வனடி. ஆணிப்

ஓர்நிலைதன்னி லொளிர்முத்துவெண்மணி
சீர்நிலமாச்சுதடி அம்மா
சீர்நிலமாச்சுதடி. ஆணிப்

பாரோர்நிலையிற் கருநீலஞ்செய்ய
பவளமாச்சுதடி அம்மா
பவளமாச்சுதடி. ஆணிப்

மற்றோர்நிலையில் மரகதப்பச்சைசெம்
மாணிக்கமாச்சுதடி அம்மா
மாணிக்கமாச்சுதடி. ஆணிப்

பின்னோர்நிலையிற் பெருமுத்துவச்சிரப்
பேர்மணியாச்சுதடி அம்மா
பேர்மணியாச்சுதடி. ஆணிப்

வேறோர்நிலையில் மிகுபவளத்திரள்
வெண்மணியாச்சுதடி அம்மா
வெண்மணியாச்சுதடி. ஆணிப்

புகலோர்நிலையிற் பொருந்தியபன்மணி
பொன்மணியாச்சுதடி அம்மா
பொன்மணியாச்சுதடி. ஆணிப்

பதியோர்நிலையிற் பசும்மணியெல்லாம்
படிகமதாச்சுதடி அம்மா
படிகமதாச்சுதடி. ஆணிப்

பொற்றம்பங்கண்டேறும் போதுநான்கண்ட
புதுமையென்சொல்வனடி
புதுமையென்சொல்வனடி. ஆணிப்

ஏறும்போதங்கே யெதிர்ந்தவகைசொல
வென்னளவல்லவடி அம்மா
வென்னளவல்லவடி. ஆணிப்

ஆங்காங்கேசத்திக ளாயிரமாயிர
மாகவந்தார்களடி அம்மா
ஆகவந்தார்களடி. ஆணிப்

வந்துமயக்க மயங்காமல்ஞானருள்
வல்லபம்பெற்றேனடி அம்மா
வல்லபம்பெற்றேனடி. ஆணிப்

வல்லபத்தாலந்த மாதம்பத்தேறி
மணிமுடிகண்டேனடி அம்மா
மணிமுடிகண்டேனடி. ஆணிப்

மணிமுடிமேலோர் கொடுமுடிநின்றது
மற்றதுகண்டேனடி அம்மா
மற்றதுகண்டேனடி. ஆணிப்

கொடுமுடிமேலாயிரத் தெட்டுமாற்றுப்பொற்
கோயிலிருந்ததடி அம்மா
கோயிலிருந்ததடி ஆணிப்

கோயிலைக்கண்டங்கே கோபுரவாயிலிற்
கூசாதுசென்றேனடி அம்மா
கூசாதுசென்றேனடி. ஆணிப்

கோபுரவாயிலுட் சத்திகள்சத்தர்கள்
கோடிபல்கோடியடி அம்மா
கோடிபல்கோடியடி. ஆணிப்

ஆங்கவர்வண்ணம் வெவ்வண்ணம்செவ்வண்ணமுண்
ஐவண்ணமாகுமடி
ஐவண்ணமாகுமடி. ஆணிப்

அங்கவரெல்லாமிங் காரிவரென்னவு
மப்பாலேசென்றனடி அம்மா
அப்பாலேசென்றனடி. ஆணிப்

அப்பாலேசென்றேனங் கோர்திருவாயிலில்
ஐவரிருந்தாரடி அம்மா
ஐவரிருந்தாரடி. ஆணிப்

மற்றவர்கின்று வழிகாட்டமேலோர்
மணிவாயிலுற்றேனடி அம்மா
மணிவாயிலுற்றேனடி. ஆணிப்

எண்ணுமவ்வாயிலிற் பெண்ணோடாணாக
விருவரிருந்தாரடி அம்மா
இருவரிருந்தாரடி. ஆணிப்

அங்கவர்காட்ட வணுகத்திருவாயில்
அன்பொடுகண்டேனடி அம்மா
அன்பொடுகண்டேனடி. ஆணிப்

அத்திருவாயிலி லானந்தவல்லியென்
அம்மையிருந்தாளடி அம்மா
அம்மையிருந்தாளடி ஆணிப்

அம்மையைக்கண்டே னவனருள்கொண்டேன்
அமுதமுமுண்டேனடி அம்மா
அமுதமுமுண்டேனடி. ஆணிப்

தாங்குமவளரு ளாலேநடராஜர்
சந்நிதிகண்டேனடி அம்மா
சந்நிதிகண்டேனடி. ஆணிப்

சந்நிதியிற்சென்று நான்பெற்றபோது
சாமியறிவாரடி அம்மா
சாமியறிவாரடி. ஆணிப்

ஆணிப்பொன்னம்பலத்தேகண்ட காட்சிகள்
அற்புதக்காட்சியடி அம்மா அற்புதக்காட்சியடி.

திருச்சிற்றம்பலம்.

இராகம்-எதுகுலகாம்போதி-அடதாளம்-உசி.

வானத்தின் மீது மயிலாடக்கண்டேன்
மயில்குயிலாச்சுதடி அக்கச்சி
மயில்குயிலாச்சுதடி.

துள்ளலைவிட்டுத் தொடங்கினேன்மன்றூடும்
வள்ளலைக்கண்டேனடி அக்கச்சி
சோதியைக்கண்டேனடி.

பொய்யையொழித்துப் புறப்பட்டேன்மன்றூடும்
ஐவரைக்கண்டேனடி அக்கச்சி
ஐவரைக்கண்டேனடி.

திருச்சிற்றம்பலம்.

எழுத்தறியும் பெருமான்மாலை.

கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

சிந்தைமயங்கித் தியங்குகின்றநாயேனை
முந்தைவினைதொலைத்துன் மொய்கழற்காளாக்காதே
நிந்தையுறுதோளா னிகழவைத்தநீதியதோ
வெந்தைநீபோற்றி யெழுத்தறியும்பெருமானே.

மத்தனைவன்னெஞ்சகனை வஞ்சகனைவன்பிணிகொள்
பித்தனைவீணாட்போக்கும் பேயனைநாயேனை
முத்தனையாயுன்றன் முளரித்தாட்காளாக்க
வெத்தனைநாட்செல்லு மெழுத்தறியும்பெருமானே. 2

நன்னெறிசேரன்பர்தமை நாடிடவுநின்புகழின்
சென்னெறியைச்சேர்ந்திடவுஞ் செய்தாயெனக்குனக்கு
முன்னறியேன்பின்னறியேன் மூடனேன்கைம்மாறிங்
கென்னறிவேனையா வெழுத்தறியும்பெருமானே. 3

மைப்பிடியுங்கண்ணார் மயலுழக்கச்செய்வாயோ
கைப்படியவுன்றன் கழல்கருதச்செய்வாயோ
விப்படியென்றப்படியென் றன்னறிவேனுன்சித்த
மெப்படியோவையா வெழுத்தறியும்பெருமானே. 4

நில்லாவுடம்பை நிலையென்றேநேசிக்கும்
பொல்லாதநெஞ்சம் புலையனேனிவ்வுலகிற்
சொல்லமனனேயாமற் சோர்வுற்றலையுமல்ல
வெல்லாமருவா யெழுத்தறியும்பெருமானே. 5

தீதறிவேனன்கணவுஞ் செய்யேன்வீணாட்போக்கும்
வாதறிவேன்வஞ்சகனேன் வல்வினையின்வாய்மையிலே
சூதறிவேன்மாலயனுஞ் சொல்லரியநின்பெருமை
யாதறிவேனையா வெழுத்தறியும்பெருமானே. 6

மாறாதவன்பிணியான் மாழாந்துநெஞ்சயர்ந்தே
கூறாதுன்பக் கொடுங்கடற்குள்வீழ்ந்தடியே
னாறாதாற்றியழு கின்றேனின்செவியி
லேறாதோவையா வெழுத்தறியும்பெருமானே. 7

உண்ணாடும்வல்வினையா லோயாப்பிணியுழந்து
புண்ணாகநெஞ்சம் புழுங்குகின்றேன்புண்ணியனே
கண்ணாளாவுன்றன் கருணையெனக்களிக்க
வெண்ணாயோவையா வெழுத்தறியும்பெருமானே. 8

புன்செய்கைமாறாப் புலையமடமங்கையர்தம்
வன்செய்கையாலே மயங்குகின்றவஞ்சகனேன்
கொன்செய்கைமாறாத கூற்றன்வருவானே
லென்செய்வேனையா வெழுத்தறியும்பெருமானே. 9

சங்குடையான்றாமரையான் றாண்முடியுங்காண்பரிதாங்
கொங்குடையகுன்றை குளிர்சடையாய்கோதையொரு
பங்குடையாயேழைமுகம் பாராதுதள்ளிவிட்டா
லெங்கடைவேனையா வெழுத்தறியும்பெருமானே. 70

மன்றினிடைநடஞ்செய் மாணிக்கமாமலையே
வென்றிமழுக்கையுடைய வித்தகனேயென்றென்று
கன்றினயர்ந்தழுமென் கண்ணீர்துடைத்தருள
வென்றுவருவா யெழுத்தறியும்பெருமானே. 11

மன்னளவிற்சோதி மணிபோல்வாய்மாதவத்தோர்
தென்னளவும்வேணிச் சிவனேயெனவொருக்காற்
சொன்னளவிற்சொன்னவர்தந் துன்பொழிப்பாயென்பரது
வெண்ணளவிற்காணே னெழுத்தறியும்பெருயானே. 12

மின்போல்வாரிச்சையினால் வெம்புகின்றேனானாலுங்
தன்போல்வாயென்னீன்ற தாய்போல்வாய்சார்ந்துரையாப்
பொன்போல்வாய்நின்னருளிப் போதடியேன்பெற்றேனோ
லென்போல்வாரில்லை யெழுத்தறியும்பெருமானே. 13

பூமாந்தும்வண்டெனநின் பொன்னருளைப்புண்ணியர்க
டாமார்ந்திநின்னடிக்கீழ் சார்ந்துநின்றாரையோநான்
காமாந்தகாரமெனுங் கள்ளுண்டுகண்மூடி
யேமாந்தேனொற்றி யெழுத்தறியும்பெருமானே. 14

பன்னருமிப்பார்நடையிற் பாடுழன்றபாதகனேன்
றுன்னியநின்பொன்னடியைச் சூழாதேநாயிடினும்
புன்னிகரேன்குற்றம் பொறுக்கப்பொறுப்புனக்கே
யென்னருமைத்தாய்நீ யெழுத்தறியும்பெருமானே. 15

வீட்டுக்கடங்கா விளையாட்டுப்பிள்ளையெனத்
தேட்டுக்கடங்காத தீமனத்தாலாந்துயரம்
பாட்டுக்கடங்காநின் பத்தரடிப்புகழ்போ
லேட்டுக்கடங்கா தெழுத்தறியும்பெருமானே. 16

பன்னுமனத்தாற் பரிசிழந்தபாதகனேன்
றன்னுமலவெங்கதிரோன் சூழ்கின்றசோலையிலு
னின்னருணீர்வெட்டு நிலைகலங்கிவாடுகின்றே
னின்னுமறியாயோ வெழுத்தறியும்பெருமானே. 17

கல்லைநிகராம்கடைய மனம்போங்கானெறியிற்
புல்லைமதித்தையோயைம் பூவிழந்தபொய்யடியே
னொல்லைபடுகின்ற வொருவேதனைதனக்கோ
ரெல்லையே னெழுத்தறியும்பெருமானே. 81

பொன்னைமதித்தையாநின் பொன்னடியைப்போற்றாத
கன்னிகருநெஞ்சாற் கலங்குகின்றமாதவனே
னின்னழுக்கின்ற வேழைகட்குவேழைகண்டா
யென்னைவிடாதே யெழுத்தறியும்பெருமானே. 19

மாசுவரேயென்னு மலக்கடலில்வீழ்ந்துலகோ
ராசுவரேவென்ன வடியேனையாளாயேல்
கூசுவரேகைகொட்டிக் கூடிச்சிறித்தடியா
ரேசுவரேயொற்றி யெழுத்தறியும்பெருமானே. 20

ஊர்சொல்வேன்பேர்சொல்வேனுத்தமனேநின்றிருத்தாள்
சீர்சொல்வேனென்றனை சேர்க்காதகற்றுவையே
நேர்சொல்லாயுன்றனக்கு நீதியிதல்லவென்றே
யார்சொல்வாரையா வெழுத்தறியும்பெருமானே. 21

நீக்கமிலாமெய்யடியர் நேசமிலாப்பொய்யடியே
னூக்கமிலாநெஞ்சத்தி னோட்டகலச்செய்வாயே
னாக்கமிலாவானந்தத் தூக்கமின்றிமற்றுமிங்கோ
ரேக்கமிலேனொற்றி யெழுத்தறியும்பெருமானே. 22

போகின்றவஞ்சகரைப் போக்கியுன்றன்பொன்னடிக்கா
ளாகின்றமேலோ ரடிவழுத்தநாயேற்குப்
பாகின்றனிச்சுவையிற் பாங்காகநின்னருளை
ஈகின்றதென்றோ வெழுத்தறியும்பெருமானே. 23

ஊழையகற்ற வுளவறியாப்பொய்யனிவன்
பீழைமனநம்மைப் பெறாதம்மனங்கொடிய
தாழையெனவெண்ணியென்னைத் தள்ளிவிட்டாலென்
னேழைநானென்று யெழுத்தறியும்பெருமானே. 24

மடுக்கமுடியாமல் விருட்டிற்சென்றுமனம்
நடுக்கமுடியாப்புலனாற் கட்டிச்சுமக்கவைத்த
தொடுக்கமுடியாத துன்பச்சுமையையினி
யெடுக்கமுடியாதே யெழுத்தறியும்பெருமானே. 25

முள்ளளவுநெஞ்ச்முழுப் புலையமாதர்களாங்
கள்ளளவுநாயிற் கடைப்பட்டவென்றனக்கு
வள்ளளவுமன்பருக் குதவுமுன்றாட்கன்பொருகிற்
றெள்ளளவுமுண்டோ வெழுத்தறியும்பெருமானே. 26

பண்ணமுடியாப் பரிபவங்கொண்டிவ்வுலகி
னண்ணமுடியா நலங்கருதிவாடுகின்றே
னுண்ணமுடியாவமுதா முன்னையன்றிஎவ்வவர்க்கு
மெண்ணமுடியாதே யெழுத்தறியும்பெருமானே. 27

வெங்கொளித்தேள்போன்ற வினையால்வெதும்பி
மங்கொளிக்காதுன்னை யழைத்தழுதுவாடுகின்றே
னிங்கொளிக்காநஞ்சமுண்ட லென்னருமையப்பாநீ
எங்கொளித்தாயொற்றி எழுத்தறியும்பெருமானே. 28

பித்தனைக்குங்காமப் பெரும்பேய்மயக்குமயல்
வித்தனைத்தாமாவானம் பொய்வீறுமழுக்காறுசின
கொத்தனைத்தாம்வஞ்சங் கொலைமுதலாம்பாவங்க
ளித்தனைக்குநான்கா ளெழுத்தறியும்பெருமானே. 29

ஒல்லையேநஞ்சனைத்து முண்டதயாநிதிநீ
யல்லையோநின்றிங் கயர்வேன்முன் வந்தொருசொற்
சொல்லையோவொற்றியூர் தூயதிருக்கோயிலுணீ
யில்லையோவையா வெழுத்தறியும்பெருமானே. 30

நினையுடையாய்நீயன்றி நேடிலெங்குமில்லாதாய்
மனையுடையார்மக்களெனும் வாழ்க்கையிடைபட்டவமே
யினையுடையானென்றிங் கெனையாள்வதுன்கடனே
யெனையுடையாயொற்றி யெழுத்தறியும்பெருமானே. 31

திருமுல்லைவாயில்-திருவிண்ணப்பம்.

கலிவிருத்தம்.

தாயின்மேவிய தற்பரமேமுல்லை
வாயின்மேவிய மாமணியேயுன்றன்
கோயின்மேவிநின் கோமலர்த்தாடொழா
தேயின்மேவி யிருந்தனனென்னையே. 1

தில்லைவாய்ந்த செழுங்கனியேதிரு
முல்லைவாயின் முதற்சிவமூர்த்தியே
தொல்லையேயுன்றன் றூய்திருக்கோயிலி
னெல்லைசேரவின் றெத்தவஞ்செய்ததே. 2

வளங்கொளுமுல்லை வாயிலின்மேவிய
குளங்கொளுங்கட் குருமணியேயுனை
யுளங்கொளும்படி யுன்றிருக்கோயிலுக்
களங்கொனெஞ்சினன் கண்டதுங்கண்டதே. 3

மலைவிலாமுல்லை வாயிலின்மேவிய
விலையிலாமணியே விளக்கேசற்றுங்
கொலையிலாதவர் கூடுநின்கோயிலின்
தலைநிலாவத் தவமென்கொல்செய்வதே. 4

சீர்சிறக்குந்திரு முல்லைவாயிலி
லேர்சிறக்கு மியன்மணியேகொன்றைத்
தார்சிறக்குஞ் சடைக்கனியேயுன்ற
னூர்சிறக்க வுறுவதெவ்வண்ணமே. 5

சேர்கொள்பொய்கைத் திருமுல்லைவாயிலிற்
பாற்கொள்வண்ணப் பரஞ்சுடரேவிடை
மேற்கொள்சங்கரனே விமலாவுன்றன்
காற்காளன்பர் கலங்குதனன்றதோ. 6

வண்ணமாமுல்லை வாயிலின்மேவிய
வண்ணலேயமுதே யரசேநுதற்
கண்ணனேயுனைக் காணவந்தோர்க்கெல்லா
நண்ணருந்துயர் நல்குதனன்றதோ. 7

மண்ணினோங்கி வளர்முல்லைவாயில்வாழ்
கண்ணுண்மாமணியே கரும்பேயுனை
யெண்ணுமன்ப ரிழிவடைந்தாலது
பண்ணுநின்னருள் பாரிடைவாழ்கவே. 8

தீதில்லாத்திரு முல்லருங்குன்றமே
கோதிலாத குணப்பெருங்குன்றமே
வாதிலாதுனை வாழ்த்தவந்தோர்தமை
மேதிலாரென் றிருப்பதுமென்கொலோ. 9

தேசுலாவிய சீர்முல்லைவாயில்வாழ்
மாசிலாமணியே மருந்தேசற்றுங்
கூசிடாமனின் கோயில்வந்துன்புகழ்
பேசிடாத பிழைபொறுத்தாள்வையே. 10

நடேசர் கும்மி.

பல்லவி.

கொம்மியடிப்பெண்கள் கொம்மியடி-இரு
கொங்கைகுலுங்கவே கொம்மியடி.

அநுபல்லவி.

நம்மையாளும் பொன்னம்பலவாணனை
நாடிக்கும்மியடியுங்கடி பதம்பாடிக்கும்மியடியுங்கடி.

சரணங்கள்.

காமமகற்றிய தூயனடி-சிவ
காமசௌந்தரி நேயனடி
மாமறையோதுசெவ் வாயனடி-மணி
மன்றெனுஞானவா காயனடி. 1

ஆனந்தத்தாண்டவராஜனடி-நமை
யாட்கொண்டருளிய தேயனடி
வானந்தமாமலை மங்கைமகிழ்வடி
வாளனடி மணவாளனடி. 2

கல்லைகனிவிக்குஞ் சுத்தனடி-முடி
கங்கைக்கருளிய கர்த்தனடி
தில்லைச்சிதம்பர சித்தனடி-தேவ
சிங்கமடியுயர் தங்கமடி. 3

பெண்ணொருபால்வைத்த மத்தனடி-சிறு
பிள்ளைகறிகொண்ட பித்தனடி
மண்ணிநமக்கருள் அத்தனடி-மிக
நல்லனடியெல்லாம் வல்லனடி. 4

அம்பலத்தாடல்செய் யையனடி-யன்ப
ரன்புக்கெளிதரு மெய்யனடி
தும்பைமுடிக்கணி தூயனடி-சுயஞ்
சோதியடிபரஞ் சோதியடி. 5

திருச்சிற்றம்பலம்.

சிவநாமாவளித்திரட்டு-முற்றிற்று.

உ

சிவமயம்.



சிவபோகசாரம்.

அடிகள் வணக்கம்.

சித்திதருநாதன் றெங்கமலைவாழ்நாதன்
பத்திதருநாதன் பரநாதன்—முத்திப்
பெருநாதன்ஞானப் பிரகாசனுண்மை
தருநாதனங்குருநாதன். 1

அருவுமுருவு மருவுருவுமல்லா
வொருருவனுயிர்க்குயிரா யோங்கித்—திருவார்
கமலைவருஞானப்ர காசனெனவந்தே
யமலபதநதந்தெனை யாண்டான். 2

ஆரறிவார்நீதிவழிபா ரறிவார்சித்திமுத்தி
யாரறிவார்நற்றவங்க ளன்பனைத்தும்-பாரெவர்க்குங்
கத்தன்கமலையில்வாழ் ஞானப்ரகாசனெனு
மத்தனென்போல் வந்திலனானால். 3

அரியயற்குமுன்னா ளடிமுடியுங்காணாப்
பெரியவனை வந்துபிறந்து—துரியம்
பெருக்கின்றான்ஞான ப்ரகாசனாகி
யிருக்கின்றானானாரிவின்று. 4

கண்டேனிப்பாசங் கழிந்தேனமுதைமுகந்
துண்டேன்சுகானந்தத் துள்ளிருந்தேன்-வண்டிமிர்
தேனைப்பொழிகமலைச் செங்கமலப்பொற்பாத [காத்
ஞானப்ரகாசனையே நான். 5

உள்ளிருந்தேயென்று முணர்த்துகினுங்கண்டிலரென்
றுள்ளும்புறம்புமாவோமென்று—மெள்ள
நரருருவாயாரூரில் வந்தானமையாண்
டருள்புரி ஞானப்ரகாசன். 6

இருளுதயநீக்கு மிரவியைப்போலென்னு
ளருளுதயநன்றியருளி—மருளுதய
மாற்றியவனாரூரன் மாமறையுமாகமமுஞ்
சாற்றிய ஞானப்ரகாசன். 7

ஒழியாதபேரின்பத் துள்ளாயுலகில்
விழியாதிருந்துவிடவே-யழியாத
பூரணாசெங்கமலப் பொற்பாதாதென்கமலை
யூராணாநாயேற்கருள். 8

தேடுந்திரவியமுஞ் சிற்றறிவும்பற்றுதலுங்
கூடும்பொய்யென்றருளிற் கூட்டினா-னாடரிய
ஞானப்ரகாசனுயர் நற்கமலைமாநகர்வாழ்
வானப்பிறையணிந்தமன் 9

காண்பதும்பொய் கேட்பதும்பொய் காரியம்போ
லே யிதமாய்ப், பூண்பதும்பொய் யெவ்விடத்தும்
போகமும்பொய் மாண்பாகத், தோற்றியின்ப வெ
ள்ளமாய்த்துன்னியென்னுட் சம்பந்தன், வீற்றிருப்ப
தொன்றுமே மெய். 10

பெறுதற்கருமை.

ஒருமையுடனீசனரு ளோங்கியென்றுந் தூங்க
லருமையருமையருமை-பெருமையிடும்
யாங்காரக்கோப மபிமானமாசவினை
நீங்காதபோது தானே. 11

தன்பெருமையெண்ணாமை தற்போதமேயுறத்தன்
மின்பெருமையாஞ்சகத்தை வேண்டாமை-தன்பா
லுடலைத்தினம்பழித்த லோங்குசிவத்தொன்ற
னுடலைப்பிறப்பொழியுநாள். 12

உரையிரந்தாலுன்னு முணர்விறந்தான்மாயைத்
திரையிறந்தாற்காண்கின்றதேவை-வரைபெருக
வாசிப்பதுநாவல்வாழ்த்துவதுநாடகமாய்ப்
பூசிப்பதுஞ்சுத்தப்பொய். 13

பரமரகசியத்தைப் பாழானவாயா
லிரவுபகலென்னோ மின்றில்-குருனெறியக்
கூப்புட்டுங்காணுமோ கோழைமடநெஞ்சேமால்
பூப்பிட்டுங்காணாப்பொருள். 14

ஒருகோடியாகமங்க ளெல்லாமுணர்ந்தும்
பெருகுதவஞ்சித்தியெல்லாம்பெற்றுங்-குருவருளால்
வைத்தபடியிருக்க மாட்டாதமாந்தர்க்குச்
சித்தசலனம்மாந்தினம். 15

அன்புமிகவுண்டா யதிலேவிவேகமுண்டாய்த்
துன்பவினையைத் துடைப்பதுண்டா.யின்பந்
தரும்பூரணத்துக்கே தாகமுண்டாயோடி
வருங்காரணர்க்குண்மைவை. 16

அறியும்பகுதி.

உருவையருவை யொழியைவெளியை
யிருளைச்சிவமென் றிராதே-மருளைப்
பிறிந் * தறிவிற்கண்டிதனைப் பின்னமறவெங்குஞ்
செறிந்தபொருடானே சிவம். 17

அகமாதிகண்டவறி யவராகியெங்குஞ்
சுகமாகியின்ப சுகமாய்ச்-சுகந்தீர்த்த
தானந்தவெள்ள மதுவாய்ச்சுகத்தையகன்
றானந்தமாதியிலா தான். 18

இந்தனத்திலங்கியெரி யுறுநீர்தேனிரதங்
கந்தமலர்ப்போதுவான் காலொளிகண்-சந்ததமு
மத்துவிதலாவதுபோ லான்மாவுமீசனுமாய்
முத்தியிலேநிற்கு முறை. 19

ஆறாறுதத்துவமு மானவமுநீங்கியுயிர்
வேறாகநின்ற விடஞ்சொல்லின்-மாறா
விருளாயபாவனையற் றெங்குமாய்நின்ற
பொருளேகா ணீயேயுணர். 20

நனவாதியக்தத்தி னுடுசுகந்தன்னைக்
கனவாதியத்தத்திற் கண்டு-நனவாதி
தோற்றிடும்போதந்தச் சுதரூபங்கண்டவர்கண்
மாற்றிடுவரொன்று மலம். 21

தத்துவங்களெண்ணித் தலையெடுத்துக்கொள்ளாதே
பித்துவங்களேதெண்ணிற் சாற்றக்கேண்-மெத்துஞ்
சுகாரம்பமாஞ்சிவத்திற் றோயாதமாயா
விகாரங்கடத்துவமாமே. 22

---

* அறிவைக்கண்டதனையென்றும்பாடம்.

ஆருறுதத்துவமு மாணவமும்வல்வினையு
நீருகமுத் திநிலை நிற்போர்க்குப்-பேருகப்
பார்விரித்தநூலெல்லாம் பார்த்தறியிற்சித்தியிலே
யோர்வி டத்தப்பாதி போதும். 23

உபதேசவிளக்கம்.

பாவிமனம்போகாப் பரத்தலையநாளு
மிரவுபகலற்றவிடத்தே-திரமாக [முன்
னில்லென்றான்கண்டவெல்லா நேதிபண்ணி மும்மல
கொல்லென்றான் ஞானகுரு. 24

காயங்காணமுத னுங்கிற்குங்காரணந்தா
னுயவிருண்மாயை யதுவென்றற்-றாயபொருட்
போதனேசெங்கமலப் பொற்பாதனேயெனே
யேதென்றுசொல்லாயினி. 25

என்னையறிவென்று னென்னறிவிலானந்தத்
தன்னைச்சிவமென்றான் சந்ததமு-மென்னையுன்னைப்
பாராமறைத்ததுவே பாசமென்றனிம்மூன்று
மாராய்ந்தவர் முத்தாரம். 26

எங்குமிருக்கு மறிவுநீயேகமா
யங்கங்குணர்த்து மறுவுநாம்-பொங்கு
மலமறைத்ததன்மாயை மயக்கல்விகாரப்
பலமனைத்துங் கன்மமலம்பார். 27

செங்கமலப்பொற்பாதன் சீர்பாதவல்லவங்க
னங்கமலைவாழ்கிளியே நாடிகேள்-சங்கையிலாத்
தத்துவத்தைக்காட்டியதிற் றத்துவத்தைக்காட்டிய
ருட் டத்துவத்தைக் காட்டியதுதான். 28

தேகநெறிகமலைச் செங்கமலப்பொற்பாதன்
பேசுதமிழ்ஞானப் பிரகாசன்-பாசவினை
வாட்டினான்மீட்டுநான் வாராவகையருளைக்
காட்டினான்கூட்டினான்காண். 29

நானிங்காய்நீயங்காய் நாட்டமறவைத்ததம்பி
ரானெங்கேநீயெங்கே நாதனே-வானெங்கு
மென்றாகிநின்ற வுணர்வுநீயுன்னறிவி
னன்றாகத்தோன்றுசுக நாம். 30

அலைவற்றிருந்த வறிவுநீயாங்கே
நிலைபெற்றிருந்தசுக ஞேய-மலைவற்
றிருந்ததுகண்டாயே யிருந்தபடியத்தோ
டிருந்துவிடப் போதுமினி. 31

அகத்தையிழந்தருளா யவ்விடத்தேதோன்றுஞ்
சகத்திலழுந்திவிடச் சொன்னான்-மகத்தான்
சிற்பரனாரூர்தனில்வாழ் செங்கமலப்பொற்பாதா
தற்பர ஞானப்ரகாசன். 32

கிட்டாதவீசனைக் கிட்டியருள்புரிந்த
நீட்டானுபூதி நிலையிலே-முட்டா
திருவன்னிசேர்ந்துமாற் றேறியபெண்போல
வருமின்ப பூரணமாவை. 33

அநாதிசுகரூபி யாணடிக்கீழென்று
மநாதிசுகரூபியான்மா-வநாதி
யிருந்தமலம்போக்கி யிறையருளினாலே
யிருந்தபடியே கண்டிரு. 34

இற்றவரைக்கரணத்தோ டிணங்கினையே
யிற்றைவரைக்கச்சென்ம மெடுத்தனையே-யிற்றைவ
ரைத், துன்பவெள்ளத்துள்ளே துளைந்தனையேயிதற
நல்லின்பவெள்ளத் துள்ளேயிரு. 35

தேகாதிநானல்ல வென்றிந்தாற்சித்தமயல்
போகாததென்னைபோ புண்ணியா-தேகாதி
தன்னளவேயம்மயக்கஞ் சத்தியாமாவெப்பொழுது
முன்னளவே யில்லையுணர். 36

ஆறாறு தத்துவநீ யன்றென்றறிந்தனையே
யாறாறுங் கண்டறிவ னாயினையே-மாறாம
லுன்னறிவிலானந்தத் தொங்கினையேயோராவ
னின்னறிவை விட்டதுவாய்நில். 37

மாதாபிதாச்சுற்ற மென்றுமயங்கினையே
நீதான்றனுவாகி நின்றனையே-யீதெல்லாம்
பொய்யென்றறிந்தனையே பூரணானந்தவெள்ள
மெய்யென்றறிந்தனையே மெய். 38

மனையில்வருபோகத்தின் மாதர்மக்கள்பாச
வினையிலழுந்திவிடாதே-யுனையிழந்து
காணுமற்கண்டானைக் காட்சியறக்கலந்து
பூணுமெலப்பொழுதும் பூண். 39

சுத்தவத்தைநாகுபிநஞ் சுத்தவிராப்பகலா
மெத்தவத்தைநாடி விடுவையேற்-சுத்தவத்தை
தானுயிரண்டுந் தவிர்ந்தசிவானந்த
வாழுவை நீயேமதி. 40

சுத்தநிலமுன்றனக்குச் சொல்லக்கேடொல்லைவினை
தத்துவங்களாறாறுந் தான்பெருகக்-கத்திடுவ
ரெல்லாமிழந்த விடமேயதுவாக
நில்லாயதுவே நிலை. 41

நெருப்பென்றால்வாய்சுடுமோ நெய்பாதேன் * கட்டி
கரும்பென்றாற் றித்திபாகரணீ-விருப்பமுட
னீபிரமமென்றக்கா னீபிரமமாயினையோ
நீபிரமஞ் சற்குருவாநில். 42

* கண்டு என்றும் பாடம்.

ஆர்க்குந்தெரியாத வானந்தவின்பவெள்ள
மேற்கொண்டுகொண்டு விடுகுதில்லை-யார்க்குந்
தெரியாப்பரப்பிரமஞ் சேர்த்தாயுனக்குச்
சரியார் சிதம்பரநாதா. 43

அநுபூதி நிலை.

உள்ளங்கரைய வுடல்கரையவானந்த
வெள்ளங்கரைபுரண்டு மேலாகக்-கள்ளமலம்
பொய்யாகவென்னுட் புகுந்தவாறென்கொலோ
வையாதியாகவிநோதா. 44

ஏதேதுசெய்தாலு மேதேதுசொன்னாலு
மேதேதுசிந்தித் திருந்தாலு-மாதேவா
நின்செயலேயென்று நின்றருளாலேயுணரி
லென்செயலை காண்கிலேனே. 45

மாயைமலமெங்கே மறைந்ததேமாயைதனி
லாயாசகமெங்கே யழிந்ததோ-காயமதிற்
றங்குபுருடனெங்கே சச்சிதானந்தவெள்ள
மெங்குமிகக் கோத்ததே 46

நானுஞ்சுகவடிவாய் நண்ணினேனின்னருளால்
வானுஞ்சுகவடிவாய் மன்னிற்றே-வானுஞ்
சுகரூபமன்றமணந் தோற்றநிலம்போலுன்
னகருமமட்டேயது. 47

ஈசனடியிலிருக்கையிலே யெங்கெங்கு
மீசனடிதேடி யிளைத்தேனே-பேசரிய
பொற்பதத்தன்செங்கமலப் பொற்பாதன்றன்னுடை
ய, நற்பதத்தைக் காணுமுனே. 48

நற்பதஞ்சேராரூரின் ஞானப்ரகாசனெந்தை
தற்பரனோர்ஞான வாட்டந்தானே-சொற்பனத்துங்
காரார்மறலிபயன் கண்ணனுக்குமஞ்சேலோ
யாராலுமென்னசெயலாம. 49

வெறும்பாழிற்பேரின்ப வெட்டவெளிதன்னிற்
குறும்பாளர்காணாக்குடலி-னுறும்பாச
மோட்டியெனைவைத்தனனை யுற்றபிரபஞ்சமெல்லா
வாட்டிய ஞானப்பிரகாசன். 50

என்றுஞ்சிவத்தோ டிணைபிரியாதேயறிவாய்
நின்றபடிதன்னை நிகழ்த்தினான்-மன்றி
னடமாடுமாரூரன் ஞானப்பிரகாசன்
திடமாகவென்னுள்ளத்தில். 51

நாதனார்தென்கமலை நாயனாரெவ்வுயிர்க்கும்
போதனார்செங்கமலம் பொற்பாதர்-பேதமற
வொன்றிரண்டுதானாவே யுண்மையிலேகூட்டியெனை
யின்றறவே வைத்துவிட்டாரே. 52

நன்னெஞ்சேநீகேட்ட நன்மையெல்லாஞ் சொல்லு
தற்குக் கன்னெஞ்சமாலயனுங் காணாதோன்-வன்
னெஞ்ச ரின்னகுறையுண்டென்றா லீசனெதிர்வந்தா
னென்னகுறை சொல்லாயினி. 53

இட்டசனமெங்கே யிதமகிதந்தானெங்கே
துட்டசனமெங்கே தொழிலெங்கே-சிட்டருடன்
கூடியிருந்தவெங்கே குன்றாச்சிவானந்த
நாடிபதுவாயிருந்தநாள். 54

வாக்குமனக்காயத்தான் வந்தபொருளத்தனையும்
வாக்குமனக்காயமுடன் மாயுமே-வாக்குமனக்
காயமுடனிழந்து காணாதிருஞான
னேயழமிந்தநிலை. 55

பூசிப்போஞ்சிவபோகம் பூரணமாயெங்கும்
வசிப்போமுலகில் வசியோ-முசிப்பின்றி
வாழ்வோஞ்சிவத்தையுணர் மாதவர்தம் பொன்ன
டிக்கீழ், தாள்வோ மெமக்கார்சரி. 56

உபாய நிலை.

அறிவுநீயென்னவறிந் தறிந்துமாயைச்
செறிவுநானென்றென்று சேர்ந்தா-லறிவு
தெரிந்திடுமோவின்பசுகஞ் சேர்ந்திடுமோநின்னைப்
பிரிந்திடுமோ சென்மப்பிணி. 57

அரணங்கடாமெரித்த வத்தரேயென்னுட்
கரணங்களோட்டும் வகைகாட்டீர்-கரணங்க
ளீயதுவாய்நில்லாமனின்னறிவைக்கண்டருளிற்
போயதுவாய் நின்றுவிடம்போம். 58

தானல்லாதத் தனையுந் தானென்றுழலாமற்
றானெல்லாமாயதனுட்டாக்காமற்-றானெல்லா
மானேனெனும்போதத் தாக்காமலீசனிடத்
தானேனேயாயினவனும். 59

தேகநாமென்றென்று செப்புவீரீதில்வரும்
போகநாமென்று புலம்புவீர்-நோக
வருந்துவீர் தீவினையின் மாறுதவின்பம்
பொருந்துவீரெப்படி நீர்போம். 60

தன்னையிழந்திடத்தே தானேசுகவடிவா
யின்னபடியென்றறியா வெங்கோனுட் பின்னமற
நின்றநிலைதானுந் தெரியாதேநின்றவர்கட்
கன்றோ பிறப்பறுக்கலாம். 61

உன்னாதே பற்றா துரையாதே யொன்றியதி
னின்னா மில்லை நிகழாதே - பன்னாட
பறைபிறந்து நிற்கும் பயனனைந்தாற் நெஞ்சிற்
றிறையிரந்து நிற்குஞ்சிவம். 62

அருளறிந்து தானா மறிவறிந்தே யாக்கூட
பொருளறிந்து தானடங்கிப் போத - விருளகல
விம்மா திருந்து விகற்பமறவொன்றாகிச்
சும்மாவிருக்கை சுகம். 63

செறிபுந்தனுவாதி சேர்ந்தறிந்தா நின்ற
வறிவையறிவாலறிந்தே - யறிவிழந்து
நின்றாற்சுகானந்த நீடுநிலைவேறு
சென்றாற் சுகங்கிடையாதே. 64

தத்துவத்தைவிட்டருளிற்றான்கலந்து தன்னிழப்பின்
மெத்துஞ்சுகத்தின் மிகவழுந்திச் - சுத்தமா
யொன்றாகிநின்ற வுணர்வுமொழிந்தக்கா
லன்றே சிவபோகமாம். 65

சுட்டறிவுகெட்ட சுகாதீதவுண்மையிலே
விட்டகலாதென்றும் வீரவுவோ - ரிட்டமுடன்
யோகசமாதிகளு முட்புறம்பாம்பூசைகளு
மாகநினையாரவர். 66

நின்னறிவில்யானொளித்து நீயாகிநின்றதுவோ
லென்னறிவினீயொளித்தே யானாகி - யெங்கானு
நிற்கவல்லையமாகி னிச்சனனம்போக்குதற்குக்
கற்கவல்ல தேதுமில்லைகாண். 67

இன்பசுக[illegible]வுள்ளே யிருக்கலாமெப்போதுந்
துன்பவி[illegible]புணைத் தொடாது - வன்பா
யருட்டே[illegible]டங்கி மாயாமனெஞ்சே
மருட்டே[illegible]யடக்குவாய். 68

தேகமறந்து திருவருளாய்நின்றுசிவ
போகம்விளையப் புணர்நெஞ்சே-சோக
வருந்தாமற்றீவினையில் வாடாமற்றுன்ப
மருந்தாமனீபிறவாமல். 69

பூதாதியாசமன்றே * பூரணஞானந்தமன்றே
பேதமறநம்முட் பிரானன்றே-வாதனைகள்
விட்டாற்சுகமன்றே வென்றுணர்வில் வேண்டுவதுங்
கெட்டாற்பிறப்புங் கெடும். 70

அழுந்தாதேபாசத் தனுதினமுமையோ
விழுந்தாலெழுந்திருக்க வேண்டுஞ்-செழும்பாகை
மீறித்தருமிரத வீட்டின்பமாமலையே
லேறித்திரும்பலா * மே. 71

என்றுஞ்சனனத் திடர்க்கடலிலேயழுந்திப்
பொன்றுமனமேயுனக்கோர் புத்திகே-ணன்று
தனிச்சங்கஞ்சேரா மற்றற்பரனைச்சேரி
னிச்சங்கஞ் சேராதிரு. 72

பணியறுத்தல்.

அவரவருக்குள்ளபடி யீசனருளாலே
யவரவரைக்கொண்டியற்றுமாறு-லவரவரை
நல்லார்பொல்லாரென்று நாடுவதென்னெஞ்சமே
யெல்லாஞ் சிவன்செயலென்றென். 73

எங்கேகடத்துமோ வெங்கேகிடத்துமோ
வெங்கேயிருத்துமோ வென்றறியேன்-கடங்கமதி
சூடிஞான்றில்லை யிலே தொந்தோவெனநின்றுநட
மாடினனெங்கேசனருள். 74

---

* பூரணானந்தமென்றும் பாடம்.

* ஏ - வினா.

போகர்புவனம்பொருந்துமிடமெங்கெங்குந்
தேகங்கரணந்திரியுமே-யாகிலது
தன்னைநீயென்றுதவியாதேநெஞ்சமே
நின்னையேகண்டருளினில். 75

ஏதேதுசெய்திடினுமேதேதுபேசிடினு
மேதேதுசித்தந்திருந்திடினு-மாதேவன்
காட்டிடுவதானவருட்கண்ணைவிட்டுநீங்காது
நாட்டமதுவாய்நட. 76

எடுத்தவுடற்கேய்ந்தகன்மமெப்போதுமூட்டும்
விடுத்துவிட்டோமென்பர்விழலர்-விடுதத
ததுவன்றேயைந்துமலமாறுநீத்த
விதுவன்றோயாநதுறவென்பேம். 77

எவ்வுயிருங்காக்கவோரீசனுண்டோவில்லையோ
எவ்வுயிரினுமொருவரல்லவோ-வெளவிப்
பொருகுவதுநெஞ்சேபுழுங்குவதும்வேண்டாம்
வருகுவதுந்தானேவரும். 78

முப்பதுஞ்சென்றால்விடியு முப்பதுஞ்சென்றாலிருளு
மப்படியேயேதுமறிநெஞ்சே-யெப்பொழுது
மாங்காலமெவ்வினையுமாகுமதுதொலைந்து
போங்காலமெவ்வினையும்போம். 79

ஆவனுற்றிடுஞ்சகலத்தாவதுவுமாங்கவரே
கேவலத்தின்மூழ்கிக்கிடப்பதுவு-நாவகற்ற
வில்லாதசத்ததிருப்பதுவுமிம்மூன்று
மில்லாண்செயலென்றிரு. 80

பாசனுசடமுயிரோ தானுகப்பற்றறியா
வீசனிரண்டுமிணைத்தாட்டிப்-பூசலென்றுஞ்
செய்பவனே தானேதிரும்பியருள்செய்யாம
லுய்பவர்களுண்டோவுரை. 81

முற்றின்பமாமருளின்மூழ்குவதுமோகமிகு.
சிற்றின்பமாமருளிற்சேர்குவது-முற்றிங்
கறிந்தானன்னெஞ்சேயகிலாண்டமெங்குஞ்
செறிந்தான்செயலேதெளி. 82

என்னிடத்தினின்செயலே யில்லையென்றால்யாது
றினு, நின்னிடத்தில் யான்வேண்ட னிச்சயமே-யெ
ன்னிடத்தி, வின்மையுயிர்க்குயிர்நீ யின்மையிருந்தி
யற்றி, னன்மைதின்மைக்கேதுவோநான். 83

நாம்பெரியரென்னுமதைநாடாதடக்குமவர்
தாம்பெரியரென்றுமறைசாற்றியிடு-நாம்பெரிய
ரென்பார்திறியரிவரலாவிவ்வுலகிற்
றுன்பார்சுமப்பார்கள்சொல். 84

கட்டமாங்காயங்கலையனைத்துங்கற்றாலு
மட்டமாசித்தியடைந்தாலு-மிட்டம்
பரமசுகமேபதியாதபோது
திரமசுகமேதெளி. 85

மனவாக்குக்காயமுயிர்மன்னியசைப்பானு
மனமாதிபோகமளிப்பானு-நனவாதி
கூட்டிவிடுவானுமுத்திகூட்டிடுவானும்பிறப்பி
லாட்டிவிடுவானுமரன். 86

முன்னைவினைக்கீடாமுதல்வனருணைமைக்கொண்
டென்னவினைசெய்யவியற்றுமோ-வின்னவினை
செய்வோந்தவிர்வோந்திரிவோமிருப்போமிங்
குய்வோமெனும்வகையேது. 87

ஊட்டும்வினையிருந்தாலுன்றுணையுன்பதத்தைப்
பூட்டிப்பிடித்துப்புசிக்குங்-கேட்டுத்
திரியாதேவந்துநில்லேத்தெய்வமேயென்றென்
றெறியாதேநெஞ்சேயிரு. 88

என்னதன்று நின்செயலேயென்றறிந்தால் யான்
விரும்பி, என்னவென்றுவாய்திறப்பேனீசனே-யின்
னமின்ன, மெப்படியோநாயேனையீடேற்றவேண்டுமு
னக், கட்படியேசெய்தருள்வாய். 89

வன்மைபுரிகாயமரப்பாவைதன்னையரன் [மை
கன்மமெனுஞ்சூத்திரத்தாற்கட்டியே-நன்மைதின்
யாட்டுவதுநாடாதறிவிலார்தஞ்செயலாய்
நாட்டுதல்போலுண்டோநகை. 90

ஆறாறுதத்துவமுமாணவமுநீங்கியுயிர்
பேறாகவானந்தம்பெற்றாலும்-வேறாகப்
பார்த்திருப்பதன்றியேபாழானகன்மத்தை
நீத்திருக்கலாமோநிலத்து. 91

ஆனசுகதுக்கத்தழுந்துகினுஞானிகடாம்
யானெனவென்றெண்ணியியைந்திடினுந்தானதற்கு
வேறென்றருளால் *விரளமாய்க்காணிலென்று
மேறுமோகன்மமிலை. 92

சத்துருவுமித்துருவுந்தாரணியில்வேறில்லை
சத்துருவுமித்திருவுநதன்னெஞ்சே-பெத்தமலம்
வீட்டுமெபடிக்குவினைக்கீடுனைத்தனுவோ
டாட்டுஞ்சிவனென்றறி. 93

இன்னவினையின்னதவத்தின்னபெரமு* தின்னபடி
யின்னதனுவெய்துமெனவறிந்தே-யன்னவினை
யன்னதலத்தன்னபொழுதன்னபடியன்னதனுற்
பின்னமறக்கூட்டும்பிரான். 94

அன்றேபநாதியமைத்தபடியல்லாதொன்
றின்றேபுதிதாயியையுமோ-வென்னுஞ்
சலியாதியற்றுவான்றன்னையேநோக்கி
மெலியாதிருந்துவிடு. 95

---

* விரளம், நீக்கம் * இன்னதனுவின்னபடியா
ய்ப் பொருந்துமென்றமைத்தே யென்றும்பாடம்.

ஆர்பெரியரார்சிறியராருரவார்பகைஞர்
சீர்பெரியரானந்தசிற்சொருபர்-பேர்பெரிய
செங்கெங்குந்தாமாயிருந்துசடசித்தனைத்து
மங்கங்கியற்றுவதாலால். 96

நன்கருத்தேதென்கமலைஞானப்ரகாசனே
யென்கருத்தேயுன்கருத்தென்றெண்ணுமை-யுன்கருத்
தே, யென்கருத்தென்றெண்ணியேயான்பட்டதுன்ப
மெலா, முன்கருத்தேதீரவறியும். 97

அமைத்தவினைக்கீடாவறுதினமுஞ்செய்வ
திமைப்பொழுதும் வீண்செயலொன்றில்லை-யுமைக்
குரியா,னெல்லாமறிந்தெங்கியற்றுவதுந்தன்னடிமை
வல்லார்தமக்குணர்த்துவான். 98

கள்ளவரனே கருணையுடனென்னறிவி
லுள்ளசுகந்தந்துவிடவொண்ணாதோ-மெள்ள
வருத்துவதுந்தீவினையில்வாட்டுவதுஞானம்
பொருத்துவதுமென்றன்புகல். 99

கேளாதெனைமலத்திற்கிட்டியெடுத்தாளாக்கி
மீளாதளித்தபராவிட்டிலெனை-யாள
வுனக்குப்பொறியோவுனைத்தொடர்ந்தாலென்ன
வெனக்குப்பொறியோவினி. 100

சும்மாதனுவருமோசும்மாபிணிவருமோ
சும்மாவருமோசுகதுக்க-நம்மான்முன்
செய்தவினைக்கீடாச்சிவனருள்செய்விப்பதென்று
லெய்தவனைநாடியிரு. 101

பொல்லாததீவினையிற்போகார்கள்போனாலு
மெல்லாஞ்சிவன்செயலையென்றிருப்பர்-நல்லார்க
ணற்றுங்கமலைப்பில்வாழ்ஞானப்ரகாசனருள்
சற்றும்பிரியாதவர். 012

கூட்டுவிதுங்கூட்டிப்பிரிப்பதுவுமொன்றென்றை
யாட்டுவதுமாட்டியடக்குவதுங்-காட்டுவதுங் [த
காட்டிமறைப்பதுவுங்கண்ணுதலோன் முன்னமைத்
வேட்டின்படியென்றிரு. 103

உள்ளதுதான்போமோமற்றில்லாததுவருமோ
பள்ளமேவெள்ளம்பரவாதோ-கள்ளமாய்ப்
பித்துப்போலேபிதற்றும்பேதைமடநெஞ்சமே
செத்துப்போனானோசிவன். 604

ஈசன்பலனைனென்றக்காலாலயத்தின்
மோசம்வந்ததென்றுமொழியலா-மீசனை
யாக்குவதுமாக்கியழிப்பதுவுந்தானானை
னாக்குவதென்யா[illegible]றைநொந்து.

தேசஞ்[illegible]லயங்கள்சேரவலையவொரு
மோசம்வந்ததையோமுதல்வனே-தேகத்து
மன்னைவெறுப்பேனோவருவினையையூட்டுவிக்கு
முன்னைவெறுப்பேனோவுரை. 106

துறவின்பகுதி.

தூரத்தியுன்னையாசைதொடாமலென்றும்
விரத்தியினாலாங்கவத்தைவிட்டுப்-பரத்திலன்பு
செய்யடாசெய்யடாசேர்ப்பிரபஞ்சமெல்லாம்
பொய்யடாபொய்யடாபொய். 107

அனைத்துலகுநம்பலாநுக்கிரகம்பெற்றெ
னனைத்துலகுநம்வசமாயே-னனைத்துலகுங்
கொண்டாடிலென்னைவினைக் கொத்தறுத்துப்பேரின்
பங், கண்டாடிலன்றோகதி. 108

அறிவிழிந்துநின்றசுகவானந்தத்துள்ளே
குறியிழந்துநின்றுகுலாவிப்-பிறியா
திருந்தாற்பிறப்பறுமோவிச்சைமால்கொண்டு.
இரிந்தாற்பிறப்பறுமோசெப்பு. 109

எத்திசையுமெவ்வுல கமெத்தொழிலுமெப்பயனு
நித்தியமென்றெண்ணினிலையாதே-புத்தியினாற்
கண்ணாடியிற்றோன்றிமாய்ந்துவிடுங்காணிவற்றைக்
கண்ணாடியிற்கனவிற்காண். 110

எத்தனை தான்கற்றாலுமெத்தனை தான்கேட்டாலு
மெத்தனைசாதித்தாலுமின்பமுறா-சித்தமே
மெய்யாகத்தோன்றிவிடுமுலகவாழ்வனைத்தும்
பொய்யாகத்தோன்றாதபோது. 111

மின்போலத்தோன்றிவிடுமுலகவாழ்வனைத்து
மென்போலிகடிரமென்றெண்ணுவார்-தன்போக
மில்லார்சிவபோகமென்றுமருந்தியிடு
நல்லார்திறமிதுவென்னுர். 112

தேசமூர்பேர்காணிசீர்வரிசைசாதியெனு
மாசையானைந்தேசயலையாதே-நேசப்
பொருப்பானைநின்னறிவிற்போக்குவரவற்
றிருப்பானைப்பார்த்தேயிரு. 113

ஆகம்பகையாவதன்றிப்பகையுண்டோ
மோகந்தவிர்ந்தமுனிவோர்க்கிங்-கேக
னிருவரறியாதவீசனருளெல்லா
மொருவர்துணையுண்டோவுரை. 114

அளவிலாச்செல்வத்தடைந்தாலுமாகத்
தளவிலாச்சித்திகளுண்டாயு-மளவில்கலை
யாய்ந்தாலுமென்னைசுகரல்லார்சிவானந்தம்
தோய்ந்தார்களன்றோசுகர். 115

ஆகாதகாரியஞ்செய்தாஞ்சுகமுமாங்கதனாற்
போகாததுக்கம்பொருந்துவது-மோக
வுரைக்கிலணுவுக்குமுயர்ந்தமாமேரு
வரைக்குநிகராமதி. 116

பொய்யில்வருந்துன்பம்புகுந்தறிந்தும்பூரணமே
மெய்யில்வருமின்பவினையறிந்து-மையோ
தெளியாததென்னநலந்தீங்குகண்டுசெற்றுங்
களியாததென்னமயக்கம். 117

ஆகஞ்சிறைச்சாலைபக்கரணங்காவலாள்
போகம்புவனம்பொருந்துமிட-மோகோ
விதனுட்படுமுயிர்கட்கீடேற்றஞ்செய்வா
னதனுக்கிறைவனரன். 118

அதிட்டானமீசனருளன்றிமற்றை
யதிட்டானமெல்லாமநித்த-மதிட்டானம்
பொய்யென்றறியாமற் பூதலத்துநெஞ்சமே
மெய்யென்றுழல்வதெல்லாம்வீண். 119

நின்னைமதிக்கினினக்கதிபர்செல்வநினை
நின்னைவறிஞனெனநீநினையி-னின்னிற்
சிறியார்வறுமைநினைசிந்தைபுகவென்றுங்
குறியாவிடும்பைதுக்கங்கோள். 120

அறிவோர்புகழ்ச்சி.

அநித்தியத்தைநித்தியமென்றுதரிக்கும்பொல்லா
மனிதருடன்கூடிமருவார்-தனித்திருந்து
மோனந்தமாஞ்சிவத்தின்மூழ்கிமலத்தையறுத்
தானந்தமாயழுந்துவார். 121

தாகமறந்துசதுர்மறந்துதான்மறந்து
தேகமறந்தட்டமாசித்திமறந்-தாகத்தின்
வந்ததறியாதிருந்துமாறுச்சிவானந்தஞ்
சந்ததம்வாழ்வாக்கார்சரி. 122

உள்ளமலநீங்கியொழியாச்சிவானந்த
வெள்ளந்துளைந்துவிளையாடும்-பிள்ளைகா
ளத்துவிதமானீர்நம்மாகம்பிரிந்தேதாமென்
றித்துவிதமென்னுவானேன். 123

அறிவாயறிவிழப்பிலாகின்றவின்பச்
செறிவாய்ச்சுகமாய்த்தினமும்-பிறியா
திருந்தங்கதீதமாயெய்ந்தசிவானந்தம்
பொருந்துவார்முத்தரெல்லாம்போய். 124

மடவோர்பழிப்பு.

தனியறியாரீசன்றனையறியார்பாச
வினையறியாரானந்தமேவார்-தனையறியுஞ்
சிட்டர்தமக்கில்லாததிங்குரைப்பர்பொல்லாத
துட்டர்தமக்குள்ளதொழில். 125

தன்னையறியார்தலைவன்றனையறியார்
முன்னைவினையின்முடியறியார்-பின்னைக்
குருக்களென்றும்பேரிட்டுக்கொள்ளுவார்களேயோ
தெருக்கடனிலேசிலர். 126

வாயுவெளிதானசையாவாற்றிருந்தாற்போலென்று
நீயதுவும்பூரணமாய்நிற்கவே-காயத்துக்
குள்ளுள்ளேதான்சிவமென்றுற்றுப்பார்ப்பாருசிப்
பொள்ளலால்வான்பார்ப்பார்போல். 127

கற்கவிடர்ப்பட்டுமிகக்கற்றவெல்லாங்கற்றவர்பாற்
றற்கமிட்டுநாய்போலச்சள்ளெனவோ-நற்கருணை
வெள்ளமடங்கும்விரிசடையார்க்காளாகி
யுள்ளமடங்கவல்லவோ. 128

அறியார்கனவினிலுமானந்தரூப
மறிவார்தமையுமடையா-ரறிவார்கட்
கில்லாததிங்கேயெடுத்துரைப்பாரிவ்வுலகிற்
பொல்லார்தலைபிற்றொறி. 129

பொது நிலை.

நீதியிலாமன்னரிராச்சியமுநெற்றியிலே
பூதியிலார்செய்தவமும்பூரணமாஞ்-சோதி
கழலறியாவாசானுங்கற்பிலருஞ்சுத்த
விழலெனவேநீத்துவிடு. 130

ஐந்தறிவாற்கண்டாலுமாலோதுசொன்னாலு
மெந்தவிருப்புவெறுப்புப்பேய்ந்தாலுஞ்-சிந்தையே
பாரவிசாரத்தைப்பண்ணாதேயெ ான்றுந்
தீரவிசாரித்துச்செய். 131

பரபரக்கவேண்டாம்பலகாலுஞ்சொன்னேன்
வரவரக்கண்டாராய்மனமே-யொருவருக்குந்
தீங்குநினையாதேசெய்நன்றிகுன்றாதே
யேங்கியிளையாதிரு. 132

மிகுத்தகுலஞ்செல்வத்துமேவுவதுமத்தைப்
பகுத்துப்பொய்யென்றுவிடும்பாங்குந்-தொகுத்து
விரித்தானன்னெஞ்சேமிகுவாரணத்தை
யுரித்தான்செயலென்றுணர். 133

ஆறாறுதத்துவம்வைத்தத்திலுறைமூர்த்திகள்வைத்
தேறும்மலபாகமேறவே-மாறும
லுன்னைவிடாதாள்வாலுனைக்கேட்டோ-நெஞ்சமே
யென்னவிசாரமெமக்கு. 134

தானேவசத்தல்லவென்றறிந்தாற்றாரணியி
லேனேபிதற்றிடுவதேதைநெஞ்சே-தானே
யிறவாததுதாணிறக்கவருளை
மறவாதிருசிவமாவை. 135

எற்றாதவையாயிருப்பதவுமுன்மயக்க
மாற்றாதிரொனறாற்றுவதுந்-தோற்றாது
தாற்றுவதுமுன்னைச்சுகபூரணனெனறு
தற்றுவதுமீசன்செயல். 136

அன்றேயானனுக்கள்பாசங்களெந்தொழில்க
ணன்றேசிவனுநடுவனே-சென்றருளி
னிற்கச்சிலர்சிலர்கணீணாகிற்பூதலத்திற்
சொற்கத்திருப்பதென்றேசொல். 137
ஆசையறுப்பாசமவிடாயானசிவபூசைபண்ணாய்
நேசமுடனெந்தெழுதனைநினையாய்-சீசீ
சினமேதவிராய்திருமுறைகேளோதாய்
மனமேயுனக்கென்னவாய். 138
தில்லைவனங்காசிதிருவாரூர்மாயூர
முல்லைவனங்கூடன்முதுகுன்ற-நெல்லைகளார்
காஞ்சிகழுக்குன்றமறைக்காடருணைகாளத்தி
வாஞ்சியமெனமுத்திவரும். 139

தனி கட்டளைக்கலித்துறை.

ஆய்வார்பதிபசுபாசத்தி னுண்மையையாய்ந்தறிந்
துநாய்வார்பிரபஞ்சவாழ்க்கை எல்லாங்கல்விகேள்வி
யல்ல, லோய்வார்சிவானந்தவாரியுள்ளேயொன்றிர
ண்டெமறத், தோய்வார்கமலையுண்ஞானப்ரபிரகாசன்
மெய்த்தொண்டர்களே. 140
கனக்கும்பொதிக்கு மெதுக்குந் தன்னிச்சைகண்
உதுண்டோ, வெனக்கு முடற்கு மெனதிச்சையோ
விணங்கார்புரத்தைச், சினக்குங்கமலையின் ஞானப்
பிரகாசசிதம்பரவின், றனக்கிசை யெப்படியப்படி
யாகவுரைத்தருளே, 141
எல்லாமுனதுசெயலன்னறிந்துமெனதுளத்திற்
பொல்லாதசங்கற்பமேன்வருமோபுரமுன்றெரிக்க
வல்லாய்கமலையின்ஞானப்ரகாசவரதனது, கொல்
லாய், காரணமயக்கமன்றோவென்றொழிலல்லவே.

கலி விருத்தம்.

அவரவர்வினையழியவரார்வந்தன
ரவரவர்வினைவழியாவரனுபவ
மெவரெவர்க்குதவினரெவரெவர்குதவிலர்
தவரவர்நினைவதுதமையுணர்வதுவே. 143

சிவபோகசாரம் முற்றிற்று.

உ

சிவமயம்.

சொக்கநாத வெண்பா.

ஆடரவஞ்சூழ்மதுரையம்மானேயன்பருடன்
கூடவிளையாடிவருகோமானே-நீடுபுகழ்
பெண்மேலுமென்றனக்குமேவியிடப்பொல்லாத
வென்மேல்வினைகெடுப்பாயே. 1

புண்கட்டுதோலைப்புதுக்கிமயக்கமுறக்
கண்கட்டுவித்தைபோற்காட்டுவாய்-மண்கட்டுப்
பூணுவென்றன்னையின்பபூரணத்திற்பூணவரு
டாணுவேசொக்கநாதா. 2

எடாருநாரியரையையோயமன்பிடிக்கும்
பாடாவிநியென்றுபாராமற்-கேடாரப்
பூண்ட * யாபாதனென்றுபோடாதெனையருளி
லாண்டவாசொக்கநாதா. 3

காக்கைநரிஞாளிகழுகுபருந்துக்கிரையா
மாக்கையினையானென்றலையாமல்-வாக்குமன
மெட்டாதவீட்டிலெனைக்காட்டுதுட்டருளந்
தட்டாதசொக்கநாதா. 4

பஞ்சமாபாதகனையாண்டதைப்பார்மீதிற்
கொஞ்சமாவீறுபுகழ்கூறுமே-வஞ்சமே
பூண்டளவில்பாதகஞ்செய்பொல்லாதநாயேனை
யாண்டளவிற்சொக்கநாதா. 5

வறிஞர்தமையொக்கவைக்குமன்னர்போல்
வறிஞர்தமையாள்வதன்றிப்-பொறிபுலனால்
வெம்புவேன்றன்னைவிடுத்தாள்வதேபாரஞ்
சம்புவேசொக்கநாதா. 6

---

* ஆபாதன்-கழுவுகின்றவன்.

என்னாலுனையடையவல்லேனெனினிவரி
னிந்நாளளவுமிருப்பதேனோ-பன்னாகம்
பூண்டவாவேணிப்புனிதாமதுரைநக
ராண்டவாசொக்கநாதா. 7

எல்லாமும்வல்லசித்தேரென்றக்காலென்னுடைய
பொல்லாக் * கருத்தகற்றப்போகாதோ-வல்லாடும்
பொங்கராவேணிப்புனிதாமதுரைநகர்ச்
சங்கராசொக்கநாதா. 8

பேசாவனுபூதிபிறக்கவெனதுளத்தி
லாசாபசாசையகற்றுவாய்-தேசாருஞ்
சிற்பரானந்தா திருவாலவாயுறையுந்
தற்பராசொக்கநாதா. 9

இறந்தும்பிறந்துமிளைத்தேனினியான்
மறந்தும்பிறவாவரந்தா-சிறந்தபுகழ்
ஞாலவாயாமுடிக்குநாட்டுசூளாமணியா
மாலவாய்ச்சொக்கநாதா. 10

உலகவெறுப்புமுடல்வெறுப்புமுள்ளத்
திலகுமலவெறுப்புமெல்லா-மலசிறந்த
நிந்தாதவின்பசுகநாட்டின்விருப்பமுறத்
தந்தாள்வைசொக்கநாதா. 11

எப்போதுமும்மலமும்விட்டேறுவேன்பூரணமா
பெப்போதுனின்பசுகத்தெய்துவே-னெப்போது
நித்தியாசுத்தாநிராமயாசொற்றவரூர்
சத்தியாசொக்கநாதா. 12

காயமோகாலன்கருத்தேமாகாகாலன்
ஞாயமேசற்றுநடப்பதில்லை-பேயனேன்
மாணுவனோதென்மதுரைமாமணியேயென்னையுகர்
தாணுவைபோசொக்கநர்தா. 13

* "வினைபகற்றுவென்றும்பாடம்.

எரிசுடுவதல்லாலிரும்புசுடுமோ, வரியபற்றும்வாச
வற்றுமிபார்க்கும்-பெரியவர்க்கும், பூணுமேதத்தொ
ழினின் பொன்னருளார்றென்மதுரைத், தாணுவே
சொக்கநாதா. 14

ஆரிடத்தில்வந்துமடியேனுளத்திருந்து
மோரிடத்திலுற்பவித்துமுள்ளபடி-பாரிடத்தி
னாயேனுளமகிழநன்றாயுணர்த்திடுவாய்
தாயேநீசொக்கநாதா. 15

நித்தமெழுந்தருளிநின்மலனையென்றனக்குப்
புத்திமிகவும்போதித்துச்-சித்தமயல்
போக்குவாயின்பசுகபூரணத்திரண்டறவே
யாக்குவாய்சொக்கநாதா. 16

மறையாகமவிதியும்வந்தவுடறன்னி
னிறையூழ்விதிமுன்னானின்றன்-மறைவிதிக்கே
யேற்கவேசெய்வேனிசைந்தாலும்வேறதனோ
யார்க்கவென்சொக்கநாதா. 17

நலம்வினைக்குமுன்பதத்தினுள்வைப்பதல்லான், ம
லம்விளைக்குஞ் சோறருந்தவைத்தாய்-சலம்விளைக்கு
ஞ், சென்னியாமாமதுரைச் செல்லாவெல்லாமும்வ
ல்ல, கன்னியாசொக்கநாதா. 18

ஆர்வந்தெனார்போயெ னையாவுன்னானந்தச், சீரு
ளத்தேயென்றுஞ்செறிந்திலதே-காரிருண்ட, கண்
டனேயோர்புருடன் காதல்கொண்டாள்போன்மது
ரை, யண்டனேசொக்கநாதா. 19

கான்றசோறாயுலகங்காணவில்லையின்பவெள்ளத்
தூன்றவடியேனுறங்கவில்லை-யேன்ற
விருள்சகலநீங்கவில்லையேழையேற்குன்ற
னருளூறுமோசொக்கநாதா. 20

நீயேபரமசிவனுனக்காணின்மலனே
நானேனுளமகிழநன்றாகப்-பேயேன்
கருத்தடக்கநின்கருணைகாட்டியின்பவெள்ள
மருத்திடுவைசொக்கநாதா. 21

விதிமார்க்கமெப்பொழுதுமேவறியேனாழின்
விதிமார்க்கமல்லாதுமெய்யாங்-கதிமார்க்கங்
காட்டுவாய்நாயேன்கரையேறவெவ்வுலகு
மாட்டுவாய்சொக்கநாதா. 22

அருவருப்பேமெத்தியிடுமோகத்தைச்சற்று
மருதருக்கத்தோற்றுதில்லையையோ-வருவருக்கத்
தோற்றியிடாதென்வினை துய்ப்பித்தறுப்பதற்கோ
சாற்றியிடாய்சொக்கநாதா. 23

தவமோசிறிதறியேன்றானமேற்செய்யு
மவமோவளவில்லையானாற்-சிவமோ
பெறுமாறென்கூடற்பிரானேமுப்பாச
மறுமாறென்சொக்கநாதா. 24

அனைத்துயிர்க்கும்பாசமறுத்துமுத்திகூட்ட
மீனத்துயரஞ்செய்தன்மருந்தோ-மனத்துயரஞ்
செய்யாமற்றீர்மருந்துசித்தாவறிந்திலையோ
வையாவென்சொக்கநாதா. 25

உணர்த்திலுணர்வேனுணர்த்தாயேனாயேன்
கணத்துமுணரும் வகைகாணே-னுணர்த்தியென்னு
பூண்டமலமாயைகன்மம்போக்கிச்சிவானந்தத் [ட்
தாண்டருளவைசொக்கநாதா. 26

பிறிந்தேன்மலத்துனதுபேரருளினாலே
யறிந்தேனுனைநன்றாவையா-செறிந்தபின்பு
பூரணாசெங்கமலப்பொற்பாதாகூடவில்வா
மூரணாசொக்கநாதா. 27

கெடுங்காலம்வந்தாற்கெடுப்பைகதியில்
விடுங்காலம்வந்தால்விடுவை-கொடுந்தவங்கள்
பண்ணிடினும்பாவமபயிற்றிடினுமாறேனு
மண்ணலேசொக்கநாதா. 28

என்றவினைநாயேற்கிருக்குதோவிக்காயத்
தென்னவினைநின்றுஞ்சியற்றுமே-வென்னவினை
வந்திடுமோவென்றறியேன்வந்தாலுநின்னருளே
தந்திடுவாய்சொக்கநாதா. 29

ஆறாறுதத்துவத்துமாணவத்துங்கன்மத்து
மாறுதெந்நாளுமயங்காமற்-பேறுக
நித்தனேநின்மலனேநின்பதத்திலாண்மதுரை
யத்தனேசொக்கநாதா. 30

அடியேனுனைவேண்டலப்படியேயென்றுங்
கொடியேன்கருத்திசையக்கூறி-யடியேனை
மீண்டுபிறவாதுன்விரைமலர்த்தாள்சூட்டியெனை
யாண்டவனேசொக்கநாதா. 31

ஆசானுளத்திருத்திருந்துமான்மாவுளத்திருந்து
மாசார்மலத்தையறுத்தருளி-நேசா [ன்றி
வெளித்திருந்தயின்பவெள்ளமொன்றவுயிர்க்கெ
மளிப்பவனீசொக்கநாதா. 32

ஆற்றையணிவேணியமலனேமெய்யதனி
னீற்றைப்புணரிநிமலனே-கூற்றைக்
குமைத்தவனேயென்சிரத்துன்கோகனதத்தாளை
யமைத்தவனேசொக்கநாதா. 33

காலவசமோயடியேன்வினைவசமோ
ஞாலவசமோவருணைநாடியே-கோலமறச்
சிற்பரானந்தவெள்ளஞ்சேர்ந்தறிந்துஞ்சேர்கிலேன்
றற்பராசொக்கநாதா. 34

நீணாட்பிறந்திறந்துநின்றதுயர்நீயறிவை
விணாட்கழித்துவிடாமலே-பூணவரு
னண்ணரியபேரின்பநாடியதுவாக
வண்ணலேசொக்கநாதா. 35

ஆறாறுதத்துவத்துமாணவத்துஞ்சாராமன்
மாறாதபேரின்பவாரிதியே-பேறாகச்
சார்ந்திருக்கவல்லசதுரருளத்ததுவா
யார்ந்திருக்குஞ்சொக்கநாதா. 36

காடோவனமோகனகிரியோகாசினியோ
காடோசகலகலைஞானமோ-வாடி
யொடுங்குவதோமெய்வீடுயிர்க்களித்தல்போத
மடங்குவதோசொக்கநாதா. 37

துன்றுபரமானந்தச்சோதியிலிரண்டற்று
நின்றுவிடவென்னைநிறுத்துவா-யன்று
கமலனேகாண்பரியகண்ணுதலேகூட
வமலனேசொக்கநாதா. 38

எக்காலமிக்காயமிற்றிடுமோதென்வினைக
ளெக்காலமும்வலங்களிற்றிடுமோ-வெக்கால
மானந்தசாகரத்திலாடிடுமோவென்னுளந்தா
னானந்தசொக்கநாதா. 39

எக்காலமெய்க்கேயிரையிடுதலிற்றிடுமோ
வெக்காலமிக்கரணமிற்றிடுமோ-வெக்காலம்
பேசாவநுபூதிபிறந்திடுமோவென்னுளத்தி
லாசானேசொக்கநாதா. 40

வாக்கினுரைபொய்யேமனநினைப்பதுங்கவடே
யாக்கைதினஞ்செய்வதநித்தியமே-நோக்கிற்
றிரிவிதமுமிப்படிநீசெய்வித்தான்முத்தி
தருவிதமென்சொக்கநாதா. 41

இக்காலத்தின்னவினையென்றமைப்பையப்படியே
யக்காலத்தவ்வூழருத்திடுவை-யிக்காலந்
தப்புவாருண்டோதமியேற்குந்தப்பரிதென்
அப்பனேசொக்கநாதா. 42

மோகாபிமானமின்னுமுற்றுமறக்கவில்லை
தேகாபிமானஞ்சிதையவில்லை-போகோ
வுனையடைந்தும்பாசமொழியவில்லைகூட
றனையடைந்தசொக்கநாதா. 43

பத்திமெத்தசித்தம்பதியவில்லையட்டமா
சித்தியவாவெறுக்கச்செய்யவில்லை-முத்தியுளங்
கூடவில்லையெந்நாளுங்கூடவிலைமாறிநட
மாடவல்லசொக்கநாதா. 44

என்னைவளைபாசவரணின்னமுநீகொள்ளவில்லை
யன்னையனேநீபதனமாறுது-முன்னைமல
மோடவேயெவ்வுயிர்க்குமோட்டுவருட்சேனை
தாடியிடுஞ்சொக்கநாதா. 45

சேகரத்தினுச்சியின்மேற்செந்தேனுக்கிச்சித்தே
போகவசமாகுமோபோகாதார்-தாக
மிகவறவேயுள்ளத்தில்வேண்டினுன்றாட்செந்தே
னகமுறுமோசொக்கநாதா. 46

அடியார்பரிபாகமெல்லாமறிந்து
படிகீழ்ப்பதமேற்பதத்திற்-கொடுபோ
யிருத்திடுவைசேரவினுமேலாம்போக
மருத்திடுவைசொக்கநாதா. 47

வாழைம்மலத்தால்வருந்திமிகவுடைந்த
வேழையனுக்கையோவிளங்குவாய்-கோழையனுய்ப்
போனேன்புலப்பகையாற்பொன்னடியைநின்னரு
ளாற், றூனேதாசொக்கநாதா. 48

எக்காலந்தாகங்களிற்றிடுமோகாயங்க
ளெக்காலமாசைசினமிற்றிடுமோ-வெக்கால
நல்லார்குணம்வருமோநாதாவெல்லாமுமா
யுல்லாசனேசொக்கநாதா. 49

உள்ளமுனையல்லாலொன்றுள்ளவில்லைநின்றெருளிக்
கள்ளமறநீயுங்கருதவில்லை-யெள்ளளவு [குங்
நற்றவமோசெய்யவில்லைநாயேனுனையடைதற்
கற்றதென்னசொக்கநாதா. 50

ஆர்க்குக்கிடைக்குமடியேன்முன்வந்துமறைக்
கேற்கக்கருத்துக்கிசையவே-யார்க்குந்
தெரிவரியாவேதசிகைசித்தாவுரைத்தா
யரியறியாச்சொக்கநாதா. 51

எவ்விதையைமார்கள்பயிரிட்டார்களிட்டவரே
யவ்விதையின்போகமருந்துதல்போற்-செவ்விதாய்
துன்மார்க்கஞ்செய்வார்க்குத்தோன்றும்பிறப்புமு
த்தி, சன்மார்க்கஞ்சொக்கநாதா. 52

எல்லார்கருத்துமிதமாயுரைக்கறியே
னில்லாங்குதீங்கிதெனநாடறியே-னெல்லாரு
நீரூரும்வேணிநிமலாமதுரையில்வா
ழாரூராசொக்கநாதா. 53

உரையிறந்தபேரின்பவுல்லாசவீட்டிற்
றிரையிறந்துதூங்கித்திளையேன்-வரைபெருக
பேசுவேன்யானென்றேபெற்றவர்தம்முள்ளத்துக்
காசுவேன்சொக்கநாதா. 54

ஆறாறுதத்துவமுமத்திலுறைமூர்த்திகளும்
பேறும்வினையினையும்பெந்தித்து-மாறும
லாட்டுவதுநீயாறுலாகாமியமென்பாற்
பாட்டுவதென்சொக்கநாதா. 55

முன்னளவின்மாக்களுக்கு முத்திகொடுத்தவரு
ளென்னளவிற்சும்மாவிருப்பதேன்-முன்னளவிற்
சீர்பெற்றாரே லுன்றிருவருளொத்தாசையன்றி
யார்பெற்றார்சொக்கநாதா. 56

நோயால்வருந்தியுனை நூறுகுரற்கூப்பிட்டா
னீயாரென்றுதிருக்கைநீட்டியோ-தாயா
யலைகொடுத்தகேழலருங்குழவிக்கன்று
முலைகொடுத்தாய்நீயலவோ முன். 57

தாயார்மகவருத்தஞ்சற்றுந்தரியார்க
ளாயவினைக்கீடாயமைத்தாலுங்-காயம்
பரிக்குந்துயரமெல்லாம்பார்க்கவுனக்கென்றுந்
தரிக்குமோசொக்கநாதா. 58

தீவினையாலின்னமின்னந்தேகமுறச்செய்வையோ
தீவினையற்றன்மயமாய்ச்செய்வினையோ-தாவிதமா
யின்படிவேல்விளைவதென்றறியேனீதறிந்த
வன்னையேசொக்கநாதா. 59

என்னதியானென்பதுவு மியான்பிறர்செய்தாரென
லு, மன்னுமதிபாதகமேல்வாஞ்சைகளு-மின்னமின்
னஞ், சொல்லுகின்றவிச்செயனீதூண்டுதலற்றென்
செயலா, லல்லவேசொக்கநாதா. 60

ஆலந்தரித்தலிங்கமாலவாய்ச்சொக்கலிங்க
மூலமாயெங்குமுளைத்தலிங்கம்-பாலொளியா
மத்தனேகூடன்மதுராபுரியுமையா
ளத்தனேயாலவாயா. 61

எல்லாமுனதுபதமெல்லாமுனதுசெய
லெல்லாமுனதருளேயென்றிருந்தாற்-பொல்லாத
மாதுயரநீங்குமருவுமுனதடிக்கே
யாதரவாய்ச்சொக்கநாதா. 62

தீதாமவாநந்தச்செய்மதுரைவாழ்வேந்தா
நாதாசிவாநந்தநல்குவாய்-வேதச்
சிரகராநித்தாதிரபராசுத்தா
வரகராசொக்கநாதா. 63

மற்றொருவர்தஞ்சமின்றிவந்தடைந்தாக்காலெனைநீ
சற்றுமிரங்காதிருக்கைதன்மையோ-கொற்றவா
பாவலர்கூடற்பரமாபரதேசி
காவலநீதானுனக்கால். 64

தன்னந்தனியேதமியேன்முறையிட்டா
லின்னந்திருச்செவியிலேறாதோ-மன்னவனே [ந்
தென்மதுரைமேவித் திருநதியசெங்கோல்செலுத்து
தன்மதுரைநீயலவோதான். 65

என்போன்மலடிகளரெவ்விடத்துங்கண்டதுண்டோ
வின்பமதுரைக்கிறைவனே-யன்பேது
மில்லாதெனையாண்டவெண்ணத்தாற்றேவரீ
ரெல்லாமும்வல்லசித்தரே. 66

நீயேயொளித்திருப்பைநீயென்றிங்காணும
னீயேயொளித்தபடிநின்னருளா-னீயேதான்
காட்டவன்னியமார்க்கண்டேனுனதுவிளை
யாட்டதென்னசொக்கநாதா. 67

பேரன்பனல்லன்பிழைசெய்யான்றானல்ல
னோரன்புமில்லாவுலுத்தனேன்-பேரன்பு
கீட்டியேனைக்காட்டியுனைக்காயின்பத்தொட்டிலிலே
யாட்டிவளர்சொக்கநாதா. 68

இட்டாசனத்திலிரவுபகலற்றிடத்தின்
முட்டாதிருக்கவருண்முற்றுந்தா-வட்டாங்க
யோகந்தானீங்கியொழியாச்சிவானந்த
வாகந்தாசொக்கநாதா. 69

மோகங்களையமுழுதுமலங்களைய
வாகங்களையவறிவானந்த-மோகமாய்ப்
பூரணமாயெங்கெங்கும்பொங்கியெழவிழித்த
வாரணனேசொக்கநாதா. 70

ஊனதாவானவுடலோடுமெணுகாமலரு
ளானசிவபோகமதுவாயருள்வாய்-ஞானக்
கரும்பொருளேவாழ்மதுரைக்கண்ணுதலே யார்க்கு
மரும்பொருளேசொக்கநாதா. 71

பூண்டமலமாண்டுவிடப் போந்தசிவானந்தவெள்ளத்
தாண்டுமெனைமீண்டுவிடலாகுமோ-நீண்டமால்
வீரென்பார்தாராவிமலாவெனைக்கண்ட
ராரென்பார்சொக்கநாதா. 72

முன்னைமலமகற்றிமூதறிவானந்தமயந்
தன்னையறிந்ததபோதனரு-ளென்னையுநீ
யாண்டுபரிச்சொக்கநாதாந்தமருள்கூடலிலே
தாண்டுபரிச்சொக்கநாதா. 73

கருணாநிதியேகடவுளேயன்பர்
பொருளானபேரின்பப்பொற்பே-யொருநாளு
நீங்காதெனதறிவினின்ற சுகானந்தமே
யாங்காணீசொக்கநாதா. 74

நீரிலேமூழ்கினுமெனித்தமருச்சிக்கினுமென்
பாரிலேசுற்றிப்பணியினுமென்-வேரிலே
யுற்றிருந்தாலன்றோவுயிர்க்குறுதியொன்றிரண்டு
மற்றவனேசொக்கநாதா. 75

என்செயலேயென்றென்றியற்றுவதுமென்செயனி
முன்செயலேயென்றென்றுணர்த்துததுநின்செய
லாகுமேரென்னவடியேற்குணர்த்துநீ
யாகுமேசொக்கநாதா. 76

ஈண்டுமெனையாண்டிலையேலென்வினைக்கீடாயானே
வேண்டும்பவங்களினிவிட்டாலும்-பூண்டருளா
லங்கங்கேயென்றோடன்னியமாயைன்னுருவிற்
றங்கியருள்சொக்கநாதா. 77

உன்னைவிடநீங்குமுயிரொன்றில்லையாதலினு
லென்னைவிடநீங்குவதுமில்லைநீ-பொன்னைவிடப்
பூந்தேனவருடையாய்பொங்குமதுராபுரியில்
வேந்தேபிரியாவிடை. 78

அன்பர்க்கருள்புரிவதல்லாமற்றேவரீர்
வன்பர்க்கருள்புரியமாட்டீரோ-வும்பர்தொழு
நல்லார்புகழ்மதுரைநாதரேதேவரீர்க்
கெல்லாமும்வல்லசித்தரேன். 79

நரகமினிநாடநாடோமுமையாள
விரகர்தமிழ்மதுரைமேவித்-துரகநரி
யாக்கினார்வைகையினீராடினேமவ்வெல்லைப்
போக்கலாம்யாந்திரிந்திப்போது. 80

நானேதனுகாரணநானேமலமாயை
நானேவினைகண்டத்துவது-நானேதான்
பூண்டவினையறுப்போன்புண்ணியபாவம்புரிவோ
னாண்டவனேசொக்கநாதா. 81

அருப்பாசநன்மைதின்மையாகமதன்மேல்
விரும்பாதநிட்டையிலேமேவித்-திரும்பாத
மானந்தாவென்னறிவின்மாறாதுபொங்கியெழு
மானந்தாசொக்கநாதா. 82

துஞ்சப்பிணமென்னச்சுற்றத்தாரிட்டத்தா
ரஞ்சக்சலிக்கவருவருக்கக்-கொஞ்சமுற
வந்ததனுவிருந்துவாழ்ந்துநானென்னவைத்த
தந்திரமென்சொக்கநாதா. 83

தனுவாதியாக்கியுயிர் தன்னிலிசைத்தாட்டி
யெனுமாகமங்கருணையென்றுந் - தினமுமீ [ரைத்த
யாச்சரியம்யானெனவேதன்றூட்டன்மறந்தொன்று
லாச்சரியஞ்சொக்கநாதா. 84

தேகாதியெல்லாஞ்சடமபிணம்பொய்யென்றிருக்க
மோகாதியெல்லாமுடிந்திருக்க - வேகமா [ன்னு
மெப்போதுமின்பவெள்ளத்தேயிருக்கவாழ்வை மெ
ளப்போதேசொக்கநாதா. 85

நின்பாடலென்றுநினைப்பாடலன்றியே
யென்பாடலெங்கேயிறைவனே - நின்பாட
லாமேதனுவாதியாகமநால்வாக்காதி
யாமேநீசொக்கநாதா. 86

நீயற்றவோர்பொருளைநிச்சயித்தநாயேனும்
போயிபற்றல்செய்யப்புரிகுவே - னீயியற்ற
லாக்காதனுவுமசையுமோவவ்விகற்பந்
தாக்காதசொக்கநாதா. 87

அன்றுமுதலின்றளவுமேனுமடியேனுக்
கென்றுநீநன்மைசெய்வதன்றுநா - னென்றேனுஞ்
செய்யுமாறெங்ஙன்சிவனேயினிநாயே
னுய்யுமாறெங்ஙனுரை. 88

அறிவுபரமானந்தமாகவில்லையாகம்
புறிகாரணம்யானென்றும்போக - நெறிதவஞ்சேர்
பேரன்போவில்லைபிணநானுனக்கடிமைக்
காரென்பேன்சொக்கநாதா. 89

நின்னளவிலானந்தநின்கருணைசற்றேனு
மென்னளவிற்சேற்றாதிருந்தக்கா - னின்னளவிற்
பூரணம்பொய்யானந்த பொய்யருணைபொய்யுரைத்த
வாரணம்பொய்சொக்கநாதா. 90

தேவேமதுரைநகர்ச்சிற்பரனேயெவ்வுயிர்க்குங்
கோவேயெனையாளுங்கோவே-நாவே
யுனைத்துதிக்கச்சிந்தையுனைநினைக்கவென்றுங்
கனத்திலுனைவணங்கக்காண். 91

உன்னைச்சிங்காரித்துனதழகுபாராம
லென்னைச்சிங்காரித்திடர்பட்டேன்-பொன்னை
யரிவையரையேநினைவுமன்புவேற்குன்று
டருவையேசொக்கநாதா. 92

சொக்கநாதாவுனையேசொல்லும்படியேனுடைய
பக்கமாய்நின்றுவினைபாற்றியே-யெக்காலு
மீண்டுவாராதகதிமேவுவிப்பாய்தென்மதுரைத்
தாண்டவனேசொக்கநாதா. 93

ஆறுதலையில்லையடியேனுக்கன்பாகத்
தேறுதலைசொல்வார்சிலரில்லை-வேறெனக்குந்
திருக்காருமில்லைசிவனேபழிக்கஞ்சி
சொக்கேநின்றாளேதுணை. 94

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஞானசம்பந்ததேசிகர் திருவடிவாழ்க.

உ

சிவமயம்.

கைலாயக்கம்பிளிச் சட்டைமுனிநாயனார்

அருளிச்செய்த

மூன்ஞானம் - நூறு.

அகண்டபரிபூரணமா முமையாள்பாதம்
அப்புறத்தேநின்றதொரு வையர்பாதம்
புகன்றுநின்றகணேசனொடு நாதாக்கள்பாதம்
புகழ்பெரியவாக்குடைய வாணிபாதம்
நிகன்றெனவேயெனையாண்ட குருவின்பாதம்
நிறைநிறையாய்சொரூபத்திலநின்றோர்பாதம்
முகன்றுயெனையீன்றெடுத்த சின்மயத்தின்பாதம்
மூவுலகுமெச்சுதற்குக் காப்புதானே. 1

தாங்கிநின்றசரியையிலே நின்றுசடம்வீழ்கில்
தப்பாதுகிரியையுள்ளே சாரப்பண்ணும்
வாங்கிநின்றகிரியைவிட்டு விழுந்துதானால்
மகத்தானவுடலெடுத்து யோகம்பண்ணும்
ஓங்கினின்றகிரிகைவிட்டு விழுந்துதானால்
உத்தமனைவுபார்ந்துனின்ற ஞானந்தேற்றும்
பாங்கினின்றஅச்சென்மமவுனமுத்தி
பரிவாகவாய்ந்தவர்க ளறிந்துகொள்ளே. 2

அறிந்திந்தநான்குக்கும் விக்கினங்களுண்டு
அப்பனே அதாமியஞ் சந்திசித்தினோடே
மறிந்துனின்றபிராரத்தந் தோயத்தோடு
மகத்தானநாலுக்கும் விக்கினங்களாச்சு
பிரிந்துனின்றநாவினாற் செய்வதென்ன
பேரானவறுமையொடு கிலேசந்துக்கஞ்
செறிந்துனின்றபெண்பொன்னா மண்ணினாலே
சேத்துமத்திலீபோலே தியங்குவாரே. 3

தியங்கினால்கொர்ச்சித்துத் துறக்கச்சண்ணுஞ்
. சீறியர்மிலேச்சரையே ஜகத்தினுள்ளே
மயங்கினர் நாலுபாதத்தினுள்ளாரு
மனஞ்செவ்வையாவதெப்போ நாமறிவதெப்போ
தயங்கினாருலகத்திற் கோடிபேர்கள்
சாவதும்பிறப்பதுவுங் காவடிபோலாச்சு
துயங்கினார்துயரத்தில் ஞானம்போச்சு
சுடுகாட்டிலறிவதுபோல் சுத்தப்பாழே. 4

பாழானமாய்கைசென்று வாழ்வதெப்போ
பரந்தமனஞ்செவ்வையாய் வருவதெப்போ
வாளானவிழியுடைய பெண்ணைச்சேரு
மயக்கம்அற்றுநிற்பதெப்போ மனமேயையோ
காழானவுலகமதி னுசையெல்லாங்
கருவறுத்துநிற்பதெப்போ கருதினின்ற
கோளானகருவிட்டு மேலேநோக்கிக்
கூடுவதுயேதென்றால் மூலம்பாரே. 5

மூலமதுலாறுதலங் கீழேதள்ளி
முதிர்ந்துனின்றமேலாறு மெடுத்துநோக்கிக்
கோலமுடனுன்மனையைத் தாண்டியேறிக்
கொடியதொருஞானசத்திக் குள்ளமைந்தா
பாலமென்றகேசரியா மவுனத்தாண்டிப்
பராபரமாமந்திரத்தில் ஞான்முற்றிக்
காலமொடுயிறப்பிறப்புங் கடந்துபோகும்
கைவிட்டசூத்திரம்போல் சடமுமோங்கே. 6

ஓங்காரமுதங்கொண்டு வைந்தெழுத்தோடாறு
முற்றுனின்றபஞ்சகர்த்தா ளிருந்திடந்தான்பாரு
ஆங்காரமாணுவமும் நானெனவும்போனு
லப்பவலேஅகாரமுத லுகாரங்காணும்

பாங்கானமகாரமொடு விந்துநாதம்
பாவியதின்மேல்நிற்கும் பராபரந்தான்மைந்தா.
வாங்கானமவுனத்தைப் பற்றியேறு
மருவினின்றலகிரியைத்தா னெத்துக்காணே. 7

ஒத்துநின்றஓங்கார மண்ணையுண்ணு
முருவியந்தமண்சென்று சலத்தையுண்ணும்
பத்திநின்றசலமதுகான் நீரையுண்ணும்
பாங்கானதீச்சென்று காலையுண்ணும்
வெத்திநின்றகால்சென்று விண்ணையுண்ணும்
விழுந்துதப்பாசடமென்று வேதாந்தம்பேச்சு
முத்திகண்டுகூடுவது வெந்தக்காலம்
மூடரேமதுவையுண்டு மேலேபாரே. 8

பாரப்பா அகாரமுத லுகாரணைத்தைக்கொள்ளும்
பாங்கானஉகாரமது மகாரத்தைச்கொள்ளும்
நேரப்பாமகாரமது விந்துவைத்தான்கொள்ளும்
நேரானவிந்துவது நாதத்தைக்கொள்ளும்
சேரப்பாநாதமுற்றுசத்தியத்தைத்தான்கொள்ளும்
சேர்ந்துநின்றசத்தியல்லோ சிவத்தைகொள்ளு
ஆரப்பாசிவந்தன்னைப் பரந்தான்கொள்ளும்
அப்பரத்தைக்கொண்டவிட மறிந்துவுண்ணே. 9

உன்னினின்று மூலமுத லாறும்பார்த்து
வுருகினின்றசுழிமுனையை யறிந்துபின்பு
மன்னினின்றமதிமேலே சாம்பவியைக்கண்டு
மருவினின்றுமனமுறைந்துத் தேர்ந்தபின்பு
பன்னினின்றயிவ்வளவும் போகமார்க்கம்
பாவிரவுமற்றவிடம் ஞானமார்க்கம்
கன்னினின்றவிடங்கண்டா லவனேஞானி
காட்டுவான்கேசரியை காட்டுவானே. 10

கொட்டுவான்கிரியுன்னை மேலேயேற்றிக்
கைவிட்டாளகரியைத்தான் கீழேதள்வாள்
மூட்டுவாள்குளிகையிட்டால் க்ஷணத்துக்குள்ளே
மூதண்டபுவிக்கடந்து தெளியுங்காணும்

ஆட்டுவாளண்டரண்ட மாலைபூண்டா
ளாதிவஸ்துஅனாதிவன்து ரண்டுமொன்று
ஊட்டுவாள்நிர்குணத்தி ளமூர்தவல்லி
யுயர்ந்துநின்றஞானசத்தி யுறவுதானே. 11

உறவென்னத்தாறைவிட வறவுமுண்டோ
வுலுத்தரையோவாமத்தைத் தூஷிப்பார்கள்
குறைவென்னதிரோதயிம் மையக்தோறுங்
கூடியல்லோமாயவலை கூட்டியாட்டி
மறவென்னஞானமென்ன மயக்கித்தள்ளி
மகத்தானசமுசார வலையிற்போட்டாள்
நிறவென்னவாமத்தால் ஞானமாச்சு
நின்றவனேசிவயோகி வாசிபாரே. 12

வாசியென்றும்மவுனமென்று மிரண்டும்வித்தை
மகத்தானசாம்பவியுங் கேசரியும்ரண்டு
தேசியென்றால்யோகத்துக் காதிவித்தை
திலமானமவுனமென்றால் ஞானவித்தை
மாசியென்றமனமுடைத்தா விரண்டுமாகா
மருனின்று அறிவறிந்தா விரண்டுமாகும்
தூசியென்றவெளியல்லோ அண்டவீதி
சொக்காமல்கிரிகொண்டு ஆக்கியேறே. 13

ஆக்கின்றபரிசத்தார் கொசுவிறந்துதையா
ஆச்சரியம்ரூபத்தால் வண்டிறந்துதையா
பாக்கினின்றமணியொலியால் மானிறந்துதையா
பாழானவுரிசையினால் மீனிறந்துதையா
தாக்கினின்றகேந்தியினா லெறும்புசென்று
சாதகமாய்மாண்டுதிந்த வைந்தும்பாரு
பாக்கினின்றவிந்திரிய விடையத்துள்ளே
பாழானமனஞ்சிக்கிப் படுகுவாரே. 14

வாரானவுலகத்தில் மனுஷர்கோடி
மருவினின்றுவுண்டுத்துவை போக்கிச்சுத்
தாரானஜெகதுரங்க பரங்கமேறிச்
சகலரத்தினபூஷணங்கள் தரித்துவிம்மி
மாரானவாழுடைந்தோ ரிறந்தாரையா
மாண்டவர்கள்வெகுகோடி மாயவாட்கைக்
கூரானசிவயோக ஞானம்வந்தால்
கூடிருந்துப்போகாது கூடுகூடே. 15

கூடுவது அம்பரமோ கேசரமோவென்னில்
கூர்மையுள்ளவானமோ வதிதீதமோவென்னில்
ஆடுவது ஆச்சரிய னின்மலமோவென்னி
லருமையுள்ளநிர்குணமோ நிரஞ்சனமோவென்னி
பாடுவதுபதங்கடந்தப் பூரணமோவென்னில்
பகலிடமுமற்றிடமோ பராபரமோவென்னி
லூடுவதுவெங்கேயப்பா பின்னையெங்குமல்ல
உம்மென்றுஊமவெள்ள மோகங்காணே. 16

மோகமென்றவுறலுக்குள் மனந்தான்சிக்கி
முசியாமலிடிப்பதற்கு வைம்பொரியங்கோல்தான்
பாகமென்றகோபம்வந்து வுருவாயினின்று
பதையாமற்சண்ணிச்சு வுலகமெல்லாந்
தாகமென்றஞானம்வந்து வென்னசெய்யுஞ்
சண்டாளவிந்திரியச் சார்பினாலே [டு
வேதமென்றமனமுடையோர் லகிரியைதான்கொண்
விண்ணுக்குளேனின்ற வெளிபாம்போமே. 17

வெளியேதுவெளியிற்குள் வெளியெங்கேது
வேதாந்தவொளிகடந்த வொளியங்கேது
அளியேதுஅளிகடந்த வகண்டமேது
அப்புறத்தேதோற்றுகிற சோதியேது

நெளியேதுநிலைவேது நிர்க்குணந்தானேது
நேரானபூரணத்தின் நாதமேது
வழியேதுசுழிபடக்குஞ் சூட்சமேது
தோற்றமப்பாவானத்தை யொற்றுப்பாரே. 18

ஒத்துநின்றசரிகையொடு கிரிகைரண்டு
முறைவாதிசெய்தவப்பா நன்றாய்ச்சேரு
பத்திநின்றயோகமுதல் ஞானம்ரெண்டும்
பாங்காகசித்தருக்கு அடுத்தவாறு
அத்திநின்றஅகாமியசஞ் சிதமாம்பிராரத்துவ
மாறுக்குநடுக்குமென்றால் யோகவரைசெய்தும்
முத்திநின்றஞானத்திற் புகுந்தோர்க்கையா
மூன்றுமில்லைப்பிரபஞ்ச முழுதும்போச்சே. 19

போச்சென்பார்முக்காலம் பிறகேநின்று
புரிமுறுக்குப்போலேறிப் புணர்ந்துகொல்லும்
ஆச்சப்பாகாலமென்ன வென்றுசொல்லி
யவரவர்கள்சபஞ்செய்வா ரறிந்தமட்டும்
நீச்சப்பாஅகாலவெள்ளமாக கடப்பாரென்றால்
நேரானஞானியல்லோ கடந்துநின்றார்
மூச்சப்பாஅற்றிடத்தைப் பாருபாரு
மூட்டிவிக்குமுகிடந்தான் ஞானத்தீயே. 29

தீயுக்குள்விழுந்துநின்ற நிரணபஸ்பம்போலச்
செகச்சாலமுதற்கொண்டு காலங்கள்போகும்
தீயுக்குள்விழுந்தெழுந்த நெய்யைப்போல
சிறப்பானஞானமது திரண்டுயேறும்
தீயுக்குள்காஷ்டமொடு கோலுங்கூடி
திரண்டாப்போற்கருவிஎல்லாம் க்ஷத்தில்மாளும்
தீயுக்குள்பராபரந்தா னிருந்ததுவும்பாரு
செகமெல்லாம்வித்தையென்று தெளிந்துபோமே.

தெளிந்தவிடங்கண்டவரார் சிவசித்தர்யோகி
செகமெல்லாம்நானென்பார் திருட்டுஞானம்
ஒளிந்தவிடமுன்மனைத்தால் கேசரிக்குள்னிற்பாள்
உற்றுப்பார்மகாரம்வைத்து ஆதாஆ
அளிந்தவிடம்நிற்குணைந்தா னதிலேலிகரு
ஆச்சரியமகாரமொன்று வுண்டுவுண்டு
களிந்தவிடம்நீராகர மொன்றுமில்லைக்
காட்டுந்தாரறவுகொண்டு வுற்றுக்காணே. 22

உற்றுனின்றுஉலகத்தோர் ஞானம்பார்த்து
வூணிக்குக்கிடையாமல் பிரட்டுப்பேசி
பற்றுனின்றமோகத்தாற் பெண்ணைக்கூடி
பரந்தானின்றதிரேதாயு றலையிற்சிக்கிக்
கொத்துநின்றவிடங்காண்பார் கண்ணைமூடிக்
கும்மென்றுயிருளாகு மறியும்பொய்யா
மற்றுகின்றலகிரியினல் கொண்டுயேற
மாட்டார்களறுசமைய மாடுதானே. 23

சமையமெல்லாஞ்சத்தியுண்டு சிவமுமுண்டு
சண்டாளர்பிரித்தல்லோ தள்ளினர்கள்
சமையமெல்லாம்வேதாந்தஞ் சிந்தாந்தமுண்டு
சாதகத்தைபாராமற் றயங்கினர்கள்
சமையமெல்லாம்நாதமுண்டு விந்தமுண்டு
காக்காமற்கெட்டார்க ளுலகத்தோர்கள்
சமையமெல்லாம்பரமாம் ஞானமுண்டு
தாயைவிட்டபாவத்தால் தவரிப்போச்சே. 24

போச்சப்பா ஆறும் பாணத்தாலே
புத்தியுள்ளோர்பாணத்தாற் கண்டாரையா
ஆச்சப்பாவாமமென்ன நிசிதமென்பார்
அதன்குணமோதிராதாயி யனுஷ்டந்தான்

ஒச்சப்பாநாதாக்கள் ரிஷிகள்சித்தர்
  ஒசந்தவரைக்கண்டவர்கள் பானத்தாலன்றோ
காச்சமரம்பட்டதென்ன வேறற்றுப்போல்
  கசடரென்றவறுசமையங் கேட்டபாங்கே. 25

பாங்கானகுண்டலிக்குள் மூலமொன்று
  பாரப்பாகண்டத்தில் மூலமொன்று
போங்கானபுருவமைய மூலமொன்றுப்
  புசமூானவிந்துவிலே மூலமொன்று
வாங்கானசத்தியிலே மூலமொன்று
  மருவுனின்றபராபரத்தில் மூலமொன்று
தேங்காமலிதையாறுங் கண்டஞானி
  சேர்ந்துனின்ற மும்மூலயோகியாமே. 26

ஆமப்பாநகாரமுதல் யகாரவரைனிற்கும்
  அவ்வளவும்யோகத்தின் மூலமாச்சு
தாமப்பாஅகாரமுத லுகாரந்தொட்டு
  சாதகமாய்மகாரவரை ஞானமூலம்
ஓமப்பா திசைநாத மவுனத்திற்காணும்
  உற்றேறவுற்றேற அகண்டவீதி
காமப்பா வுண்டாக்கால் யோகசித்திக்
  கடுங்காணற்பா னுண்ட ஞானமாச்சே. 27

ஆச்சிந்தவரிசைவிட்டு வுலகஆசான்
  ஆதியொன்றுஅந்தமொன்று ரவிதானென்பான்
மூச்சற்றவிடங்காட்டத் தெரியாதேனின்று
  முன்னேதுபின்னேது சாங்கமென்பாண்
வாச்சிந்தமயக்கத்தா லுலகத்தோர்கேட்டார்
  மதுவைவிட்டுயேறியல்லோ சசையத்தோர்கேட்(டார்
ஆச்சிந்தவிதமறிந்தோன் யோகஞானி
  உம்மென்று ஆருமென்ற நாதமாமே. 28

நாதமப்பாயோகத்தி லேந்துநாதம்
நலமானமவுனத்தி லேந்துநாதம்
வேதமப்பாகடந்திடந்தே சுத்தநாதம்
வெட்டவெளிக்குள்ளேயொரு நாதமுண்டு
போதமப்பாகடந்திடத்தே யந்தநாதம்
புகழாகச்சேவித்துணிற்கு மென்றூர்தான்
காதமப்பாதூரமல்ல அந்தோ அந்தோ
கண்ணிமைக்குள்விண்ணுக்குள் கலந்துகாணே.

விண்ணேதுவெளியேது வொளியங்கேது
விரைந்திந்தமூன்றுமல்லோ கேசரிதானுச்சு
கண்ணேதுகாதேது மூக்கங்கேது
கண்டிப்பாயகண்டமெல்லா மழிந்துபோச்சி
ஒண்ணேதுயிரண்டேது சமரசந்தானேது
வுற்றுப்பார்வெட்டவெளி யொன்றுமில்லை
எண்ணேதுனினேவேது அறிவங்கேது
யேகவாய்க்கலந்தமுத்தி யிடத்தைக்காணே. 30

உத்திகொண்டுஞானநூல் பார்த்துப்பார்த்து
வுலகத்தோர்ஞானமெல்லாம் வந்ததென்று
பத்திகொண்டுஅலேவார்கள் விண்ணப்பாரார்
பாழானமனதையங்கே நிருத்தமாட்டார்
முத்திகண்டவிடமெங்கே யென்றுகாணூர்
மூச்சற்றுனின்றிடத்தை நோக்கிப்பாரார்
சித்திகண்டால்சித்திகொண்டு செய்யமாட்டார்
சேர்ந்துமதாயிருக்கறியார் திருடர்தானே. 31

தானென்றவாணுவத்தை நீக்கமாட்டார்
சண்டாளகோபத்தைத் தள்ளமாட்டார்
ஊனென்றசுகபோக மொழிக்கமாட்டார்
உற்றுனின்றசையோகம் விடுக்கமாட்டார்

பானென்றகூரன்வெள்ள முண்ணமாட்டார்
பதறுமல்மவுனத்தே யிருக்கமாட்டார்
வானென்றபொருளென்ன வெளிதோமைந்தர்
சகத்தானமனமடங்க பெய்யுங்காணே. 32

காணிந்தவுலகத்தில் மாயக்கூத்துங்
கண்மூக்குச்செவியோடு விந்திரியக்கூத்தும்
பூணாந்தவாசியினால் வருமைக்கூத்தும்
புகழானஜெனனமொடு மானக்கூத்தும்
ஆணிந்தவண்டமெல்லாம் படைத்தகூத்தும்
ஆங்காரமனம்புத்தி யானகூத்தும்
சோணிந்தப்படிபடைத்த பரமேயையா
சொற்பெரியபூரணமே யென்றுகூறே. 34

கூவையிலேபாத்தாளைத் தொழுதுகூவ
குறையாதகருணையினால் திரும்பிபார்த்து
தாவையிலேமதலையைத்தான் தாய்தான்சென்று
சார்வாகபெடுத்தணுபோ லுன்னைமைந்தா
தேவயிலேபெடுத்தணைத்து வுயிரைவைப்பாள்
செகச்சாலமாடுகிற திருட்டுத்தாய்தான்
பாவையிலேமனஞ்சென்று பரவாவிட்டால்
பாரதுபோவிருப்பாள் பாருபாரே. 34

பாரப்பாசெகமனைத்து மண்டலமெல்லாம்
பாங்கானசூட்சியிலே வைத்திருந்தகன்னி
நேரப்பாயிவளைவிட்டு யோகம்பார்த்தேன்
நேராகஅண்டத்தில் ஞானம்பார்த்தேன்
சேரப்பாசுக்தவிழல் மனமோயாம்
செகச்சாலகூத்தைவிட்டுத் தெளியமாட்டார்
ஆரப்பாஅவளைவிட்டு ஞானங்கண்டோர்
அலைக்கழிக்குமாசையென்ற பாம்புகாணே. 35

பாம்பையல்லோ ஆபரணம் பூண்டவீசன்
பரிவாகமதியொடு கொன்றைசூடி
பாம்பையல்லோமுன்னூலாய்ப் போட்டகூத்தன்
பாங்கானகரியுரித்தப் பாணிபாணி
பாம்பையல்லோ கங்கணமாய்தரித்துக்கொண்டு
பரியுழுவைத்தோலுடுத்துப் பாதந்தூக்கி
பாம்பையல்லொவுன்மனைக்கு மோதிரமாய்போட்டு
பாரென்று அகண்டத்திலாடினரே. 36

ஆடினதோர்கூத்தெல்லா மாத்தாள்மெச்சி
யண்டையிலேயழைத்தானையிருத்திகொண்டால்
நாடினதோரவளருகி தானுமெய்வார்
நாமறியோமவனவளு மொன்றுவொன்று
ஊடினதோரிடமெங்கே யொளிகேட்டதெங்கே
யொன்றாகக்காணுநிற நடனமெங்கே
கூடினதோரகண்டத்தின் சோதியெங்கே
கூசாமல்மவுனத்தில் கூடிக்காணே. 37

மெய்ஞ்ஞான குரு.

காணப்பாமகாரவரை நாதவோசைக்
கன்னிக்குப்பீடமட மவுனஞானம்
ஊணப்பாவூணப்பா நாதத்தோடு
யொருமுனையாயொருவழிபா யொன்றாயோடும்
தோணப்பாதோற்றுவது அங்கொன்றுமில்லை
சுத்தவெளிரவிகோடி சூழவன்னி
ஆணப்பாமாகோடி கண்கொள்ளாது
ஆச்சரியமதிகமென்ற மகாரங்காணே. 38

மகாரமல்லோ முந்தியர்சான்சூட்டி
வழிகாட்டுமுறமையது ஞானமார்க்கம்
மகாரமல்லோவடங்கியந்த நாதந்தாண்டி
மருவினின்றவிடமல்லோ கேசரிதான்மைந்தா

மகாரமென்னமேலெழுத்து பென்பார்மன்பர்
 மாட்டுவதுமூன்றெழுத்து வென்றுகாணார்
மகாரமென்னமகாரவித்தை யதீதவித்தை
 வாய்திறந்துபேசாதே மவுனமாமே. 39

மௌனவித்தையாமதென்றால் மூன்றெழுத்தேயென்
 பாட்டுகிறஇனங்காணு மூர்க்கங்காணார் [பார்
மௌனவித்தையாவதென்ன வாய்மூடலென்பார்
 மாடுமுதற்குதிரையினு லாவதென்ன
மௌனவித்தைகேட்டிருப்பார் கூட்டுறவுகாணார்
 வாய்மூடவழியோடே நாதங்கேளார்
மௌனவித்தையாசாந்தான் தூண்டிக்காட்டில்
 மணிமுதலாய்திசைநாதங் கேழ்க்குந்தானே. 40

கேழ்க்கையிலேமணிதனிட வமிர்தஞ்சிந்துங்
 கெடியானதுவாசமுர்தங் கடந்துதோன்றும்
வாழ்க்கையிலேயாசையறும் தன்னினைவுபோகும்
 வாருதிபோலண்ணுக்கி லமிர்தமோடும்
தாக்கையிலோவிகோடி காந்திகாணும்
 சச்சிதானந்தவொளி தானேதோன்றும்
மூட்கையிலேமேலமிர்த லகிரிமீறும்
 மூன்றுகமும்க்ஷணகாகு முட்டிப்பாரே. 41

மூட்டையிலேயுலகத்து கிரிகொண்டுமுட்டு
 முதிர்ந்தபின்புவிண்ணுக்குள் கிரிவந்துகாக்கும்
கூட்டையிலேமகாரத்தை யறிந்துகூட்டுங்
 கும்மென்றநாதத்தி கூடியேறு
மாட்டையிலேயறிவோடு மனத்தைமாட்டு
 மறுகாலும்நாதத்தை கூர்ந்துகேளு
ஓட்டையிலேயொருவழியா யோடிற்றுனு
 ஊர்த்தமனேயச்சின்ன முத்திரையா. 42

ஏறுகிறதுறை.

ஐயனேகுருவானவகண்டமூர்த்தி
அதீதமென்றஞானமெல்லாமருளிச்செய்தீர்
மெய்யனேயேறுகிறசாதகத்தைச்சொல்லும்
வேதாந்தலட்சியத்தைவிளக்கச்சொல்லும்
துய்யனேநிலைதோறுமெழுத்தைச்சொல்லும்
சொற்பெரியபிராணயருக்ஷஞ்சொல்லும்
தையனேதையமென்றநிர்த்தஞ்சொல்லும்
சாதகமாய்லக்ஷியத்தைச்சாற்றிடீரே. 43

சாத்துமென்றுகேட்டுரைத்தமாணாக்கனேகேள்
சந்தோஷமாச்சுதிப்போசார்புசொல்வேன்
ஏற்றமென்றமூலத்தில்வாசிவைத்து
யெளிதாகப்பிராணயம்பண்ணிதேறு
ஆத்துமென்றகுண்டலிக்குள்நடனங்கண்டு
ஆதித்தன்கொடியைப்போல்காந்திகாணும்
மாற்றுமென்றகண்டத்திலங்கென்றாணு
வாய்திறக்கவொட்டாதுவழிசெய்வாமே. 44

வழியோடோநின்றுரைத்துப் பழக்கமாகி
மனோன்மணியாம்புருவமைபத்தூடேசென்று
ஒளியோடேமவுனத்தையோட்டியூது
உத்தமனேசாம்பவியைக்கண்டுகொள்வாய்
தெளிவோபோயிவ்வளவும்யோகமார்க்கம்
நின்றவனேசிவயோகிநினைவாய்க்கேளு
தெளிவோடேவிந்துவென்றகுருபத்தில்நின்று
தாக்கப்பாமவுனத்தைதாரையாமே. 45

ஆமப்பாவிந்துவிலேரவிமதியோர்கூடி
ஆச்சரியங்கண்கூசிமயக்கமாகி
ஓமப்பாநாதத்திற்செவிடுபட்டு
ஊமையென்றவெழுதுடையவுருவங்காணும்

தாமப்பாசத்தியிலேவன்னியோடு
சதகோடிரவிமதியுமொவ்வாவொவ்வா
வாமப்பாலுண்டவர்க்கித்தனையுங்காணும்
வாய்பேசாஞானிக்குமாயத்தானே. 46

தானென்றசிவத்துக்குள்மௌனஞ்சென்றால்
சதகோடிநவகோடிவன்னிரவிசோமன்
பானென்றபரத்தின்கீழ்முப்பாழுண்டு
பார்மகனே அகாரமொன்றுஉகாரமொன்று
வானென்றமகாரமொன்றுமுப்பாழாக
வழங்கிற்றுஅதனொளியைச்சொல்லப்போகா
தேனென்றமொழியுடையமனுந்தத்தை
தேவியிடபதமென்றகேசரித்தான்காணே. 47

காணிந்தகேசரத்தின்தாயின்காந்தி
கண்கொள்ளாவிண்கொள்ளாகரையுங்கொள்ளா
ஆணிந்தப்பரையென்பார்அம்பரந்தானென்பார்
அவருக்குள்மவுனமுண்டுஅறிவுகொண்டுபாரு
ஊணிந்தமௌனத்தைநிஷ்களமாய்ப்போவாய்
ஓகோகோஅம்பரத்திலேதோவேதோ
தோணிந்தப்படியிருந்தாலயத்தின்னேர்மை
சொல்லரிதுஅப்புரத்தேசோதிதானே. 48

சோதியென்றுபராபரத்திலாறுவரையுண்டு [ம்
சொல்லையிலேகேட்டிருப்போம் சொல்லிக்காணோ
ஆதியென்றமூலகுருபோனமைந்தா
ஆண்கிள்ளைச்சிங்கமென்றகொங்கணர்தான்கேளு
வாதியென்றுலவர்வாதிஞானவாதி
மகத்தானகுளிகையிட்டசித்தன்வாதி
பேயென்றால்மேருப்போலேயும்பண்ணும்
பெருவாதிரசவாதிபேருள்ளோனே. 49

பேருள்ளகொங்கணர்தான்குளிகையிட்டுப்
போரானபூரணத்திலாறுவரைகண்டார்
ஆருள்ளாருகத்தில்வரைகுருசொல்ல
ஆச்சரியஞ்சித்தருக்குக்கீர்த்திவைத்தார்
நேருள்ளரிஷிகளொடுமுனிவரையா
நேராகசமாதியிலேயிருந்துகண்டோருண்டு
தாருள்ளசலத்தோடுஞ்சென்றாரில்லை
சமர்த்தானமனதினிடசத்திதானே. 50

சத்தியுள்ளவாசனையாய்குரங்குகேளு
தண்டியல்லோஇந்திரியக்கொம்புக்குள்ளே
பத்தியுள்ளேயலைத்தடித்துபேய்க்கூத்தாக்கி
பாங்கானமனதையல்லோசின்னம்பண்ணி
முத்தியுள்ளவாசலுக்குயேறொட்டாது
மூழுமோசசனியனப்பாஞானத்துக்கு
கொத்தியுள்ளவாசனையையடக்கிப்பார்த்தால்
குருடனுக்குஞானவழிகூடுங்காணே. 51

கூடுவதுஎப்படிதான்ஞானமூர்த்திக்
குரங்கைவிட்டுஅகிலுகிறவழியைச்சொல்லும்
நாடுவதுவுலகத்திலாதம்வந்தால்
நன்மனதுஉண்டானால்சாஸ்திரத்திற்சொல்வார்
ஊடுவதுசாதுசங்கம்வேதாந்தம்பார்த்தால்
உத்தமனேவாசனையாங்குரங்குபோகும்
ஆடுவதுதொய்தவாசனையிலேற்றும்
அப்படியேயுலகத்திலனேகம்பேரே. 52

பேரானவுலகத்தில்ஞானமுற்றும்
பேசாமலிருகிருந்தவிடத்தில்மைந்தா
வாரணமோதத்திலிங்கமாகும்
வாறுதிக்குமேருவுக்குநடுவேகோடி

காரானகாமத்தால்சுரபாண்டிலிங்கம்
கைவிட்டசமாதியினால்சுந்தரமாலிங்கத்
தாராணமலைதோறும்பூமிதோறுஞ்
சாற்றரிதுசாற்றரிதுசார்ந்துபாரே. 53

பாரப்பாசுயம்பில்வந்துபிரதிஷ்டையேற்றால்
பலித்துதப்பாஞானசித்திமவுனசித்தி
நேரப்பாவொன்பதுபேரிதியேயாறு
நிகராகப்பெலிகொண்டோர்நீருமூவர்
காரப்பாவிண்ணையென்றால்காவார்காத்தர்
காத்தாலேஞானசித்திகைகலந்துகூடும்
ஊரப்பாவாதியைப்போல்நீங்கள்கெட்ட
வுலுத்தரென்பார்சித்தர்கள்தானுரைத்திடவே.

உரைக்கவல்லோராஜயோகம்வைத்தாரீசன்
உண்டுடுத்துத்திரிவதற்கோசொன்னாரையன்
மறைக்கவல்லோவாசனையோலகிரிகொள்ளுமென்றார்
மகத்தானதெக்ஷணாமூர்த்தியாசான்
நிறைக்கவல்லோயோகமுதல்ஞானஞ்சொன்னார்
நிற்கவிடமற்றிருந்தநிர்மலமாஞ்சோதி
இரைக்கவல்லோவூரினதோர்கேணியைப்போ[னே.
லெடுக்கெடுக்கவெழும்பிவரும் வாசனைத்தான்கா

எழும்பாரல்வாசனையைக்கொன்றோன்ஞானி
யேகாயல்வாசனையையடித்தோன்சித்தன்
எழும்பாமல்கருவிகளையிருக்கச்சாடி
யிருந்திவன்சிவயோகிவரயோகி
எழும்பாமலடிப்பதற்குசூட்சஞ்சொல்வே
னென்மக்காள்மவுனத்தேயிருந்தாற்போகும்
எழும்பாமல்வாசனைபோச்சுதானால்
ஏதுமில்லைசத்தவெளியிருளும்போச்சே. 56

போச்சென்றுஇருக்கிறதோர்ஞானத்துக்குப்
புகழானவல்லமைதானென்னமைந்தா
வாச்சென்றஅகண்டத்துள்வரைகளாறு
மருவினல்சடத்தோடேயவனேசித்தன்
நீச்சென்றவரைபார்த்துவாரேன்மக்காள்
நில்லுங்கோள்குகையினுள்ளேயென்றுசொல்லி
தோச்சென்றபூரணத்திற்சொக்கிநின்ற
சுந்தராநந்தன்வந்துதொழுதிட்டானே. 57

தொழுதுகொண்டுபதம்பிடித்தவகண்டத்துள்ளே
சொக்குகிறோமென்றுசொன்னசுந்தரமேயையா
விழுதுகொண்டஆலைப்போல்நெட்டிட்டேறி
வெளிகடந்துஆறுகலங்கண்டுவாரேன்
முழுதுங்கண்டானென்பிள்ளையென்றுகீர்த்தி
மூட்டிவைப்பேன்சித்ததில் கோபம்வேண்டாம்
பழுதுகொணடுவருகிறேன் திரும்பாவிட்டால்
பராபரத்திலிச்சிடுவேன்பண்பிடீரே. 58

பாரப்பாஅகண்டவெளிசுத்தக்கானல்
பார்ப்பதற்கோஅங்கொன்றுவிடமேயில்லை
நேரப்பாரவிகோடிவன்னிகோடி
நேரானமதிகோடிகண்ணேகூசும்
ஆரப்பாவளவிட்டோர்கண்டோர்வீதி
அதுக்குள்ளேசெல்லரிதுமைந்தாபோபோ
காரப்பாகுகையென்றுபட்டங்கட்டி
கடுங்குளிகைசோடிட்டுக்கலந்திட்டானே. 59

கலந்திட்டேனொருவரையில்நாதவோசை
கண்கொள்ளாவெளிக்குள்ளேகலக்கமாச்சு
கலந்திட்டேன்மறுவரையிலிடியோகோடி
கண்கெட்டேன்மதிகெட்டேன்காதுங்கெட்டேன்
கலந்திட்டேன்மூவரையிற்காந்திக்குள்ளே
கடுகவந்தேன்கொங்கணரையழைத்திட்டீரே. 60

அழையுமென்றுசொற்கேட்டுச்சுந்தராணந்
தக்ஷணற்றிற்கொங்கணரையதிசீக்கிரத்தில்
விறைவுடனேவோடிவந்துதெண்டனிட்டு
விரைவுடனேகொங்கணர்தாநிக்ஷணத்தில்
அழையுமென்றுரெங்களையருங்களைத்தான்
ஆச்சரியஞ்சொல்லுதற்கடியேன்வந்தேன்
அழையுமென்றசீஷனிடமின்னேவந்து
அடியேன்தான்வந்ததென்றுபணிந்திட்டாரே. 61

பணிந்திட்டகொங்கணரைவாரிமோந்து
பராபரமேநீர்க்குணமேபண்புள்ளோனே
அணிந்திட்டஅறுவரையிற்சொக்கிச்சென்ற
ஆதியென்றபராபரமேயையாயையா
மணியிட்டசிலம்பொலியைக்கேட்டமூர்த்தி
மார்க்கத்தைதயெப்படிதானேறினீரோ
கனியிட்டநிர்மலமாமனத்திலேலே
கைலாயதேகமென்னதங்கமாச்சு. 62

ஆச்சப்பாஅப்படியேதான்வரவேணுமென்று [தீர்
ஆசைகொண்டுயிருக்கையிலேயழைத்தனுப்பிவித்
வாச்சப்பாமனுவொன்றவடியேனுக்கு
மைந்தன்மேல்கடாக்ஷத்தால்சொல்லவேணும்
ஓச்சப்பாகொங்கணரேயுபசாரமென்ன
வோங்கினதையுரைக்கிறேன்கேளுகேளு
காச்சப்பாவுலகத்திலெடுத்ததேகங்
கைலாசசட்டையாங்கருவைச்சொல்லே. 63

கருவென்னவொன்றுமில்லைமேருவுக்குநேரே
காணப்பாயீசானங்கைலாயமாச்சு
உருவென்னவெடுத்ததெல்லாங்கைலாயதேக
முத்தமனேநிராகாரஞானசித்தி

குருவென்னநிர்க்குணத்தின்மவுனத்துள்ளே
குவிந்துரைத்தபெருமையினால்கைலாயமாச்சு
அருவென்னமகாரவித்தைமுட்டிக்கொண்டு
ஆதிவிர்த்தகற்பமதுஉண்டுபாரே. 64

பாரப்பாசூதமுண்டுமவுனந்தாக்க
பளிச்சென்றவழுசட்டைபண்ணுய்ப்போதும்
நேரப்பாஅச்சடந்தான்கைலாயதேகம்
நிமிஷத்தேசித்தியாமுன்னினைவுக்கையா
ஆரப்பாஉனைப்போலேநினைத்தபடிபண்ண
தரிதரிதுகூடாதுமுடருடபேரா
சேரப்பாசொல்லிவிட்டேனென்றபேச்சு
செப்புமுன்னேகைலாயமூர்த்திபாரே. 65

உற்றுநின்றபலநூலைப்பார்த்துப்பார்த்து
உரையாமல்வேதாந்தஞ்சித்தாந்தமென்று
பற்றிநின்றபரவசந்தானென்றுஉன்னிப்
பாராமலலைந்துகெட்டாரனந்தங்கோடி
முற்றிநின்றவிடமெங்கேஞானமெங்கே
• கொற்றிநின்றமேல்மூலத்துரியமெங்கே
கூடுவார்மெய்ஞ்ஞானக்குறைவிதாமே. 66

குறைவேதுவாசனையாங்தோய்த்தோடு
கூடவல்லோமெய்ஞ்ஞானபுனைந்துநிற்கு
மறைவேதுமறையினிடஅந்தமேது
மறைவற்றுநின்றதொருவெளியங்கேது
துறையேதுதுறைக்குள்ளேசோதியேது
சூட்டியிந்தவிபரமெல்லாம்ஞானந்தோற்றும்
அறையேதுஅல்லவென்றுசம்சாரத்துள்ளே
அழுத்துமப்பாதோய்த்திறுண்மைதானே. 67

ஆண்மையென்றால்தோய்தத்திறண்மையல்லோ
அகண்டமுதலண்டமெல்லாம்ஞானந்தோற்றும்
ஆண்மையென்றால்வாய்பேச்சாம்ஞானிவாயில்
மண்ணையள்ளிக்கூறுகொண்டுமலங்கப்பார்த்து
கேண்மைகொண்டுவுலகமெல்லாங்கெடுத்து ஆட்டி
கெடியானபெண்பொன்னுணினாலே
தாண்மையென்றபிறப்பிறப்பைமீதப்பாய்ந்து
சண்டாளக்கோபத்தைத்தள்ளுதள்ளு. 68

தள்ளுகிறவுருப்புவாந்தாள்கழிவைக்கேளு
சாதகமாய்குண்டலிக்குள்வாசிவைத்து
தெள்ளுகிறபிராணயபண்ணித்தீருந்
திரண்டொலியுஞ்சிலம்பொலியுங்காணும்காணும்
தள்ளுதிற்கண்டத்தேயங்கென்றானும்
நலம்பெரியவுருவமையுந்திறந்துபோகும்
அள்ளுகிறகனிபோலேயமர்தம்வீழும்
அப்பவல்லோகாயசித்தியறிந்துகொள்ளே. 69

அறிந்திந்தமதியானவிந்துவிட்டு
மப்பனேயோகமீதேவறிந்துகொள்ளு
பரிந்திந்தவிந்துமுதல்நாதஞ்சித்தி
பிரங்காணசிவத்தோடுபரந்தான்கேளு
அறிந்திந்தப்பராபரத்தோடாறுகேளு
அப்பனேமவுனத்தைத்தூக்கிக்கொண்டால்
செறிந்துநின்றஞானத்தின்யோகமாச்சு
செயலேதம்பமவுனத்தைசென்றுகாணே. 70

காணப்பாபராபரத்தின்மேலேயாறு
கைவிட்டவகண்டமொன்றுநிர்குணந்தானென்று
பூணப்பாநிர்க்குணந்தான்நிராகாரந்தான்
புகழானநிர்மலந்தான்போதத்தந்தம்
தோணப்பாவிதுவாறுங்காணப்போக [மைந்த
சொல்லுகிறவார்த்தையென்றால் கேட்டிருப்போ
ஊணப்பா சடம்விட்டுஅறிவுவிட்டு
உற்றுநின்றவண்டத்தேயறிந்துகொள்ளே. 71

அறிந்துகொள்ளுமதியளவுபிண்டத்தினுள்ளே
அப்பனேயாறுதலமறிந்துகாணும்
அறிந்துகொள்ளுவிந்துவின்மேல்பரத்தின்மட்டும்
அறிவுக்குள்சக்கரந்தானப்பாகேளு
அறிந்துகொள்ளும்பரத்தின்மேல்போதமட்டு
மாதாரநிர்மலத்தின்வரைகளாறும்
அறிந்துகொள்ளுமேலாறுங்காணப்போகா
தாச்சரியம்கொங்கணரைவிட்டுக்காணே. 72

காணப்பாதசதீட்சைக்கடந்தபின்பு
கைவிட்டசூத்திரத்தையாசான்காட்ட
ஊணப்பாஅதுமவுனமற்றதெல்லா
முரவார்த்தைஅகாரமுதலுகாரமென்பார்
வீணப்பாசிரசுமேல்வேதாந்தக்காக்ஷி
விரைந்துதிலேயும்மென்றுஊணென்பார்கள்
பூணப்பாவும்மென்றநாதமாமோ
போக்கறியான்சொல்லுகிறஞானந்தானே. 73

தானென்றவிடங்காட்டிநாதங்காட்டி
சாற்றுகிறமவுனத்தின்சார்புகாட்டி
வானென்றவெளிகாட்டியறுதலமுங்காட்டி
வாய்மூடிஞுதிக்கவகையும்காட்டி
ஊனென்றவுடம்பைவிட்டுச்சேகரியுங்காட்டி
யூமைநின்றவிடங்காட்டியுரைக்கப்பண்ணி
கோனென்றகுருவேனும்வாய்பேசலாமோ
குரும்பரேகுருசொல்லவிரண்டுமாமே. 74

ஆயிந்தவுலகத்தோர்ஞானவிதியை
யறிந்தேறிக்கூடுவதுஅறிதுமெத்த
ஓயிந்தக்குண்டலியைத்தொட்டேற்ற
ஊதுவதுகடினமெத்தயோகமார்க்கம்

வாயிந்தவாமத்தேநின்றுகொண்டு
மகத்தானபானமுண்ணவாய்க்குமிரண்டும் [ம்
சோயிந்தச்சடையில்வைத்துச் சின்மயத்தைக்காட்டு
சொற்பெரியபூரணந்தான்சொன்னவாறே. 75

வாறான குருவினிடவாழ்க்கைக்கேளு
மகத்தானசடையின்மேல்மதியுஞ்சூட்டி
தாரானநெற்றியிலே தீயைவைத்துச்
சற்பமல்லோ ஆபரணமாகப்பூண்டு
வீறானகரித்துகிலேமேலேபோர்த்து
விளங்கியதோர்புலித்தோலையிடையிற்கட்டி
கூறானசுடுகாட்டிற்குடியுமாகிக்
கொள்கிறார்பலியெடுக்கக்கொள்கிறாரே. 76

பலியெடுத்தகுருவினிடவாமபக்கம்
பகர்துநின்றயென் தாயார்பரிசுகேளு
பொலியெடுத்தஅஷ்டமாசித்திநிற்கப்
புகழ்பெரியரத்தினவகையாபரணம்பூண்டு
நலிவில்லாயோகாப்பியாசஞ்செய்து
நண்ணுயிருபதச்சேவைகாண்பதற்கு
ஒலியெடுத்தநதகோடிதேவர்சித்த
ரொன்றானகணநாதர்போற்றுவாரே. 77

அறிந்துகொள்ளுமெந்தா யோதுரைப்பெண்ணப்பா
அப்பனேயெருதேறுமேழையேழ
அறிந்துகொள்ளுமிவளைமுன்னேயையாவைத்து
ஆதரித்துக் கேட்டதெல்லாமருளிச்செய்வான்
அறிந்துகொள்ளும்கண்டத்தேஞானசத்தி
ஆத்தாளைப்பூசித்தாலறுபத்துமீவாள்
அறிந்துகொள்ளுஞ்சடமெல்லாமவளையாச்சு
அப்பனுக்குயெலும்போடுநரம்புமிரண்டே. 78

இரண்டானவாயுவினிலொன்றுசத்தி
நேராகசிவமேதுபிராணவாயு
ஒன்றாகநாடிநின்றால்சுழிமுனையுமாச்சு
யோகமுமாம்ஞானமுமாமுற்றுயேறு
தண்டானசுழிமுனைதானடுதமயம்நிற்குஞ்
சாதகமாயிதற்குள்ளேமுக்கிரந்தியுண்டு
நன்றானசுழிமுனையிற்பிராணநேரில்
நாதாந்தயோகமிதுநாடிக்காணே. 79

காணப்பாநெஞ்சினுள்ளேபிராணயோகங்
கண்டுகொள்ளுந்தாமரையிநூல்போலாடும்
ஊணப்பாயதிவிரட்டிஅபானவாயு
உற்றிநின்றிரண்டையுநீகண்டாயானல்
பூணப்பாவிதுக்குள்ளேஞானயோகம்
புஜண்டருக்குச்சித்தியிதுகைலாயதேகம்
தோணப்பாநவகோடிமானகண்டார்
சுகயோகமாவதித்துறையுமாவே. 80

ஆமப்பாஆசைவிடகருவைச்சொல்வேன்
அறிந்துகொண்டுஅறிவாலேநின்றுபாரு
சேமப்பாதிரோதாதியியாரென்றாக்கால்
செகமெல்லாம்பெண்ணைவருதானப்பா
ஓமப்பாபொன்மண்ணும்வாசனையினைசை
யொற்றுநின்றவிந்திரியமயக்கத்தாசை
நாமப்பாவென்றுசொன்னஆண்மையாசை
நல்வினைக்குந்தீவினைக்கும்வித்துமாச்சே. 81

வித்துக்குள்பாவமென்னபுண்ணியந்தானென்ன
வெகுகோடிபுண்ணியத்தால்புருஷஜன்மமையா
பத்துக்குள்வெகுகோடிபாவபுண்ணியம்
பாழானபென்ஜனனமெடுத்தவாறு

கொத்துக்குளிவையறுந்துபாவமான
குழிக்குள்ளேவீழ்ந்தாரோகாணுடங்களேயோ
எத்துக்குளினவயறிகதுவேருய்நின்று
இகழ்ந்தவனேமெஞ்ஞானவீசனுமே. 82

பூரணமேயகண்டமேயகத்தினந்தம்
பொங்கிநின்றநிற்குணமேயென்னையீன்ற
காரணமேயுலகத்திற்பெண்ணுசைபோலக்
கலந்துநின்றபசுமில்லைகருதிக்கொண்டேன்
ஆரணமேயதீதத்தில்சுகந்தானென்ன
அப்பனேசொல்லுகிறேனறிந்துகொள்ளு
வாரணமாங்குவிமுலைபாளாசைவிட்டாள்
மகத்தானமூவுலகும்விடக்குநேரே. 83

நேரானபெண்ணுசைநீங்கிற்ருனல்
நிலையானதிரோதாயிமாய்கைபோச்சு
தூருனவேதாந்தவெளியிற்சொல்வார்
சும்மென்றசகஞ்சொல்லவர்யோகியல்லை
வாராய்நீயென்மகனேபெண்ணூர்சிக்கி
மகத்தானரிஷிகள்சித்தர்கோடிபேர்கெட்டார்
தாரானசித்தரொடுபஞ்சகர்த்தாள்
தயங்கிநின்றுபடும்பாடுசாற்றுரேனே. 84

சாற்றுரேன்வீதியிலேபடுகுழிதானுண்டு
ததன்மேலேபுல்லோசெடியுமூடி
மாற்றுரேன்வீதியிலேநடந்தோன்வீழ்ந்த
வாறொக்கும்பெண்ணுனமாயக்கூசம்
ஆற்றுரேனென்ருலுமாற்றம்போகா
அரகாரபெண்ணாவுகடித்துதாளுல்
போற்றுரேனென்ருலும்பொல்லாக்காமம்
பொறியிலிட்டநெய்போலப்பொங்கும்பாரே. 85

பொங்குகின்றகாமமென்னசிவத்தின்கூறு
பொல்லாத ஆசையென்னமாலின்கூறு
மயங்குகின்றமோகமென்னமயேஸ்பரத்தின்கூறு
மருவியந்தமூன்றானு முலகம்பாழாய்
தங்குகின்றயோகம்போய்ஞானம்பாழாய்ச்
சமாதியெல்லாமிந்திரியச்சாரமூடி
தொங்குகின்றமோக்ஷத்தின்தரைபோலாகச்
சூனியமாம்ஞானமெல்லாந்தோற்றுவாரே. 86

வாறானபெண்ணாசைவிட்டேயென்பார்
மருவியவள்தனிப்பட்டால்சரணஞ்செய்வார்
தாறானசயனத்திற்பெண்தான்சொல்லில்
சதாசிவனால்முடியாதுமற்றோரேது
கூறானவிந்துவிடக்கோபமோகங்
குறியழிக்கும்நினைவழிக்குங்கூட்டைக்கொல்லும்
வீறானவிந்துவுக்குமேலேநின்று
விழுதுபெற்றமௌனியல்லோவெட்டினாரே. 87

வெட்டினார்மௌனியந்தவிந்துபாம்பை
வேதாந்தமென்றதொருவாளினாலே
தட்டினார்மாய்கையைத்தான்சண்ணிக்கீழே
சச்சிதானந்தவெள்ளச்சார்பினாலே
ஒட்டினாரோட்டினார்நிர்க்குணத்தின்மட்டு
முத்தமனேயதுவல்லோஞானவீதி
தொட்டினார்தொட்டினார்சகலரெல்லாம்
செகச்சாலவித்தையென்றுதெளிந்துபாரே. 88

தெளிவதுதானெளிதல்லவாய்ப்பேச்சல்ல
சிங்காரபெண்கண்டால்ஞானம்போச்சு
அழிவதுதான்சடத்துக்குவடுத்தகூறு
அதரமுண்டுகூடுரதுபோகமென்பார்

கழிவதுதான் தாலேதுவாசியேது
கைவிட்டமெதனத்திற்கலப்பதேது
ஒளிவதுதானென்றுளோவென்றுலோக
ரொருகோடிமாட்டார்களுணிக்காணே. 89

காணப்பாபிறப்பிறப்பும்பெண்ணாலாச்சுக்
கைகடந்தமாயமெல்லாம்பெண்ணாலாச்சு
பூணப்பாவிந்திரியம்பெண்ணாலாச்சு
புகழ்பெரியவாசனையும்பெண்ணாலாச்சு
தோணப்பாமனம்புத்தியாங்காரத்தில்
சொக்கிச்சுப்பெண்ணாலேகூட்டிப்பாரு
ஊணப்பாவூணப்பாவுரைக்கச்சொன்னே
னுலகத்திற்றிரியாதேவிண்ணிலாடே. 90

ஆடையிலேவிண்ணிக்குட்சித்தர்கோடி
யநதந்தமலைகளினுதாக்கவகோடி
ஊடையிலேயண்டத்தில்முனிவர்கோடி
உற்றுநின்றபதமளவும்ரிஷிகள்கோடி
தேடையிலேசதாநித்தம்வேதம்பாரு
சேர்ந்துநின்றயோசையிலேதெளியச்சொல்வார்
நாடையிலேயென்னேரம்மவுனத்தில்நாடி
நாகமாம்வாசனைத்தான்நன்றாய்க்கேளு. 91

கேளப்பாயினதவிட்டுவுலகஞானி [ள்
கேட்டதெல்லாஞ்சொல்லுகிறேன் மக்காள்மக்கா
நாளப்பாஜெகமெல்லாஞ்சாங்கமென்பான்
நலமானநூல்பாரான் தீட்சையாவான்
காளப்பாமவுனமென்பான்விண்ணைப்பார்ப்பான்
சாதகத்தைவிட்டுவிட்டுசீவனத்திற்சொல்வான்
நாளப்பாதினந்தோறுந்தற்கம்பேசி
நலமானபெண்ணோடுமயங்குவானே. 92

மயங்குவான்பொன்றேடவெகுபிரட்டுப்பேசி
மகத்தானஞானமெல்லாம்வந்துதென்பான்
தயங்குவான்மண்ணுலேசார்வுகாணுன்
சாதகமாயோகத்திற்சார்த்தேனென்பான்
றியங்குவான்நோய்வந்தாற்பூரணமேயென்பான்
செகச்சாலதுரோகியவள்சிரிப்பாள்பார்த்து
முயங்குவான்சமாதிவிட்டேனேயோவென்பான்
மூடமொற்றஞானமெல்லாமுலகிற்பாரே. 93

பாரப்பாசரீரமிதுசமாதிக்காக
பாழானஸ்தூலமிதுவென்பார்கோடி
நேரப்பாவாதம்வந்தால்ஞானம்வருமென்று
நேராகவலைந்தவர்கள்கோடாகோடி
ஆரப்பாவுலகத்தில்ஞானியுண்டோ
ஆராய்ந்துநான்கண்டேனென்பார்கோடி
ஏரப்பாவுழுதல்லோவெள்ளாமையாகும்
ஏறில்லானறுத்தடித்தகதையுமாச்சே. 94

கதையாச்சுவுலகத்தில்ஞானமொவோதங்
கைகண்டாற்சொல்வாரேகல்போல்நெஞ்சே
அதையாச்சுயிதையாச்சுயென்றுசொன்ஞல்
அவன்கையிலொன்றுமில்லையறிந்துகொள்ளு
உதையாச்சுஅரனுடனேதொழிலேநித்தம்
முதுவானவன்வாதிருண்மைகேளு
கதையாச்சுஆனுலும்பொங்கியுள்ளம்
சுடுவான்பாரசயோகிஞானிதானே. 95

தானென்றவாதியிலேரெண்டுவிதமுண்டு
சண்டாளவாதியென்றுஞண்டுத்துப்பொங்கி
வானென்றஞானமென்னவேதைகண்டபின்பு
மகத்தானபெண்ணோடேகூடியாடி

காமென்றராகமொடுகேளிக்கைப்பார்த்துக்
கண்டபெண்ணைத்தாய்போலேகருதிச்சென்று
ஊமென்றஉடம்புக்குமெடுத்துப்போவென்பா
னுனுத்தனுக்குச்செனனமென்றநரகந்தானே. ()

நரகமென்றபெண்மேலேயாசைவிட்டு
நாதாந்தவேதாந்தஞ்சித்தாந்தம்பார்த்து
நரகமென்னவுலகமெல்லாமனதில்வைத்து
நலமானதேவியுடகிரிகையிலேநின்று
நரகமென்னஜடமுதலாய்நாமல்லவென்று
நாட்குள்ளேதசதீட்சைகடந்தபின்பு
நரகமென்றசிவசொத்தைவறுமைபோல்நின்று
நாமறியோம்வாதமென்றுயிருப்பார்காணே. 97

இருக்கையிலேசதகோடிதொழிலைச்செய்வார்
இத்தனைக்குப்பொருளேது யிவன்வறுமைக்கென்
இருக்கையிலேசெயநீறு செந்தூரஞ்சுன்ன [பார்
மெடுத்துயடுக்கிவைப்பார்அநேகங்கோடி
இருக்கையிலேதொழிலெடுப்பாரார்க்குங்காட்டா
ரில்லையென்பாருண்டென்பாரனேகம்பேர்கள்
இருக்கையிலேசதாநித்தமறிவாலூட்டி
யிருப்பார்கள்மவுனமுத்தவாதிதானே. 98

வாதியென்றுலவன்வாதிமவுனவாதி
முகத்தானபிரபஞ்சத்தேஇருந்தாலென்ன
வாதியென்றுலரசவாதிஞானவாதி
வீரங்காமற்சமாதியிலேயிருந்தவாதி
வாதியெல்லாநிஜவாதிநிர்மலத்தின்வாதி
வாய்திறக்கஅண்டத்தேவாழ்ந்தவாதி
வாதியென்றுலவரிடத்தேசித்தர்சொல்வார்
மயக்குகின்றசெனனமில்லைமுத்திதாமே 99

முத்தியிந்தவாதிக்குவருகுமென்று
மூச்சுமுதற்சிவன்சொன்னாரென்றுசொல்லி
கத்தியிந்தசிவசொத்தைப்பெண்ணுக்கீந்து
பாழானவிஷபமெல்லாம்பண்ணிப்பண்ணி
அத்தியென்றபஞ்சகத்தைபண்ணிப்பாவி
ஆங்காரத்தால்திரிந்தும்வேளைதபோட்டு
மற்றுநின்று அலைந்தவர்க்குநரகமெய்தி
மாளுவோர்கோடிசென்மமாளுவாரே. 100

மாளாமலிருக்கவல்லோவாதஞ்சொன்னாற்
மாண்டிறந்துமாண்டிறந்துபிறக்கநன்றோ
வெருளாமல்மனம்பிடித்தவாதியினால்
வெகுசனுக்குயேறுதற்குஞானவீதி
அருளர்மோபொருளாமோதென்றுயெண்ணி
அலையாமல்நின்றவனேவாதியோகி
அருளாமோவெளியாமோவென்றுயெண்ணி
யேகவெளிசுத்தயிருளாகிப்போமே. 101

ஆகத்ப்பாயிருபத்துஅஞ்சுநூறு
அறைந்திட்டேவாதத்தையறிந்துகொள்ளும்
ஆகவப்பாயிதுக்குள்ளேஞானம்நூறு
அப்புறத்தேசொன்னதொருஞானம்நூறு
ஆகவப்பாயிருபத்துயெண்ணூறுந்தான்
அறிந்தமட்டும்சொல்லிவந்தேன் வல்லோருண்
ஆகவப்பாபார்த்துரை விகபரமுஞ்சித்தி [டே
ஆதியென்றகுருவருளால் சொன்னமுற்றே. 102

சட்டைமுனிநாயனார்முன்ஞானம்-ா.

முற்றிற்று.

உ

சிவமயம்.

பின்ஞானம்-நூறு.

கைலாயப்பரம்பரத்திலென்னையாண்டாக்
  கடவுளெனுந்தெக்ஷணாமூர்த்திபாதங்
கைலாயத்தெனையீன்றஆயிபாதங்
  கருணையுடன்போற்றிநித்தம்ஞானம்சொல்வேன்
கைலாயநிற்குணமேநிர்மலமேதேவர்
  காட்டுகின்றீரகேசரியைச்சின்மயமாய்க்கையில்
கைலாயபரம்பரையாய்வந்தபேர்க்குக்
  கடைப்பிள்ளைஞானத்தைப்பாடுகோணே. 1

பாடுகிறேன்சரிதையென்னதேவிபிடதீட்சைப்
  பரிவாலகிரிகையென்னதேவியுடபூசை
பாடுகிறேன்யோகமென்னமாசியற்றவமூர்தம்
  பாங்கானஞானமென்னமௌனத்தந்தம்
பாடுகிறேன்திடத்திரந்தனுயிதோகிதம்
  பாங்கானஅஞ்சலிதான்மனமடக்குந்தேகம்
பாடுகிறேப்பரன்முன்னிவனுக்கேயென்றால்
  பரிவானால்ஞானவித்தைபலுக்குந்தானே. 2

தானென்றஞானத்தின்பூமிகேளு
  சாத்கமாயோகமென்றுஅபாரவீடு
வானென்றபூமியிலேவித்தைகேளு
  •மருவிற்குமரிவானவுகாரவிந்து
வேனென்றவெளியெல்லாம்படைத்துநின்று
  வேதாந்தஅண்டமென்றமகாரமாச்சு
கோனென்றநாதமங்கேகுமுரியாடுங்
  கூப்பிட்டார்கேளாதுகண்ணும்போச்சு. 3

போச்சப்பாதத்துவங்களனித்தியப்பட்டுப்
புலன்கெட்டுநிலங்கெட்டுபொறியுங்கெட்டு
ஆச்சப்பாமனவரையில்மயங்கிநின்று
ஆடுறதோர்படம்போலசைந்துதள்ளு
நீச்சப்பாகடிநீச்சுதிரோதாயிவெள்ளம்
நிலையேதுகரையேதுதவணையேது
மூச்சப்பாயடங்குமுன்னேமாயைவந்து
சுத்திமுதிர்ந்தறிவைதள்ளிவிடுமோசங்காணே. 4

காணப்பாமனவரையாமாறுக்குள்ளே
கடத்தேறப்போகாதுகலக்கமெத்த
ஊணப்பாவென்றுசொன்னால்மனமூணுது
வுற்றுமெள்ளபிடித்தாலுமாயைவந்துகட்டும்
வீணப்பாவுலகத்தோர்ஞானமெல்லாம்
வேதாந்தசித்தாந்தமென்பார்கோடி
தோணப்பாஞானமென்னகண்டிப்பில்லைச்
சுடர்கோடிவொளிபோலதோன்றுந்தானே. 5

தானென்றநிர்மலமாமனத்தின்வீதி
தாண்டறிந்துதாண்டிஞலரிவிபோற்றும்
காமனென்றமனதுசாதகத்தைக்கேளு
கற்பமுண்ணவஸ்துண்ணல்வாசிதோறும்
யானென்றபாணத்தின்பொதையிலேநில்லும்
பகலாலுங்கேசரத்தில்மனந்தானெட்டும்
வானென்றவெட்டவெளிவடிவுசாணு
மாச்சல்மெத்தமாச்சல்மெத்தமருவிகூடே. 6

கூடுவதுநிமைக்குமுன்னேகுளிகைகூட்டுங்
கூப்பிட்டால்பூரணந்தான்கூடப்பேசும்
மாடுவதுமனவரையில்மாயம்போக்கு
மருவிலேசொக்கிநின்றுஆட்டிவிக்கும்

நாடுவதுபூரணத்திலேற்றிக்காட்டும்
நலமானசாணையார்கெவுனமீனுஞ்சூதம்
கேடுவதுசித்தருக்குளிகைகேட்டு
செகத்தோர்க்குவாதமென்றதேட்டுதானே. 7

தேட்டானவரைகடந்துமனமுந்தாண்டித்
தெளிவானவறிவினுடனையுந்தாண்டி
நீட்டானபூரணத்தின்வரைகாணவென்று
நேரானமூன்றுவரையேறிச்சோக்கிப்
பூட்டானபூட்டென்றுயிராங்கிவிட்டேன்மைந்தா
புகழானவெருவெளியிலேறப்போகா
ஆட்டானகைலாயப்பரையாய்வந்த
வாச்சரியமூலகுருவாக்குங்கேடே. 8

கேளப்பாமூலருக்குகாலாங்கிபிள்ளைக்
கெடியானகாலாங்கிமைந்தன்போகர்
நீளப்பாபோகர்பிள்ளைக்கொங்கணர்தான்கேளு
நேராகநான்குமுறைபோனகி
தாளப்பாமேருவிலேதவசுபண்ணி
சாதகமாய்கைலாயவர்க்கமானுர்
ஆளப்பாபிள்ளையென்றுலவரேபிள்ளை
யாச்சரியமின்னுமுண்டுசொல்லுறேனே. 9

சொல்லுகிறேன்சிங்கென்றுமுன்னேயூணி
சோதிகண்டபின்பதிலேமனதையூணி
சொல்லுகிறேன்அங்கொன்றுபின்னேயுன்னி
சோதியிலேஅக்ஷரங்கள்தனமுங்கண்டு
சொல்லுகிறேன்வின்பல்லோமவுனமுன்னி
துடர்ந்தேறிதளமெல்லாம்பார்த்துக்கண்டு
சொல்லுகிறேன்புருவமையனத்திற்கூடி
துரிமென்றஅறிவுனுள்ளேநோக்கிறோ. 10

சொக்கியல்லோ அறிவைவிட்டு அகண்டமேறி
துயாறவேசமா தியுள்ளேகற்பமுண்டு
சொக்கியல்லோமூன்றுவரைசடத்தோடொக்க
சுரூபவரைகாணவென்று துணிந்துபொங்கி
சொக்கியல்லோயேறுதற்குபின்னவிதமென்று
சோதித்துக்குளிகையெல்லாம்பார்த்துப்பார்த்து
சொக்கியல்லோயேற்றிவைக்குஞ்சுரூபமணியென்று
சூக்ஷமாய்மூலருடநூல்பார்த்தாரே. 11

பார்த்தறிந்தாரிந்தமணிவாதமென்று
பரிவானகயிலாயதெக்ஷணமூர்த்தி
சேத்தறிஞ்சதம்முடையவர்க்கமான
சீடரிலேதிருமூலர்சண்டிகேசர்
மாத்தறிஞ்சசனகாதிநால்வரோடு
மருவிநின்றவியாக்கிரமர்பதஞ்சலியிஞேடு
போக்கறிந்தவடியேஞெடொன்பதுபேர்பிள்ளைப்
புகழான பூரணத்திலெழும்பென்றூரே. 12

எழும்பையிலேநிர்மலம்போற்சடமோகாணு
தேனென்றூற்பூரணந்தானெனதுக்கப்பேசும்
எழும்பையிலேகுளிகைமுதற்காண்டிற்பத்து
மெற்றியதோர்தீபத்தின்சுடர்போர்காணும்
எழும்பையிலேதேகமில்லைகோடாகோடிபேற்காணு
மெடுத்தசஜடஞ்சூட்சமாயிருந்துதென்றூல் [ம்
எழும்பையிலேமேலெழுபிமௌனமுத்து
மிருந்துரைத்தசமாதியுடபலந்தான்காணே. 13

காணப்பாசொரூபமென்றுகமலிதாஞென்று
கையடங்காததட்டமாசித்தியொன்று
பூணப்பாகைகொடுத்துசின்மயமாந்தேவர்
பொருளோடேவருளானபோக்குக்காட்டித்

தோணப்பாதோன்றிநிற்கும்சும்மாஅம்மா
சுகமாகயிசைந்தநிலேசொக்குமென்பார்
வீணப்பாமற்றதென்றார்சினமயத்தைக்காட்டி
வேதாந்தமுலத்தைவிளம்பென்றாரே. 14

விளம்பினார்சனகாதிவேதாந்தங்கோடி
விதித்தாரேமவுனத்தைசண்டிகேசர்
விளம்பினார்பதஞ்சலியுமனந்தங்கோடி
விரித்தல்லோதிருமூலரனேகஞ்சொன்னார்
விளம்பினார்வாவாதாமென்றுயானும்
விரியாமலிராநூறுஞானஞ்சொன்னேன்
விளம்பினார்வெகுவாகபெருநூல்கொஞ்சம்
வேதாந்தமிராநூறும்விரைந்துகாணே. 15

காணப்பாமும்மணியுங்கயிலாயவர்க்கம்
கழியாமற்பிள்ளைகட்கேமற்றோர்க்கில்லை
தோணப்பாவிதுமூன்றுஞ்சித்தர்சொல்வார்
சொற்பெரியபூரணமேசொல்லவேணும்
வீணப்பாஆராலுஞ்சொல்லக்கூடா
வேதாந்தஅந்தத்தில்வெளியிற்கூட்டும்
அணப்பாவருபத்துநாலுமரப்புக்குள்
ஆருங்கிடையாதுஅறியார்க்காணே. 16

அறியாதகுளிகையுடன்சாரணையிற்குத்து
அதன்பெருமைகாணவென்றால்கொங்கணரைக்கே [ளு
அறியாதவண்டமுதற்புமனம்பார்த்து
மருவியதோர்பதம்பார்த்துத்திரிந்துஆடி
குறியாகக்கற்பமெல்லாமேறிப்பார்த்து
கூறுதபூரணத்தைக்காண்பேனென்று
நெறியாகமனமுரைக்கக்குளிகைகட்டி
நேராகமனவரையிலேறினாரே. 17

ஏறினாராறுவரையியல்புங்கண்டு
யிதமாகவறிவினிடவரையிற்சென்று
தேறினார்மனமுரைத்தார்கண்டத்தேற
சேர்ந்தேறிசேர்ந்தேறிபொருவரையிற்றாண்டி
கூறினாரிவ்வளவுமொன்றேயென்றார்
கூசாமல்மருவரையில்குதிரைப்போட்டார்
மாறினால்சென்றுமணம்பிடித்துச்சென்றார்
வரைமூன்றுங்கடக்கவொருகற்பமாச்சே. 18

ஆச்சப்பாநாள்தரையிலேறும்போது
அரகராவொருகோடியிடிபோல்நாதம்
மூச்சப்பாவோடாதுமுன்பின்றேனு
முதிர்ந்தமனமாயையினால்பின்னுஞ்சென்றார்
கூச்சப்பாஐவரையிற்போக்கிநின்று
குருகுரெனமொழித்ததிலேமனமுந்தேறி
போச்சப்பாசடமொன்றுநிராசையாகி
புக்கினார்அறுவரையிற்புக்கினாரே. 19

புக்கியல்லோசுழல்காற்றின்றுரும்புபோலே
புலம்பினார்மூலருடபோன்போன்
மக்கியல்லோமனம்போச்சுகுளிகைபோச்சு
மாறாதமௌனமுன்னேமாண்டுபோச்சு
ஓங்கியல்லோசிலம்பொலிதானுள்ளேவாங்கி
ஓகோகோகுளியதுகீழேவாங்கு
சொக்கியல்லோயென்செய்வேனென்றுயேங்கி
துரியத்தைவிட்டுமெள்ளக்கீழ்கொண்டாரே. 20

கீழ்கொண்டார்கீழ்க்கொண்டகொடியாஞ்சித்தர்
கேசரத்தைவிட்டுமெள்ள அறிவில்வந்துநின்று
நாட்கொண்டபாடெல்லாம்நினைத்துக்கொண்டு [வி
நான்பிழைத்தே நானபிழைத்தே னென்றுசொல்

ஆட்கொண்டயென்குருவேபூரணத்திநின்றீர்
 ஆச்சரியமெனேயின்றுமிவரையேயையா
வேட்கொண்டயென்றவத்தையிந்தனேயா
 வெருவெளியாஞ்சிலம்பொலியைமேவென்றாரே. ()

மேவென்றுசொல்லுமுன்னேமேற்கண்டபோகற்
 வேதாந்தசிரோன்மணியை பெற்றதினான்மைந்தா
கோனென்றகுருவுக்கு அவரேசீடர்
 கோடிலக்ஷத்தொருசிஷருண்டோகாணேன்
பானென்றவேதாந்தஞசித்தாந்தம்பார்த்து
 பறக்கிறதோர்குளிகைமுதல்வாதம்பார்த்து
தேனென்றகைலாயவர்க்கமாகி
 சித்தருக்குச்சித்தராய்ரிஷியானாரே. 22

ரிஷியென்னசிலம்பொலியைக்கண்டாருண்டோ
 நேராகயதுக்குள்ளேசேர்ந்தாருண்டோ
ரிஷியென்னரஸவித்தையறிந்தாருண்டோ
 நிமிஷத்தில்கவனமுற்றுத்திரிந்தாருண்டோ
ரிஷியென்னஅண்டமுதற்புவனந்தாண்டி
 நின்றநிறையாய்க்கண்டி வந்தோருண்டோசொல்
ரிஷியென்னமவுனமுத்துசமாதிக்குள்ளே (லும்
 நின்றதினால்திகைமையால்நினவாய்க்காணே. 23

காணப்பாரிஷியாட்டுஞ்சித்தராட்டும்
 காரணமாய்மவுனத்தேநின்றோராட்டும்
பூணப்பாபூரணத்தைநின்றோராட்டும்
 •பொன்னுகமாமுதலாய்புகழ்ந்தோராட்டும்
தோணப்பாவாசியுடகுதிரையாட்டும்
 ஒன்றுமற்றுத்தன்மயமாய்நின்றோராட்டும் [ல்
தோணப்பாயிதுவெல்லாங் கொங்கணர்க்கேயல்லா
 சூழுலகிற்சித்தருண்டோசொல்லிடரே, 24

சொல்லிடமாய்ஞானமுண்டோ குழகையுண்டே
சூட்சித்தகற்பமுண்டோ வாசிதானுண்டோ
மல்சுட்டவாதமுண்டோ சுன்னமுண்டோ
மகத்தானசித்தியுண்டோ ஜெபநீருண்டோ
வெல்லிடேர்விடமுண்டோ சாரணைதானுண்டோ
வெவ்வேறேகூட்டுகிற குடோரியுண்டோ
அல்லிடேர்வேதைசகு கிருவணந்தானுண்டோ
அப்பனேபதினேழு மமைத்திருரே. 25

அமைத்தியவர்மூணுநாண்டம் பாடியதோரங்கமென்
வந்தித்தப்பிள்ளைக்கு மறிவுதோன்றும் [று
அமைத்தியவர்பாடினது பொற்கம்பிபோல
அறிவுகெட்டமிலேச்சருக்கும் வாதசித்தி
அமைத்தியவர்கருவெல்லாம் வெட்டவெளியாக
அங்கங்கள்மறையாமற் சொன்னார்சொன்னார்
அமைத்தியவர்பாட்டுக்கு நமுடையதாய்தா
னருகாகமறைப்பென்று அமைத்திட்டாரே. 26

அமைத்திட்டாரந்நூறு பிள்ளைகளைவேண்டி
அப்பப்பாவெகுதெளிவு சாத்திரந்தான்மைந்தா
நிறைத்திட்ட ஆரணம்போல் வெட்டவெளியாக
நீங்காமற்றுறந்துவிட்ட ரருளோடுபொருளும்
குறைந்திட்டபுத்தியல்ல நிஷ்களமாம்புத்தி
கூறாதபொருளையெலாங் கூறிவிட்டார்
வறைத்திட்டமவுனமெல்லாம் வெட்டவெளிபாக
வாய்திறக்காவித்தையெல்லாம் வளங்கினரே. 27

வளங்கியதோர்கொங்கணரால் மூலவர்க்க
மகத்துவந்தானுண்டாச்சு மக்காள்மக்காள்
விளங்கியதோர்கீர்த்தியுண்டோ வுங்களாலப்பா
வெட்டவெளிக்கப்புறத்தே செல்லமாட்டீர்

முளங்கியதோர்குளிகையென்ன காயசித்தியென்ன
மூச்சற்றவிடத்திலே நோக்கமென்ன
பிளங்கியதோர்சித்தருட வர்க்கமென்ன
பேய்மக்காள்மூவஞ்சு பேரிற்றானே. 28

தானென்றுசொன்னதென்ன யென்னைப்பெற்ற
சச்சிதானந்தவெள்ளத் தயவுள்ளோரே
கோனென்றமுக்குளிகை நமக்குண்டையா
கொடியதொருமவுனவித்தை நமக்குண்டையா
பானென்றவாசிவித்தை நமக்குண்டையா
பாங்கானகாயசித்தி நமக்குண்டையா
வானென்றவெட்டவெளி யேறியாடி
வருகிறேன்விடைகொடுத்து வாழ்த்திடீரே. 29

வாழ்த்தியுன்னையனுப்பினால் பூரணந்தான்
வரைகடந்து ஆறுவிரை வேறுவாயோ
வாழ்த்தியுன்னையனுப்பினால் நரகத்துள்ளே
மயங்காமற்செல்லுவையே மைந்தாசொல்லு
வாழ்த்தியுன்னையனுப்பினால் விடியிற்குள்ளே
மயங்காமல்றியங்காமல் மருவுவாயே
வாழ்த்தியுன்னையனுப்பினா லென்னமுன்னால்
வாய்பேச்சோவரைகடக்கும் மார்க்கந்தானே. 30

மார்க்கமென்னவென்னையீன்ற கைலாயமூர்த்தி
மகத்தானசமாதியுள்ளே கர்ப்பமொன்றுவாழ்ந்தேன்
சேர்க்கமென்னசிவாலயங்கள் பலியேத்துண்டேல்
சிவமேதுநீரன்றி வேறொன்றுகாணேன்
ஆர்க்கமென்னகுளிகையிட்டு சென்றுபோரே
னங்கங்கேமனந் தேறிப்போரேன்
தீர்க்கமென்னசொக்கினாற் சொக்கிப்போரேன்
திரும்பினாஞ்சடத்தோட திரும்புரேனே. 31

திரும்புகைக்யோயென்மகனே திடந்தானுண்டோ
சிறுபிள்ளைபுத்தியல்லோ செப்புராய்நீ
வளர்பிறையோதேய்பிறையோ ரவியினுள்ளே
வருவதுபோலல்லவது மாட்டிவாங்கும்
பரும்பிறையோகமது பிரவிகோடி
பாங்கானவொளிக்குள்ளே கண்ணேகூசும்
அரும்பிறையோமனந்தளும்பு மோவொட்டாது
அரகரவென்மகனே யறிவாய்நீயே. 32

அறியாதவரப்பார்க்க நான்தானேறி
அய்யனேமூன்றுவரைக் குள்ளேசிக்கி
நெறியாகநால்வரையி லேயொட்டாமல்
நிமிஷத்திலறிவினிலே வந்துநின்றே
மறிவானம்படைத்த கொங்கணரேசித்தர்
மற்றோருரையான்காணேன் மைந்தாசொல்லு
பொறியானவழியடக்கி சூட்சமாகி
போனவரார் போகருடபிள்ளைதானே. 33

பிள்ளையென்றுலவரல்லோ போகருக்குப்
பிள்ளைபுகழானரிஷிகளெல்லாஞ் சித்தரென்பார்
தன்னையென்மூலவர் தன்னை மூலரிடம்போன
சச்சிதானந்தவின்ப மானபிள்ளை
கொள்ளையென்றுலவர்கொள்ளை ஞானவீதி
கொடிதானசிலம்பொடியைக் கேட்டுமீண்டார்
விள்ளையென்றுவந்ததினால் கீர்த்தியாச்சு
வேதாந்தஅந்தமெல்லாம் வெளியாய்ப்போச்சே.

போச்சென்றுசொல்வதென்ன போய்வாலையா
புத்திசொன்னபுத்தியெல்லாம் போட்டிட்டாயோ
வாச்சென்றுநின்வயத்திற் பிரந்தபிள்ளை
வந்தாலென்கெட்டாலென்மகத்துவந்தானுண்டே

கோச்சென்றநாவமென யிடிந்தாலென்ன
  கோடிரவிகாந்தியென்ன பயமுண்டாமோ
ஓச்சென்றசிலம்பொலியைக் கண்டுவாரே
  னொழிமனதாய்பூரணத்தி லுன்னிடீரே. 35

உன்னிடீர்அண்டமுதற் புவனந்தாண்டி
  யொருநொடிக்குட்பதந்தாண்டிமுப்பாழுந்தாண்டி
மன்னிடிருள்மனையைக் கண்டுபோற்றி
  மருவியதோர்பூரணத்திற் சென்றுயேறி
பன்னிடிர்தினந்தோறும் பழக்கமையா
  பாயுமூனைநடந்து வரைகளாறும்
தன்னிடிர்யோகறியேனும் தருளாற்போரேன்
  தயானுதிகடாட்சித்து அனுப்புவீரே. 36

அனுப்புறதுபிறகுன்னை யான்சென்றுவாரே
  வவ்வளவுங்குகைக்குநீ பட்டமாய்நில்
தனுப்பிறந்தகளிபோல சென்றுதாண்டி
  சாதகமாய்சொரூபமணி மூன்றுங்காட்டு
கனுப்பிறந்தகமலியது மூன்றுங்காட்டி
  காட்டிலேயஷ்டமா சித்திநல்காட்டி
உனுப்பிறந்துமோர்தாண்டி யொருவரையிலேறி
  யுற்றுமறுவரையு லோடினேனே. 37

ஓடினேன்மூவரையி லிடியோகோடி
  ஓகோகோரவிகோடி வன்னிகோடி
வாடினேன்மனமிளைத்தேன் மயக்கமானேன்
  வாயிலிட்டகுளிகைசென்று யேறிப்போறேன்
நாடினேன்கற்பமொன்று மூவரையிற்றாண்டி
  நலமாகநாலுவரைக் குள்ளேசென்றேன்
ஆடினேனாடினே னறிவுகெட்ட
  னாகராமோசமென்று யிரங்கினேனே. 38

இரங்கினேனுலுவரைக் கப்புறமேபோக
யென்றாலேமுடியாது யேதோஅஞ்சில்
இரங்கினேனென்மக்கா ளுங்களாலாமோ
யேதுசொன்னாய்பேய்ப்பிள்ளா யென்னபோச்சு
இரங்கினோனின்னாள் பின்னையார்சொல்வார்
ஏகவெளிதிக்காடு யிடியோகோடி
இரங்கினேனென்னாலே முடிவுகாணே. 39

கொங்கணர் மகத்துவம்.

ஏறியதோர்கொங்கணரைப் போலேயில்லை
யேகவெளிதீர்க்காட்டி லெப்படியோபோனார்
மாறியதோர்மனம்பிடித்தார் யோகநிஷ்டையானார்
மாறுவதுநிஜமென்று வாய்மைபூண்டார்
கூறினதோரறுவரையைக் கண்டுமுட்டக்
குமரியதோர்சிலம்பொலியைக் கேட்டுமீண்டார்
ஆறியதோர்மனங்கண் டிரவரேசித்தர்
ஆச்சரியங்கொங்கணம்போ லார்காணேனே. 40

காணரிதுகாணரிது கோடாகோடி
கண்டுநான்பாபருட்ச சித்தர்க்குள்ளே
பூணரிதுபூணரிது வகண்டவீதி
புக்கியல்லோசிலம்பொலியைக் கேட்கமாட்டார்
ஊணரிதுஊணரிது வெளிவிற்பார்த்து
ஓடுவரோமென்றீர்கள் மக்காள்நீங்கள்
தோணரிதுதோணரிது தாயாய்நின்றஞானம்
கிடருக்குள்ளோடுறது துரியந்தானே. 41

சாங்கத்தார்.

தானென்றபூரணத்தை சாங்கத்தோர்கள்
சகலமெல்லாம்நிர்க்குணமா நின்றதென்பார்
வானென்றவெளியென்பா ரொன்றுமில்லையென்பார்
வாய்பேசார்சொன்னாக்காற் போமோசெல்லு

கோனென்றகுருவருளால் சமாதிகூட்டி
குவிந்துநின்றிமவுனத்தின் நிலையைப்பற்றி
ஊனென்றவுடம்பைவிட்டு அறிவாய்நின்று
உலாவுரதேசங்கமென்று வுரைத்திட்டாரே. 42

உரைத்திட்டகாரமென்ற பிரிதீவுபோக்கி
யோடுகிறவாசியினால் யோகம்பார்த்து
மறைத்திட்டமவுனத்தோடே மவுனமூட்டி
மருவியந்தவறிவோடே வாசமாகி
நிறைத்துட்டவகண்டத்திற் சென்றுஆடி
நேரானஅண்டமுதற் புவனம்பார்த்து
முறைக்கிட்டந்தப்பாமற் சமாதிநின்றால்
முழுயோகிமுழுஞானி முக்ஷாவாயே. 43

ஆமப்பாயிதுக்குமுன்னே யப்பியாசமார்க்க
மறையுமேனஷ்டாங்கம்நன்றாய்க்கேளு
ஓமப்பாவகையாக விரித்துச்சொல்வே
னுத்தமனேசாட்சியாம் நித்திரைப்போக்கு
தமப்பாசதானித்தம் தாரகத்தேனில்லு
சார்ந்துநின்றகேசனிலே சதானித்தம்பாரு
சோமப்பால்கழித்தோடுங் கேசரியைக்கண்டால்
சொல்லாதமுத்திரையைச் சொல்லுறேனே. 44

சொல்லுரேன்ரவிமதியும் வன்னிக்கூடிச்
சொலித்துநின்றவிடமல்லோ கேசரிதானப்பா
சொல்லுகிறேனதைப்பாரு மனஞ்செசீராகுஞ்
சுத்தவெளியடியோடே தாக்கியேத்தும்
சொல்லுறேன்மனம்புத்தி சித்தமென்பார்
துடர்ந்துநின்றருநுபதத்தை சூட்டிக்கேளு
சொல்லுறேனறிந்தமட்டும் புருவமையம்
சூட்சந்தொட்டேறியஷ்டாங் கதுரைக்கேளே. 45

கேளப்பாயேமத்தைச் சொல்லுவேனாலுங்
கெடியானநேமமுடனுசங்கொண்டு
வாளப்பாபிராணுபம் பிரத்தியாகாரம்
மகத்தானகியானமொடு தாரணையுங்கேளு
தாளப்பாசமாதியிட னிட்டைமங்கம்
தனித்தனியேசொல்லுகிறேன் நன்ருய்ப்பாரு
வேளப்பாயேமமென்ற பத்துஞ்சொல்வேன்
வேதாந்தமொறியறிந்தோர் பெரியோர்தானே.

பெரியோர்கள்தண்டமென்ற ஆன்மாவைநோக்கி
பேரானபரிச்சின்ன மனதுமாகி
அறிவோர்கள்சாதியென்ற ஆச்சிரமும்விட்டு
ஆசையென்றவிகர்ப்பமெல்லா மடித்துத்தள்ளி
பரியோம்களில்கிரிசையை நீக்கிப்போட்டு
பராபரத்தைநோக்குவதே அங்கிஷபதாகும்
சரியோர்களாவதுஞ் சகலமதத்தாலுந்
தனித்தனியேகண்டிக்கப் படாதென்பாரே.   47

என்பார்மனிங்கிசையா யிருக்குமான்பா
யெங்கெங்குநிறைந்திருக்க சுரூபமூர்த்தி
அன்பார்களிதுவல்லோ சத்தியந்தான்மைந்தா
ஆரதிகஊன்மாவர் சரீராதிசுபாவம்
வன்பார்களபகரிப்பை விட்டுவிட்டு
மனமுரைத்தா லூரதிகமென்றுபேரு
தன்பார்கள்பிறச்சரியுஞ் சரீராதிசுவாவங்
தானென்றதற்குலத்தின் லட்சணந்தான்பாரே.

பாரப்பாபிரம்மமது சுபாவமாக
பாவியதுநிரந்தரமுஞ் சஞ்சரித்தாலன்று
நேரப்பாபிரம்மமிது சரிய மிதுவாங்கண்டால்
நிரந்தரமுந்தபவிலுட நினவுகேளு

தாரப்பாசரீரத்தில் வருத்தத்தைநீக்கி
சகலஜெனம்நம்மைப்போலேறுயெண்ணி
ஆரப்பாசுபாவத்தி லனுபோகஞ்செய்வார்
அவரல்லோதயவுடைத்தோ ரறிந்துகாணே. 49

காணப்பாவேதாந்த சாத்திரமேசெம்மை
கரைகற்றசமையமெல்லாம் பொய்யென்றுதள்ளி
ஆணப்பாதிடப்பட்டால் ஆட்சேபமென்பார்
வீஷண்முஞ்சீதளமுஞ் சுகதுக்கத்தாலே
வீணப்பாமானுபி மானம்வந்து
வெறும்வெளிபோற்சொற்பனமா மென்றுதள்ளி
தோணப்பாதாங்காமல் அகண்டத்துள்ளே
சொக்குததுசமையமென்று சொல்லலாமே. 50

சொல்லலாம்வேதாந்தத் துள்ளேமுத்தி
தொடுகுறியாஞ்சாத்திரத்தின் முத்தியில்லை
வெல்லலாமதினாலே சொன்னபொருளெல்லாம்
வேறில்லைநாமதுதான் னென்பதல்லோமுத்தி
அல்லலாஞ்சொற்பனம்போ லவத்தையிலொண்டு
அகிலமெனபிரபஞ்சமெல்லா மெடுத்துமூழ்கி
நில்லலாமற்புதமாய் னிற்கபிடமற்று
நிர்மலமாய்னிற்கிறதோர் பூரணந்தானென்னே.

தானென்றபூரணந்தா நாமென்றெண்ணி
சதானித்தம்மறவாம லிருந்தானாகில்
வானென்றகலிதகாரி யாச்சுதாச்சு
மருவியதோர்சாஸ்திரத்தி னாலேயப்பா
கோனென்றதன்னிடத்தே வந்ததொன்றுமில்லை
கூடிணின்றுபோனதில்லை யென்றுயெண்ணி
ஊனென்றநிர்க்குணனும் வேறொன்றுமில்லை
வேதாந்தனிசமென்றார் கௌசமாச்சே. 52

ஆச்சப்பாநேமத்தைச் சொல்லக்கேளு
அறையுறேன்நன்றாக பூரணந்தான்
வாச்சப்பாசத்தியமென்ன மித்தையென்ன
மருவியதோர் நானென்றுநானென்றதாரு
வீச்சப்பாநமக்குவந்தபந்தமேது
வேதாந்தசாஸ்திரத்தால் விளங்கப்பார்த்து
கூச்சப்பாதிடப்பட்டார் தவசென்றுசொல்வார்
குலாமரிட்டவிடமெல்லாங் குருட்டுநோக்கே. 53

நோக்கப்பாபிரமமதி லோகத்துள்ளே
நுகர்ந்துநின்றகாயிபத்தை நரகப்போலெண்ணி
வாக்கானவெறுப்பவத்து சொற்பனம்போலெண்ணி
மசகமிதுவென்றுதள்ளி மலமீதேறி
தாக்கானபொருளல்லோ சச்சுதானந்தம்
தடையலவேதானுர் சந்தோஷமாச்சு
யோக்கானவேதாந்தப் பிர்ம்மசாரம்
புகட்டுகிறகுருச்சொல்லும் பூரணமென்றெண்ணே

எண்ணியதோர்மூன்றையுந்தா னுண்மையென்று •
யெண்ணியிருக்கிறதுஆரென்று யியம்புவார்கள்
தண்ணியதோர்குருவுரைத்த வுபதேசத்தை
தானறிந்துபூரணமாய் முத்தனுகி
மண்ணியதேஷபதாரம மெல்லாங்குருவுக்கேயீந்து
பாராபரத்தை தன்தேகம்போலேயெண்ணி
அண்ணியதோர்சுகமுடனே துக்கமெல்லாம்
ஆர்செய்துந்தனக்குவாந்தந் தாப்போதுங்காணே.

காணப்பாவிப்படியே தீர்த்தியானுல்
கைகடந்தசிவபூஜை யென்றுசொல்வார்
வீணப்பாசகலநூ லென்றுதள்ளி
விரைந்துநின்றவிரத்தியெல்லாம் விட்டுவோடி

ஊணப்பாகுருபிறகே நிழலைப்போலே
 வுத்தமனே சச்சுதானந்தனாய்
ஆணப்பாதேவிக்கு முபசரித்துவென்று
 அறிகிறதேசிறவணமென் றறிந்துகொள்ளே. 56

அறிந்திந்தவேதனிலே விட்டுநீயு
 மப்பனேவாசனையாப் பிரபஞ்சந்தாண்டி
வறிந்திந்த புத்திராதிபாசத்தாலே
 மாயம்வந்துமுட்டையிலே கலச்சையாக்கிச்
செறிந்துஅதையடிச்சகத்தில் வேதாந்தப்பார்த்து
 சீராகனிற்கிறதே செம்மையாகும்
நெறிந்துனின்றவேதாந்தப் பிரமந்தன்னில்
 நின்போடுவருகிறதே யாசைதானே. 57

ஆசையென்றுமதியென்று மதற்குநாமம்
 அப்பனேதான் பிரம்மமென்று ஆசான்
நேசையென்றுவுபதேசப் படியேயென்றும்
 நேராகவேதாந்தப் பொருளென்றெண்ணி
பூசையென்றுமற்றதெல்லாந் தள்ளிவிட்டார்
 னுத்தமனேசிவமென்று சொல்லுவார்கள்
காசையென்றுயென்னென்ன காரியங்கள்வந்தும்
 கைவிட்டதுக்கம்வந்து கலங்கிடாரே. 58

கலங்காமல்நாப்பிரமம் மென்றுயெண்ணி
 கவடற்றுனிரந்தரமும் வேதாந்தம்பார்த்து
இலங்காமல்னிற்கிறதே விருதமப்பா
 மகத்தானநேமமென்ற பத்துபாச்சு
இலங்காமலிருபதையு மனுஷ்டித்தாக்க
 லெங்கனேமணந்திடமா மில்லாவிட்டால்
துலங்காதசுவரில்லா சித்திரம்போலாகும்
 சுழியதுதானடிப்படை மூன்றென்றும்வாறே.59

வாராகசுகரசனமா யிருந்துகொண்டு
மருவியதோர்மூலத்தில் வங்கென்றுபூரி
கூறுகும்பித்துமாத் திரையையேற்றிக்
குறியோடேசிகரத்தால் ரேரேசி
காராகவிப்படிதா னங்கென்றுகும்பி
சாதகமாயிதுமூன்றுந் தீர்ந்தபின்பு
ஆறுக அகாரமுத லுகாரங்காட்டி
யப்பனேமவுனத்தாற் கும்பித்தேறே. 60

கும்பித்துமவுனந்தான் குவிந்தபின்பு
கொள்கியதோர்மூலத்தை விட்டுநீயுங்
தம்பித்துக்கண்டத்தே நின்றுவூது
காலடங்கியுரைத்தபின்பு மேல்மூலம்னின்று
சொம்பித்துவரிவோடே மௌனம்பூரிச்
சுகமாகபூரணத்தை யதுக்குட்கும்பி
தப்பித்துமனத்தோடே ரேசகத்தைமண்ணி
நலமானபிரம்மமென்று பிராணனுச்சே. 61

ஆச்சப்பாவிதுமல்லோ பிராணுயாமம்
அறிந்தவனுர்சிவயோகி யறியாமற்ருேர்
ஒக்கப்பாபிரபஞ்சமென்ற வாசைவிட்டு
வொன்றையுந்தான்மனதினுள்ளே சங்கியாமல்
வாச்சப்பாவந்ததென்ற காரணமாக
மருவியதோர்ஞானமென்ற மார்க்கத்தூடி
கூச்சப்பாகாமியத்தை நரகம்போலெண்ணி
கூறுனகர்மமெல்லாம் விடுகநன்றே. 62

நன்றுகவேதாந்த சாஸ்திரத்தாலே
நாம்சாட்சியென்று நித்தமுறைத்துனின்று
பன்றுனமற்றதெல்லாம் நாமல்லவென்று
பாவினின்றுவுலகமெல்லாம் வித்தையென்று

கன்றுகவுரைப்புவந்து னிரந்தரமுனிவனாய்
காரணகாரியங்களெல்லாந் தவிழ்ந்துபோட்டு
வென்றனவொருபொருளாய் நின்றயானு
லுத்தமனேபிரத்தி யாகாரமாச்சே. 63

ஆச்சப்பாமாயையொடு மாயவின்ப
மப்பனேசுத்தசைதன்னிய மூன்றும்
போச்சப்பாவாகாயம் போலேயெங்கு
மோடியெங்குமறைந்திருக்குங் கண்டாலுந்தான்
ஆச்சப்பாஅவர்களைத்தான் தீர்த்தமூர்த்தி
வாகனணிதோதத்திரமாய் தியானம்பண்ண
வீச்சப்பாபிரமமென்றே தியானமாச்சு
விளம்புகிறேனைந்துவகை சமாதிதானே. 64

தானென்றவதிஷ்டான சைதன்னியத்தை
தனையளித்துநிலவரையில் தீபம்போல
ஆனென்றிஅலைவற்றுத் திடமதாக
அப்பனேயகண்டமது தானாய்நின்று
வேனென்றதோற்றமற்று யிருந்தாயானால்
விளங்கியதோர்தத்துவல யசமாதியாச்சு
வானென்றசவ்விகற்ப சமாதிகேளு
மருவியதோர்தத்துவலய சமாதிக்குள்ளே. 65

உள்ளாகவிருக்கையிலே சேசுஞ்சுற்ற
முறவாகக்கேட்டாக்கா காசந்தானுவித்தை
தள்ளாகசவ்விகற்ப சாதியென்று
தானுரையாற்பெரியோர்கள் கேளுகேளு
விள்ளாகதிரிசானு வித்தைமார்க்கம்
வியவியந்தசமாதியிலே நின்றிருக்கும்போது
தள்ளாகத்தன்னை யனுசந்தானித்து
தலமானசந்தானந் திரிசானமாச்சே. 66

ஆச்சப்பாயிதின்பெருகவ்விகர்ப்பமென்பார்
அருளியதோர்நிருவிகற்பசமாதிகேளு
ஓச்சப்பாதத்துவலயசமாதிமுத்தி
யுத்தமனைசாத்தாணுவித்தங்கேமறந்து
ஆச்சப்பாதுக்கமுற்றுமிருகம்போல
ஆச்சரியஞ்சத்தமெல்லாங்கேளாவிட்டால்
கூச்சப்பாசித்தமதுசொரூபத்துள்ளே
கொள்கிநின்றாற்பூரணத்தில்நிருவிகற்பமாமே. 76

ஆமப்பாசமாதிவிட்டுசஞ்சரிக்கும்போது
மப்பனைசாத்திரங்கள்பார்க்கும்போது
ஓமப்பாகாலமென்றநிறைபமில்லை
யுத்தமனைபிரபஞ்சமில்லையென்றுதிடமதாகி
சோமப்பாவிகாரந்தோற்றுகிறபிரபஞ்சஞ்
சொற்பனம்போல்பாசமென்றமரியாதியடக்கி
லாமப்பாதீவிரமாம்பிறவிருதியார்க்கும்
மகத்தானகாரணனாமென்றுயெண்ணே. 68

எண்ணியல்லோமனதுள்ளேபடாதேநீக்கி
யேகமாய்நிருவிகற்பமாகிநின்று
அண்ணியல்லோபிரபஞ்சத்தின்விகற்பந்தள்ளி
யனுபோகநிருவிகற்பசமாதியாச்சு
ஒண்ணியல்லோசொரூபத்தில்யிச்சுநின்று
வுற்றிருந்தவகண்டவிர்த்திகாற்றில்லாததீபந்
தண்ணியல்லோவுப்புண்டாலேமக்காள்
சாதகமாயுன்னுருவங்கெட்டுப்போச்சே. 69

போச்சதுவுங்கடிகையொன்றுதானுப்நின்றாற்
புகழானபெருமைசொல்லயென்றாற்கூடா
ஆச்சதுவுமவனமுற்றுவாயைமூடி
ஆசையற்றுவிருந்தாலல்லோவகண்டவீதி

வாச்சதுவும்பிரபஞ்சத்திற்கண்டதெல்லாம்
வாலையுடனுரைபோலுமமலைபோற்காணும்
கோச்சதுவுஞ்சிலநதியுடனாலும்போல
கூறுமதத்தினங்கம்போற்குறியைக்காணே. 70

குறியானவின்னுநித்தமேகம்போலுங்
கோதியதோர்சொற்பனத்தின்பிரபஞ்சம்போலு
நெறியானவகண்டநாம்நம்பிடத்தேதமைநதா
நேராகவுண்டாகில்யிற்றுப்போச்சு
சரியானவெவ்வேறுநாமமாகி
பாழூலகுநம்மிடத்தைத்தான்றுந்தோன்றும்
மறியாகவழிந்துப்போம்நாமேபிரம
மற்றொன்றுமில்லையென்றுமயக்கந்தீரே. 71

மயக்கமற்றநாமொருவனென்றுக்குளெல்லா
மற்றொன்றுமில்லையென்றுதீரனாகித்
தியமற்றுமென்னோரமுள்ளிட்டுக்கொண்டு
சேர்ந்துவருஞ்சந்தோஷந்துக்கந்தள்ளி
மூபக்கமறவருட்பொய்துமுன்னைவந்து
முன்னின்றுவிகற்பங்கள்பண்ணினாலும்
அயக்கமற்றுமனதிடமாய்சதவாய்த்தள்ளி
யாராதிகொண்டகறித்தானுப்பில்லை. 72

இல்லப்பாசஞ்சாரதாலத்துள்ளும்
நேராகச்சமாதியிலையிருக்கும்போது
அல்லப்பர்தொய்தம்வந்தாலாதரவுபண்ணி
யசையாதமலைபோலவிருக்கநன்று
சொல்லப்பாகற்பமதுகண்டத்தொய்துஞ்
சூட்டிநின்றுதிடப்படுதல்மெத்தநன்று
வெல்லுலப்பாவாசனையைவிண்டாயானால்
மேவிபதோராரூடசமாதியாச்சே. 73

மாயையுத்தி.

ஆச்சப்பாமாயையுத்திசொல்லவென்று
லனேகமுண்டுசூக்ஷமாய்ச்சொல்லக்கேளு
வாச்சப்பாதேசத்திற்பேதாபேதம்
மருவியதோர்கிராமத்தில்கிராமபேதம்
ஓச்சப்பாதிறங்களிலேதிரங்கள்பேதம்
ஓகோகோகோசனங்களிலேயனேகபேதம்
வீச்சப்பாபுத்திகளிற்பேதாபேதம்
வெகுமோகமாயத்தாற்றோன்றுங்காணே. 74

ஞானவான்.

காணப்பாவின்னமயமாகிநின்று
கலந்துநின்றபிராணமயகோசமாச்சு
ஊணப்பாவிக்கியானமயமுமாகி
யுத்தமனோமயமாங்கோசமாச்சு.
பூணப்பாவானந்தமயமுமாக
பொங்கிற்றுவஞ்சுதிறைபோதத்துக்கு
தோணப்பாதிறையஞ்சுமாயைமாயை
சொல்லுகிறேன்சூக்ஷத்தைப்பூட்டிப்பாரே. 75

பூட்டியதோர்விசிஷ்டனென்றும்விராடனென்றும்
புகழ்பெரியயேமகற்பபோக்கேதென்றும்
நீட்டியதோரண்டமென்றும்புவனமென்றும்
நேரானபதங்களென்றுமமாயையிலாச்சு
ஆட்டியதோராட்டமெல்லாமாயையாட்டு
அறிந்துகொள்ளுமுன்மனமேமட்டைமாயை
மூட்டியதோர்மனமுமவந்தவரைக்கேநிற்கு
முதண்டமனங்கடக்கமுடியவாறே. 76

வாரானவுலகத்திற்சுத்தவீரன்
மனதோடேபோராடியருவில்மாள்வான்
கூறானஞானியென்றுலிங்கததிற்புக்கிக்
குறியானவம்பலத்தில்சேர்வாரப்பா

தாரானவுலகத்தோர்க்கடுத்தஞானஞ்
சகத்திரமாங்கோடியொருவர்சொல்வார்
வீரானசிலபேய்கள்சாங்கம்பேசி
விழிந்திறந்துவிழிந்திறந்துதிரிவர்தானே. 77

தானென்றபிரம்மருமோரறிவிற்சென்றார்
சாதகமாய்மாலென்றுலறிவினுடையும்
கோனென்றருத்திரனோருவிலந்தங்கொள்கி
நின்றமகேஸ்வரனோரறிவிற்றோன்றும்
வானென்றசதாசிவனேமணியைக்காண்பான்
மகத்தானவைவருந்தானுக்கிப்பீடம்
வேனென்றபஞ்சகர்த்தாதும்மட்டுஞ்சென்றால்
வேதாந்தியென்மட்டுஞ்சொல்வார்பாரே. 78

பாரப்பாசித்தரென்றார்குளிகைபோட்டு
பகுத்தறிவாருள்மனைப்பந்துபோற்றி
நேரப்பாதம்மோடுபூரணத்தினின்று
நேராகவோட்டம்போல்நீஞ்சிபாடி
சேரப்பாதிரும்பிவந்துபுக்குவார்கள்
செகத்திலுள்ளசித்தருக்குஅடுத்தவாறு
கூறப்பாபூரணத்திற்றிசைநாதந்தாண்டி
கொங்கணர்தான்சிலம்பலியைகூடினாரே. 79

கூடினார்மூலகுருபேரனென்று
கோடானகோடிசித்தராடிப்பார்த்தார்
ஆடினாராடினாரேறமாட்டார்
ஆச்சரியங்கொங்கணர்தாமகண்டில்சித்தர்
ஓடினாரோடினாரனேகங்கோடி
யோங்கிநின்றகாகத்திலொன்றிப்போட்டு
தேடினார்தேடினார்குளிகைதன்னைச்
சித்தருக்குச்சோரூபனிதுகிட்டும்வாறே. 80

ராவானசுரூபமணிபாருடையவர்க்கம்
மகத்தானதெக்ஷணாமூர்த்திவர்க்கம்
கூறானதொன்றுநிஷ்களங்கமாகிக்
குவிந்துநின்றபொருளாகிக்கூறொணாத
தாரானபதற்பதமாய் அதுவுமற்று
சச்சிதானந்தத்தில்நின்ற ஆசான்
போனபிள்ளைகட்குமணியுமீந்து
பெரும்பாதைமகாரமென்றுபேசினாரே. 81

பேசியதுர்க்கந்தமென்னவென்றுகேட்டால்
பெருவிரலேநீயாச்சுமெய்விரலேபோத
மாசியதுவற்றக்காற்கவிந்தெடுக்குமுன்னே
மக்களேயிந்தபாரென்றுகாட்டி
தேசியதுமகாரவித்தைசென்றுகூட்டி
செப்பாதேமகாரவித்தைகுளிர்ந்தஞானம்
வாசியதுக்கருகாகுங்கண்டுகொள்ளு
மக்களேசின்முகத்தில்நடுப்பாலாமே. 82

நடுவென்னவெட்டவெளியொன்றுமில்லை
நானுமில்லைநீயுமில்லைபகண்டவீதி
கடுவென்னலகுவென்னமனஞ்செவ்வானால்
கண்டுகொள்ளுமென்றுசொல்லிகரத்திற்காட்டி
சுடுவென்னதாபமென்றமுனையைமுந்தி
சுடுகிறதுத்தியென்னமௌனத்தீதான்
விடுவென்னவிந்திரியபாம்பைநீயும்
விட்டகன்றுவறிவோடேமேவுமேவே. 83

மேவுமென்றகைலாயபரம்பரையாமாறு
வெகுகோடிரிஷிகளுக்குவுபதேசித்தார்
மேவுமென்றுசித்தறிலேயனேகங்கோடி
மேருவிலேயிருந்தார்க்குமுபதேசித்தார்

மேவுமென்றுயென்னோடேபதினாறுபேர்க்கு
விளங்கியவர்பதம்பிடிக்கவுபதேசித்தார்
மேவுமென்றுயெழுவருடன்றிருமூலருக்கு
விளம்பினார்மெஞ்ஞானமவிளையபினோரே. 84

விளம்பியதோர்நாங்களெல்லாங்கயிலாசவர்க்கம்
மேருவிலேயெடுத்தவுடலெங்களுக்குமக்காள்
அலம்பினதோர்ஜனகாதியையரைத்தான்விட்டு
அரைக்ஷணமும்பிறியார்களடியைவிட்டு
தளப்பினதோரகொடிங்கல்லோகொழும்புபோலே
சதாநித்தங்காத்திருந்தோமையாகிட்ட
இளம்பினதோர்பந்துபோலனேகம்பிள்ளை
கொடியிட்டுமாட்டியங்கேகிட்டினாரே. 85

கிட்டினேன்கைலாயபரம்பரையினாலே
கேளுமக்களாச்சரியங்கொங்கணர்தான்சென்று
கிட்டினேனென்றுசொல்லியீசானத்தே
கெடியானரசமுண்டுசட்டைபோக்கிக்
கிட்டினேமீசானந்துதித்தோமென்று
கெடியாகதவசிருந்துமுத்தனாகி
கிட்டினேனென்றுசொல்லிதக்ஷணாமூர்த்தி
கொடியானபதம்பிடித்துபணிந்திட்டாரே. 86

பணிந்திட்டகொங்கணரைப்பார்த்துநாயன்
பாருலகிற்பிறந்தவனேயிப்படிதானானால்
பணிந்திட்டச்சடம்போக்கிக்கைலாயத்தேக
மானதுதான்வெகுகடினமதிகமெத்த
கணிந்திட்டகனிவாலேவீறத்தாலே
கலங்காமற்சமாதியுற்றுகயிலாயத்திற்
றணிந்திட்டபுத்திகொண்டுயிங்கேவந்தாய்
சாதகமாயொருவரையுங்கண்டிலேனே. 87

கண்டிலேனாச்சரியங்குமாரனேபாரும்
    கலந்தநற்சென்மமிவர்கைலாயமானார்
ஒண்டிலேநாலதுக்குமகத்துவந்தானென்ன
    வுற்றசிவவிந்துவுன்னிலப்படிதானாச்சு
கண்டிலேனிவனைப்போற்சித்தர்காணேன்
    காரணமாயிவனுக்குதீஷிப்பேனான்
பண்டிலேன்கொங்கணனைமயங்கவேண்டாம்
    பரம்பரமாய்வயுதுதந்தமௌனந்தானே. 88

மௌனவித்தைதமூலருக்குமுன்னேசொன்னேன்
    மருவியவர்காலாங்கிக்சதுவேசொன்னார்
மகத்தானபோக க்தானுனக்குச்சொன்னார்
    மவுனவித்தையகண்டாதியறிந்துகொள்ளு
மற்றொன்றுமயக்கமற்றுமௌனத்தார்க்கு
    மௌனவித்தையெய்தாக்காலவனேஞானி
வாய்திறந்துபேசாதேமகாரம்நன்றே. 89

நன்றானமௌனத்திற்கூடிலைசேர
    நல்வினையுந்தீவினையும்நாசமாகும்
நன்றானமௌனமென்றுநினைக்கமுத்தி
    நல்லோர்கள்நினைப்பார்கள்மற்றோர்காணார்
நன்றானமவுனமல்லோரிஷிகள்சித்தர்
    நாலுதிக்குஞ்சொரு மல்லோ
நன்றானமௌனத்தைகண்டாமுன்னே
    நலமாகக்கூப்பிடுதுகண்டிலரே. 90

கண்டிலார்மோனத்திலனேகசித்தி
    காணுமப்பாசொல்லுகிறேநன்றாய்க்கேளு
மண்டிலார்மந்திரங்கள்செபிக்கும்போது
    அப்பனேமௌனமென்றநிலைகேளு

ஒண்டிலாய்வாய்மூடிபேச்சுமற்று
ஒருசேனைசமைத்துண்ணுஒருபோதப்பா
விண்டிலாதென்னேநாஞ்செபித்தாயானால்
விளங்கியதோரேமூலக்ஷமந்திரமுஞ்சித்தே. 91

சித்தாகுஞ்சித்தியுமாமெட்டெட்டுமாடுந்
திறமாகநின்றவர்க்குமந்திரமுஞ்சித்தி
சத்தாகும்வேதத்தில்மந்திரத்தைப்பாவி
பலபலெனப்பேசியவர்செவிப்பார்கோடி
கத்தாதும்நாய்போலேகற்றியென்ன
காசிக்குமாகாதுசித்தியில்லை
முத்தானமௌனம்விட்டால்மௌனம்பாழாச்சி
மோசமிந்தவேதமெல்லாம்பொய்யென்பாரே. 92

பொய்யென்றுயெண்ணியெண்ணியுலகங்கெட்டுப்
போச்சப்பாவதனாலேயுகவேதமாச்சு
கையென்றுயோகத்தில்மௌனமுட்ட
கடுஞ்சித்தியறிவுமட்டுங்கலந்துதாக்கு
கையென்றநிர்த்தமப்பாஆறிற்காணுஞ்
சாதகமாய்மேல்மூலந்தாண்டிக்காணும்
மெய்யென்றுபிடித்தாக்காலவனேயோகி
விரைந்துயிதையறியாட்டால்விருதாமட்டே. 93

விருதன்றோவுலகத்திலாசானென்று
வேடமிட்டுவேஷமிஞ்சிமோடியேற்றி
விருதன்றோபணம்பறித்துப்பிழைப்பாயையோ
வேதாந்தமொன்றுமில்லைச்சாங்கமென்பார்
விருதன்றோகெடுத்துவிட்டாருலகத்தோரை
வேஷமென்றுமயக்காலேமயங்கிப்போனார்
விருதன்றோசீஷருடபாவமெல்லாம்
விளையாட்டுப்போல்வாங்கிவிளைந்திட்டீரே. 94

விழுந்திட்டாரென்றறிந்துகொங்கணரேநீர்தான்
　　வெகுபிள்ளைபெற்றிராமுன்னூறுபிள்ளை
நழுந்திட்டப்பிள்ளையுண்டோநிறநதானுண்டோ
　　நலமாகவும்மைப்போலானுருண்டோ
அழுந்திட்டசமாதியுண்டோதியானமுண்டோ
　　ஆகாதபிள்ளையுண்டோசொல்லுஞ்சொல்லும்
கொழுந்திட்டதேவரீர்கருணையினாலையா
　　கொஞ்சமறபிள்ளையிலேகூடிலேனே. 95

கூடாதநல்லபுத்திசித்தர்வென்றார்
　　கொள்கிறேயவராங்கவெல்லாபூமியிலேதட்டி
நீடாகதண்டனிட்டுஅழைத்துக்கொண்டு
　　நிமிஷத்திற்குகையினுள்ளேநேர்ந்துபோனார்
ஆடானலதுமாட்டுவன்றேசித்தர்
　　ஆனந்தபோகமுண்டஆண்மையாண்மை
ஓடானலதுவொட்டுநிர்ச்குணத்தின்வீதி
　　யொருமனதாய்நின்றுபுத்தியுரைப்புத்தானே. 96

காடென்றகொங்கணர்போல்பிள்ளைபெற்று
　　லதற்குமடாகுட்டென்றார்கைலாயமூர்த்தி
வானென்றசுந்தரானந்தன்விந்து
　　வரவற்றபூரணமேதாபமென்ன
கானென்றவெளிகடக்கஅறிவோம்நாங்கள்
　　கரையற்றபோகத்தைப்பானஞ்செய்வோம்
கோனென்றகைலாயபூரணமேதேவர்
　　கொள்கியதோருற்பணமும்லயமுஞ்சொல்லே. 97

சொல்லுகிறேன்கேளுங்கள்மக்காள்நீங்கள்
　　சுகமாகவாரிதியில்மேகஜலப்போலே
அல்லுகிறதுவலையைப்போற்பிறப்புண்டாச்சு
　　அதுவோங்கும்விபரமென்னசொல்லீரையா

பல்லுகிறசந்திரனும்நீரையப்பாவாங்கு
.பாங்கானரவியங்கேகநன்றாய்ப்பாரு
சொல்லுகிறகெற்பத்தில்விந்துவன்னி
சிந்தூளிபரஞ்சத்திநாற்சின்னமாச்சே. 98

ஆச்சப்பாஜ்ஞனமிந்தப்படியேயாகி
லடங்கிறதுமக்கினியும்ரவிமதியுங்கூடி
வாச்சப்பாசந்திரனிற்கலந்துபோனால்
மாளுகிறவிதமிதுதான்குளிர்ந்துபோகும்
நீச்சப்பாசின்னமொடுபாணம்ரண்டும்
நேராகமேனேன்மணியைத்தொட்டுமீறும்
ஓச்சப்பாலக்கமில்லையெழுவகைத்தோற்ற
முத்தமனேநாலுவகையோனிகாணே. 99

காணிந்தப்படியெல்லாங்கண்டுகொண்டு
கலங்காமலிருக்காடல்யுகமேகோடி
வாணிந்தசாயமட்டேஜெகச்சாலமெல்லாம்
மனந்தானடி அறிவில்வந்ததெல்லாம்போச்சு
ஆனிந்தப்படிநீங்கள்சமாதிகொண்டு
அரைவிட்டால்குளிகையிட்டுவோடிப்பாரு
தோனிந்தப்படிசொன்னேன்முன்னேதூக்கு
சுழல்காற்றுத்தூருமபதுபோல்மவுனமாமே. 100

மௌனமென்றிரேணியாண்டதக்ஷணாமூர்த்தி
மலர்பணிந்துஞானமதுநூறுஞ்சொன்னேன்
வெள்ளமென்றநாதாக்கள்பதத்தைப்போற்றி
வகையோடேநிகண்டாகவாரஞ்சொன்னேன்
மௌனமென்றிரஞானமபொய்யெனறுசொல்லி
வாகானஜெயமண்டிபோட்டேநூற்றில்
மௌனமென்றேசமரசத்தான்மக்காள்மக்காள்
வாகானஞானமுறைமுற்றுங்காணே. 101

பின்ஞானம்-நூறும் முற்றிற்று.

உ

பரமபதி துணை.

காகபுசுண்டர் ஞானம்-௮௰

காப்பு.

சிறந்தபரா பரமாகி யெங்குந்தானாய்த்
தீர்க்கமுடன் ரவிமதியுஞ் சுடர்மூன்றாகிப்
பறந்தருளும் ஐம்பூத மாயைதோன்றிப்
பல்லாயிரங் கோடிஅண்டம் படைத்தபோதம்
வரம்பெருகி யனந்தனந்தம் உயிருமாகி
மதபேத மாகவுந்தான் வடிவைக்காட்டிச்
சமபெரு அண்டத்தி றெழுந்துநின்ற
சச்சிதா னந்தமதைப் பணிதுவோமே. ௧

ஓமென்ற சுழினையடா அண்டவுச்சி
ஓமுடிந்த பட்டணத்துக் கப்பாற்சென்று
நாமென்று சொல்லறது யோகஞானம்
நாட்டுகிறேன் அஞ்சனமுந் திலதப்போக்கும்
வரிமென்ற வயித்தியமும அஷ்டகர்மம்
வாதமென்ற விதைதயெல்லாந் தெளிவதாகக்
காமென்ற பீடமதிற் கண்டுதேறிக்
காட்டுகிறேன் மெஞ்ஞானக் கருவைப்பாரே. ௨

பாரேநீ யோகமென்ற வழியைச்சொல்வேன்
பத்தடா ஐம்புலனைப் பாத்திறுடே
சீரொருவர் தெரியாமல் மதங்கள்பேசித்
திருவான வுச்சியிலே சேராமற்றான்
ஆரொருவன் ஆதாரம வெவ்வேறென்று
அடுக்கடுக்காய்ப் பன்னிரண்டு தலங்களென்று
வீரேதான்பேசியே மெலிந்துபோவான்
விஷமுண்ட அண்டமதை விரும்பிக்காணே. ௩

காணப்பா தலமெல்லாம் அண்டவுச்சி
கமலமடா பதினெட்டாங் கோடிற்சென்று
பூணப்பா மனதையுந் தான் பிசகொட்டாமற்
பூட்டடா பிரமத்திற் புகுநதென்றானும்
வீணப்பா மந்திரங்க ளொன்றுமில்லை
விதியில்லை கதியில்லை கெதியுமில்லை
தோணப்பா தோணுமடா மனதொன்றான
சுத்தமுடன் நீயிருந்து தவஞ்செய்வாயே. 4

செய்யப்பா வாசிமுனி மகனேகேளு
தீர்க்கமுடன் முன்னுரைத்த ஆயிரத்தில்
மெய்யப்பா சரக்குவகை நீத்துவகையெல்லாம்
மேன்மையுடன் கட்டினங்கள் உருக்கினங்கள்
பொய்யப்பா சொல்லவில்லை ரத்னப்போக்கு
புனிதமுடன் சரியாகச் சொல்லிப்போட்டேன்
வையப்பா இந்நூலில் மவுனமெல்லாம்
வகையாகச் சொல்லுகிறேன் பணிந்துகேளே. 5

கேளப்பா கேசரமே அண்டவுச்சி
கெட்டியாய்க் கண்டவர்க்கே மவுனமாகும்
ஆளப்பா பரப்பிரமம் யோகமென்று
அடுக்கையிலே போதமுந்தான் உயரத்தூக்கும்
வாளப்பா கெவுனமணி விந்துநாதம்
வலுத்ததடா கெட்டியாய்த் திரண்டுபோகும்
நாளப்பா அண்டமெல்லாஞ் சுத்தியோடு
நடனமிடுஞ் சிலம்பொலியுங் காணலாமே. 6

காணலாம் பிரமத்தில் நிர்ணயந்தான்
காட்டுகிறேன் வாசிமுனி கருவாய்க்கேளு
பூணலாம் அண்டவுச்சி தன்னில்நின்று
பொரிகளையு முண்டாக்கிப் புவனந்தன்னில்

தோணலாய் உயிர்ப்பயிரைப் படைத்தெந்நாளுந்
தொந்தமென்றும் எழுவகைதோற்றமாகி
ஆணலாம் நாலுகை யோனியாகி
அண்டமடா அனந்தனந்த மானவாறே. 7

வாறான பிரமத்தில் நடுவேமைந்தா
வந்துதடாரவிமதியுஞ் சுடர்மூன்றாகிக்
கூறாகப்பின்னியடா கீழேபாயுங்
கூறுகிறேன் இருகண்ணில் ஒளிவைக்கேளு
வீறான அண்டவுச்சி முனைக்கப்பாதே
வெற்றியுடன் கரமபதுதான் விழுதுபோலே
நேராக அருகண்ணிற் பின்னலாகி
நிச்சயமாயொளிவாகி நிறைந்தார்பாரே. 8

பாரப்பாபரப்பிர்மம் ஒளிவினாலே
பத்தியேநரம்புவழி பாயும்போது
ஆரப்பா இருகண்ணிரு ஒளிவதாகி
அண்டமெல்லாம் யேகமாய்த் தெரியலாச்சு
காரப்பா நரம்பென்ற விழுதுவட்டம்
கபாலத்தில்முக்கூறாய்ச் சுழினையாச்சு
வீரப்பாகாதுக்கும் நாக்குக்குந்தான்
•வெற்றிபெறஇன்னமுந்தா னுரைக்கக்கேளே. 9

கேளப்பாமூலமடா லிங்கந்தன்னில்
கிருபையுடன் தண்டுக்குங் கீழ்மேலாக
நாளப்பா தமர்போலே பிடரிமார்க்கம்
நன்றாக ஓடுமடா நரம்பினூடே
வாளப்பா அண்டமுட்டி வுயரமைந்தா
வலுவாகமுன்சொன்ன நரம்பினூடே
கேளப்பாசேர்ந்துமிகப் பின்னலாகிச்
சிறந்திடவேபுருவமத்தி யாகும்பாரே. 10

பாரடாபுருவமத்தி யேதென்றக்கால்
பரப்பிரமமானதொரு அண்டவுச்சி
நேரடாமுன்சொன் நரம்புமத்தி
நிலைத்துதடாசுழினையொன்று நினைவாய்ப்பாரு
வீரடா அண்ணாக்கில் நேரேமைந்தா
மேவடாமனந்தனையுஞ் செலுத்தும்போது
காரடாசுழிமுனையிலே மனந்தான்பாய்ந்து
கலந்தைந்துபூதமுந்தான் ஒன்றாய்ப்போமே. 11

போமடாமுன்சொன்ன நரம்பினூடே
பூரித்துரவிமதியுஞ் சுடர்தான்மூன்றும்
ஆமடாபின்னியு கீழேபாயும்
அந்தரங்கந்தன்னைப்பார்க்க அடங்கிப்போகும்
காமடாவெளிதிறந்து சொல்லிவிட்டோம்
நாதாந்தபரப்பிரமம் நாட்டந்தன்னை
ஓமடாவுந்துவுந்தன் அண்டவுச்சி
உறுதியுடன்சித்தமதை யூணிப்பாரே. 12

பாரானசாகரமே அண்டவுச்சி
பதினாலுலோகமெல்லாம் பரத்தினூடே
சீராகத்தெரியுமடா மவுனமார்க்கஞ்
சித்தானசித்துவிளை யாடிநிற்கும்
வீரானமந்திரங்கள் பிறந்ததெப்போ
விஷ்ணுவெ.. றும் பிரமனென்றும்வந்ததெப்போ
கூர்ானமுக்குணங்க ளுதித்ததெப்போ
கூறுதஅக்ஷரத்தின் குறியைக்காணே. 13

காணூர்கள்பிரமமுந்தா னுதிக்குமுன்னே
கருணையுள்ளமந்திரங்கள் பிறந்ததுண்டோ

தோணும்மல்மந்திரங்களனந்தங்கற்று
சுழிலைனயென்றழுக்குறுனி தன்னைப்பார்த்து
வீணாகத்திரிந்துமிகப் பித்தர்போலே
வேறோடேகெட்டுழல்வான் விருதாமாடு
கோணாமலண்ணாக்கின் நேரேமைந்தா
குறிப்பறிந்துபார்த்தவர்க்கே முத்திதானே. 14

முத்தியடாமந்திரத்தை நினைக்கும்போது
மோசமடாமனந்தானும் ரெண்டாய்ப்போகும்
சத்தியடாமனந்தானே யேகமாகத்
தனித்திருந்து நித்திரையைத் தள்ளிமைந்தா
புத்தியடாபிரமத்திற் புகுந்துகொண்டாற்
பூலோகமெல்லாந்தான் பணிவாருன்னை
எத்தியேதிரிமர்மற் பிடரிமார்க்கம்
ஏறுகின்றவாசியுந்தான் கற்பந்தானே. 15

தானென்றகற்படா மதுவுண்டாக்கால்
சஞ்சாரசமாதியென் றதற்குப்பேரு
ஊனென்றபசிதீரும் கோபம்போகும்
உதயகிரிதனிற்சென் றாடுருவிப்பார்க்கத்
தேனென்றதிறைமேயூந் தீய்ந்துபோகுந்
திருவாரோஉச்சிநடு சென்றபோது
கோனென்றகருவியெல்லா மொடுங்கிப்போகுங்
கூற்றுவனாட்டமதைப் பார்க்கலாமே. 16

பார்க்கலாம்ஒருகாலை உசரத்தூக்கிப்
பாடுவானொருகாலை தாழவிட்டு
ஏர்க்கையிலேமேல்நோக்குங் காளைகேளு
என்மகனேமதியென்ற ததற்குப்பேரு

காக்கையிலேகீழ்நோக்கும் காலைமைந்தா
கண்டுபொர்ரவியென்று கருதலாகும்
மார்க்கமுடன் அண்டயுச்சிமேலேகாணும்
மகத்தானவன்னியிருப் பிடந்தான்பாரே. 17

பாரப்பாயிதையறியார் சித்தர்கூடிப்
பார்தனிலே அறுபத்துநாலுயோகம்
ஆரப்பாயிருக்குதென்று வெவ்வேறாக
அலைந்தலைந்துகெட்டவர்க ளனந்தங்கோடி
நேரப்பாராஜாங்க யோகம்பார்த்து
நிலையறிந்துகண்டவனே கோடிக்கொன்று
வீரப்பாபேசாமல் மனக்கண்ணாலே
விந்துவடாபாய்ந்ததலம் வெளியைக்காணே. 18

கர்ணாதகாக்ஷி யெல்லாங்கண்டு
காகமடாபுசண்டறென்று பேரும்பெற்றேன்
தோணாமல்நானலைந்து சிறிதுகாலம்
துருவமென்றபிரமத்தை யடுத்துக்கேட்க
காணாமல்அண்டவுச்சி தன்னிலேதான்
நாடியேமனதாலே நாட்டமாகக்
கோணாமல்பாருமென்று எனக்குச்சொல்லக்
கூசாமல்மனதொன்றா யிருத்தினேனே. 19

இருத்தியேஇருதயத்தில் மனதொன்றாக
ஏகபரமாம்பொருளை யிருத்தியொன்றாய்
நிருத்தியேவெகுகோடி காலமட்டும்
நிருவிகற்பசமாதியிலே நிறைந்தெந்நாளும்
பொருந்தியேவாடக்கண் திறந்துபார்க்கப்
பூலோகமெங்குமொன்றாய் நிறைந்தேன்மைந்தா

கருத்தொன்றாய்நிருத்தியடா கபாடம்நீக்கிக்
காரணத்தைக் கண்டுவிளையாடுவாயே. 20

விளையாடிப்போதமய மாகவுந்தான்
வெட்டாதசக்கரத்தின் வெளிச்சம்பார்த்து
நிலையான அண்டமதில் நெற்றிக்கண்ணை
நீயறிந்துஅரவுவிஷந் தன்னைப்போக்கி
அலையாமலாரொருவ ருறவுமற்று
ஆயிழையாள்மோகமதை யற்றுத்தள்ளி
மலையாமற்பிரமமே துணையென்றெண்ணி
மவுனமென்றுமனந்தனையு மடக்கிநில்லே. 21

நில்லென்றால்லோகத்தில் மனிதர்தாமும்
நிஷ்டையுடன்சமாதியுமே பொருந்தாமற்றான்
வல்லவர்போல்வேதங்கள் புராணகாவியங்கள்
மந்திரங்கள்கோடான கோடியென்றும்
சொல்லுவார்கோவிலென்றுந் தீர்த்தமென்றுந்
திருடர்கள்தானலைந்தலைந்து திரிவார்மட்டை
வெல்லவொருபிரமநிலை யறியாமற்றான்
வேரத்தமரம்போலே விழுவார்பாரே. 22

பாரப்பாமலரெடுத்து லிங்கம்வைத்துப்
பார்த்திபலிங்கத்தைப் பணியாமற்றான்
வீரப்பாபுனலாட்டிப் பூசைசெய்து
வீணர்கள்தான்கத்தபம்போற் கதறுவார்கள்
தேரப்பாமலரதனைக் கிள்ளும்போது
செத்ததனம்போலாச்சு தெளிந்துபாரு
காரப்பாமனங்கொண்டு பரத்தினூடே
கண்டவரேகயிலாசத் தேகந்தானே. 23

தானென்றபிர்மத்தை யடுத்திடாமற்
ஞாணியில்தெய்வமடா அனந்தமென்றும்
ஊனென்றகுருவென்றுஞ் சீஷனென்றும்
உதயகிரிபாராத வுலுத்தமாடு
வேனென்றபொய்களவு கொலைகள்செய்து
வேசையர்மேலாசை வைத்துவீணாகிக்
கோனென்றகுருபாதம் அடையமாட்டான்
கூடுவான்நரகமதில் வீழ்வான்பாரே. 24

பாரப்பாநாக்கையுந்தன் அண்ணாக்கேத்திப்
பார்தனிலேபார்த்தவர்க்குப் பலிதமில்லை
ஆரப்பாகண்வெடிக்குந் தேகம்போகும்
அடையோகமென்பார்க ளாகாதப்பா
பாரப்பாமனந்தனையும் அண்ணாக்கில்நேரே
பார்த்துமிகப்பார்க்கையிலே வாசிதானும்
வீரப்பாமேலடங்குங் கீழ்நோக்காது
வெட்டாதசக்கரத்தை யறியலாமே. 25

அறியலாய்மனந்தானே உயிர்தானாகும்
அண்டத்திற்சேர்ந்திடவே ஆகும்முத்தி
பரியேறிச்சவாரியுமே நடத்தலாகும்
பஞ்சமாபாதகங்கள் பறந்தேபோகும்
விரிவானமனந்தனையும் அணுவதாக்கி
விட்டகுறைதொட்டகுறை விதியைப்பார்த்துக்
குறியானகுண்டலியா மண்டவுச்சி
கூறுகிறேன்முக்கோண நிலைபதாமே. 26

தாமென்றஉலகத்தில் மனிதரோடே
சஞ்சாரஞ்செய்யாமற் றனித்துநில்லு

ஓமென்றவுன்மிகுந்து உண்டிடாதே
ஓரமாய்வழுக்கதனை உரைத்திடாதே
ஆமென்றஅட்சரத்தை மறந்திடாதே
ஆயாசமாகவுந்தான் திரிந்திடாதே
காமப்பேய்கொண்டவனோ டிணங்கிடாதே
காரணத்தைக்கண்டுவிளை யாடுவாயே. 27

விளையாடிக்கருகெல்லி யறித்துஉண்ணு
வேகாததலையாகும் விரும்பிப்பாரு
மலையாமல்வெண்சாரை பிடித்தேவுண்ணு
மைந்தனேசாகாக்கா யிதுவேயாகும்
அலைபாமல்ஜோதியுட பாலையுண்ணு
அக்கினியாங்கம்பமடா சுழினையாச்சு
கலைநாலுபோகிறதை செட்டிற்சேரு
கபடற்றதேகமடா கண்டுபாரே. 28

கண்டுகண்டுமௌந்தானே அண்டஞ்செல்லக்
கலைநாலும்எட்டிலையுஞ் சேர்ந்துபோகும்
தண்டுமுண்டுசெய்யாதே மனம்வேறானல்
தற்பரத்தையெப்போதும் அறியமாட்டாய்
தொண்டுசெய்துபெரியோரை யடுத்துமைந்தா
தொழுதுநீயென்னாலை யன்பாய்க்கேளு
விண்டுமவர்சொல்லாட்டா லின்னால்சொல்லும்
வெத்திபெறமனதடக்கம் வைத்துப்பாரே. 29

பாரப்பாவிஞ்சைமந்த்ரம் யென்பார்வீணர்
பயனடாவிஞ்சைகிரி தன்னில்மைந்தா
ஆரப்பாசென்றேறிப் பார்க்கும்போது
அதீதமுள்ளவிஞ்சைமந்த்ரம் அனந்தங்காட்டும்

நேரப்பாசிருஷ்டிப்புச் சங்காரங்கள்
நிமிஷத்திற்செய்திடுவாய் நிலையைக்கண்டால்
வீரப்பாஅமிர்தமுந்தான் குமிழிபாயும்
வேறில்லாக்கனிதனையு முண்கலாமே. 30

உங்கலாம்பிரமத்தி லடங்கும்போது
உறுதியுள்ளஅண்டத்தி லுருகிப்பாயும்
திங்கலாந்தேனுமடா அமிர்தச்சீனி
தித்திப்புப்பாலுடனே திடமாய்மைந்தா
தங்கலாந்தேகமது அழியாமற்றான்
சட்டையுமேகழன்றுமிகத் தற்கம்போலே
பொங்கலாம்மெஞ்ஞானத் தீபத்தாலே
பூரித்துப்பார்த்திடவே புவனமொன்றே. 31

ஒன்றானபிரமமே வெவ்வேறாக
உலகத்திலந்தமடா கூத்துமாச்சு
நன்றாச்சுதீதாச்சு நாலுமாச்சு
ஞாயிறுதிங்களென்று பேருண்டாச்சு
குன்றாச்சுஊர்வனங்க ளனந்தமாச்சு
குருக்களென்றுஞ் சீஷனென்றுங்குறிகளாச்சு
நன்றாச்சுநாதவிந்தும் அடங்கிநின்ற
நாதனையுமோர்மனதாய் நாட்டுவாயே. 32

நாட்டுவார்சித்தரெல்லாம் பேதமாக
நலம்போலேசாஸ்திரங்கள் கட்டினார்கள்
பூட்டியேமனிதரெல்லாம் நூலைப்பார்த்துப்
பூரணமாய்அண்டமதைப் பாராமற்றான்
காட்டிலேதிரிந்தலைந்த மானைப்போலே
கபடமாய்வாய்ஞானம் பேசுவார்கள்
கூட்டிலேஅடைத்திருக்குங் குயிலைப்பாரார்
கூறுதமந்திரத்தின் குறியைப்பாரே. 33

குறியென்றஉலகத்திற் குருக்கள்தானும்
கொடியமறைவேதமெல்லாங் கூர்ந்துபார்த்து
அறியாமற்பிரமத்தைப் பாராமற்றான்
அகந்தையாய்ப்பெரியோரை அழிம்புபேசி
விரிவானவேஷமிட்டுக் காவிபூண்டு
வெரும்பிலுக்காய்அலைந்திடுவான்நாயைப்போலே
பரியாசமாகவுந்தான் தண்டேந்திப்
பார்தனிலேகுறடிட்டு நடப்பான்பாரே. 34

பாரப்பாசீஷர்களை யழைப்பான்பாவி
பணம்பறிக்கவுபதேசம் பகர்வோமென்பான்
ஆரப்பாபிர்மநிலை காட்டாமற்றான்
ஆகாசப்பொய்களையு மவன்தான்சொல்வான்
நேரப்பாசீஷனுக்குப் பாவமாச்சு
நிஷ்டைசொல்லுங் குருக்களுக்குத்தோஷமாச்சு
வீரப்பா அடங்குகின்ற இடத்தைப்பாரான்
விதிபோலேமுடிந்ததென்று விளம்புவானே. 35

வானென்றஅண்டமதிற் சென்றுபுக்கி
வடவரையிலுச்சிநடு தீபங்கண்டு
தேனென்றசுத்தசிவ கங்கைதன்னில்
தீர்த்தங்களாடி திரு நாமமிட்டுக்
கோனென்றமனதன்பாய் மலராய்ச்சாத்திக்
கொடியமறைவேதமுந்தா னடக்கங்கண்டு
தேனென்றசித்தமே புத்தியாகத்
தெளிந்தவரேமெஞ்ஞானி யாகும்பாரே. 36

பாரண்டமதையொன்றாய்ப் பார்க்கும்போது
பலபேதமாயையெல்லா மருண்டேயோடுஞ்
சீரண்டமகிலாண்ட பிர்மாண்டங்கள்
ஜெனித்தவையையுயிர்தோறும் நீயாய்நிற்பாய்

காரண்டலாடக்கண் திறந்தபோது
  கண்கொளாக்காட்சியெல்லாங் கலந்தேகாட்டும்
வீரகண்டமேலவட்டம் விரிந்தசக்கரம்
  மெஞ்ஞான வெளியதனிற் றொடர்ந்துகூடே. 37

கூடுவது தன்குணமறிந்து மனமொன்றாகக்
  கூத்தாடித்திரியாமற் கெவுனமாகப்
பாடுவதுபலநூலைப் படித்திடாமற்
  பராபரத்தினுச்சிநடு வெளியேசென்று
ஆடுவது தொந்தோமென்றாட்டைப்பார்த்து
  அடுக்கடுக்காயாயிரத்தெட்டிதழுங்கண்டு
வாடுகிறபயிர்களுக்கு மழைபெய்தாற்போல்
  வர்டா தீபமதை யறிந்துபாரே. 38

பாரென்றுமெஞ்ஞானம் பகர்ந்துசொன்னீர்
  பராபரத்துநிலையினுட பாதஞ்சொன்னீர்
வீரென்றஅண்டமெல்லாம் பாழதாகி
  விராட்பிர்மமொண்டியா யிருக்கும்போது
சீரென்றவுயிர்களெல்லா மிருப்பதெங்கே
  சித்தருடன் திரிமூர்த்தி யிருப்பதெங்கே
கூரென்றுநீர்தங்கு மிடந்தானெங்கே
  குருபரனேஇந்தவகை கூறுவாயே. 39

கூறுகிறேனென்மகனே வாசிநாதா
  குணமானயீஸ்பரனார் சபையிற்கூடி
தேறுகின்றபிரளய காலந்தன்னிற்
  சீவஜெந்துசித்தருடன் முனிவர்தானும்
வீருடனேயெங்கேதா னிருப்பாரென்று
  விமலருந்தான்விஷ்ணுவையும் விபரங்கேட்கக்
கார்மேகமேனியனுங் கடவுளரைநோக்கிக்
  கண்டுமிகப்பணிந்துமினிக் கருதுவாறே. 40

கருதுவான் ஆலிலைமேற் றுயில்வேன்யானுங்
கனமானஜீவஜெந்து அனந்தசித்தர்
உறுதியாயெந்தனுட கமலந்தன்னில்
ஒடுங்குவாராதரித்து மிகவேநிற்பேன்
வருதியாய்ப்புசண்டருந்தான் வருவாரென்று
வலவனுடன்மால்தானும் உரைக்கும்போது
சுருதியாயெனையழைத்தே மென்றான்கேட்கச்
சூத்திரமாய்நல்வசனம் மொழிந்தேன்பாரே. 41

பாரென்றுசிவனுடைய முகத்தைப்பார்த்துப்
பல்லாயிரங்கோடியண்ட வுயிர்களெல்லாஞ்
சீரென்றசித்தருடன் முனிவர்தானுந்
திருமாலும் ஆலிலைமேற் றுயிலும்போது
கூறென்றவுந்தியுட கமலந்தன்னிற்
கூடியேஅடைந்திருப்பார் குணமதாக
வீரென்றஐவரையுந் தாண்டியப்பால்
வெகுசுருக்காய்வீதிவழி வந்தேன்பாரே. 42

பாரப்பாஆகாசஞ் செல்லும்போது
பாலகனேசக்கரந்தான்சுத்தியாட
ஆரப்பாசக்கரத்தைப் பிசகொட்டாமல்
அதின்பேரிலேறியுந்தா னப்பாற்சென்றேன்
நேரப்பாநெடுந்தூரம் போகும்போது
நிச்சயமாய்க்கர்த்தபத்தின் நிலைமைக்கண்டேன்
வீரப்பாஅக்கினிபோல் படர்ந்துநிற்கும்
வெளியொன்றுந்தெரியாமலிருக்குந்தானே. 43

இருக்குமடாயெங்குமொன்றுப் அக்கினியின்பம்
என்மகனேகாமபத்தில் நடுவேமைந்தா
உருக்கமுடன்பெண்ணரசி யொன்றிநிற்பான்
ஓகோகோஅவள்முகத்தைப் பார்க்கும்போது

பெருக்கமுடன்முன்பார்த்தாற் புருஷரூபம்
. புத்திரனைபின்பார்த்தாற் பெண்போல்ரூபம்
மருக்கமுடன்யான்றானும் கம்பத்தூடே
வஸ்தோதிடாவஸ்தாகஇருந்தேன்பாரே. 44

பாரப்பாஇப்படியே அனந்தகாலம்
பராபரத்தினூடேதா னிருந்துவாழ்ந்தேன்
ஆரப்பாபிரமமுந்தான் மனதிரங்கி
அண்டமதைப்படைப்பதற்கு அருளும்போது
வீரப்பாகம்பத்தி லிருந்தபெண்ணும்
விமலரென்றும் உமையென்னும்மிகவேதோன்றி
சீரப்பாசக்கரத்தி லிருந்துகொண்டு
திருமாலைத்தானழைக்கத்தீர்க்கம்பாரே. 45

பாரப்பாதிருமாலுங் கமலந்தன்னில்
பல்லாயிரங்கோடிஅண்ட வுயிர்களெல்லாம்
நேரப்பாதானழைத்து முக்குணத்தைக்காட்டி
நிலையானசமுத்திரங்கள் பூமிதானும்
சேரப்பாரவியோடு திங்கள்தானுஞ்
சிறந்தெழுந்தமலைகாடுஜீவஜெந்து
வீரப்பாநவக்கிரகம் நட்சத்திரங்கள்
வெற்றியுடன்நால்வேதம்வகுத்தவாறே. 46

வாறானதெய்வமென்றும் பூதமென்றும்
வையகத்தில்வானமென்றும் பூமியென்றும்
கூறுகமகாமேரு கிரிகளென்றும்
கோவிலென்றுந் தீர்த்தமென்றுங்குளமுண்டாக்கி
நேராகப்பிரமமேசாட்சியாக
நிலத்தெங்கும்உயிர்தோறும்நிறைந்தாரையா
வீராகத்திரியாமல் மவுனம்பார்த்து
வெற்றிபெறயின்னமுந்தான்உரைக்கக்கேளே. 47

கேளப்பாயிப்படியே பிரளயந்தான்
கிருபையுடன் ஏழுலட்சங்கோடிபானால்
ஆளப்பா அரியயனும் ஜீவஜெந்து
அகண்டமென்ற பிரமத்திலடங்குவார்கள்
நாளப்பாநானுமந்தப் படியேசொல்வேன்
நலமாகஇன்னமுந்தான் அகண்டமானால்
வாளப்பாகாகமென்ற ரூபமானேன்
வடவரையின்கூடுதொத்தி யிருந்தேன்பாரே.()

பாரடா இப்படியே யுகங்கள்தோறும்
பார்தனிலேநானிருந்தேன் எத்தனையோகோடி
ஆரடாவெனைப்போலே அறிவாருண்டோ
ஆதியென்றசித்தருக்கும் ஆதியானேன்
வீரடாவிமலரிடஞ் செல்லும்போது
வெற்றியுடனெனையெடுத்து முத்தமிட்டார்
காரடாகைலைமே லிருக்கச்சொன்னார்
காகமென்றரூபமா யிருந்தேன்பாரே. 49

காகமென்றரூபமா யிருந்துகொண்டு
காரணங்களத்தனையும் கருவாய்ப்பார்த்து
வேகமுடன்வெளியோட்ட நிலையாய்ப்பார்க்க
வெகுதூரம்சுத்தியின்னம் விபரங்காணேன்
மோகமுடன்பரந்தமனம் அனுவதாக்கி
மூர்க்கமுடன்பரவெளியை மனவெளியைதாக்க
நாகரிகமாகவுந்தா னண்டமேவி
நடுவணையமுச்சிநடு மத்திதானே. 50

பத்தியமானதிலே முளைத்தலிங்கம்
மகாமேருவுச்சியிலே வளர்ந்தலிங்கம்
சத்தியும்ஆவிடையு மானலிங்கம்
சஞ்சாரசமாதியிலே நிறைந்தலிங்கம்

புத்தியால்மனதொன்றாய்ப் புகழ்ந்தலிங்கம்
பூவருந்தன்னிலேதான் முளைத்தலிங்கம்
எத்திசையும்புகழ்ந்திடவே வந்தலிங்கம்
ஏகபரமானதொரு லிங்கந்தானே. 51

தானென்றசிறுவீட்டுக் குள்ளேசென்று
கலைமாறிப்போறதொரு வாசியைத்தான்
கோனென்றபிரமத்தி லடக்கமாகக்
குறித்திடுவாய்மனதடங்கிக் கூர்ந்துபார்க்க
வானென்றிப்போகுமடா பாணம்பாணம்
மைந்தனேஉண்டிடவே பசிதான்தீரும்
தேனென்றசட்டைகளுங் கழன்றுபோகும்
தேவனுக்குந்தேவனா யிருக்கலாமே. 52

இருக்கலாம்யெக்கெந்த யுகங்களுக்கும்
ஏகாந்தமானதொரு பிரமந்தன்னில்
பெருக்கவேமனதடங்கி மவுனம்பெத்துப்
பேராசையாகவுந்தான் பிரமத்துள்ளே
குருக்களைப்போல்,அரசனைப்போ லிந்திரனைப்போல்
குணமானமூவரைப்போற் பிரமத்தூடே
திருக்கெடுத்துயெங்கெந்த அவதாரங்கள்
செய்திடலாம்நிலைபறிந்த பெரியோர்தானே. ()

தானவனேயென்குருவே புசுண்டநாதா
தரணியில்ஜீவஜெந்து அகண்டமெல்லாம்
தோணவேமும்மூர்த்தி யிவர்கள்தானுந்
துடியாகப்பிரமத்தி லடங்குமென்றீர்
கோணவேபின்னுந்தா னகண்டமெல்லாங்
குறிப்புடனேபடைக்கும்வகை குறியுஞ்சொன் [னீர்
தானவனேமதுவுண்கச் சொன்னீரையா
சத்தியமாயதின்விபரஞ் சாற்றுவீரே. 54

சாற்றுகிறேனென்மகனே வாசிநாதா
சத்தியமாயண்டத்திற் செல்லும்போது
போற்றுகிற அக்கினியும் பிரவேசித்துப்
புலன்களைந்துஞ்சேர்ந்ததினாற் போதமாகும்
மாற்றிலையும்அதிகமடா வுன்றன்தேகம்
மைந்தனே அபுரூப மாகுமப்பா
வாற்றியேநிழற்சாய்கை யற்றுப்போகும்
வலுத்துதடாகாயசித்தி யாச்சுபாரே. 55

ஆச்சென்றுஅபுரூப மானபோது
அட்டமாசித்திவகை யெட்டுமாடும்
மூச்சொன்றிளடங்கிப்போம் பிரமத்தூடே
முன்னணியும்பின்னணியு மொன்றாய்ப்போகும்
காச்சென்றுகாச்சிவிடு மவுனங்கண்டு
கலைமாறிநின்றிடமே கனகபீடம்
நீச்சொன்றுமில்லையடா வுன்னைக்கண்டால்
நிலைத்துதடாசமாதியென்ற மார்க்கந்தானே.

மார்க்கமுடன்தவசுநிலை யறியாமற்றான்
மனந்தளர்ந்துதிரிவார்கள் லோகத்துள்ளே
ஏர்க்கமுடன்முப்பத்துக்குள் மவுனங்கண்டு
இளவயசாயிருப்பார்கள் பெரியோர்மைந்தா
காக்கவேசற்குருவின் பாதங்கண்டு
கருணையுடன்அவர்பதத்தை வணங்கிப்போற்றி
தீர்க்கமுடன்பிரமத்தில் மனந்தான்செல்ல
ஜீவனுக்குச்சீவனா யிருக்கலாமே. 57

இருக்கலாஞ்செடிபூடு கற்பமில்லை
யேகாந்தமானதொரு பிரமந்தன்னில்

உருக்கியேமனதடங்கிப் பார்க்கும்போது
உத்தமனேகாயமது வுறுதியாச்சு
மருக்கியேதிரியாமல் மதம்பேசாமல்
வண்டரோடிணங்கியடா மருவிடாமல்
குருக்கியேகோளரிடஞ் சேர்ந்திடாமற்
குருபாதங்கண்டுமிகப் பணிந்துபாரே. 58

பாரென்றுசொன்னமெய்ஞ் ஞானமூர்த்தி
பரத்தினுடஅடிமுடியும் பகர்ந்துசொல்லும்
சீரென்றுசொற்பனங்க ளதிகமாகத்
திடப்படவேகாணுமிடந் தீர்க்கஞ்சொல்லும்
காரென்றுமணம்பிறந்த இடந்தான்சொல்லும்
கதிர்மதியுஞ்சுத்திவரு மார்க்கஞ்சொல்லும்
வீரென்றுஉயிர்பிறந்த யிடந்தான்சொல்லும்
வெற்றிபெறஇந்தவகை விளம்புவாயே. 59

வாயாலேசொல்லுகிறேன் மகனேகேளு
மகத்தானபிரமத்தின் பாதந்தன்னில்
ஓயாமல்முன்சொன்ன நரம்புபின்னி
உத்தமனேரவிமதியுஞ் சத்தியாடும்
மாயமடாவாசியுந்தான் நடுவேநின்று
மார்க்கமுடன்சுழுத்தியிடம்மனந்தான்சென்று
காயானசுழுத்தியென் றிதற்குநாமம் [ல்
கண்டுபார்கண்கொள்ளாப் போதந்தானே. 60

தானென்றபலரூப மதிகங்காணுந்
தன்னுடையதேவதைபோற் பின்னும்காட்டும்
ஊனென்றபெண்ணைப்போ லுன்னைக்கூடி
உத்தமனைசையோகஞ் செய்தாப்போலே

தேனென்றுமயக்கிவைக்குஞ் சுழுத்தியாலே
தித்திப்புப்போலேதான் ருசினைகாட்டுங்
கோனென்றகுருவருளைப் பணிந்துகொண்டு
குறிப்பறிந்துபூரணத்தின் நிலையைப்பாரே. 61

நிலைபாதசமுத்திரமே சுழுத்தியாச்சு
நின்றிலங்கும்வாசியைத்தான் வெளியிற்சேரு
தலையானஅக்கினியை அப்படியேசேரு
சத்தியமாய்ரவிமதியைக் கூடச்சேர்த்து
மலையாமல்யேகபரா பரனேயென்ற
மனதடங்கிஅண்ட வுச்சிதனைப்பார்க்க
அலைபாதுமனந்தானும் மாத்திற்சென்று
ஆகாசவீதிவழி யாட்டும்பாரே. 62

ஆட்டுமடா ஆசையற்று ரோஷமற்று
அன்னைசுற்றந்தனைமறந்து அகண்டமேவும்
பூட்டுமடாநவத்துவா ரங்கள்தன்னைப்
பொறிகளைந்துஞ்சேருமடா புனிதமாகக்
காட்டிலென்னநாட்டிலென்ன மவுனங்கண்டால்
காமதேன்கற்பகமும் உனக்கேசித்தி
வீட்டிலேதீபம்வைத்தாற் பிரகாசிக்கும்
வெளியேறினாற்றீபம் விழலாய்ப்போமே 63

போமடாபுத்திசித்தம் என்றதாக்கிப்
புசுண்டனென்றுபேரெடுத்துப் புவனந்தன்னில்
ஆமடாவடகாளி மைந்தனென்றும்
அருமையாங்கன்னியுட மைந்தனென்றும்
நாமடாஐந்துபேர் தன்னிலேதான்
நாட்டமுடன்முன்பிறந்தேன் நான்தாமைந்தா

வாமடாசாண்முழுத்திற் காட்சிபார்க்க
வஸ்துவுந்தான்யீஸ்பரனு மென்றார்பாமே. 65

பாரப்பாயென்குலந்தான் சொல்லக்கேளு
பார்தனிலேபிரமனுட விந்துவாலே
ஆரப்பாபிறந்துவிட்டோம் ஐந்துபேரும்
ஆகாசஅண்டமதை யடுத்தேசென்றேன்
நேரப்பாவெகுகோடி காலம்வாழ்ந்தேன்
நிஷ்டையிலேமனந்தவறு திருந்துகொண்டேன்
வீரப்பாபேசுவர்கள் லோகத்தோர்கள்
விட்டவிடந்தொட்டவிடம் விரும்பிக்காணே. ()

காணப்பாஜாதிகுலம் மெங்கட்கில்லை
கருத்துடனேயென்குலஞ்சுக் குலந்தான்மைந்
தோணப்பாதோணுமற் சாதிபேதஞ் [தா
சொல்லுவான்சுருக்காகச் சுருண்டுபோவான்
வீணப்பாபிரமத்தில் ஆதிகாலம்
வீரமுடன்பிறந்ததடா உயிர்களெல்லாம்
நானப்பாஅப்படியே உதித்தேன்முன்னே
நன்றாகவுதித்தவிடம் நாடினேனே. 66

நாடியேவுதித்தயிடம் அறியாத்தோஷம்
நடுவாகவந்தயிடம் பாராத்தோஷம்
கூடியேபிறந்தயிடங் காணாத்தோஷம்
குருபாலைநிந்தனைகள் செய்ததோஷம்
வாடியேவஸ்தோடே சேராத்தோஷம்
வம்பரோடிணங்கியே திரிந்ததோஷம்
கூடியேவுறவற்று யிருந்ததோஷம்
கும்பிடுங்கற்சிப்பியையும் அறியான்பாவி. 67

அறிபார்தபாவிக்கு ஞானமேது
ஆறுமுகன்சொன்னதொரு நூலைப்பாரு
பரிபாஷைபாகவுந்தான் சொல்லவில்லை
பராக்கிரமம்பென்னுடைய நூல்பாரு
விரிவாகச்சித்தர்சொன்ன நூலையெல்லாம்
வீணாகமறைப்பாகிச் சொன்னாரையா
குறியான அண்டமதை யொளித்தேவிட்டார்
கூறினார்வெவ்வேறாய்க் குற்றந்தானே. 68

குற்றமதுவையாமல் அண்டத்தேகிக்
கூறுதமந்திரத்தின் குறியைப்பார்த்துச்
சித்தமொன்றாய்அந்திசந்தி யுச்சிக்காலம்
தேவனுக்கும்பூசைசெய்து தெளிவுபெற்று
குற்றமதுவையாமல் மனதன்பாலே
குருபரனைநோக்கியடா தவமேசெய்து
பற்றாசைவைத்துமிகப் பார்க்கும்போது
பராபரையுங்கைவசமா யாகுவாளே. 69

ஆகுவாளந்திசந்தி யுச்சியென்றால்
அப்பனேரவிமதியுஞ் சுடர்மூன்றாகும்
ஏகுவாய்மூன்றுமொன்றாய்ப் பின்னலாகி
யிருந்திடமேபிர்மாண்ட நிலையதாகும்
போகுமேநீசெய்த கர்மமெல்லாம்
புவனைதிரிசூலிபுட கிருபையாலே
வாகுமேவழியோடே சேர்த்தாயானால்
வாணியுந்தான்நாவில்நடஞ்செய்வாள்பாரே. 70

பாரடாவாணியுந்தா னிருந்தவீடு
பாலகனேசொல்லுகிறேன் பண்பாய்க்கேளு

ஆரடா அண்ணாக்கின் கொடியினூடே
அண்டத்தைப்பத்தியடா விழுதுபோலே
நேரடாநரம்பதுதான் பொருந்திநிற்கும்
நிலைபான அக்கினியின் மத்திதன்னில்
வீரடா அதுவழியே அருள்தான்பாய்ந்து
விண்ணுலகில்வேணதமிழ் சொல்லுவானே. 71

சொல்லுவாளனந்தமறை வேதமெல்லாம்
சுருதியடாமுடிந்தெழுந்த பிர்மத்தாலே
வெல்லுவார்தனைபறிந்த பெரியோரெல்லாம்
வீராண்மைபேசார்கள் மவுனமாகி
அல்லுபகலற்றதொரு பிரமந்தன்னை
ஆரறிவாருலகத்தி லையாபாரு
சொல்லடங்குமிடந்தனையுங் கண்டுதேறி
சூஸ்திரமாய்க்கல்லுப்பு வாங்குவாங்கே. 72

வாங்கியேஅண்டத்தில் மூளைசேர்த்து
வளமாகவப்பினையும் பிசறுமைந்தா
தாங்கியேதிருதுகள்ளிக் குள்ளேவைத்துத்
தமர்வாயைத்தான்மூடிச் சாபந்தீர்த்து
ஓங்கியேதிங்களுந்தான் மூன்றுசென்றால்
உத்தமனேகள்ளியைத்தான் தரித்துக்கொண்டு
சாங்கமினிச்செப்பாமற் சீலைமண்ணுஞ்
சத்தியமாய்ச்செய்தபின்பு உலர்த்திபாரே. 73

பாரப்பாவுலர்ந்தபின்பு எடுத்துமைந்தா
பக்தியுடன்கெஜபுடத்திற் போட்டுப்பாரு
ஆரப்பா ஆரவைத்து யெடுக்கும்போது
அருணனிறம்போலிருக்குஞ் செந்தூரந்தான்

நேரப்பாஅணுப்போலே சரக்குக்கெல்லாம்
நிச்சயமாய்ப்பூசியுந்தான் புடத்திற்போடு
வீரப்பாநீருமடா நவலோகந்தான் (ச்சே.
வேதையென்றவித்தையெல்லாங் கைக்குள்ளா

ஆச்சடாவுடம்பிலுள்ள வியாதியெல்லாம்
அணுப்போலவுண்டிடவே பறந்துபோகும்
வாச்சடாதேகசித்தி யதிகமாச்சு
வஸ்துடனேகூடியுந்தான் வாழலாச்சு
மூச்சடாதலைப்பிண்டங் கொடியுமாவும்
மூத்தியடாவாங்கியபின் தயிலம்வாங்கி
ஏச்சடாதரியாமல் சூடன்சேர்த்து
இன்பமுடன்வஸ்துவையும் பூசைசெய்யே. 75

பூசையடாசெய்துமிகப் பதனம்பண்ணு
புத்திரனேபோய்ப்பீர்க்குத் தயிலம்வாங்கு
ஆசைபுல்லாமணக்கதுவு மதுபோல்வாங்கு
அப்பனேகேசரியின் நெய்யுஞ்சேர்த்து
ஓசையுடன்தேவாங்கு பித்தஞ்சேர்த்து
வுத்தமனேதலைப்பிண்டந் தயிலஞ்சேர்த்து
பாசைபடாபேசாம லரைத்துமைந்தா
பாலகனேசவாதோடு புனுகுசேரே. 76

சேரடாஅணுப்போலே புருவத்திட்டு
தீர்க்கமுடன்நீ காணுஞ் செல்லும்போது
ஆரடாவுன்னைத்தான் ஆர்தான்காண்பார்
அண்டமெனும்பிரமத்தி னருளினாலே
நேரடாதிகைப்பூண்டு கொண்டுவந்து
நிச்சயமாய்மூலிசொன்ன தயிலம்விட்டு

வீரடாஅரைத்தபின்பு புருவத்திட்டால்
வேசையர்கள்வெகுபேர்கள் மயங்குவாரே. 77

வாரானதில்லைப்பால் கருந்துளசி
வவ்வாலின்பித்துடனே மந்திப்பிந்துஞ்
சீராகமுன்சொன்ன கருவைவிட்டு
திடமாகஅரைத்திடுவாய் சாமமென்று
நேராகஅரைத்ததையு மெடுத்துமைந்தா
நிட்சயமாய்ப்புருவத்தி லிட்டுப்பார்க்க
வீராகப்பாதாளம்பிளந்தேதேயோடும்
வேதாந்தசாரணையை விரும்பிப்பாரே. 78

பாரடாபரப்பிரமத்தூடேசென்று
பரிதிமதிஅக்கினியும் மூன்றுமொன்றாய்
நேரடாஆதியுந்தான் எதிரிதன்னை
நிச்சயமாய்ப்பார்த்திடவே நீறிப்போவான்
கூரடாகோடான கோடிசித்து
குறித்திடவேஆகுமடா பிரமத்தாலே
வீரடாயிந்நூலைக் கொடுத்திடாதே
வெற்றியுடன்யெண்பதுமே விளங்கமுற்றே. 79

காகபுசுண்டர் ஞானம்-௮0.

முற்றுப்பெற்றது.

உ

பரமபதிதுணை.

காகபுசுண்டர் உபநிடம்.

முப்பத்தொன்று.

காப்பு.

ஆதியெனையீன்றகுரு பாதங்காப்பு
அத்துவிதப்பிரணவத்தி னருளைகாப்பு
நீதியாமாரூட ஞானம்பெற்ற
நிர்மலமாய்சித்தருடபாதங்காப்பு
சோதியெனப்பாடிவைத்தேன் முப்பத்தொன்றிற்
றுதியாதீதப்பொருளைத் துலக்கமாகத்
தீதில்லாக்குணமுடைய பிள்ளையானார்
சிவேசவைக்கியமது தெரியுந்தானே. 1

தானென்றகுருவினுப தேசத்தாலே
தனிகரணவித்தையெல்லாந்தவறுண்டேபோம்
வானென்றசுவானுபவ ஞானமுண்டாம்
மவுனயோகத்தின் வாழ்க்கையெய்தும்
நானென்றபிரபஞ்ச வுற்பத்திற்கு
நாதாதீதக்கியானம் நன்றாயெய்தும்
கோனென்றகொங்கணவர் தனக்குச்சொன்ன
குறிப்பானயோமமிதைக் கூர்ந்துபாரே. 2

பாருமேபிரமநிலை யார்தான்சொல்வார்
பதமில்லையாதெனினும் பவயமில்லை
சேருமிந்தப்பிரமாணந் தானுணர்ந்து
தெரிவிக்கப்படாதருளிற் சிவசொரூபம்

ஊருகின்றகாலத்ர யங்களாலே
உபாதிக்கப்பரதத்வ முற்பத்திக்கும்
சாருமிந்தவுபாதான் காரணத்தின்
சம்பந்தமில்லாத சாட்சிதானே. 2

சாட்சிசத்தாயதீதகுணு தீதமாகிச்
சட்சுகனத்தாலறியத்தகாது யாதும்
சாட்சியதேயேதுசா தனமுந்தள்ளிச்
சகலவிந்திரியாமிபதாய்ச் சர்வபூத
சாட்சியினையிவ்வளவவ் வளவாமென்று
தனைக்குடித்துநிர்ணயிக்கத் தகாதுயோகம்
சாட்சியதேஞாதுர்ஞான ஞேயரூபஞ்
சத்தாதிப்ரமாதிகளைத்தானேசெல்வாம். 3

சொல்லுமெனக்கேட்டுகெந்த மாணுக்காவுன்
தூலகாரணப்பிரமந் துரியாதீதாம்
அல்லுமல்லபகலுமல்ல நிஷ்களங்கம்
ஹமசோகம்அசபாபந் திரத்தியானம்
சொல்லுமவனேநானென் றபிமானிக்கு
சித்தவிர்த்திநிரோதகாமம் யோகத்தாலே
வெல்லறிஞர்பல்போகவிர்த்தியோக
விவேகதியாறுதிகளே மேலாம்பிர்மம். 4

பிர்மசுரோத்ராதிஞானேந் திரியமைந்தும்
பேசுதர்க்கவாக்காதியிந்திரியமைந்தும்
கர்மமெனுஞ்சத்திதாதி விடயமைந்தும்
காரணுதிநான்குபிரா ணுதியைந்தும்
வர்மமிவையிருபத்தி ஞன்குக்கூடி
வருந்தூலசரீரவிராட்டெனவேசொல்லும்
தர்மவத்தைசாக்கிரபி மானிவிஸ்வன்
தனக்குவமைபாங்கிரியாசத்திதானே. 5

சத்தியுடன்ரசோகுணந்தான் நேத்ரத்தானம்
தனிப்போகமிதனோடே சார்ந்தவான்மா
வெற்றிபெறும்ஜீவாத்யா அசுரமாச்சு
விவகாரஜீவனிதை விராட்டென்பார்கள்
வித்தையெனும்வித்தைதயிலே பிரதிவிம்பம்
விசாலமிந்தத்தூலரூக்க விருத்தியாச்சு
தத்தொமசிவாங்கிச்சோ தனையினாலே
தான்கடந்துசூட்சமத்திற் சார்ந்துகொள்ளே.

கொள்ளடாஞானேந்திரி யங்களைந்து
கூடினதுகர்மேந்திரி யங்களைந்து
தள்ளடாபிராணாதி வாயுவைந்து
சர்வானமனல்புத்தி தானிரண்டு
விள்ளடாபதினேழு தத்துவங்கள்
விர்த்தியெனுஞ்சூட்சுமமா மிரண்யகர்ப்பத்
துள்ளடாஅபிமானி சைதன்யனாகுஞ்
சொற்பனாவத்தைதயெனச் சொல்லுவாரே. 7

ஆலானசாத்மிகமா மகங்காரத்துள்
நழைந்தவிச்சாதியல்லோ நணிக்கமாச்சு
காலானகண்டமெனுந் தானத்துள்ளே
கலந்திருக்கும்போகமல்லோ யிச்சாபோகம்
நாலானஆன்மாவே அந்திரான்மா
ஞாயமிந்தப்படியறிந்தா லுகாரமாச்சு
ஆலமெனுஞ்சூட்சமதைக் கடந்துநின்று
சொல்லுகிறேன்காரணத்தின் சுயம்புதானே. 8

தானல்யாக்கிருதமெனுஞ் சரீரத்துக்குத்
தானமதேஇருதயமா ஞானசக்தி
வானமதேஅகங்காரம் வித்தையாகில்
வருஞ்சுழுத்தியபிமானி பிராகயனாகும்
கேனிதற்குஆனந்த போகமாகுங்
கூடுகின்றஆன்மாவே பரமான்மாவாம்
கானிதற்குபரமான்மா ஜீவனிந்தக்
காரணமேமகாரமெனக் கண்டுகொள்ளே. 9

கொள்ளுமந்தப்பொருள்தானே சத்துமல்ல
கூறுனவசத்துமல்ல கூர்மையல்ல
உள்ளுநிராமயமல்ல சர்வமயமல்ல
உற்றுப்பார்மூன்றெழுத்தும் ஏகமாச்சு
தள்ளுகின்றபொருளல்ல தள்ளாதல்ல
தானந்தபிரமறக்யஞ் சந்தானமுத்தி
விள்ளுமந்தப்படிதானே வேதபாடம்
விசாரணையாற்சமாதிசெய்ய விட்டுப்போமே. ()

விட்டுப்போம்சமுசார வியாபாரங்கள்
விடயசுகஇச்சைவைத்தால் விவேகம்போச்சு
தொட்டுவிடலாகாது ஞானமார்க்கம்
துரியநிலைநன்கத் தோன்றுமட்டும்
எட்டுகின்றபரியந்தம் கருதிவாக்யத்
தெண்ணமெனுந்தியானத்தா லெய்தும்முத்தி
தட்டுகின்றஜீவத்வம் தனக்கில்லாமற்
சமாதியுற்றால்நாமதுவே சாட்சாத்காரம். 11

சாட்சாதிபிரமத்தால் பூர்வகர்மம்
தத்வாதிவாசனைகள் தானேபோகும்
சூட்சாதிபிராந்தியெனும் மாயாசத்தி
தொடராமற்சேர்வதுவே சொரூபஞானம்
தீட்சையினாற்பிரமாண்டம் பிண்டாண்டங்கள்
திருஷ்டிமுதல்யாவற்றுந் தெரியும்நன்றாய்
காட்சியென்னவேகவஸ்து வொன்றல்லாமற்
காண்பதெல்லாம்வியர்த்தமெனக் கண்டுகொள்ளே

கண்டுபார்மூடமெனி மஞ்ஞானிக்குக்
காணாதுஜீவான்மா பரமான்மாவும்
தொண்டுபண்டுகுருமுகத்தில் விசேடமாகச்
சுருதியெனும்வேதாந்த மப்பியாசித்து
உண்டுமெனிபவஞானஞ் சிர்த்யகிர்த்தியம்
யோகிதனக்கேதேனுந் தேவையில்லை
விண்டுசொல்வோம்நதிகடக்க வோடமல்லால்
விஷயத்தாற்சாதனங்கள் வீணென்றே. 13

வீணல்லோசாதனப் பிரயோசனங்கள்
மெய்ஞ்ஞானஅபரோட்சம் வந்தபோது
வீணல்லோ வேதபாடத்தினிச்சை
வியோமபரிபூரணத்தில் மேவிநின்றால்
வீணல்லோஇருட்டறையிற் பொருளைக்காண
விளக்கதனைமறந்தவன்கை விடுதல்போலும்
வீணல்லோ தியானத்தா ரனைவரெல்லாம்
மெய்பிரகாசிக்கும்வரை வேணுந்தானே. 14

வேணுமென்றாலெள்ளுக்கு லெண்ணெய்போலும்
    வித்தினிடத்தடங்கினின்ற விருட்சம்போலும்
காணுநின்றபூவிலுறை வாசம்போலும்
    கன்றாவின்பாலினுள்ள நெய்யைப்போலும்
தோணுமயில்முட்டையின்மேல் வர்ணம்போலும்
    தூலமதிற்சூட்சமந்தான் துலங்கிநிற்கும்
ஆணுவத்தாற்சாதனத்தைமறந்தாயானால்
    அபரோட்சஞானமுத்தி யரிதுதானே. 15

அரிதில்லைபிரமவியா கிருதஜீவ
    னயிக்யமெனுஞ்சந்தியான மப்பாசித்துச்
சுருதிகயிற்றால்மனமாம் யானைதன்னைச்
    சுருக்கிட்டுச்சிக்கெனவே துறையிற்கட்டிக்
குருவுரைத்தசிரவணத்தின் படியேநின்றால்
    குதியாகுபிரபஞ்ச கோட்டிற்றானும்
திரிவதில்லைதிரிந்தாலும் மதமிராது
    ஜீவவைராக்யமெனுந் திறமிதாமே. 16

திரமென்னஹம்சோகம் மந்த்ராதீதம்
    திருசியசூன்யாதிகளே தியானமாகும்
சரமென்னசாக்ரசத்தா வவித்தைசூன்யம்
    சாதனையேசமாதியெனத் தானேபோகும்
வரமென்னவிபரீத விரத்திமார்க்கம்
    வாசனையேசாதனமாய் வகுத்துக்காட்டும்
அரமென்னஇதையறிந்தால் யோகியாவான்
    அஞ்ஞானமவரிடத்தி லணுகாதென்னே. 17

என்னவேஅஞ்ஞானி யுலகாசாரக்
திச்சையினுற்றர்மார்ந்த வியாபாரங்கள்
முன்னமேசெய்ததன்பின் மரணமாகுல்
மோட்சமதற்கனுபவதின்மொழிகேட்பீரால்
வின்னதமாயாங்கார பஞ்சபூத
விடயவுபாதிகளாலே மேவிக்கொண்டு
தன்னிமையயிலிங்கசரீ ரத்தோடொத்துச்
சதாகாலம் போக்குவரத்தாகுந்தானே. 13

தானிந்தப்படியாகச் சீவரெல்லாஞ்
சகசபிராரத்வவசத் தாகினுர்கள்
வனிந்தக்கூரபிமா னத்தினுலே
இத்தியாதிகுணங்களெலாம் வியாபிக்குமப்பா
வானிநதுபோன்மெலிந்து வளர்ந்துபோகும்
வர்த்திக்குமஞ்ஞானம் மாற்றவேண்டி
நானிந்தப்பிரமவுபா சனையைப்பற்றி
நாட்டம்வைத்தோம்வித்தையெலாநாசமாச்சே

ஆச்சப்பாஎத்தனையோ கோடிகாலம்
அந்தந்தப்பிரளயத்துக் கதுவாகநின்றேன்
மூச்சப்பாவோடவில்லை பிரமாதீத
முத்திபெற்றேன்பிரமாண்ட முடிவிற்சென்றே
சூட்சமப்பாவற்றபிர்ம சாட்சாத்காரம் [ன்
குருபாதமாகியகோ சரமாய்நின்றேன்
பேச்சப்பாசராசரங்க ளுதிக்கும்போது
பின்மந்தப்புகண்டனெனப் பேர்கொண்டேனே

பேர்கொண்டேன்சொருபசித்தி யனேகம்பெற்றேன்
பெரியோர்கள்தங்களுக்குப் பிரியனுனேன்
மேர்கண்டேனுயிரத்தெட் டண்டகூட
வீதியெல்லாமோர்நொடிக்குள்விரைந்துசென்றேன்

தார்கண்டேன்பிரிதிவியின் கூறுகண்டேன்
சாத்திரவேதங்கள்வெகு சாயுங்கண்டேன்
ஊர்கண்டேன்மூவர்பிறப் பேழுங்கண்டேன்
ஓகோகோவிதுவெல்லாம் யோகத்தாட்டே. 21

யோகத்தின்சாலப்ப நிராலம்பந்தான்
உறைத்தாரேபெரியோர்க ளிரண்டாமொன்று
ஆகமத்தின்படியாலே சாலம்பந்தான்
அநித்யமல்லநித்யமென் றறையலாகும்
சோகத்தைப்போக்கிவிடும் னிராலம்பந்தான்
சூன்யவபிப்பிராயமதே சொரூபமுத்தி
மோகசித்தவிருத்திகளைச் சுத்தம்பண்ணி
மும்மூட்சபிர்மமயிக்ய மோட்சமென்னே. 22

மோட்சசாம்பிராச்சியத்தில் மனஞ்செல்லாத
மூடர்களுக்கபரோட்சம் மொழியலாகா
சூட்சமறிந்தாலவனுக் கனுசந்தானம்
சொரூபலட்சணந்தெரியச் சொல்லலாகுந்
தாட்சியில்லைசாதனைத் துட்டியத்தில்
சட்சேந்த்ரியாதா தீதமாகும்
மூச்சுலயப்படுவதல்லோ பிரமனிட்டை
மூலவிந்துகளாதீத மொழியலாமே. 23

மொழிவதிலேஅகாரமெனும் பிரணவத்தின்
மோனபிராணோதியதே நாதமாச்சு
தெளியுமிந்தஓங்காரத் தொனிவிடாமற்
சிற்ககனத்தேபலமாய்ச் சேர்க்கவேணும்
ஒளிதானேநிராலம்பம் நிரவிசேடம்
உத்கிருஷ்டபரமபத வுபகாரஸ்தன்
வெளியோடேவெளிசேர்ந்தால் வஸ்துவாச்சு
விரோதசத்ராதியெலாம் விருத்தமாச்சே. 24

விருத்தமாமனுதியெனுந் பிரார்த்வகர்மம்
விஷயாதிபிரபஞ்ச வீஷ்மங்களெல்லாம்
ஒறுத்தவரேயோகியென்பா னவனுருடன்
உலகமெலாந்தானுவ னுண்மையாகும்
நிறுத்தவென்றால்நாசிகாக் கிரகவான்மா
நிலைபுருவமத்தியிலே நிஷ்டனாகிக்
கருத்தழிந்துனின்றவிடம் சாஷாதகாரம்
கண்மூக்குமத்தியிலே கண்டுபாரே. 25

பார்ப்பதற்குநீண்டதுவாம் குறுகிவட்டம்
பரிதிமதியுதயமெனப் பளிங்காகாசம்
காப்பதற்குமூன்றுசுழி பின்னால்னிற்கும்
சாக்கிரத்தினடையாளந் தாக்கிப்பாரு
சேர்ப்பதற்குச்சுழிமுனையென் றீதற்குநாமம்
திரிகோணக்குண்டலியே சிவசொரூபம்
கார்ப்பதற்குநடுநாடி யூடேசென்று
கால்நிறுத்திப்பிடரிவரு கண்ணைப்பாரே. 26

கண்ணனபிடரிமுது கோடுரந்த்ரம்
கால்கூட்டிப்பார்த்தாலே தலைமேலாகும்
விண்ணனபெருவெளிக்கு வீனமானால்
விமோசனமாம்நிராலம்பமெனத்தான்சொல்லு
ஒண்ணனயோகமல்லோ இந்தநிஷ்டை [ம்
உபதேசம்பெற்றவர்க்கே உண்மையாகும்
அண்ணாந்துபார்த்திருந்தால் வருமோனஞானம்
அசபாமந்திரத்தியானம் அறைகிறேனே. 27

அறைகிறேன்அசபையெனும் பிராணன்மாவை
இகண்டபராபரத்தினுள்ளே ஐக்யஞ்செய்ய
குன்றவில்லைஓங்கார மூலவட்டக்
குண்டலியாய்நின்றிடத்திற் குணதீதந்தான்

நிறைகிறேன்நாசிகா ரந்த்ரவாயு
நீக்காமலேகமாய் நிர்ணயித்துப்
பறைகிறேனட்சரசா தனமுந்தள்ளிப்
பந்தமற்றமகாமோட்சப் பதிபெற்றேனே. 28

பதிபுருவத்தடமுனைக்கீ மூன்றுக்கென்னும்
பவளநிறம்போன்றிருக்குந திரிகோணந்தா
துதிபெறுசிற்குவையுபஸ்த சுகந்தியாக
சுபாவசாதனையினால் மவுனமாச்சு
விதிவிகிதபிராரத்வ கர்மம்போச்சு
விடயபோகத்தினிச்சை விட்டுப்போச்சு
மதியெனுமோர்வாயுவது அமிர்தமாச்சு
வஸ்துவதேகாரணமா மகிமையாச்சே. 29

மகிமையென்று யோகசாதனையினாலே
மகாகாசநிருவிகற்ப வாழ்க்கையாச்சு
அகமகமென்றுணவத்தை நீக்கலாச்சு
அத்துவிதபிரமசித்தா னந்தகாரம்
சகளாதீதங்கடந்து களாதீதத்தில்
சாதித்தேன்தன்மனமாய்ச் சார்ந்துபோச்சு
புகலிருளில்லாத வெளிக்கப்பாலாச்சு
பந்தமற்றமகாமோட்ச பதம்பெற்றேனே. 30

பெற்றதனைச்சொல்லிவிட்டேன் வடநூல்பாஷை
பிரித்துமுப்பத்தொன்றினிலே பிரமஞானம்
தத்துவத்தைச்சொல்லிவைத்தேன் யோகியானால்
சாதனைசெய்வானறிவான் சைதன்யத்தில்
முத்தியடைவானதிலே நிருத்தஞ்செய்வான்
மும்முட்சுத்துவமறிந்த மூர்த்தியாவான்
நித்யமெனுமுபநிடதப் பொருள்தான்சொல்லும்
நிலவரத்தால்யோகநிஷ்டை நிறைந்துமுற்றே.

காகபுசுண்டர் உபநிடதம்-௩௧.

முற்றுப்பெற்றது.

பரமபதிதுணை.

காகபுஸ்டர் காவியம்.

முப்பத்தி மூன்று.

காப்பு.

கணபதியே அடியாகி யகிலமாகிக்
காரணத்தின் குருவாகிக் காட்சியாகிக்
குணபதியே தொங்கையின்னாள் வெள்ளைஞானக்
குருநிலையா யருள்விளங்குங் கொம்பேஞானக்
கனவிலேயும் நினைவிலேயும் ஒளியாய்நின்ற
காரணத்தின் வடிவாகிக் கருத்துள்ளாகிப்
பணியரவம்பூண்டசிவ வாசிநேர்மை
பாடுகிறேன் காவியந்தா னெண்ணிப்பாரே.

நூல்.

எண்ணியெண்ணிக்காவியத்தை யெடுத்துப்பாரு
எந்நேரங்காமசிந்தை யிதுவேநோக்கும்
பண்ணிபண்ணி பலகுட்டி போட்டாலென்ன
பெரியானைக் குட்டியொரு குட்டியாமோ
சண்ணியுண்ணி யிந்நூலை நன்றாய்ப்பாரு
சக்கரமு மக்கரமும் நன்றாய்த்தோணும்
பிண்ணிதண்ணி சியன்றலைந்தாற் றாகம்போமோ
சாஸ்திரத்திலேபுகட்டித் தள்ளியேலே. 1

புகட்டினாள் தசதீட்சை மகிமைதன்னைப்
பூரப்பாலெனக்களித்து அகண்டந்தோறும்
சகட்டினாள்சகலசித்து மாடச்சொன்னாள்
சந்தரபுஷ்கரணிதனில் தானஞ்சொன்னாள்
பகட்டினாளுலகமெல்லாம் மூக்கோணத்தில்
பரஞானசிவபோதம் பண்பாய்ச்சொன்னாள்
அகட்டினாளவர்களை யின்றுளம்மன்
அந்தருமைசொல்லவினி யடியான்கேளே. 2

கேளப்பாயீசனொருகாலந்தன்னிற்
 கிருபையுடன்சபைகூடி யிருக்கும்போது
வாளப்பாமாலயன்றன் முகத்தைநோக்கி
 வந்தவாறெவ்வகையே சென்றதேதோ
கேளப்பாஜெயகால லயம்தானெங்கே
 குருநமசிவாயமெங்கே நீங்களெங்கே
ஆளப்பாஐவர்களு மொடுக்கமெங்கே
 அறுந்தெனக்குஇன்னவகை யுரைசெய்வீரே. 3

இன்னவகையீசரவர் கேட்கும்போது
 எல்லோருங்வாய்மூடி யிருந்தாரப்போ
சொன்னவகைதனையறிந்து மார்க்கண்டேயன்
 சொல்லுவான்குழந்தையவன் கலகலென்ன
அன்னைதனை முகம்பார்த்து மாலைநோக்கி
 அரிகரியீசர்மொழிக் குரைநீர்சொல்வீர்
பின்னைவகையாருரைப்பார் மாயைமூர்த்தி
 பேசாமலிருந்துவிட்டா லொழிவாரெங்கே. 4

எங்கையென்றுமார்க்கண்ட னெடுத்துச்சொல்ல
 வென்னசொல்வாரேகவெளிச் சிவனைநோக்கி
கங்கைதனைப்பூண்டோனே கடவுளோனே
 காரணமேபூரணமே கண்ணேமின்னே
சங்கையினியேதறிவேன் மகுடச்சோதி
 சந்திரனைப்பூண்டிருந்து தவம்பெற்றோனே
மங்கையிடப்பாகமவைத்த மகுடத்தோனே
 மகாமுனிகளிரிஷிகள்சித்தர் அறிவார்காணே.

அறிவார்கள்ரிஷிகள்சித்தர் முனிவோரையா
 அரகராஅதுக்குக்கோ ளாரென்றுக்கால்
பொறியாகப்புசுண்டமுனி சொல்வாரையா
 போயழைக்கக்கோளாறு வசிஷ்டராகும்

நெறியாகஇவ்வகைநா னறிவேனையா
நிலைத்தமொழிபுசுண்டரலால்மற்றோர்சொல்லார்
புரிவாருமிவ்வளவென் றுரைத்தார் மாயன்
பொருள்ஞானக்கடவுளப்போ மகிழ்ச்சிபூண்டார்.

மகிழ்ச்சியுடன்மார்க்கண்டா வாராய்கண்ணே
வரலாறுநீயெனமா யறிவாய்சொல்வாய்
சுகட்சியுடன்கருதிப்பார் யுகங்கள்தோறும்
சூட்சமிந்தமாலோன்றன் வயிற்றிற்சேர்வான்
அகழ்ச்சியுடன் ஆலிலைமே லிருப்பாரையா
அப்போதுஇவரிடத்தி லெல்லாஞாயம்
இகழ்ச்சியுடனிவற்குப்பின் னெவரோகாணேன்
இவ்வார்த்தைநானறிவே னவரைக்கேளீர். 7

கேளுமென்றான்மார்க்கண்டன் சிவன்தானப்போ
கிருபையுடனிவ்வளவு மறிவாயோடா
ஆளுகின்றயீசனு நாமறியோமிந்த
அருமைதனைநீயறிந்தா யருமைப்பிள்ளாய்
காளகண்டர்மாயோனைக் கொல்வீரென்றார்
கருவேதுநீயறிந்த வாறுமேது
பாளுகின்றமுப்பாழுந் தாண்டிநின்ற
பரஞானசின்மயமின் பகர்ந்திடீரே. 8

பரமானபரமகயி லாசவாசா
பார்த்திருப்போமாலிலைமேற் பள்ளியாகி
தரவானபுசுண்டமுனி யந்தவேளை
சக்கரத்தைப்பிரளொட்டார் தவத்தினாலே
தூரமாகவெவ்வாறோ திரும்பப்போவார்
சூட்சமதைநாமறிவோம் பின்னேதோதான்
வரவானவரமளித்த ஞானவாழ்வே
வசிஷ்டர்போயழைத்துவரத் தருமென்றாரே. 9

தருகமென்றவார்த்தைதனை யறிந்துயீசர்
தவமானவசிஷ்டரேநீர் புசுண்டர்ஜாகை
அகமகிழுவங்கேகி யவற்குரைத்து
அவரையிங்குசபைக்கழைத்து வருவாயென்ன
ஜெகமானஜெகமுழுது மாண்டஜோதி
திருவடிக்கேநமஸ்கரித்துத் திரும்பினார்பின்
உகமானந்தனையறிந்தும் அரனார்சொன்ன
உளவுகண்டார்புசுண் டரெனுங்காகந்தானே.

காகமென்றவேஷமதாய் விருட்சமீதிற்
காத்திருந்தார்வசிஷ்டவரக் கண்டார்நாதன்
ஏகமதாயொட்டான வசிஷ்டரேநீர்
எங்குவந்தீர்வாருமென்று இடமுயீயத்
தாகமுடன்யீசனும்மை யழைக்கச்சொன்னார்
சங்கதியைத்தங்களிடஞ் சாற்றவந்தேன்
பாகமுடன்உண்டான விபரந்தன்னைப்
பத்துமெய்ஞ்ஞானபொரு ளருள்பெற்றாரே.

பெற்றோரேயென்றுரைத்தீர் வசிஷ்டரேநீர்
பிறந்திறந்துஎட்டாங்காற் பிரந்துதந்தீர்
சுத்தானசத்துகளு மடங்குங்காலம்
சக்கரமுந்திரும்பிவிட்டாற் சமையம்வேறும்
சித்தானபஞ்சவர்க ளொடுங்கும்போது
சேரவேரிஷிமுனிவர் சித்தரோடு
மூத்தாகப்பஞ்செழுத்தி லொடுக்கமாவார்
மூத்துமணிக்கொடியீன்றாள் முலைத்திட் டவரே.

மூளைத்திட்டீநித்தோடே யெட்டுவிசைவந்தீர்
முறையிட்டீரிவ்வண்ணம் பெருமைபெற்றீர்
களைத்திடப்போகாதீர் சொல்லக்கேளும்
கண்டமதில்விஷம்பூண்டார்க் கலுவலென்ன
கிளைத்திடப்போனாக்கால் மறந்துபோவார்
கிளர்நான்குயுகந்தோறு மிந்தச்செய்கை
பிழைந்திட்டுப்போவமென்று லங்கேபோவோம்
பேய்பிடித்தோர்வார்த்தைசொல்ல நீர்வந்தீரே.

வந்தீரேவசிஷ்டரேநீ ரின்னங்கேளு
வளமைநான்சொல்லிவந்தேன் வேஷம்நீங்கி
இந்தமாமரக்கொம்பி லிருந்தேனிப்போ
யிதுவேளையெவ்வளவோ ஜனமோகாணும்
அந்தமோஆதியோ யிரண்டுங்காணா
ரவர்களெல்லாம்ரிஷியோகி சித்தராணார்
சந்தேகமுமக்குரைக்கப் போகாதையா
சாமிக்கேசொல்லுமையா யிதோவந்தேனே. 14

வந்தேனேயென்றுரைத்த வாறுகொண்டு
வசிஷ்டருமேவாயுலர்ந்து காலும்பின்னி
இந்தேனேமுனிநாதா சரணங்காரும்
எழுந்துசிவன்சபைநாடி முனிவர்வந்தார்
மைந்தனேயின்றருளுங் கடவுள்நாதா
மாமுனிவன்வாயெடுக்கப் புசுண்டர்சொல்வார்
சிந்தனைசெய்யீஸ்பரனே வந்தேனையா
சிவசிவாயினனதென்று செப்பிடீரே. 15

செப்புமென்றபுசுண்டமுனி முகத்தைநோக்கிச்
சிவன்மகிழ்ந்துபேசுமொழி செப்புவார்கேள்
கொப்புமென்றயுகமாறிப் பிறளுங்காலம்
குருநமசிவாய[illegible] பரந்தானெங்கே

அப்புமென்றபஞ்சகணத் தேவரெங்கே
அயன்மாலும்சிவன்மூவ ரடக்கமெங்கே
ஒப்புமிந்தயுகம்மாறிப் பிறந்ததெங்கே
ஓகோகோமுனிநாதா வுரைசெய்வீரே. 16

உரையென்றீருன்றனக்குப் புத்திபோச்சு
உம்மோடேசேர்ந்தவர்க்கும் மதிகள்போச்சு
பரையென்றுலபரைநாடி நிலைக்கமாட்டீர்
பரமசிவன் தானமென்றும் பேரும்பெற்றீர்
இரையென்றுல்வாய்திறந்த பட்சிபோலே
எல்லோருமப்படிக்கே இறந்திட்டார்கள்
நிரையென்றவார்த்தைகளைச் சொன்னேனானால்
நிசங்கொள்ளாதந்தரங்கம் நிசங்கொள்ளாதே. 17

கொள்ளாமற்போவதுண்டோ மவுனயோகி
கோடியிலேஉனைப்போலே ரிஷியோகாணேன்
உள்ளாகரிஷியொருவ ரில்லாவிட்டால்
யுகவார்த்தையாருரைப்பார் யானுங்காணேன்
விள்ளாமற்றீராது முனிவரேகேள்
மெஞ்ஞானப்பரப்புகுந்த அருள்மெஞ்ஞானி
தள்ளாமற்சபையிலுள்ளோ ரெல்லோர்கேட்கச்
சாற்றிடீர்முனிநாதா சாற்றிடீரே. 18

சாற்றுகிறேனுள்ளபடி யுகங்கள்தோறும்
தமக்குவந்துசொல்லுவதே தவமாய்ப்போச்சு
மாற்றுகிறேன்க்ஷணத்தின் முன்னுரைத்துப்போனேன்
வூாதாட்டமெனதாச்சு இனியென்சொல்வேன்
சேற்றிலேநாட்டியதோர் கம்பம்போலத்
திரும்பினதுபோலாச்சு யுகங்கள்தோறும்
ஆற்றுகிறனத்தமது ஆகும்போது
அரக்ரா அந்நேரம் நடக்கைகேளே. 19

கேளப்பாநடந்தகதை சிவமேயுண்மை
  செடியாகச்சக்கரங்கள் திரும்பும்போது
பாளப்பாதசநாதம் மவுனம்பாயும்
  பரமானமவுனமது பரத்திற்சாடும்
ஏளப்பாஅடுக்குகளும் இடிந்துவீழும்
  இருந்தசதாசிவமோடி மணியில்மீளும்
கோளப்பாயிதுகோளு மெவருஞ்சொல்வார்
  கோகோகோஅண்டமெல்லாங் கவிழ்ந்துபோமே.

கவிழ்ந்துபோமப்போது அடியேனங்கே
  கருத்துவைத்துத்தியானமொரு தியானமுண்டு
தவிழ்ந்துபோங்காலமப்போ நிறுத்துவேன்யான்
  சமையமதிலக்கினிபோல் ஸ்தம்பங்காணுஞ்
சிவந்தவர்னம்நீலவுரு சுடர்விட்டேகும்
  சிவசிவாஅக்கினிபோற் கொழுந்துவீசும்
நவந்துஅதினருகேதான் சென்றுநிற்பேன்
  நகாரமுதலஞ்செழுத்து வரக்காண்பேனே. 21

காண்பனேநகாரமது மகாரம்புக்கும்
  கருத்தானமகாரமது சிகாரம்புக்கும்
தேண்பேனேசிகாரமது வகாரம்புக்கும்
  சிவசிவாவகாரமது யகாரம்புக்கும்
கோண்பேனேவகாரமது சுடரிற்புக்கும்
  குருவானசுடரோடி மணியிற்புக்கும்
நாண்பானமணியோடி பரத்திற்புக்கும்
  நற்பரந்தான்சிவம்புக்குஞ் சிவத்தைகேளே. 22

கேளப்பாசிவமோடி அண்டம்பாயும்
  கிருபையாயண்டமது திரும்பிப்பாயும்
கோளப்பாஅண்டமது கம்பத்தூண்தான்
  குருவானதசதீட்சை யொன்றுமாச்சு

மீனப்பாஸ்தம்பமது விளங்குஞ்செய்கை
மேலுமில்லைகீழுமில்லை யானுங்காணேன்
ஆளப்பாநரைத்தமா டேறுவோனே
அண்ணாவோயிண்ணாவோ அறிந்திலேனே. 23

அறிந்திலேனென்றுரைத்த புசுண்டமூர்த்தி
அரகராஉன்போலே முனியார்காணேன்
தெரிந்திலேனென்றுரைத்தால் மனங்கேளாது
சிவனயர்துகேட்கயும்நீ யொளிக்கவேண்டாம்
பொருந்திலேன்பூருவத்தில் நடந்தசெய்கை
பூரணத்தாலுள்ளபடி புகழ்ந்துசொல்லும்
பரிந்திலேன்மிகப்பரிந்து கேட்டேனையா
பழமுனியேகிழமுனியே பயன்செய்வீரே. 24

பழமுனிவனென்றுரைத்தீர் கடவுளாரே.
பருந்தீபஸ்தம்பத்தைப் பலுக்கக்கேளும்
குழருடனேஸ்தம்பமதில் யானும்போவேன்
கோகோகோசக்கரமும் பிரண்டுபோகும்
தழும்பணியச்சாகரங்க ளெங்குந்தானுப்ச்
சத்தசாகரம்பிரண்டு யெங்கும்பாழாய்
அழகுடையமாதொருத்தி ஸ்தம்பத்துள்ளாய்
அரகராகண்ணாடி லீலைதானே. 25

லீலைபோற்காணுமுகம் போலேகாணும்
நிலைபார்த்தால்புருடரைப்போற்றிருப்பிக்காணும்
ஆலைபோற்சுழன்றுடுங் கம்பத்துள்ளே
அரகராசக்கரங்க ளாறுங்காணும்
வாலைபோற்காணுமையா பின்னேபார்த்தால்
மகத்தானஅண்டமது கோர்வைகாணுஞ்
சோலையாயண்டமதிற் சிவம்தான்வீசும்
சிவத்திலேஅரகரா பரமுங்காணே

பரத்திலேமணிபிறக்கும் மணியினுள்ளே
  பரம்சிறந்துஞ்சுடர்வீசும பிரபாற்றேகேளு
நிரத்திலேசடமதனில் யகாரங்காணும்
  நிகூழபமாமயகாரமதில் வகாரங்காணும்
வரத்திலேவகாரமதிற் சிகாரங்காணும
  வருமபோலேசிகாரத்தில் மகாரங்காணும்
நரத்திலேமகாரத்தில் நகாரங்காணும்
  நன்றாகப்பூமியப்போ பிறந்ததன்றே. 27

பிறந்ததையாயிவ்வளவு மெங்கேயென்று
  பெண்ணொருத்திதூணதிலே நின்றகோலம்
சுறந்ததையாமிவ்வளவும் அந்தமாது
  சூட்சமதேஅல்லாது வேறொன்றில்லை
கறந்ததையாஉலகமெல்லாங் காமப்பாலைக்
  காலடியிற்கீர்க்கவைத்து சகலஜெந்தும்
இருந்ததையாயிவ்வளவுஞ் செய்தமாது
  எங்கையென்றுனுன்னிடத்தி லிருந்தாள்கன்னி.

இடப்பாகமிருந்தவளு மிவளேமூலம்
  இருவருக்கும் நடுவானதிவளேமூலம்
தொடக்காகநின்றவளு மிவளேமூலம்
  சூட்சமெல்லாங்கற்றுணர்ந்த திவளேமூலம்
அடக்காகஅடக்கத்துக் கிவளேமூலம்
  ஐவருக்குங்குருமூல மாதிமூலம்
கடக்கோடிகெர்ப்பதனில் நின்றமூலம்
  கன்னிபவள்சிறுவாலை கன்னிதானே. 29

கன்னியிமென்றுரைத்தார் புசுண்டமூர்த்தி
  கர்த்தனப்போமனதுசற்றே கசங்கினார்பின்
மண்ணுள்ளதேவர்களு பிறப்பித்திந்த
  மார்க்கத்திலிருப்பதுவோ மவுனப்பெண்ணை

உன்னிதமாயுன்கருணை யெங்கேகாண்பேசம்
ஓகோகோஐவருந்தான் வணங்கினார்கள்
சொன்னியபள்வாக்குரைக்காள் சிவமேகன்னி
கொலுமுகத்தில்நால்வரும்போய் வணங்கினாரே.

வணங்கியவர்வாய்புதைத்து நின்றார்பின்னே
மாதுகலியாணியென வசனித்தார்கள்
வணங்கினார்தேவரொடு முனிவர்தாமும்
மற்றுமுள்ளதேவர்களும் நவபடாரும்
வணங்கினாரஷ்டசெஜந் திகிரியெட்டும்
வாரிதியுஞ்சேடனுமா லயனும்மூவர்
வணங்கினார்மிகவணங்கித் தொழுதாரப்போ
வாலைய்வள்மெய்ஞ்ஞானம் அருளீவாளே. 31

அருளீவாள்திடிமணியை மாலைபூண்டாள்
அரகாராசின்மசத்தி வீறுபூசி
பொருளீவாளவரவர்க்கு ஏவல்சொல்லிப்
பொன்றாதபல்வுயிர்க்கைக் கிடங்கள்வேறாய்த்
தொருளீவாள்சிவயோகந் தெளிவதற்குச்
செயலுறுதியாகவல்லோ தெரியவேண்டித்
திருளீவாள் தாயானசிறியவாலை
சிவசிவாரூட்சம்பூ ரணமுமுற்றே. 32

பூருவத்தில்நடந்தகதை இதுதானென்று
புகன்றுவிட்டுப் புசுண்டருந்தான்பதிக்குச்சென்றா[ர்
காரணத்திலேவகுத்தே னிந்தஞானங்
கம்பமணிவாலைகொலுக் கூட்டமப்பா
நாரணத்தில்நின்றிலங்கும் மவுனவாலை
நாட்டினாள்சிவராஜ யோகங்கேளு
ஆரணத்திபூரணத்தி யருள்மெய்ஞ்ஞானி
ஆதிசத்திவேதமுத்தி யருள்சொல்வாளே. 33

காகபுசுண்டர் காவியம்-33.

முற்றுப்பெற்றது.

காகபுசுண்டர் குறள்-16.

சின்மயத்தைப்போற்றிச் சிவராஜயோகத்தில்
நன்மைபராபரத்தை நாடு. 1
அண்டமுடிமீதி லங்கிரவிமதியை
கண்டு தரிசித்தாற் கதி. 2
வலமிடமாய் நின்ற மதிரவியை மாறி
விலகா தடியினிற்பின் வீடு. 3
அறுபத்து நால்யோக மவ்வளவுந்தள்ளி
யொருபொழுது முண்டுநிலையோர். 4
உலகமே மாயமென நின்மனதிற்கண்டு
நலமாக நாதனடி நம்பு. 5
சித்தர் பதினெண்மர் செய்கையிற்றோன்றாத
அத்தனருளும் புசுண்டன்யான். 6
சொன்னே னறிந்துசுகமா யுலகோருக்
கெந்நாளும் வாழ்கவென்றே யான். 7
கண்ணுண் பணியாகிக் காரணமாய் நின்றான்
மண்ணுமுயிர்பதியு மாறு. 8
விண்டேனே ஞானம் வெளியாக முப்பத்தி
ரண்டி லறிவீர் நலம். 9
நேத்திரத்தைக் காகம்போல் நிச்சயமாய்நிற்க
ஆத்துமத்தி லானந்தமாம். 10
உலகிலறிந்தோ ரொருநாளு மாளார்
புலநினைவை விட்டுநீ பார். 11
கண்டோருஞ் சொல்லார் கருத்தாற்பெரியோரை
தொண்டுசெய்து பெற்றசுகம். 12
ஆதியிச் சொன்னவிய ரண்டமதையெடுத்து
மாதுசிவன் பூசைசெய்துவை 13
முப்பொருளைச்சுட்டு முழுதுதம நீறாக்கித்
தப்பாம லுண்டுநிலைசார். 14
யோகமுடன்சற்று முரைத்தேனீ ரெட்டில்
வேகமுடன் கண்டுணரு வீர் 15
வாசிமுனி மைந்தாமருவு பிரமத்தில்
மோசமவரா தென்குறள் முற்றும். 16

காகபுசுண்டர் குறள்-கசு-முற்றிற்று.

பராபரத்துணை.

சூரியானந்தர் சூத்திரம் பதின்மூன்று.

சீர்கொண்ட அருமறையின் பொருளாய்நின்ற
தெட்சணா மூர்த்தியுட பாதங்காப்பு
பேர்கொண்ட சூஸ்திரமே பதிமூன்றுக்குள்
பிரிந்துவைப் பேன்பூவழலை பெருமையெல்லாம்
சீர்கொண்ட வூசாத்தின் மகிமைதன்னை
நிசமாகச் சொல்லாமல் மறைந்துபோட்டார்
ஆர்கொண்ட வேணியனா ருமக்குச்சொன்னார்
ஆத்தாளு மடியேனுக் கறைந்திட்டாளே. 1

அறைந்திட்ட வகையேது வுப்பே ஆதி
ஆகாச விந்துவினால் ஜெனித்தபிண்டம்
மறைந்திட்ட வுப்பதுவே காரங்காரம்
மண்ணான வுப்பதுவே சாரஞ்சாரம்
கறைந்திட்ட வூசருத்துக் கேற்றவுப்பைக்
காணாமற் போனதினாற் கலக்கமாச்சு
இறைந்திட்ட மலஜலமாய்க் கா... லாகும்
இந்தவிரண் டோரிடத்தி ...ருக்கும்பாரே. 2

இருக்கின்ற வுப்பினுக்கு மூல... ரம்
இந்துவொன்று இரவி... று வன்னியொன்று
...ருக்கின்ற வீசனுக்குச் சூ... மு...தான்
பிரிதிவியே தூலமெனப் ...சலாகும்

கருக்கொண்ட யோனியிலே நாலுபேதம்
கருதையிலே பெழுதோற்றங்காணலாகும்
உருக்கொண்டஜீவஜெந்து அனேகமுண்டாம்
உற்றுப்பாரண்டபிண்ட முண்மைதானே. 3

தானாகநின்றதுவே பாருமாச்சு
சகலசித்துப் பிரகிருதியுயிருமாச்சு
வானாகிநின்றதுவே சாட்சியாகும்
மன்னுயிரெல் லாஞ்சோதி மயமுமாச்சு
ஊனாகப்பிறந்தசடம் பிறவாமுத்திக்
குதவியல்லோ பிரகிருதியோனியோனி
கோனாகநின்றகுரு வுபதேசத்தாற்
குழிபுகுந்து வுப்பெடுத்துக் கொள்ளுவாயே. 4

கொள்ளுவார் முப்பூவின் முதலாமங்கம்
கூர்ந்துபா ருசரத்தைக் கொள்ளிக்கொண்டு
விள்ளுவார் யோனியின் படிவிடாமல்
மேலேற்ற மேலுதவி மேவித்தானாற்
விள்ளுவா ரிந்தவுப்பு சிவமுமாச்சு
துருசுப்பு பணவிடையாற் றெருந்தமேற்றித்
தள்ளுவார் பிரளயமோர் கோடிகாலம்
சகலசித்தும் மூலவுப்பு தன்னிலாச்சே. 5

ஆச்சப்பா மூலவுப்புக் கஞ்சுதீட்சை
ஆதியுப்புக் கப்படியே தீட்சையாகும்
மூச்சப்பா தசதீட்சை யார்தான்செய்வார்
மூலகுரு செய் பார்பின் னோர்தான்செய்தார்

ஏச்சப்பா கொங்கணவர் தீட்சைமார்க்கம்
ஏற்றிவிட்டார் முப்பத்தி ரண்டாமென்று
பேச்சப்பா பேசினதி லாவதுண்டோ
பிண்டவுப்புக் கேழுவிதம் பேசலாமே. 6

பேசுகின்ற வுப்பினுக்கு மேலேஅங்கம்
பெருமையுள்ள சித்தர்கள்தான் செய்யுமார்க்கம்
வீசுகின்ற சூதத்தின் துறைகளெல்லாம்
மிஞ்சவில்லை மூன்றுநா லஞ்சாறுலும்
பாஷையினுற் சொன்னுர்கள் வெளிதோறுது
பாலனுக்குத் தோன்றுமிந்த நூலைப்பார்த்தால்
கூசல்மிஞ்சிப் போமேதென்று என்றன்நூலைக்
குகைக்குள்மறைத் திட்டதினுற் கூறுண்ணுதே

ஓண்ணுன நூலாறு மிருநூற்றைந்தி
லோதிவைத்த கருத்தெரியு மிருபத்தைந்திற்
கண்ணுகு மிந்தநூற் பதிமூன்றுக்குள்
கருவையொரு கற்பமுறை காட்டிவைத்தேன்
வண்ணுனே யறியாத பேருக்கெல்லாம்
வாதியென்ற பேரேது வாதமேது
பெண்ணுடன் சுரோணிதமுத விந்துங்கண்டால்
போரான பூரணத்தின் பேருமைதானே. 8

பெருமையென்ற காயசித்தி பண்ணுவிட்டாற்
போரான அடியோ முடியும்போச்சு
அருமையென்ற குண்டனிக்குள் வாசிபூசை
அப்பனே கண்டமதி லங்கென்றாணு

புருவமையத் துள்ளேவும் மென்றுகும்பி
போதமென்ற மவுனவித்தை கைக்குள்ளாச்சு
தருமவித்தை பிரகிருதி மூச்சாடாது
சகஸ்திரத்தெண் மலர்ப்பதத்திற் சார்ந்துநில்லே

நில்லாத மூலிகையாற் காயசித்தி
நிஷ்டைமவு னத்தாலே யோகசித்தி
கொல்லாத மூலமதில் அபானசுத்தி
கூடாம லிருந்துவிட்டா லேதுமுத்தி
சொல்லாத வீசனுப்பு மதிருகத்திற்
சூட்டினேன் வெள்ளையென்ற சூடன்வித்தை
எல்லாருமிந்தவிதம் பாடமாட்டார்
இதமான சூதகத்தின் வெடியுப்பாச்சே. 10

"எண்ணுயிரத்தி விருநூறு மந்திரம்
அண்ணல்சொன்னாடியேனறிந்தேன்
சொன்னார்சிவப்பு சோர்பச்சை ரூபம்
வண்ணனறிவான்வகாரத்திரையமே" என்னும்
திருமூலர் திருமந்தரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது அதைப்பார்த்துத் தெரிந்துகொள்ளவும்.

உப்பான வெடியுப்புச் செயநீராலே
ஒருகோடி வித்தையெல்லாமாடலாகும்
அப்பானகல்லுப்பு நீரினாலே
ஆடலாந்துருசினுட அங்கமெல்லாம்
செப்பாத யோனிருது சேநீர்மட்டாற்
சிவன்வேறு தானுண்டே யிவனல்லாமல்
தப்பாமற் செய்தென்ன சவுக்காரந்தான்
சஷ்டிமுதற் பவுரணையுந் தாக்கிப்பாரே. 11

தாக்கிப்பா ராகாசஞ் சருவசாட்சி
சதாநித்தம் அந்தரமே சாடிநின்றால்
நோச்சிப்பார் வாயுலயப் படுவதற்கு
நூதனமாய் வன்னிபத்திற் கூடவேணும்
மூக்கிற்றா னோடுவது பிராணவாயு
மூலமெனும் வளையமது நகாரந்தன்னைத்
தூக்கித்தான் விட்டவர்க்கு யோகமெய்தும்
சூரியா னந்தனிவை சொல்லும்நூலே. 12

செல்வதென்ன ரேசகத்தை வெளிவிடாத
துடியான பூரகத்தைப் பின்னிடாதே
வெல்வதென்ன கும்பகத்தை யடிவிடாதே
மேலேற்று மாத்திரையை மறந்திடாதே
செல்வதென்ன கற்பத்தை மறந்திடாதே
செந்தூரஞ்சேர்க்கையிலே சிதறிடாதே
கொல்வதென்ன அமுர்தயிலே பறக்குமிந்தக்
குளிகைக்குச் சாரணைசெய் குணமுமாற்றே. 13

சூரியானந்தர் சூஸ்திரம்-13- முற்றிற்று.

ஞானக்கோர்வை மூன்றாம்பாகம்

முற்றிற்று.